# பாடத்திட்டமும் ஆசிரியர் வழிகாட்டியும்

# 4

## தரம் நான்கு

முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
இலங்கை

இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல் : info@nie.lk

அச்சிடுதலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

# பாடத்திட்டமும்
# ஆசிரியர் வழிகாட்டியும்

# தரம் 4

(2019 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது.)

முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை.
இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல் : info@nie.lk

**பாடத்திட்டமும்**
**ஆசிரியர் வழிகாட்டியும்**
**தரம் 4**

முதற் பதிப்பு: 2018
தேசிய கல்வி நிறுவகம்
© பதிப்புரிமையுடையது

முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை.

இணையத்தளம் : **www.nie.lk**

மின்னஞ்சல் : **info@nie.lk**

.

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தை நவீனப்படுத்தி, தேசிய கல்வி நிறுவகம், ஆரம்ப, இடைநிலை கல்விப் பரப்புகளின் எட்டு வருட சுழற்சி முறையான, புதிய தேசியமட்ட பாடவிதானத்தின் முதல் பாகத்தினை அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்டதுடன் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்து வந்தது.

பல்வேறுபட்ட கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினதும், கருத்துக்களினதும் பொருத்தப்பாட்டுடன் பகுத்தறிவு வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடவிதானம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாகப் பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம்பாகம் 2015 ஆம் ஆண்டில் இருந்து கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுத்தறிவுவாத நடைமுறையின் கடை நிலையில் இருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக, கீழிருந்து மேல்நோக்கி நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்பதனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற்படுத்தக்கூடியதான மாணவர் மையப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களிற்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் ஈடுபடுத்திக்கொள்வதற்காகவும், வகுப்பறை அளவீடுகளையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வழிகாட்டி. நூல்கள், ஆசிரியரை ஒரு பொருத்தப்பாடுடைய ஆசிரியராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது.

இந்த வழிகாட்டி நூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினையும் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக்கப்பட்ட பாடப்பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பட்ட பாட நூல்களின் உச்சப்பயன் பாட்டினை பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

இப்புதிய பகுத்தறிவுவாத பாடவிதானத்தினதும், புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள், புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரிய மையக் கல்வியிலிருந்து விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக்கல்வியினை நடைமுறைப்படுத்தக்கூடிய

கல்வி முறைமையினால், பூகோள தொழில் சந்தைகளுக்கு தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையினை விருத்தி செய்யக்கூடியதாயிருத்தலேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், இவ்வாசிரியர் வழிகாட்டி நூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கலாநிதி. திருமதி. ஜயந்தி குணசேகர**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட எந்தவொரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியாயமற்றவற்றைக் களைந்து, நல்லவற்றைப் பயன்படுத்தி புத்துலகைப் படைப்பதற்கான கருவியாக அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதி மிக்கவை எவையோ அவையும் கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். இவ்வகையில், கலைத்திட்டத்தில் அடங்குகின்ற பாடத்திட்டம், ஆசிரியர் வழிகாட்டி, வசதி செய்து கொடுப்போர் (Facilitator) போன்றவை எல்லாம் கல்வித்துறையில் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கையின் பண்டைய அருஞ் செல்வங்களையும் நவீன செல்நெறிகளையும் உள்வாங்கி, தனது கல்விக் கோலத்தை மேம்படுத்தி வருகின்றது. சமகாலத் தேவைகளுக்கு அமைய, எட்டாண்டுகளுக்கு ஒரு தடவை கல்வி மறுசீரமைப்புகளினூடாக இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இந்த ஆசிரியர் வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசிய மட்டத்தில் பாடக் குறிக்கோள்களின் ஒத்த தன்மை பேணப்படுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் சற்றேனும் மாறுபடாது, அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்கு உரியவை அல்ல. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காக பாட விடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காக, கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஆக்கபூர்வமானதாக மாற்றி அமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் எவ்வித ஐயமுமில்லை. மாணவரது அடைவு மட்டத்தை உயர் சதவீதத்துக்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதல் அளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி, மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்த முடியும். குறித்த பாடத்தின் பாட நூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இந்த ஆசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அல்ல என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பாக மதிப்பீடு நடத்தும், தேசிய மட்ட பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்படும் அடைவுகளை அண்மிக்கச் செய்தல் வேண்டும். அவ்வகையில் பாடத்தைக் கற்பிப்பதற்கு வழிகாட்டி, வசதிசெய்து கொடுப்பவர்களால் வகுப்பறையில் குறிப்பிட்ட பாடத்துக்குரிய கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் இறுதியில் மதிப்பீடு நடத்தப்பட வேண்டும். அவ்வாறான களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இந்த ஆசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**கலாநிதி வண. மாபுள்கொட சுமணரதன தேரர்**
**பிரதிப் பணிப்பாளர் நாயகம்**
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

# அறிமுகம்

2019 ஆம் ஆண்டு மூன்றாம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்படும் இந்த ஆசிரியர் வழிகாட்டியானது, 2008 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்திய ஆசிரியர் வழிகாட்டியை 8 வருட காலம் அமுல்படுத்திப் பெற்றுக்கொண்ட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு சீராக்கம் செய்யப்பட்டுள்ளது. அத்தோடு தேசிய கல்வி நிறுவகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட கலைத்திட்ட பின்னாய்வு பற்றிய செயலமர்வுகளில் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள், பல்வேறு நிறுவனங்கள் மூலமாக ஆரம்பக் கல்வி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலமாக பெறப்பட்ட தகவல்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் மூலமாக பெறப்பட்ட தகவல்கள் என்பனவும் இம்மறுசீரமைப்பின்போது பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி என்பது ஆசிரியர்கள் தமது வகுப்பறையின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளைத் திட்டமிட்டுக் கொள்வதற்கு வழிகாட்டும் அறிவுறுத்தல் வழிகாட்டியாகும். இவ் அறிவுறுத்தல்களுக்கு அமைவாகத் தமது கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளைத் திட்டமிட்டுக் கொள்வது ஆசிரியர்களின் பொறுப்பாகும். ஆரம்பக் கல்வி மாணவர்கள் தமது வளர்ச்சிப் பருவத்தில் மிக முக்கியமானதொரு கட்டத்தில் இருப்பவர்கள். மாணவர்களின் ஆக்கச் சிந்தனைத் திறன், சமூகத்திறன், ஆளுமைத்திறன் என்பன கட்டியெழுப்பப்படுவது இப்பருவத்திலேயாகும். இதனால் மாணவர்களுக்கான கற்றல் அனுபவங்களைக் கட்டியெழுப்பும்போது இவ் வழிகாட்டியிலுள்ள தகவல்களும் மேலே குறிப்பிட்ட பிள்ளை விருத்திக் காரணிகளும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

மாணவர்களின் கற்றலுக்காக அவர்களது அண்மித்த சுற்றாடலை மிகவும் வெற்றிகரமாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும். இவ்வயது மாணவர்களின் கற்றல் இடம்பெறுவது முற்றுமுழுதாக சூழலோடு இடைத்தொடர்பை மேற்கொள்ளும் போதேயாகும். இதனால் மாணவர்களுக்குக் கற்றல் அனுபவங்களை வழங்கும்போது அண்மித்த சுற்றாடலை மிக வெற்றிகரமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த வழிகாட்டியிலுள்ள கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும்போது மகிழ்ச்சிகரமான செயற்பாடுகள் மற்றும் வழிகாட்டப்பட்ட விளையாட்டுகளுக்கு முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு தமது பிள்ளைப் பருவத்தில் மகிழ்ச்சியை அனுபவிப்பதற்கும் வெற்றிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் சந்தர்ப்பங்கள் வழங்க வேண்டியது அவர்களது முழுமையான விருத்திக்கு அவசியமானதாகும். அவ்வாறே அவர்களது எதிர்கால வாழ்க்கைக்கு அவசியமான தேர்ச்சிகளை எய்துவதற்கான வாய்ப்புகளையும் வழங்க முடியும். அதற்காக வகுப்பறைக்குள் முடியுமானவரை சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். தமது வகுப்பில் கற்கின்ற கற்றல் சந்தர்ப்பங்களின்போது எந்தளவுக்கு மிகச் சிறப்பாக தொடர்புபடுகின்றனர் என்பதில் எப்பொழுதும் ஆசிரியர் கண்ணும் கருத்துமாக இருத்தல் வேண்டும். கணிப்பிடுதல் எனக் குறிப்பிடப்படுகின்ற இச்செயற்பாட்டின் இறுதி விளைவாக அமைய வேண்டியது சகல மாணவர்களினதும் கற்றலை விருத்தி செய்தலாகும்.அதாவது மாணவரது முன்னேற்றத்தின் தன்மை தொடர்பாகத் தீர்மானமெடுத்த லும் அதனைச் சரியாக அறிக்கைப்படுத்தலும் அதற்கு ஏற்றவாறு அந்த அறிக்கைப்படி செயற்படுதலுமாகும்.

இவ் ஆசிரியர் வழிகாட்டியை தயார்செய்யுமுகமாக ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், ஆசிரியர் கல்லூரிகள், தேசிய கல்விக் கல்லூரிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் கல்வி நிர்வாகிகள் பலரதும் உதவிகள் பெறப்பட்டன. இவ் அனைவரும் வழங்கிய பங்களிப்புக்காக மனமார்ந்த நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றேன். அவ்வாறே எப்பொழுதும் எங்களுக்கு வழிகாட்டுகின்ற தேசிய கல்வி நிறுவக பணிப்பாளர் நாயகம் கலாநிதி. திருமதி. ஜெயந்தி குணசேகரஅவர்களையும், பிரதிப் பணிப்பாளர் நாயகம் வண.மாம்புள்கொட தேரர் அவர்களையும் நன்றியுடன் நினைவுகூருகின்றேன். இந்நூலை ஆக்குமுகமாக அர்ப்பணிப்புடன் செயலாற்றிய எமது துறையின் சகல கல்வி சார் பணியாயர்களுக்கும் கல்விசாரா ஊழியர்களுக்கும் எனது நிறைவான நன்றிகள் உரித்தாகட்டும்.

**ஆர்.எம்.கே.த.சில்வா**
பணிப்பாளர் (பதில்)
முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்

# தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது, தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக, நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத்திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக்கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்கள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு, தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப, இணங்கி வாழவும் மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக்கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

**(தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003 டிசெம்பர்)**

# அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

**(i) தொடர்பாடல் தேர்ச்சிகள்**

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழில்நுட்பத் தகைமை

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையிலான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்.

சித்திர அறிவு : கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல் விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகிய வற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவல் தொழினுட்பத் தகைமை : கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

**(ii) ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்**

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்.
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

**(iii) சூழல் தொடர்பான தேர்ச்சிகள்**

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல் : தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்.

உயிரியல் சூழல் : வாழும் உலகு, மக்கள், உயிரியல் சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

பௌதிகச் சூழல் : இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும் வாழ்வதற்கும் கருவிகளையும் தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**(iv) வேலை உலகிற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக்கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்

பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்; அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்; அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்; பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான சீவனோபாயத்தில் ஈடுபடல்.

**(v) சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

**(vi) ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள், மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவை போன்ற மனித அனுபவங்கள்.


**(vii) "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**


விரைவாக மாறுகின்ற சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

## கலைத்திட்டக் குழு

| | | |
|---|---|---|
| **ஆலோசனையும் அனுமதியும்:** | | கல்விசார் அலுவல்கள் சபை, தேசிய கல்வி நிறுவகம் |
| **ஆலோசனை** | : | **கலாநிதி. திருமதி. ஜயந்தி குணசேகர**<br>பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்<br><br>**வண.கலாநிதி மாம்புள்கொட சுமணரதன தேரர்**<br>பிரதிப் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம் |
| **பணிப்பு** | : | **ஆர்.எம்.கே. த சில்வா**<br>பணிப்பாளர் (பதில்), முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித் துறை |
| **தொகுப்பும் இணைப்பாக்கமும்** | : | **வி.என்.எஸ். உதயசந்திரன்**<br>சிரேஷ்ட விரிவுரையாளர், முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித் துறை |
| **கலைத்திட்டக் குழு** | : | **ஆர்.எம்.கே. த சில்வா** (பதில் பணிப்பாளர்)<br>**வி.என்.எஸ்.உதயசந்திரன்** (சிரேஷ்ட விரிவுரையாளர்)<br>**டபிள்யு.ஜீ.எஸ். குமார** (சிரேஷ்ட விரிவுரையாளர்)<br>**எஸ்.எம்.எஸ்.தேசப்பிரிய** (விரிவுரையாளர்)<br>**எச்.டபி.டபி.எம்.சஜீவா ரம்புக்வெல்ல**(விரிவுரையாளர்)<br>**ரீ. சந்திரிக்கா பீரிஸ்** (விரிவுரையாளர்)<br>**ஜே.ஏ.நிர்மலா ஜயசிங்க**(உதவி விரிவுரையாளர்)<br>**எச்.ஜீ. வனசேகர** (உதவி விரிவுரையாளர்)<br>**கே.ஆர்.எம். சகுந்தலா ரணசிங்க** (உதவி விரிவுரையாளர்) |
| **தாய்மொழி (தமிழ்)** | : | **வி.என்.எஸ்.உதயசந்திரன்**<br>சிரேஷ்ட விரிவுரையாளர்<br>முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும்<br>ஆரம்பக்கல்வித் துறை |
| **மொழிபெயர்ப்பு** | : | **எம்.எச்.எம். யாக்கூத்**<br>ஓய்வுபெற்ற பிரதம செயற்றிட்ட அதிகாரி<br>**எம்.பி.எம்.எம். சிப்லி**<br>ஓய்வுபெற்ற செயற்றிட்ட அதிகாரி<br>**கே. ஜெயகாந்தன்**<br>அரச மொழிபெயர்ப்பாளர் |
| **கணினி வடிவமைப்பு** | : | **எப். நிஸ்யா அமீர்**<br>**கே. ஜெயகாந்தன்**<br>**ச.சத்தியசீலன்** |
| **மொழிச் செம்மையாக்கமும் பதிப்பும்** | : | **வி.என்.எஸ்.உதயசந்திரன்**<br>சிரேஷ்ட விரிவுரையாளர்<br>முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும்<br>ஆரம்பக் கல்வித் துறை |

# ஆரம்பக் கல்வித் திட்டம் - 2016



## புதிய கல்விச் சீர்திருத்தங்கள்

புதிய கல்விச்சீர்திருத்தங்கள்- மறுசீரமைப்பின் கீழ் ஆரம்பக்கல்வி கலைத்திட்டத்தின் விசேட பண்புகள்.

- ஐந்து ஆண்டுகளைக் கொண்ட ஆரம்பக்கல்விப் புலம் கலைத்திட்ட விருத்தியினதும் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளினதும் வசதி கருதி மூன்று முதன்மை நிலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

  **முதன்மை நிலை 1 - தரங்கள் 1 உம் 2 உம்**
  **முதன்மை நிலை 2 - தரங்கள் 3 உம் 4 உம்**
  **முதன்மை நிலை 3 - தரம் 5**

- தரம் 1 இல் பிரவேசிக்கும் பிள்ளையை இனங்காண்பதற்கு வசதியான செயற்பாடுகள் இனங்காணப்பட்டுள்ளன.

- பொதுக்கல்வி நிலை இறுதியில் மாணவர்களிடம் விருத்தி செய்யப்பட்டிருக்க வேண்டும் என விதந்துரைக்கப்பட்ட அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் வெளியிடப்பட்டுள்ளன. அத்தேர்ச்சி களைக் கட்டியெழுப்புவதற்குப் பொருத்தமான அடித்தளத்தை இட்டுச் செல்லும் கலைத்திட்டமாக, தேர்ச்சி சார்ந்த கலைத்திட்டமாக உள்ளது.

- பாட விடயங்கள் நான்காக வகுக்கப்பட்டுள்ளன.
  - **மொழி**
  - **கணிதம்**
  - **சமயம்**
  - **சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்**

- பிள்ளையின் பூரண விருத்திக்கு மொழி, கணிதத் தேர்ச்சிகளுடன் வேறு சில தேர்ச்சிகளும் விருத்தி செய்யப்படவேண்டியது அவசியமாகும். எடுத்துக்காட்டு: அழகியல், ஆக்கம், விஞ்ஞானம், விழுமியம், உடல் விருத்தி, சுகாதாரம் சார்ந்த தேர்ச்சிகள்

- இத்தேர்ச்சிகளைத் தனித்தனிப் பாட அலகுகள் மூலம் முன்வைப்பதை விட பிள்ளை களுக்குப் பொருத்தமான கருப்பொருள்கள் மூலம் வெளிக்கொணர்ந்து எய்துவதே சிறந்ததென ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. 16 கருப்பொருள்களைக் கொண்ட சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் எனும் பாடப்பரப்பு முன்பை விட ஒன்றிணைக்கப்பட்ட பண்பைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

- தரம் 1 இலிருந்து செயற்பாடுகள் சார்ந்த வாய்மொழி ஆங்கிலமும் இரண்டாவது தேசிய மொழியும் (சிங்களம் / தமிழ்மொழிப் பாடங்கள்) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- முதன்மை நிலை 2 இலிருந்து முறைசார ஆங்கிலம் சேர்க்கப்பட்டுள்ளது.

- தரம் 1 இலிருந்து தொடர்ச்சியாக பாட இணைச் செயற்பாடுகளுக்கும் தரம் 5 இல் பிள்ளைகளின் விருப்புக்கும், தேவைக்குமேற்பப் பொருத்தமான விருப்புப் பாடங்களைக் கற்பதற்கும் கால அட்டவணையில் வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன.

- ஆரம்பக்கல்விப் பருவத்தினருக்குப் பொருத்தமாக மேற்கொள்ளக்கூடிய கற்றல் - கற்பித்தல் முறைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவை:
  - **விளையாட்டுக்களும் விநோதச் செயற்பாடுகளும்**
  - **செயற்பாடுகள்**
  - **எழுத்து வேலைகள்**

முதன்மை நிலை 1 இல் விளையாட்டுக்களுக்கும் செயற்பாடுகளுக்கும் அதிக அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு முதன்மை நிலைகள் மூன்றிலும் கற்றல் - கற்பித்தல் முறைகள் ஒழுங்கமைக்கப்பட்டுப் படிப்படியாக மாறிச் செல்லும் விதத்தில் அவை வடிவமைக்கப்பட்டுள்ளன.

- பிள்ளையின் முன்னேற்றம், கற்றல் இடர்ப்பாடுகள் தொடர்பாக தகவல் சேகரிப்பதற்கு முறைசாராத கணிப்பீடு முறைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்ற அதாவது, தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டிய தொடர் கணிப்பீட்டிற்காக முன்னுரிமை பெறுகின்ற கணிப்பீட்டுச் செயல்முறையை நடைமுறைப்படுத்தல்.

- யாவருக்கும் கல்வியை உறுதி செய்வதை இலக்காகக் கொண்டு அதற்குத் தரநிர்ணயமுள்ள ஒவ்வொரு முதன்மைநிலை இறுதியிலும் மாணவர்கள் கட்டாயமாக பாண்டித்தியம் அடைய வேண்டிய அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

- ஒவ்வொரு முதன்மைநிலை இறுதியிலும் எதிர்பார்க்கின்ற அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகளில் சகல மாணவர்களும் பாண்டித்தியம் அடைய வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டு **ஒவ்வொரு முதன்மைநிலையும் ஒரே ஆசிரியரிடமே** ஒப்படைக்கப்பட்டுள்ளது.

- ஒரு பிள்ளையின் அடைவை இன்னொரு பிள்ளையின் அடைவோடு ஒப்பிட்டுத் தீர்மானம் எடுக்கும் முறைமையை விடுத்து, குறித்தவொரு நோக்குடன், நியதியுடன் அடைவை ஒப்பிட்டு தீர்மானம் மேற்கொள்வதற்கு, நியதிசார்ந்த அடிப்படை கணிப்பீடு முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

- முதன்மை நிலை 1 இன் பிள்ளைகள் தரம் 6 இன் பிள்ளைகளுடன் சேர்ந்து ஒழுங்கமைந்து செயற்பாடுகளிலும் விளையாட்டுக்களிலும் ஈடுபடுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

- 2007 ஆம் ஆண்டு முதல், முதன்மை நிலை ஒன்று தொடக்கம் இரண்டாவது தேசிய மொழியும் அறிமுகம் (சிங்களம்/தமிழ்) செய்யப்பட்டுள்ளது.

- 2007 ஆம் ஆண்டு முதல் செயற்பாடு அடிப்படையிலான வாய்மொழி ஆங்கிலம் கணித பாடத்துடனும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள்

2019 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வருகின்ற இந்த (திருத்தியமைக்கப்பட்ட) ஆசிரியர் வழிகாட்டியானது, தமது மாணவர்க்கு மேலும் பயனுள்ள வகையிலும் தரமிக்க வகையிலும் கற்பிக்க வழிகாட்டுவதற்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

மாணவரைத் தரமான கற்றலின்பால் வழிப்படுத்துவதற்கான இந்த ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது இங்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

தாய்மொழி, சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள், ஆகிய பிரதான பாடங்களும் இரண்டாம் தேசிய மொழி, செயற்பாடுகள் சார்ந்த வாய்மொழி ஆங்கிலம், மாணவரது முன்னேற்றத்தைக் கணிப்பீடு செய்தல், விளையாட்டு முற்றத்தைப் பயன்படுத்துதல் ஆகியனவும் இதில் அடங்கியுள்ளது. அத்தோடு, கணிதம், சமயம் ஆகிய பாடங்களுக்கென தனித்தனியாகத் தயாரிக்கப்பட்ட ஆசிரியர் வழிகாட்டிகள் உள்ளன. தரம் நான்கில் கற்கும் மாணவர்களின் கணித பாடத்திற்கென கணித செயல்நூல் ஒன்றும் தாய்மொழிப் பாடத்திற்காக பாடநூல் ஒன்றும் சமய பாடத்திற்காக ஒரு பாடநூலும் தயாரிக்கப்பட்டுள்ளது.

மாணவரை இனங்காணல் மூலம் கண்டறியப்படும் தகவல்களைக் கருத்திற்கொண்டு மாணவர்களை, எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளின்பால் இட்டுச்செல்வதற்காக வினைத்திறனான கற்பித்தலின்பால் வழிப்படுத்துவதற்காக இந்த ஆசிரியர் வழிகாட்டியைப் பயனுள்ள வகையில் பயன்படுத்துவது அவசியமாகும். அதற்காக, இந்த ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ள சகல விடயங்களையும் நன்கு வாசித்து விளங்கிக்கொள்வது அவசியமாகும். மேலும், அந்தந்தப் பாடப்பகுதியின் கீழ் நாளாந்த கற்பித்தல் நடவடிக்கைகளைத் திட்டமிட்டுக் கொள்வதற்கும் அது உங்களுக்கு துணையாகும்.

தாய்மொழிப் பாடத்தில் அந்தந்தப் பாடசாலைத் தவணையில் கற்பிக்க வேண்டியவை எவை என்பது தெளிவாகத் தரப்பட்டுள்ளது. தாய்மொழிப் பாடத்தில் செவிமடுத்தல் (கேட்டல்), பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய பரப்புகளுக்கு இடையே ஒன்றிணைப்பு நிகழுமாதலால் அத்தகைய பரப்புக்குரிய பகுதிகளை வெவ்வேறாகக் கற்பித்தலாகாது. தாய்மொழிப் பாடக் கற்றல் - கற்பித்தல் செயன்முறையின்போது அந்தந்தச் செயற்பாட்டிற்குப் பொருத்தமானவாறு பாடநூலைத் துணையாகக் கொள்வது இன்றியமையாதது. அவ்வாறின்றிப் பாடநூலை மாத்திரம் தொடர்ச்சியாகப் பயன்படுத்திச் செல்லலாகாது. மேலும், கற்றல் - கற்பித்தலின் வெற்றிக்காக மேலும் அர்த்தபுஷ்டியான பொருத்தமான உபகரணங்களைப் பயன்படுத்துவது அவசியமாகும்.

சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் எனும் பாடம், ஆரம்பக்கல்விக் கலைத்திட்டத்தின் மற்றுமொரு பிரதான பாடமாகும். மாணவர்க்கு மிக நெருக்கமாக பௌதிக, உயிரியல் மற்றும் சமூகச் சூழலின்பால் கவனஞ் செலுத்தி, 16 கருப்பொருள்கள் இனங்காணப்பட்டுள்ளதோடு, அவ்வொவ் வொன்றுக்குமுரிய பல செயற்பாடுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. இப்பாடத்திற்காக ஆசிரியர் வசமுள்ள ஒரேயொரு மூலாதாரம் இந்த ஆசிரியர் வழிகாட்டியில் உள்ளடக்கம் மாத்திரமேயாகும். சூழலில் தேடல், வரைதல், அழகியல் ஆக்கங்கள், உடற்கல்விச் செயற்பாடுகள், உணவும் போசணையும் போன்ற பல பாடப்பரப்புகளை உள்ளடக்கிய இப்பாடமானது ஓர் ஒன்றிணைந்த பாடமும் இணைப்பாக்கப் பாடமுமாகும். இது பார்த்த விடயப்பரப்பில் உள்ளடக்கி உருப்பெற்றுள்ளது. இந்த எல்லாப் பகுதிகள் தொடர்பாகவும் ஆசிரியர் பூரண விளக்கத்துடன் செயற்படுவது முக்கியமானது.

ஆக்கபூர்வமான ஆசிரியர் இங்கு தரப்பட்டுள்ள செயற்பாடுகளுக்கு மாத்திரம் வரையறைப்பட்டிராது புதிய செயற்பாடுகளைத் திட்டமிட்டு மாணவர்க்கு மேலும் பயனுள்ள கற்றல் சந்தர்ப்பங்களை உருவாக்கிச் செயற்படுவதற்கு இந்த ஆசிரியர் வழிகாட்டி தாராளமாக வாய்ப்பளிக்கிறது.

கற்றல் - கற்பித்தல் சாதனங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக தமது சுற்றுப்புறத்தில் பெறத்தக்க இயற்கையான வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தி அவற்றை ஆக்கிக் கொள்வதில் கவனஞ் செலுத்துவது முக்கியமானது. மேலும் இங்கு தரப்பட்டுள்ள செயற்பாடுகளுக்குப் பொருத்தமான பல்வேறு கற்றல் முறைகளைப் பயன்படுத்தி மாணவரை செயலூக்கத்துடன் கற்றலில் பங்குகொள்ளச் செய்து களிப்புடன் கற்க வகை செய்வதும் இன்றியமையாததாகும்.

செயற்பாடுகள் சார்ந்த வாய்மொழி ஆங்கிலத்தை, சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் பாடத்தில் மட்டுமன்றி கணித பாடத்தின்போதும் பயன்படுத்தச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. ஆங்கில மொழியை மாணவர்க்கு பரிச்சயப்படுத்துவதற்காக நாளாந்த வாழ்க்கையில் பயன்படும் சொற்கள் மற்றும் சொற்றொடர்களைச் கற்றலுடன் சார்ந்த செயற்பாடுகள் பாடத்தில் அடங்கியுள்ள கருப்பொருள்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் தேசிய மொழியை (சிங்களம்) பயன்படுத்துவது தொடர்பாகவும் இந்த ஆசிரியர் வழிகாட்டியில் வழிகாட்டல் வழங்கப்பட்டுள்ளது. அது சார்ந்த பாடத்திட்டமும் பல செயற்பாடுகளும் தரப்பட்டுள்ளதோடு அவற்றைப் பொருத்தமானவாறு பொருத்தியமைத்து, ஒழுங்கமைத்து மாணவர்க்கு வழங்குவது அவசியமாகும். செயற்பாடு சார்ந்த வாய்மொழி ஆங்கிலம், இரண்டாம் மொழி (சிங்களம்) ஆகிய பாடப் பகுதிகளைக் கற்பிக்கும்போது பொருத்தமான கற்றல் - கற்பித்தல் வளங்களைப் பயன்படுத்துவதும் அவசியமாகும். இவ்வாறாக ஒவ்வொரு பாடப்பகுதியின் மூலமும் எதிர்பார்க்கப்படும் கற்றல் தேர்ச்சிகளை மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பதை ஆசிரியர் கணிப்பிட்டுத் தேவையான வழிகாட்டலையும் உதவிகளையும் வழங்குதல் வேண்டும்.

முறைமையில் வகையிலும், முறைசார்ந்த வகையிலும் நடத்தும் கணிப்பீட்டுச் செயன்முறையின் மூலம் இனங்காணப்பட்டுள்ளவாறான மாணவரின் வலிவு - நலிவுகள் தொடர்பாக நாளாந்தம் நடாத்தும் கற்றல் - கற்பித்தல் செயன்முறையின்போது தேவையான வழிகாட்டலை வழங்குதல் வேண்டும். மாணவர்களைக் கணிப்பிடுவதற்காக உரிய கணிப்பீட்டு நியமங்களை உள்ளடக்கிய கணிப்பீட்டுப் படிவங்கள் இந்த ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ளன.

இப்பணியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதற்காக அந்தந்தப் பாடத்திற்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதோடு அந்நேரத்தை உச்சளவில் பயன்படுத்துவதற்கு ஆசிரியர்கள் ஆவன செய்ய வேண்டும்.

முதன்மை நிலை இரண்டைச் சேர்ந்த பிள்ளைகளின் தன்மைக்கேற்ப வெவ்வேறுபட்ட கற்றல் கற்பித்தல் முறைகளைக் கையாள அவர்களின் கற்றல் கோலமும் திட்டமிட்ட விளையாட்டுக்களும் செயற்பாடுகள் இருப்பிட வேலை ஆகிய அணுகுமுறைகள் தொடர்பாக இயன்ற அளவுக்கு சமமான அளவு கவனஞ் செலுத்த வேண்டும். எனவே, அது தொடர்பாக உணர்தன்மையுடன் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் ஆரம்பக்கல்வி ஆசிரியர் ஒவ்வொருவரும் கவனஞ் செலுத்தி மாணவ மாணவியரை நன்கு இனங்கண்டு செயற்படுவர் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

கலைத்திட்ட இணைப்பாளர்.

# நேர ஒதுக்கீடு

# முதன்மை நிலை இரண்டு

# (தரம் 4)

| | பாடங்கள் | வாரத்திற்கான நேர ஒதுக்கீடு |
|---|---|---|
| 1. | தாய் மொழி | 5 மணித்தியாலங்கள் |
| 2. | கணிதம் | 5 மணித்தியாலங்கள் |
| 3. | சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் | 6 மணித்தியாலங்கள் |
| 4. | ஆங்கிலம் | 3 மணித்தியாலங்கள் |
| 5. | இரண்டாம் தேசிய மொழி | 1 மணித்தியாலம் |
| 6. | சமயம் | 2 மணித்தியாலங்கள் |
| 7. | காலைக் கூட்டமும் சமய அனுட்டானமும் | 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள் |
| 8. | உணவு வேளை (இடைவேளை) | 1 மணித்தியாலம் 40 நிமிடங்கள் |
| 9. | உடலியக்கச் செயற்பாடுகள் | 2 மணித்தியாலங்கள் 05 நிமிடங்கள் |
| 10. | இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் | 30 நிமிடங்கள் (வாரம் ஒருநாள்) |
| | **வாரத்திற்கான மொத்தக் காலம்** | **27 மணித்தியாலங்கள் 30 நிமிடங்கள்** |

# முதன்மை நிலை இரண்டில் பிரவேசிக்கும் பிள்ளையை இனங்காணல் (தரம் மூன்றில்)

வருட ஆரம்பத்தில் தம்மிடத்தே வரும் மாணவ, மாணவியரின் இயலுமைகள் - இயலாமைகள், விருப்பு - வெறுப்புகள், கவர்ச்சிகள் போன்றவற்றைப் பற்றிய விளக்கத்தை ஆசிரியர்கள் பெற்றிருப்பது மிக முக்கியமானதாகும். இரண்டாம் முதன்மை நிலையில் முற்றுமுழுதாக இரண்டு வருட காலத்திற்கு ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையே சீரான இடைத்தொடர்புகளைப் பேணுவதற்கான அடித்தளத்தை இலகுவாக இட்டுக்கொள்வதற்கு இது வழிகோலும். மேலும் விளைதிறனுடைய கற்றல் வாய்ப்புகளைத் திட்டமிட்டு உருவாக்கிக்கொள்வதற்கும் அது துணையாக அமையும்.

ஆரம்பத்திலேயே மாணவர்களுக்கு **"மகிழ்ச்சிகரமான ஆரம்பம்"** என்பதனை உணரக்கூடிய விதத்தில் வேலைத்திட்டங்களை முதல் வாரத்திலேயே நடைமுறைப்படுத்தல் வேண்டும். அவ்வேலைத்திட்டத்தில் பின்வரும் விடயங்கள் அடங்கியிருத்தல் வேண்டும்.

1. **சுமுகமான உரையாடல் :** தரம் இரண்டு வகுப்பின் ஆசிரியர் தமது மாணவர்களை தரம் மூன்று ஆசிரியரிடம் ஒப்படைப்பதுடன் புதிய இரு ஆசிரியர்களுக்கும் வகுப்பு மாணவர்களுக்கும் இடையே மரியாதையான நடத்தையும் சுமுகமான உரையாடலும்
2. **இனங்காணல்** : தரம் மூன்றின் ஆசிரியர் தன்னை அறிமுகம் செய்தல். புது மாணவர்கள் தமது பெயரில் தான் விரும்பிய பகுதியைக்கூறி அறிமுகம் செய்தல். அத்தோடு தம்மைப் பற்றிய தகவல்கள் சிலவற்றைக் கூறல்
3. **கருத்து வெளிப்பாட்டுச் சித்திரங்கள் :** தமது கருத்தை வெளிப்படுத்தும் சித்திரம் ஒன்றை வரைந்து, வெளிப்படும் கருத்தை விபரித்தல்
4. **கூட்டாகப் பாடுதல் :** இசையுடனும் அசைவுடனும் கூட்டாகப் பாடலொன்றைப் பாடுதல்
5. **படங்களுடன்கூடிய எண் விளக்கம் :** பிராணியொன்றின் படமொன்று அடங்கியுள்ள தனித் தாளில் வழங்கப்பட்ட பத்திரத்தில் தரப்பட்டுள்ள எண்ணுக்குப் பொருத்தமானவாறு குறித்த வடிவத்தினுள் நிறம் தீட்டல்
6. **கதையைச் செவிமடுத்தல் :** ஆசிரியர், பக்கப் புரட்டியின் ஊடாகத் தயாரித்த கதையொன்றைக் கவனமாகவும் விளக்கத்துடனும் மகிழ்ச்சியுடனும் செவிமடுத்தல்
7. **ஆக்கச் செயற்பாடுகள் :** வழங்கப்பட்டுள்ள பொருட்களில் தேவையானவற்றைத் தெரிவு செய்து விரும்பிய ஆக்கமொன்றினை முடிவு வரை ஆக்கி விபரித்தல்
8. **கூட்டாக விளையாடுதல் :** இலகுவான கட்டளைகள் கொண்டதும் இலகுவான சட்டதிட்டங்கள் கொண்டதுமான கூட்டாக விளையாடக்கூடிய ஒரு விளையாட்டில் ஈடுபடல்
9. **சொல்லுடன் சொல் சேர்த்தல் :** ஆசிரியர் கூறும் சொல்லில் காணப்படும் இறுதி எழுத்தைக் கொண்டு சொல்லொன்றினை முன்வைத்தல்
10. **போலச் செய்தல்** : திறந்த வெளியில் வெவ்வேறு பாத்திரங்களைப் போன்று போலச் செய்தலும் சத்தங்களை எழுப்பி போலச் செய்தலும் அதனூடாக இரசனை பெறலும்
11. **நிறம், வடிவம், பருமன் ஆகியவற்றுக்கமைய வகைப்படுத்தல்** : சேகரித்த பூக்கள் / வித்துகள் ஊடாக நிறம், வடிவம், பருமன் என்பவற்றுக்கேற்ப வகைப்படுத்தல்

12. **அறிவுறுத்தல்களைப் பின்பற்றல்** : எழுத்துருவில் அமைந்த அறிவுறுத்தல் கொண்ட அட்டையொன்றினை வாசித்து அதில் கூறப்பட்டுள்ள இலகுவான செயற்பாட்டில் ஈடுபடல்

13. **கூட்டலும் கழித்தலும்** : கூட்டல், கழித்தல் அடங்கிய எண் பிணைப்பு அட்டையைப் பார்த்து விடை கூறுதல்

14. **கதையைத் தொடர்ந்து கொண்டுசெல்லல்** : ஆசிரியர் கதையின் ஆரம்ப வாக்கியத்தைக் கூறி மாணவர்கள் அக்கதையைத் தொடர்ந்து வளர்த்துச் செல்லல்.

15. **எண் விளக்கம்** : 10 முதல் 20 வரை எண்கள் எழுதப்பட்ட அட்டைத் தொகுதியைப் பயன்படுத்தி குழுவாக எண்களை ஒழுங்குமுறையில் வைத்தல்.

16. **படம் பார்த்து வாக்கியம் எழுதுதல்** : வழங்கப்பட்ட படத்தைப் பார்த்து ஆக்கபூர்வமான வாக்கியமொன்றை எழுதுதல்.

17. **திரவங்களை அளத்தல்** : எதேச்சையான ஓர் அலகினால் திரவங்களை அளத்தல்.

18. **கண்காட்சி** : நான்கு தினங்களிலும் செய்த ஆக்கங்களைக் காட்சிப்படுத்தல்

19. **மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளல்** : தரம் இரண்டில் வகுப்பாசிரியர், அதிபர், பெற்றோர் ஆகியோர் பங்குகொள்ளக்கூடிய குறைந்தளவு செலவிலான தேநீர் விருந்துபசாரம் ஒன்றினை நடத்தல். கூடியளவு வகுப்பு மாணவர்கள் பொறுப்புகளைப் ஏற்கச் செய்தல்.

**முதன்மை நிலை இரண்டில் பிரவேசிக்கும் பிள்ளையை இனங்காணும்போது மேலும் கவனத்தில் கொள்ளக்கூடிய அணுகுமுறைகள் :**

- முதன்மை நிலை ஒன்றின் அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் தொடர்பான அறிக்கை
- முதன்மை நிலை ஒன்றின் ஆசிரியருடன் கலந்துரையாடல்
- பெற்றோர் / பாதுகாவலர்களுடன் கலந்துரையாடல்
- மாணவர்களுடன் கலந்துரையாடல்

இவ்வாறாகப் பல்வேறு நுட்பமுறைகளைப் பயன்படுத்தி, மாணவர்கள் தொடர்பாகப் பெறும் தகவல்களைத் துணையாகக்கொண்டு, கற்றல் - கற்பித்தல் செயன்முறையை ஒழுங்குசெய்வீர்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் பத்திரத்தைக் கவனத்திற் கொண்டு செயல்படுவது மிகப் பொருத்தமானதாக அமையும்.

## தரம் நான்கு - பாட உள்ளடக்கமும் ஆசிரியர் வழிகாட்டியும்


1.0 தாய்மொழி (தமிழ்) - அறிமுகமும் பாடத்திட்டமும் xix

தாய்மொழி ஆசிரியர் வழிகாட்டி 1

2.0 சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் - அறிமுகமும் பாடத்திட்டமும் 156

**சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் - ஆசிரியர் வழிகாட்டி**

01. எமது நல்வாழ்வு 173

02. நாம் இலங்கையர் 184

03. மரஞ்செடிகொடிகள் 192

04. எம்மைச் சூழவுள்ள பிராணிகள் 198

05. நாம் பயன்படுத்துபவை 206

06. எமது உணவு 212

07. பாதுகாப்பும் கரிசனையும் 222

08. நீர் 229

09. போக்குவரத்து 236

10. வீட்டுத்தோட்டம் 242

11. வேலையை இலகுபடுத்திக்கொள்ளும் வழிகள் 248

12. மனித நடத்தைகள் 255

13. நிலமும் வானும் 263

14. எம்மால் செய்யக்கூடிய மாற்றங்கள் 271

15. மனிதனும் தகவல்களும் 276

16. எமது பண்டைய தகவல்கள் 282

3.0 செயற்பாடுகள் அடிப்படையிலான வாய்மொழி ஆங்கிலம் 292

4.0 இரண்டாவது தேசிய மொழி - பாடத்திட்டமும் ஆசிரியர் வழிகாட்டியும் 305

5.0 மாணவர் முன்னேற்றத்தைக் கணிப்பிடல் 339

6.0 அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் 344


**கணிதம், சமயங்கள் தொடர்பான பாடத்திட்டங்களும் ஆசிரியர் வழிகாட்டிகளும் தனித்தனியாக முன்வைக்கப்பட்டுள்ளன.**

# 1.0 தாய் மொழி (தமிழ்) - தரம் 4

## 1. அறிமுகம்

செவிமடுத்தல். பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகியன மொழியின் அடிப்படைத் திறன்களாகும். இவை இரு வகைப்படும். செவிமடுத்தல் வாசித்தல் என்பன உள்ளீட்டுத் திறன்களாகும். எழுதுதல், பேசுதல் என்பன வெளியீட்டுத் திறன்களாகும். உள்ளீட்டுத் திறன்களை விருத்தி செய்தலானது, மாணவரின் வெளியீட்டுத் திறன்களின் விருத்தியில் பங்களிப்புச் செய்யும். இத்திறன்களின் விருத்திக்குப் பாடசாலைச் சூழலும் புறச்சூழலும் துணைநிற்கும். எனவே அடிப்படையான மொழித் திறன்களை விருத்தி செய்வதில் ஆரம்பக் கல்வியின் வகிபாகம் அளப்பரியதாகும்.. அடிப்படையான மொழித்திறன்கள் ஒழுங்காக முன்வைப்பதற்காக அவை வெவ்வேறாக காட்டப்பட்டுள்ள போதிலும் ஒன்றிணைந்த வகையில் கற்பிக்கத்தக்கவாறாக அவற்றை முன்வைத்தல் முக்கியமானதாகும்.

தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையின் போது தொடர்பாடல் திறன்களின் முதன்மையான ஓர் அம்சமாக எழுத்தறிவு இடம்பெறுகின்றது. கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், விளங்கிக் கொள்வதற்காக வாசித்தல், சரியாகவும், தெளிவாகவும் எழுதுதல், விளைதிறனுடையவாறு கருத்துப் பரிமாறுதல் ஆகிய தேர்ச்சிகளின்பால் மாணவரை இட்டுச் செல்வது எதிர்பார்க்கப்படுகின்றது. பிரதானமாக மேற்படி தொடர்பாடல் தேர்ச்சிகளுக்கு மேலதிகமாக, சுற்றாடல் சார்ந்த தேர்ச்சிகள், வேலையுலகுக்கு ஆயத்தமாதல் தேர்ச்சிகள், ஒழுகலாறு மற்றும் சமயம் சார்ந்த தேர்ச்சிகள், விளையாட்டு மற்றும் ஓய்வு நேரத்தைப் பயன்படுத்துதல் தொடர்பான தேர்ச்சிகள், போசாக்கு மற்றும் வளர்ச்சி தொடர்பான தேர்ச்சிகள், கற்கக் கற்றல் தொடர்பான தேர்ச்சிகள் ஆகிய ஏனைய தேர்ச்சிகளும் விருத்தியடையும் வகையில் பாடத்துக்குரிய கற்றல் - கற்பித்தற் செய்முறையை விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

முதன்மை நிலை ஒன்றில் உயிரோட்டமான அடிப்படை மொழித்திறன்களாகிய செவிமடுத்தல் மற்றும் பேசுதலுக்குரிய களிப்பூட்டத்தக்க கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டுப் படிப்படியாக வாசித்தல் எழுதுதல் ஆகிய அடிப்படை மொழித்திறன்களை விருத்தி செய்து கொள்வது அவசியமாகும்.

இரண்டாம் முதன்மை நிலையின் போது அடிப்படை மொழித்திறன்களை விருத்தி செய்தவாறு, குறிப்பாக செம்மையாக மொழியை விருத்தி செய்து கொள்வதற்கான செயற்பாடுகளில் ஈடுபடுவது எதிர்பார்க்கப்படுகின்றது. மூன்றாம் முதன்மை நிலையின் இறுதியில், குறிப்பாக ஆக்கபூர்வமாகப் பேசுதல் மற்றும் ஆக்கபூர்வமாக எழுதுதல் தொடர்பான உயர்மட்டப் பாண்டியத்தியம் எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே தாய்மொழியை நேசிக்கும் பிரசைகளின் முதன்மையான மொழி அத்திவாரத்தையும், இடைநிலைப் பருவத்தில் தாய்மொழியைப் பயில்வதற்குத் தேவையான முதன்மை அடித்தளத்தையும் இடுவது எதிர்பார்க்கப்படுகின்றது.

### ஆரம்பக் கல்விப் புலத்தில் எதிர்பார்க்கப்படும் மொழிசார்ந்த தேர்ச்சிகள்

- அன்றாடத் தேவைகளுக்காகச் செவிமடுத்தல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய திறமைகளை வெளிப்படுத்துவார்.
- கவிதை, பாடல், கதை கேட்டும் வாசித்தும் இரசிப்பார்.
- பிழையின்றி உச்சரித்து உரத்து வாசிப்பார்.
- தெளிவாகவும் பிழையின்றியும் எழுதுவார்.
- செவிமடுத்தல், பேச்சு, வாசிப்பு, எழுத்து சம்பந்தமான நல்ல பழக்கங்களை வெளிப்படுத்துவார்.
- புத்தகங்களை வாசித்து விளங்கிக்கொள்வார், இரசிப்பார்.
- தமது திறமைகளையும் எண்ணங்களையும் வெளிப்படுத்திக் காட்டுவார்.
- சமுதாயத்தின் மத்தியில் தமது எண்ணங்களை அன்னியோன்னியமாக பண்புடன் சமர்ப்பிப்பார்

## 2. தரம் 1 - 5 இற்கான மொழித் தேர்ச்சிகள்

- கிரகித்துத் துலக்குவதற்காகச் செவிமடுப்பார்.
- செவிமடுத்தல் திறனை விருத்தி செய்வதற்காகச் செவிமடுப்பார்.
- விருப்புடனும் இரசனையுடனும் செவிமடுப்பார்.
- நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காகச் செவிமடுப்பார்.
- சொற்களஞ்சிய விருத்திக்காகச் செவிமடுப்பார்.
- தொடர்பாடலுக்காகச் செவிமடுப்பார்.
- மொழியாட்சித் திறனை விருத்தி செய்வதற்காகச் செவிமடுப்பார்.
- கற்றல் விருத்திக்காகச் செவிமடுப்பார்.
- கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் கருத்தூன்றிச் செவிமடுப்பார்.
- நியம மொழிப் பிரயோகத்திற்காகச் செவிமடுப்பார்.
- விளக்கத்துடன் தெளிவான உச்சரிப்புடன் கருத்துப் புலப்படப் பேசுவார்.
- பேசுதல் திறனை விருத்தி செய்வதற்காகப் பேசுவார்.
- விருப்புடனும் இரசனையுடனும் இயல்பாகப் பேசுவார்.
- நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காகப் பேசுவார்.
- சொற்களஞ்சிய விருத்திக்காகப் பேசுவார்.
- தொடர்பாடலுக்காகப் பேசுவார்.
- மொழியாட்சித் திறனை விருத்தி செய்வதற்காகப் பேசுவார்.
- கற்றல் விருத்திக்காகப் பேசுவார்.
- கிரகித்தவற்றை ஆக்கத்திறனுடனும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பொருத்தமுறவும் பேசுவார்.
- நியம மொழிப் பிரயோகத்திற்காகப் பேசுவார்.
- வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார்.
- வாசித்தல் திறனை விருத்தி செய்வதற்காக வாசிப்பார்.
- விருப்புடனும் இரசனையுடனும் இயல்பாக வாசிப்பார்.
- நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காக வாசிப்பார்.
- சொற்களஞ்சிய விருத்திக்காக வாசிப்பார்.
- தொடர்பாடலுக்காக வாசிப்பார்.
- மொழியாட்சித் திறனை விருத்தி செய்வதற்காக வாசிப்பார்.
- கற்றல் விருத்திக்காக வாசிப்பார்.
- கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் கருத்தூன்றி வாசிப்பார்.
- நியம மொழிப் பிரயோகத்திற்காகவும் மொழிப் பயிற்சிக்காகவும் வாசிப்பார்.
- எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து எழுதுவார்.
- எழுத்துத் திறனை விருத்தி செய்வதற்காக எழுதுவார்.

- விருப்புடனும் இரசனையுடனும் எழுதுவார் / வரைவார்.
- நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காக எழுதுவார்.
- சொற்களஞ்சிய விருத்திக்காக எழுதுவார்.
- தொடர்பாடலுக்காக எழுதுவார்.
- மொழியாட்சித் திறனை விருத்தி செய்வதற்காக எழுதுவார்.
- கற்றல் விருத்திக்காக எழுதுவார்.
- கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் எழுதுவார்.
- நியம மொழிப் பிரயோகத்திற்காகவும் மொழிப் பயிற்சிக்காகவும் எழுதுவார்.

## 3. கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

மொழித்திறன் ஒவ்வொன்றிலும் விதித்துரைக்கப்பட்ட விடயக் கூறுகளில் மாணவர்கள் உரிய தேர்ச்சி அடைதல்களை உறுதிப்படுத்துவதற்காகக் கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் அமைதல் வேண்டும்.

**தரம் 4 இல் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின்போது விளையாட்டு, விநோதச் செயற்பாடுகள், செயற்பாடுகள், எழுத்துவேலை ஆகியவற்றுக்குச் சம வாய்ப்பு அளிக்கப்படல் வேண்டும்.** தமிழ்மொழிப் பாடம் கற்பிக்கப்படும்போது அதற்குரிய பாடநூலையும் உரியவாறு பயன்படுத்தல் வேண்டும். அதற்கான வழிகாட்டலுக்கு ஆசிரியர் வழிகாட்டி துணை புரியும்.

கதை கூறல், பாடுதல், நடித்தல், பாவனை செய்தல், செய்து காட்டுதல், வாசித்தல், பேசுதல், உரையாடுதல், பரிமாறுதல், எழுதுதல், வரைதல், விளக்கம் கூறுதல் போன்றவற்றை உள்ளடக்கிய செயற்பாடுகளிலும் விளையாட்டுக்களிலும் மாணவர்களை ஈடுபடுத்தலாம்.

## பாடநூலைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள்

1. கற்பித்தலை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஆசிரியர் பாடநூலை நன்கு நுணுகி ஆராய்ந்து கற்றல் வேண்டும்.


2. பாடநூலிலுள்ள பாடங்களை மாணவர்களுக்கு முன்வைக்கும்போது எமது நாடு, எமது விழுமியங்கள், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள், உள்நாட்டு மற்றும் உலகளாவிய விடயங்கள், சுற்றுச்சூழல் அழகு மற்றும் பாதுகாப்பு, விவசாயம், இலக்கிய நயம், உலகளாவிய இலக்கியம் போன்ற பல்வேறு துறைகளை அடிப்படையாகக் கொண்ட தத்துவங்களுடன் மாணவர்களுக்கு வழங்க வேண்டியது உங்களது கடமையாகும்.

3. வருடாவருடம் பிள்ளையின் மொழித்தேர்ச்சி விருத்தியுறும் வகையில் பாடநூல் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

4. செவிமடுத்தல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய அடிப்படை மொழித்திறன்கள் நான்கினையும் மாணவர்கள் விருத்திசெய்து கொள்ளக்கூடிய வகையில் பாடநூலை வாசிப்பதற்கு மாத்திரம் பயன்படுத்தாமல் மேற்குறிப்பிட்ட திறன்களுடன் ஒன்றிணைக்கும் வகையில் பயன்படுத்த வேண்டும்.

5. தரம் நான்கு ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ள தேர்ச்சிகளை அடைந்து கொள்வதற்காக முன்மொழியப்பட்டுள்ள ஏதேனும் செயற்பாடுகளுக்குச் சமனான செயற்பாடுகளைப் பாடநூலில் இருந்தும் பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறே ஆசிரியர் வழிகாட்டியில் உள்ள ஏதேனும் செயற்பாடுகளுக்கு பாடநூலையும் உசாத்துணையாகப் பயன்படுத்த முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்கள் எவை என்பதைப் பாடநூலையும் ஆசிரியர் வழிகாட்டியையும் நன்கு நுணுகி ஆராய்ந்து கற்கும்போது விளங்கிக்கொள்ள முடியும்.

6.




## 4. பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

தமிழ்மொழிப் பாடத்துடன் இணைந்த பல செயற்பாடுகளை பாடசாலையில் நடைமுறைப்படுத்த முடியும்.

- காலைக் கூட்டமும் நற்சிந்தனையும்
- வகுப்புக் கூட்டம்
- கலை நிகழ்ச்சிகள்
- கண்காட்சிகள்
- சிறுவர் நிகழ்ச்சிகள் - சந்தை, சுற்றுலா போன்றவை
- சமய நிகழ்ச்சிகள்
- மாணவர் மன்றம்
- ஆசிரியர் தினம், பெற்றோர் தினம் போன்றவை
- பேச்சு
- தனி அல்லது குழுப் பாடல்
- நடிப்பு, அபிநயம் தொடர்பான செயற்பாடுகள் போன்றவையாகும்.

மேற்படி பாடசாலை வேலைத்திட்டத்தில் இருந்து மாணவர்களின் மொழித்திறன்களை விருத்தி செய்வதற்காகப் பின்வரும் செயற்பாடுகளை ஆக்கபூர்வமான வகையில் பயன்படுத்த முடியும்.

**தரம் 4 மாணவர்கள் மொழிக் கற்றல் தேர்ச்சிகளை அடையும் பொருட்டு பின்வரும் கொள்கைகளைப் பாடசாலை மட்டத்தில் கடைப்பிடித்தல் நன்று.**

- வகுப்பறையை வளமுள்ளதாக்கல்
- மொழிக் கற்றலுக்கான வளங்களையும் வசதிகளையும் அளித்தல்
- மாணவர் பலதரப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபடக்கூடியவாறான வசதிகளை வழங்கல்
- இணைப்பாடத்திட்டச் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல்
- பொருத்தமான ஆசிரியருக்கு இவ்வகுப்பை ஒப்படைத்தல்
- ஆசிரியருக்குத் தேவையான சேவைக்காலப் பயிற்சி பெறச் சந்தர்ப்பமளித்தல்
- பெற்றோருடன் சாதகமான தொடர்புகளை ஏற்படுத்துதல்
- மேற்பார்வை செய்தல், ஆலோசனை வழிகாட்டல்

## 5. மாணவர்களின் முன்னேற்றத்தைக் கணிப்பிடல்

தரம் நான்கில் தாய்மொழிப் பாடத்தில் எழுத்துப் பரீட்சைகளைவிட மாணவர்களுடன் இணைந்து மேற்கொள்ளும் செயற்பாடுகளின்போது கண்காணிப்பின் ஊடாக மேற்கொள்ளப்படும் கணிப்பீட்டிற்கே முக்கியத்துவம் வழங்குதல் வேண்டும். விளையாட்டு - விநோதச் செயற்பாடுகள், செயற்பாடுகள், எழுத்துவேலை, கலந்துரையாடல், வாய்மொழிமூல வினாக்கள் போன்ற முறைகளின் ஊடாக ஒவ்வொரு மொழித்திறனிலும் மாணவர் அடையவேண்டிய தேர்ச்சிகளை இனங்கண்டு அவற்றை அடைந்துள்ளனரா என்பதைக் கணிப்பீடு செய்தல் எதிர்பார்க்கப்படுகிறது. கணிப்பீடு முறைசார்ந்ததும் முறைசாராததுமாக அமைதல் நன்று. பின்வரும் எடுத்துக்காட்டுகளை அனுசரித்துக் கணிப்பீடுகளை மேற்கொள்ளலாம்.

- அவதானித்துச் செவிமடுத்தல், துலங்குதல், கிரகித்தல் என்பவற்றை அவதானித்தல்
- கருத்துக்களை வெளிப்படுத்திப் பேசுதலை அவதானித்தல்
- கதை கூறல் / பாவோதல் என்பவற்றை உற்றுநோக்குதல்
- எழுத்துக்களை இனங்கண்டு உச்சரித்தலை அவதானித்தல்
- தெளிவாக உச்சரித்து வாசித்தலை அவதானித்தல்
- உறுப்பமைய எழுதுதலைப் பார்வையிடல்
- பொறிமுறையை அனுசரித்து எழுதுதலைப் பார்வையிடல்
- ஆக்கி எழுதுதலைச் சரிபார்த்தல்

## வீட்டுவேலை

- பாடசாலையிலே நாள்தோறும் ஈடுபடும் வேலைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக வீட்டுவேலைகளாக கதை, கவிதை போன்றவற்றைப் பெற்றோர் அல்லது வயது வந்தோரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளக்கூடிய வகையில் வழங்குங்கள்.
- செய்யவேண்டியவற்றையும் செய்யவேண்டிய விதத்தையும் மாணவர்கள் தெளிவாக விளங்கிக்கொள்ளும் வகையில் அறிவுறுத்தவும்.
- பெற்றோர் / பாதுகாவலர் உங்களைச் சந்திப்பாராயின் அது தொடர்பாக அவர்களுக்கு அறிவுரை வழங்கவும்.
- எழுத்து, வாசிப்புத் தொடர்பான கற்பித்தலுக்கு ஆசிரியர்கள் பொறுப்பேற்றுக்கொள்ளுதல் வேண்டும். அவை தொடர்பாக வீட்டுவேலைகளை வழங்குவதாயின் எழுத்து மூலமாக வழங்குவதுடன் உச்சரிப்புப் போன்றவற்றைச் சரியான முறையில் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதற்கும் அறிவுரை வழங்கவும்.
- ஒப்படைக்கப்பட்டுள்ள வீட்டுவேலைகளைச் செய்யும் விதத்தைக்கொண்டும் பிள்ளையைக் கணிப்பிட முடியும்.

# பாடத்திட்டம்

| திறன்கள் | தேர்ச்சிகள் | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| L1 S1 | L1 கிரகித்துத் துலங்குவதற்காகச் செவிமடுப்பார். | L1 <br>• பேசுவதைச் செவிமடுத்தல்<br>• படம் பார்த்துப் பேசுவதைச் செவிமடுத்தல்<br>• கதை சொல்வதைச் செவிமடுத்தல்<br>• காட்சிப்படங்கள், கதைப் படங்களைப் பார்த்து சொல்வதைச் செவிமடுத்தல்<br>• ஒலி வேறுபாட்டுச் சொற்கள் / வாக்கியங்கள்<br>• ஒருமை, பன்மைச் சொற்கள் / வாக்கியங்கள் |
| | S1 விளக்கத்துடனும் தெளிவான உச்சரிப்புடனும் கருத்துப் புலப்படப் பேசுவார். | S1 <br>• சுயமாகப் பேசுதல்<br>• படம் பார்த்துப் பேசுதல்<br>• சுயமாகக் கதை சொல்லல்<br>• காட்சிப் படங்கள் / கதைப் படங்களைப் பார்த்துச் சுயமாகப் பேசுதல்<br>• ஒலி வேறுபாட்டுச் சொற்கள் / வாக்கியங்கள்<br>• ஒருமை, பன்மைச் சொற்கள் / வாக்கியங்கள் |
| R1 W1 | R1 வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார். | R1 <br>• வாசிப்பு முறைகள்<br>- உரத்து வாசிப்பு<br>- மௌன வாசிப்பு<br>• சிறிய வாக்கியங்களை வாசித்தல்<br>• ஒலி வேறுபாட்டுச் சொற்களை / வாக்கியங்களை வாசித்தல்<br>• ஒருமை, பன்மைச் சொற்களை / வாக்கியங்களை வாசித்தல்<br>• இறந்தகால / நிகழ்கால வாக்கியங்களை வாசித்தல் |
| | W1 எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து எழுதுவார். | W1 <br>• எழுதுவதற்கான நுட்பப் பயிற்சிகள்<br>- சரியான கொண்ணிலையில் அமரும் பயிற்சி<br>- சரியாகப் பென்சில் பிடிக்கும் பயிற்சி<br>- சரியாக அப்பியாசக்கொப்பியை வைத்திருந்து எழுதும் பயிற்சி<br>• காட்சிப் படங்களைப் பார்த்து வாக்கியங்களை நிகழ்காலத்தில் எழுதுதல் |

| திறன்கள் | தேர்ச்சிகள் | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| | | • ஒளிப்படங்களைப் பார்த்து வாக்கியங்களை நிகழ்காலத்தில் எழுதுதல்<br>• கதைப்படங்களைப் பார்த்து வாக்கியங்களை இறந்காலத்தில் எழுதுதல்<br>• ஒலி வேறுபாட்டுச் சொற்களை / வாக்கியங்களை எழுதுதல்<br>• ஒருமை, பன்மைச் சொற்களை / வாக்கியங்களை எழுதுதல் |
| $L_2$ $S_2$ $R_2$ $W_2$ | $L_2$ செவிமடுத்தல் திறனை விருத்தி செய்வதற்காகச் செவிமடுப்பார். | $L_2$ • ஒத்த கருத்துச் சொற்கள்<br>• எதிர்க் கருத்துச் சொற்கள்<br>• எதிர்ப்பாற் சொற்கள்<br>• திணை,பால், எண், இடம், காலம்<br>• எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்<br>• அடைமொழிகள் (எழுவாய்,பயனிலை)<br>• பெயர்ச்சொல், வினைச்சொல்<br>• நிறுத்தக் குறிகள்(முற்றுப்புள்ளி, காற்புள்ளி, வினாக்குறி, வியப்புக்குறி) |
| | $S_2$ பேசுதல் திறனை விருத்தி செய்வதற்காகப் பேசுவார். | $S_2$ • ஒத்த கருத்துச் சொற்கள்<br>• எதிர்க் கருத்துச் சொற்கள்<br>• எதிர்ப்பாற் சொற்கள்<br>• திணை,பால், எண், இடம், காலம்<br>• எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்<br>• அடைமொழிகள் (எழுவாய்,பயனிலை)<br>• பெயர்ச்சொல், வினைச்சொல்<br>• நிறுத்தக் குறிகள்(முற்றுப்புள்ளி, காற்புள்ளி, வினாக்குறி, வியப்புக்குறி) |
| | $R_2$ வாசித்தல் திறனை விருத்தி செய்வதற்காக வாசிப்பார். | $R_2$ • ஒத்த கருத்துச் சொற்கள்<br>• எதிர்க் கருத்துச் சொற்கள்<br>• எதிர்ப்பாற் சொற்கள்<br>• திணை,பால், எண், இடம், காலம்<br>• எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்<br>• அடைமொழிகள் (எழுவாய்,பயனிலை)<br>• பெயர்ச்சொல், வினைச்சொல்<br>• நிறுத்தக் குறிகள்(முற்றுப்புள்ளி, காற்புள்ளி, வினாக்குறி, வியப்புக்குறி) |

| திறன்கள் | தேர்ச்சிகள் | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| | $W_2$ எழுதுதல் திறனை விருத்தி செய்வதற்காக எழுதுவார். | $W_2$ <br>• ஒத்த கருத்துச் சொற்கள்<br>• எதிர்க் கருத்துச் சொற்கள்<br>• எதிர்ப்பாற் சொற்கள்<br>• திணை,பால், எண், இடம், காலம்<br>• எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்<br>• அடைமொழிகள் (எழுவாய்,பயனிலை)<br>• பெயர்ச்சொல், வினைச்சொல்<br>• நிறுத்தக் குறிகள்(முற்றுப்புள்ளி, காற்புள்ளி, வினாக்குறி, வியப்புக்குறி) |
| $L_3$ $S_3$ | $L_3$ விருப்புடனும் இரசனையுடனும் செவிமடுப்பார். | $L_3$ <br>• சிறுவர் பாடல்கள்<br>• சிறுவர் கதைகள்<br>• உரையாடல்கள்<br>• போலச் செய்தல்<br>• விகடத் துணுக்குகள் |
| | $S_3$ விருப்புடனும் இரசனையுடனும் இயல்பாகப் பேசுவார். | $S_3$ <br>• சிறுவர் பாடல்கள்<br>• சிறுவர் கதைகள்<br>• உரையாடல்கள்<br>• போலச் செய்தல்<br>• விகடத் துணுக்குகள் |
| $R_3$ $W_3$ | $R_3$ விருப்புடனும் இரசனையுடனும் வாசிப்பார். | $R_3$ <br>• சிறுவர் பாடல்கள்<br>• சிறுவர் கதைகள்<br>• உரையாடல்கள்<br>• நாடகங்கள்<br>• சித்திரக் கதைகள்<br>• விகடத் துணுக்குகள்<br>• சித்திரங்கள் |
| | $W_3$ விருப்புடனும் இரசனையுடனும் எழுதுவார் / வரைவார். | $W_3$ <br>• சிறுவர் பாடல்கள்<br>• சிறுவர் கதைகள்<br>• உரையாடல்கள்<br>• நாடகங்கள்<br>• சித்திரக் கதைகள்<br>• விகடத் துணுக்குகள்<br>• சித்திரங்கள் |
| $L_4$ $S_4$ $R_4$ $W_4$ | $L_4$ நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காகச் செவிமடுப்பார். | $L_4$ <br>• அறிவித்தல்கள்<br>• அறிவுறுத்தல்கள்<br>• கட்டளைகள்<br>• தகவல்கள் / குறிப்புகள்<br>• சுய விபரம் / படிவங்கள்<br>• கடிதம் (பாரம்பரிய / நவீன)<br>• மின்னஞ்சல் / குறுஞ்செய்தி |

| திறன்கள் | தேர்ச்சிகள் | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| | $S_4$ நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காகப் பேசுவார். | $S_4$ <br>• அறிவித்தல்கள்<br>• அறிவுறுத்தல்கள்<br>• கட்டளைகள்<br>• தகவல்கள் / குறிப்புகள்<br>• சுய விபரம் / படிவங்கள்<br>• கடிதம் (பாரம்பரிய / நவீன)<br>• மின்னஞ்சல் / குறுஞ்செய்தி |
| | $R_4$ நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காக வாசிப்பார். | $R_4$ <br>• அறிவித்தல்கள்<br>• அறிவுறுத்தல்கள்<br>• கட்டளைகள்<br>• தகவல்கள் / குறிப்புகள்<br>• சுய விபரம் / படிவங்கள்<br>• கடிதம் (பாரம்பரிய / நவீன)<br>• மின்னஞ்சல் / குறுஞ்செய்தி |
| | $W_4$ நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காக எழுதுவார். | $W_4$ <br>• அறிவித்தல்கள்<br>• அறிவுறுத்தல்கள்<br>• கட்டளைகள்<br>• தகவல்கள் / குறிப்புகள்<br>• சுய விபரம் / படிவங்கள்<br>• கடிதம் (பாரம்பரிய / நவீன)<br>• மின்னஞ்சல் / குறுஞ்செய்தி |
| $L_5$ $S_5$ $R_5$ $W_5$ | $L_5$ சொற்களஞ்சிய விருத்திக்காகச் செவிமடுப்பார். | $L_5$ <br>• சிறிய கட்டுரைகள்<br>• மரபுச் சொற்கள்<br>• இணைமொழிகள்<br>• இரட்டைக்கிளவி<br>• விடுகதைகள்<br>• பழமொழிகள்<br>• குறியீடுகள் / சுருக்கக் குறியீடுகள்<br>• தொடர்மொழிக்கு ஒரு மொழி<br>• சேர்த்தெழுதுதல்<br>• சொல்வதெழுதுதல் |
| | $S_5$ சொற்களஞ்சிய விருத்திக்காகப் பேசுவார். | $S_5$ <br>• சிறிய கட்டுரைகள்<br>• மரபுச் சொற்கள்<br>• இணைமொழிகள்<br>• இரட்டைக்கிளவி<br>• விடுகதைகள்<br>• பழமொழிகள்<br>• குறியீடுகள் / சுருக்கக் குறியீடுகள்<br>• தொடர்மொழிக்கு ஒரு மொழி<br>• சேர்த்தெழுதுதல்<br>• சொல்வதெழுதுதல் |

| திறன்கள் | தேர்ச்சிகள் | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| | R5 சொற்களஞ்சிய விருத்திக்காக வாசிப்பார். | R5 <br>• சிறிய கட்டுரைகள்<br>• மரபுச் சொற்கள்<br>• இணைமொழிகள்<br>• இரட்டைக்கிளவி<br>• விடுகதைகள்<br>• பழமொழிகள்<br>• குறியீடுகள் / சுருக்கக் குறியீடுகள்<br>• தொடர்மொழிக்கு ஒரு மொழி<br>• சேர்த்தெழுதுதல்<br>• சொல்வதெழுதுதல் |
| | W5 சொற்களஞ்சிய விருத்திக்காக எழுதுவார். | W5 <br>• சிறிய கட்டுரைகள்<br>• மரபுச் சொற்கள்<br>• இணைமொழிகள்<br>• இரட்டைக்கிளவி<br>• விடுகதைகள்<br>• பழமொழிகள்<br>• குறியீடுகள் / சுருக்கக் குறியீடுகள்<br>• தொடர்மொழிக்கு ஒரு மொழி<br>• சேர்த்தெழுதுதல்<br>• சொல்வதெழுதுதல் |
| L6 S6 | L6 தொடர்பாடலுக்காகச் செவிமடுப்பார். | L6 <br>• உரையாடல்கள்(பொது இடங்கள்)<br>• வானொலி / தொலைக்காட்சி / (நேர்முக வர்ணனை)<br>• அழைப்புச் செய்திகள் |
| | S6 தொடர்பாடலுக்காகப் பேசுவார். | S6 <br>• உரையாடல்கள்(பொது இடங்கள்)<br>• வானொலி / தொலைக்காட்சி / (நேர்முக வர்ணனை)<br>• அழைப்புச் செய்திகள் |
| R6 W6 | R6 தொடர்பாடலுக்காக வாசிப்பார். | R6 <br>• அலுவலகங்கள் (பெயர்கள்)<br>• வானிலை அறிக்கை<br>• ஒட்டிகள் (லேபல்கள்)<br>• விளம்பரங்கள்<br>• துண்டுப்பிரசுரம்<br>• அழைப்பிதழ்கள்<br>• சுவரொட்டிகள் |
| | W6 தொடர்பாடலுக்காக எழுதுவார். | W6 <br>• அலுவலகங்கள் (பெயர்கள்)<br>• வானிலை அறிக்கை<br>• ஒட்டிகள் (லேபல்கள்)<br>• விளம்பரங்கள்<br>• துண்டுப்பிரசுரம்<br>• அழைப்பிதழ்கள்<br>• சுவரொட்டிகள் |

| திறன்கள் | தேர்ச்சிகள் | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| $L_7$ $S_7$ $R_7$ $W_7$ | $L_7$ மொழியாட்சித்திறனை விருத்தி செய்வதற்காகச் செவிமடுப்பார். | $L_7$ • காட்சிப் படங்கள் / கதைப்படங்கள்<br>• சுயசரிதை<br>• மூதுரை (விதந்துரைக்கப்பட்ட ஐந்து பாடல்கள்)<br>• கிராமிய விளையாட்டுக்கள் (சிறிய)<br>• பண்டிகைகள் (இசைக்கருவிகள்) |
| | $S_7$ மொழியாட்சித்திறனை விருத்தி செய்வதற்காகப் பேசுவார். | $S_7$ • காட்சிப் படங்கள் / கதைப்படங்கள்<br>• சுயசரிதை<br>• மூதுரை (விதந்துரைக்கப்பட்ட ஐந்து பாடல்கள்)<br>• கிராமிய விளையாட்டுக்கள் (சிறிய)<br>• பண்டிகைகள் (இசைக்கருவிகள்) |
| | $R_7$ மொழியாட்சித்திறனை விருத்தி செய்வதற்காக வாசிப்பார். | $R_7$ • காட்சிப் படங்கள் / கதைப்படங்கள்<br>• சுயசரிதை<br>• மூதுரை (விதந்துரைக்கப்பட்ட ஐந்து பாடல்கள்)<br>• கிராமிய விளையாட்டுக்கள் (சிறிய)<br>• பண்டிகைகள் (இசைக்கருவிகள்) |
| | $W_7$ மொழியாட்சித்திறனை விருத்தி செய்வதற்காக எழுதுவார். | $W_7$ • காட்சிப் படங்கள் / கதைப்படங்கள்<br>• சுயசரிதை<br>• மூதுரை (விதந்துரைக்கப்பட்ட ஐந்து பாடல்கள்)<br>• கிராமிய விளையாட்டுக்கள் (சிறிய)<br>• பண்டிகைகள் (இசைக்கருவிகள்) |
| $L_8$ $S_8$ $R_8$ $W_8$ | $L_8$ கற்றல் விருத்திக்காகச் செவிமடுப்பார். | $L_8$ • ஒளிப்படங்கள்/ காட்சிப்படங்கள்<br>• அனுமானித்தல் / தொடர்புபடுத்தல் / எதிர்வுகூறல்<br>• வழிகாட்டற் குறிப்புகள் (கதை)<br>• தினசரிக் குறிப்புகள் (நாட்குறிப்பு)<br>• சுற்றுலா<br>• பசுமை உலகு |
| | $S_8$ கற்றல் விருத்திக்காகப் பேசுவார். | $S_8$ • ஒளிப்படங்கள்/ காட்சிப்படங்கள்<br>• அனுமானித்தல் / தொடர்புபடுத்தல் / எதிர்வுகூறல்<br>• வழிகாட்டற் குறிப்புகள் (கதை)<br>• தினசரிக் குறிப்புகள் (நாட்குறிப்பு)<br>• சுற்றுலா<br>• பசுமை உலகு |

| திறன்கள் | தேர்ச்சிகள் | விடய உள்ளடக்கம் |
| --- | --- | --- |
| | $R_8$ கற்றல் விருத்திக்காக வாசிப்பார். | $R_8$ <br>• ஒளிப்படங்கள்/ காட்சிப்படங்கள்<br>• அனுமானித்தல் / தொடர்புபடுத்தல் / எதிர்வுகூறல்<br>• வழிகாட்டற் குறிப்புகள் (கதை)<br>• தினசரிக் குறிப்புகள் (நாட்குறிப்பு)<br>• சுற்றுலா<br>• பசுமை உலகு |
| | $W_8$ கற்றல் விருத்திக்காக எழுதுவார். | $W_8$ <br>• ஒளிப்படங்கள்/ காட்சிப்படங்கள்<br>• அனுமானித்தல் / தொடர்புபடுத்தல் / எதிர்வுகூறல்<br>• வழிகாட்டற் குறிப்புகள் (கதை)<br>• தினசரிக் குறிப்புகள் (நாட்குறிப்பு)<br>• சுற்றுலா<br>• பசுமை உலகு |
| $L_9$ $S_9$ $R_9$ $W_9$ | $L_9$ கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் கருத்தூன்றிச் செவிமடுப்பார். | $L_9$ <br>• சிறுவர் கதைப்பாடல்கள்<br>• சிறுவர் கதைகள் (நகைச்சுவை)<br>• விஞ்ஞானிகள்/ செய்முறை விளக்கம்<br>• தகவல்கள் (பிராணிகள்)<br>• சிறுவர் இணையத்தளங்கள்<br>• சிறுவர் சஞ்சிகைகள்<br>• சிறுவர் நூல்கள் |
| | $S_9$ கிரகித்தவற்றை ஆக்கத்திறனுடனும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பொருத்தமுறவும் பேசுவார். | $S_9$ <br>• சிறுவர் கதைப்பாடல்கள்<br>• சிறுவர் கதைகள் (நகைச்சுவை)<br>• விஞ்ஞானிகள்/ செய்முறை விளக்கம்<br>• தகவல்கள் (பிராணிகள்)<br>• சிறுவர் இணையத்தளங்கள்<br>• சிறுவர் சஞ்சிகைகள்<br>• சிறுவர் நூல்கள் |
| | $R_9$ கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் கருத்தூன்றி வாசிப்பார். | $R_9$ <br>• சிறுவர் கதைப்பாடல்கள்<br>• சிறுவர் கதைகள் (நகைச்சுவை)<br>• விஞ்ஞானிகள்/ செய்முறை விளக்கம்<br>• தகவல்கள் (பிராணிகள்)<br>• சிறுவர் இணையத்தளங்கள்<br>• சிறுவர் சஞ்சிகைகள்<br>• சிறுவர் நூல்கள் |

| திறன்கள் | தேர்ச்சிகள் | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| | W9 கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் எழுதுவார். | W9 • சிறுவர் கதைப்பாடல்கள்<br>• சிறுவர் கதைகள் (நகைச்சுவை)<br>• விஞ்ஞானிகள்/ செய்முறை விளக்கம்<br>• தகவல்கள் (பிராணிகள்)<br>• சிறுவர் இணையத்தளங்கள்<br>• சிறுவர் சஞ்சிகைகள்<br>• சிறுவர் நூல்கள் |
| L10 S10 R10 W10 | L10 நியம மொழிப் பிரயோகத்திற்காகச் செவிமடுப்பார். | L10 • ஒளிப் படங்கள்<br>• படிப்பினை தரும் கதைகள்<br>• இணையத்தளங்கள்<br>• மொழிப் பயிற்சிகள் |
| | S10 நியம மொழிப் பிரயோகத்திற்காகப் பேசுவார். | S10 • ஒளிப் படங்கள்<br>• படிப்பினை தரும் கதைகள்<br>• இணையத்தளங்கள்<br>• மொழிப் பயிற்சிகள் |
| | R10 நியம மொழிப் பிரயோகத்திற்காகவும் மொழிப் பயிற்சிக்காகவும் வாசிப்பார். | R10 • ஒளிப் படங்கள்<br>• படிப்பினை தரும் கதைகள்<br>• இணையத்தளங்கள்<br>• மொழிப் பயிற்சிகள் |
| | W10 நியம மொழிப் பிரயோகத்திற்காகவும் மொழிப் பயிற்சிக்காகவும் எழுதுவார். | W10 • ஒளிப் படங்கள்<br>• படிப்பினை தரும் கதைகள்<br>• இணையத்தளங்கள்<br>• மொழிப் பயிற்சிகள் |

# தாய்மொழி தமிழ்
## ஆண்டுத் திட்டம்

| முதலாந் தவணை | | |
|---|---|---|
| | தேர்ச்சிகள் | உத்தேச காலம் |
| 01. | $L_1$ $S_1$ $R_1$ $W_1$ | |
| 02. | $L_2$ $S_2$ $R_2$ $W_2$ | |
| 03. | $L_3$ $S_3$ $R_3$ $W_3$ | |

மீட்டற் பயிற்சி

| | இரண்டாந் தவணை | |
|---|---|---|
| | தேர்ச்சிகள் | உத்தேச காலம் |
| 04. | $L_4$ $S_4$ $R_4$ $W_4$ | |
| 05. | $L_5$ $S_5$ $R_5$ $W_5$ | |
| 06. | $L_6$ $S_6$ $R_6$ $W_6$ | |
| 07. | $L_7$ $S_7$ $R_7$ $W_7$ | |

மீட்டற் பயிற்சி

| மூன்றாந் தவணை | | |
|---|---|---|
| | தேர்ச்சிகள் | உத்தேச காலம் |
| 08. | $L_8$ $S_8$ $R_8$ $W_8$ | |
| 09. | $L_9$ $S_9$ $R_9$ $W_9$ | |
| 10. | $L_{10}$ $S_{10}$ $R_{10}$ $W_{10}$ | |

# கற்றல் - கற்பித்தற் செயன்முறைக்குரிய வழிகாட்டல்

1

L1 S1

**தேர்ச்சிகள் :**

L1 - கிரகித்துத் துலங்குவதற்காகச் செவிமடுப்பார்.

S1 - விளக்கத்துடனும் தெளிவான உச்சரிப்புடனும் கருத்துப்புலப்படப் பேசுவார்.

**உள்ளடக்கம் :**

- சுயமாகப் பேசுதல்
- மற்றவர்கள் பேசுவதைச் செவிமடுத்தல்
- படம் பார்த்துப் பேசுதல்
- படம் பார்த்துப் பேசுவதைச் செவிமடுத்தல்
- கதைப் படங்களைப் பார்த்துச் சுயமாகக் கதை சொல்லல்
- கதைப் படங்களைப் பார்த்துக் கதை சொல்வதைச் செவிமடுத்தல்
- ஒலி வேறுபாட்டுச் சொற்கள் / வாக்கியங்கள்
- ஒருமை, பன்மை சொற்கள் / வாக்கியங்கள்

**கற்றற்பேறுகள் :**

- சுயமாகப் பேசுவதற்குத் தாமாக முன்வருவார்.
- மற்றவர்கள் பேசுவதைச் செவிமடுப்பார்.
- படம் பார்த்துப் பேசுவதுடன் மற்றவர்கள் படம் பார்த்துப் பேசுவதையும் செவிமடுப்பார்.
- தாம் செவிமடுத்த கதைகளைப் புரிந்து கொண்டு முன்வைப்பார்.
- கதைப் படங்களைப் பார்த்து, தமது பாணியில் சுயமாகக் கதை சொல்வார்.
- ஒலி வேறுபாடுகளைப் புரிந்து கொண்டு, கருத்துக்களை வாக்கியங்களில் உரிய முறையில் வெளிப்படுத்துவார்.
- ஒருமை, பன்மை வேறுபாடுகளை இனங்கண்டு, வாக்கியங்களில் உரிய முறையில் பிரயோகிப்பார்.

**வளங்கள் :**

- காட்சிப்பட அட்டைகள், கதைப்பட அட்டைகள், வாக்கிய அட்டைகள், செருகல் அட்டைப் பலகைகள், பெட்டிகள், காட்போட் தட்டுக்கள், அட்டைக் கீலங்கள், ஒலி வேறுபாட்டுச் சொல் அடடைகள் / ஒலி வேறுபாட்டு வாக்கிய அட்டைகள், ஒருமை, பன்மை சொல் அட்டைகள் / ஒருமை, பன்மை வாக்கிய அட்டைகள் செலோரேப் (இருபக்க), நிறப் பேனாக்கள், நிறப் பென்சில்கள்


**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு 1**

- காட்சிப் படம் ஒன்றை ஒட்டுப் பலகையில் காட்சிப்படுத்துங்கள்.
- காட்சியை நன்றாக அவதானிக்கச் செய்யுங்கள்.

அக்காட்சியை சிறிது நேரம் மாணவர்கள் அவதானித்த பின்னர் கண்களை மூடச் சொல்லுங்கள். மாணவர்கள் கண்களை மூடிய பின்னர் ஒட்டுப்பலகையில் பார்த்த காட்சியை மனக்கண் முன்கொண்டு வரச்செய்யுங்கள். சிறிது நேரம் கண்களை மூடி அக்காட்சியை நினைக்கச் செய்யுங்கள். அதன் பின்னர் கண்களைத் திறக்கச் செய்யுங்கள். மாணவர்களுடன் காட்சிப் படம் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

***எடுத்துக்காட்டு:***



- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப காட்சிப்படத்தைப் பிரதி எடுத்து அட்டைகளில் ஒட்டி குழுக்களுக்கு வழங்குங்கள். (காட்சிப்படத்தை முன்கூட்டியே பிரதி எடுத்து வைத்திருக்க வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.)
- மாணவர்கள் குழுவாகக் **காட்சிப்படம்** பற்றி கலந்துரையாடச் சிறிது நேரம் வழங்குங்கள்.
- அதன் பின்னர் ஒவ்வொரு குழுவாக அழைத்து, காட்சிப்படத்தைப் பார்த்து நிகழ்காலத்தில் வாக்கியங்களைக் கூற வழிப்படுத்துங்கள்.
- மாணவர்கள் கூறும் வாக்கியங்களைக் கரும்பலகையில் / வெண்பலகையில் பெரிதாக எழுதுங்கள்.

1. ..........................................................................................................................
2. ..........................................................................................................................
3. ..........................................................................................................................
4. ..........................................................................................................................
5. ..........................................................................................................................

- எல்லாக் குழுக்களும் காட்சிப்படத்தைப் பார்த்து வாக்கியங்களைக் கூறிய பின்னர், ஆசிரியர் காட்சிப்படத்தைப் பார்த்து சில வாக்கியங்களைக் கூற வேண்டும். கூறிய பின்னர், ஆசிரியர் கூறிய வாக்கியங்களைத் தனியாகக் கரும்பலகையில்/வெண்பலகையில் எழுதுங்கள்.
- அதன் பின்னர் மாணவர்கள் கூறிய வாக்கியங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள். ஆசிரியர் கூறும் வாக்கியங்களைக் குழுக்களிடையே பரிமாற உற்சாகப்படுத்துங்கள்.
- மாணவர்கள் பிழையின்றி வாக்கியங்களைக் கூறுகின்றார்களா என அவதானியுங்கள். இடர்ப்படும் மாணவர்களுக்கு அச் சந்தர்ப்பத்திலேயே உதவுங்கள்.

**செயற்பாடு 2**

- ஒளிப்படக்கருவி மூலம் எடுக்கப்பட்ட ஒளிப்படம் ஒன்றைக் காட்சிப்படுத்துங்கள். அப்படத்தை மாணவர்கள் பார்வையிட வழிப்படுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு:***




- ஒவ்வொரு மாணவனாக அழைத்துக் காட்சிப்படுத்திய காட்சிப் படத்தைப் பார்த்து நிகழ்காலத்தில் வாக்கியங்களைக் கூற வழிப்படுத்துங்கள். (ஒரு மாணவன் இரண்டு வாக்கியங்களை நிகழ்காலத்தில் கூறினால் போதுமானது.) எல்லா மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒருவர் கூறும்போது மற்றவர்கள் அமைதியாக இருந்து செவிமடுக்கும் பண்பை மாணவர்களிடம் வளர்த்தெடுக்க வேண்டியது ஆசிரியர்கள் பொறுப்பு என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.
- வாக்கியங்களை எல்லா மாணவர்களும் கூறும்போது, மாணவர்கள் மனதில் மீள வலியுறுத்தல் நிகழ்வதோடு, சொற்களஞ்சியமும் பெருக்கமடைகின்றது என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.
- மாணவர்கள் வாக்கியங்களைச் சரியான எழுவாய், பயனிலைகளுடன் கூற இடர்ப்படும்போது ஆசிரியர் அச்சந்தர்ப்பத்திலேயே மாணவர்களுக்கு உதவ வேண்டியது அவசியமாகும்.

செயற்பாடு 3

- கதைப்படங்களைக் காட்சிப்படுத்துங்கள். கதைப்படங்களைப் பார்த்து மாணவர்கள் சுயமாகக் கதையைக் கட்டியெழுப்புவதற்கு மாணவர்களைத் தயாரப்படுத்துங்கள். முதலில் ஆசிரியர் கதைப் படங்களைப் பார்த்துக் கதையைக் கட்டியெழுப்ப வேண்டும். அதன் பின்னர் மாணவர்களை எழுமாறாக அழைத்து, கதையைக் கட்டியெழுப்ப வழிப்படுத்துங்கள். சுயமாக முன்வந்து கதையைக் கட்டியெழுப்ப மாணவர்களை ஊக்கப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு:*




செயற்பாடு 4

- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். கதைப்படங்களைப் பிரதி எடுத்து அட்டைகளில் ஒட்டி ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள். குழுவாக கதைப்படங்கள் பற்றிக் கலந்துரையாட வாய்ப்பு வழங்குங்கள். கதைப்படங்களைப் பார்த்துக் கதையைக் கூறுவதற்கு ஒவ்வொரு குழுவுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள். தனியாகவும் சோடியாகவும் குழுவாகவும் படங்களைப் பார்த்துக் கதையைக் கூறுவதற்கு ஊக்கப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு:**

## வாத்துக்களின் தாயாகிய தாய்



- உண்மைச் சம்பவப் படங்கள் என்பதனை மாணவர்களுக்குக் கூறுங்கள். அதன் பின்பு பின்வரும் உண்மைச் சம்பவத்தைக் கூறுங்கள்.



**இங்கிலாந்தின் ஸ்டான்ஸ்டட் கோட்டையில் ஒரு வாத்து ஒன்பது குஞ்சுகளைப் பொரித்தது. வாத்தும் குஞ்சுகளும் இரை தேடி சுற்றித் திரிந்ததை அங்கிருந்த நாய் ஒன்று கவனித்து வந்தது. திடீரென்று தாய் வாத்து காணாமல் போய் விட்டது. நரி தூக்கிச் சென்றுவிட்டது. தாய் இன்றித் தவித்த வாத்துக் குஞ்சுகளை நாய் அரவணைத்துக் கொண்டது. நாய் செல்லும் இடமெல்லாம் குஞ்சுகளும் கூடவே சென்றன. நாயின் தலை மீது ஏறி நின்றன. நாயின் முதுகில் வரிசையாக அமர்ந்துகொண்டு வலம் வந்தன. நாயின் மீது ஏறி விளையாடின. தாய் வாத்து இல்லாததை அறிந்து, குஞ்சுகளை ஒரு தாயைப் போன்று அக்கறையாக, பொறுமையாக நாய் கவனித்தது.**


- இவ் உண்மைச் சம்பவம் உலகத் தொலைக்காட்சிகளிலும் பத்திரிகைகளிலும் முக்கிய செய்தியாக இடம்பெற்றதென்பதையும் மாணவர்களுக்குக் கூறுங்கள்.
- இக்கதையை ஏற்கனவே அறிந்தவர்கள் யாராவது இருக்கின்றீர்களா? என வினவுங்கள். அறிந்தவர்கள் இருப்பின், அவர்கள் கருத்துக் கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- உலகில் இவ்வாறான அதிசயச் சம்பவங்கள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. அச் சம்பவங்களில் இதுவும் ஒன்றாகும் என்று மாணவர்களுக்குக் கூறுங்கள். நீங்கள் இது போன்று அறிந்த சம்பவங்களிருப்பின் அவற்றில் ஒன்றைக் கதை வடிவில் சுவைபடக் கூறுங்கள்.
- இங்கு கதைப்படங்கள் ஊடாக அறிமுகம் செய்யப்பட்ட கதையில் வரும் நாயின் பாச உணர்வு பற்றி மாணவர்கள் சுயமாகக் கூற நெறிப்படுத்துங்கள்.
- வாத்துக் குஞ்சுகள் பற்றி மாணவர்கள் அனைவரினதும் கருத்துக்களையும் கேட்டறியுங்கள்.



- கதைப்படங்களை ஒழுங்குபடுத்தி, கதையை மாணவர்கள் சுயமாகக் கூறுவதற்கு வழிப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு:**

## ஒற்றுமை



**செயற்பாடு 5**

- தரம் மூன்றில் கற்ற லகர, ளகர, ழகர ஒலிவேறுபாட்டுச் சொற்களை மீண்டும் அறிமுகம் செய்து நினைவூட்டுங்கள்.

| | |
|---|---|
| 1. பலம், பழம் | 5. ஒலி, ஒளி, ஒழி |
| 2. மலை, மழை | 6. வலி, வளி, வழி |
| 3. அலகு, அழகு | 7. வால், வாள், வாழ் |
| 4. கிலி, கிளி, கிழி | 8. வெல்லம், வெள்ளம் |

- மேற்குறிப்பிட்ட ஒலி வேறுபாட்டுச் சொற்களை வாக்கியங்களில் அமைத்துக்கூற வழிப் படுத்துங்கள். ஒலி வேறுபாட்டுச் சொற்களை வாக்கியங்களில் அமைத்துக் கூறும்போது சரியாக உச்சரிக்கின்றார்களா? என அவதானியுங்கள். மாணவர்கள் தவறுவிடும்போது அச்சந்தர்ப்பத்திலேயே தவறுகளைச் சுட்டிக்காட்டி, சரியாக உச்சரிக்க வழிப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு:**

**மலை** : நாங்கள் **மலை**யில் ஏறினோம்.

**மழை** : நேற்று இரவு **மழை** பெய்தது.

- தரம் மூன்றில் கற்ற ஒலி வேறுபாட்டுச் சொற்களை வாக்கியங்களில் அமைத்துக் கூறும் பயிற்சியை மேற்கொண்டதன் பின்னர், பின்வரும் லகர, ளகர, ழகர ஒலிவேறுபாட்டுச் சொற்களை அட்டைக் கீலங்களில் எழுதிக் காட்சிப்படுத்தி, உச்சரிக்க வழிப்படுத்துங்கள்.

**லகர, ளகர, ழகர வேறுபாடு**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | உலவு | உழவு | 5. | புலி | புளி |
| 2. | கலை | களை | 6. | வலை | வளை |
| 3. | தலை | தழை | 7. | வாளை | வாழை |
| 4. | நீலம் | நீளம் | 8. | வேலை | வேளை |

- மாணவர்களுக்கு அறிமுகப்படுத்திய சொற்களின் கருத்துக்களையும் A3 தாளில் எழுதி அறிமுகஞ் செய்யுங்கள்.

| | |
|---|---|
| 1. உலவு - உலவுதல் | உழவு - பயிர்த்தொழில் |
| 2. கலை - வித்தை/ஆண்மான் | களை - நீக்கு/பயன்படாத வேற்றுப்பயிர் |
| 3. தலை - சிரசு (உடல் உறுப்பு) | தழை - தாவரமொன்றின் இலை |
| 4. வேலை - தொழில் | வேளை - பொழுது |
| 5. நீலம் - ஒரு நிறம் | நீளம் - அளவைக் குறிக்கிறது |
| 6. புலி - ஒரு மிருகம் | புளி - கறிக்குப் பயன்படுவது |
| 7. வலை - மீன்பிடிக்கும் வலை | வளை - புற்று, வீட்டுவளை |
| 8. வாளை - ஒரு வகைமீன் | வாழை - ஒரு மரம் |

- மாணவர்களுக்கு லகர, ளகர, ழகர, வேறுபாட்டுச் சொற்களின் கருத்தினை விளக்கிய பின்னர் வாங்கியங்களில் அமைத்துக் கூறும் பயிற்சியினை மாணவர்களுக்கு வழங்குங்கள்.

***எடுத்துக்காட்டு:***

| | | |
|---|---|---|
| வலை | : | மீனவர்கள் **வலை** வீசி மீனகளைப் பிடித்தனர். |
| வளை | : | எறும்புகள் **வளை**க்குள் உணவினைச் சேகரித்து வைக்கின்றன. |

- மாணவர்கள் சுயமாகவும் சோடி சேர்ந்தும் வாக்கியங்கள் அமைத்துக் கூற ஊக்கப்படுத்துங்கள்.

செயற்பாடு 6

- மாணவர்கள் தரம் மூன்றில் கற்ற ரகர, றகர வேறுபாட்டுச் சொற்களை அறிமுகம் செய்யுங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | அரம் | அறம் | 5. | கூரை | கூறை |
| 2. | அரை | அறை | 6. | நிரை | நிறை |
| 3. | கரி | கறி | 7. | பாரை | பாறை |
| 4. | கரை | கறை | 8. | உரை | உறை |

- மேற்குறிப்பிட்ட ரகர, றகர வேறுபாட்டுச் சொற்களையும் அவற்றின் கருத்துக்களையும் நினைவுபடுத்தி, வாக்கியங்களில் அமைத்துக் கூற ஆர்வமூட்டுங்கள்.

***எடுத்துக்காட்டு:***

**கரை** : நாங்கள் ஞாயிற்றுக்கிழமை கடற்**கரை**க்குச் சென்றோம்.

**கறை** : அவனது சட்டையில் **கறை** படிந்திருந்தது.

- மாணவர்கள், தாமாகச் சோடி சேர்ந்து, வாக்கியங்களை அமைத்து வகுப்பின் முன் கூறுவதற்கு உற்சாகப்படுத்துங்கள்.
- அதன் பின்னர் மாணவர்களுக்கு பின்வரும் ரகர, றகர வேறுபாட்டுச் சொற்களையும் அச்சொற்களின் கருத்தினையும் அட்டைக் கீலங்களில் எழுதி, ஒட்டுப் பலகையில் ஒட்டிக் காட்சிப்படுத்துங்கள்.

**ரகர, றகர வேறுபாடு**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | அரி | அறி | 5. | கூரியது | கூறியது |
| 2. | அருகு | அறுகு | 6. | தெரி | தெறி |
| 3. | இரக்கம் | இறக்கம் | 7. | பரி | பறி |
| 4. | ஊரி | ஊறி | 8. | பொரி | பொறி |

- காட்சிப்படுத்திய சொற்களைச் சரியாக உச்சரித்துக் கூறும் பயிற்சியை வழங்குங்கள்.

- அதன் பின்னர் ரகர, றகர வேறுபாட்டுச் சொற்களையும் அவற்றின் கருத்தினையும் A3 தாளில் பெரிதாக எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

| ரகர வேறுபாடு | றகர வேறுபாடு |
|---|---|
| 1. அரி - அரித்தல் | அறி - தெரி, உணர் |
| 2. அருகு - விளிம்பு | அறுகு - ஒரு புல் |
| 3. இரக்கம் - மனவுருக்கம் | இறக்கம் - இறங்குகை, சரிவு |
| 4. ஊரி - ஒருவகைச் சங்கு | ஊறி - கசிந்து |
| 5. கூரியது - கூர்மையுள்ளது | கூறியது - கூறப்பட்டது |
| 6. தெரி - தெரிந்தெடு | தெறி - துளித் துளியாக விசிறுதல், பொத்தான் |
| 7. பரி - குதிரை | பறி - பிடுங்குதல் |
| 8. பொரி - வறு/தானியப்பொரி | பொறி - செதுக்கு, தீப்பொறி, எலிப் பொறி |

- ரகர, றகர வேறுபாட்டுச் சொற்களின் பொருளை மாணவர்கள் அறிந்த பின்னர் அச்சொற்களை வாக்கியங்களில் அமைத்துக் கூறும் பயிற்சியை வழங்குங்கள். பயிற்சி பெற்ற பின்னர் மாணவர்கள் சோடி சேர்ந்து பயிற்சியில் ஈடுபட வழிப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு:*

**பொரி** : அம்மா கத்தரிக்காயை வெட்டிப் **பொரி**த்தார்.

**பொறி** : அவன் **பொறி**வைத்து எலியைப் பிடித்தான்.

**செயற்பாடு 7**

- மாணவர்கள் தரம் மூன்றில் கற்ற னகர, ணகர ஒலி வேறுபாட்டுச் சொற்களை அட்டைக் கீலங்களில் எழுதிக் காட்சிப்படுத்தி நினைவூட்டுங்கள்.

*எடுத்துக்காட்டு:*

| | | | |
|---|---|---|---|
| 1. | அன்னம் | அண்ணம் | |
| 2. | ஆனி | ஆணி | |
| 3. | ஊன் | ஊண் | |
| 4. | கனை | கணை | |
| 5. | பனி | பணி | |
| 6. | பானம் | பாணம் | |
| 7. | மனம் | மணம் | |
| 8. | வானம் | வாணம் | |

- ஏற்கனவே கற்ற னகர, ணகர ஒலி வேறுபாட்டுச் சொற்களின் கருத்துக்களையும் நினைவுபடுத்துங்கள். அவற்றை வாக்கியங்களில் அமைத்துக் கூற உற்சாகமூட்டுங்கள்.

*எடுத்துக்காட்டு:*

**ஆனி** : நான் **ஆனி** மாதம் ஊருக்குப் போனேன்.

**ஆணி** : நான் கடையில் **ஆணி** வாங்கினேன்.

- நினைவூட்டுஞ் செயற்பாடு நிறைவு பெற்றதன் பின்னர், பின்வரும் னகர, ணகர ஒலி வேறுபாட்டுச் சொற்களை அட்டைக் கீலங்களில் எழுதி, ஒட்டுப் பலகையில் காட்சிப் படுத்துங்கள். அதன் பின்னர் னகர, ணகர வேறுபாட்டுச் சொற்களை சரியாக உச்சரிக்கப் பயிற்சியளியுங்கள்.

**னகர, ணகர வேறுபாடு**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | கனி | கணி | 4. | தினை | திணை |
| 2. | கனை | கணை | 5. | பன் | பண் |
| 3. | தன்மை | தண்மை | 6. | பேன் | பேண் |

- மாணவர்கள் மேலே தரப்பட்டுள்ள னகர, ணகர வேறுபாட்டுச் சொற்களைச் சரியாக உச்சரிக்கப் பயிற்சி பெற்ற பின்னர், அவற்றின் கருத்துக்களை A3 தாளில் பெரிதாக எழுதிக் காட்சிப்படுத்துங்கள். அதன் பின்னர் னகர, ணகர ஒலி வேறுபாட்டுச் சொற்களின் கருத்தினை விளக்குங்கள்.

**எடுத்துக்காட்டு:**

| னகர வேறுபாடு | ணகர வேறுபாடு |
|---|---|
| 1. கனி - பழத்தைக் குறிகக்கும் | கணி - கணித்தல் |
| 2. கனை - கனைத்தல் | கணை - ஒர் ஆயுதம் (அம்பு) |
| 3. தன்மை - குணம், மூவிடப்பெயர் | தண்மை - குளிர்மை |
| 4. தினை - ஓரு தானியம் | திணை - சாதி, ஒழுக்கம் |
| 5. பன் - ஒருவகைப் புல் | பண் - பாடலுக்குரிய இராகம் |
| 6. பேன் - தலைப்பேன் | பேண் - காப்பாற்று |

- அதன் பின்னர் னகர, ணகர வேறுபாட்டுச் சொற்களைக் கொண்டு வாக்கியங்களை அமைக்கப் பயிற்சியளியுங்கள். மாணவர்கள் பயிற்சி பெற்ற பின்னர் சோடி சேர்ந்து வாக்கியங்களை அமைத்து வகுப்பின் முன் கூறுவதற்கு ஆர்வமூட்டுங்கள்.
- அதன் பின்னர் ஒவ்வொரு குழுவிற்கும் சென்று, னகர, ணகர வேறுபாட்டுச் சொற்களைச் சரியாக உச்சரிக்கிறார்களா என அவதானியுங்கள்.
- னகர, ணகர வேறுபாட்டுச் சொற்களைச் சரியாக உச்சரிக்க இடர்ப்படும் மாணவர்களுக்கு உதவுங்கள்.

**செயற்பாடு 10:**

- மாணவர்களுக்குப் பின்வரும் ஒருமை, பன்மைச் சொற்களை அறிமுகஞ் செய்யுங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | பத்திரிகை | பத்திரிகைகள் | 5. | யானை | யானைகள் |
| 2. | விரல் | விரல்கள் | 6. | மீன் | மீன்கள் |
| 3. | கோழி | கோழிகள் | 7. | நிறம் | நிறங்கள் |
| 4. | கடிதம் | கடிதங்கள் | 8. | சித்திரம் | சித்திரங்கள் |

- தரப்பட்டுள்ள ஒருமை, பன்மைச் சொற்களை அட்டைகளில் எழுதி, ஒட்டுப் பலகையில் காட்சிப்படுத்துங்கள்.
- அவற்றை மாணவர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள்.
- மாணவர்களுடன் சேர்ந்து அச்சொற்களை உச்சரியுங்கள்.
- அதன் பின்னர் அச்சொற்களை வைத்து வாக்கியங்கள் அமைத்துக் காட்டுங்கள்.
- நீங்கள் அமைத்த வாக்கியங்களை அட்டைக் கீலங்களில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு:*

| |
|---|
| **சித்திரம்** - அவன் **சித்திரம்** வரைந்தான் |

| |
|---|
| **சித்திரங்கள்** - அவன் **சித்திரங்களை** வரைந்தான். |

- இவ்வாறு மாணவர்கள் ஒருமை, பன்மைச் சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை அமைத்துக் கூற வழிப்படுத்துங்கள்.
- மாணவர்களுடன் சேர்ந்து வாக்கியங்கள் அமையுங்கள்.
- மாணவர்களை எழுமாறாக அழைத்து, அவர்களுடன் சேர்ந்து ஒருமை, பன்மை வாக்கியங்களை அமையுங்கள்.
- மேலே தரப்பட்டுள்ள ஒருமை, பன்மைச் சொற்களைக் கொண்டு வாக்கியங்கள் அமைக்க மாணவர்களை ஊக்கப்படுத்துங்கள்.

**கணிப்பீடு:**

- சுயமாகப் பேச முன்வருதல்
- மற்றவர்கள் பேசுவதைச் செவிமடுத்தல்
- படம் பார்த்துப் பேசுதல்
- சுயமாகக் கதை சொல்லல்
- கதைப் படங்களைப் பார்த்துக் கதை சொல்லல்
- ஒலி வேறுபாட்டுச் சொற்களை / வாக்கியங்களைக் கூறுதல்
- ஒருமை, பன்மைச் சொற்களை / வாக்கியங்களைக் கூறுதல்
- வினாக்களுக்கு விடையளித்தல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

**தேர்ச்சிகள்:**

R1 - வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார்.

W1 - எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து எழுதுவார்.

**உள்ளடக்கம்:**

- வாசிப்பு முறைகள்
  - உரத்து வாசிப்பு
  - மௌன வாசிப்பு
- எழுதுவதற்கான நுட்பப் பயிற்சிகள்
  - சரியான கொண்ணிலையில் அமரும் பயிற்சி
  - சரியாகப் பென்சில் பிடிக்கும் பயிற்சி
  - சரியாக அப்பியாசக் கொப்பியை வைத்திருந்து எழுதும் பயிற்சி
- காட்சிப் படங்களைப் பார்த்து வாக்கியங்களை எழுதி வாசித்தல் (நிகழ்காலத்தில்)
- ஒளிப்படங்களைப் பார்த்து, வாக்கியங்களை எழுதி வாசித்தல் (நிகழ்காலத்தில்)
- கதைப் படங்களைப் பார்த்து வாக்கியங்களை எழுதி வாசித்தல் (இறந்த காலத்தில்)
- ஒலி வேறுபாட்டுச் சொற்களை/வாக்கியங்களை வாசித்தலும் எழுதுதலும்
- ஒருமை, பன்மைச் சொற்களை/வாக்கியங்களை வாசித்தலும் எழுதுதலும்

**கற்றற்பேறுகள்:**

- வாசிப்பு முறைகளைத் தெரிந்து கொண்டு, உரிய சந்தர்ப்பங்களில் பிரயோகிப்பார்.
- சரியான கொண்ணிலையில் அமர்ந்து முறைப்படி பென்சிலை/பேனையைப் பிடித்து, சரியான முறையில் கொப்பியை வைத்து எழுதுவார்.
- காட்சிப் படங்களைப் பார்த்து, வாக்கியங்களை நிகழ்காலத்தில் பிழையின்றி எழுதி வாசிப்பார்.
- ஒளிப் படங்களைப் பார்த்து, வாக்கியங்களை நிகழ்காலத்தில் பிழையின்றி எழுதி வாசிப்பார்.
- கதைப்படங்களைப் பார்த்து வாக்கியங்களை இறந்த காலத்தில் எழுதி வாசிப்பார்.
- ஒலி வேறுபாட்டுச் சொற்களை இனங்கண்டு உரிய முறையில் பிரயோகிப்பார்.
- ஒருமை, பன்மைச் சொற்களை இனங்கண்டு வாக்கியங்களில் உரிய முறையிற் பிரயோகிப்பார்.

**வளங்கள்:**

- காட்சிப்படங்கள், ஒளிப்படங்கள், கதைப்பட அட்டைகள், ஒலி வேறுபாட்டுச் சொல் அட்டைகள், ஒருமை, பன்மைச் சொற்கள் /வாக்கிய அட்டைகள், சிறிய பெட்டிகள். அட்டைக் கீலங்கள், A4 வடிவிலான வெண்பலகைகள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்:**

**செயற்பாடு 1**

- வாசித்தல், உரத்து வாசிப்பு, மௌன வாசிப்பு என இரண்டு வகைப்படும்.
- புத்தகத்திலிருக்கும் எழுத்துக்களைக் கண்ணால் பார்த்து, வாயில் ஒலி வெளிப்படுமாறு உச்சரித்து, பொருளுணர்வதை உரத்து வாசித்தல் எனலாம்.
- வாசித்தலின்போது சொற்களை அடையாளம் காணல், முறையாக ஒலித்தல், பொருளுணர்தல் ஆகிய மூன்றும் ஒரு சேர நடைபெறுகின்றது என்பதனை ஆசிரியர் முதலில் விளங்கிக்கொள்ள வேண்டும்.
- உரத்து வாசிக்கும்போது பொருளுணர் ஆற்றல் மிகுதியாகின்றது.
- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். தெரிவு செய்யப்பட்ட வாசிப்புப் பகுதியை மாணவ குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப பிரதி எடுத்து அட்டைகளில் ஒட்டி ஒவ்வொரு குழுவுக்கும் ஓர் அட்டை வீதம் வழங்குங்கள். குழுவில் உள்ள ஒவ்வொருவரும் சுழற்சி முறையில் உரத்து வாசிக்க வழிப்படுத்துங்கள்.




- உரத்து வாசித்தலின் ஊடாக
  - ✓ சரியான உச்சரிப்புடன் திருத்தமாக வாசிக்க
  - ✓ தெளிவாகவும் விரைவாகவும் வாசிக்க
  - ✓ பொருள் உணர்ந்து வாசிக்க
  - ✓ உள்ளதை உள்ளவாறு வாசிக்க
  - ✓ உணர்வுகளை உணர்ந்து வாசிக்க
  - ✓ நிறுத்தக் குறிகளை அனுரித்து வாசிக்க
  - ✓ சரியான குரலில், ஏற்ற இறக்கங்களுடன் வாசிக்க

  மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டியது ஆசிரியரின் பொறுப்பாகும். எனவே மாணவர்களுக்கு பாடல்கள், சிறிய கதைகள், தெரிவு செய்யப்பட்ட வாசிப்புப் பகுதிகள், உரையாடல்கள், போன்றவற்றைக் கொடுத்து மாணவர்கள் வாசிக்கச் சிறப்புப் பயிற்சி அளியுங்கள்.

**செயற்பாடு 2**

- மாணவரை உரத்து வாசிக்கப் பயிற்சியளித்ததன் பின்னர் மௌனமாக வாசிக்கப் பயிற்சியளிக்க வேண்டும் என்பதனை நினைவிற் கொள்ளுங்கள்.

- புத்தகமொன்றை வாசிக்கும்போது, வாய்விட்டு உரத்து வாசிக்காமல் மனதிற்குள்ளேயே வாய்திறக்காமல், உதடுகள் சிறிதும் அசைவில்லாமல், கருத்தை உள்வாங்கி பொருளுணர்ந்து கொள்ளும் வாசிப்பு ''மௌன'' வாசிப்பாகும் என்பதனை ஆசிரியர் மனதில் நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும்.
- உரத்து வாசித்தலில் நன்கு பயிற்சி பெற்ற பின்னர், மௌன வாசிப்பில் ஈடுபட வேண்டும் என்பதனைக் கவனத்திற் கொள்ளுங்கள்.
- மாணவர்கள் எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய விதத்தில் வாசிப்புப் பகுதி ஒன்றைத் தெரிவு செய்து அல்லது பிரதி எடுத்து அட்டைகளில் ஒட்டி வழங்குங்கள். மாணவர்கள் சுயமாக மௌன வாசிப்பில் ஈடுபட ஆர்வமூட்டுங்கள். மௌன வாசிப்பின்போது கடைப்பிடிக்க வேண்டிய முறைகளை மாணவர்களுக்குக் கூறுங்கள்.

**எடுத்துக்காட்டு:**




- வாசிப்புத்திறனை வளர்க்கும் பயிற்சிகள் மாணவர்களின் முதிர்ச்சிக்கேற்ப அமைதல் வேண்டும். எல்லா மாணவர்களுக்கும் ஒரே விதமான பயிற்சிகளை வழங்காமல் அவர்களின் ஆற்றல்களுக்கு எற்ப, பயிற்சிகளைத் தயாரித்து வழங்குதல் வேண்டும் என்பதனை நினைவிற் கொள்ளுங்கள்.

| |
|---|
| முதன்மைநிலை இரண்டில் உரத்து வாசித்தல் 60 வீதமும் மௌன வாசித்தல் 40 வீதமும் அமைதல் சிறப்பானதாகும். |


## செயற்பாடு 3

- முதன்மை நிலை ஒன்றில், மாணவர்களுக்கு அமர்வதற்கும் பென்சிலைப் பிடிப்பதற்கும் கொப்பியைச் சரியான முறையில் மேசையில் வைத்து எழுதுவதற்கும் முதன்மை நிலை ஒன்றிற்குப் பொறுப்பான ஆசிரியர் பயிற்சியளித்திருப்பார். எனவே அப்பயிற்சியை முதன்மைநிலை இரண்டிற்குப் பொறுப்பான ஆசிரியரும் செயற்படுத்த வேண்டும். மாணவர்களை அவதானியுங்கள். சரியான கொண்ணிலையில் அமராத மாணவர்களை அழைத்து விசேட பயிற்சிகளை வழங்குங்கள். எல்லா மாணவர்களுக்கும் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

**பயிற்சி 1 சரியான கொண்ணிலையில் அமர்தல்**





**பயிற்சி 2 பென்சிலை உரியவாறு பிடித்தல்**




பென்சிலை நடுவிரல், சுட்டுவிரல், பெருவிரல் ஆகிய மூன்று விரல்களாலும் பிடிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதோடு அதற்கான பயிற்சியையும் வழங்குங்கள்.

**பயிற்சி 3 அப்பியாசக் கொப்பியை வைத்திருக்கும் முறை**



- மாணவர்கள் எவ்வாறு அப்பியாசக் கொப்பியை வைத்திருக்கிறார்கள் என அவதானியுங்கள். சரியான முறையில் அப்பியாசக் கொப்பிகளை வைத்து எழுதுவதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள். மேற்குறிப்பிட்ட மூன்று பயிற்சிகளும் மாணவர்களின் எழுதும் திறனை விருத்தி செய்ய உறுதுணையாக அமையும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

செயற்பாடு 4

- மாணவர்கள் குழுக்களின் எண்ணிக்கைக்கேற்பக் காட்சிப்படமொன்றை A4 தாளில் பிரதியெடுத்துக் கொள்ளுங்கள். அக்காட்சிப் படங்களை அட்டைகளில் ஒட்டி மாணவர் குழுக்களுக்கு வழங்குங்கள்.

**எடுத்துக்காட்டு:**



- காட்சிப்படத்தைப் பார்த்து நிகழ்காலத்தில் வாக்கியங்கள் கூற வழிப்படுத்துங்கள்.
- மாணவர்கள் கூறிய வாக்கியங்களை கரும்பலகையில் / வெண்பலகையில் எழுதுங்கள்.

1. ..............................................................................................................
2. ..............................................................................................................
3. ..............................................................................................................

- கரும்பலகையில் / வெண்பலகையில் எழுதப்பட்ட வாக்கியங்களைப் பார்த்து அப்பியாசக் கொப்பியில் பிழையின்றி எழுதி வாசிக்க மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- எழுதிய வாக்கியங்களை வாசிப்பதற்கு ஆர்வமூட்டுங்கள். இடர்ப்படும் மாணவர்களுக்கு அச்சந்தர்ப்பத்திலேயே பரிகாரக் கற்பித்தலை மேற்கொள்ளுங்கள்.
- அதன் பின்னர் காட்சிப்படத்தைப் பார்த்து நிகழ்காலத்தில் வாக்கியங்களை எழுத வழிப்படுத்துங்கள். வாக்கியங்களை எழுதி முடித்ததும் முற்றுப்புள்ளி இட வழிகாட்டுங்கள்.
- வாக்கியம் ஒன்றை எழுதியதன் பின்னர் தேவையேற்படின் காற்புள்ளி இடவேண்டும் என்பதையும் அவசியம் முற்றுப்புள்ளி இடவேண்டும் என்பதையும் வலியுறுத்திக் கூறுங்கள்.

1. ..............................................................................................................
2. ..............................................................................................................
3. ..............................................................................................................

- மாணவர்கள் எழுதிய வாக்கியங்களுக்கு முற்றுப்புள்ளி இடப்பட்டுள்ளதா என்பதை அவதானியுங்கள்.
- அப்பியாசக் கொப்பியில் எழுதிய வாக்கியங்களைப் பிழையின்றி உரத்து வாசித்துக்காட்ட மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

செயற்பாடு 5

- ஒளிப்படக் கருவி மூலம் பிடித்த ஒளிப்படங்களை (காட்சிகளை) அல்லது இணையத்தில் இருந்து பெற்ற ஒளிப்படங்களை (காட்சிகளை) மாணவர்களுக்குக் காட்சிப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு :*



- காட்சிப்படுத்திய ஒளிப்படங்களைப் பார்த்து நிகழ்காலத்தில் வாக்கியங்களைக் கூறவும் எழுதவும் வாசிக்கவும் வழிப்படுத்துங்கள்.

1. ..........................................................................................................................
2. ..........................................................................................................................
3. ..........................................................................................................................

செயற்பாடு 6

- கதைப்படங்களைப் பார்த்து வாக்கியங்களை எழுத வழிப்படுத்துங்கள். கதைப்படங்களைப் பிரதியெடுத்து அட்டைகளில் ஒட்டி, மாணவர் குழுக்களுக்கு வழங்குங்கள். ஒவ்வொரு குழுவிலும் ஐவர் இடம்பெறுதல் வேண்டும்.
- குழுவாகக் கலந்துரையாடிய பின்னர் தமது அப்பியாசக் கொப்பிகளில் கதைப்படங்களைப் பார்த்து இறந்த காலத்தில் வாக்கியங்களை எழுத வழிப்படுத்துங்கள்.


*எடுத்துக்காட்டு :*



- கதைப்படங்களை ஒழுங்குபடுத்தி, கதையை மாணவர்கள் சுயமாகக் கூறுவதற்கும் எழுதுவதற்கும் வழிப்படுத்துங்கள். எழுதிய பின்னர் கதையை வாசிப்பதற்கும் ஆர்வமூட்டுங்கள்.

**எடுத்துக்காட்டு:**

## ஒற்றுமை



**குறிப்பு** : இது போன்ற வேறு கதைப்படங்களை ஆக்கி மாணவர்களுக்கு வழங்கும் சுதந்திரம் ஆசிரியருக்கு உண்டு. தெரிவு செய்யும் கதைப்படங்கள் தரம் நான்கு மாணவர்களின் வயது மட்டத்திற்குப் பொருத்தமானதாக இருத்தல் வேண்டும் என்பதனை நினைவிற் கொள்ளுங்கள்.

### செயற்பாடு 7

- தரம் மூன்றில் கற்ற லகர, ளகர, ழகர வேறுபாட்டுச் சொற்களை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தி, அச்சொற்களைப் பயிற்சி அட்டையாகத் தயாரித்துப் பிரதி எடுத்து, எல்லா மாணவர்களுக்கும் வழங்குங்கள். பயிற்சி அட்டையில் உள்ள லகர, ளகர, ழகர வேறுபாட்டுச் சொற்களைக் கொண்டு வாக்கியங்களை அமைக்க வழிப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு:*

**பயிற்சி அட்டை**

1. பலம் : ..........................................................................
   பழம் : ..........................................................................

2. மலை : ..........................................................................
   மழை : ..........................................................................

3. கிலி : ..........................................................................
   கிளி : ..........................................................................
   கிழி : ..........................................................................

4. ஒலி : ..........................................................................
   ஒளி : ..........................................................................
   ஒழி : ..........................................................................

5. அலகு : ..........................................................................
   அளகு : ..........................................................................
   அழகு : ..........................................................................

6. வலி : ..........................................................................
   வளி : ..........................................................................
   வழி : ..........................................................................

7. வால் : ..........................................................................
   வாள் : ..........................................................................
   வாழ் : ..........................................................................

8. வெல்லம் : ..........................................................................
   வெள்ளம் : ..........................................................................

- பயிற்சி அட்டையில் எழுதிய வாக்கியங்களை வகுப்பின் முன் பிழையின்றி உரத்து வாசிக்க வழிப்படுத்துங்கள். இடர்ப்படும் மாணவர்களுக்கு அச்சந்தர்ப்பத்திலேயே உதவுங்கள்.

- இப்பயிற்சியின் பின்னர் பின்வரும் லகர, ளகர, ழகர வேறுபாட்டுச் சொற்களை அட்டைக் கீலங்களில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள். அதன் பின்னர் மாணவர்களுக்கு அச் சொற்களை உச்சரித்துக் காட்டுங்கள். அதன் பின்னர் அவற்றின் கருத்துக்களையும் எழுதிக் காட்சிப்படுத்துங்கள். (கருத்து பக்கம் 8 இல் தரப்பட்டுள்ளது.)

**லகர, ளகர, ழகர ஒலி வேறுபாடு**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | உலவு | உழவு | 2. | கலை | களை |
| 3. | தலை | தளை | 4. | நீலம் | நீளம் |
| 5. | புலி | புளி | 6. | வலை | வளை |
| 7. | வாளை | வாழை | 8. | வேலை | வேளை |

- மேற்குறிப்பிடப்பட்ட சொற்களின் கருத்துக்களை மாணவர்களுக்கு விளக்குங்கள். அதன் பின்னர் லகர, ளகர, ழகர வேறுபாட்டுச் சொற்களையும் அவற்றின் கருத்துக்களையும் அப்பியாசக் கொப்பியில் எழுதி வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- அதன் பின்னர் தரப்பட்டுள்ள லகர, ளகர, ழகர வேறுபாட்டுச் சொற்களின் கருத்துக்களை விளங்கி வாக்கியம் அமைக்க வழிப்படுத்துங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***

  **நீலம்** : அவனுடைய சட்டை **நீல** நிறமானது.

  **நீளம்** : அந்தப்பாலம் மிகவும் **நீள**மானது.

  வாக்கியங்களை அமைத்து எழுதிய பின்னர் முற்றுப்புள்ளி இடப்பட்டு இருக்கின்றதா என அவதானியுங்கள்.

செயற்பாடு 8

- மாணவர்கள் தரம் மூன்றில் கற்ற ரகர, றகர வேறுபாட்டுச் சொற்களை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தி, அச்சொற்களைப் பயிற்சி அட்டையாகத் தயாரித்துப் பிரதி எடுத்து, எல்லா மாணவர்களுக்கும் வழங்குங்கள். பயிற்சி அட்டையில் உள்ள ரகர, றகர வேறுபாட்டுச் சொற்களைக் கொண்டு வாக்கியங்களை அமைக்க வழிப்படுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு:***

**பயிற்சி அட்டை**

1. அரம் : ...................................................................................................
   அறம் : ...................................................................................................

2. அரை : ...................................................................................................
   அறை : ...................................................................................................

3. கரி : ...................................................................................................
   கறி : ...................................................................................................

4. கரை : ..........................................................................................................
கறை : ..........................................................................................................

5. கூரை : ..........................................................................................................
கூறை : ..........................................................................................................

6. நிரை : ..........................................................................................................
நிறை : ..........................................................................................................

7. பாரை : ..........................................................................................................
பாறை : ..........................................................................................................

8. உரை : ..........................................................................................................
உறை : ..........................................................................................................

- பயிற்சி அட்டையில் எழுதிய வாக்கியங்களை வகுப்பின் முன் வந்து வாசித்துக்காட்ட வழிப்படுத்துங்கள்.
- அதன் பின்னர் மாணவர்களுக்குப் பின்வரும் ரகர, றகர வேறுபாட்டுச் சொற்களைப் பின்வருமாறு அட்டைக் கீலங்களில் எழுதி அறிமுகஞ் செய்யுங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | அரி | அறி | 2. | அருகு | அறுகு |
| 3. | இரக்கம் | இறக்கம் | 4. | ஊரி | ஊறி |
| 5. | கூரியது | கூறியது | 6. | தெரி | தெறி |
| 7. | பரி | பறி | 8. | பொரி | பொறி |

- மேற்குறிப்பிட்ட சொற்களின் கருத்துக்களை A3 தாளில் காட்சிப்படுத்தி மாணவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குங்கள்.
- அதன் பின்னர் ரகர, றகர சொற்களையும் அவற்றின் கருத்துக்களையும் அப்பியாசக் கொப்பியில் எழுதி, வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- அதன் பின்னர் ரகர, றகரச் சொற்களை வாக்கியங்களில் அமைத்துக் காட்டுங்கள்.

***எடுத்துக்காட்டு :***

**பரி** - சேவகர்கள் **பரி**களுடன் சென்றனர்.

**பறி** - அவள் பூக்களைப் **பறி**த்தாள்.

- இதுபோன்ற வாக்கியங்களை மாணவர்களுக்கு அறிமுகம் செய்யுங்கள். மாணவர்கள் ரகர, றகர வேறுபாட்டுச் சொற்களைக் கொண்டு வாக்கியங்கள் அமைக்க வழிப் படுத்துங்கள்.
- மாணவர்களைச் சோடியாக்கி தாம் எழுதிய வாக்கியங்களை வாசித்துக்காட்ட ஊக்கமளியுங்கள்.
- மாணவர்கள் எழுதிய வாக்கியங்களுக்கு முற்றுப்புள்ளி இடுகின்றார்களா எனவும், வாக்கியங்களைப் பிழையின்றி எழுதியுள்ளார்களா எனவும் அவதானியுங்கள். இடர்ப்படும் மாணவர்களுக்கு உதவுங்கள்.

செயற்பாடு 9

- மாணவர்கள் ஏற்கனவே தரம் மூன்றில் கற்ற னகர, ணகர ஒலி வேறுபாட்டுச் சொற்களை நினைவுபடுத்தி, அச்சொற்களைப் பயிற்சி அட்டையாகத் தயாரித்துப் பிரதி எடுத்து, எல்லா மாணவர்களுக்கும் வழங்குங்கள். பயிற்சி அட்டையில் உள்ள னகர, ணகர, வேறுபாட்டுச் சொற்களைக் கொண்டு வாக்கியங்களை அமைக்க வழிப்படுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு:***

**பயிற்சி அட்டை**

1. அன்னம் : ..........................................................................................

   அண்ணம் : ..........................................................................................

2. ஆனி : ..........................................................................................

   ஆணி : ..........................................................................................

3. ஊன் : ..........................................................................................

   ஊண் : ..........................................................................................

4. கனை : ..........................................................................................

   கணை : ..........................................................................................

5. பனி : ..........................................................................................

   பணி : ..........................................................................................

6. மனம் : ..........................................................................................

   மணம் : ..........................................................................................

- பயிற்சி அட்டையில் எழுதிய வாக்கியங்களை வகுப்பின் முன் பிழையின்றி வாசிக்க வழிப்படுத்துங்கள். இடர்ப்படும் மாணவர்களுக்கு அச்சந்தர்ப்பத்திலேயே உதவுங்கள்.
- இப்பயிற்சியின் பின்னர் னகர, ணகர வேறுபாட்டுச் சொற்களை அட்டைக் கீலங்களில் எழுதி அறிமுகம் செய்யுங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | கனி | கணி | 2. | கனை | கணை |
| 3. | தன்மை | தண்மை | 4. | தினை | திணை |
| 5. | பன் | பண் | 6. | பேன் | பேண் |

- மேற்குறிப்பிட்ட சொற்களின் கருத்துக்களையும் எழுதிக் காட்சிப்படுத்துங்கள். (கருத்து பக்கம் 9 இல் தரப்பட்டுள்ளது.)

- மேற்குறிப்பிடப்பட்ட சொற்களின் கருத்துக்களை மாணவர்களுக்கு விளக்குங்கள். அதன் பின்னர் னகர, ணகர வேறுபாட்டுச் சொற்களையும் அவற்றின் கருத்துக்களையும் அப்பியாசக் கொப்பியில் எழுதி வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- அதன் பின்னர் னகர, ணகர வேறுபாட்டுச் சொற்களை வாக்கியங்களில் அமைத்து எழுத வழிப்படுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு :***

**கனி** - கிளி **கனி**களை விரும்பி உண்ணும்.

**கணி** - சோதிடர்கள் **கணி**த்துக் கூறுவர்.

- இதுபோன்ற வாக்கியங்களை மாணவர்களுக்கு அறிமுகம் செய்யுங்கள். மாணவர்கள் னகர, ணகர வேறுபாட்டுச் சொற்களைக் கொண்டு வாக்கியங்கள் அமைக்க வழிப் படுத்துங்கள்.
- மாணவர்களைக் குழுவாகவும் சோடியாகவும் தாம் எழுதிய வாக்கியங்களை வாசித்துக்காட்ட ஊக்கமளியுங்கள்.

**செயற்பாடு 10**

- மாணவர்களுக்குப் பரிச்சயமான ஒருமை - பன்மைச் சொற்களை அட்டைகளில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | பத்திரிகை | பத்திரிகைகள் | 2. | யானை | யானைகள் |
| 3. | விரல் | விரல்கள் | 4. | மீன் | மீன்கள் |
| 5. | கோழி | கோழிகள் | 6. | நிறம் | நிறங்கள் |
| 7. | கடிதம் | கடிதங்கள் | 8. | சித்திரம் | சித்திரங்கள் |

- மேலே தரப்பட்டுள்ள ஒருமை - பன்மைச் சொற்களை மாணவர்கள் வாசிப்பதற்கு வழிப்படுத்துங்கள்.
- அவர்கள் சரியாக உச்சரித்து வாசிக்கின்றார்களா என அவதானியுங்கள்.
- அச்சொற்களைப் பிழையின்றி அப்பியாசக் கொப்பியில் எழுத காட்ட ஆர்வமூட்டுங்கள்.
- அதன் பின்னர் ஒருமை - பன்மைச் சொற்களைக் கொண்டு, வாக்கியங்ளை அமைத்து அட்டைக்கீலங்களில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு :***

1. பத்திரிகை : அப்பா **பத்திரிகை** வாங்கினார்.
   பத்திரிகைகள் : அப்பா **பத்திரிகைகளை** வாங்கினார்.

2. யானை : **யானை** ஆடி அசைந்து வந்தது.
   யானைகள் : **யானைகள்** ஆடி அசைந்து வந்தன.

3. விரல் : மாலா **விரலை** மடித்தாள்.
   விரல்கள் : மாலா **விரல்களை** மடித்தாள்.

4. சித்திரம் : தம்பி **சித்திரம்** வரைந்தான்.
   சித்திரங்கள் : தம்பி **சித்திரங்கள்** வரைந்தான்.

- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- அக்குழுக்களுக்கு அட்டைக்கீலங்களை வழங்குங்கள். அவற்றைத் தமது குழுக்களிடையே வாசித்துக்காட்ட ஆர்வமூட்டுங்கள்.
- அதன் பின்னர் அட்டைக்கீலங்களில் எழுதப்பட்டுள்ள ஒருமை - பன்மை வாக்கியங்களை அப்பியாசக் கொப்பியில் எழுத ஆர்வமூட்டுங்கள்.
- எழுதும்போது வாக்கியங்களுக்கு முற்றுப்புள்ளி இடுகிறார்களா என அவதானியுங்கள்.
- அதன் பின்னர் பின்வருமாறான பயிற்சிகளில் ஈடுபடுத்துங்கள்.

**படிமுறை 1**

- புள்ளிக் கோடிட்ட இடங்களில் பொருத்தமான ஒருமை - பன்மைச் சொற்களை எழுதி வாக்கியங்களைப் பூர்த்தி செய்யுங்கள்.

***எடுத்துக்காட்டு:***

| |
|---|
| மான் துள்ளிப் பாய்ந்தது. |
| **மான்கள்** ............... துள்ளிப் பாய்ந்தன. |

1. பருந்து உயரப் பறந்தது.
   ............ உயரப் பறந்தன.

2. காகம் கரைந்தது.
   ............ கரைந்தன.

3. கழுகு வானில் வட்டமிட்டது.
   ............... வானில் வட்டமிட்டன.

4. நான் அழகாக வரைந்தேன்.
   .............. அழகாக வரைந்தோம்.

5. பேருந்து வேகமாகச் சென்றது.
   ................ வேகமாகச் சென்றன.

- இது போன்ற மேலும் பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்குங்கள்.

படிமுறை 2

- கீழே தரப்பட்டுள்ள **ஒருமை** வாக்கியங்களைப் **பன்மை** வாக்கியங்களாக மாற்றி எழுத வழிப்படுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு:***

| |
|---|
| சிட்டுக் குருவி பறந்தது.<br>**சிட்டுக் குருவிகள் பறந்தன.**<br>............................................ |

1. குயில் இனிமையாகக் கூவியது.
   ..............................................................................................

2. மரம் காற்றில் ஆடி அசைந்தது.
   ..............................................................................................

3. குதிரை வேகமாக ஓடியது.
   ..............................................................................................

4. வாத்து நீரில் நீந்தியது.
   ..............................................................................................

5. பறவை வானில் பறந்தது.
   ..............................................................................................

- இது போன்ற மேலதிகப் பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்குங்கள்.

**கணிப்பீடு**

- வாசிப்பு முறைகளை அறிந்து வாசித்தல்
- எழுதுவதற்கான நுட்பங்களை அனுசரித்து எழுதுதல்
- காட்சிப் படங்களைப் பார்த்து வாக்கியங்கள் எழுதுதல்
- ஒளிப் படங்களைப் பார்த்து வாக்கியங்கள் எழுதுதல்
- கதைப் படங்களைப் பார்த்து வாக்கியங்கள் எழுதுதல்
- ஒலி வேறுபாடுகளை அனுசரித்து எழுதுதல்
- ஒருமை, பன்மை வாக்கியங்களை எழுதுதல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

**தேர்ச்சிகள் :**

$L_2$ – செவிமடுத்தல் திறனை விருத்தி செய்வதற்காகச் செவிமடுப்பார்.

$S_2$ – பேசுதல் திறனை விருத்தி செய்வதற்காகப் பேசுவார்.

$R_2$ – வாசித்தல் திறனை விருத்தி செய்வதற்காக வாசிப்பார்.

$W_2$ – எழுதுதல் திறனை விருத்தி செய்வதற்காக எழுதுவார்.

**உள்ளடக்கம் :**

- ஒத்தகருத்துச் சொற்கள்
- எதிர்க்கருத்துச் சொற்கள்
- எதிர்ப்பாற் சொற்கள் (ஆண்பால், பெண்பால்)
- திணை, பால், எண், இடம், காலம்
- எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்
- எழுவாய், பயனிலை அடைமொழிகள்
- பெயர்ச்சொல், வினைச்சொல்
- நிறுத்தக்குறிகள் (முற்றுப்புள்ளி, காற்புள்ளி, வினாக்குறி, வியப்புக்குறி)

**கற்றற்பேறுகள் :**

- ஒத்தகருத்துச் சொற்கள், எதிர்க்கருத்துச் சொற்கள், எதிர்ப்பாற் சொற்கள், ஆகியவற்றை இனங்கண்டு கொள்வார். அவற்றை உரிய வகையில் பயன்படுத்துவார்.
- திணை, பால், எண், இடம், காலம் ஆகியவற்றை அறிந்து உரிய வகையில் பயன்படுத்துவார்.
- எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகியவற்றை அறிந்து அவற்றை வாக்கியங்களிற் பொருத்தமுறப் பயன்படுத்துவார்.
- பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள் ஆகியவற்றின் வேறுபாடுகளை அறிந்து பிரயோகிப்பார்.
- அடைமொழிகளை அறிந்து, அவற்றைப் பொருத்தமுற வாக்கியங்களில் பயன்படுத்துவார்.
- வாக்கியங்களில் நிறுத்தக்குறிகளை (முற்றுப்புள்ளி, காற்புள்ளி, வினாக்குறி, வியப்புக் குறி) இடுவதன் முக்கியத்துவத்தை உணர்ந்து பொருத்தமுறப் பயன்படுத்துவார்.

**வளங்கள் :**

- ஒத்தகருத்து, எதிர்க்கருத்து, எதிர்ப்பாற் சொல் அட்டைகள், வண்ண எழுதுகோல் (நிறப் பேனா), எழுவாய், பயனிலை அடைமொழி வாக்கிய அட்டைகள், ஒட்டுப்பலகை, BLU TACK, இறந்தகால, நிகழ்கால, எதிர்கால வாக்கிய அட்டைகள். காகிதத் தட்டுகள், சிறிய மரக்குற்றிகள் / சதுரப் பெட்டிகள் (தாயக்கட்டை) நிறுத்தக்குறிகள் (முற்றுப்புள்ளி, காற்புள்ளி, வினாக்குறி, வியப்புக்குறி ) அட்டைகள், பெயர்ச்சொல், வினைச்சொல் அட்டைகள்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு 1**

- தரம் மூன்றில் கற்ற ஒத்தகருத்துச் சொற்களை மாணவர்களுக்கு நினைவுபடுத்திக் கூறுங்கள்.
- அதன் பின்னர் மாணவர்களுக்குப் பின்வரும் ஒத்தகருத்துச் சொற்களை அட்டைகளில் எழுதிக் காட்சிப்படுத்தி அறிமுகஞ் செய்யுங்கள்.

**படிமுறை 1**

***எடுத்துக்காட்டு*** :

**ஒத்தகருத்துச் சொற்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **அழகு** | - | வடிவு, வனப்பு | **சினம்** | - | கோபம், சீற்றம் |
| **அறிவு** | - | ஞானம், புத்தி | **சுத்தம்** | - | தூய்மை, புனிதம் |
| **உடல்** | - | மெய், சரீரம் | **துன்பம்** | - | துக்கம், இடர் |
| **உண்மை** | - | சத்தியம், வாய்மை | **நித்திரை** | - | துயில், உறக்கம் |
| **களிப்பு** | - | உவகை, மகிழ்ச்சி | **உணவு** | - | ஆகாரம், உண்டி |

- மாணவர்கள் அவற்றை வாசிப்பதற்கு ஊக்கப்படுத்துங்கள். அதன் பின்னர் மாணவர்களைக் குழுக்களாக்கி ஒவ்வொரு குழுவிற்கும் ஒத்தகருத்துச் சொற்கள் எழுதப்பட்ட அட்டைகள் ஒவ்வொன்று வீதம் வழங்கி, அவற்றைத் தமது குழுக்களிடையே வாசித்துக்காட்டுவதற்கு வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் அட்டையில் எழுதப்பட்டுள்ள சொற்களை அப்பியாசக் கொப்பியில் எழுதி, சுயமாக வாசிக்க ஆர்வமூட்டுங்கள்.

**செயற்பாடு 2**

- ஏற்கனவே அறிமுகப்படுத்திய ஒத்தகருத்துச் சொற்களை மாணவர்கள் மனதில் பதியச் செய்வதற்காகப் பின்வரும் பயிற்சி அட்டைகளைத் தயாரித்து மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்பப் பிரதியெடுத்துக்கொள்ளுங்கள். அவற்றை எல்லா மாணவர்களுக்கும் வழங்குங்கள். பூர்த்தி செய்ய ஊக்கப்படுத்துங்கள்.

எடுத்துக்காட்டு:

**படிமுறை 2**

**ஒத்தகருத்துச் சொற்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அழகு | - | .................... | சினம் | - | ................. |
| அறிவு | - | .................. | ................. | - | உண்டி |
| .............. | - | மெய் | ................ | - | உவகை |
| ............. | - | வாய்மை | உணவு | - | ................. |
| சுத்தம் | - | ................. | ................. | - | இடர் |

- அதன் பின்னர் மேலே காட்டப்பட்டவாறு ஒத்தகருத்துச் சொற்களைப் பூர்த்திசெய்யும் அட்டை ஒன்றைத் தயாரித்துக் காட்சிப்படுத்துங்கள். (அவ்வட்டையில் கட்டமிடப்பட்ட இடங்களில் ஒத்தகருத்துச் சொற்களைச் செருகக் கூடியவாறு தயாரிக்க வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.)

**ஒத்தகருத்துச் சொற்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **1.** | அழகு - | | **6.** | சினம் - | |
| **2.** | அறிவு - | | **7.** | சுத்தம் - | |
| **3.** | உடல் - | | **8.** | துன்பம் - | |
| **4.** | உண்மை- | | **9.** | நித்திரை - | |
| **5.** | களிப்பு - | | **10.** | உணவு - | |

| | | | | |
|---|---|---|---|---|
| உவகை | புத்தி | உறக்கம் | சீற்றம் | இடர் |
| வடிவு | வாய்மை | மெய் | புனிதம் | ஆகாரம் |

- மாணவர் குழுக்களை அழைத்து, கட்டங்களில் வரவேண்டிய ஒத்தகருத்துச் சொற்களைத் தெரிவுசெய்து கட்டத்தில் செருக வழிப்படுத்துங்கள்.

**குறிப்பு:** *இதுபோன்று தரம் நான்கு மாணவர்களின் வயது மட்டத்திற்குப் பொருத்தமான ஒத்தகருத்துச் சொற்களை மாணவர்களுக்கு அறிமுகஞ் செய்யுங்கள்.*

### செயற்பாடு 3

- மாணவர்கள் தரம் 3 இல் ஏற்கனவே கற்ற எதிர்க்கருத்துச் சொற்களைக் கேட்டறியுங்கள். அதன் பின்னர் பின்வரும் எதிர்க்கருத்துச் சொற்களை அட்டையில் எழுதிக் காட்சிப் படுத்துங்கள்.

**எதிர்க்கருத்துச் சொற்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **1.** | **அண்மை** - | சேய்மை | **7.** | **ஏற்றுமதி**- | இறக்குமதி |
| **2.** | **ஆக்கம்** - | அழிவு | **8.** | **ஒளி** - | இருள் |
| **3.** | **இலாபம்** - | நட்டம் | **9.** | **சாதகம்** - | பாதகம் |
| **4.** | **இளமை** - | முதுமை | **10.** | **ஞாபகம்** - | மறதி |
| **5.** | **உயர்வு** - | தாழ்வு | **11.** | **நண்பன்** - | பகைவன் |
| **6.** | **உறவு** - | பகை | **12.** | **சுத்தம்** - | அசுத்தம் |

- காட்சிப்படுத்தப்பட்டுள்ள சொற்களை அப்பியாசக் கொப்பியில் எழுதி வாசித்துக்காட்ட ஆர்வமூட்டுங்கள்.

**செயற்பாடு 4**

- மேற்குறிப்பிட்ட எதிர்க்கருத்துச் சொற்களை மாணவர் குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப அட்டைகளில் தனித்தனியாக எழுதி (24 சொற்கள்) கடதாசித் தட்டில் இட்டுக் கொள்ளுங்கள்.
- மாணவர்களை அறுவர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் 24 சொற்கள் கொண்ட கடதாசித் தட்டை வழங்குங்கள். குழுவிலுள்ள ஒவ்வொருவரும் ஒவ்வொரு சொல் அட்டையை எடுக்கவேண்டும். அச்சொல்லிற்கான எதிர்க்கருத்துச் சொல் அட்டையைக் கடதாசித் தட்டில் தேடியெடுத்து படத்தில் காட்டியவாறு மேசையில் வைக்க மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

| | | | |
|---|---|---|---|
| அண்மை | சேய்மை | ஒளி | இருள் |
| ஞாபகம் | மறதி | நண்பன் | பகைவன் |

- ஒவ்வொரு குழுவும் தம்மிடமுள்ள எதிர்க்கருத்துச் சொற்களை வாசித்துக்காட்ட வழிப்படுத்துங்கள்.
- அதன் பின்னர் பின்வருமாறு பயிற்சித்தாள் ஒன்றைப் பிரதிசெய்து எல்லா மாணவர் களுக்கும் வழங்குங்கள். கட்டங்களில் எழுதப்படவேண்டிய எதிர்க்கருத்துச் சொற்களைச் சரியாக எழுத வழிப்படுத்துங்கள்.

| **எதிர்க்கருத்துச் சொற்கள்** | |
|---|---|
| அண்மை | |
| | கேடு |
| இலாபம் | |
| | முதுமை |
| உறவு | |
| | பாதகம் |

- மாணவர்கள் விருப்புடன் கற்கக் கூடிய வகையிலான வேறு பயிற்சிகளைத் தயாரித்து வழங்குங்கள்.

செயற்பாடு 5


- மாணவர்களுக்கு எதிர்க்கருத்துச் சொற்களை, தாயக்கட்டை விளையாட்டு மூலம் அறிமுகம் செய்யுங்கள். மாணவர் குழுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப தாயக்கட்டைகளை காட்போட் அட்டைகள் அல்லது மரக்குற்றிகளைப் பயன்படுத்தி உருவாக்கிக் கொள்ளுங்கள்.

- தாயக்கட்டைகளின் ஆறு முகங்களிலும் ஆறு சொற்களை எழுதிக்கொள்ளுங்கள். அதன் பின்னர் காகிதத்தட்டுக்களில் தாயக்கட்டையில் எழுதிய சொற்களுக்குரிய எதிர்க்கருத்துச் சொற்களைத் தனித்தனியாக அட்டைகளில் எழுதி இடுங்கள். (மாணவர் குழுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப எதிர்க்கருத்துச் சொற்கள் கொண்ட காகிதத்தட்டுக்களையும் தாயக்கட்டைகளையும் தயாரித்துக் கொள்ள வேண்டுமென்பதை நினைவிற் கொள்ளுங்கள்.)

- தாயக்கட்டையை உருட்டுங்கள். தாயக்கட்டையின் மேற் பக்கத்தில் எழுதப்பட்டுள்ள சொல்லுக்குரிய எதிர்க்கருத்துச் சொல்லை தாயக்கட்டையை உருட்டியவர் தமது குழுவுக்கு வழங்கப்பட்ட காகிதத்தட்டிலிருந்து சரியான அட்டையை எடுத்து வாசிக்க வேண்டும். இவ்வாறு விளையாட்டை அறிமுகஞ் செய்தல் வேண்டும்.

- சரியான அட்டையை எடுத்து வாசித்தபின் தாயக்கட்டையில் உள்ள சொல்லையும் அதற்கான எதிர்க்கருத்துச் சொல்லையும் தாயக்கட்டையை உருட்டியவரும் அக்குழுவில் உள்ளவர்களும் அப்பியாசக் கொப்பியில் எழுதிக்கொள்ள வேண்டும். இவ்விளையாட்டைக் குழுவிலுள்ள எல்லா மாணவர்களும் விளையாட வேண்டும்.

*எடுத்துக்காட்டு* :




செயற்பாடு 6

- மாணவர்களிடம் தரம் மூன்றில் கற்ற எதிர்ப்பாற் சொற்களைக் கேட்டறியுங்கள். அதன் பின்னர் கீழ்வரும் எதிர்ப்பாற் சொற்களைப் பெரிய அட்டையில் எழுதி அறிமுகம் செய்யுங்கள்.

**எதிர்ப்பாற் சொற்கள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **1.** | **சிறுவன்** | - | சிறுமி | **7.** | **பண்டிதன்** | - | பண்டிதை |
| **2.** | **செல்வன்** | - | செல்வி | **8.** | **சீமான்** | - | சீமாட்டி |
| **3.** | **சேவகன்** | - | சேவகி | **9.** | **நாயகன்** | - | நாயகி |
| **4.** | **தம்பி** | - | தங்கை | **10.** | **மாணவன்** | - | மாணவி |
| **5.** | **புத்திரன்** | - | புத்திரி | **11.** | **வீரன்** | - | வீராங்கனை |
| **6.** | **நண்பன்** | - | நண்பி | **12.** | **மருமகன்** | - | மருமகள் |

- எதிர்ப்பாற் சொற்களை மாணவர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள்.

- பின்னர், மாணவர்களுடன் சேர்ந்து வாசியுங்கள். அதன் பின்னர், மாணவர்களை எழுமாறாக அழைத்துச் சொற்களை வாசிக்க வழிப்படுத்துங்கள். வாசித்து முடிந்ததும் அப்பியாசக் கொப்பியில், எதிர்ப்பாற் சொற்களை எழுத வழிப்படுத்துங்கள். எழுதிய பின்னர், இருவர் இருவராகச் சோடி சேர்ந்து வாசிக்க ஆர்வமூட்டுங்கள்.

**செயற்பாடு 7**

- மாணவர்களுக்கு எதிர்ப்பாற் சொற்களைக் கொண்ட வாக்கியங்களை அட்டைக் கீலங்களில் எழுதி அறிமுகம் செய்யுங்கள்.

1. அவன் ஒரு **வீரன்.**
   அவள் ஒரு **வீராங்கனை.**

2. அவன் என்னுடைய **தம்பி**
   அவள் என்னுடைய **தங்கை.**

3. நான் நல்ல **சேவகன்.**
   நான் நல்ல **சேவகி.**

4. அவரது **மருமகன்** வீட்டிற்கு வந்தார்.
   அவரது **மருமகள்** வீட்டிற்கு வந்தார்.

5. எனது **புத்திரன்** வீட்டிற்கு வந்தான்.
   எனது **புத்திரி** வீட்டிற்கு வந்தாள்.

- மேலே தரப்பட்ட வாக்கியங்களைக் குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப அட்டைக் கீலங்களில் எழுதிக்கொள்ளுங்கள்.
- ஒவ்வொரு குழுவிலும் ஐவர் இடம்பெறுதல் வேண்டும். அட்டைக் கீலங்களைக் கடதாசித் தட்டில் இட்டு குழுக்களுக்கு வழங்குங்கள். அட்டைக் கீலங்களில் எழுதப்பட்டுள்ள எதிர்ப்பாற் சொற்களைக் கொண்ட வாக்கியங்களைக் குழுக்களிலுள்ள எல்லா மாணவர்களும் வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- அதன் பின்னர், அட்டைக் கீலங்களில் எழுதப்பட்டுள்ள வாக்கியங்களை அப்பியாசக் கொப்பியில் எழுதி, முற்றுப்புள்ளி இட வழிப்படுத்துங்கள். எழுதிய வாக்கியங்களைச் சுயமாக வாசிக்க ஆர்வமூட்டுங்கள்.

**செயற்பாடு 8**

- மாணவர்களுக்கு ஏற்கனவே எதிர்க்கருத்துச் சொற்களைத் தாயக்கட்டை விளையாட்டு மூலம் அறிமுகம் செய்தது போன்று எதிர்ப்பாற் சொற்களையும் அறிமுகம் செய்யுங்கள்.
- தாயக்கட்டைகளின் ஆறு முகங்களிலும் ஆறு சொற்களை எழுதிக்கொள்ளுங்கள். அதன் பின்னர் காகித்தட்டுக்களில் தாயக்கட்டையில் எழுதிய சொற்களுக்குரிய எதிர்க்கருத்துச் சொற்களை தனித்தனியாக அட்டைகளில் எழுதி இடுங்கள்.
- தாயக்கட்டைகளையும் காகித்தட்டுக்களையும் மாணவர் குழுக்களுக்கு வழங்குங்கள். குழுக்களிலுள்ள ஒவ்வொருவரும் தாயக்கட்டையை உருட்ட உற்சாகப்படுத்துங்கள். தாயக்கட்டையை உருட்டிய பின் மேற்பக்கத்திலுள்ள சொல்லுக்குரிய எதிர்ப்பாற் சொல்லைத் தமது குழுவுக்கு வழங்கப்பட்ட காகித்தட்டிலிருந்து சரியான அட்டையை எடுத்து வாசிக்க வேண்டும்.

- அதன் பின்னர், தாயக்கட்டையின் மேற்பகுதியில் எழுதப்பட்டுள்ள சொல்லையும் அதற்குரிய எதிர்ப்பாற் சொல்லையும் அப்பியாசக் கொப்பியில் எழுத வேண்டும். குழுவிலுள்ள எல்லா மாணவர்களும் உருட்டும்போதும் தாயக்கட்டையின் முகத்திலுள்ள சொல்லையும் அதற்குரிய எதிர்ப்பாற் சொல்லையும் எழுத வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.
- இவ்விளையாட்டை மாணவர்கள் விரும்பும்வரை விளையாடச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

செயற்பாடு 9

- மாணவர்களுக்கு திணை, பால், எண், இடம், காலம் என்பவற்றை இலகுவாகப் புரியும் வகையில் அறிமுகஞ் செய்யுங்கள்.

**திணை**

தமிழில் திணை என்னும் சொல் சாதி, ஒழுக்கம் எனப் பல்வேறு பொருள்களைத் தருகின்றது. திணை இருவகைப்படும்.

திணை
- உயர்திணை
- அஃறிணை

**உயர்திணை:** மக்கள், தேவர், நரகர் ஆகியவர்கள் உயர்திணையின் பாற்படுவார்கள்.

***எடுத்துக்காட்டு:*** மாலன், மேரி, பாத்திமா, தந்தை

**அ∴றிணை:** மக்கள், தேவர், நரகர் அல்லாத மற்ற உயிர் உள்ள, உயிர் அற்ற எல்லாம் அ∴றிணையின் பாற்படும்.

***எடுத்துக்காட்டு:*** மரம், ஆடு, கதிரை, இலை

- **மாணவர்களுக்கு 'இலக்கணம்' என்ற சொல்லைப் பயன்படுத்தாமல் திணை, பால், எண், இடம், காலம் ஆகியவற்றை அறிமுகம் செய்யுங்கள்.**
- மாணவர்களுக்கு உயர்திணை, அ∴றிணை ஆகியவற்றை விளக்குவதற்கு செருகல் அட்டை முறையைப் பின்பற்றுங்கள். அட்டைக் கீலங்களில் உயர்திணை, அ∴றிணைச் சொற்களை எழுதி அட்டவணையில் செருகி விளக்குங்கள்.

| உயர்திணை | அ∴றிணை |
|---|---|
| அன்னை | கடல் |
| சங்கரன் | இலை |
| சலீம் | யானை |
| பீற்றர் | மேசை |

- அதன் பின்னர் மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். ஒவ்வொரு குழுவுக்கும் ஐந்து உயர்திணைச் சொற்கள், ஐந்து அ∴றிணைச் சொற்கள் கொண்ட அட்டைக் கீலங்களை வழங்குங்கள். அதன் பின்னர் எல்லாக் குழுக்களுக்கும் இரண்டு காகிதத் தட்டுக்களை வழங்குங்கள். அக்காகிதத் தட்டில் உயர்திணை, அ∴றிணை என எழுதப்பட்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு குழுவினரும் தமக்குக் கொடுக்கப்பட்ட பத்து அட்டைகளில் இருந்து பொருத்தமான அட்டைகளை உரிய காகிதத்தட்டில் இட வேண்டும். எல்லாக் குழுக்களும் சரியாக இட்டுள்ளனரா என ஆசிரியர் அவதானிக்க வேண்டும். அதன் பின்னர் அப்பியாசக் கொப்பியில் கீழ்வருமாறு அட்டவணையை வரைந்து பூர்த்தி செய்ய வழிப்படுத்துங்கள்.

| திணை | |
|---|---|
| உயர்திணை | அ∴றிணை |
| 1. .................. | 1. ................. |
| 2. .................. | 2. ................. |
| 3. .................. | 3. ................. |
| 4. .................. | 4. ................. |

- இதுபோன்ற வேறு பயிற்சிகளையும் வழங்குங்கள்.

**செயற்பாடு 10**

- மாணவர்களுக்கு பால் என்றால் என்ன என்பதனை இலகுவாகப் புரிய வையுங்கள்.

**பால்**

பால் என்றால் பிரிவு என்று பொருள். உலகில் உள்ள பொருள்கள் அனைத்தையும் திணை அடிப்படையில் இரு பால்களாகப் பிரிக்கலாம். அவையாவன:

1) உயர்திணைப் பால்
2) அ∴றிணைப் பால்

என்பவை ஆகும்.

**1. உயர்திணைப் பால்**

உயர்திணைப் பிரிவினரைக் குறிப்பது உயர்திணைப் பால் எனப்படும். உயர்திணைப் பால் மூன்று வகைப்படும். அவையாவன:

1. ஆண்பால் 2. பெண்பால் 3. பலர்பால்

- **ஆண்பால்**

  உயர்திணைப் பொருள்களில் **ஆண்களில் ஒருமையைக் குறிப்பது** ஆண்பால் எனப்படும்.

  எடுத்துக்காட்டு: சங்கரன், கரீம்

- **பெண்பால்**

  உயர்திணைப் பொருள்களில் **பெண்களில் ஒருமையைக் குறிப்பது** பெண்பால் எனப்படும்.

  எடுத்துக்காட்டு: யாழினி, பாத்திமா

- **பலர்பால்**

  உயர்திணையைச் சேர்ந்த **எல்லாப் பன்மைச் சொற்களும்** பலர்பால் எனப்படும்.

  எடுத்துக்காட்டு: மக்கள், ஆண்கள், பெண்கள்

  இந்த எடுத்துக்காட்டுகளில் **மக்கள்** என்னும் சொல் **ஆண், பெண்களில் பலரைக்** குறிக்கிறது.

  ஆண்கள் என்னும் சொல் **ஆண்களில் பலரைக்** குறிக்கிறது.

  பெண்கள் என்னும் சொல் **பெண்களில் பலரைக்** குறிக்கிறது.

**2. அ∴றிணைப் பால்**

அ∴றிணைப் பொருள்களைக் குறிப்பது அ∴றிணைப் பால் எனப்படும். அ∴றிணைப் பால் இருவகைப்படும். அவையாவன:

1) ஒன்றன்பால்

2) பலவின்பால்

- **ஒன்றன்பால்**

  அ∴றிணைப் பொருள்களில் ஏதேனும் ஒன்றைக் குறிப்பது ஒன்றன்பால் எனப்படும்.

  எடுத்துக்காட்டு: அது, யானை, வீடு

- **பலவின்பால்**


  அ∴றிணைப் பொருள்களில் பலவற்றைக் குறிப்பது பலவின்பால் எனப்படும்.

  எடுத்துக்காட்டு: அவை, வீடுகள், யானைகள்

**உயர்திணைப் பால், அ∴றிணைப் பால் ஆகிய இரண்டையும் சேர்த்துப் பால்களின் எண்ணிக்கை ஐந்தாகும்.**

1) ஆண்பால்
2) பெண்பால்
3) பலர்பால்
4) ஒன்றன்பால்
5) பலவின்பால் என்பவை ஆகும்.

- கீழே தரப்பட்டுள்ள படவரைபை மாணவர்களுக்குக் காட்சிப்படுத்துங்கள்.




- மாணவர்களை வட்டமாக நிற்கச் செய்யுங்கள். வட்டத்தின் நடுவே ஆசிரியர் நின்று கொண்டு ஒரு மாணவனை அழையுங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***

  குமணன் → ஆண்பால் என்று கூறுங்கள்

  இன்னொரு மாணவியை அழையுங்கள்.


  சங்கரி → பெண்பால் என்று கூறுங்கள்.

  அதன் பின்னர் ஐந்து ஆண் மாணவர்களை அழையுங்கள்.

  இவர்கள் ஆண்கள் → பலர்பால் என்று விளக்குங்கள்.

- அதன் பின்னர் ஒவ்வொரு மாணவனும் தன் பெயரைக் கூறி, தான் ஆண்பால் எனவும் ஒவ்வொரு மாணவியும் தமது பெயரைக் கூறி, பெண்பால் எனவும் கூற வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் ஆண் மாணவர்கள் ஒரு குழுவாகவும் பெண் மாணவிகள் ஒரு குழுவாகவும் சேருமாறு கூறுங்கள். அதன் பின்னர் ஆண்கள் - நாங்கள் அனைவரும் ஆண்கள் எனவே பலர்பால் எனக் கூறச் செய்யுங்கள். பெண்களும் நாங்கள் அனைவரும் பெண்கள் எனவே பலர்பால் எனக் கூறச் செய்யுங்கள்.
- அதன் பின்னர் ஆண்களையும் பெண்களையும் ஒரே குழுவாக்குங்கள். அதன் பின்னர் நாங்கள் அனைவரும் பலர்பால் எனக் கூறச் செய்யுங்கள்.
- இச்செயற்பாட்டின் மூலம் ஆண்பால், பெண்பால், பலர்பால் என்ற எண்ணக்கருவை மாணவர் மனதில் சுலபமாக விதையுங்கள்.
- அஃறிணைக்குரிய ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய பால்களை விளக்குவதற்குப் பின்வரும் செயற்பாட்டை மேற்கொள்ளுங்கள்.
- ஒன்றன் பாலிற்குரிய படங்களையும் பலவின் பாலிற்குரிய படங்களையும் தெரிவுசெய்து பிரதி எடுத்து அட்டைகளில் ஒட்டி பெட்டியொன்றில் இடுங்கள்.

*எடுத்துக்காட்டு:*



- மாணவர்களை வட்டமாக நிற்கச் செய்யுங்கள். எழுமாறாக சில மாணவர்களை அழைத்து அட்டைப் பெட்டியில் இருந்து ஒவ்வொரு பட அட்டைகளை எடுக்குமாறு கூறுங்கள். அவர்கள் எடுத்த அட்டைகளை உயர்த்தி மற்றவர்களுக்குக் காட்டுமாறு கூறுங்கள்.

*எடுத்துக்காட்டு:*



- அவர்கள் வைத்திருக்கும் படங்களில் எவை ஒன்றன்பாலிற்குரியவை, எவை பலவின் பாலிற்குரியவை என விளக்குங்கள். மாணவர்கள் புரிந்து கொண்டபோதும் இதனை விளையாட்டாக மேற்கொள்ளுங்கள். ஒன்றன்பாலிற்குரிய படங்களை வைத்திருப்பவர்கள் ஒரு குழுவாகவும் பலவின்பாலிற்குரிய படங்களை வைத்திருப்பவர்கள் மற்றைய குழுவிலும் இணைத்துக்கொள்ள வழிப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு:*



- அதன் பின்னர் ஆண்பால், பெண்பால், பலர்பால் சொற்கள் ஐந்து வீதம் எழுதப்பட்ட அட்டைகளை (மொத்தம் 15) காகிதத்தட்டில் இட்டு, ஐவர் கொண்ட குழுக்களுக்கு வழங்குங்கள். அட்டையில் உள்ள பெயர்களை வாசித்து அப்பியாசக் கொப்பியில் பின்வரும் அட்டவணையை வரைந்து பூர்த்தி செய்யுமாறு கூறுங்கள்.

| **ஆண்பால்** | **பெண்பால்** | **பலர்பால்** |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

- அடுத்து ஒன்றன்பால், பலவின்பால் சொற்கள் ஐந்துவீதம் எழுதப்பட்ட அட்டைகளை (மொத்தம் 10) கடதாசித்தட்டில் இட்டு ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள். (குழுவில் ஐவர் இடம்பெறுதல் வேண்டும்.)
- அட்டையில் உள்ள பெயர்களை வாசித்து அப்பியாசக் கொப்பியில் பின்வரும் அட்டவணையை வரைந்து பூர்த்தி செய்ய மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

| **ஒன்றன்பால்** | **பலவின்பால்** |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

- அப்பியாசக் கொப்பியைப் பார்வையிட்டு இடர்ப்படும் மாணவர்களுக்கு உதவுங்கள்.
- இதுபோன்ற வேறு பயிற்சிகளையும் வழங்கும் சுதந்திரம் ஆசிரியருக்கு உண்டு.

செயற்பாடு 11

- மாணவர்களுக்கு **எண்** என்பதை இவகுவான முறையில் அறிமுகம் செய்யுங்கள்.

**எண்**

பொருள்களின் எண்ணிக்கையைக் குறிப்பது **எண்** எனப்படும். எண் இரண்டு வகைப்படும். அவை,

1) ஒருமை 2) பன்மை

**ஒருமை**

ஏதேனும் ஒரு பொருளைக் குறிப்பது ஒருமை எனப்படும். பொருள்களைக் குறிக்கும் பிரிவுகளில் ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் என்னும் மூன்றும் ஒருமைக்குரிய பால்கள் ஆகும்.

**ஆண்பால்:** முருகன், பீற்றர், அவன்

**பெண்பால்:** சிவரஞ்சனி, சகானா, அவள்

**ஒன்றன்பால்:** மான், கல், அது

**பன்மை**

பொருள்களில் பலவற்றைக் குறிப்பது பன்மை எனப்படும். பொருள்களைக் குறிக்கும் பிரிவுகளில் பலர்பால், பலவின்பால் என்னும் இரண்டும் பன்மைக்குரிய பால்கள் ஆகும்.

**பலர்பால்**: அவர்கள், ஆண்கள், பெண்கள்

**பலவின்பால்**: அவை, ஆடுகள், பழங்கள்

- மாணவர்களுக்கு, பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்யும் பயிற்சியை வழங்குங்கள்.

**பயிற்சி 1:**

| ஒருமை | | |
|---|---|---|
| **ஒருமை - ஆண்பால்** | **ஒருமை - பெண்பால்** | **ஒருமை - ஒன்றன்பால்** |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

**பயிற்சி 2:**

| பன்மை | |
|---|---|
| **பன்மை - பலர்பால்** | **பன்மை - பலவின்பால்** |
| | |
| | |
| | |
| | |
| | |

**பயிற்சி 3:**

- மாணவர்களை ஆண்பால் ஒருமை வாக்கியங்களையும் பெண்பால் ஒருமை வாக்கியங்களையும் ஒன்றன்பால் ஒருமை வாக்கியங்களையும் எழுத ஆர்வமூட்டுங்கள்.

**எடுத்துக்காட்டு:**

ஆண்பால் ஒருமை வாக்கியம்:

..........................................................................................................................

பெண்பால் ஒருமை வாக்கியம்:

..........................................................................................................................

ஒன்றன்பால் ஒருமை வாக்கியம்:

..........................................................................................................................

**பயிற்சி 4:**

- மாணவர்களுக்கு பலர்பால் - பன்மை வாக்கியங்களையும் பலவின்பால் - பன்மை வாக்கியங்களையும் எழுத வழிப்படுத்துங்கள்.

  **எடுத்துக்காட்டு:**

  பலர்பால் பன்மை வாக்கியம்:

  ........................................................................................................................

  பலவின்பால் பன்மை வாக்கியம்:

  ........................................................................................................................

- இவ்வாறான பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்குங்கள்.

**செயற்பாடு 12**

- மாணவர்களுக்கு **இடம்** என்பதை இலகுவான முறையில் அறிமுகம் செய்யுங்கள்.

  **இடம்**

- நாம் உரையாடும்போது, பேசுகின்ற நாமும் கேட்கின்றவர்களும் பேசப்படும் பொருள்களும் என்று மூன்று நிலைகள் உள்ளன. அம் மூன்று நிலைகளையும் சுட்டுவது **இடம்** எனப்படும்.
- இடம் மூன்று வகைப்படும். எனவே இதை **மூவிடம்** என்று கூறுவார்கள். அவையாவன:

  1. தன்மை 2. முன்னிலை 3. படர்க்கை

  **தன்மை**

  பேசுபவர் தன்னைப்பற்றிக் குறிப்பது தன்மை எனப்படும்.

  ***எடுத்துக்காட்டு:*** **நான்** பேசினேன்.

  **நாங்கள்** பேசினோம்.

  **முன்னிலை**

  முன்னால் இருப்பவரைக் குறிப்பது **முன்னிலை** எனப்படும்.

  ***எடுத்துக்காட்டு:*** **நீ** வந்தாய்.

  **நீங்கள்** வந்தீர்கள்.

  **படர்க்கை**

  தன்னையும் முன்னிலையும் அல்லாத பிறர் அல்லது பிற பொருளைக் குறிப்பது **படர்க்கை** எனப்படும்.

  ***எடுத்துக்காட்டு:*** **அவள்** வந்தாள்.

  **அவர்** வந்தார்.

  **அது** வந்தது.

  **அவை** வந்தன.

- மாணவர்களை வட்டமாக அமரச் செய்து, பின்வருமாறு வாக்கியங்களைக் கூற மாணவர்களை ஆர்வமூட்டுங்கள்.

  **எடுத்துக்காட்டு :**

| |
|---|
| நான் பாடினேன். ⟶ நான் படித்தேன். ⟶ நான் சிரித்தேன். ⟶ நான் அழுதேன். |

- மாணவர்களை எதிர் எதிரே நிறுத்தி, பின்வருமாறு பேச வைத்து முன்னிலையை விளக்குங்கள்.

| | | |
|---|---|---|
| A நீ பாடினாய் | C நீ அழுதாய் | E நீ ஓடினாய் |
| ↓↑ | ↓↑ | ↓↑ |
| B நீ ஆடினாய் | D நீ சிரித்தாய் | F நீ குதித்தாய் |

- மாணவர்களை படர்க்கையை கூறுவதற்காக வரிசையாக நிற்க வைத்துப் பின்வருமாறு கூற வழிப்படுத்துங்கள்.

எடுத்துக்காட்டு:

x x x x

அவள் வந்தாள். அவள் பாடினாள். அவர் ஓடினார். அது ஓடியது.

- இவ்வாறு தன்மை, முன்னிலை, படர்க்கை தொடர்பாகப் பயிற்சி அளித்த பின்னர் தன்மை, முன்னிலை, படர்க்கை வாக்கியங்களைச் சுயமாக அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள்.
- இடர்ப்படும் மாணவர்களுக்கு உதவுங்கள்.

**செயற்பாடு 13**

- மாணவர்களுக்கு **காலம்** என்பதை இலகுவான முறையில் அறிமுகஞ் செய்யுங்கள்.

**காலம்**

வினைச்சொல் செயல் நிகழ்வையும், அது நிகழும் காலத்தையும் உணர்த்தும் என்பதை அறிவீர்கள். செயல் நிகழ்ந்து முடிந்ததா? நிகழ்ந்து கொண்டுள்ளதா? நிகழ உள்ளதா? என்பதனை, வினைச்சொல்லின் காலம் காட்டும் தன்மையால் அறியலாம்.

- **காலத்தின் வகைகள்**

காலம் மூன்று வகைப்படும். அவை, இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பனவாகும்.

  - **இறந்தகாலம்**

    செயல் நிகழ்ந்து முற்றுப் பெற்றதைக் குறிப்பது **இறந்தகாலம்** எனப்படும்.

    எடுத்துக்காட்டு: உண்டான்.

    இது, உண்ணுதலாகிய செயல் நிகழ்ந்து முற்றுப் பெற்றதைக் குறிக்கின்றது.

  - **நிகழ்காலம்**

    செயல் தொடங்கி, முற்றுப் பெறாத நிலை **நிகழ்காலம்** ஆகும். செயல் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பது இதன் பொருளாகும்.

    எடுத்துக்காட்டு: உண்கின்றான்.

    இது, உண்ணுதல் தொழில், தொடங்கப் பெற்று, முற்றுப்பெறாமல் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

- **எதிர்காலம்**

  செயல் தொடங்கப் பெறாத நிலை **எதிர்காலம்** எனப்படும். செயல் இனி நிகழ உள்ளது எனச் சுட்டுவது இதன் நிலையாகும்.

  எடுத்துக்காட்டு: உண்பான்

  இது, உண்ணுதல் செயல் நிகழாத நிலையை, இனி நிகழ உள்ள நிலையைச் சுட்டுகின்றது.

- செவ்வக வடிவிலான அட்டைக் கீலங்களை வெட்டிக்கொள்ளுங்கள். மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். ஒவ்வொரு குழுவுக்கும் ஐந்து அட்டைகள் வீதம் வழங்க வேண்டும் என்பதனை நினைவிற் கொள்ளுங்கள். ஒவ்வொரு குழுவுக்கும் வழங்க வேண்டிய அட்டைகளில் பின்வரும் சொற்களை எழுதிக் கொள்ளுங்கள்.

| படி | வா | அழை | நில் | ஓடு |
|---|---|---|---|---|

- ஒவ்வொரு குழுவிற்கும் மேலே தரப்பட்டுள்ளவாறான ஐந்து அட்டைகளை கடதாசித் தட்டில் இட்டு வழங்குங்கள்.
- மாணவர்கள் அனைவரும் ஒவ்வொரு அட்டை வீதம் எடுத்துக்கொள்ள வேண்டும்.
- மாணவர்கள் தமக்குக் கிடைத்த சொல்லைக் கொண்டு மூன்று காலங்களிலும் வாக்கியங்களை அமைத்துக்கூற வேண்டும்.

  எடுத்துக்காட்டு:

  | படி |
  |---|

  அ. நான் பாடம் படித்தேன்.
  நான் பாடம் படிக்கிறேன்.
  நான் பாடம் படிப்பேன்.

  | வா |
  |---|

  ஆ. அவள் எனது வீட்டுக்கு வந்தாள்.
  அவள் எனது வீட்டுக்கு வருகிறாள்.
  அவள் எனது வீட்டுக்கு வருவாள்.

- இவ்வாறு மூன்று காலங்களிலும் மாணவர்கள் வாக்கியங்களை அமைக்கவும் அமைத்த பின்னர் அப்பியாசக் கொப்பியில் அவ்வாக்கியங்களை எழுதி, வகுப்பின் முன் வாசித்துக் காட்டவும் மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- இடர்ப்படும் மாணவர்களுக்குத் தனியாகப் பயிற்சி வழங்குங்கள்.

**செயற்பாடு 14**

- எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றும் வாக்கியத்தின் இன்றியமையாத உறுப்புக்களாகும்.
- எழுவாய் என்றால் கருத்து எழுவதற்கு இடமாக இருப்பதாகும்.
- பயனிலை என்றால் எழுவாயினது பயனைத் தன்னகத்தே கொண்டிருப்பதாகும்.
- செயப்படுபொருள் என்றால் செயப்படுவதற்கு உரியதாக உள்ள பொருள் எனப்படும்.

- எழுவாய், செயப்படுபொருள் ஆகியவற்றை பின்வருவன போன்ற வினாக்களை வினவுவதன் மூலம் இலகுவாகக் கண்டுகொள்ள முடியும் என மாணவர்களுக்குப் புரியவையுங்கள்.

எடுத்துக்காட்டு: **எழுவாயைக் காணல்**

| | |
|---|---|
| பயனிலை உயர்திணை | **யார்?** |
| பயனிலை அ·்றிணை ஒருமை | **எது?** |
| பயனிலை அ·்றிணை பன்மை | **எவை?** |

**செயப்படுபொருளைக் காணல்**

**யாரை?**

**எதை?**

**எவற்றை?**

- பின்வரும் வாக்கியங்களை அட்டைக் கீலங்களில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

| |
|---|
| தாத்தா பேரனை வாழ்த்தினார். |
| மாணவர்கள் பாடல்களைப் பாடினர். |
| ஆசிரியர் புத்தகத்தை எடுத்தார். |

- **யார்?, எதை?, எவை?** என்ற வினாக்களைக் கேட்பதன் மூலம் எழுவாயைக் காண முடியும். **யாரை?, எதை?, எவற்றை?** என்ற வினாக்களைக் கேட்பதன் மூலம் செயப்படுபொருளைக் கண்டுபிடிக்க முடியும். வாக்கியத்தின் இறுதியில் வரும் வினைச் சொல் பெரும்பாலும் பயனிலையாக வரும். பயனிலை(வினை)யை மாணவர்கள் இலகுவாகக் கண்டுபிடித்து விடுவார்கள். எனவே வினாக் கேட்க வேண்டிய அவசியமில்லை.
- கீழ்வருவன போன்ற பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்குங்கள்.

**பயிற்சி: 1**

**மாதிரிச் செயலட்டை**

- தரப்பட்டுள்ள வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பவற்றை இனங்கண்டு, அவ்வாக்கியத்தின் கீழே எழுதுக.

1. பசு பாலைத் தரும்.

   எழுவாய்: ................. பயனிலை: .............. செயப்படுபொருள்: .................

2. குமணன் புத்தகம் வாங்கினாள்.

   எழுவாய்: ................. பயனிலை: .............. செயப்படுபொருள்: .................

3. கரீம் பாடம் படிக்கின்றான்.

   எழுவாய்: ................. பயனிலை: .............. செயப்படுபொருள்: .................

4. மேரி பரிசு பெற்றாள்.

   எழுவாய்: ................. பயனிலை: .............. செயப்படுபொருள்: .................

5. நான் காந்தனைப் பார்த்தேன்.

   எழுவாய்: ................. பயனிலை: .............. செயப்படுபொருள்: .................

பயிற்சி 2:

- பின்வருவன போன்ற வாக்கிய அட்டையைப் பெரிதாக எழுதி, வகுப்பிற் காட்சிப் படுத்துங்கள்.

| வாக்கிய அட்டை | | |
|---|---|---|
| அ | ஆ | இ |
| 1. தாத்தா நேற்று வந்தார். | தாத்தா இன்று வருகிறார். | தாத்தா நாளை வருவார். |
| 2. நேற்று சித்திரப் போட்டி நடைபெற்றது. | இன்று சித்திரப் போட்டி நடைபெறுகிறது. | நாளை சித்திரப் போட்டி நடைபெறும். |
| 3. நேற்று நல்ல மழை பெய்தது. | இன்று நல்ல மழை பெய்கிறது. | நாளை நல்ல மழை பெய்யும். |
| 4. கணித பாடம் நடந்தது. | தமிழ்ப் பாடம் நடக்கிறது. | சமய பாடம் நடக்கும். |
| 5. நேற்றிரவு வீட்டிலே பாடம் படித்தேன். | இப்போது பாடம் படிக்கிறேன். | நாளையும் பாடம் படிப்பேன். |

- மூன்று தொகுதிகளிலுமுள்ள வாக்கியங்களின் பயனிலைகளை அவதானிக்கச் செய்த பின்னர், கோடிட்ட இடத்தைப் பூர்த்தி செய்து எழுதுமாறு அறிவுறுத்தல் வழங்குங்கள். (அடைப்புக்குள் தரப்பட்ட சொற்களைப் பயன்படுத்துமாறு கூறுக.)

***எடுத்துக்காட்டு:*** நேற்று குமரன் (படி) படித்தான்.

1. மாமா போன வருடம் கனடாவுக்குப் (போ) ................................
2. என் தங்கை இப்போது வகுப்பில் (இரு) ................................
3. அம்மா நாளைக்குப் புத்தகம் (வாங்கு) ................................
4. மழை வரக் கண்டால் மயில் (ஆடு) ................................
5. நேற்று கடும் மழை (பெய்) ................................

**விசேட குறிப்பு:**

(இலக்கணப் பகுதிகளைக் கற்பிக்கும் போது அவை இலக்கணம் என வெளிப்படுத்தாமல் உரிய இடங்களில் அவ்வவ்போது பல வாக்கியக் கோலங்களை (Sentence Patterns) கொடுத்து, அதன் பின்னர் பொருத்தமான கோடிடும் பயிற்சியைக் கொடுப்பதன் மூலம் மாணவர் தாமாகவே சரியான முடிவுக்கு வரும் வகையில் பாடத்தைத் திட்டமிடலாம். இலக்கணம் தொடர்பான எந்தவொரு விடயத்துக்கும் வரைவிலக்கணங் கூறாது, எடுத்துக்காட்டுகள் மூலம் கற்பித்தல் நன்று என்பதைக் கருத்திற் கொள்ளுங்கள்.)

**செயற்பாடு 15**

- எழுவாய் அடைமொழி, பயனிலை அடைமொழி

**எழுவாய் அடைமொழி**

***எடுத்துக்காட்டு:*** **கறுப்புப்** பூனை பால் குடித்தது.

↑ எழுவாய் அடைமொழி

**பயனிலை அடைமொழி**

எடுத்துக்காட்டு: மேரி வீட்டிற்கு விரைவாக நடந்தாள்.

↑ பயனிலை அடைமொழி

- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். ஒவ்வொரு குழுவுக்கும் ஐந்து வாக்கிய அட்டைகள் கிடைக்கும் வகையில் வாக்கியத்தை அட்டைகளில் எழுதி வழங்குங்கள்.

*எடுத்துக்காட்டு:*

| பருந்து பறந்தது. |
|---|

| நாய் ஓடியது. |
|---|

| யானை பிளிறியது. |
|---|

- இவ்வாக்கியங்களில் எழுவாய் அடைமொழிகளைச் சேர்த்து உரத்துக் கூறவும் அப்பயாசக் கொப்பியில் எழுதவும் வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் அதே வாக்கியத்தை பயனிலை அடைமொழி சேர்த்துக் கூறவும் எழுதவும் வழிப்படுத்துங்கள். அதன்பின்னர் எழுவாய் அடைமொழி, பயனிலை அடைமொழி சேர்த்து வாக்கியங்களைக் கூறவும், எழுதவும் வழிப்படுத்துங்கள். இதுபோன்ற வேறு பயிற்சிகளை வழங்குங்கள்.
- மாணவர்களுக்கு அடைமொழிகள் உள்ள வாக்கியங்களைப் பிரதி எடுத்துக் கொடுத்து அவ்வாக்கியங்களில் உள்ள எழுவாய் அடைமொழி, பயனிலை அடைமொழி ஆகியவற்றை இனங்கண்டு எழுத வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 16

- **பெயர்ச்சொல் வகைகள்**

பெயர்ச்சொல்லை ஆறு வகையாகப் பிரிக்கலாம். அவையாவன:

1) பொருட்பெயர் 2) இடப்பெயர்
3) காலப்பெயர் 4) சினைப்பெயர்
5) குணப்பெயர் 6) தொழிற்பெயர்

### 1. பொருட்பெயர்

உயிர் உள்ள, உயிர் இல்லாத பொருள்களின் பெயர்களைக் குறிப்பது பொருட்பெயர் எனப்படும்.

***எடுத்துக்காட்டு:*** அமுதன், சிங்கம், கதிரை, கிளி

மேற்குறிப்பிட்ட எடுத்துக்காட்டுகளில் உயர்திணைப் பொருள்களும் உள்ளன. அஃறிணைப் பொருள்களும் உள்ளன. எனவே, உயர்திணைப் பொருள்கள், அஃறிணைப் பொருள்கள் ஆகிய அனைத்துப் பொருள்களும் பொருட்பெயர் எனப்படும்

### 2. இடப்பெயர்

ஏதேனும் ஓர் இடத்தைக் குறிக்கும் பெயர் **இடப்பெயர்** எனப்படும்.

***எடுத்துக்காட்டு:*** புத்தளம், கண்டி, மட்டக்களப்பு, கதிர்காமம்

ஊர்களின் பெயர்களும் ஊரில் உள்ள நிலப்பிரிவுகளின் பெயர்களும் இடப்பெயர்கள் ஆகும்.

### 3. காலப்பெயர்

ஏதேனும் ஒரு காலத்தைக் குறிக்கும் பெயர் **காலப்பெயர்** எனப்படும்.

***எடுத்துக்காட்டு:*** திங்கட் கிழமை, தை, காலை, மாலை

### 4. சினைப்பெயர்

பொருள்களின் உறுப்புகளைக் குறிக்கும் பெயர் **சினைப்பெயர்** எனப்படும். சினை என்றால் உறுப்பு என்று பொருள். உயர்திணைப் பொருள்களின் உறுப்புகளையும் அஃறிணைப் பொருள்களின் உறுப்புகளையும் இது குறிக்கும்.

***எடுத்துக்காட்டு:*** கை, கண், கிளை, இலை

### 5. குணப்பெயர்

ஒரு பொருளின் குணத்தை உணர்த்தும் பெயர் **குணப்பெயர்** எனப்படும். நிறம், சுவை, வடிவம், அளவு ஆகியவற்றின் அடிப்படையில் குணப் பெயர் வரும்.

***எடுத்துக்காட்டு:*** சிவப்பு, இனிப்பு, கருமை, சதுரம்

### 6. தொழிற்பெயர்

ஏதேனும் ஒரு தொழிலை உணர்த்தும் (தொழிலின் பெயராக வரும்) பெயர் **தொழிற்பெயர்** எனப்படும்.

***எடுத்துக்காட்டு:*** படித்தல், ஓடுதல், விளையாடுதல்

- அறு வகைப் பெயர்களையும் கொண்ட சொற்களை அட்டைக்கீலங்களில் எழுதிப் பெட்டி ஒன்றில் இடுங்கள். எல்லா மாணவர்களுக்கும் 2 அட்டைகள் வீதம் எடுக்கக்கூடிய வகையில் அட்டைக் கீலங்கள் பெட்டியில் இடப்பட்டிருத்தல் வேண்டும்.
- ஒட்டுப் பலகையில் பின்வரும் அட்டவணையைக் காட்சிப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு:**

| பொருட்பெயர் | இடப்பெயர் | காலப்பெயர் | சினைப்பெயர் | குணப்பெயர் | தொழிற்பெயர் |
|---|---|---|---|---|---|
| புறா | கண்டி | நிமிடம் | தலை | இனிப்பு | ஓடுதல் |

- மாணவர்கள் தாம் தெரிவு செய்த அட்டைகளை அட்டவணையில் பொருத்தமான இடத்தில் ஒட்ட வழிப்படுத்துங்கள். எல்லோரும் ஒட்டி முடித்த பின்னர் இவ் அட்டவணையைப் பார்த்து, அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள். இதுபோன்ற வேறு பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்குங்கள்.

செயற்பாடு 17

- வினைச்சொல்

  ஒரு பொருளின் அசைவை, செய்கையை அல்லது தொழிலைக் குறிக்கும் சொல் வினைச் சொல் ஆகும். அது காலத்தைக் காட்டும்.

  ***எடுத்துக்காட்டு:*** சூரியன் கிழக்கில் **உதித்தது.**

  உதித்தது → வினைச்சொல்லாகும்.

- அட்டைக் கீலங்களில் வாக்கியங்களை எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***

  | |
  |---|
  | யானைகள் கூட்டமாகச் சென்றன. |
  | நாங்கள் உணவை உண்டோம். |

- அக்கீலங்களில் உள்ள வாக்கியங்களை எழுத மாணவர்களை வழிப்படுத்துங்கள். வழிப்படுத்திய பின்னர் வினைச்சொற்களை அவ்வாக்கியத்தின் கீழ் எழுதுமாறு வழிப்படுத்துங்கள்.
- இதுபோன்ற வேறு பயிற்சிகளையும் வழங்குங்கள்.

**பயிற்சி I:**

- பந்தி ஒன்றைப் பிரதி எடுத்து மாணவர்கள் எல்லோருக்கும் வழங்குங்கள். அப்பந்தியில் உள்ள வினைச் சொற்களை மாணவர்கள் இனங்கண்டு அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள்.

  **எடுத்துக்காட்டு:**

> மிக அதிகமான பரப்பளவில் மணல் மற்றும் மணற்குன்றுகள் நிறைந்த பகுதி பாலைவனம் எனப்படும். உலகின் மொத்தப்பரப்பில் ஐந்தில் ஒரு பகுதி பாலைவனம் ஆகும். இது உயிரினங்கள் வாழ்வதற்கு மிகவும் கடினமான பகுதியாகும். இந்தப் பகுதிகளில் மணல், புழுதிப் புயல்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. இதன் காரணமாக மணற்குன்றுகள் உருவாகின்றன.
>
> பாலைவனங்கள் ஆண்டுக்கு இருநூற்றைம்பது மில்லி மீற்றருக்குக் குறைவாக மழையைப் பெறுகின்றன. அதிக வறட்சியைத் தாங்கி வளரும் கள்ளி, பனை போன்ற சில தாவரங்கள் மட்டுமே இங்கு வளர்கின்றன. கங்காரு, எலி, ஆமை, சில வகைப் பாம்புகள், பல்லிகள், ஒட்டகங்கள் போன்றவை பாலைவனச்சூழலைச் சமாளித்து உயிர்வாழும் உயிரினங்கள் ஆகும்.

**பயிற்சி II:**

- பின்வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச்சொற்களையும் வினைச் சொற்களையும் இனங்கண்டு எழுதுங்கள்.

  1. தம்பியும் தங்கையும் கடைக்குப் போனார்கள்.
  2. மாணவர்கள் பாடசாலைக்குச் சென்று பாடம் படித்தனர்.
  3. கண்களில் இருந்து கண்ணீர் கசிந்தது.
  4. முபாரக் வேலை தேடிக் கொழும்புக்குச் சென்றார்.
  5. நிலத்தில் இறங்கி மண்வெட்டி பிடித்துக் கொத்தினான்.

செயற்பாடு **18**

- மாணவர்களுக்கு நிறுத்தக்குறிகளை அறிமுகம் செய்யுங்கள்.

1. முற்றுப்புள்ளி (.)
2. காற்புள்ளி (,)
3. வினாக்குறி (?)
4. **வியப்புக்குறி (!) தரம் நான்கில் அறிமுகமாகின்றது.**

**வியப்புக்குறி (!)**

வியப்பு, மகிழ்ச்சி, அச்சம், வெறுப்பு, இரக்கம் போன்ற உள்ளுணர்வுகளை வெளிப்படுத்தவும் விளித்துப் பேசவும் வியப்புக்குறி பயன்படுகிறது.

**எடுத்துக்காட்டு:**

**வியப்புக்குறி இட வேண்டிய இடங்கள் :**

✓ வியப்பு, மகிழ்ச்சி, அதிர்ச்சி, இரக்கம் போன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வாக்கியங்களின் முடிவில் **வியப்புக்குறி** இடப்படும்.

**எடுத்துக்காட்டு:**

எவ்வளவு பெரிய மலை! **(வியப்பு)**

நாம் எதிர்பார்த்தபடியே கலைவிழா நன்றாக நடந்து முடிந்தது! **(மகிழ்ச்சி)**

அவன் விமான விபத்தில் இறந்துவிட்டான்! **(அதிர்ச்சி)**

பல்லாயிரக் கணக்கான மக்களை ஆழிப்பேரலை விழுங்கிவிட்டது! **(இரக்கம்)**

பொருளாதாரத் தேக்கம் காரணமாக அவனது வேலை போய்விடுமோ! **(அச்சம்)**

- **நிறுத்தக்குறிகளைப் பயன்படுத்துதல்**

✓ முற்றுப்புள்ளி, காற்புள்ளி, வினாக்குறி, வியப்புக்குறி ஆகிய நிறுத்தக் குறிகள் பயன்படுத்தப்பட்ட பந்திகளைத் தெரிவுசெய்து பெரிதாக எழுதிக் காட்சிப்படுத்தி, மாணவரை வாசிக்கச் செய்யுங்கள். குறித்த நிறுத்தக்குறிகள் இடப்பட்டதன் காரணத்தை மாணவர் விளங்கிக் கொள்ள வழிப்படுத்துங்கள்.

✓ பின்னர், நிறுத்தக் குறிகள் இட வாய்ப்பளியுங்கள்.

**எடுத்துக்காட்டு:**

கீழ்வருமாறு பயிற்சி அட்டையைத் தயாரித்து, பிரதி எடுத்து எல்லா மாணவர்களுக்கும் வழங்கி, நிறுத்தக் குறிகளை இட்டு, சோடி சேர்ந்து வாசிக்க வழிப்படுத்துங்கள்.

**பயிற்சி அட்டை**

**கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுங்கள்.**

1. மனிதனுக்குப் பல விலங்குகள் உதவி புரிகின்றன
2. அவர் தம் கல்வியின் சிறப்புத்தான் என்னே
3. அந்தப் பாறையில் குரங்கு மான் சிங்கம் ஆகியவற்றின் உருவங்கள் கூட செதுக்கப்பட்டுள்ளன.
4. மரஞ் செடி கொடிகள் எவற்றைத் தருகின்றன

5. நாட்டின் அழகு என்னே
6. உலகில் எண்ணற்ற உயிரினங்கள் வாழ்கின்றன
7. ஐயா பேருந்து நின்று விட்டதே
8. காலையில் எழுதவுடன் செய்யவேண்டியவை யாவை
9. அதோ பாருங்கள் எவ்வளவு பெரிய அரண்மனை
10. பாலிலிருந்து தயிர் மோர் வெண்ணெய் நெய் முதலியவற்றைப் பெறுகின்றோம்
11. நீ பல்லாண்டு வாழ்க
12. அக்காவும் தம்பியும் பாடசாலைக்குச் சென்றார்கள்

- செய்திப் பத்திரிகையில் இருந்து முற்றுப்புள்ளி, காற்புள்ளி, வினாக்குறி, வியப்புக்குறி ஆகியவை இடப்பட்ட வாக்கியங்களைத் தெரிவு செய்து அப்பியாசக் கொப்பியில் எழுதும் பயிற்சியையும் மாணவர்களுக்கு வழங்குங்கள்.

**மரவளர்ப்பு பற்றிய விழிப்புணர்வு பெருகி வரும் நேரம் இது. மரங்கள் மனித குலத்துக்குச் செய்துவரும் நன்மைகள் கணக்கில் அடங்காதவை. மரங்கள் நிறைந்த காடுகள் மழைப்பொழிவு வினை உண்டாக்கும். அசுத்த வாயுவான கரியமில வாயுவை தாம் உட்கொண்டு மனிதர்களுக்குத் தேவையான ஒட்சிசனை மரங்கள் வெளியிடுகின்றன. சாலை ஓரங்களில் நிற்கும் மரங்கள் நிழல் கொடுத்துப் பயணத்தை இனிமையாக்குகின்றன.**

**நண்பர்களுக்கு மரக் கன்றுகளைப் பரிசளிப்போம்! பள்ளியில் ஒவ்வொருவரும் ஒரு மரக்கன்றை நட்டுப் பேணிப் பாதுகாப்போம்!**
**மரம் நடுவோம்!**
**மகிழ்ந்திருப்போம்!**

**உணவாகும் பல காய்களையும் கனிகளையும் மரங்கள் அள்ளித் தருகின்றன. வனவிலங்குகள் வாழும் இடங்களாக விளங்குபவை அடர்ந்த மரங்கள் சூழ்ந்த காடுகளே! நம் வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் பலவும் தருவது மரங்களே! இரப்பர், மூலிகைகள், வீட்டுக் கட்டுமானப் பொருட்கள் போன்றவற்றை மரங்கள் தருகின்றன. பறவைகள் கூடுகட்டி வாழ்வதற்கு வாடகை வாங்காமல் இடம் தந்து உதவுகின்றன. மரங்களின் பட்டைகள், இலைகள், வேர்கள் எனப் பலவும் மருந்துப் பொருட்களாகவும் பயனாகின்றன. எனவே வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம்! நம் எதிர்கால சந்ததியினரின் நன்மையைக் கருதி மர வளர்ப்பில் ஈடுபடுவோம்!**

**கணிப்பீடு :**

- ஒத்தகருத்துச் சொற்களை இனங்காணல்
- எதிர்க்கருத்துச் சொற்களை இனங்காணல்
- எதிர்ப்பாற் சொற்களை இனங்காணல்
- திணை, பால், எண், இடம், காலம் ஆகியவற்றை இனங்கண்டு உரிய முறையில் பயன்படுத்தல்
- எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகியவற்றை இனங்காணல்
- எழுவாய், பயனிலை அடைமொழிகளை இனங்காணல்
- பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றை இனங்காணல்
- வாக்கியங்களில் பொருத்தமுற முற்றுப்புள்ளி, காற்புள்ளி, வினாக்குறி, வியப்புக்குறி போன்வற்றை இடல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

**தேர்ச்சிகள் :**

L3 – விருப்புடனும் இரசனையுடனும் செவிமடுப்பார்.

S3 – விருப்புடனும் இரசனையுடனும் பேசுவார்.

**உள்ளடக்கம் :**

- சிறுவர் பாடல்கள்
- சிறுவர் கதைகள்
- உரையாடல்கள்
- போலச் செய்தல்
- விகடத்துணுக்குகள்

**கற்றற்பேறுகள் :**

- சிறுவர் பாடல்களை விருப்புடனும் இரசனையுடனும் செவிமடுத்து, ஆக்கபூர்வமாக வெளிப்படுத்துவார்.
- சிறுவர் கதைகளைச் செவிமடுத்து முகபாவனை, உடலசைவு, தொனி வேறுபாடு ஆகியவற்றை வெளிப்படுத்துவார்.
- உரையாடல்களை விருப்புடனும் இரசனையுடனும் ஆக்கபூர்வமாகவும் வெளிப்படுத்துவார்.
- பாடல்கள், கதைகளில் வரும் கதாபாத்திரங்கள் போன்று முகமூடி அணிந்து போலச் செய்துகாட்ட முன்வருவார்.
- தான் செவிமடுத்த விகடத்துணுக்குகளை விருப்புடனும் இரசனையுடனும் இயல்பாக வெளிப்படுத்துவார்.

**வளங்கள் :**

- பாடல் அட்டைகள், கதை அட்டைகள், கதைப் படங்கள், பொம்மைகள், கையுறைகள், முகமூடிகள், உரையாடல் ஒலி, இறுவட்டுக்கள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு 1**

- மாணவர்கள் தரம் மூன்றில் கற்ற பாடல்களைக் கேட்டு, பின்வரும் பாடல்களை மாணவர்களுக்கு அறிமுகம் செய்யுங்கள்.
- இங்கு தரப்பட்டுள்ள பாடல்கள் பற்றி மாணவர்களுடன் உரையாடிய பின்னர் பாடல்களை அறிமுகம் செய்யுங்கள்.

பாடல் 1

## எங்கும் கேட்டிடலாம்




ஓரிடத்தில் இருந்திடாமல்
ஓடி ஓடிக் கேட்டிடலாம்.
பாடகரைப் பார்த்திடாமல்
பாட்டுக்களைக் கேட்டிடலாம்.





வாத்தியங்களை இசைத்திடாமல்
வாத்திய இசை கேட்டிடலாம்
ஊரெங்கும் போய் வராமல்
ஊர்ப் பதினம் கேட்டிடலாம்.





அறிஞர்களைச் சந்திக்காமல்
அறிவுரைகள் கேட்டிடலாம்.
உலகமெங்கும் சுற்றிடாமல்
உலகச்செய்தி கேட்டிடலாம்





விழாக்களுக்குச் சென்றிடாமல்
வர்ணனைகள் கேட்டிடலாம்
கேட்டிடலாம் கேட்டிடலாம்
கேட்டுக்கொண்டே இருந்திடலாம்



- **வி.என்.எஸ்.உதயசந்திரன்**

- மாணவரை வட்ட வடிவில் அமரச் செய்து, இப்பாடலை நான்கு, நான்கு அடிகளாக அறிமுகம் செய்யுங்கள். இசையுடனும் அபிநயத்துடனும் மாணவர்களுடன் சேர்ந்து பாடுங்கள்.

**செயற்பாடு 2**

- மாணவர்களை அரை வட்ட வடிவில் அமரச் செய்து புத்தளிப்புக் கருவிகளை இசைத்துச் சேர்ந்து பாடலைக் பாடுங்கள்.

## குழந்தைகளே கேளீர்

குடைபிடித்து செருப்புமிட்டு
புத்தகமும் கொண்டு
குடுகுடென நடந்து வரும்
குழந்தைகளே கேளீர்

மழைக்காலம் வழி வழுக்கும்
   மிகக் கவனம் மக்காள்
வழியருகே வெள்ளமுண்டு
   விலகிவர வேண்டும்.

வெள்ளத்திலே கல்லெறிந்து
   விளையாட வேண்டாம்
வீண்சண்டையால் வழுக்கி
   விழுந்தெழும்ப வேண்டாம்.

கண்மணிகாள் நீர்ச்சிரங்கு
   காலில் வரும் கவனம்
கண்ணுறக்க மில்லாமற்
   கதறியழ நேரும்.

அம்மா சொல்லைத் தட்டாமல்
   ஆசிரியர்க் கடங்கி
ஆசையுடன் பள்ளியிலே
   படித்துவர வேண்டும்.

- மாணவர்களுக்கு இப்பாடலை நான்கு, நான்கு அடிகளாகச் சொல்லிக்கொடுங்கள். **மழைக் காலம்** பற்றி மாணவர்களிடம் கேட்டறியுங்கள்.

**செயற்பாடு 3**

- மாணவர்களுக்குக் கீழ்வரும் பாடலைச் சந்தத்துடன் சொல்லிக்கொடுங்கள்.

**துணை**

உடலுக்குத் துணை உயிராகும்
   உழவுக்குத் துணை உழைப்பாகும்
பாட்டுக்குத் துணை பண்ணாகும்.
   பண்புக்குத் துணை படிப்பாகும்.
அரசுக்குத் துணை அமைச்சாகும்
   அருளுக்குத் துணை அன்பாகும்.
பொருளுக்குத் துணை அறமாகும்.
   பொறுமைக்குத் துணை அறிவாகும்.

- வெ. நல்லதம்பி

நன்றி: கண்ணே பாப்பா

**செயற்பாடு 4**

- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்கி, குழுவாகப் பாடலைப் பாட மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

## நுங்கு வண்டி

சின்னச் சின்ன நுங்கு
செங்க ரும்பு நுங்கு
தின்னத் தின்ன இனிக்கும்
திகட்டி டாத நுங்கு!

தாகம் தீர்க்கும் நுங்கு
தண்ணீர் போல நுங்கு
தேகச் சூடு நீங்கச்
செய்யும் சின்ன நுங்கு!

நுங்கை வெட்டித் தின்றேன்
நுங்கு வண்டி செய்தேன்
நுங்கு வண்டி செய்தே
நுட்பம் ஒன்றைக் கண்டேன்!

**- செல்ல கணபதி**

**நன்றி : பிறந்தநாள்**

**செயற்பாடு 5**

- மாணவர்களை வட்டமாக அமரச் செய்து ‘‘வழி காண்பேன்’’ என்ற பாடலை அறிமுகம் செய்யுங்கள்.

## வழி காண்பேன்

ஒரு மரமேனும் நான் நட்டு - என்
உயிரைப் போல பேணிடுவேன்!
ஒரு வர்க் கேனும் சிறு உதவி - நான்
உள்ளன்போடு செய்திடுவேன்!

காகம் வந்து கரைந்திட்டால் - நான்
கைப்பிடிச் சோறு வைத்திடுவேன்!
தாகம் என்று வருவோர்க்கு - நான்
தண்ணீர் தந்து மகிழ்ந்திடுவேன்!

படிப்பறி வில்லா மாந்தர்க்கு - என்
படிப்பால் நன்மை புரிந்திடுவேன்!
துடிக்கும் ஏழை துயர் துடைக்க - நான்
தூங்கா திருந்து வழிகாண்பேன்!

**- முத்து**

**நன்றி : பிள்ளைப்பாடல்கள்**

செயற்பாடு 6

- மாணவர்களுக்கு **ஆற்றங்கரையும் அரசமரமும்** என்ற கதையை இரசனையுடன் கூறுங்கள். மாணவர்கள் கவனமாகச் செவிமடுக்கின்றார்களா என அவதானியுங்கள்.

**எடுத்துக்காட்டு:**

**ஆற்றங்கரையும் அரசமரமும்**

மரங்கள் அடர்ந்த ஒரு காடு இருந்தது. அந்தக் காட்டின் இடையே ஓர் ஆறு ஓடிக்கொண்டிருந்தது. அந்த ஆற்றங்கரையில் ஒரு பெரிய அரசமரம் நின்றது.

ஆற்றிலிருந்து தொலைவில் நின்ற மரங்களுக்கெல்லாம் மழை பெய்யும்போதுதான் ஏராளமான நீர் கிடைக்கும். மற்றைய காலங்களில் அவை தரையில் மிக ஆழத்திற்குத் தங்கள் வேரை நீட்டி, அங்குள்ள ஈரத்தைத்தான் இழுத்துக்கொள்ள வேண்டும்.

ஆற்றங்கரையில் இருந்த அரசமரத்திற்கோ ஆண்டு முழுவதும் தண்ணீருக்குக் குறைவில்லை. வண்டல் கலந்து வந்த நீர், அரசமரத்திற்கு வலிவையும் பொலிவையும் கொடுத்தது. அரசமரம் அகன்று பெருத்து வானுறவோங்கித் தலைநிமிர்ந்து பூரிப்பாக நின்றது.

அரசமரம் மற்றைய மரங்களைப் பார்த்து ‘‘நான் உங்களுக்கெல்லாம் தலைவன்!’’ என்று கூறியது.

மற்றைய மரங்கள் பேசாதிருந்தன. ஆற்றின் வளத்தால் அதிக நலம் பெற்ற அரசமரம் அகங்காரத்தோடு பேசுவதை அவற்றால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏற்றுக் கொள்ளாமலும் இருக்க முடியவில்லை. ஆகவேதான் அவை பேசாமல் நின்றன.

ஒருநாள் எங்கோ தொலைவில் உள்ள ஒரு மலையில் மழை பொழிந்தது. தொடர்ந்து பெருமழை பெய்தபடியால் ஆறு பெருக்கெடுத்தது.

வெள்ளம் பெருகி ஓடி வரும் ஆறு, தன் வேகத்தால் வழி நெடுகிலும் கரையை அரித்துக்கொணடே வந்தது. அரசமரம் இருந்த இடமும் அரிப்பெடுத்துக் கரைந்துவிட்டது.

மண் கரையக் கரைய அரசமரத்தால் வேரூன்றி நிற்க முடியவில்லை. அப்படியே ஆற்றுக்குள் சாய்ந்தது. வெள்ளம் அரசமரத்தையும் அடித்துக்கொண்டு சென்றுவிட்டது.

‘‘**ஆற்றங்கரை வாழ்வு அவ்வளவுதான்!**’’ என்று கூறி மற்றைய மரங்கள் அரசமரத்திற்காகப் பரிதாபப்பட்டன.

- செவிமடுத்த கதையை மாணவர்கள் தனியாகவும் குழுவாகவும் கூறுவதற்கு வழிப்படுத்துங்கள்.

செயற்பாடு 7

- கீழே தரப்பட்டுள்ள **"நன்றி"** என்ற சிறிய கதையை மாணவர்களுக்குக் கூறுங்கள். விருப்புடனும் இரசனையுடனும் செவிமடுக்க ஊக்கப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு:**

## நன்றி




புள்ளிமான் ஒன்று தண்ணீர் குடிப்பதற்காக ஏரிக்குச் சென்றது.

அங்கே, தண்ணீரில் மிதந்து தத்தளித்துக் கொண்டிருந்த கட்டெறும்பைக் கண்டது.

கட்டெறும்பு புள்ளிமானைப் பார்த்து தன்னைக் காப்பாற்றும்படி கேட்டது.

இரக்கப்பட்ட புள்ளிமான் தன் காலைத் தண்ணீரில் மிதந்த கட்டெறும்பின் அருகில் வைத்தது.



கட்டெறும்பு மானின் காலில் ஏறிக் கரையேறியது.

கரையேறிய சில நிமிடங்களுக்குள் கட்டெறும்பு, புள்ளிமானின் காலைக் கடித்தது.

புள்ளிமான் வலி தாங்க முடியாமல் அவ்விடத்தை விட்டு வேகமாக ஓடியது.

புள்ளி மானுக்கு கட்டெறும்பு கடித்ததற்கான காரணம் புரியவில்லை.

சிறிது நேரத்தின் பின்னர் புள்ளிமான் நிற்கும் இடத்தைக் கட்டெறும்பு சென்றடைந்தது.

புள்ளிமான் கட்டெறும்பைப் பார்த்து ''உன்னைக் காப்பற்றியதற்கு நீ எனக்கு காட்டிய நன்றிக்கடன் இதுதானா?'' என்று பரிதாபக் குரலில் கேட்டது.

அதற்குக் கட்டெறும்பு ''நான் அந்த அளவுக்கு மோசமானவன் இல்லை. எனக்கும் நன்றி உண்டு. நான் உன்னைக் கடித்திருக்காவிட்டால் நீ இவ்வளவு தூரம் ஓடி வந்திருக்கமாட்டாய். அருகிலிந்த புதரில் மறைந்திருந்த சிறுத்தைப்புலி உன்னைப் பிடித்திருக்கும்!'' என்று கூறியது.

புள்ளிமான் கட்டெறும்பைப் பார்த்து ''உன் மனதை புண்படுத்தியதற்காக மன்னித்துக் கொள். என்னைக் காப்பற்றியதற்கு எனது மனமார்ந்த நன்றி கள்'' என்று சோகமாகக் கூறியது.

மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த கட்டெறும்பு **''என்னைத் தண்ணீரில் இருந்து காப்பற்றியதற்கு இதயங்கனிந்த நன்றிகள்''** என்று கூறி விடைபெற்றுச் சென்றது.

- இக்கதையை மாணவர்கள் இரசனையுடன் கூறுவதற்கு ஆர்வமூட்டுங்கள். எல்லா மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- கதை கூற முன்வராத மாணவர்களை ஊக்கப்படுத்தி கதை கூற வழிப்படுத்துங்கள். இடர்ப்படும் மாணவர்களுக்கு அச் சந்தர்ப்பத்திலேயே உதவுங்கள்.

செயற்பாடு 8

- மாணவர்களைச் சோடிகளாக்குங்கள். பின்வரும் உரையாடல் அட்டையைப் பிரதி எடுத்து எல்லா மாணவர்களுக்கும் வழங்குங்கள். உரையாடலை உரையாடிக் காட்டுங்கள். அதன் பின்னர் மாணவர்களுக்கு உரையாடலைச் சொல்லிக் கொடுங்கள். மாணவர்கள் பயிற்சி பெற்ற பின்னர் இருவர் இருவராக உரையாட வழிப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு:*

## உரையாடல் அட்டை

**(தாத்தா பேரன் உரையாடல்)**

**தாத்தா** : ஏதோ கேட்க வேண்டும் என்றாயே கேள்.

**பேரன்** : காகிதத்தைக் கண்டு பிடித்தது யார் தாத்தா?

**தாத்தா** : காகிதம் சீனாவில் தான் கண்டுபிடிக்கப்பட்டது. காகிதத்தைக் கண்டறிந்தவர் யார் என்று கேட்டால், ஒருவருடைய பெயரைச் சொல்வது சிரமம்.

**பேரன்** : ஏன் தாத்தா?

**தாத்தா** : சீனாவில் பல தலைமுறைகளில் வெவ்வேறு நபர்கள் முதன் முறையாகத் தயாரித்திருக்கின்றார்கள் என்கிறார்கள். இவர்களுள் தனித்துவமாகத் தெரியும் பெயர் சாய்லூன்.

**பேரன்** : புரியும்படி சொல்லுங்கள் தாத்தா.

**தாத்தா** : சாய்லூனுக்கு முன்பே காகிதத்தை யாராவது அரைகுறையாகக் கண்டு பிடித்திருக்கலாம். ஆனால் பரவலாக இன்று பயன்படுத்தப்படும் காகிதத் தயாரிப்பு வழிமுறைகளை முதலில் வெளிச்சத்திற்கு கொண்டு வந்தவர் சாய்லூன் அவர்களே.

**பேரன்** : சாய்லூன் எப்படிக் காகிதத்தைத் தயாரித்தார் தாத்தா.

**தாத்தா** : மரப்பட்டைகளை மிகச் சிறிய துண்டுகளாக வெட்டிக் கொண்டார். அத்துடன் சில குறிப்பிட்ட செடிகளை மட்டுமல்ல கிழிந்த துணிகளை எல்லாம் போட்டுத் தண்ணீர் சேர்த்து நன்றாகக் அரைத்துக் கூழாக்கினார்.

**பேரன்** : கூழாக்கி என்ன செய்தார் தாத்தா?

**தாத்தா** : அதைத் தோசை போல் தட்டையாக ஊற்றிப் பரவலாக்கி மேலே நன்கு அழுத்தி ஈரப்பதத்தை நீக்கினார்.

**பேரன்** : அதற்குப் பிறகு என்ன செய்தார் தாத்தா?

**தாத்தா** : வெயிலில் காய வைத்தார். காகிதம் தயார்.

**பேரன்** : அதன் பிறகு அந்தக் காகிதங்கள் சீனாவிலிருந்து உலகின் எல்லாப் பகுதிகளுக்கும் பரவத் தொடங்கியதா தாத்தா?

**தாத்தா** : அவை ஐரோப்பாவை வந்தடைந்ததன் பின்பு மிகப்பெரிய புரட்சியைக் கொண்டு வந்தது.

**பேரன்** : இன்று காகிதத்தைப் பற்றி அறிந்து கொண்டேன். நன்றி தாத்தா.

*குறிப்பு:* *வினாக்களைக் கேட்டு மாணவர்கள் உரையாடலைக் கிரகித்தார்களா என்பதை உறுதி செய்க.*

**செயற்பாடு 9**

- மாணவர்களைப் பின்வரும் பாடலைச் செவிமடுத்து, பிராணிகள் போன்று முகமூடி அணிந்து ஆடிப் பாடிப், போலச் செய்துகாட்ட வழிப்படுத்துங்கள்.

  ***எடுத்துக்காட்டு:*** போலச் செய்வதற்கான பாடல்

### பிராணிகளின் கொண்டாட்டம்

சிங்கத்தின் வீட்டில் கொண்டாட்டம்
சிறுத்தைகள் எல்லாம் பெருங்கூட்டம்

சிலந்தி கட்டும் வெள்ளை
குரங்கு கட்டும் மாலை

ஒட்டகம் கொட்டகை ஆக்கும்
சிவிங்கி சரங்கள் தூக்கும்

கரடி கொட்டும் மேளம்
குதிரை தட்டும் தாளம்

பாட்டுப் பாடும் குயில்கள்
நாட்டியம் ஆடும் மயில்கள்

பன்னீர் தெளிக்கும் யானை
சந்தனம் கொடுக்கும் பூனை

மான்கள் பாயை விரிக்கும்
முயல்கள் அழைத்துச் சிரிக்கும்.

**செயற்பாடு 10**

- மாணவர்களுக்குச் சிரிக்கவும் சிந்திக்கவும் கூடிய விகடத் துணுக்குகளைச் சுவைபடக் கூறுங்கள். அவ்விகடத் துணுக்குகளை மீண்டும் அவர்கள் தமது மொழிநடையில் இரசனையுடன் கூற ஊக்கப்படுத்துங்கள்.

  *எடுத்துக்காட்டு:*

### விகடத் துணுக்குகள்

**விகடத் துணுக்கு -1**

1. ''அப்பா, நான் இன்று பன்னிரண்டு மணி வரை படிக்கப் போகிறேன்..''
   ''நல்லது. எப்பொழுது நீ ஆரம்பிக்கப் போகிறாய்? ''
   ''பதினொன்று ஐம்பத்தைந்திற்கு!.''

**விகடத் துணுக்கு - 2**

2. ''தம்பி, சின்ன முள் எதிலே இருக்கின்றது. பெரிய முள் எதிலே இருக்கின்றது.''
   ''இரண்டுமே கடிகாரத்திலே தான் இருக்கின்றது அண்ணா!''

**விகடத் துணுக்கு - 3**

3. மகள்: "அப்பா நான் அண்ணனை விட, கணிதத்தில் இரண்டு புள்ளிகள் தான் குறைவு."

அப்பா: "அப்படியா, மிகவும் நன்று. அண்ணன் எத்தனை புள்ளிகள் வாங்கினான்?"

மகள் : "இரண்டு புள்ளிகள்."

**விகடத் துணுக்கு - 4**

4. "ஓட்டப்போட்டியில் முதல் பரிசு பெற்றதாகக் கேள்விப்பட்டோம். உங்கள் வெற்றிக்குப் பின்னால் இருந்தவர்கள் யார்? "

"எனக்குப் பின்னால் ஓடி வந்தவர்கள் தான்."

**விகடத் துணுக்கு - 5**

5. **பாபு :** "கழுதைக்குப் பிடித்த ரொட்டி எது? "

**கோபு :** " எனக்குத் தெரியாது. நீயே கூறு"

**பாபு :** "சுவரொட்டி!"

**விகடத் துணுக்கு - 6**

6. "எவ்வளவு பெரிய ஆபத்து வந்தாலும் யானை, குதிரை எல்லாம் கத்தவே கத்தாது. ஏன் என்று கூறு? "

"யானை பிளிறும், குதிரை கனைக்கும்."

**விகடத் துணுக்கு - 7**

7. "ஆனி முடிந்தால் ஆடி வரும் "

"ஆடி முடிந்தால் என்ன வரும்? "

"கால் வலிக்கும்!"

- இவ்வாறான நகைச்சுவைத் துணுக்குகளை மாணவர்கள் சுயமாக விருப்புடனும் இரசனையுடனும் கூறுவதற்கு வழிப்படுத்துங்கள்.

**கணிப்பீடு:**

- பாடல்களை விருப்புடனும் இரசனையுடனும் செவிமடுத்தல் / பாடுதல்
- கதைகளை உணர்வுபூர்வமாகத் தமது பாணியில் கூறுதல்
- உரையாடலைச் செவிமடுத்தல்/உரையாடலில் ஈடுபடல்
- முகமூடி அணிந்து போலச் செய்தல்
- விகடத்துணுக்குகளை விருப்புடனும் இரசனையுடனும் செவிமடுத்தல்/சுவைபடக் கூறுதல்

போன்றவற்றைக் கணிப்பீடு செய்க.

**தேர்ச்சிகள்:**

R3 விருப்புடனும் இரசனையுடனும் வாசிப்பார்.

W3 விருப்புடனும் இரசனையுடனும் எழுதுவார் / வரைவார்.

**உள்ளடக்கம்:**

- சிறுவர் பாடல்கள்
- சிறுவர் கதைகள்
- உரையாடல்கள்
- நாடகங்கள்
- சித்திரக்கதைகள்
- விகடத்துணுக்குகள்
- சித்திரங்கள்

**கற்றற்பேறுகள்:**

- பாடல்கள், கவிதைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களை வாசித்துப் புரிந்து கொள்வார். பாடலின் கருத்தினை அறிந்துகொள்ள முனைவார்.
- சிறுவர் கதைகளில் வரும் கதாபாத்திரங்கள், பயன்படுத்தப்பட்டுள்ள முக்கிய சொற்கள், மாணவரைக் கவர்ந்த சிறிய உரையாடல் வரிகள் ஆகியவற்றைப் பிழையின்றி எழுதுவார். விருப்புடனும் இரசனையுடனும் வாசிப்பார். வினாக்களுக்கு விடையெழுதுவார்.
- உரையாடலில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சொற்களை/ வாக்கியங்களை விருப்புடனும் இரசனையுடனும் எழுதுவார்.
- போலச் செய்தலின்போது தெரிவு செய்த கதாபாத்திரங்களின் பெயர்களை நினைவுபடுத்திப் பிழையின்றி எழுதி வாசிப்பார்.
- நாடகத்தை வாசித்து, பயன்படுத்தப்பட்ட முக்கிய சொற்களை,வாக்கியங்களை எழுதுவார்/ வாசிப்பார். வினாக்களுக்கு விடையளிப்பார்.
- சித்திரக்கதைகளை விருப்புடனும் இரசனையுடனும் வாசித்து விளங்கி மற்றையவர்களுக்குக்குக் கூறுவார். சித்திரக்கதையுடன் தொடர்புடைய வாக்கியங்களை எழுதுவார்.
- தாம் இரசித்த விகடத்துணுக்குகளை எழுதுவார். மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வார்.
- விருப்புடனும் இரசனையுடனும் செவிமடுத்த பாடல்கள், கதைகளைச் சித்திரமாக வரைவார்.

**வளங்கள்:**

- பாடல் அட்டைகள், கதை அட்டைகள், வாக்கிய அட்டைகள், உரையாடல் அட்டைகள், சித்திரக்கதை அட்டைகள், விகடத்துணுக்கு அட்டைகள், செருகல் அட்டைகள், நிறப் பென்சில்கள், வண்ணக் கட்டிகள் (Pastel).

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்:**

**செயற்பாடு 1**

- தரம் மூன்றில் கற்ற பாடல்களை மாணவர்களுக்கு நினைவுபடுத்திப் பாட ஆர்வம் ஊட்டுங்கள். மாணவர்களுடன் சேர்ந்து பாடுங்கள். அதன் பின்னர் **"எங்கும் கேட்டிடலாம்"** என்ற தலைப்பில் தரப்பட்டுள்ள பாடலை வாசித்துக்காட்டுங்கள். அதன் பின்னர் மாணவர்களுடன் சேர்ந்து வாசியுங்கள்.

*எடுத்துக்காட்டு:*

**எங்கும் கேட்டிடலாம்**

**படி 1**




ஓரிடத்தில் இருந்திடாமல்
.................... கேட்டிடலாம்
பாடகரைப் பார்த்திடாமல்
................... கேட்டிடலாம்



பாட்டுக்களைக், ஓடி ஓடிக்

**படி 2**



வாத்தியங்களை இசைத்திடாமல்
..................... கேட்டிடலாம்.
ஊரெங்கும் போய் வராமல்
...................... கேட்டிடலாம்.



ஊர்ப் பதினம், வாத்திய இசை

**படி 3**



அறிஞர்களைச் சந்திக்காமல்
.................. கேட்டிடலாம்.
உலகமெங்கும் சுற்றிடாமல்
...................... கேட்டிடலாம்.



உலகச் செய்தி, அறிவுரைகள்

**படி 4**



விழாக்களுக்குச் சென்றிடாமல்
.................... கேட்டிடலாம்.
கேட்டிடலாம் கேட்டிடலாம்
.................... இருந்திடலாம்.



கேட்டுக்கொண்டே, வர்ணனைகள்

- நான்கு, நான்கு அடிகளாக வாசித்துக்காட்டுங்கள். மாணவர்களையும் வாசிக்க ஆர்வமூட்டுங்கள். அதன் பின்னர் கீழ்வருவது போன்ற பயிற்சியைத் தயாரித்து, பிரதியெடுத்து மாணவர்களுக்கு வழங்கி பாடலடிகளில் விடுபட்டுள்ள சொற்களைப் பூர்த்திசெய்ய வழிப்படுத்துங்கள். விடுபட்டுள்ள சொற்களைத் தனியாக வழங்குங்கள்.
- ஏற்கனவே படித்த பாடலடிகளைச் சரியாகப் பூர்த்திசெய்வதை உறுதிப்படுத்துங்கள்.
- பாடலுடன் தொடர்புடைய சித்திரங்களைச் சுயமாக வரைய வழிப்படுத்துங்கள்.

செயற்பாடு 2

- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். ''**குழந்தைகளே கேளீர்**'' என்ற பாடலை மாணவர்களுடன் சேர்ந்து வாசியுங்கள். எழுமாறாக மாணவர்களை அழைத்து பாடலடிகளைச் சரியாக உச்சரித்து இரசனையுடன் வாசிக்க வழிப்படுத்துங்கள். கீழ்வரும் பயிற்சிகளைத் தயாரித்து, பிரதியெடுத்து எல்லா மாணவர்களுக்கும் வழங்குங்கள். அதன் பின்னர் பாடலடிகளில் விடுபட்டுள்ள சொற்களைக் கட்டத்திலிருந்து தெரிவுசெய்து எழுத ஆர்வமூட்டுங்கள்.

*எடுத்துக்காட்டு:*

| |
|---|
| ஆசையுடன், நீர்ச்சிரங்கு, சொல்லைத், வெள்ளத்திலே, கதறியழ, வழுக்கி, மழைக்காலம், செருப்புமிட்டு, வழியருகே, குடுகுடென |

**குழந்தைகளே கேளீர்**

குடைபிடித்து ........................
புத்தகமும் கொண்டு
........................ நடந்து வரும்
குழந்தைகளே கேளீர்

........................ வழி வழுக்கும்
மிகக் கவனம் மக்காள்
........................ வெள்ளமுண்டு
விலகி வர வேண்டும்.

........................ கல்லெறிந்து
விளையாட வேண்டாம்
வீண் சண்டையால் ........................
விழுந்தெழும்ப வேண்டாம்

கண்மணிகாள் ........................
காலில் வரும் கவனம்
கண்ணுறக்க மில்லாமற்
........................ நேரும்

அம்மா ........................ தட்டாமல்
ஆசிரியர்க் கடங்கி
........................ பள்ளியிலே
படித்துவர வேண்டும்.

- மாணவர்கள் சுயமாக அப்பியாசக் கொப்பியில் ''**குழந்தைகளே கேளீர்**'' என்ற பாடலின் அடிகளைப் பிழையின்றி எழுத ஊக்கமளியுங்கள்.
- பாடலுடன் தொடர்புடைய சித்திரங்களைச் சுயமாக வரைய வழிப்படுத்துங்கள்.
- பாடலுடன் தொடர்புடைய வினாக்களைக் கொடுத்து, விடை எழுதவும் வழிப்படுத்துங்கள்.

செயற்பாடு 3

- **"துணை"** என்ற பாடலடிகளைச் சுயமாக வாசிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். குழுவாகப் பாடலடிகளை உரத்து வாசிக்க வழிப்படுத்துங்கள். மாணவர்களிடம் மணல் வீடு கட்டிய அனுபவத்தினைக் கேட்டறியுங்கள். அதன் பின்னர் கரும்பலகையில் பாடலடிகளில் உள்ள சொற்களை நீக்கிவிட்டு புள்ளிக் கோடிட்டு எழுதுங்கள். மாணவர்கள் பாடலடிகளில் புள்ளிக் கோடிடப்பட்ட இடங்களில் வரவேண்டிய சொற்களைச் சுயமாகப் பூர்த்திசெய்து அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***

**துணை**

......................... துணை உயிராகும்
......................... துணை .........................

பாட்டுக்குத் துணை .........................
......................... துணை .........................

அரசுக்குத் துணை .........................
அருளுக்குத் துணை .........................

பொருளுக்குத் துணை .........................
......................... துணை .........................

- வினாக்களைக் கொடுத்து விடை எழுதும் பயிற்சியையும் வழங்குங்கள்.

செயற்பாடு 4

- மாணவர்களுக்கு '**நுங்கு வண்டி**' என்ற பாடலை அறிமுகம் செய்து கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்ய வழிப்படுத்துங்கள்.

**நுங்கு வண்டி**

சின்னச் சின்ன நுங்கு
......................... நுங்கு
தின்னத் தின்ன .........................
திகட்டி டாத நுங்கு!

......................... தீர்க்கும் நுங்கு
......................... போல நுங்கு
தேகச் சூடு நீங்கச்
செய்யும் சின்ன நுங்கு!

நுங்கை வெட்டித் ........................
நுங்கு ........................ செய்தேன்
நுங்கு வண்டி செய்தே
......................... ஒன்றைக் கண்டேன்

- நுங்கு வண்டி என்ற பாடலை மாணவர்கள் வாசித்துப் பாடியும் அபிநயத்தும் பயிற்சி பெற்ற பின்னர் பாடலடிகளைப் பூர்த்திசெய்யும் பயிற்சியை வழங்க வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.
- பாடலுடன் தொடர்புடைய சித்திரங்களைச் சுயமாக வரைந்து காட்சிப்படுத்த வழிப்படுத்துங்கள்.
- வினாக்களைக் கொடுத்து விடை எழுதும் பயிற்சியை வழங்குங்கள்.

**செயற்பாடு 5**

- **“வழி காண்பேன்”** என்ற பாடலைக் கணினி மூலம் எழுத்தமைப்புச் செய்து, பிரதியெடுத்து எல்லா மாணவர்களுக்கும் வழங்குங்கள். மாணவர்கள் வாசித்துப் பயிற்சி பெற ஊக்கப்படுத்துங்கள். அதன் பின்னர் பாடலில் சில பகுதிகளை நீக்கிக் கோடிட்டு பிரதி எடுத்து எல்லா மாணவர்களுக்கும் வழங்கி, விடுபட்ட இடங்களைப் பூர்த்தி செய்ய வழிப்படுத்துங்கள்.

**வழி காண்பேன்**

ஒரு மரமேனும் நான் நட்டு - என்
................................. போல பேணிடுவேன்!
ஒரு வர்க் கேனும் சிறு உதவி - நான்
................................. செய்திடுவேன்!

காகம் வந்து கரைந்திட்டால் - நான்
................................. சோறு வைத்திடுவேன்!
................................. என்று வருவோர்க்கு - நான்
தண்ணீர் தந்து மகிழ்ந்திடுவேன்!

படிப்பறி வில்லா மாந்தர்க்கு - என்
படிப்பால் ................................. புரிந்திடுவேன்!
துடிக்கும் ................................. துயர் துடைக்க - நான்
தூங்கா திருந்து .................................

- இப்பாடலைக் கவிதை நடையில் மாணவர்கள் வாசிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் அபிநயத்துடன் பாடி ஆட ஆர்வமூட்டுங்கள். பாடலடிகள் நன்கு பயிற்சி பெறும் வரை தனியாகவும் சோடியாகவும் குழுவாகவும் வகுப்பின் முன்னும் வாசித்தக் காட்ட உற்சாகப்படுத்துங்கள். அதன் பின்னர் பாடலடிகளைச் சுயமாகப் பூர்த்தி செய்யும் பயிற்சியை வழங்குங்கள்.

***குறிப்பு*** : இதுபோன்ற வேறு பாடல்களையும் அறிமுகம் செய்யும் சுதந்திரம் ஆசிரியருக்குண்டு.

செயற்பாடு 6

- ''ஆற்றங்கரையும் அரசமரமும்'' என்ற கதையை இரசனையுடன் மாணவர்கள் வாசிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் ஆசிரியர் கதையை இரசனையுடன் வாசித்துக்காட்ட வேண்டும். மீண்டும் மாணவர்களைச் சுயமாக வாசிக்க ஆர்வமூட்டுங்கள். மாணவர்களுடன் சேர்ந்து நீங்களும் வாசியுங்கள்.

**எடுத்துக்காட்டு:**

**ஆற்றங்கரையும் அரசமரமும்**

மரங்கள் அடர்ந்த ஒரு காடு இருந்தது. அந்தக் காட்டின் இடையே ஓர் ஆறு ஓடிக்கொண்டிருந்தது. அந்த ஆற்றங்கரையில் ஒரு பெரிய அரசமரம் நின்றது.

ஆற்றிலிருந்து தொலைவில் நின்ற மரங்களுக்கெல்லாம் மழை பெய்யும்போதுதான் ஏராளமான நீர் கிடைக்கும். மற்றைய காலங்களில் அவை தரையில் மிக ஆழத்திற்குத் தங்கள் வேரை நீட்டி, அங்குள்ள ஈரத்தைத்தான் இழுத்துக்கொள்ள வேண்டும்.

ஆற்றங்கரையில் இருந்த அரசமரத்திற்கோ ஆண்டு முழுவதும் தண்ணீருக்குக் குறைவில்லை. வண்டல் கலந்து வந்த நீர் அரசமரத்திற்கு வலிவையும் பொலிவையும் கொடுத்தது. அரசமரம் அகன்று பெருத்து வானுறவோங்கித் தலைநிமிர்ந்து பூரிப்பாக நின்றது.

அரசமரம் மற்றைய மரங்களைப் பார்த்து ''நான் உங்களுக்கெல்லாம் தலைவன்!'' என்று கூறியது.

மற்றைய மரங்கள் பேசாதிருந்தன. ஆற்றின் வளத்தால் அதிக நலம் பெற்ற அரசமரம் அகங்காரத்தோடு பேசுவதை அவற்றால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏற்றுக் கொள்ளாமலும் இருக்க முடியவில்லை. ஆகவேதான் அவை பேசாமல் நின்றன.

ஒருநாள் எங்கோ தொலைவில் உள்ள ஒரு மலையில் மழை பொழிந்தது. தொடர்ந்து பெருமழை பெய்தபடியால் ஆறு பெருக்கெடுத்தது.

வெள்ளம் பெருகி ஓடி வரும் ஆறு, தன் வேகத்தால் வழி நெடுகிலும் கரையை அரித்துக்கொண்டே வந்தது. அரசமரம் இருந்த இடமும் அரிப்பெடுத்துக் கரைந்துவிட்டது.

மண் கரையக் கரைய அரசமரத்தால் வேரூன்றி நிற்க முடியவில்லை. அப்படியே ஆற்றுக்குள் சாய்ந்தது. வெள்ளம் அரசமரத்தையும் அடித்துக்கொண்டு சென்றுவிட்டது.

''ஆற்றங்கரை வாழ்வு அவ்வளவுதான்!'' என்று சொல்லி மற்றைய மரங்கள் அரசமரத்திற்காகப் பரிதாபப்பட்டன.

- மாணவர்கள் சுயமாக வாசித்த பின்னர் சோடி சேர்ந்து மாணவர்களை வாசிக்க ஊக்கப்படுத்துங்கள்.
- இக் கதையைச் சித்திரமாக வரைய மாணவர்களை ஊக்கப்படுத்துங்கள். இடர்ப்படும் மாணவர்களுக்கு அச் சந்தர்ப்பத்திலேயே உதவுங்கள்.
- அதன்பின் கதை தொடர்பான வினாக்களை வழங்கி விடையளிக்க வழிப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு:**

**வினாக்கள்**

1. ஆற்றங்கரையில் இருந்த மரம் எது?
2. எவ்வாறான நீர் அரசமரத்திற்கு வலிவையும் பொலிவையும் கொடுத்தது?
3. அரசமரம் அகங்காரத்தோடு என்ன கூறியது?

**செயற்பாடு 7**

- 'நன்றி' என்ற கதையைப் பிரதி எடுத்து எல்லா மாணவர்களுக்கும் வழங்குங்கள். அக்கதையை மாணவர்கள் சுயமாக வாசிக்கவும் சோடி சேர்ந்து வாசிக்கவும் வழிப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு:**

**நன்றி**




புள்ளிமான் ஒன்று தண்ணீர் குடிப்பதற்காக ஏரிக்குச் சென்றது.

அங்கே, தண்ணீரில் மிதந்து தத்தளித்துக் கொண்டிருந்த கட்டெறும்பைக் கண்டது.

கட்டெறும்பு புள்ளிமானைப் பார்த்து தன்னைக் காப்பாற்றும்படி கேட்டது.

இரக்கப்பட்ட புள்ளிமான் தன் காலைத் தண்ணீரில் மிதந்த கட்டெறும்பின் அருகில் வைத்தது.

கட்டெறும்பு மானின் காலில் ஏறிக் கரையேறியது.



கரையேறிய சில நிமிடங்களுக்குள் கட்டெறும்பு, புள்ளிமானின் காலைக் கடித்தது.

புள்ளிமான் வலி தாங்க முடியாமல் அவ்விடத்தை விட்டு வேகமாக ஓடியது.

புள்ளி மானுக்கு கட்டெறும்பு கடித்ததற்கான காரணம் புரியவில்லை.

சிறிது நேரத்தின் பின்னர் புள்ளிமான் நிற்கும் இடத்தைக் கட்டெறும்பு சென்றடைந்தது.

புள்ளிமான் கட்டெறும்பைப் பார்த்து ''உன்னைக் காப்பற்றியதற்கு நீ எனக்கு காட்டிய நன்றிக்கடன் இதுதானா? '' என்று பரிதாபக் குரலில் கேட்டது.

அதற்குக் கட்டெறும்பு ''நான் அந்த அளவுக்கு மோசமானவன் இல்லை. எனக்கும் நன்றி உண்டு. நான் உன்னைக் கடித்திருக்காவிட்டால் நீ இவ்வளவு தூரம் ஓடி வந்திருக்கமாட்டாய். அருகிலிந்த புதரில் மறைந்திருந்த சிறுத்தைப்புலி உன்னைப் பிடித்திருக்கும்!'' என்று கூறியது.

புள்ளிமான் கட்டெறும்பைப் பார்த்து'' உன் மனதை புண்படுத்தியதற்காக மன்னித்துக் கொள். என்னைக் காப்பற்றியதற்கு எனது மனமார்ந்த நன்றி கள்'' என்று சோகமாகக் கூறியது.

மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த கட்டெறும்பு ''என்னைத் தண்ணீரில் இருந்து காப்பற்றியதற்கு இதயங்கனிந்த நன்றிகள்'' என்று கூறி விடைபெற்றுச் சென்றது.

- இக் கதையைச் சித்திரமாக சுயமாக வரைய மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- இருவர் இருவராக மாணவர்கள் வாசித்த பின்னர் சுயமாக, எல்லா மாணவர்களையும் வாசிக்க ஊக்கப்படுத்துங்கள். எழுமாறாக மாணவர்களை அழைத்து வகுப்பின் முன் வாசிக்க ஆர்வமூட்டுங்கள். அதன்பின் கதை தொடர்பான வினாக்களை வழங்கி விடையளிக்க வழிப்படுத்துங்கள்.

செயற்பாடு 8

- கீழே தரப்பட்டுள்ள உரையாடல் அட்டையை எல்லா மாணவர்களுக்கும் பிரதி எடுத்து, வழங்குங்கள். மாணவர்கள் சோடி சேர்ந்து உரையாடலை வாசிக்க வழிப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு:**

**தாத்தா பேரன் உரையாடல்**

**தாத்தா** : ஏதோ கேட்க வேண்டும் என்றாயே கேள்.

**பேரன்** : காகிதத்தைக் கண்டு பிடித்தது யார் தாத்தா?

**தாத்தா** : காகிதம் சீனாவில் தான் கண்டுபிடிக்கப்பட்டது. காகிதத்தைக் கண்டறிந்தவர் யார் என்று கேட்டால், ஒருவருடைய பெயரைச் சொல்வது சிரமம்.

**பேரன்** : ஏன் தாத்தா?

**தாத்தா** : சீனாவில் பல தலைமுறைகளில் வெவ்வேறு நபர்கள் முதன் முறையாகத் தயாரித்திருக்கின்றார்கள் என்கிறார்கள். இவர்களுள் தனித்துவமாகத் தெரியும் பெயர் சாய்லூன்.

**பேரன்** : புரியும்படி சொல்லுங்கள் தாத்தா.

**தாத்தா** : சாய்லூனுக்கு முன்பே காகிதத்தை யாராவது அரைகுறையாகக் கண்டு பிடித்திருக்கலாம். ஆனால் பரவலாக இன்று பயன்படுத்தப்படும் காகிதத் தயாரிப்பு வழிமுறைகளை முதலில் வெளிச்சத்திற்கு கொண்டு வந்தவர் சாய்லூன் அவர்களே.

**பேரன்** : சாய்லூன் எப்படிக் காகிதத்தைத் தயாரித்தார் தாத்தா.

**தாத்தா** : மரப்பட்டைகளை மிகச் சிறிய துண்டுகளாக வெட்டிக் கொண்டார். அத்துடன் சில குறிப்பிட்ட செடிகளை மட்டுமல்ல, கிழிந்த துணிகளை எல்லாம் போட்டுத் தண்ணீர் சேர்த்து நன்றாகக் அரைத்துக் கூழாக்கினார்.

**பேரன்** : கூழாக்கி என்ன செய்தார் தாத்தா?

**தாத்தா** : அதைத் தோசை போல் தட்டையாக ஊற்றிப் பரவலாக்கி மேலே நன்கு அழுத்தி ஈரப்பதத்தை நீக்கினார்.

**பேரன்** : அதற்குப் பிறகு என்ன செய்தார் தாத்தா?

**தாத்தா** : வெயிலில் காய வைத்தார். காகிதம் தயார்.

**பேரன்** : அதன் பிறகு அந்தக் காகிதங்கள் சீனாவிலிருந்து உலகின் எல்லாப் பகுதிகளுக்கும் பரவத் தொடங்கியதா தாத்தா?

**தாத்தா** : அவை ஐரோப்பாவை வந்தடைந்ததன் பின்பு மிகப்பெரிய புரட்சியைக் கொண்டு வந்தது.

**பேரன்** : இன்று காகிதத்தைப் பற்றி அறிந்து கொண்டேன். நன்றி தாத்தா.

- குழுவாக மாணவர்கள் உரையாடிய பின்னர் வினாக்களை வழங்கி விடையளிக்க வழிப்படுத்துங்கள்.

செயற்பாடு 9:

- மாணவர்களுக்கு சிறிய (ஒரு பக்க) நாடகங்களை அறிமுகம் செய்யுங்கள். மாணவர்கள் நாடகத்தை வாசிப்பதற்காக எல்லா மாணவர்களுக்கும் பிரதி எடுத்துக்கொடுங்கள்.

**எடுத்துக்காட்டு: நாடகம் - பொதுக் கூட்டம்**

**கதாபாத்திரங்கள்:**

**சிங்கம், யானை, முயல், ஓநாய், நரி**

**சிங்கம்** : இன்று பொதுக்கூட்டத்தைக் கூட்டியுள்ளேன். உங்கள் பிரச்சினைகளைக் கூறுங்கள்.

**யானை** : காட்டில் எங்களால் வாழ முடியவில்லை.

**சிங்கம்** : ஏன்! அப்படிச் சொல்கின்றீர்?

**யானை** : நரியார் எங்களை ஒற்றுமையாக வாழ விடுகிறாரில்லை.

**சிங்கம்** : ஆச்சரியமாக இருக்கிறதே!

**முயல்** : சிங்கராசாவே! எங்களுக்குள் பிரச்சினைகளை உருவாக்குகிறார்.

**ஓநாய்** : நாங்கள் ஒற்றுமையாக இருந்தால் தனக்குப் பாதிப்பு என்று நினைத்துத் தந்திர விளையாட்டு விளையாடுகிறார்.

**சிங்கம்** : அவருடைய நடவடிக்கையை நானும் கவனித்துக்கொண்டு தான் வருகிறேன். அதுசரி நீங்கள் ஏன் நரியின் சொல்லைக் கேட்கிறீர்கள்?

**ஓநாய்** : அவர் உதவி செய்வது போல வந்து பிரச்சினைகளை உருவாக்குகின்றார்.

**சிங்கம்** : நரியாரைப் பற்றித் தெரிந்த பிறகும் நீங்கள் ஏன் அவருடைய கதையைக் கேட்கிறீர்கள்.

**யானை** : உதவி செய்வது போல் வந்து ஒற்றுமையைக் குலைக்கிறார்.

**சிங்கம்** : உடனே நரியாரை அழைத்து வாருங்கள்.

**நரி** : சிங்கராசாவே! என்னை அழைத்தீர்களா?

**சிங்கம்** : ஆம்

**நரி** : நான் ஏதும் தங்களுக்கு உதவ வேண்டுமா?

**சிங்கம்** : நீர் எனக்கு உதவி செய்யத் தேவையில்லை. உபத்திரவம் செய்யாமல் இருந்தால் போதும்.

**நரி** : அரசே நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை.

**சிங்கம்** : புரியவில்லையா? புரியாதது போன்று நடிக்கின்றீரா?

**நரி** : நான் நடிக்கின்றேனா! தவறு அரசே தவறு.

**சிங்கம்** : உமது கபட புத்தி எனக்கு நன்றாகத் தெரியும். எனவே என்னிடம் உம்முடைய ஏமாற்றுவித்தை பலிக்காது.

**நரி** : அரசே என்னைப் பார்த்தா இப்படிக் கூறுகின்றீர்கள். நான் நல்லவன். எல்லோருக்கும் உதவி செய்பவன்.

**சிங்கம்** : நீர் நல்லவனா! நீர்தான் இங்கு வாழும் மிருகங்களின் ஒற்றுமையைக் குலைக்கின்றீர்.

**நரி** : அரசே என்னைப் பற்றி யாரோ உங்களிடம் பிழையாகக் கூறிவிட்டார்கள்.

**சிங்கம்** : எல்லாம் சரியாகத்தான் கூறியுள்ளார்கள். நான் இங்கு வாழும் மிருகங்களின் நன்மை கருதி இந்தக் காட்டை விட்டே ஒதுக்கி வைக்கிறேன். இனி நீர் இந்தக் காட்டுக்குள் நடமாடக்கூடாது. என் உத்தரவை மீறினால் கடுமையான தண்டனையை நான் வழங்குவேன்.


**நரி** : அரசே, என்னை மன்னித்து விடுங்கள். இனிமேல் இவ்வாறான தவறை நான் செய்யமாட்டேன். தயவு செய்து எனது தண்டனையை மீள் பரிசீலனை செய்யுங்கள்.

- மேற்குறிப்பிட்ட நாடகத்தை மாணவர்கள் உரத்து வாசிக்க வழிப்படுத்துங்கள். வாசித்து முடிந்ததும் குழுவாக நடிக்க ஆர்வமூட்டுங்கள். அதன் பின்னர் நாடகம் தொடர்பாக வினாக்களுக்கு அப்பியாசக் கொப்பியில் விடையளிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் சிங்கம், நரியின் தண்டனையை மீள் பரிசீலனை செய்ததா எனக் கேட்டு அவர்களின் கற்பனையாற்றலை வெளிக் கொணருங்கள்.

**செயற்பாடு 10:**

- மாணவர்களுக்கு கீழே தரப்பட்டுள்ளவாறான சித்திரக் கதையை அறிமுகம் செய்து இரசனையுடன் வாசிக்கும் ஆர்வத்தை மாணவரிடையே விருத்தி செய்யுங்கள். எல்லா மாணவர்களுக்கும் சித்திரக் கதையைப் பிரதி எடுத்துக் கொடுங்கள். சுயமாக மாணவர்கள் சித்திரக்கதையை வாசிக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.

**எடுத்துக்காட்டு:**




**எடுத்துக்காட்டு: 2**

- சித்திரக் கதை தொடர்பாக மாணவர்களிடம் வினாக்களை வினவுங்கள். வினாக்களுக்கான விடைகளை அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள்.

எடுத்துக்காட்டு: சித்திரக் கதை -2

# மலர் மணம்!



- சித்திரக் கதை தொடர்பாக மாணவர்களிடம் வினாக்களை வினவுங்கள். வினாக்களுக்கான விடைகளை அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள்.

**செயற்பாடு 11:**

- மாணவர்களுக்கு விருப்புடனும் இரசனையுடனும் வாசிக்கக்கூடிய விகடத்துணுக்குகளை அறிமுகம் செய்யுங்கள்.
- எல்லா மாணவர்களுக்கும் விகடத்துணுக்குகளைப் பிரதி எடுத்து வழங்குங்கள். இரசனையுடன் சோடி சேர்த்து வாசித்து மகிழ ஆர்வமூட்டுங்கள்.

**எடுத்துக்காட்டு:**



**"காகிதத்தில் கப்பல் செய்து, மழைத் தண்ணீரில் விட்டாயே, மற்றவர்களுடைய கப்பல் எல்லாம் மிதக்குது... உன்னுடைய கப்பல் மட்டும் மூழ்கி விட்டதே? "**

**"நான் விட்டதே நீர்மூழ்கிக் கப்பல்தானே!"**

**குமார்** : "ஐயா சம்பளத்தைக் கேட்டால் பலாப்பழத்தைத் தருகின்றீர்களே? "

**முதலாளி** : "நான் முதலிலேயே சம்பளத்தை சுளைளையாகத் தருவேன் என்று கூறியதை மறந்துவிட்டாயா? "

- பத்திரிகைகள், சஞ்சிகைகள், இணையத்தளங்கள் போன்றவற்றில் இருந்து மாணவர்களின் வயது மட்டத்திற்கேற்பப் பொருத்தமான விகடத்துணுக்குகளைப் பிரதி எடுத்து வந்து அப்பியாசக் கொப்பியில் ஒட்டி, ஏனைய மாணவர்களுக்கு வாசித்துக் காட்டுமாறு ஊக்கப்படுத்துங்கள். சுயமாக விகடத்துணுக்குகளை ஆக்கவும் ஆர்வமூட்டுங்கள்.

**குறிப்பு:** சித்திரக் கதைகள், விகடத்துணுக்குகளை மாணவர்கள் வாசிப்பதன் ஊடாக வாசிப்பின் மீதான ஆர்வத்தை வளர்க்க முடியும் என்பதனை நினைவிற் கொள்ளுங்கள்.

**கணிப்பீடு:**

- பாடல்களை இரசனையுடன் வாசித்தல் / எழுதுதல்
- கதையில் வரும் உரையாடல்களை விருப்புடனும் இரசனையுடனும் வாசித்தல் / எழுதுதல்
- உரையாடல்களை வாசித்தல் / எழுதுதல்
- நாடகங்களை விருப்புடன் வாசித்தல் / எழுதுதல்
- சித்திரக் கதைகளை விருப்புடனும் இரசனையுடனும் வாசித்தல் / எழுதுதல்
- விகடத்துணுக்குகளை வாசித்தல்/எழுதுதல்/சேகரித்தல்
- பாடல்கள், கதைகளுடன் தொடர்புடைய சித்திரங்களை வரைதல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

## மீட்டற் பயிற்சிகள்

- மாணவர்கள் இதுவரை கற்ற விடயங்களிலிருந்து மீட்டற் பயிற்சிகளை வழங்குங்கள்.

**பயிற்சி 1**

- காட்சிப்படத்தைப் பார்த்து நிகழ்காலத்தில் மூன்று வாக்கியங்களை எழுதுங்கள்.



1. ....................................................................................................................
2. ....................................................................................................................
3. ....................................................................................................................

**பயிற்சி 2**

- கட்டத்திலுள்ள எழுத்துக்களிலிருந்து பொருத்தமான எழுத்தைத் தெரிவு செய்து பின்வரும் சொற்களைப் பூரணப்படுத்துக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ன | ண | ல | ள | ழ | ர | ற |

| | | | | |
|---|---|---|---|---|
| 1 நூ.....கம் | 2. உ......வகம் | 3. கி.....ங்கு | 4. உ......க்கம் | 5 பள்.....ம் |
| 6. உ......வன் | 7. இ.......க்கம் | 8. விமா...ம் | 9. ப....வைகள் | 10 க...ங்கள் |

**பயிற்சி 3**

- அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களிலிருந்து பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து புள்ளிக் கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க.

1. ஒளியைப் பரப்புவது ...................................... (விளக்கு, விலக்கு)
2. நீடூழி காலம் .................................................. (வாள்க, வாழ்க)
3. ஆழம் .................................... காலை விடாதே. (அரியாமல், அறியாமல்)
4. மக்களுக்குச் சேவை செய்வது மிகச் சிறந்த .................... ஆகும். (பனி, பணி)
5. ....................... செய விரும்பு. (அரம், அறம்)

பயிற்சி 4

- பின்வரும் ஒருமை வாக்கியங்களைப் பன்மை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

1. புறா பறந்து சென்றது.

.......................................................................................................................

2. நட்சத்திரம் வானில் மின்னியது.

.......................................................................................................................

3. தாமரைப் பூ மலர்ந்தது.

.......................................................................................................................

4. குதிரை வேகமாக ஓடியது.

.......................................................................................................................

பயிற்சி 5

- பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. **"சமுத்திரம் "** என்பதன் ஒத்தகருத்துக் சொல்லை எழுதுக.

.......................................................................................................................

2. **"அண்மை"** என்பதன் எதிர்க்கருத்துக் சொல்லை எழுதுக.

.......................................................................................................................

3. **"புத்திரன்"** என்பதன் எதிர்ப்பாற் சொல்லை எழுதுக.

.......................................................................................................................

4. **"உவகை"** என்பதன் ஒத்தகருத்துக் சொல்லை எழுதுக.

.......................................................................................................................

5. **"சேவகி"** என்பதன் எதிர்ப்பாற் சொல்லை எழுதுக.

.......................................................................................................................

6. **"இளமை"** என்பதன் எதிர்க்கருத்துக் சொல்லை எழுதுக.

.......................................................................................................................

பயிற்சி 6

- பின்வரும் **பெண்பால்** வாக்கியங்களை **ஆண்பால்** வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

1. எனது **தங்கை** பாட்டுப் பாடினாள்.

.......................................................................................................................

2. அவரது **மருமகள்** வெளிநாட்டில் வசிக்கின்றார்.

.......................................................................................................................

பயிற்சி 7

- பின்வரும் **ஆண்பால்** வாக்கியங்களைப் **பெண்பால்** வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

1. நான் **நண்பனின்** வீட்டிற்குச் சென்றேன்.

.......................................................................................................................

2. விடுமுறைக்கு **மாமா** வீட்டிற்குச் செல்வேன்.

.......................................................................................................................

.பயிற்சி 8

- புள்ளிக் கோடிட்ட இடங்களைச் சரியான உயர்தினை, அ.்.றிணைச் சொற்களைக் கொண்டு பூர்த்தி செய்க.

| அதிபர், டொல்பின், மாணவர்கள், மான் |
|---|

1. ஓநாயைக் கண்ட ...................... வேகமாக ஓடியது.
2. .................................. வரிசையாகச் சென்றனர்.
3. எம் இருவரையும் .................................. அழைத்தார்.
4. .................................. நன்றியுள்ள பிராணியாகும்.

பயிற்சி 9

- பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் **சரி** எனவும் பிழையாயின் **பிழை** எனவும் எழுதுக.

.

1. **"நண்பர்கள்"** உயர்திணை ஒருமைப் பெயர்ச்சொல்லாகும். (............)

2. **"புத்தகம்"** அ.்.றிணை ஒருமைப் பெயர்ச்சொல்லாகும். (............)

.பயிற்சி 10

- கீழே தரப்படடுள்ளவற்றிற்குப் அடைப்புக்குள் இருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

**( நாம், அலுமாரி, பெரியம்மா, பந்துகள், நான், பிள்ளைகள்,)**

1. உயர்திணை பன்மைப் படர்க்கைப் பெயர்ச் சொல் : .........................................
2. உயர்திணை ஒருமைப் தன்மைப் பெயர்ச் சொல் : .........................................
3. தன்மைப் பன்மைப் பெயர்ச் சொல் : .........................................

பயிற்சி 11

- வெற்றிடத்திற்குப் பொருத்தமான வினைச் சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து **புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

1. பூந்தோட்டத்தில் மல்லிகைப் பூக்கள் ............................................................
(மலர்ந்தது, மலர்ந்தன)

2. நான் எனது தங்கையுடன் பாடசாலைக்குச் ....................................................
(சென்றேன், சென்றோம்)

3. கழிவுநீர் தேங்கி நிற்பதால் நுளம்புகள் ..........................................................
(பெருகுகின்றது, பெருகுகின்றது)

4. சிறந்த நூல்கள் நல்ல நண்பர்களைப் ..............................................................
(போன்றது, போன்றன)

.பயிற்சி 12

- பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான அடைமொழிகளை வைத்து எழுதுக.

காகம் ....கறுப்புக் காகம்.......................

1. கொக்கு ..........................................................
2. குடை ..........................................................
3. தாமரை ..........................................................
4. தொப்பி ..........................................................
5. பென்சில் ..........................................................

பயிற்சி 13

- கீழே தரப்பட்டுள்ள **இறந்தகால** வாக்கியங்களை **நிகழ்கால** வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

1. நான் ஒரு கவிதை எழுதினேன்.

   ..........................................................................................................................

2. புறாக்கள் பறந்து சென்றன.

   ..........................................................................................................................

3. அவர்கள் வயலில் வேலை செய்தனர்.

   ..........................................................................................................................

4. நாங்கள் பூந்தோட்டத்திற்குச் சென்றோம்.

   ..........................................................................................................................

5. நாங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்றோம்.

   ..........................................................................................................................

.பயிற்சி 14

- கீழே தரப்பட்டுள்ள **எதிர்கால** வாக்கியங்களை, **இறந்தகால** வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

1. நான் அழகிய காட்சிகளை வரைவேன்.

   ..........................................................................................................................

2. நான் நூலகத்திற்குச் செல்வேன்.

   ..........................................................................................................................

3. நாங்கள் சந்தைக்குச் செல்வோம்.

   ..........................................................................................................................

4. நாங்கள் கடற்கரையில் மணல் வீடு கட்டி விளையாடுவோம்.


   ..........................................................................................................................

3. மாமி எங்களைப் பாடசாலையிலிருந்து வீட்டிற்கு அழைத்துச் செல்வார்.

   ..........................................................................................................................

பயிற்சி 15

- காட்சிப்படத்தைப் பார்த்து நிகழ்காலத்தில் மூன்று வாக்கியங்களை எழுதுங்கள். ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறையாதிருத்தல் வேண்டும்.



1. .......................................................................................................................

2. .......................................................................................................................

3. .......................................................................................................................

குறிப்பு:

- முதலாம் தவணையின் இறுதியில் மீட்டற் பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்குங்கள். மேலே தரப்பட்டவாறான பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்கிக் கணிப்பீடு செய்யுங்கள்.

- உறுப்பமைய எழுதும் போட்டியையும் சொல்வதெழுதுதல் போட்டியையும் நடாத்துங்கள். மாணவர்கள் எழுதியவற்றைக் காட்சிப்படுத்துங்கள்.எல்லா மாணவர்களையும் பாராட்டி ஊக்கப்படுத்துங்கள்.

**தேர்ச்சிகள் :**

$L_4$ – நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காகச் செவிமடுப்பார்.

$S_4$ – நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காகப் பேசுவார்.

$R_4$ – நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காக வாசிப்பார்.

$W_4$ – நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காக எழுதுவார்.

**உள்ளடக்கம் :**

- அறிவித்தல்கள்
- அறிவுறுத்தல்கள்
- கட்டளைகள்
- தகவல்கள்/ குறிப்புக்கள்
- சுய விபரம் / படிவங்கள்
- கடிதம் (பாரம்பரிய / நவீன)
- மின்னஞ்சல் / குறுஞ்செய்தி

**கற்றற்பேறுகள் :**

- சிறிய, சுருக்கமான அறிவித்தல்கள், அறிவுறுத்தல்களை விளங்கி அவற்றுக்கேற்ப துலங்குவார்.
- கட்டளைகளைச் செவிமடுத்து அதற்கேற்பத் துலங்குவார்.
- தகவல்களை அறிந்து கொள்வதுடன், தகவல்களையும் குறிப்புக்களையும் தெளிவாக எழுதிச் சமர்ப்பிப்பார்.
- சுயவிபரப் படிவத்தை வாசித்துப் பிழையின்றிச் சுருக்கமாகப் பூர்த்திசெய்ய முன்வருவார்.
- பாரம்பரியக் கடிதம் / நவீன கடிதம் எழுதும் முறையை அறிந்து உரிய முறையில் பிரயோகிப்பார்.
- மின்னஞ்சல்கள் / குறுஞ்செய்திகளை எழுதுவார்.

**வளங்கள் :**

- அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள், கட்டளைகள் எழுதப்பட்ட அட்டைக் கீலங்கள், சொல் அட்டைகள், கட்டளை அட்டைகள், பயிற்சி அட்டைகள், நூலக அங்கத்துவப் படிவங்கள், மாதிரிக்கடிதங்கள், மின்னஞ்சல்கள் / குறுஞ்செய்திகள்(மாதிரி)

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு 1**

- மாணவர்களின் வயது மட்டத்திற்குப் பொருத்தமான அறிவித்தல்களை அட்டைக் கீலங்களில் எழுதிக் கொள்ளுங்கள்.

**அறிவித்தல் 1**

கண்ட இடங்களில் குப்பைகளை இடுவதைத் தவிர்க்கவும்.

**அறிவித்தல் 2**

கூட்டுறவுக் கடை காலை எட்டு மணி முதல் மாலை ஐந்து மணி வரை திறந்திருக்கும்.

**அறிவித்தல் 3**

வீடுகளில் நீர் தேங்கி நிற்கும் இடங்களைச் சுத்தமாக வைத்திருங்கள்.

**அறிவித்தல் 4**

பேருந்தில் பயணச்சீட்டின்றிப் பயணிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

**அறிவித்தல் 5**

பொருட்களை வாங்கும் போது உற்பத்தித் திகதி, காலாவதியாகும் திகதி என்பவற்றைப் பார்த்து வாங்கவும்.

**அறிவித்தல் 6**

கர்ப்பிணித் தாய்மார்களுக்காக இவ்வாசனம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**அறிவித்தல் 7**

வைத்தியசாலைக்குள் கைத்தொலைபேசியைப் பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது.

- காட்சிப்படுத்திய அறிவித்தல்களை மாணவர்களுக்கு வாசித்துக்காட்டுங்கள். அதன் பின்னர் மாணவர்களைச் சுயமாக வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். ஒவ்வொரு குழுவிற்கும் அட்டைக்கீலங்கள் கொண்ட தட்டை வழங்குங்கள். குழுவிலுள்ள ஒவ்வொருவரும் அறிவித்தல்களை வாசித்து மற்றவர்களுக்குக் கூறுதல் வேண்டும். அதன் பின்னர் அவ்வறிவித்தல்களை அப்பியாசக் கொப்பியில் பிழையின்றி எழுத வழிப்படுத்துங்கள்.
- மாணவர்கள் தாம் அறிந்த, வாசித்த அறிவித்தல்களைச் சுயமாக எழுத ஊக்கப் படுத்துங்கள்.

செயற்பாடு 2

- மாணவர்களிடம் ஏற்கனவே தரம் மூன்றில் கற்ற அறிவுறுத்தல்கள் தொடர்பாகக் கேட்டறியுங்கள். அதன் பின்னர் மாணவர்களின் வயது மட்டத்திற்குப் பொருத்தமான அறிவுறுத்தல்களை மாணவர்களுக்கு அட்டைக் கீலங்களில் எழுதி ஒட்டுப் பலகையில் காட்சிப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு:**

**அறிவுறுத்தல் 1**

பொலித்தீன், பிளாஸ்திக் பொருட்களை கண்ட இடங்களில் வீசுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**அறிவுறுத்தல் 2**

நித்திரை கொள்ளும்போது கைப்பேசியைத் தலையணைக்கு அருகில் வைக்க வேண்டாம்.

**அறிவுறுத்தல் 3**

வீதியைக் கடக்கும்போது வலப்பக்கமாகவும் இடப்பக்கமாகவும் பார்த்து மீண்டும் வலப்பக்கமாகப் பார்த்து மஞ்சள்/ வெள்ளைக் கோட்டினூடாகக்கடக்க வேண்டும்.

**அறிவுறுத்தல் 4**

விசேட வைத்திய நிபுணரைச் சந்திக்க விரும்புவோர் காலை ஏழு மணிக்கு முன்னர் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

**அறிவுறுத்தல் 5**

இடி, மின்னல் ஏற்படும் சந்தர்ப்பங்களில் கைப்பேசியைப் பயன்படுத்த வேண்டாம்.

**அறிவுறுத்தல் 6**

பேருந்தில் பயணிக்கும் பயணிகள் பயணச்சீட்டைப் பெறாவிட்டால் தண்டப்பணம் அறவிடப்படும்.

- ஒட்டுப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை மாணவர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள். மாணவர்களை எழுமாறாக அழைத்து அறிவுறுத்தல்களை வாசிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் மாணவர்கள் சேர்ந்து தாம் எழுதிய அறிவுறுத்தல்களை வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். குழுக்களுக்கு வழங்கிய அறிவுறுத்தல்களில் சில சொற்களை நீக்கி, கட்டமிட்டு அட்டைக் கீலங்களில் எழுதி மாணவர்களுக்கு வழங்குங்கள். அவ் அட்டைக் கீலங்களில் எழுதப்பட்டுள்ள அறிவுறுத்தல்களில் விடுபட்டுள்ள சொற்களைக் கண்டுபிடித்துக் கட்டமிடப்பட்டுள்ள இடங்களைப் பூர்த்தி செய்து அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள்.

- மாணவர்கள் பார்வையிடுவதற்காகவும் வாசிப்பதற்காகவும் பல்வேறு அறிவித்தல்கள், அறிவுறுத்தல்களை வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு:**









செயற்பாடு 3

- மாணவர்களுக்கு கட்டளைகளை அட்டைக் கீலங்களில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

**கட்டளைகள்**

**1.** உணவு உண்டபின்னர் பீங்கான் கோப்பை போன்றவற்றை இடது புறத்தில் உள்ள தட்டில் வையுங்கள்.

**2.** கீழ்த் தளத்தில் உள்ள பொருட்களை மூன்றாம் மாடியில் உள்ள அறைக்குக் கொண்டு செல்லுங்கள்.

**3.** பல்துலக்கிய பின்னர் பற் தூரிகையைப் பற் தூரிகைப் பெட்டிக்குள் வையுங்கள்.

**4.** கீழ்த்தட்டில் உள்ள பெட்டியிலிருந்து நீலநிறப் பந்தை எடுத்து வாருங்கள்.

**5.** பல்பொருள் அங்காடிக்குள் செல்லும் முன் நீங்கள் கொண்டு வந்த பொருட்களைப் பொருள் பாதுகாப்பாளரிடம் கொடுத்துவிட்டு உள்ளே செல்லுங்கள்.

- காட்சிப்படுத்தப்பட்ட அட்டைகளை வாசிக்க மாணவர்களை வழிப்படுத்துங்கள். வாசித்த பின்னர் அப்பியாசக் கொப்பியில் பிழையின்றி எழுதிக் காற்புள்ளி, முற்றுப்புள்ளி போன்றவற்றை இட வழிப்படுத்துங்கள்.
- மாணவர்களைப் படத்திற் காட்டியவாறு ‘ப’ வடிவில் இரு குழுக்களாக அமரச் செய்யுங்கள்.

| | குழு 1 | | | குழு 2 | |
|---|---|---|---|---|---|
| | | முடிவு | | | முடிவு |
| கட்டளை | X | X | கட்டளை | X | X |
| | X | X | | X | X |
| | X | X | | X | X |
| | X | X | | X | X |
| | X | X | | X | X |
| | X | X | | X | X |
| | X | X | | X | X |
| | X X X | | | X X X | |

- ஒரே கட்டளையை இரண்டு அட்டைக்கீலங்களில் எழுதி இரு குழுவிலும் உள்ள முதலாவது மாணவனிடம் கொடுக்க வேண்டும். அவர்கள், அக்கட்டளையை வாசித்து அடுத்த மாணவர் காதில் கூற வேண்டும். இவ்வாறு குழுக்களில் உள்ள எல்லா மாணவர்களும் கூறி முடித்த பின்னர் இரு குழுக்களிலும் இறுதியில் உள்ள மாணவர்கள் தாம் பெற்ற கட்டளைகளை உரத்துக்கூற வேண்டும் என்பதனை நினைவிற் கொள்ளுங்கள்.

- ஆசிரியர், மாணவர்களுக்குக் கொடுத்த கட்டளையை ஒட்டுப் பலகையில் காட்சிப்படுத்தி மாணவர்கள் கூறிய கட்டளை சரியா என மாணவர்களிடம் கேட்க வேண்டும். பிழையாயின் தவறு எங்கே நடத்தது என மாணவர்களிடம் கேட்டு, தவறு நிகழ்ந்த இடத்தில் இருந்து திருத்தி மீண்டும் கூற வழிப்படுத்துங்கள்.

**செயற்பாடு 4**

- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். பத்திரிகைகள், இணையத்தளங்கள் போன்றவற்றில் வெளிவரும் **உலக வரலாற்றில் இன்று** நிகழ்ந்தவற்றைத் தகவல்களாகத் திரட்டிக் குறிப்பெடுத்து அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு:**

வரலாற்றில் இன்று : 07.11. 2018

இந்தியப் பௌதிகவியலாளர் சி.வி.ராமன் பிறந்த தினம் (1888)

போலந்து நாட்டு இரசாயனவியல் அறிஞர் மேரி க்யூரி பிறந்த தினம் 1867)

இந்திய ஆன்மிகவாதி திருமுருக கிருபானந்த வாரியார் இறந்த தினம் (1993)

உலகின் மிகப் பழமையான தி லண்டன் கசெட், முதலாவது இதழ் வெளியானது. (1665)

உலகின் முதலாவது விமான தபால் சேவை ரைட் சகோதரர்களால் ஒகையோவில் ஆரம்பிக்கப்பட்டது (1910)

- ஒவ்வொரு குழுவாகத் தாம் திரட்டிய தகவல்களை வகுப்பில் முன்வைப்பதற்கு ஆர்வமூட்டுங்கள்.

**செயற்பாடு 5**

- சித்திரப் போட்டி ஒன்றில் பங்குபற்றுவதற்காக, விண்ணப்பப்படிவம் ஒன்றைப் பூர்த்தி செய்ய மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- மாணவர்கள், படிவங்களைப் பூர்த்தி செய்யும்போது உறுப்பமைய எழுத வேண்டும் என்பதனை வலியுறுத்திக் கூறுங்கள். வெட்டி எழுதுவதோ சிதைப்பதோ கூடாது என்பதனையும் நினைவுபடுத்துங்கள்.
- மாணவர்கள் தரம் மூன்றில் கற்ற பொதுசன நூலகப் படிவத்தை மீண்டும் மாணவர்களுக்கு வழங்கி அப்படிவத்தைப் பூர்த்தி செய்த பின்னரே, சித்திரப் போட்டிக்கான படிவத்தை வழங்க வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

எடுத்துக்காட்டு :

**சித்திரப்போட்டி விண்ணப்பப்படிவம்**

1. சித்திரத்தின் தலைப்பு : ..................................................
2. மாணவர் முழுப்பெயர் : ..................................................
3. பிறந்த திகதி : ..................................................
4. கற்கும் பாடசாலை : ..................................................
5. கற்கும் வகுப்பு : ..................................................
6. வகுப்பாசிரியின் பெயர் : ..................................................

மேற்குறிப்பிட்ட தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என உறுதிப்படுத்துகிறேன்.

.....................................
மாணவரது கையொப்பம்

மேற்குறிப்பிட்ட மாணவர் எனது வகுப்பில் கற்கின்றார் என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

.....................................
மாணவரது கையொப்பம்

செயற்பாடு 5

- மாதிரிக் கடிதங்கள் (பாரம்பரிய, நவீன) சிலவற்றை எழுதிப் பிரதி எடுத்து, எல்லா மாணவர்களுக்கும் வழங்குங்கள். கடிதத்தின் மாதிரி வடிவமைப்பினைக் காட்டி அதனைப் பூர்த்தி செய்து எழுதச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

*எடுத்துக்காட்டு 1:* பாரம்பரியக் கடிதம்

**கடிதத்தின் வடிவமைப்பு**

.................................. முகவரியும்
..................................
..................................
.................................. திகதியும்

விளிப்பு ..................................
..................................

.................................................................................................
.................................................................................................
உடல் .................................................................................................
.................................................................................................
.................................................................................................

.................................. முடிப்பு
..................................
.................................. ஒப்பம்

*எடுத்துக்காட்டு 2:* நவீன கடிதம்

**நவீன கடிதத்தின் வடிவமைப்பு**

.................................. முகவரியும்
..................................
..................................
.................................. திகதியும்

விளிப்பு ..................................
..................................

.......................................................................................................................
.......................................................................................................................
உடல் .......................................................................................................................
.......................................................................................................................
.......................................................................................................................

................................ முடிப்பு
................................
................................ ஒப்பம்

- ஒரு கடிதத்தில் அனுப்புபவரின் முகவரியும் திகதியும்
  விளிப்பு
  உடல்
  முடிப்பு
  ஒப்பம்
  ஆகிய பகுதிகளைக்காண முடியும்.

- **கடிதங்கள்**
  - ✓ மகன் தந்தைக்கு எழுதும் கடிதம்
  - ✓ தம்பி அண்ணனுக்கு எழுதும் கடிதம்
  - ✓ மகள் தாய்க்கு எழுதும் கடிதம்
  - ✓ நண்பர்களுக்கு எழுதும் கடிதம்
  - ✓ ஆசிரியருக்கு எழுதும் கடிதம்

  முதலிய கடிதங்களை எழுதச் செய்து பார்வையிடுங்கள்.

- கடிதங்களை எழுதுவது மாத்திரம் அன்றி கடித உறையில் முகவரி எழுதுதல், கடிதங்களை மடித்து உறையுள் வைத்தல், உறையை ஒட்டுதல், முத்திரை ஒட்டுதல் ஆகியற்றிலும் முறையான கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறுங்கள். மாணவரும் கடிதத்தை எழுதித் தபாலில் இட வழிப்படுத்துங்கள். (பெற்றோருக்கு)

எடுத்துக்காட்டு:

தந்தை மகளுக்கு எழுதிய கடிதம் (பாரம்பரிய)

14. கடற்கரை வீதி
கொழும்பு 04
12. 01. 2019.

அன்புள்ள மகளுக்கு,

நான் நலமாக உள்ளேன். உன் நலமறிய ஆவலாக உள்ளேன். நன்றாகப் படிக்கின்றாயா? தினமும் அதிகாலையில் எழுந்து படிப்பதைப் பழக்கப்படுத்திக் கொள். மாலையில் விளையாடு. இரவிலே சிறிது நேரம் படி. அதன் பின்னர் மறுநாள் பாடசாலைக்குச் செல்வதற்கான ஆயத்தங்களைச் செய். இரவு உணவு உண்ட பின்னர் பல் துலக்க மறவாதே. காலையும் மாலையும் தவறாமல் பல் துலக்கு. உணவு உண்ண முன்னரும் உண்ட பின்னரும் கைகளைச் சவர்க்காரமிட்டுக் கழுவிக் கொள். இரவு எட்டு மணிக்குள் உறங்கச் சென்றுவிடு. தினமும் காலை உணவை உண்ட பின்னரே பாடசாலைக்குச் செல். அது உனது உடல் ஆரோக்கியத்திற்கு நல்லது.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நீண்ட நேரம் பார்க்காதே. தொலைக்காட்சியைத் தொடர்ந்து பார்ப்பதால் கண்பார்வை குறைவடையும். அதுமட்டுமல்லாமல் உடல் ஆரோக்கியமும் பாதிக்கப்படும் என்பதை நினைவிற்கொள். தினமும் பத்திரிகை வாசிப்பதைப் பழக்கப்படுத்திக் கொள். ஏனைய விடயங்களை அடுத்த கடிதத்தில் எழுதுகின்றேன்.

இப்படிக்கு
உன் அன்பு அப்பா

எடுத்துக்காட்டு:

சாதாரண தபாலில் அனுப்பும் கடிதம்




| அனுப்புபவர் | பெறுபவர் |
|---|---|
| அனுப்புபவர் பெயர் | பெறுபவர் பெயர் |
| வீட்டு இலக்கம், வீதியின் பெயர் | வீட்டு இலக்கம், வீதியின் பெயர் |
| ஊர் | ஊர் |
| தபாற்கந்தோர் இலக்கம் | தபாற்கந்தோர் இலக்கம் |

*குறிப்பு* : கடிதத்தை உரியவருக்கு அனுப்பும்போது கடித உறையில் முகவரியைச் சரியாக எழுத வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறுங்கள்.

**செயற்பாடு 6**

- மாணவர்கள் இன்றைய நவீன உலகில் வாழ்கின்றார்கள். எனவே செய்திகளை/ தகவல்களை விரிவாக எழுதிப் பரிமாறுவதற்குத் தற்போது எவருக்கும் நேரம் கிடைப்ப தில்லை. அதனால் தகவல்கள், மிகவும் சுருக்கமாக குறுஞ்செய்திகள் மூலம் பரிமாற்றப்படுகின்றன.

  **எடுத்துக்காட்டு:**

  1. அனுப்பிய பணம் கிடைத்தது.
  2. வரைந்தனுப்பிய சித்திரம் கொள்ளை அழகு!
  3. பாதுகாப்பாக வீட்டை வந்தடைந்தேன்.
  4. உடனே புத்தகத்தின் பெயரை அனுப்புங்கள்.
  5. மாம்பழக்காலம் முடியப் போகின்றது.
  6. பிறந்த நாள் வாழ்த்துக்கள்.
  7. புத்தகக் கண்காட்சி நாளை ஆரம்பமாகிறது.
  8. வெளிநாட்டிலிருந்து மாமா வருகின்றார்.
  9. நாளை வரமுடியாதா?
  10. நான் அண்ணாவுடன் விமான நிலையத்திற்குச் செல்கின்றேன்.

- இவை போன்ற குறுஞ்செய்திகளை மாணவர்கள் அப்பியாசக் கொப்பியில் எழுத ஆர்வமூட்டுங்கள்.

**கணிப்பீடு :**

- அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள், கட்டளைகள் ஆகியவற்றைச் செவிமடுத்தல், வாசித்தல் எழுதுதல்.
- தகவல்களைத் திரட்டுதல் / குறிப்பெடுத்தல்
- சுய விபரப்படிவத்தைப் பூர்த்தி செய்தல்.
- சிறிய கடிதமொன்றை எழுதுதல் / தபாலுறையில் இட்டு அனுப்புதல்.
- மின்னஞ்சல் / குறுஞ்செய்திகள் எழுதுதல்.

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

**தேர்ச்சிகள் :**

$L_5$ – சொற்களஞ்சிய விருத்திக்காகச் செவிமடுப்பார்.

$S_5$ – சொற்களஞ்சிய விருத்திக்காகப் பேசுவார்.

$R_5$ – சொற்களஞ்சிய விருத்திக்காக வாசிப்பார்.

$W_5$ – சொற்களஞ்சிய விருத்திக்காக எழுதுவார்.

**உள்ளடக்கம் :**

- சிறிய கட்டுரைகள்
- மரபுச் சொற்கள்
- இணைமொழிகள்
- இரட்டைக் கிளவி
- விடுகதைகள்
- பழமொழிகள்
- குறியீடுகள் / சுருக்கக் குறியீடுகள்
- தொடர்மொழிக்கு ஒரு மொழி
- சேர்த்தெழுதல்
- சொல்வதெழுதல்

**கற்றற்பேறுகள் :**

- சிறிய கட்டுரைகளைச் செவிமடுத்து அவற்றை மீளவும் முன்வைப்பார். உரிய வகையில் பிரயோகிப்பார்.
- மரபுச் சொற்களை அறிந்து உரியமுறையில் பிரயோகிப்பார்.
- இணைமொழிகளை அறிந்து உரிய வகையிற் பிரயோகிப்பார்.
- இரட்டைக் கிளவியை அறிந்து உரிய வகையிற் பிரயோகிப்பார்.
- விடுகதைகளைக் கேட்டறிந்து முன்வைப்பதோடு ஆர்வத்துடன் விடுவிப்பார்.
- பழமொழிகளை அறிந்து உரிய வகையிற் பிரயோகிப்பார்.
- குறியீடுகளை / சுருக்கக் குறியீடுகளை இனங்காண்பதோடு விளங்கிப் பொருத்தமுறப் பயன்படுத்துவார்.
- தொடர்மொழிக்கு ஒரு மொழியை அறிந்து எழுதுவார்.
- தெரிவுசெய்யப்பட்ட சொற்களைக் கவனமாகச் செவிமடுத்துப் பிழையின்றி எழுதுவார்.

**வளங்கள் :**

- கட்டுரை அட்டைகள், சொல்லட்டைகள், விடுகதை அட்டைகள், பட அட்டைகள், வினா அட்டைகள், ஒலிப்பதிவுக் கருவி, கணினி, கைப்பேசி, இளமைப் பெயர் அட்டைகள், விடுகதைக்கான விடைப் படங்கள், ஒட்டுப்பலகை, அட்டைக் கீலங்கள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு 1**

- மாணவர்கள் சொற்களஞ்சியத்தை விருத்திசெய்து கொள்வதற்காகத் தெரிவு செய்யப்பட்ட கட்டுரைப் பகுதிகளைப் பிரதியெடுத்துக் காட்சிப்படுத்துங்கள். காட்சிப்படுத்திய கட்டுரையை ஏற்ற, இறக்கங்களுடன் வாசித்துக்காட்டுங்கள். அதன் பின்னர் மாணவர்களிடம் அக்கட்டுரை தொடர்பாக வினாக்களை வினவுங்கள். மாணவர்களுக்கு வாய்மொழி மூல விடையைப் பெற்ற பின்னர் கட்டுரையைப் பிரதி எடுத்து எல்லா மாணவர்களுக்கும் வழங்குங்கள். மாணவர்கள் உரத்தும் மௌனமாகவும் வாசிப்பதற்கு வழிப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு:**

## மண் அடுப்பு

சில ஆண்டுகளுக்கு முன்புவரை, கிராமங்களில் விறகு அடுப்புகள்தான் அதிகம். விறகு அடுப்புகளிலும் பல வகை உண்டு.

பெரும்பாலான பகுதிகளில், பிரதான வீட்டிலிருந்து ஒதுங்கியே அடுப்படி இருக்கும். ஒரு பாத்திரம் வைக்கும் அடுப்பு, இரண்டு பாத்திரங்கள் வைக்கும் அடுப்பு உண்டு. இரு பாத்திரங்கள் வைக்கும் அடுப்பில், ஒரு பகுதியில் விறகு நுழைப்பதற்கான வாய் இருக்கும். ஒரு புறத்தில் இருந்து மற்றொரு அடுப்புக்கு தீச் சுடர் செல்ல வழி இருக்கும். மேற்பகுதியில் பாத்திரம் நிலையாக நிற்க, மூன்று குமிழ்கள் இருக்கும்.

மண்ணில் செய்யப்பட்ட இவை, சுவரை ஒட்டி அமைக்கப்பட்டிருக்கும். புகை போக்கிகளுடன் இணைக்கும் வகையில், அடுப்பின் ஒரு மூலையில் துளை இடப்பட்டிருக்கும். அந்தத் துளை மண்குழாயுடன் இணைக்கப்பட்டு, குழாய், கூரையின் மேல்பாகத்துக்கு வெளியே நீண்டிருக்கும். இரட்டை அடுப்புக்குச் சில பகுதிகளில் **கொடியடுப்பு** என்று பெயர் உண்டு. தனியே எடுத்துச் செல்லும் வகையிலும், சுவருடன் இணைக்கும் வகையிலும் இருக்கும்.

**குமுட்டி அடுப்பு** என்று ஒரு வகை உண்டு. அது மண், இரும்பு என இருவகையில் செய்யப்பட்டது. மேல்பாகம் பாத்திரம் வைப்பது போல் வடிவமைக்கப்பட்டிருக்கும். அதன் நடுப்பகுதியில் சல்லடை போல் இருக்கும். அந்தப் பகுதியில் மரக்கரித்துண்டுகள், உமி போன்றவற்றை இட்டுப் பற்ற வைக்க வேண்டும். கரியும் உமியும் மெதுவாக எரிய எரிய அதன் சாம்பல், சல்லடை வழியாகக் கீழிறங்கி விடும்.மழைக்காலங்களில் விறகு கிடைக்காது. எனவே, நம் முன்னோர் விறகை, அரைகுறையாக எரித்துக் கரியாக மாற்றி அதனைப் பயன்படுத்தினர்.

- வினாக்களைக் கொடுத்து அப்பியாசக் கொப்பியில் விடையளிக்க மாணவர்களை வழிப்படுத்துங்கள். இடர்ப்படும் மாணவருக்கு உதவுங்கள்.
- மாணவர்களை நிறுத்தக் குறிகளை அனுசரித்து வாசிக்கவும் எழுதவும் வழிப்படுத்துங்கள்.
- கட்டுரைப் பகுதி தொடர்பாகப் பல்வேறு பயிற்சிகளைத் தயாரித்து வழங்குங்கள்.

*எடுத்துக்காட்டு* :

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. கிராமங்களில் எவ்வகையான அடுப்பு பயன்படுத்தப்பட்டது?
2. இரண்டு பாத்திரங்கள் வைக்கும் அடுப்பின் சிறப்பியல்பு யாது?
3. நம் முன்னோர்கள் மழைக் காலங்களில் விறகிற்குப் பதிலாக எதனைப் பயன்படுத்தினர்?

- **கீழே தரப்பட்டுள்ள பந்தியிலுள்ள கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்து வாசியுங்கள்.**

  பெரும்பாலான பகுதிகளில், பிரதான ........................ ஒதுங்கியே அடுப்படி இருக்கும். ஒரு .................... வைக்கும் அடுப்பு, இரண்டு .......................... வைக்கும் அடுப்பு உண்டு. இரு பாத்திரங்கள் வைக்கும் அடுப்பில், ஒரு பகுதியில் ................ நுழைப்பதற்கான வாய் இருக்கும். ஒரு புறத்தில் இருந்து மற்றொரு அடுப்புக்கு ................. செல்ல வழி இருக்கும். மேற்பகுதியில் பாத்திரம் நிலையாக நிற்க, மூன்று ....................... இருக்கும்.

செயற்பாடு 2

- ஏற்கனவே தரம் மூன்றில் கற்ற இளமைப் பெயர்களைக் கேட்டறியுங்கள்.
- மாணவர்களுக்குப் பின்வரும் மரபுச் சொற்களை (இளமைப் பெயர்) அறிமுகம் செய்யுங்கள். (வர்ண எழுத்துக்களில் பெரிதாக A3 தாளில் பிரதி எடுத்துக் காட்சிப்படுத்துங்கள்.)

**இளமைப் பெயர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. தவளை | - குஞ்சு, பேத்தை | 2. தென்னை | - கன்று, பிள்ளை |
| 3. பயிர் | - நாற்று | 4. பலா | - கன்று |
| 5. புலி | - குட்டி | 6. யானை | - கன்று, போதகம் |
| 7. வேம்பு | - கன்று | 8. எருமை | - கன்று |

- இளமைப் பெயர்களை மாணவர்கள் நன்கு பரிச்சயம் பெறும் வரை எல்லா மாணவர்களிடமும் பல தடவை வினவி மனதிற் பதிய வையுங்கள். அதன் பின்னர் இளமைப் பெயர்களை அப்பியாசக் கொப்பியில் எழுதி இருவரிருவராகச் சேர்ந்து வாசிக்க உற்சாகப்படுத்துங்கள்.
- இளமைப் பெயர்களை, வாக்கியங்களில் அமைத்துக் காட்டி மாணவர்களையும் வாக்கியங்கள் அமைக்க வழிப்படுத்துங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***

  1. புலி தனது **குட்டி**களுடன் விளையாடுகின்றது.
  2. நான் மாங்**கன்று** ஒன்றை நாட்டினேன்.
  3. வேப்பங்**கன்று** நன்றாக வளர்ந்திருந்தது.

செயற்பாடு 3

- மாணவர்களுக்குப் பின்வரும் மரபுச் சொற்களை (இலைப் பெயர்களை) அறிமுகம் செய்யுங்கள். (A3 தாளில் பெரிய எழுத்துக்களில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.)

  எடுத்துக்காட்டு: **மரபுச் சொற்கள் (இலைப் பெயர்)**

  1. தென்னை - ஓலை
  2. பனை - ஓலை
  3. நெல் - தாள்
  4. புல் - தாள்
  5. வாழை - இலை
  6. மா - இலை

- மாணவர்கள் நன்கு பரிச்சயம் பெறும்வரை இலைப் பெயர்களை வினவி அவர்கள் மனதில் பதிய வையுங்கள்.

- மரபுப் பெயர்களை(இலைப் பெயர்கள்) வாக்கியங்களில் அமைத்துக்காட்டி மாணவர்களையும் வாக்கியங்களில் அமைத்துக்கூற வழிப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு:*

1. பனை **ஓலை**யில் விசிறி செய்யலாம்.
2. வாழை **இலை**யில் சோறு உண்டேன்.

- இதுபோன்ற வாக்கியங்களை மாணவர்கள் அமைத்து அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள்.

செயற்பாடு 4

- மாணவர்களுக்கு இணைமொழிகளை அறிமுகம் செய்யுங்கள். A3 தாளில் வர்ண எழுத்துக்களில் இணைமொழிகளைப் பெரிதாக எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

**இணைமொழிகள்**

| | |
|---|---|
| 1. அக்கம் பக்கம் | 2. அங்கும் இங்கும் |
| 3. அல்லும் பகலும் | 4. இன்ப துன்பம் |
| 5. அன்றும் இன்றும் | 6. ஆற அமர |
| 7. ஓடி ஆடி | 8. கண்ணும் கருத்தும் |
| 9. உயர்வு தாழ்வு | 10. நகமும் சதையும் |

வேறுபட்ட இரண்டு சொற்கள் இணைந்து வந்து பொருள் தருவது இணைமொழியாகும்.

- மாணவர்களைக் குழுக்களாக்கி இணைமொழிகளை வாக்கியங்களில் அமைத்துக்கூறவும் எழுதவும் வழிப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு:*

1. சந்தையிலே காய்கறிகள் **வாடி வதங்கிக்** காணப்பட்டன.
2. விவசாயி **அல்லும் பகலும்** பாடுபட்டான்.
3. பெண்கள் வயலில் **ஓடி ஆடி** வேலை செய்தனர்.

செயற்பாடு 5

- மாணவர்களுக்கு இரட்டைக் கிளவியை அறிமுகம் செய்யுங்கள். அட்டைக் கீலங்களில் பெரிய எழுத்துக்களில் எழுதி ஒட்டுப்பலகையில் காட்சிப்படுத்துங்கள்.
- ஒரு குறிப்புச் சொல் இரட்டித்து வந்து பொருள் தருமாயின் **இரட்டைக் கிளவி** எனப்படும்.

*எடுத்துக்காட்டு:*

| | |
|---|---|
| 1. கணீர் கணீர் | 2. சல சல |
| 3. கம கம | 4. கல கல |
| 5. குடு குடு | 6. சட சட |
| 7. தள தள | 8. பள பள |
| 9. மட மட | 10. வழ வழ |

- இரட்டைக் கிளவியை வாக்கியங்களில் அமைத்துக்காட்டி மாணவர்களையும் வாக்கியங்களை அமைக்க ஆர்வமூட்டுங்கள்.

*எடுத்துக்காட்டு:*

1. ஆலய மணி **கணீர் கணீர்** என்று ஒலித்தது.
2. பாட்டி **குடு குடு**வென நடந்தார்.
3. ஆற்று நீர் **சல சல**வென்று ஓடியது.

செயற்பாடு 6

- மாணவர்களை அறுவர் கொண்ட குழுக்களாக்குங்கள். ஒவ்வொரு குழுவுக்கும் 12 விடுகதை அட்டைக் கீலங்கள் கிடைக்கக்கூடிய வகையில் விடுகதை அட்டைக் கீலங்களைத் தயாரித்துக் கொள்ளுங்கள். அவற்றிற்கான விடைகளையும் ஒவ்வொரு குழுவுக்கும் 12 விடுகதைகளின் விடைகள் கிடைக்கக்கூடியதாக அட்டைகளில் எழுதிக் கொள்ளுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கு விடுகதைகள் (12) எழுதப்பட்ட அட்டைக் கீலங்களைத் தட்டில் இட்டு வழங்குங்கள். அதே போன்று எல்லாக் குழுக்களுக்கும் விடைகளை (12) தட்டில் இட்டு வழங்குங்கள். மாணவர்கள் அனைவரும் தமது குழுவில் உள்ள விடுகதைத் தட்டில் இருந்து இரண்டு விடுகதைக் கீலங்களை எடுத்துக் கொள்ள வேண்டும். தமக்கும் கிடைத்த விடுகதைகளை வாசித்து அதற்கான விடைகளை விடைத்தட்டில் இருந்து தெரிவு செய்ய வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் தமது குழுவில் உள்ளவர்களுக்குக் கிடைத்த விடுகதைகளையும் அவற்றிற்கான விடைகளையும் அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு:*

**விடுகதைகள்**

1. **வெள்ளத்தாலும் போகாது. வெண்தணலிலும் வேகாது. கொள்ளையடிக்கவும் முடியாது. கொடுத்தாலும் குறையாது. அது என்ன?**
2. **காற்று நுழைந்ததும் கானம் பாடுவாள். அவள் யார்?**
3. **தனித்தும் உண்ண முடியாது. இது சேராவிட்டாலும் உண்ண முடியாது. அது என்ன?**
4. **வெட்டிக் கொள்வான். ஆனாலும் ஒட்டிக் கொள்வான். அவன் யார்?**
5. **ஒட்டியவன் ஒருவன், பிரித்தவன் இன்னொருவன். அது என்ன?**
6. **ஏற்றி வைத்து அணைத்தால், எரியும் வரை மணக்கும். அது என்ன?**

## விடுகதைகள்

7. தலையிலே கிரீடம் வைத்த தங்கப் பழம். அது என்ன?
8. தலைக்குள் கண்கள் வைத்திருப்பவன், இவன் மட்டும தான். அவன் யார்?
9. கண்ணால் பார்க்கலாம். ஆனால் கைகளால் பிடிக்க முடியாது. அது என்ன?
10. யாரும் தயாரிக்காத கதவு தானே திறந்து தானே மூடும். அது என்ன?
11. அடிக்கமாட்டான். திட்டமாட்டான். ஆனால் கண்ணீரை வரவழைப்பான். அவன் யார்?
12. கண்ணில் தென்படும் கையில் பிடிபடாது. அது என்ன?

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| புல்லாங்குழல் | கடிதம் | கத்தரிக்கோல் | தேங்காய் |
| அன்னாசி | உப்பு | கண் இமை | நிழல் |
| வெங்காயம் | ஊதுவர்த்தி | புகை | கல்வி |

- மாணவர்களின் சொற்களஞ்சிய விருத்திக்காக வேறு விடுகதைகளையும் தெரிவு செய்து வழங்குங்கள். மாணவர்கள் ஆர்வத்துடன் கற்பதற்கு விடுகதைகள் உதவும்.
- மாணவர்களிடையே விடுகதைகளை விடுவிக்கும் போட்டிகளை நடத்துங்கள்.
- அதன் பின்னர் விடுகதைகளை எழுதி அதற்குரிய விடைகளையும் எழுத வழிப்படுத்துங்கள். (நிறுத்தக் குறிகளைச் சரியாக இடுகிறார்களா என அவதானியுங்கள்).

செயற்பாடு 7

- பழமொழிகளை அட்டை ஒன்றில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள். வாசித்துக் காட்டுங்கள். அதன் பின்னர் பழமொழிகளை (12) அட்டைக் கீலங்களில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள். அவற்றை, மாணவர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள்.
- பழமொழிகளின் கருத்துக்களையும் பழமொழிகளுக்கு அருகில் அட்டைக் கீலங்களில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள். அவற்றையும் விளக்குங்கள். மாணவர்களைப் பழமொழிகளின் விளக்கத்தைப் புரிந்துகொள்ள அவர்களுக்கு உதவுங்கள்.
- தரப்பட்டுள்ள பழமொழிகளைப் பிழையின்றி வாசித்தறிவதற்கு மாணவர்களுக்கு உதவுங்கள்.மாணவர்களை, இருவர் இருவராகச் சோடியாக்கி வாசிக்க ஊக்கப்படுத்துங்கள்.

எடுத்துக்காட்டு:

**பழமொழிகள்**

1. **அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.**
2. **அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.**
3. **ஆற்றிலே போட்டாலும் அளவறிந்து போடு.**
4. **உப்பிட்டவரை உள்ளளவும் நினை.**
5. **ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?**
6. **ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.**
7. **கடுகு சிறிதானாலும் காரம் பெரிது.**
8. **காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு.**
9. **காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.**
10. **குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்.**
11. **சிறு துளி பெருவெள்ளம்.**
12. **சூடுகண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது.**

- மாணவர்கள் பழமொழிகளில் பரிச்சயம் பெற்ற பின்னர் பழமொழிகளில் சில சொற்களை நீக்கி, கோடிட்டு வழங்குங்கள். கோடிட்ட இடங்களில் சரியான சொல்லை இட்டு எழுதிப் பூர்த்தி செய்ய வழிப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு:* 1

1. அடம்பன் ............... திரண்டால் மிடுக்கு.
2. அடிமேல் ................. அடித்தல் அம்மியும் நகரும்.
3. ஒரு பானை ................ ஒரு சோறு பதம்.
4. குற்றமுள்ள ............. குறு குறுக்கும்.
5. சூடு கண்ட ................... அடுப்பங்கரையை நாடாது.

*எடுத்துக்காட்டு :* 2



சொற்களை ஒழுங்குபடுத்திப் பழமொழிகள் ஆக்கும் பயிற்சியை வழங்குங்கள்.


*எடுத்துக்காட்டு :*

1. போட்டாலும் / அளவறிந்து / ஆற்றிலே / போடு
2. காரம் / சிறிதானாலும் / கடுகு / பெரிது
3. நெஞ்சு / குற்றமுள்ள / குறுகுறுக்கும்
4. உள்ளளவும் / நினை / உப்பிட்டவரை
5. தன்குஞ்சு / பொன் குஞ்சு / காக்கைக்கும்

**செயற்பாடு 8**

- தரம் 1, 2, 3 இல் கற்ற குறியீடுகளை மாணவர்களுக்கு நினைவுபடுத்துங்கள். அதன் பின்னர் மாணவர்களுக்குப் பின்வரும் குறியீடுகளைக் காட்சிப்படுத்தி அறிமுகம் செய்யுங்கள்.




- இக்குறியீடுகளைக் காட்சிப்படுத்துங்கள். குறியீடுகளின் கருத்தினைக் கேட்டறியுங்கள். அதன் பின்னர் அப்பியாசக் கொப்பியில் குறியீடுகளை வரைந்து, குறியீடுகளின் விளக்கத்தினையும் எழுதுமாறு வலியுறுத்துங்கள்.

**செயற்பாடு 9**

- மாணவர்களுக்கு பின்வரும் சுருக்கக் குறியீடுகளை அறிமுகம் செய்து அதன் விரிவினையும் விளக்குங்கள்.

**எடுத்துக்காட்டு:**

**சுருக்கக் குறியீடுகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | மு.ப | - | முற்பகல் |
| 2. | பி.ப | - | பிற்பகல் |
| 3. | பி.கு | - | பிற்குறிப்பு |
| 4. | கி.மு | - | கிறிஸ்துவுக்கு முன்பு |
| 5. | கி.பி | - | கிறிஸ்துவுக்கு பின்பு |

- மாணவர்கள் சுயமாக சுருக்கக் குறியீடுகளையும், சுருக்கக் குறியீடுகளின் விரிவினையும் அப்பியாசக் கொப்பியில் எழுதி வாசிக்க வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 10

- மாணவர்களுக்குப் பின்வரும் தொடர்மொழிக்கு ஒரு மொழியை A3 தாளில் பெரிய எழுத்துக்களில் எழுதி அறிமுகம் செய்யுங்கள். (தொடர்மொழியை ஒரு நிறத்திலும் ஒரு மொழியை வேறு ஒரு நிறத்திலும் எழுதுங்கள்.)

*எடுத்துக்காட்டு:*

**தொடர்மொழிக்கு ஒரு மொழி**

1. அகர வரிசைப்படி பொருள் கூறும் நூல் - **அகராதி**
2. முனிவர்கள் வசிக்கும் இடம் - **ஆச்சிரமம்**
3. விண் செலவு செய்பவன் - **ஊதாரி**
4. நம்ப முடியாத கதை - **கட்டுக்கதை**
5. தேர்தல் ஒன்றில் போட்டியிடுபவர் - **வேட்பாளர்**
6. ஒரே பாடசாலையில் ஒன்றாகப் படித்தவன் - **சகபாடி**
7. மற்றவர்களைப் பற்றி அக்கறை இல்லாதவன் - **சுயநலவாதி**
8. ஒரு தாய் வயிற்றில் பிறந்தோர் - **சகோதரர்**
9. தன்னைப் பற்றித் தானே எழுதும் சரிதை - **சுயசரிதை**
10. தெருக்கள் கூடுமிடம் - **சந்தி, சதுக்கம்**

- தொடர்மொழிக்கு ஒரு மொழியை கண்டுபிடித்து எழுதும் பயிற்சியை மாணவர்களுக்கு வழங்குங்கள்.

*எடுத்துக்காட்டு:*

1. முனிவர்கள் வசிக்கும் இடம் - …………………
2. தன்னைப் பற்றித் தானே எழுதும் சரிதை - …………………
3. ஒரு தாய் வயிற்றில் பிறந்தோர் - …………………

- மாணவர்கள் தொடர்மொழிக்கான ஒரு மொழியை உரத்து வாசிக்கவும் மௌனமாக வாசிக்கவும் வழிப்படுத்துங்கள். அப்பியாசக் கொப்பியில் பிழையின்றி எழுதி மீண்டும் வாசிக்க வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 11

- மாணவர்களுக்கு சொற்களைச் சேர்த்தெழுதும் பயிற்சியை வழங்குங்கள்.

*எடுத்துக்காட்டு* :

**சேர்த்தெழுதுதல்**

1. வாழை + பழம் = வாழைப்பழம்
2. பால் + குடம் = பாற்குடம்
3. மரம் + வேர் = மரவேர்
4. மா + காய் = மாங்காய்
5. பூ + சோலை = பூஞ்சோலை

6. பழம் + வகை = பழவகை
7. பனை + வேர் = பனைவேர்
8. மா + இலை = மாவிலை
9. பூ + அரும்பு = பூவரும்பு
10. மண் + குடம் = மட்குடம்
11. பால் + சோறு = பாற்சோறு
12. பொன் + காசு = பொற்காசு

- மேற் தரப்பட்ட பயிற்சியை மாணவர்கள் அறிந்து கொள்வதற்காக A3 தாளில் எழுதி ஒட்டுப் பலகையில் காட்சிப்படுத்தி வாசித்துக் காட்டுங்கள்.
- அதன் பின்னர் சேர்த்து எழுதும் சொற்களைத் தனித்தனியாக அட்டைக் கீலங்களில் எழுதிக் கொள்ளுங்கள்.

***எடுத்துக்காட்டு:***

| |
|---|
| பழம் + வகை= பழவகை |

- மாணவர்களை அறுவர் கொண்ட குழுக்களாக்குங்கள். ஒவ்வொரு குழுவுக்கும் 12 சேர்த்தெழுதும் அட்டைகளை கடதாசித் தட்டில் இட்டு வழங்குங்கள். மாணவர்கள் அவற்றைச் சரியாக உச்சரித்து வாசிக்க ஆர்வமூட்டுங்கள்.
- அதன் பின்னர் கீழே தரப்பட்டுள்ளவாறான பயிற்சி வழங்குங்கள்.

**எடுத்துக்காட்டு:**

| **தட்டு 1** | **தட்டு 2** |
|---|---|
| வாழை + பழம் | வாழைப்பழம் |
| பால் + குடம் | பாற்குடம் |
| பூ + சோலை | பூஞ்சோலை |

- முதலாவது மாணவ குழுவுக்கு **A** தட்டில் உள்ள அட்டைகளையும் மற்றைய குழுவுக்கு **B** தட்டில் உள்ள அட்டைகளையும் கொடுத்துக் கீழே காட்டப்பட்டுள்ளவாறு பயிற்சியை அளியுங்கள்.

**எடுத்துக்காட்டு:**

| **குழு A** | **குழு B** |
|---|---|
| பனை + வேர் | பனைவேர் |
| மா + இலை | மாவிலை |
| கல் + பாறை | கற்பாறை |

- குழு A இல் உள்ளவர் ஓர் அட்டையை எடுத்து வாசிக்க குழு B இல் உள்ளவர் அதற்கான சரியான விடை அட்டையை எடுத்து வாசிக்க வேண்டும். இச்செயற்பாடு முடிவடைந்ததும் A குழு அட்டைகளை B குழுவிற்கும் B குழு அட்டைகளை A குழுவிற்கும் வழங்குதல் வேண்டும். இவ்வாறு சேர்த்தெழுதும் போட்டியை வகுப்பறையில் மேற்கொள்ளலாம்.

- மானவர்களுக்கு பின்வரும் பயிற்சிகளையும் வழங்குங்கள்.

*எடுத்துக்காட்டு 1:*

**சேர்த்தெழுதும் பயிற்சி**

1. பூ + அரும்பு = ............................
2. பொன் + காசு = ............................
3. முள் + புதர் = ............................

*எடுத்துக்காட்டு 2:*

**தொடர்புபடுத்தும் பயிற்சி**

| அ | ஆ |
|---|---|
| 1. மா + காய் | பாற்சோறு |
| 2. பால் + சோறு | மட்குடம் |
| 3. மரம் + வேர் | மாங்காய் |
| 4. மண் + குடம் | மரவேர் |

**செயற்பாடு 12**

- மாணவர்கள் இதுவரை கற்றவற்றில் இருந்து மாணவர்கள் இடர்ப்படும் சொற்களைத் தெரிவுசெய்து சொல்வதெழுதலாக வழங்குங்கள். ஒரு நாளில் பத்துச் சொற்களுக்கு மேல் மாணவர்களுக்குச் சொல்வதெழுதலாக வழங்கக்கூடாது என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

**கணிப்பீடு :**

- கட்டுரையின் சுருக்கத்தைக் கூற முன்வருதல்
- மரபுச் சொற்களைக் கூறுதல்
- இணைமொழிகளை வாக்கியங்களில் அமைத்துக் கூறுதல் / எழுதுதல்
- இரட்டைக் கிளவியை, சரியாக வாக்கியங்களில் பயன்படுத்தி எழுதுதல் / வாசித்தல்
- விடுகதைகளை விடுவித்தல்
- பழமொழிகளை எழுதுதல் / வாசித்தல்
- குறியீடுகளை இனங்காணலும், சுருக்கக் குறியீடுகளை புரிந்து கொள்ளலும்
- தொடர்மொழிக்கு ஒரு சொல்லை எழுதுதல் / வாசித்தல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

**தேர்ச்சிகள் :**

$L_6$ – தொடர்பாடலுக்காகச் செவிமடுப்பார்.

$S_6$ – தொடர்பாடலுக்காகப் பேசுவார்.

**உள்ளடக்கம் :**

- உரையாடல்கள் (பொது இடங்கள்)
- வானொலி / தொலைக்காட்சி (நேர்முக வர்ணனை)
- அழைப்புச் செய்திகள்

**கற்றற்பேறுகள் :**

- பொது இடங்களில் எவ்வாறு பேச வேண்டும் என்பதைப் புரிந்துகொண்டு கண்ணியமாகப் பேசுவதுடன் மற்றவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்துச் செவிமடுத்துத் துலங்குவார்.
- வானொலி / தொலைக்காட்சி / இணையம் போன்றவற்றில் எவ்வாறு உரையாட வேண்டும் என்பதை அறிந்து துலங்குவார்.
- தொடர்பாடல் மேற்கொள்வார். (நேர்முக வர்ணனை / விளம்பரங்கள் / அழைப்புச் செய்திகள்)

**வளங்கள் :**

- மாதிரி வானொலிப் பெட்டி (காட்போட் பெட்டி), தொலைக்காட்சிப் பெட்டி (காட்போட் பெட்டி), ஒலிப்பதிவுக் கருவி, கணினி, திரைச்சீலை / மாதிரி ஒலிவாங்கி

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு 1**

- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். ஒவ்வொரு குழுவுக்கும் பொது இடங்களின் பெயர்களைத் தலைப்பாகக் கொடுங்கள்.

***எடுத்துக்காட்டு :***

| | | |
|---|---|---|
| புகையிரத நிலையம் | வைத்தியசாலை | சந்தை |
| நடைபாதையால் செல்லும்போது | நூலகம் | பேருந்து நிலையம் |

- மேற்குறிப்பிட்ட இடங்களில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை உரையாடல் மூலம் வெளிப்படுத்துமாறு மாணவர்களை உற்சாகப்படுத்துக.

***எடுத்துக்காட்டு :*** **வைத்தியசாலை**

வைத்தியசாலையில் உரத்துக் கதைப்பதைத் தவிர்க்க வேண்டும் என்பதையும் நோயாளர்களுக்கு இடையூறாக இருக்கக்கூடாது என்பதையும் மாணவர்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

- **வைத்தியசாலையில் நடைபெறும் உரையாடுதல்**

**எடுத்துக்காட்டு : 1**

| | | |
|---|---|---|
| குரல் 1 | : | ஐயா, எட்டாம் இலக்க வாட்இற்கு எப்படிப் போக வேண்டும்? |
| குரல் 2 | : | நேராகச் சென்று வலது பக்கமாகத் திரும்புங்கள் எட்டாம் இலக்க வாட் வரும். |
| குரல் 1 | : | நன்றி ஐயா. |

- **வைத்தியசாலையில் வைத்தியரிடம் உரையாடுதல்**

**எடுத்துக்காட்டு : 2**

| | | |
|---|---|---|
| வைத்தியர் | : | உங்களுக்கு என்ன செய்கிறது? |
| நோயாளர் | : | எனக்கு வயிற்றுக்குள் வலிக்கிறது. |
| வைத்தியர் | : | உங்களுக்கு எத்தனை நாளாக வலிக்கிறது? |
| நோயாளர் | : | ஒரு வாரமாக வலிக்கிறது. |
| வைத்தியர் | : | ஒரு வாரமாகவா! |
| நோயாளர் | : | வலி குறைந்துவிடும் என நினைத்தேன். |
| வைத்தியர் | : | ........................................................ |

- **பேருந்து நிலையத்தில் நடைபெறும் உரையாடல்**

**எடுத்துக்காட்டு : 3**

| | | |
|---|---|---|
| பயணி | : | கண்டி செல்ல வேண்டும், எத்தனை மணிக்குப் பேருந்து புறப்படும்? |
| நடத்துநர் | : | காலை எட்டு மணிக்கு |
| பயணி | : | நான் அவசரமாகச் செல்ல வேண்டும், என்ன செய்வது? |
| நடத்துநர் | : | இந்தப் பேருந்துக்குப் பின்னால் குளிரூட்டப்பட்ட பேருந்து நிற்கிறது. அதில் ஏறுங்கள். |
| பயணி | : | அந்தப் பேருந்து எத்தனை மணிக்குப் புறப்படும். |
| நடத்துநர் | : | இன்னும் பத்து நிமிடங்களில் புறப்படும். |
| பயணி | : | நான் அந்தப் பேருந்திலேயே செல்கிறேன். நன்றி. |

- **புகையிரத நிலைய நுழைவுச்சீட்டுப் பெறுமிடத்தில் நடைபெறும் உரையாடல்**

**எடுத்துக்காட்டு : 4**

| | | |
|---|---|---|
| குரல் 1 | : | ஐயா, மட்டக்களப்புக்குச் செல்லும் புகையிரதம் எத்தனை மணிக்கு வரும். |
| குரல் 2 | : | இன்னும் அரை மணித்தியாலத்தில் வரும். |
| குரல் 1 | : | மட்டக்களப்பிற்குச் செல்வதற்கான புகையிரதச்சீட்டை எங்கே பெறவேண்டும்? |
| குரல் 2 | : | அங்கே பாருங்கள், மூன்றாம் இலக்க புகையிரதச்சீட்டு வழங்கும் கருமபீடம் தெரிகிறது. அங்கு சென்று நுழைவுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளுங்கள். |
| குரல் 1 | : | நன்றி ஐயா. |

- நடைபாதையில் செல்லும்போது பெரியவர் ஒருவர் பாதையைக் கடப்பதற்குத் தடுமாறும்போது

**எடுத்துக்காட்டு : 5**

| | | |
|---|---|---|
| குரல் 1 | : | ஐயா, நீங்கள் எங்கே போக வேண்டும்? |
| குரல் 2 | : | வீதியின் மறுபக்கத்திற்குச் செல்லவேண்டும். |
| குரல் 1 | : | வாருங்கள் ஐயா, அந்த மஞ்சள் கோட்டு / வெள்ளைக் கோட்டுக் கடவையில் செல்வோம். |
| குரல் 2 | : | நன்றி தம்பி. |
| குரல் 1 | : | ஐயா, மெதுவாக என்னை கையைப் பிடித்துக்கொண்டு வாருங்கள். |
| குரல் 2 | : | சரி தம்பி. |
| குரல் 1 | : | பயப்படாதீர்கள், மஞ்சள் கோட்டு / வெள்ளைக் கோட்டு கடவையால்தானே கடக்கிறோம், பயப்படாதீர்கள். |
| குரல் 2 | : | மிக்க நன்றி தம்பி. |
| குரல் 1 | : | எனக்கு நன்றி சொல்லாதீர்கள். என் அப்பா போன்று இருக்கிறீர்கள். நான் உதவி செய்யாமல், வேறு யார் உதவி செய்வது |
| குரல் 2 | : | நல்ல பிள்ளை, நீ எதிர்காலத்தில் பெரிய ஆளாய் வருவாய் |
| குரல் 1 | : | நன்றி ஐயா. |
| ................ | | ................... |

- இதுபோன்ற உரையாடல்களை மாணவர்கள் உரையாட வாய்ப்பு வழங்குவதன் மூலம் எவ்வாறு உரையாடவேண்டும் என்பதையும் கண்ணியமாக உரையாடுவதன் முக்கியத்துவத்தையும் மாணவர்கள் உணர்ந்துகொள்வதற்கு வழிவகுக்கும் என்பதை நினைவிற்கொள்ளுங்கள்.

செயற்பாடு 2

- காட்போட் பெட்டிகளைக் கொண்டு மாதிரி வானொலிப்பெட்டி (பெரிய அளவில்) ஒன்றை உருவாக்கி அதன் பின்னணியிலிருந்து மாணவர்கள் கற்பனையாக நேர்முக வர்ணனை செய்ய ஆர்வமூட்டுங்கள்.

***எடுத்துக்காட்டு :***

**நேர்முக வர்ணனை - பேருந்து நிலையம் ஒன்றிலிருந்து ......**




- நாங்கள் இப்பொழுது பேருந்து நிலையத்தில் நின்றுகொண்டிருக்கின்றோம். நாளை மறுதினம் புதுவருடம் என்பதால் பேருந்து நிலையத்தில் பெருமளவான பிரயாணிகளைக் காண முடிகிறது.
- ஆம், பதுளை செல்வதற்காகப் பேருந்து வருகிறது. பொதுமக்கள் முண்டியடித்துக்கொண்டு பேருந்தில் ஏற முயலுகின்றனர். நடத்துநர் பயணிகளை ஏறவிடாது தடுக்கிறார்.
- வரிசையில் நின்று வருமாறு கூறுகிறார். அப்போது பயணிகளுக்கும் நடத்துநருக்கும் இடையே வாய்த்தர்க்கம் நடைபெறுகிறது.
- இந்த நிலையைக் கண்ட பொலிசார் இருவர் விரைந்து வருகின்றனர்.

- ஆம், இப்போது என்ன நடக்கப்போகிறது எனத் தெரியவில்லை.

**இப்போது நீங்கள் கேட்டுக்கொண்டிருப்பது உங்கள் எவ் எம் வானொலி.**

இதுபோன்று வெவ்வேறு வானொலி நேர்முக வர்ணனைகளில் மாணவர்கள் சுயமாக ஈடுபடுவதற்கு ஊக்குவியுங்கள்.

- வர்ணனையை மாதிரித் தொலைக்காட்சிப் பெட்டியூடாக மேற்கொள்வதற்கு வாய்ப்பை வழங்குங்கள்.
- பெரிய காட்போட் பெட்டியைக் கொண்டு செவ்வக வடிவிலான தொலைக்காட்சிப் பெட்டியை உருவாக்கி, அதனூடாக மாணவர்கள் நேர்முக வர்ணனை செய்ய ஊக்குவியுங்கள்.

**செயற்பாடு 3**

- மாதிரி வானொலி, தொலைக்காட்சிப் பெட்டியூடாக மாணவர்கள் விளம்பரங்களைக் கூற ஊக்கப்படுத்துங்கள்.
- ஏற்ற, இறக்கங்களுடன் பேசுவதற்கு விளம்பரங்கள் துணைபுரியும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

**எடுத்துக்காட்டு :**

**தூய வெண்மைக்கு**

**முகில் சவர்க்காரம்**

**உங்கள் ஆடைகள் பளிச்சென்று**
**வெண்மையாக இருக்க வேண்டுமா?**

**முகில் சவர்க்காரம் வாங்குங்கள்.**

**பாடசாலைச் சீருடைகள் பால் போன்று வெண்மையாக இருக்க**
**முகில் சவர்க்கார வாங்கிடுவீர்.**

**முகில் சவர்க்காரம்**
**வாங்குவோருக்கு**
**ஒரு கைக்குட்டை இலவசம்.**

**இவ்வரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள். இன்றே வாங்குங்கள்.**

- இவ்வாறு மாணவர்கள் சுயமாக விளம்பரங்களை உருவாக்கி, கவர்ச்சியாக அறிவிப்புச் செய்ய ஊக்கப்படுத்துங்கள்.

**குறிப்பு** : சந்தையில் விற்கப்படும் வியாபாரப் பொருட்களின் பெயர்கள் கூறுவதைத் தவிர்க்கவும். கற்பனையான பெயர்களைக் கூறவும்.

**செயற்பாடு 4**

- **"இன்றைய நிகழ்ச்சிகள்"** என வானொலி, தொலைக்காட்சிகளில் ஒலி, ஒளி பரப்பப்படுவதைக் கேட்டிருக்கிறீர்களா என மாணவர்களிடம் வினவுங்கள். அழைப்புச் செய்திகளை அறிமுகம் செய்யுங்கள்.

**எடுத்துக்காட்டு:**

| |
|---|
| இன்று மாலை 4 மணியளவில் பூஞ்சோலை மகா வித்தியாலயத்தில் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கலைவிழா விபுலாநந்தர் மண்டபத்தில் நடைபெற இருக்கிறது. அனைவரையும் அன்புடன் அழைக்கின்றார்கள். |

| |
|---|
| இன்று பாரதி மகா வித்தியாலயத்தில் காலை எட்டு மணி முதல் இரவு 8 மணி வரை சித்திரக் கண்காட்சி நடைபெற இருக்கிறது. அனைவரையும் வருகை தருமாறு அழைக்கின்றார்கள். |

- இது போன்ற அழைப்புச் செய்திகளை மாணவர்கள் மாதிரி வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகளுடாகக் கூறுவதற்கு வாய்ப்பினை வழங்குங்கள். மாணவர்கள் அழைப்புச் செய்திகளைக் கற்பனையாக உருவாக்குவதற்கு உதவுங்கள்.
- மாணவர்கள் சிறந்த தொடர்பாடற் திறனை வளர்த்துக்கொள்வதற்காக மேற்குறிப்பிட்ட வாறான பயிற்சிகளை வழங்குங்கள். தொடர்பாடல் திறனை வளர்ப்பதற்கு இப்பயிற்சிகள் மிக முக்கியமானவை என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

**கணிப்பீடு :**

- பொது இடங்களில் பண்புடன் உரையாடுதல் வேண்டும் என்பதைச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்துவார்.
- வானொலி, தொலைக்காட்சி நேர்முக வர்ணனை, விளம்பரம் செய்தல், அழைப்புச் செய்திகளைக் கூறுதல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

**தேர்ச்சிகள் :**

$R_6$ – தொடர்பாடலுக்காக வாசிப்பார்.

$W_6$ – தொடர்பாடலுக்காக எழுதுவார்.

**உள்ளடக்கம் :**

- அலுவலகங்களின் பெயர்கள்
- வானிலை அறிக்கை
- ஒட்டிகள் (லேபிள்கள்)
- விளம்பரங்கள்
- துண்டுப்பிரசுரங்கள்
- அழைப்பிதழ்கள்
- சுவரொட்டிகள்

**கற்றற்பேறுகள் :**

- மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கிய அலுவலகங்களின் பெயர்களை வாசித்துப் புரிந்து கொள்வதோடு தகவல்களையும் பெற்றுக் கொள்ள முயல்வார்.
- வானிலை தொடர்பாக வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, இணையத்தளம் மூலம் தகவல்களைப் பெற்று அறிக்கைப்படுத்துவார்.
- ஒட்டிகளின் பெயர்களை வாசித்துத் தெரிந்து கொள்வார்.
- விளம்பரங்களை புரிந்து வாசிப்பார், எழுதுவார்.
- துண்டுப்பிரசுரங்கள், அழைப்பிதழ்கள், சுவரொட்டிகள் போன்றவற்றை எழுதி வாசிப்பார்.

**வளங்கள் :**


- அலுவலகங்கள் (பெயர்கள்), வானிலை அறிக்கை எழுதப்பட்ட அட்டைகள், தினசரிப் பத்திரிகைகள், பல்வேறு வகையிலான ஒட்டிகள், விளம்பரங்கள், துண்டுப்பிரசுரங்கள், அழைப்பிதழ்கள், சுவரொட்டிகள் (ஆசிரியரால் தயாரிக்கப்பட்டவை)

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு 1**

- மாணவர்கள் அறிய வேண்டிய பொது இடங்களின் பெயர்களை அறிமுகம் செய்யுங்கள்.

***எடுத்துக்காட்டு:***



| | |
|---|---|
| தேசிய கல்வி நிறுவகம் | கமத்தொழில் அமைச்சு |
| புனர்வாழ்வு அமைச்சு | கலாசார அமைச்சு |


- மேலே தரப்பட்டுள்ள அலுவலகங்களின் பெயர்களை மாணவர்கள் வாசிக்க வழிப்படுத்துங்கள். அவ்வலுவலகங்களின் செயற்பாடுகள் பற்றி மாணவர்களுக்குக் கூறுங்கள். அதன் பின்னர் அவ்வலுவலகங்கள் தொடர்பான தகவல்களைப் பத்திரிகைகள், இணையத்தளங்கள் மூலம் திரட்டுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- மேற்குறிப்பிட்ட அமைச்சுக்களின் வலைத்தளங்களின் ஊடாக மாணவர்கள் தகவல்களைப் பெற்றுக்கொள்ள உதவுங்கள்.

***எடுத்துக்காட்டு:***

♦ கல்வியமைச்சின் இணையத்தளம்




♦ பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளம்




♦ தேசிய கல்வி நிறுவகத்தின் இணையத்தளம்



- இணையத்தின் ஊடாக மேற்குறிப்பிட்ட அமைச்சுக்களின் செயற்பணிகள், சேவைகள் போன்ற தகவல்களைக் குழுவாகத் திரட்டி எழுதி வகுப்பில் முன்வைக்க வழிப்படுத்துங்கள்.

செயற்பாடு 2

- வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள், இணையத்தளங்கள் போன்றவற்றின் ஊடாக வானிலையை அறிந்து கொள்ள மாணவர்களை ஊக்கப்படுத்துங்கள். நாட்டின் வானிலை அவ்வப்போது மாற்றமடைகிறது. அதனால் வானிலை பற்றி அறிந்துகொள்ள வேண்டிய தேவை ஏற்படுகிறது. மாணவர்கள் வானிலை பற்றி அப்பியாசக் கொப்பியில் குறித்துக் கொள்ள வழிப்படுத்துங்கள். ஆசிரியரும் வானிலை பற்றிய தகவல்களை மாணவர்களுக்கு வழங்க முடியும்.
- தினமும் இலங்கை வானொலிக் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவையில் வானிலை பற்றி வளிமண்டலவியல் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் கூறுவார்கள். அவர்கள் கூறுவதை மாணவர்கள் செவிமடுத்து அப்பியாசக் கொப்பியில் எழுதி வகுப்பின் முன் வந்து வாசித்துக்காட்ட ஊக்கப்படுத்துங்கள்.
- இச்செயற்பாட்டில் எல்லா மாணவர்களும் ஈடுபட வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

*எடுத்துக்காட்டு:*

**வானிலை முன்னறிவிப்பு**

**பொதுமக்களுக்கான வானிலை முன்னறிவிப்பு**

**இலங்கையைச் சூழவுள்ள கடற்பரப்பு**

**நகரங்கள் பற்றிய எதிர்வுகூறல்**

**2018 ஜூன் 07 ஆம் திகதிக்கான வானிலை முன்னறிவிப்பு**
**(2018 ஜூன் 07 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு வெளியிடப்பட்டது.)**


இயங்குநிலை தென்மேல் பருவப்பெயர்ச்சி காரணமாக நாட்டிலும் நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளிலும் காணப்படும் காற்றுடன் கூடிய நிலைமை அடுத்த சில நாட்களில் மேலும் வலுவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேல், தென், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடும். குறிப்பாக மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மி. மீக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை பெய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. தென், மத்திய, வட, வட மத்திய, வடமேல் மாகாணங்களிலும் மொனராகலை மாவட்டத்திலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 60 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசுமென எதிர்பார்க்கப்படுகின்றுது.

செயற்பாடு 3

- மாணவர்களுக்குக் கடைகளில் வாங்கும் பொதிசெய்யப்பட்ட பொருட்களின் பெயர்கள், உற்பத்தித்திகதி, காலாவதியாகும் திகதி எழுதப்பட்ட ஒட்டிகளை வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- மாணவர்களுக்குப் பொதி செய்யப்பட்ட பொருட்களின் ஒட்டிகளைக் காட்சிப்படுத்துங்கள். அவ் ஒட்டிகளை வாசித்துப் பொருளின் பெயர், உற்பத்தி செய்யப்பட்ட திகதி, காலாவதியாகும் திகதி என்பவற்றை மாணவர்கள் அப்பியாசக் கொப்பியில் குறித்துக் கொள்ள வழிப்படுத்துங்கள்.

- மாணவர்களுக்குத் தேவையற்ற, பொருத்தமற்ற பொருட்களில் அல்லது பொருத்தமற்ற போத்தல்களில் ஒட்டப்பட்டுள்ள அல்லது ரின்களில் ஒட்டப்பட்டுள்ள ஒட்டிகளை அறிமுகம் செய்வதைத் தவிர்த்துக் கொள்ளவும். தெரிவு செய்யப்பட்ட பொருட்களின் ஒட்டிகளை அறிமுகம் செய்யுங்கள். மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கி குறிப்பிட்ட ஒட்டிகளைச் சேகரிக்குமாறு கூறுங்கள். அவ்வாறு மாணவர்கள் சேகரித்த ஒட்டிகளை அப்பியாசக் கொப்பியில் ஒட்டி, அதில் உள்ள முக்கிய தகவல்களை அப்பியாசக் கொப்பியில் எழுத ஊக்கப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு:*




- மாணவர்களுக்கு கீழே தரப்பட்டுள்ளவாறான விளம்பரங்களை அறிமுகம் செய்யுங்கள்.

**சிறுவர்களே வாங்கிவிட்டீர்களா?**

# தாமரை

**சிறுவர்களுக்காக வண்ணத்தில் வெளிவரும் தமிழ்ச் சஞ்சிகை**

**இம்மாத இதழில்**

**கணினியின் புதிய வரவு**
**வாசிக்கத் தூண்டும்**
**அறிவியல் தகவல்கள்**
**நன்னெறிக் கதைகள்**
**உங்கள் சித்திரங்கள்**
**ஒளிப்படங்கள்**
**விகடத் துணுக்குகள்**
**விஞ்ஞானிகளின் சுயசரிதைத் தொடர்கள்**
**வியப்பூட்டும் பறவையினத் தொடர்கள்**
**வெல்லமுடிந்தால் வெல்லுங்கள்**
**பரிசுப்போட்டி**
**இன்னும் சுவையான அம்சங்களுடன்**
**கண்ணைக்கவரும் வண்ணத்தில்**

**உடனே வாங்குங்கள்.**
**வாசித்துப் பயனைப் பெறுங்கள்.**

- மாணவர்களின் வயது மட்டத்திற்குப் பொருத்தமான விளம்பரம் ஒன்றை அல்லது மேலே தரப்பட்டுள்ள விளம்பரத்தைப் பிரதியெடுத்து எல்லா மாணவர்களுக்கும் வழங்குங்கள். அதன் பின்னர் மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். குழுவாக விளம்பரத்தை ஆற்றுகை வாசிப்பின் மூலம் வாசிக்க வழிப்படுத்துங்கள். குரல் ஏற்ற, இறக்கங்களுடன் வாசிக்கவேண்டும் எனக் கூறுங்கள்.

- அதன் பின்னர் அவ்விளம்பரம் தொடர்பான வினாக்களைக் கொடுத்து விடையளிக்க வழிப்படுத்துங்கள்.

  ***எடுத்துக்காட்டு :***

  **வினாக்கள் :**

  1. தாமரை சஞ்சிகையை வாங்கிப் படிப்பவர்கள் யார்?
  2. இச்சஞ்சிகை எவ்வளவு காலத்திற்கு ஒருமுறை வெளிவருகிறது?
  3. சஞ்சிகையில் வெளிவரும் தொடர்கள் எவை?
  4. பரிசுப்போட்டியின் தலைப்பு எது?
  5. வியப்பூட்டும் தொடர் எதைப் பற்றியது?
  6. சஞ்சிகையில் இடம்பெற்றுள்ள கதைகள் எவை?
  7. இச்சஞ்சிகையின் சிறப்பு யாது?

- மாணவர்களை சுயமாக விளம்பரம் ஒன்றை A4 தாளில் எழுத வழிப்படுத்தங்கள்.
- மாணவர்கள் எழுதிய விளம்பரங்களை ஒட்டுப்பலகையில் காட்சிப்படுத்துங்கள். அவ்விளம்பரங்களை மாணவர்கள் வாசிக்க ஆர்வமூட்டுங்கள்.

**செயற்பாடு 4**

- பின்வரும் துண்டுப்பிரசுரத்தை மாணவர்களுக்கு அறிமுகம் செய்யுங்கள். அதன் பின்னர் மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். மாணவர்கள் எல்லோருக்கும் துண்டுப்பிரசுரத்தைப் பிரதியெடுத்துக் கொடுத்து உரத்தும் மௌனமாகவும் வாசிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் துண்டுப்பிரசுரம் தொடர்பான வினாக்களுக்கு விடையளிக்க வழிப்படுத்துங்கள்.

  ***எடுத்துக்காட்டு:*** துண்டுப்பிரசுரம் -- 1



*எடுத்துக்காட்டு:* துண்டுப்பிரசுரம் - 2

## பொதுமக்களே!

**சூழலைப் பாதுகாக்க வேண்டியது எமது கடமையல்லவா!**

**காற்று அசுத்தமாகி வருகிறது.**
**நீர் அசுத்தமாகி வருகிறது.**

**இது பற்றிச் சிந்தித்ததுண்டா!**

**காற்று எவ்வாறு அசுத்தமாகிறது தெரியுமா?**

**குப்பைகளை எரிப்பதால்**
**தொழிற்சாலைகளில் இருந்து வெளிவரும் புகையால்**
**வாகனங்களில் இருந்து வெளிவரும் புகையால்**
**பிளாஸ்ரிக் பொருட்களை எரிப்பதால் வரும் நச்சுப்புகையால்**

**நீர் எவ்வாறு அசுத்தமாகிறது தெரியுமா?**

**குப்பைகளை ஆற்றில் கொட்டுவதால்**
**பயிர்ச்செய்கையின்போது கிருமிநாசினிகளையும் உரங்களையும் பயன்படுத்துவதால்**
**கழிவுநீர் ஆற்றுடன் கலப்பதால்**

**நீங்கள் நோயாளியாகப் போகிறீர்களா?**
**இதற்கெல்லாம் காரணம் யார்?**

**அபாயம் நெருங்குகிறது**
**சிந்தியுங்கள். உண்மை புரியும்.**

**சூழலைப் பாதுகாக்க முன்வாருங்கள்.**

**- சூழலைப் பாதுகாக்கும் நண்பர்கள்அமைப்பு**

**வினாக்கள் :**

1. சூழலைப் பாதுகாக்க வேண்டியது யாருடைய கடமை?
2. எவை அசுத்தமாகி வருகின்றன?
3. காற்று எவ்வாறு அசுத்தமாகிறது?
4. நீர் எவ்வாறு அசுத்தமாகிறது?
5. துண்டுப்பிரசுரத்தை யார் வெளியிட்டுள்ளார்கள்?

- மேற்குறிப்பிட்டவாறான துண்டுப்பிரசுரங்களை மாணவர்கள் ஆக்குவதற்கு வழிகாட்டுங்கள்.
- பல்வேறு பத்திரிகைகளில் அல்லது சஞ்சிகைகளில் உள்ள அல்லது வீதியில் செல்லும்போது வழங்கப்பட்ட துண்டுப்பிரசுரங்களைச் சேகரித்து அப்பியாசக் கொப்பியில் ஒட்டி வாசிக்க வழிப்படுத்துங்கள்.

- மாணவர்களுக்குப் பின்வருவன போன்ற அழைப்பிதழ்களை அறிமுகஞ் செய்யுங்கள். மாணவர்கள் இதுபோன்ற அழைப்பிதழ்களைச் சேகரித்து வருமாறு முன்கூட்டியே கூறுங்கள்.

எடுத்துக்காட்டு :




- அவ்வழைப்பிதழ்களை வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள். காட்சிப்படுத்திய அழைப்பிதழ்களை மாணவர்கள் வாசிக்க ஆர்வமூட்டுங்கள்.

**செயற்பாடு 5**

- மாணவர்களும் ஆசிரியர்களும் இணைந்து அழைப்பிதழ்களை வடிவமைத்து அதனை அழகுபடுத்துங்கள்.
- அதன் பின்னர் மாணவர்களை குழுக்களாக்கி, குழுவாக அழைப்பிதழ்களை வடிவமைக்க வழிப்படுத்துங்கள்.
- மாணவர்களுக்கு அவ் அழைப்பிதழ் தொடர்பான வினாக்களை வழங்கி விடையெழுத வழிப்படுத்துங்கள்.

1. ..........................................................................................................................
2. ..........................................................................................................................
3. ..........................................................................................................................
4. ..........................................................................................................................

**செயற்பாடு 6**

- மாணவர்களுக்கு சுவரொட்டி ஒன்றை அறிமுகம் செய்யுங்கள். சுவரொட்டியின் அமைப்பு, எழுத்துக்களின் அளவு, சொற்களின் எண்ணிக்கை, வடிவமைப்பு, பயன்படுத்தப்பட்டுள்ள நிறங்கள் போன்றவை தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.

*எடுத்துக்காட்டு :*

சுவரொட்டி (மாதிரி)




- மாணவர்களுடன் சேர்ந்து A3 தாளில் சுவரொட்டி ஒன்றை ஆக்கிக் காட்சிப்படுத்துங்கள்.
- அச்சுவரொட்டி பற்றி மாணவர்களைக் கூறச் செய்யுங்கள்.
- அதன் பின்னர் மாணவர்களை எழுமாற்றாக அழைத்து சுவரொட்டியை உரத்து வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- சுவரொட்டி தொடர்பான வினாக்களுக்கு விடையளிக்க வழிப்படுத்துங்கள்.

  எடுத்துக்காட்டு :

  1. கண்காட்சி எது தொடர்பானது?
  2. கண்காட்சி எத்தனை நாட்கள் நடைபெறுகிறது?
  3. கண்காட்சி நடைபெறும் இடம் எது?

**கணிப்பீடு :**

- அலுவலகங்களின் பெயர்களை அறிதல், தகவல்களைத் திரட்டுதல், முன்வைத்தல்
- வானிலை அறிக்கையை எழுதுதல், வாசித்தல்
- ஒட்டிகளை வாசித்து, முக்கிய தகவல்களை எழுதுதல்
- விளம்பரங்களை வாசித்தல், விடையளித்தல்
- துண்டுப்பிரசுரங்களை வாசித்து விடையளித்தல்
- அழைப்பிதழ்களை வாசித்து விடையளித்தல்
- சுவரொட்டிகளை வாசித்து விடையளித்தல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

**தேர்ச்சிகள் :**

- $L_7$ – மொழியாட்சித்திறனை விருத்தி செய்வதற்காகச் செவிமடுப்பார்.
- $S_7$ – மொழியாட்சித்திறனை விருத்தி செய்வதற்காகப் பேசுவார்.
- $R_7$ – மொழியாட்சித்திறனை விருத்தி செய்வதற்காக வாசிப்பார்.
- $W_7$ – மொழியாட்சித்திறனை விருத்தி செய்வதற்காக எழுதுவார்.

**உள்ளடக்கம் :**

- காட்சிப் படங்கள்
- சுயசரிதை
- மூதுரை
  (விதந்துரைக்கப்பட்ட ஐந்து பாடல்கள்)
- கிராமிய விளையாட்டுக்கள் (சிறிய)
- பண்டிகைகள் (இசைக் கருவிகள்)

**கற்றற்பேறுகள் :**

- காட்சிப் படங்களைப் பார்த்து தமது மொழிநடையில் விபரிப்பார், எழுதுவார்.
- சுயசரிதைகள் ஊடாக விருப்புடன் தகவல்களை அறிந்து கொள்வார். முன்வைப்பார்.
- விதந்துரைக்கப்பட்ட மூதுரைப் பாடல் அடிகளை (ஐந்து பாடல்கள்) மனனஞ் செய்து தெளிவாக முன்வைப்பார். அவற்றின் கருத்தினை அறிந்து எழுதி வாசிப்பார்.
- கிராமிய விளையாட்டுக்களின் விதிமுறைகளை அறிந்து மற்றவர்களுடன் இணைந்து விளையாடுவார்; மகிழ்வுறுவார்; விளையாட்டு விதிகளை எழுதி வாசிப்பார்.
- பாரம்பரியப் பண்டிகைகளில் வாசிக்கப்படும் இசைக் கருவிகளைத் தெரிந்து கொள்ள முன்வருவார். இசைக் கருவிகளின் பெயர்களையும் தகவல்களையும் அறிந்து எழுதி வாசிப்பார்.

**வளங்கள் :**

- காட்சிப் படங்கள், சுயசரிதை எழுதப்பட்ட அட்டைகள், விதந்துரைக்கப்பட்ட மூதுரைப் பாடல்கள் எழுதப்பட்ட அட்டைக் கீலங்கள், இசைக் கருவிகள் தொடர்பான படங்கள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு 1**

- மாணவர்கள் நிகழ்காலத்தில் விபரித்துக் கூறக்கூடிய காட்சிப் படமொன்றைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள். அப்படத்தைக் குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப (ஒரு குழுவில் ஐவர் இடம்பெற வேண்டும்) பிரதியெடுத்து அட்டைகளில் ஒட்டி, குழுவுக்கு ஒரு பட அட்டை வீதம் வழங்குங்கள். காட்சிப் பட அட்டையைப் பார்த்து நிகழ்காலத்தில் விபரித்து வாக்கியங்களாகக் கூறவும் எழுதவும் எழுதிய வாக்கியங்களைத் தமது குழுக்களிடையே வாசித்துக்காட்டவும் வழிப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு :**



- காட்சிப்படத்தைப் பார்த்து மாணவர்கள் கூறும் வாக்கியங்களில் இருந்து பொருத்தமான வாக்கியங்களைத் தெரிவு செய்து அட்டைக் கீலங்களில் எழுதிக் காட்சிப்படுத்தி மாணவர்களை வாசிக்கவும் அவற்றை அப்பியாசக் கொப்பியில் பிழையின்றி எழுதி நிறுத்தக்குறிகளை இடவும் வழிப்படுத்துங்கள்.
- மேலே தரப்பட்டவாறான காட்சிப்படங்களைத் தெரிவு செய்து மாணவர்களுக்கு வழங்குங்கள். மாணவர்கள் அக்காட்சிப்படங்களைப் பார்த்து நிகழ்காலத்தில் எழுத வழிப்படுத்துங்கள்.

**செயற்பாடு 2**

- மாணவர்கள் ஏற்கனவே கற்ற சுயசரிதை ஒன்றை நினைவுபடுத்துங்கள். அதன் பின்னர் உங்கள் **"ஈருருளி"** பேசினால் எப்படிப் பேசும் என்று கேட்டறியுங்கள். அதன் பின்னர் **"ஈருருளி"** என்ற சுயசரிதையை அறிமுகம் செய்யுங்கள்.

**எடுத்துக்காட்டு:**

என்னைத் தெரிகிறதா?



நான் தான் முதன் முதலில் கண்டு பிடிக்கப்பட்ட ஈருருளி.

என்னை மிதிவண்டி, சைக்கிள் என்ற பெயர்களாலும் அழைப்பார்கள்.

நான் 1817 ஆம் ஆண்டு பிறந்தேன்.

என்னைப் பாரன் கார்ல் டிராய்ஸ் தி சாயர் பர்ன் என்பவரே கண்டு பிடித்தார்.

எவ்வளவு நீளமான பெயர் என்று யோசிக்கின்றீர்களா?

என்னைப் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவரே கண்டு பிடித்தார்.

அவர் என்னை முழுக்க முழுக்க மரத்தாலே செய்தார்.

மிதிப்பதற்குப் பெடல் எல்லாம் கிடையாது!

காலைத் தரையில் உந்தித் தள்ளிக்கிட்டே போகவேண்டியது தான்!

அந்தக் காலத்தில் குதிரைகளில், அல்லது குதிரைகள் பூட்டிய வண்டிகளிற் தான் பயணம் செய்வர்.

குதிரையின் உபயோகம் இல்லாமல் வேகமாகச் செல்வதற்கு என் சகோதரர்களைப் பயன்படுத்தினர்.

பிறகு ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த பியர்ரி லேல்மெண்ட் என்பவர் 1866 ஆம் ஆண்டு ஓர் ஈருருளியை வடிவமைத்தார்.

இது இரண்டு சக்கரங்களை ஒரு பாம்பு போன்ற இரும்புக் குழாய் மூலம் இணைத்து வடிவமைக்கப்பட்டது!

இதற்கு மிதிப்பதற்குப் பெடல் இருந்தது!

ஆனால் முன் சக்கர அச்சில் இணைக்கப்பட்டிருந்தது!

என் சகோதரர்கள் பரிணாம வளர்ச்சியடைந்து தற்போதுள்ள நிலைக்கு வந்துள்ளார்கள். எனது நவீன சகோதர்களுக்கு முந்நூறுக்கும் மேற்பட்ட பாகங்கள் உள்ளன.

இன்றும் என் சகோதரர்களுக்கு உள்ள மவுசு குறையவில்லை!

உலகிலேயே எங்களை அதிகம் பயன்படுத்துவோர் சீன மக்கள் ஆவர்.

நாங்கள் பல சாதனைகளுக்கு உதவியிருக்கின்றோம்.

சுற்றுச் சூழலை மாசுபடுத்தாத, தேக ஆரோக்கியத்திற்கு ஏற்றதாக, விரைந்து செல்வதற்கு உகந்ததாக இருக்கும் வாகனம் நாங்கள் தான் என்பதில் ஐயமில்லை!

- அதன் பின்னர், மாணவர்கள் எல்லோருக்கும் சுயசரிதையைப் பிரதியெடுத்து வழங்குங்கள். மாணவர்களை இருவரிருவராகச் சோடி சேர்த்து வாசிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர், வகுப்பின் முன் வந்து ஈருருளிப் படத்தைப் காட்டி ஈருருளி பேசுவது போன்று பேசிக்காட்ட மாணவர்களைப் பயிற்றுவியுங்கள். மாணவர்களை ஈருருளியில் பயணம் செய்வது போன்று போலச் செய்து காட்ட ஊக்கப்படுத்துங்கள்.
- மாணவர்கள் வாசித்த சுயசரிதை வாக்கியங்களைக் கரும்பலகையில் / வெண்பலகையில் எழுதுங்கள். அவ்வாக்கியங்களை மாணவர்கள் கொப்பியில் எழுதி வாசித்துக்காட்ட ஊக்கப்படுத்துங்கள்.
- மாணவர்களின் வயது மட்டத்திற்குப் பொருத்தமான பயன்மிக்க வேறு சுயசரிதை களையும் அறிமுகம் செய்யுங்கள். மாணவர்கள் தங்கள் பொது அறிவினை வளர்த்துக் கொள்வதற்கு சுயசரிதைகள் துணை புரியும் என்பதனை நினைவிற் கொள்ளுங்கள்.

**எடுத்துக்காட்டு:**

- பென்சில்
- முத்திரை
- கணினி
- விசிறி
- மை
- நூலகம்
- குடை
- தொப்பி

செயற்பாடு 3

- சுயசரிதை வாக்கியங்களில் சில சொற்களை நீக்கி கோடிடுங்கள். அவ்வாக்கியங்களைப் பூர்த்திசெய்யுமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குங்கள்.

  *எடுத்துக்காட்டு:*

  1. என்னை ..................... , சைக்கிள் என்ற பெயர்களாலும் அழைப்பார்கள்.
  2. என்னை .......................... நாட்டைச் சேர்ந்தவரே கண்டு பிடித்தார்.
  3. அவர் என்னை முழுக்க முழுக்க .............................. செய்தார்.
  4. நாங்கள் பல ........................................ உதவியிருக்கின்றோம்.
  5. உலகிலேயே எங்களை அதிகம் பயன்படுத்துவோர் ........................ ஆவர்.

- மாணவர்கள் சுயமாக இப்பயிற்சியைச் செய்ய ஊக்கப்படுத்துங்கள். இதுபோன்ற வேறு பயிற்சிகளையும் வழங்குங்கள்.

செயற்பாடு 4

- விதந்துரைக்கப்பட்ட மூதுரைப் பாடல்களை மாணவர்களுக்கு அறிமுகம் செய்யுங்கள்.

  எடுத்துக்காட்டு:

**மூதுரை**

**1.** **நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந் நன்றி
என்று தருங்கொல் என வேண்டா - நின்று
தளரா வளர் தெங்கு தாள் உண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால்.**

**2.** **நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப் போல் காணுமே - அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்
நீர் மேல் எழுத்துக்கு நேர்.**

**3.** **நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலம்மிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி யிருப்பதுவும் நன்று.**

**4.** **நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடிப்
புல்லுக்கும் ஆங்கேபொசியுமாம் தொல் உலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை.**

**5.** **அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவு அல்லர் - அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு.**

- மூதுரைப் பாடல் அடிகளை மாணவர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள். மாணவர்களுடன் சேர்ந்து வாசியுங்கள். அதன் பின்னர் மூதுரைப் பாடல் அடிகளை எழுதுமாறு கூறுங்கள். அதன் பின்னர் அப்பியாசக் கொப்பியில் எழுதி, வாசிக்க ஆர்வமூட்டுங்கள். மாணவர்கள் மூதுரைப் பாடல் அடிகளை மனனம் செய்ததும் ஒவ்வொருவராக அழைத்து மூதுரைப் பாடல்களைக் கூறச் செய்யுங்கள். எல்லா மூதுரை அடிகளையும் ஒரே நாளில் மனனம் செய்து கூற வற்புறுத்தாதீர்கள். மூதுரைப் பாடல் அடிகளை மாணவர்கள் நினைவில் வைத்துக்கொள்ளக்கூடிய வகையில் பயிற்சி அளியுங்கள். **mp3 வடிவில்** உள்ள மூதுரைப் பாடல்களை இணையத்தில் அல்லது ஆசிரிய ஆலோசகர்களிடம் இருந்து பெற்று மாணவர்களுக்கு ஒலி வடிவில் அறிமுகஞ் செய்யுங்கள்.

**செயற்பாடு 5**

- மாணவர்கள் நன்கு பயிற்சி பெற்றதும் மூதுரைப் பாடல் அடிகளில் சில சொற்களை நீக்கிக் கோடிடுங்கள். கோடிட்ட இடங்களைப் பூர்த்திசெய்ய மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு:*

2. நல்லார் ......................... செய்த உபகாரம்
கல்மேல் ........................... காணுமே - அல்லாத
ஈரமிலா .............................. ஈந்த உபகாரம்
நீர் மேல் எழுத்துக்கு நேர்.

3. நல்லாரைக் ....................... நன்றே நலம்மிக்க
நல்லார் சொல் ................... நன்றே - நல்லார்
குணங்கள் ........................ நன்றே அவரோடு
இணங்கி யிருப்பதுவும் நன்று.

- கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்யும் பயிற்சியின் பின்னர் பூர்த்திசெய்த மூதுரைப் பாடல் அடிகளை மாணவர்கள் சுயமாக முன்வந்து வாசித்துக்காட்ட ஊக்கப்படுத்துங்கள்.

**செயற்பாடு 6**

- மூதுரைப் பாடல் அடிகளின் கருத்துக்களை மாணவர்கள் வாசித்தறிய வழிப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு:*

1. **நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந் நன்றி.........................**

**பொருள்:** ஒருவர்க்கு உதவி செய்யும்போது, அதற்கு பிரதியுபகாரமும், நன்றியும் எப்போது கிடைக்கும் என்று கருதி செய்யக்கூடாது. எப்படிப்பட்ட நீரை வேர் மூலம் உண்டாலும், நன்கு தளராது வளர்ந்துள்ள தென்னை மரம் அந்நீரை சுவையான இளநீராக தந்துவிடும். அதுபோல ஒருவர்க்கு செய்த சிறு உதவியும் பெரிய விதத்தில் நமக்கு ஒரு காலம் நிச்சயம் நன்மை பயக்கும்.

**2. நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்.....................**

**பொருள்:** நல்லவர்களுக்கு செய்யும் உதவி, கல்லின் மேல் எழுத்தைச் செதுக்குவது போன்றது. அது எவரும் அறியும் வண்ணம் என்றும் நிலைத்திருக்கும். அப்படியல்லாது இரக்கமற்ற வர்களுக்கு செய்யும் உதவி எவர்க்கும் பயன்தராது. அது நீரின் மேல் எழுதும் எழுத்துக்களைப் போன்று பயனின்றி நிலைக்காது போகும்.

**3 நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலம்மிக்க........**

**பொருள்:** நல்லவர்களைக் காண்பதும், நமக்கு நன்மை பயக்கும் அவர் சொல்லைக் கேட்பதுவும் அவர்கள் குணங்களை மற்ற வரிடத்தில் சொல்வதுவும் அவர்களோடு சேர்ந்து இருப்பதுவும் நல்லது.

**4 நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடிப் .......**

**பொருள்:** உழவன் நெல்லுக்குப் பாய்ச்சும் நீர் அங்கிருக்கும் புல்லுக்கும் பயனைத் தரும். அது போலவே இந்தப் பழமையான உலகில் நல்லவர் ஒருவர்க்காகப் பெய்யும் மழை (பலன்கள்) எல்லாருக்குமே பயனைத் தரும்.

**5. அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்.......**

**பொருள்:** குளத்தில் நீர் வற்றிய உடன் விலகிச் செல்லும் பறவைகள் போல, நமக்குத் துன்பம் வந்தபோது நம்மை விட்டு விலகிச் செல்பவர்கள் உறவினர் அல்லர். அந்தக் குளத்திலேயே அப்போதும் சேர்ந்து வாடும் கொட்டி, அல்லி, நெய்தல் கொடிகளைப் போல, நம்முடனேயே நம் துன்பங்களையும் பகிர்ந்துகொள்பவர்களே நம் உறவு.

செயற்பாடு 7

- கெந்தி விளையாட்டை அறிமுகம் செய்யுங்கள். விளையாட்டு விதிகளையும் அவர்களுக்கு விளக்குங்கள்.

**எடுத்துக்காட்டு:**

## கெந்தி விளையாட்டு

நாம் நம் பண்டைய விளையாட்டுக்களை முற்றிலும் மறந்து விட்டோம். அவற்றில் ஒன்று தான் கெந்தி விளையாட்டு. ஓடுபவர்களை ஒற்றைக்காலால் கெந்தி அடித்துத் தொடுவது **கெந்தி** விளையாட்டாகும். இது சிறுவர்களுக்கு சிறந்த உடற்பயிற்சி ஆகும். கெந்தி விளையாட்டு பிள்ளைகளின் உடலுக்குப் புத்துணர்ச்சியை அளித்து, அவர்களின் சோம்பேறித்தனத்தைக் குறைக்கிறது.

இது கால்களுக்கு இரத்த ஓட்டத்தை அதிகப்படுத்துகிறது. இழப்பில் ஈடுகட்டும் ஆற்றலைத் தருவதோடு, தன்னம்பிக்கையையும் அதிகரிக்கிறது.

கெந்தி விளையாட்டிற்கு இத்தனை பேர் விளையாட வேண்டும் என வரைமுறை எதுவும் இல்லை. இதில் எத்தனை பேர் வேண்டுமானாலும் பங்குபற்றலாம்.

வட்டம் அல்லது சதுரம், இதில் ஏதேனும் ஒன்றை போட்டுக் கொள்ள வேண்டும் விளையாட்டில் கலந்து கொண்டவர்கள் குறிப்பிட்ட எல்லைக்குள் ஓட வேண்டும். அவர்களை ஒருவர் கெந்தி அடித்துச் சென்று தொடவேண்டும். கெந்தி அடித்துச் செல்பவரின் கால் வலித்தால் குறிப்பிட்ட எல்லைக்குள் (காலை வைத்து) போடப்பட்டிருக்கும் சிறு வட்டத்தினுள் நின்று கொள்ளலாம். வட்டத்தை தவிர மற்ற பகுதியில் காலை ஊன்றக் கூடாது. கெந்தி அடித்துச் செல்பவர் ஒருவரைத் தொட்டால், தொடப்பட்டவர் ஆட்டத்திலிருந்து வெளியேற வேண்டும். குறிப்பிட்ட எல்லைக்குள் காலை ஊன்றினால் அதற்கு முன் தொடப்பட்டவர் உள்ளே மீண்டும் வந்து ஓடும் வாய்ப்பை பெறுவார். இவ்வாறு கெந்தி விளையாட்டு தொடரும்.

- இவ் விதிமுறைகளை மாணவர்களுக்குப் புரியும்படி எடுத்துக்கூறுங்கள். அதன் பின்னர் கெந்தி விளையாட்டு தொடர்பான பயிற்சிகளை வழங்குங்கள்.

**குறிப்பு:** இது போன்ற உங்களது பிரதேசத்திலுள்ள சிறுவர்களுக்கான வேறு விளையாட்டுக்களையும் அறிமுகம் செய்யுங்கள்.

செயற்பாடு 8

- பண்டிகைகளின் போது, நிகழ்வுகளின் போது வாசிக்கப்படும் இசைக் கருவிகள் பற்றிக் கேட்டறியுங்கள். வாசிக்கும் வாத்தியக் கருவிகளை மாணவர்களுடன் சேர்ந்து பட்டியற்படுத்துங்கள். அவற்றின் பெயர்களை அப்பியாசக் கொப்பியில் எழுத மாணவர்களுக்கு வழிப்படுத்துங்கள். அவற்றின் அருகே படங்களை ஒட்டி அக்கருவிகள் பற்றி சிறிய குறிப்புக்களையும் எழுத வழிப்படுத்துங்கள்.

பண்டைத் தமிழர்கள், இசைக்கருவிகளை, தோற் கருவி, நரம்புக்கருவி, துளைக்கருவி, கஞ்சக்கருவி என வகைப்படுத்திப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

**தோற்கருவிகள்:**

தோலை இறுக்கிக் கட்டி, அத்தோலைத் தட்டுவதன் மூலம் ஒலி எழுப்பக்கூடிய வாத்தியங்கள் தோற்கருவிகளாகும்.

தவில், கஞ்சிரா, மிருதங்கம், தபேலா

**நரம்புக்கருவிகள்**

தந்திகள் மூலம் நாதம் உண்டாகும் வாத்தியங்கள் நரம்புக்கருவிகளாகும்.

தம்புரா, வீணை, சித்தார், வயலின், கோட்டு வாத்தியம்

**துளைக்கருவிகள்:**

இசைக்கருவிகளில் உள்ள துளைகளின் ஊடாகக் காற்றுப் புகுந்து வெளிவருவதன் மூலம் இசை உண்டாகும் வாத்தியங்கள் துளைக்கருவிகளாகும்.

நாதஸ்வரம், மகுடி, புல்லாங்குழல்

**கஞ்சக் கருவிகள்**

உலோகத்தினால் செய்யப்பட்ட இசைக்கருவிகள் கஞ்சக்கருவிகள் எனப்படும்.

மோர்சிங், கைத்தாளம்

**அரங்கிசையில் வாசிக்கப்படும் முக்கிய கருவிகள்**

வீணை, கோட்டு வாத்தியம், புல்லாங்குழல், நாதசுவரம், வயலின்

**அரங்கிசையில் வாசிக்கப்படும் துணைக்கருவிகள்**

வயலின், மிருதங்கம், தவில், கஞ்சிரா

**கிராமிய இசைக்கருவிகள்**

எக்காளம், கஞ்சிரா, தவண்டை, உடுக்கை, தம்பட்டம்











- பாரம்பரிய இசைக் கருவிகளைப் பற்றித் தேடியறிந்து அக்கருவிகள் பற்றிக் குறிப்புக்களை எழுதுவதற்கு மாணவர்களை ஊக்கப்படுத்துங்கள்.

  **எடுத்துக்காட்டு :**

  **கடம்:** கடம் கர்நாடக இசையுடன் தொடர்புடைய தாள வாத்தியக் கருவிகளில் ஒன்றாகும். இது மிக எளிமையான ஓர் இசைக்கருவி ஆகும். இது ஒரு பெரிய மண் பானையில் தட்டுவதன் மூலம் ஒலி எழுப்பப்படும் இசைக்கருவியாகும். கட இசைக்கலைஞர்கள் அமர்ந்த நிலையில் கடத்தின் வாயைத் தன் வயிற்றோடு ஒட்ட வைத்துக் கொண்டு இரண்டு கைகளாலும் அடித்து வாசிப்பார்.

  **நாதஸ்வரம்**: நாதஸ்வரம் துளைக்கருவி வகையைச் சேர்ந்த ஓர் இசைக்கருவியாகும். இது நாதசுவரம், நாதசுரம், நாகசுரம், நாகஸ்வரம். நாயனம் என்று பலவாறு அழைக்கப்படுவது உண்டு. திறந்த இடத்தில் இசைப்பதற்கு ஏற்றது. வெகு தூரத்தில் இருந்து கேட்டாலும் இன்பத்தைத் தரும் இயல்பினைக் கொண்டது.

- பாடசாலையில் சில புத்தளிப்புக் கருவிகளைச் செய்து பயன்படுத்துவதற்கும் மாணவர்களை ஊக்குவியுங்கள்.
- அதிபரின் அனுமதியுடன் பெற்றோரின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ளுங்கள். பாரம்பரிய இசைக் கருவிகளையோ மாதிரி வாத்தியக் கருவிகளையோ காட்சிப்படுத்த மாணவர்களுக்கு உதவுங்கள். இசைக் கருவிக் கண்காட்சி என்ற பெயரில் கண்காட்சியை வகுப்பு மட்டத்தில் ஏற்பாடு செய்யுங்கள். அக்கண்காட்சியில் ஒலிக் கீற்றுக்களையும் **(Mp3)** ஒலிக்கச் செய்யலாம். கண்காட்சியை பார்வையிட வருவோருக்கு இசைக் கருவிகள் பற்றிய விளக்கங்களை மாணவர்களே வழங்குவதற்கு அவர்களைப் பயிற்றுவியுங்கள்.

**கணிப்பீடு :**

- காட்சிப் படங்களைப் பார்த்து நிகழ்காலத்தில் கூறுதல், எழுதுதல்
- சுயசரிதையை, போலச் செய்தல் மூலம் முன்வைத்தல், எழுதுதல்
- விதந்துரைக்கப்பட்ட மூதுரை அடிகளைப் பிழையின்றிக் கூறுதலும் எழுதுதலும்
- கிராமிய விளையாட்டுக்களை அறிந்து கூறுதலும் விருப்புடன் விளையாடுதலும்
- பாரம்பரிய இசைக் கருவிகள் தொடர்பான அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ளல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

## மீட்டற் பயிற்சிகள்

- மாணவர்களுக்குப் பின்வருவன போன்ற மீட்டற் பயிற்சிகளை வழங்கி கணிப்பிடுங்கள்.

**பயிற்சி 4**

- **பின்வரும் பந்தியிலுள்ள கோடிட்ட இடங்களை கட்டத்திற்குள் தரப்பட்டுள்ள சொற்களிலிருந்து தெரிந்தெடுத்துப் பூர்த்தி செய்க.**

| |
|---|
| பருப்பு, வகைகளில், மாச்சத்து, அரிசி, உடலுக்கு, உணவாக, |

உலகத்திலே உள்ள எல்லா மக்களுக்கும் முக்கிய 1. ...................... அமைந்தவை தானிய உணவு வகைகளே. அரிசி, கோதுமை, கேழ்வரகு, சோளம், கம்பு முதலிய தானிய வகைகள் உணவாகக் கொள்ளப்படுகின்றன. தானிய உணவில் பொதுவாக 2. ...................... இருக்கின்றது. இது உணவு 3. ......................... முக்கியமானதாகும். 4. ......................... நமது நாட்டு மக்களின் முக்கிய உணவாகும். தானிய உணவிற்கு அடுத்தபடியாக 5. ............................... வகைகள் நமது உணவில் முக்கிய இடம் வகிக்கின்றன. பருப்புகளும் பயறுகளும் தசைகளுக்குப் பலந்தந்து 6. .................... உரமளிக்கின்றன.

**பயிற்சி 5**

- பின்வரும் வாக்கியங்களில் உள்ள இடைவெளிகளை தடித்த எழுத்திலுள்ள இணைமொழிகளைக் கொண்டு பூர்த்தி செய்க.

| |
|---|
| **வாடி வதங்கி, நகமும் சதையும், அல்லும் பகலும், ஓடி ஆடி** |

1. விவசாயிகள் ................................. வேலை செய்கின்றனர்.
2. அவர்கள் ...................................... போல் வாழ்ந்தார்கள்.
3. வயலில் பெண்கள் ...................................... வேலை செய்தனர்.
4. சந்தையில் காய்கறிகள் ......................... க் காணப்பட்டன.

**பயிற்சி 5**

- பின்வரும் **பழமொழிகளின்** கருத்தினை எழுதுக.

1. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.

....................................................................................................................

2. சிறு துளி பெரு வெள்ளம்.

....................................................................................................................

3. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.

....................................................................................................................

4. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.

....................................................................................................................

**பயிற்சி 8**

- பின்வரும் தொடர்களுக்குரிய தனிச் சொல்லை எழுதுக.

1. நம்பமுடியாத கதை : .........................................
2. வீண் செலவு செய்பவன் : .........................................
3. ஒரே பாடசாலையில் ஒன்றாகப் படித்தவன் : .........................................
4. தேர்தல் ஒன்றில் போட்டியிடுபவர் : .........................................

**பயிற்சி 10**

- கீழே தரப்படடுள்ள அடைப்புக்குள் இருந்து சொற்களைத் தெரிந்தெடுத்து வாக்கியங்களைப் பூர்த்திசெய்க.

| |
|---|
| கணீர் கணீர், மடமட, குடுகுடு, கலகல, கமகம |

1. பாட்டி ................................. என்று நடந்தார்.
2. ஆலய மணி ................................. என்று ஒலித்தது.
3. எனது தங்கை ................................. என்று சிரித்தாள்.
4. அவன் இளநீரை ................................. என்று குடித்தான்.

**பயிற்சி 11**

- கீழே தரப்பட்டுள்ள சுருக்கக் குறியீடுகளுக்கான விரிவினை எழுதுக.

1. **மு.ப**

   ..........................................................................................................................

2. **கி.பி**

   ..........................................................................................................................

2. **பி.கு**

   ..........................................................................................................................

**பயிற்சி 12**

- பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

1. பால் + சோறு = .............................................................
2. மா + காய் = .............................................................
3. பழம் + வகை = .............................................................
4. மண் + குடம் = .............................................................
5. வாழை + குலை = .............................................................

பயிற்சி 4

- **பின்வரும் உரையாடலில் இடம்பெறவேண்டிய நிறுத்தக் குறிகளைப் பொருத்தமான இடங்களில் இடுக.**

**தாத்தா** : ஏதோ கேட்க வேண்டும் என்றாயே கேள்

**பேரன்** : காகிதத்தைக் கண்டு பிடித்தது யார் தாத்தா

**தாத்தா** : காகிதம் சீனாவில் தான் கண்டுபிடிக்கப்பட்டது காகிதத்தைக் கண்டறிந்தவர் யார் என்று கேட்டால் ஒருவருடைய பெயரைச் சொல்வது சிரமம்

**பேரன்** : ஏன் தாத்தா

**தாத்தா** : சீனாவில் பல தலைமுறைகளில் வெவ்வேறு நபர்கள் முதன் முறையாகத் தயாரித்திருக்கின்றார்கள் என்கிறார்கள் இவர்களுள் தனித்துவமாகத் தெரியும் பெயர் சாய்லூன்

பயிற்சி 5

- **பின்வரும் தகவல்களை வாசியுங்கள்.**

சங்கரனுக்கு ஒன்பது வயதாகின்றது. அவன் பிறந்த இடம் கண்டி. அவனது அப்பாவின் பெயர் சிவராமன். சங்கரன், பூங்குன்றம் தமிழ் வித்தியாலயத்தில் தரம் நான்கில் கல்வி கற்கின்றான். வகுப்பாசிரியரின் பெயர் க. தாமரைச்செல்வி. முத்திரை சேகரிப்பது அவனது பொழுதுபோக்காகும். அவன் **எனது வீட்டுத்தோட்டம்** என்ற தலைப்பில் சித்திரம் வரைந்து, போட்டிக்கு அனுப்பவுள்ளான்.

**உங்களைச் சங்கரனாகக் கருதிக்கொண்டு சித்திரப்போட்டிக்கான விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யுங்கள்.**

**சித்திரப்போட்டி விண்ணப்பப்படிவம்**

1. **சித்திரத்தின் தலைப்பு** :...............................................................
2. **மாணவர் முழுப் பெயர்** :...............................................................
3. **பிறந்த திகதி** :...............................................................
4. **கற்கும் பாடசாலை** :...............................................................
5. **கற்கும் வகுப்பு** :...............................................................
6. **வகுப்பாசிரியரின் பெயர்** :...............................................................

**மேற்குறிப்பிட்ட தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என உறுதிப்படுத்துகிறேன்.**

..............................................................

**மாணவரது கையொப்பம்**

குறிப்பு:

- **இரண்டாந் தவணையின் இறுதியில் மீட்டற் பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்குங்கள். மேலே தரப்பட்டவாறான பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்கிக் கணிப்பீடு செய்யுங்கள்.**
- **உறுப்பமைய எழுதும் போட்டியையும் விடுகதைகளை விடுவிக்கும் போட்டியையும் நடாத்துங்கள். மாணவர்கள் அனைவருக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள். எல்லா மாணவர்களையும் பாராட்டி ஊக்கப்படுத்துங்கள்.**

**தேர்ச்சிகள் :**

$L_8$ – கற்றல் விருத்திக்காகச் செவிமடுப்பார்.

$S_8$ – கற்றல் விருத்திக்காகப் பேசுவார்.

$R_8$ – கற்றல் விருத்திக்காக வாசிப்பார்.

$W_8$ – கற்றல் விருத்திக்காக எழுதுவார்.

**உள்ளடக்கம் :**

- ஒளிப்படங்கள்/காட்சிப் படங்கள்
- அனுமானித்தல் / தொடர்புபடுத்தல் / எதிர்வு கூறல்
- வழிகாட்டற் குறிப்புகள் (கதை)
- தினசரிக் குறிப்புகள் (நாட்குறிப்பு எழுதுதல்)
- சுற்றுலா
- பசுமை உலகு

**கற்றற்பேறுகள் :**

- ஒளிப்படங்களைப் பார்த்து, இரசித்து கருத்துக்களைக் கூறுவார், வாக்கியங்களை நிகழ்காலத்தில் எழுதுவார்.
- அனுமானித்தல், தொடர்புபடுத்தல், எதிர்வு கூறல் போன்றவற்றில் தேர்ச்சி பெறுவார்.
- வழிகாட்டற் குறிப்புகளைக் கொண்டு கதைகளைக் கட்டியெழுப்புவார்.
- தினசரிக் குறிப்புகளை எழுதும் வழக்கத்தை விருத்திசெய்து கொள்வார்.
- சுற்றுலா சென்ற அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வார்; அவற்றைக் குறித்துக்கொள்வார்.
- மரங்களை வளர்ப்பதன் அவசியத்தை உணர்ந்து கொள்வார். அதன் பயன்பாட்டையும் அறிந்து மற்றையவர்களுக்கும் தெரிவிப்பார்.

**வளங்கள் :**

- ஒளிப்படங்கள்/காட்சிப் படங்கள், சுற்றுலாப் படங்கள், வாக்கிய அட்டைகள், கணினி (இணையத்தளம்), பசுமை உலகு தொடர்பான படங்கள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு 1**

- மாணவர்களுக்கு இரசிக்கக்கூடிய ஒளிப்படங்களைக் காட்சிப்படுத்துங்கள். அப்படங்களைப் பார்த்து இரசித்து, கருத்துக்களைக்கூற வாய்ப்பொன்றை வழங்குங்கள். (ஒளிப்படத்தை A4 அளவில் வெண்பலகையில் காட்சிப்படுத்துங்கள்.)

*எடுத்துக்காட்டு:*



- ஒளிப்படங்கள்/காட்சிப் படங்களைப் பார்த்துக் கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் நிகழ்காலத்தில் வாக்கியங்களை எழுத வழிப்படுத்துங்கள்.

1. ...........................................................................................................................

2. ...........................................................................................................................

3. ...........................................................................................................................

**செயற்பாடு 2**

- மாணவர் விரும்புகின்ற ஒளிப் படமொன்றைத் தெரிவு செய்யுங்கள். சுயமாகவே தமது கருத்துக்களை விருப்புடன் கூறுவதற்கும் ஏனையவர்களுடன் கலந்துரை யாடுவதற்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள். மாணவர்களுடன் சேர்ந்து ஒளிப்படம் தொடர்பான கருத்துக்களைத் தெரிவியுங்கள். இடர்ப்படும் மாணவர்களிடம் வினாக்கேட்டு அதனூடாக அவர்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



- ஒளிப்படங்கள்/காட்சிப் படங்களைப் பார்த்து நிகழ்காலத்தில் வாக்கியங்களை எழுத வழிப்படுத்துங்கள்.



1. ....................................................................................................................
2. ....................................................................................................................
3. ....................................................................................................................

- ஒளிப்படங்கள்/காட்சிப் படங்களைப் பார்த்து நிகழ்காலத்தில் வாக்கியங்களை எழுத வழிப்படுத்துங்கள்.



1. ....................................................................................................................
2. ....................................................................................................................
3. ....................................................................................................................

- ஒளிப்படத்தைப் பார்த்து நிகழ்காலத்தில் வாக்கியங்களை எழுதி முற்றுப்புள்ளி இட வழிப்படுத்துங்கள்.



1. ..................................................................................................................
2. ..................................................................................................................
3. ..................................................................................................................

**செயற்பாடு 3**

- செவிமடுக்கும் தகவல்களைக் கொண்டு, சிலவற்றை அனுமானித்துக்கூற, தொடர்புகாண, எதிர்வுகூற, மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

**அனுமானித்தல்**

**எடுத்துக்காட்டு :**

1. நான் ஆகாயத்தில் பறப்பேன். ஆகாயத்தில் முகில்களுக்கு இடையேயும் நான் சிலவேளைகளில் பறக்கின்றேன். சிறகுகளை அசைக்காமல் என்னால் பறக்கத்தக்கதாக இருத்தல் புதுமையான விடயமாகும். நான் பறக்கும் போது சத்தம் உண்டாகின்றமையால் கீழே உள்ளவர்கள் நான் ஆகாயத்தில் பறப்பதை அறிந்து கொள்வர். விசேடமாகச் சிறிய பிள்ளைகள் என்னைப் பார்த்து மகிழ்ச்சியடைவதை நான் அறிவேன். நான் மரங்களில் தங்கியிருப்பதில்லை. நான் விசேட இடங்களில் மாத்திரம் இறங்குவேன்.

(..............................)

2. நான் பல்வேறு நிறங்களைக் கொண்டுள்ளேன். சிலவேளைகளில் சிவப்பாக இருப்பேன். கபில நிறமாக இருப்பேன். நீல நிறமாக இருப்பேன். வெண்ணிறமாக இருப்பேன். சிலவேளைகளில் எனக்கு நிறமே இல்லை. சில விசேட சந்தர்ப்பங்களில் மனிதர்கள் என்னைக் குடிப்பர். என்னைக் குடிப்பதன் மூலம் மனிதர்களுக்கு நன்மையன்றித் தீமை ஏற்படுவதில்லை. எனினும் பெரும்பாலானவர்கள் விருப்பமின்றி என்னைக் குடிப்பதை நான் அறிவேன். விசேடமாகச் சிறுபிள்ளைகள் என்னைக் குடிக்க விரும்புவதில்லை.

(..............................)

**தொடர்புபடுத்தல்**

எடுத்துக்காட்டு :

பின்வரும் வினாக்களில் உள்ள புள்ளிக் கோடிட்ட இடங்களுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1. **மீனவனுக்குக்** கடல் போன்று விளையாடுபவனுக்கு ..........................................
   1. மைதானம் 2. பந்து 3. துடுப்பு

2. **ஆசிரியருக்கு** மாணவன் போன்று மருத்துவருக்கு ..........................................
   1. பொதுமக்கள் 2. நோயாளி 3. தாதி

3. **பசிக்கு** உணவு போன்று நோய்க்கு ..........................................
   1. வைத்தியசாலை 2. வைத்தியர் 3. மருந்து

4. **விமானத்திற்கு** விமானி போன்று கப்பலுக்கு ..........................................
   1. மாலுமி 2. சாரதி 3. மீகாமன்

5. **நூலகத்திற்கு** நூல்கள் போன்று பேருந்துக்கு ..........................................
   1. வியாபாரிகள் 2. நடத்துநர் 3. பயணிகள்

**எதிர்வுகூறல்**

எடுத்துக்காட்டு :

1. வானம் கறுக்கின்றது, குளிர்காற்று வீசுகிறது; ஈசல்கள் பறக்கின்றன; ஆட்காட்டிக்குருவிகள் கத்துகின்றன.

   என்ன நடக்கப் போகிறது? ...........................................................................

2. வாகனங்கள் வருகின்றன.

   சிவப்பு விளக்கு எரிகின்றது.

   வாகனங்கள் நிறுத்தப்படுகின்றன.

   மஞ்சள் விளக்கு எரிகின்றது.

   வாகனங்கள் புறப்படத் தயாராகின்றன.

   அடுத்து என்ன நிகழும்? ...........................................................................

இவை போன்ற பயிற்சிகளை ஆக்கி, மாணவர் கருத்தூன்றி வாசித்து அனுமானிக்க, தொடர்புகாண, எதிர்வுகூற வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 4

- மாணவர்களுக்கு கதையொன்றைக் கட்டியெழுப்புவதற்கான வழிகாட்டற் குறிப்புகளை முன்கூட்டியே வழங்குங்கள். அக்குறிப்புக்களை உதவியாகக் கொண்டு கதையை ஆக்கி ஏனையோருக்குக் கூற வழிப்படுத்துங்கள். (கதை சொல்லும் நேரம் குறுகியதாக இருத்தல் வேண்டும்.)

எடுத்துக்காட்டு :

**கதையை ஆக்குவதற்கான வழிகாட்டற் குறிப்புகள்**

ஒரு நாள் - மாலைப்பொழுது - நரி - கால் தவறி - கிணறு - விழுந்து விட்டது - தண்ணீர் இல்லை - பழைய கிணறு - துள்ளித்துள்ளி - தாவியது - குதித்தது - முடியவில்லை - ஆடு - கிணறு - எட்டி - பார்த்தது. நரியாரே - என்ன செய்கிறீர் - என்றது - நரி - ருசி - புல் - சாப்பிடுகிறேன் - என்றது. புல்லையா - நீயா - ஆடு. வியப்பு - கேட்டது. நரி - அபூர்வப்புல் - சரியான ருசி - தந்திரம் - பதில் - அறிவற்ற ஆடு - நம்பியது - நானும் வருகிறேன் - குதித்தது ஆடு - நரி - மட்டற்ற மகிழ்ச்சி - ஆட்டின் - முதுகு - ஏறி வெளியே - வந்தது - நண்பனே - வருகிறேன் - ஓட்டம் பிடித்தது நரி - ஆடு. தவறு - நினைத்து - அழுதது.

- மாணவர்கள் சுயமாகவே கதையை ஆக்கி எழுதுவதற்கு வாய்ப்புகளை வழங்குங்கள்.
- இடர்ப்படும் மாணவர்களுக்கு அச்சந்தர்ப்பத்திலேயே உதவுங்கள்.
- இது போன்ற மேலும் பயிற்சிகளை வழங்குங்கள்.

## செயற்பாடு 5

- மாணவர்களைச் சுற்றுலா அழைத்துச் செல்லுங்கள். கல்விச் சுற்றுலா மூலம் மாணவர்கள் பல விடயங்களைக் கற்றுக்கொள்கிறார்கள். எனவே அதிபரின் அனுமதியை முன்கூட்டியே பெற்று அதன் பின்னர் பெற்றோரின் அனுமதியையும் பெற்றுச் சுற்றுலாவை ஒழுங்குசெய்யுங்கள். அச்சுற்றுலா செல்லுமிடம் அருகிலுள்ள ஊராகக்கூட இருக்கலாம் அல்லது களப்பயணமாகக்கூட இருக்கலாம். சுற்றுலா சென்று வந்த பின்னர் அனுபவங்களைக் கூறவும், கூறிய அனுபவங்களை எழுதவும் சித்திரமாக வரையவும் ஊக்கப்படுத்துங்கள்.

## செயற்பாடு 6

- மாணவர்களை நாட்குறிப்பு எழுதுவதற்குப் பயிற்சி அளியுங்கள்.

**நாட்குறிப்பு**

நாட்குறிப்பு என்பது தனி மனிதனின் ஒரு நாளைய நிகழ்வுகளைப் பதிவு செய்வது அல்லது அன்றைய பணிகளைக் குறித்து கொள்வதாகும். டைஸ் என்ற இலத்தீன் சொல்லுக்கு நாள் என்பது பொருள் ஆகும். இந்த சொல்லிலிருந்து டைரியம் என்னும் இலத்தீன் சொல் உருவானது. இந்தச் சொல்லுக்கு நாட்குறிப்பு என்பது பொருள். இதிலிருந்தே டைரி என்ற ஆங்கிலச் சொல் உருவானது.

தரம் நான்கு மாணவர்ளைத் தினமும் கற்கும் விடயங்கள் தொடர்பாக நாட்குறிப்பினை எழுத ஊக்கப்படுத்துங்கள். அன்றைய நாளின் கற்றல் நிகழ்வுகளைப் பதிவு செய்ய வழிப்படுத்துவதனூடாக மாணவர்களிடையே நாட்குறிப்பெழுதும் கலாசாரத்தை உருவாக்குங்கள்.

நாட்குறிப்பைச் சுருக்கமாகவும் ஆக்கத்திறனுடனும் எழுத வழிப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு:**

திங்கட்கிழமை

இன்று வகுப்பாசிரியர் பசுமை உலகு என்ற பாடலைச் சொல்லித் தந்தார்.

நாங்கள் மனதில் பதிக்க வேண்டிய இந்தப் பாடல் அடிகளை எழுதுமாறு கூறினார்.

சுகாதாரம் பேணிட்டால்
சுகவாழ்வு அமைந்திடுமே
இயற்கை உணவு உண்டிட்டால்
இனிய வாழ்வு மலர்ந்திடுமே

கணித பாடத்தில் தந்த கணக்குகளைப் பிழையின்றி முதலில் செய்து காட்டினேன்.

வகுப்பாசிரியர் முதுகில் தட்டிப் பாராட்டினார்.

எல்லோரையும் கைதட்டிப் பாராட்டச் சொன்னார்.

எப்படி இருந்தது தெரியுமா?

அம்மாவிடம் சொல்ல வேண்டும்.
அம்மா கட்டிப்பிடித்து முத்தம் தருவார்.

செயற்பாடு 7

- பசுமை உலகு பற்றிய சிந்தனையை மாணவர்கள் மனதில் விதைப்பதற்காக இக்கவிதைகளை மாணவர் மனதில் பதிய வையுங்கள்.

*எடுத்துக்காட்டு:*

## பசுமை உலகு

உயிர்களை நேசித்தால்
உண்மையன்பு கிடைத்திடுமே!
மனிதநேயம் ஒளிர்ந்திட்டால்
மாண்புதனை உயர்த்திடுமே !

சுகாதாரம் பேணிட்டால்
சுகவாழ்வு அமைந்திடுமே!
இயற்கையுணவு உண்டிட்டால்
இனியவாழ்வு மலர்ந்திடுமே!

மரங்களை வளர்த்திட்டால்
மண்ணரிப்பு தடைப்படுமே!
வனங்களைக் காத்திட்டால்
வெம்மையும் தணிந்திடுமே!

மழைநீரைச் சேமித்தால்
மலர்ச்சியும் வந்திடுமே!
வீட்டுத்தோட்டம் செய்திட்டால்
வாழ்க்கைச்செலவு குறைந்திமே!

இயற்கையை நேசித்தால்
இனியவுலகு பிறந்திடுமே!
பசுமையுலகு தோன்றிவிட்டால்
பாரிருள் நீங்கிடுமே!

வி.என்.எஸ் உதயசந்திரன்

*எடுத்துக்காட்டு:*

## மரங்கள் வேண்டும்!

உலகம் வாழ வேண்டுமென்றால்
உழைக்க வேண்டுமே!
உழைப்பு நன்கு வேண்டுமென்றால்
உணவு வேண்டுமே!

உணவு உண்ண வேண்டுமென்றால்
பயிர்கள் வேண்டுமே!
பயிர்கள் வாழ வேண்டுமென்றால்
மழையும் வேண்டுமே!

மழையும் பெய்ய வேண்டுமென்றால்
மரங்கள் வேண்டுமே!
மரங்கள் வாழவேண்டுமென்றால்
மனமும் வேண்டுமே!

மனமிருந்தால் மரங்கள் தமை
வெட்டல் தவிர்ககலாம்!
மனமிருந்தால் மரங்கள் தமை
நட்டு வளர்க்கலாம்!

உலகம் வாழவேண்டுமென்றால்
மரங்கள் வேண்டுமே!
உயிர்கள் வாழவேண்டுமென்றால்
மரங்கள் வேண்டுமே!

- கோ.பெ. நாராயணசாமி

செயற்பாடு 8

- பயன்தரும் மரங்களை அப்பியாசக் கொப்பியில் வரைந்து அவற்றினால் கிடைக்கும் பயன்களை எழுதுமாறு மாணவர்களை வழிப்படுத்துங்கள். அதன் பின்னர், எழுமாறாக மாணவர்களை அழைத்து வாசித்துக்காட்ட வழிப்படுத்துங்கள். அதன் பின்னர், ஆசிரியரும் மரங்களின் பயன்களை கரும்பலகையில் / வெண்பலகையில் எழுதுதல் வேண்டும். அவற்றை மாணவர்கள் அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் பொருத்தமான வினாக்களைக் கொடுத்து விடை எழுத மாணவர்களை வழிப்படுத்துங்கள். வித்தியாசமான பயிற்சிகளையும் தயாரித்து வழங்குங்கள்.

**எடுத்துக்காட்டு:**




பலாமரம் நிழல் தருகிறது. பறவைகளும் பிராணிகளும் உறைகின்றன. காற்றின் அதீத வேகத்தைக் காட்டுப்படுத்துகிறது. வேர்களோ நில அரிப்பைத் தடுத்து மண்ணின் ஈரத்தன்மையைப் பேணுகின்றன. தவிர, உணவாகவும், கட்டையாகவும் பயன்படுகிறது.




செயற்பாடு 9

- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். அதன் பின்னர், மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள காட்சிப்படத்தைப் பிரதி எடுத்து குழுக்களுக்கு ஒரு காட்சிப்படம் வீதம் வழங்குங்கள். சுற்றுப்புறச் சூழலை நாம் ஏன் பாதுகாக்க வேண்டும்? காடுகளை ஏன் அழிக்கக் கூடாது? மரங்களை ஏன் நட வேண்டும்? என்ற வினாக்களுக்கு காட்சிப்படத்தைப் பார்த்து விடை தேட மாணவரை வழிப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு :**



**கணிப்பீடு :**

- ஒளிப்படங்கள்/காட்சிப் படங்கள் தொடர்பாகக் கூறுதல், எழுதுதல்
- அனுமானித்தல் / தொடர்புகாணல் / எதிர்வுகூறல்
- தினசரிக் குறிப்புக்கள் / நாட்குறிப்புக்களை எழுதுதலும் வாசித்தலும்
- சுற்றுலா அல்லது களப்பயணம் சென்ற அனுபவங்களைக் கூறுதல், எழுதுதுல்
- பசுமை உலகின் அவசியத்தைக் கூறுதல், எழுதுதல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

**தேர்ச்சிகள் :**

- **L9** – கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் கருத்தூன்றிச் செவிமடுப்பார்.
- **S9** – கிரகித்தவற்றை ஆக்கத்திறனுடனும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பொருத்தமுறவும் பேசுவார்.
- **R9** – கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் கருத்தூன்றி வாசிப்பார்.
- **W9** – கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் எழுதுவார்.

**உள்ளடக்கம் :**

- சிறுவர் கதைப் பாடல்கள்
- சிறுவர் கதைகள் (நகைச்சுவை)
- விஞ்ஞானிகள் / செய்முறை விளக்கம்
- தகவல்கள் (பிராணிகள்)
- சிறுவர் இணையத்தளங்கள்
- சிறுவர் சஞ்சிகைகள்
- சிறுவர் நூல்கள்

**கற்றற்பேறுகள் :**

- சிறுவர் பாடல்களை வாசித்து, அப்பாடல்களின் கருத்துக்களை ஆக்கத்திறனுடன் வெளிப்படுத்துவார்.
- சிறுவர் நகைச்சுவைக் கதைகளை இரசித்து ஆக்கத்திறனுடன் வெளிப்படுத்துவார்.
- விஞ்ஞானிகளைப் பற்றி அறிந்து ஆக்கத்திறன்களை வெளிப்படுத்துவார்.
- செய்முறை விளக்கங்களைப் புரிந்துகொண்டு அதன்படி செயற்படுவார்.
- பிராணிகள் பற்றிய தகவல்களை அறிந்து ஆக்கத்திறனுடன் வெளிப்படுத்துவார்.
- சிறுவர் இணையத்தளங்கள், சிறுவர் சஞ்சிகைகள், சிறுவர் நூல்கள் ஆகியவற்றைப் பார்வையிட்டு, அவை தொடர்பான முக்கிய தகவல்களை ஆக்கத்திறனுடன் சமர்ப்பிப்பார்.

**வளங்கள் :**

- கதை அட்டைகள், பாடல் அட்டைகள், கணினி, இணையத்தளங்கள், சிறுவர் சஞ்சிகைகள், சிறுவர் நூல்கள், பிராணிகள் பற்றிய தகவல்கள், கதைகள், பாடல்கள், விஞ்ஞானிகள் பற்றிய தகவல்கள், செய்முறை விளக்கம் போன்றவற்றை ஒலி, ஒளிப்பதிவு செய்த இறுவட்டுகள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு 1**

- மாணவர்களுக்கு **“சின்னச் சின்னப் பறவை”** என்ற சிறுவர் பாடலை அறிமுகம் செய்யுங்கள். பாடிக் காட்டுங்கள், கவிதை நடையில் மாணவர்களுடன் சேர்ந்து வாசியுங்கள்.
- வீட்டின் ஜன்னல்களில், மொட்டை மாடிகளில் சுற்றித்திரிந்த அழகிய சிட்டுக்குருவிகள் இனம் இன்று அருகி, அழிவின் விளிம்பில் உள்ளன. கடந்த 25 ஆண்டுகளில் 60 சதவீத சிட்டுக்குருவிகள் அழிந்துவிட்டதாக ஆய்வுகள் கூறுகின்றன. காலம் மாறியது. காலனாக கைப்பேசிகள் வந்தன. கைப்பேசி அலைகள் சிட்டுக்குருவி இனத்தை அழித்தன. நாள்தோறும் தமது வாழ்வுக்காக அவை எதிர்நோக்கும் பிரச்சினைகளை மக்களுக்கு எடுத்துக்கூறி அதன் மூலம் அவர்களுக்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த ஆண்டுதோறும் மார்ச் 20 ஆம் திகதியன்று (2010 ஆம் ஆண்டிலிருந்து) உலக சிட்டுக்குருவிகள் நாளாக நினைவுகூரப்படுகிறது.

# சின்னச் சின்னப் பறவை



சின்னச் சின்னப் பறவையான
சிட்டுக்குருவி,
தேடித்தேடித் திரிவதென்ன?
சிட்டுக்குருவி.
என்ன வேண்டும்? என்ன வேண்டும்?
சிட்டுக்குருவி.
என்னிடம்நீ சொல்லவேண்டும்
சிட்டுக்குருவி.



உணவுதேடித் திரிகின்றாயோ?
சிட்டுக்குருவி.
ஊக்கமது கைவிடாத
சிட்டுக்குருவி.
பணமும் வேண்டாம் காசும்வேண்டாம்
சிட்டுக்குருவி.
பச்சைநெல்லை நான்தருவேன்,
சிட்டுக்குருவி.



கூடுகட்டி வாழ்வதற்கு
சிட்டுக்குருவி.
குச்சிகளைத் தேடுகின்றாயா?
சிட்டுக்குருவி.
பாடுபட்டு வேலைசெய்ய,
சிட்டுக்குருவி.
பாடமெல்லாம் கற்றுத்தரும்
சிட்டுக்குருவி.



வீட்டுக்குள்ளே எந்தஇடம்
சிட்டுக்குருவி.
வேண்டுமோநீ சொல்லிடுவாய்
சிட்டுக்குருவி.
கூட்டைஅங்கே கட்டிக்கொள்வாய்
சிட்டுக்குருவி.
கொடுக்கவேண்டாம் வாடகையும்
சிட்டுக்குருவி.



கூட்டைநாங்கள் கலைக்கமாட்டோம்
சிட்டுக்குருவி.
குஞ்சுகளைத் தொடவுமாட்டோம்
சிட்டுக்குருவி.
சேட்டையொன்றும் செய்யமாட்டோம்
சிட்டுக்குருவி.
திண்ணம்இது திண்ணமாகும்
சிட்டுக்குருவி.

**- அழ. வள்ளியப்பா**

- இப்பாடலின் கருத்தை மாணவர்களுக்கு உணர்த்துங்கள். பாடலை நான்கு நான்கு அடிகளாகச் சொல்லிக் கொடுங்கள். இப்பாடலை எழுதியவர் பற்றியும் கூறுங்கள். பாடலுடன் தொடர்புடைய பல்வேறு பயிற்சிகளை வழங்குங்கள்.

**செயற்பாடு 2**

- **வெண்ணிலா** என்ற பாடலை மாணவர்களுக்குக் கவிதை நடையில் அறிமுகம் செய்யுங்கள். அதன் பின்னர் பாடலின் முதல் இரு அடிகளையும் வாசியுங்கள். அதன் பின்னர் இவ்விரு அடிகளாக விளக்குங்கள்.
  ***எடுத்துக்காட்டு:***



### வெண்ணிலா

இருவிளக்கில் ஒரு விளக்காம் வெண்ணிலாவே
இராக்காலத் தொளிகொடுப்பாய் வெண்ணிலாவே

சூரியன்போய் மறைந்தபின்பு வெண்ணிலாவே
தூயவொளி பரப்பிடுவாய் வெண்ணிலாவே

தயிர்க்கடலில் வெண்ணெய்போல வெண்ணிலாவே
தனிவிசும்பிற் றவழ்ந்திடுவாய் வெண்ணிலாவே

பெண்கள் முகம் போல்வருவாய் வெண்ணிலாவே
பிறையாகி வளர்ந்திடுவாய் வெண்ணிலாவே

எண்ணிரண்டு கலையுடனே வெண்ணிலாவே
எழுந்துநிலாப் பொழிந்திடுவாய் வெண்ணிலாவே

வளர்ந்துபின்பு தேய்ந்திடுவாய் வெண்ணிலாவே
வறுமைசெல்வ முனக்குமுண்டோ வெண்ணிலாவே

ஒரு நாளில் மறைந்திடுவாய் வெண்ணிலாவே
ஒளியின்றி வாடுவமே வெண்ணிலாவே

அமுதவொளி பரப்பிவரும் வெண்ணிலாவே
அன்புடனே வாழியென்றும் வெண்ணிலாவே

**- க. சோமசுந்தரப் புலவர்**

**கருத்து:**

**இருவிளக்கு** - சூரியனும் சந்திரனும்
**தூயவொளி** - வெண்மையான வெளிச்சம்
**அமுதவொளி** - குளிர்ந்த இனிய வெளிச்சம்
**கலை** - சந்திரனின் பாகம்
**எண்ணிரண்டு** - பதினாறு
**விசும்பு** - ஆகாயம்

- அதன் பின்னர் இவ்விரு அடிகளாக மாணவர்கள் அப்பியாசக் கொப்பியில் எழுதவும் அவ்வடிகளின் கருத்தை விளங்கிக் கொள்ளவும் உதவுங்கள். இப்பாடலை இவ்விரு அடிகளாக வகுப்பில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள். பாடலுக்குப் பொருத்தமான பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்குங்கள்.

**செயற்பாடு 3**

- **சேவகனின் ஆழ்ந்த சிந்தனை** நகைச்சுவைக் கதையை ஒலிப்பதிவு செய்து மாணவர்களைச் செவிமடுக்கச் செய்யுங்கள். அதன் பின்னர், ஆசிரியர் கதையை வாசிக்க மாணவர்கள் கவனித்து மௌனமாக வாசிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் மாணவர்களுடன் சேர்ந்து ஆசிரியர் கதையை உரத்து வாசிக்க வேண்டும்.

**எடுத்துக்காட்டு:** **நகைச்சுவைக் கதை**

## சேவகனின் ஆழ்ந்த சிந்தனை

ஓர் அரசரிடம் சேவகன் ஒருவன் வேலை செய்து வந்தான். அவனுக்குச் சுயமாக சிந்திக்கத் தெரியாது. ஒரு நாள் அரசர் அவனுடன் வெளியூர் சென்றார். வழியில் இருட்டி விட்டது. எனவே அங்கிருந்த ஒரு சத்திரத்தில் தங்க முடிவு செய்தார்.

சேவகன், குதிரையை வெளியில் உள்ள ஒரு மரத்திற் கட்டினான். அரசர் சேவகனிடம், ''இரவு முழுவதும் நித்திரை கொள்ளாமல் குதிரையைப் பார்த்துக் கொள்'' என்றார்.

சேவகன் ''அரசே! இரவு முழுவதும் எப்படி நித்திரை கொள்ளாமல் இருப்பது'' என்று கேட்டான். அரசரும் ''ஏதேனும் தீர்க்க முடியாத பிரச்சினை பற்றிச் சிந்தித்துக் கொண்டிரு. நித்திரை வராது'' என்றார். அவனும் சரி என்றான்.

அவன் என்ன செய்கிறான் என்பதைச் சோதிக்க அரசர் விரும்பினார். சிறிது நேரம் கழித்து அங்கே வந்தார். அரசர் சேவகனைப் பார்த்து, ''இப்போது என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டார். ''அரசே, நான் நித்திரை கொள்ளவில்லை. வானில் இருக்கும் நட்சத்திரங்கள் தானாக வந்ததா? அல்லது யாரேனும் கொண்டு வந்து போட்டார்களா? என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்.''என்றான்.

நல்லது என்று கூறிச் சென்ற அரசர், நள்ளிரவில் மீண்டும் வந்தார். அரசர் சேவகனைப் பார்த்து, ''இப்போது என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டார். ''அரசே, கடலில் உப்பு தானாக வந்ததா? அல்லது யாரேனும் கொண்டு வந்து கொட்டினார்களா? என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்.''என்றான்.

அரசரும் நிம்மதியுடன் நித்திரைக்குச் சென்றார். காலையில் எழுந்து வந்து சேவகனைப் பார்த்தார். சேவகன் ஆழ்ந்த யோசனையுடன் இருப்பதைக் கண்டார். அரசர் மகிழ்ச்சி அடைந்தார். அரசர் சேவகனைப் பார்த்து, ''இப்போது என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டார். அதற்கு அவன் ''அரசே, உங்கள் குதிரை தானாக ஓடி விட்டதா? அல்லது யாரேனும் திருடிச் சென்று விட்டார்களா? என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்.'' என்றான்.

அரசர் அதிர்ச்சி அடைந்தார்.

செயற்பாடு 4

- கதையில் வரும் பின்வரும் சொற்களை வைத்து கருத்துள்ள வாக்கியங்களை ஆக்கி எழுத வழிப்படுத்துங்கள். எழுதிய வாக்கியங்களைச் சரியாக உச்சரித்து வாசிக்கவும் வழிப்படுத்துங்கள்.

 **எடுத்துக்காட்டு:**

1. வெளியூர் : ..................................................................................................
2. சேவகன் : ..................................................................................................
3. நள்ளிரவு : ..................................................................................................
4. நித்திரை : ..................................................................................................
5. மகிழ்ச்சி : ..................................................................................................

செயற்பாடு 5

- **சேவகனின் ஆழ்ந்த சிந்தனை** என்ற கதையில் வரும் உரையாடல் வாக்கியங்கள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள். மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். கீழே தரப்பட்டுள்ள உரையாடல் வாக்கியங்களை அட்டைகளில் எழுதி ஒரு குழுவுக்கு ஓர் அட்டை வீதம் வழங்குங்கள். கலந்துரையாடுங்கள். குழுவாக மாணவர்கள் உரையாடல் வாக்கியங்களை ஏற்ற இறக்கங்களுடன் வாசித்துக் கிரகிக்கவும் வழிப்படுத்துங்கள். கதையில் வரும் முக்கிய உரையாடல்களை அப்பியாசக் கொப்பியில் எழுதி வகுப்பின் முன் தாமாக முன்வந்து வாசிக்கவும் ஆர்வமூட்டுங்கள்.
 ***எடுத்துக்காட்டு:***

 1. **அரசர் சேவகனிடம், “இரவு முழுவதும் நித்திரை கொள்ளாமல் குதிரையைப் பார்த்துக் கொள்”என்றார்.**
 2. **சேவகன் “அரசே! இரவு முழுவதும் எப்படி நித்திரை கொள்ளாமல் இருப்பது” என்று கேட்டான்.**
 3. **அரசரும் “ஏதேனும் தீர்க்க முடியாத பிரச்சினை பற்றிச் சிந்தித்துக்கொண்டிரு. நித்திரை வராது” என்றார்.**
 4. **அரசர் சேவகனைப் பார்த்து, “இப்போது என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய்?” என்று கேட்டார்.**
 5. **“அரசே, நான் நித்திரை கொள்ளவில்லை. வானில் இருக்கும் நட்சத்திரங்கள் தானாக வந்ததா? அல்லது யாரேனும் கொண்டுவந்து போட்டார்களா? என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்.” என்றான்.**

- கதையில் வரும் வேறு உரையாடல் வாக்கியங்களை மாணவர்கள் வாசித்துக் கிரகித்து நினைவுபடுத்தி ஆக்கபூர்வமாக முன்வைக்க ஊக்கமளியுங்கள்.

## செயற்பாடு 6

- **தோமஸ் அல்வா எடிசன்** பற்றித் தரப்பட்டுள்ள தகவல்களை மாணவர்கள் சுலபமாக கிரகித்துக் கொள்வதற்காக ஒலிப்பதிவு செய்து செவிமடுக்க ஆர்வமூட்டுங்கள். இதனூடாக கிரகித்துச் செவிமடுக்கும் திறன் வளரும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.
- மாணவர்கள் கருத்தூன்றி வாசிக்கவும் தகவல்களைத் திரட்டிக் கொள்ளவும் வாய்ப்புகளை வழங்குங்கள். அதன் பின்னர் வினாக்களுக்கு விடை எழுத ஊக்கப்படுத்துங்கள்.

**தோமஸ் ஆல்வா எடிசன்**

- உலக வரலாற்றில் அதிக கண்டுபிடிப்புகளுக்குச் சொந்தக்காரரான தோமஸ் ஆல்வா எடிசனைப் பற்றிய அரிய முத்துக்கள் பத்து :
- அமெரிக்காவின் ஓஹையோ மாநிலத்தில் பிறந்தவர். குடும்பம் மிச்சிகனில் உள்ளயூரோன் துறைமுகப் பகுதிக்கு இடமபெயர்ந்தது. அப்பா மர வியாபாரி. சிறு வயதில் ஸ்கார்லட் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட எடிசன் எட்டு வயதில் பள்ளியில் சேர்க்கப்பட்டார்.
- ஆசிரியர் திட்டியதால் மூன்றே மாதங்களில் அவரை பள்ளியைவிட்டு நிறுத்திய அம்மா, தானே பாடம் சொல்லித் தந்தார்.பாடங்களோடு, பைபிள், நல்ல நூல்களைப் படிக்குமாறு அப்பா கூறினார். ஒவ்வொரு புத்தகம் படித்து முடித்த போதும் 10 சென்ட் அளித்து தோமஸ் அல்வா எடிசனை உற்சாகப்டுத்தினார்.
- பார்க்கும் எதையும் சோதித்து அறியும் ஆர்வம் சிறு வயதில் இருந்தே அவருக்கு உண்டு. கோழி அடைகாத்து குஞ்சு பொரிப்பதைப் பார்த்த சிறுவன் எடிசன் தானும் முட்டைகள்மேல் அமர்ந்து சோதனை செய்து பார்த்திருக்கிறான்.
- ரிச்சர்ட் பார்க்கர், தோமஸ் பைன், சேர் ஐசக் நியூட்டன் ஆகியோரின் புத்தகங்கள் உட்பட ஏராளமான புத்தகங்களை 11 வயதுக்குள் கற்றுத் தேர்ந்தார் எடிசன்.
- ரயில் நிலையத்தில் தந்தி இயக்குபவராகப் பணியாற்றிய போது, ரயில் பெட்டியையே அச்சகமாக மாற்றி வீக்லி ஹெரால்டு வாரப் பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டார். அங்கு சோதனைக் கூடம் அமைத்து கண்டு பிடிப்புக்களைத் தொடங்கினார்.
- ஒருமுறை அங்கு அவர் வைத்திருந்த பொஸ்பரஸ் எரிந்து ரயில் பெட்டியில் தீப்பற்றியது. ரயில்வே அதிகாரி ஆத்திரமடைந்து அறைந்ததில் அவரது ஒரு பக்கக் காது கேட்காமல் போனது.
- இவர் தன் வாழ்நாளில் கண்டறிந்த விஷயங்கள் மொத்தம் 1300. உலக சரித்திரத்தில் வேறு எவரும் அருகில் நெருங்க முடியாத எண்ணிக்கை இது. 1093 கண்டு பிடிப்புகளுக்கு காப்புரிமை பெற்றார். இத்தனைக்கும் அறிவியல், கணிதம் என்று எதையும் முறையாக கற்றவர் அல்ல.
- மென்லோ பார்க் பகுதியில் 1876 இல் ஆராய்ச்சிக்கூடம் அமைத்தார். மின்சாரக்குமிழ்,கிராம.ஃ.போன், போன்றவை இவரது கண்டுபிடிப்புகளிற் குறிப்பிடத் தக்கவை.
- ஒரு சாதனையை நிகழ்த்திய பிறகு, அதற்கான பாராட்டுகளைப் பெற அவர் அங்கே இருக்க மாட்டார். அடுத்த கண்டுபிடிப்புக்காக ஆராய்ச்சிக் கூடத்துக்குள் போயிருப்பார். இதுபற்றி கேட்டால், நேற்றைய கண்டு பிடிப்பு பற்றி பேசி இன்றைய நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை என்பார்.
- தோமஸ் அல்வா எடிசன் எண்பத்து நான்காவது வயதில் மறைந்தார். அவரது உடலை அடக்கம் செய்யும் போது, அன்றைய அமெரிக்க அதிபரின் உத்தரவின் பேரில், அமெரிக்கா முழுவதும் மின் விளக்குகள் ஒரு நிமிடம் அணைக்கப்பட்டன.

நன்றி: இந்து

- மாணவர்கள் கருத்தூன்றி வாசிக்கவும் தகவல்களைத் திரட்டிக்கொள்ளவும் வாய்ப்புகளை வழங்குங்கள். அதன் பின்னர் வினாக்களுக்கு விடை எழுத ஊக்கப்படுத்துங்கள்.

## செயற்பாடு 7

- மாணவர்கள் கிரகித்துத் துலங்குவதற்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் செய்முறை விளக்கத்தைப் பின்பற்றி மாணவர்கள் செயற்படுவதற்கு உதவுங்கள்.

**எடுத்துக்காட்டு:**

### வண்ணக் கோலங்கள்



- மாணவர்கள் எல்லோரையும் கண்ணாடிக் குவளை ஒன்றும் உணவுச் சாயங்கள் மூன்றும் கொண்டு வருமாறு (ஒரு வாரத்திற்கு முன்னரே) கூறுங்கள்.

- அவர்கள் கொண்டு வந்த கண்ணாடிக் குவளையில் முற்று முழுதாக நீர் நிரம்பக் கூடிய வகையில் நீரை நிரப்புமாறு கூறுங்கள்.

- மாணவர்களை வெளியே சென்று மரங்களுக்கு கீழே விழுந்துள்ள மூன்று மிகச் சிறிய இலைகளை எடுத்து வருமாறு கூறுங்கள்.

- அவர்கள் கொண்டு வந்த மூன்று இலைகளிலும் மூன்று நிற உணவுச் சாயத் துளிகளை (சிவப்பு, மஞ்சள், நீலம்) இட்டு கண்ணாடிக் குவளை நீரில் மிதக்க விடுமாறு கூறுங்கள்.

- மாணவர்களைக் கூர்ந்து சிறிது நேரம் நீர்க் குவளையை அவதானிக்குமாறு கூறுங்கள்.

- நீர்க் குவளைக்குள் தோன்றும் வண்ணக் கோலங்களை அவதானிக்கின்றார்களா என நோக்குங்கள்.

- மாணவர்கள் அறிவுறுத்தல்களைப் பின்பற்றிச் செயற்படுவதற்கும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்கும் உதவுங்கள். இச் செயற்பாட்டை தமது மொழிநடையில் கூறுவதற்கும் அப்பியாசக் கொப்பியில் எழுதி வாசிப்பதற்கும் வழிப்படுத்துங்கள்.

- வண்ணக் கோலங்கள் செய்முறை விளக்கத்தைப் பின்பற்றிச் செய்யும் போது கிரகித்தற் திறனும் ஆக்கத்திறனும் விரிவடைகிறது என்பதை நினைவிற் கொள்ளுங்கள். மாணவர்கள் தமது ஆக்கத்திறனை வெளிப்படுத்த வாய்ப்புகளை வழங்குங்கள்.

செயற்பாடு 8

- மாணவர்கள் பிராணிகள் பற்றிய தகவல்களைத் திரட்டி எழுத வழிப்படுத்துங்கள். பிராணிகள் பற்றிய தகவல்களை அப்பியாசக் கொப்பியில் குறித்து வகுப்பின் முன் வாசித்துக்காட்ட மாணவர்களை வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் பிராணிகள் தொடர்பான வினாக்களுக்கு விடையெழுத நெறிப்படுத்துங்கள்.

  **எடுத்துக்காட்டு: 1**

## சிட்டுக் குருவிகள்

**கிராமம், நகரம், பூங்கா, மரம், செடி, கொடி என எங்கு வேண்டுமானாலும் கூடு கட்டி வாழும்.**

**சிட்டுக் குருவிகள் சிறு சிறு கூட்டங்களாக வசிக்கும்.**

**ஆண் குருவிகளுக்கு சாம்பல் நிறத்தில் சிறிய கொண்டை இருக்கும்.**

**பெண் குருவிகளுக்கு கொண்டை இருக்காது.**

**சிட்டுக் குருவிகளின் ஆயுட்காலம் சுமார் பன்னிரண்டு ஆண்டுகள் ஆகும்.**



**தங்களுக்குள் சிறிய சத்தங்கள், இடைவிடாத கீச்சுச் குரல்கள் மூலம் மற்றைய குருவிகளைத் தொடர்பு கொள்கின்றன.**

**எடுத்துக்காட்டு: 2**




**செயற்பாடு 9**

- மாணவர்களை கணினிக்கூடத்திற்கு அழைத்துச்செல்லுங்கள். சிறுவர் இணையத் தளங்களை வாசித்துக் கிரகித்து ஆக்கபூர்வமான விடயங்களைத் திரட்டிக் கொள்ளவும் மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

***எடுத்துக்காட்டு:***

**அதியமான் கனி!**

**ஔவையாருக்கு அதியமான் நெல்லிக்கனியைக் கொடுத்த கதை, நம் எல்லோருக்கும் தெரியும். நூற்றாண்டு வாழ வைக்கக் கூடியது என்று சொல்லப்படும் நெல்லிக்கனியில் ஏராளமான சத்துகள் உள்ளன.**



நெல்லியில் முழு நெல்லி, அரை நெல்லி என இரு வகைகள் உண்டு. நெல்லி, கனி வகையைச் சேர்ந்தது என்றாலும், நாம் காய் என்றும் அழைக்கிறோம்.

நெல்லிக்காயில் விற்றமின் சி.பி. தாமிரம், கல்சியம், பொஸ்பரஸ் மற்றும் மாங்கனீசு, புரதம், சுண்ணாம்புச் சத்து, நீர்ச்சத்து, இரும்புச் சத்துகள் இருக்கின்றன.

நெல்லிக்காயை பழரசம், ஊறுகாய், துவையல் என எந்த வடிவத்தில் சாப்பிட்டாலும். அதில் உள்ள விற்றமின்கள் அழியாது. வேக வைத்தாலும், காய வைத்தாலும் அதில் உள்ள விற்றமின்கள் அழியாத் தன்மை கொண்டவை.

புளிப்பு, துவர்ப்பு, இனிப்பு சுவை கொண்டது. நெல்லிக்காய், பசியைத் தூண்டும், அஜீரணக் கோளாறை நீக்கும். இரத்தத்தை தூய்மைப்படுத்தும், சளியை போக்கும். வைரஸ், பாக்டீரியா போன்ற நுண்ணுயிர்களை எதிர்க்கும். நரம்பியல் கோளாறு களையும் வராமல் தடுக்கும்.

நெல்லி உடலை குளிர்ச்சியூட்டக்கூடியது. இதனால் மத்திய காலத்தில் காய்ச்சலுக்கு சிகிச்சை அளிக்கும் மருந்தாக இதைப் பயன்படுத்தினார்கள்.

ஆயுர்வேதம், யுனானி மருத்துவ முறைகளில் நெல்லிமரத்தின் இலை, பட்டை, காய், விதை அனைத்தும் பயன்படுத்தப்படுகிறது.

செயற்பாடு 10

- வகுப்பறை புத்தக மூலையில் சிறுவர் சஞ்சிகைகளைத் திரட்டி வைத்துக் கொள்ளுங்கள். அச்சஞ்சிகைகளில் தமக்குப் பிடித்த பக்கங்களை வாசிக்கவும் தேவையான பகுதிகளை மாணவர்கள் எழுதக் கொள்ளவும் ஊக்கப்படுத்துங்கள்.
  ***எடுத்துக்காட்டு:***

# புத்திசாலி ஆடு

ஒரு காட்டில் அறிவு நிரம்பிய ஆடு ஒன்று இருந்தது. அது பக்கத்து காட்டில் இருந்த, தன் நண்பனைப் பார்த்து விட்டு வர விரும்பியது. தன் நண்பனுக்கு அன்பளிப்பாகத் தர, ஒரு குடம் நிறையத் தேனை எடுத்தவாறு புறப்பட்டது.

பாதி காட்டைத் கடந்தது. திடீரென்று, மழை பிடித்துக் கொண்டது. மழைக்கு ஒதுங்க அருகில் இருந்த குகைக்குள் நுழைந்த ஆடு, திடுக்கிட்டது. உள்ளே ஒரு சிங்கமும், ஒரு புலியும், ஒரு ஓநாயும் இருந்தன.

ஆட்டை பார்த்ததும், சிங்கத்தின் நாவில் எச்சில் ஊறியது. “வா... வா அஞ்சாமல் வா!” என்று அழைத்தது.

“நாங்களும் மழைக்காகத்தான் இங்கு ஒதுங்க வந்தோம்” என்றது புலி. “நீயும் அதற்காகத்தானே வந்தாய்” என்றது ஓநாய்.

“இன்னும் சிறிது நேரத்தில், இவை மூன்றும் என்னைப் பிடிக்கப் போகின்றன. நான் ஏமாறக் கூடாது” என்ன செய்வது என்று நடுங்கியபடி சிந்தித்தது ஆடு.

“குடத்திற்குள் என்ன கொண்டு வந்து இருக்கிறாய்? இனிய மணம் வீசுகிறதே” என்று கேட்டது சிங்கம்.

அப்போது நல்ல திட்டம் ஒன்று, ஆட்டின் உள்ளத்தில் தோன்றியது.

“குடத்திற்குள் இருப்பது ஒரு மருந்து. அதை யார் சாப்பிட்டாலும் மிகுந்த வலிமை உடையவர்களாக ஆவார்கள்” என்றது ஆடு.

“நான் நல்ல வலிமையோடு இருக்கிறேன். இன்னும் வலிமை பெற விரும்புகிறேன். அந்த மருந்தை எனக்குக் கொடு” என்றது சிங்கம்.

“வலிமை பெறவேண்டுமானால், இந்த மருந்துடன் இன்னும் ஒரு பொருளைச் சேர்க்க வேண்டும். அப்போதுதான் மருந்து பயன்தரும்” என்றது ஆடு.

“என்ன சேர்க்க வேண்டும் சொல்?” என்றது கர்ஜித்தது சிங்கம். “ஓநாயின் வாலை, இந்த மருந்துடன் சேர்க்க வேண்டும்” என்றது ஆடு.

இதைக்கேட்ட ஓநாய் நடுங்கியது. சிங்கத்தைப் பார்த்து, என்னை அப்படிப் பார்க்காதீர்கள் என்று அலறியபடி குகையை விட்டு வெளியே வந்தது.

“நில் ஓடாதே!” என்று கட்டளை இட்டது சிங்கம்.

“நீங்கள் மேலும் வலிமை பெறுவதை ஓநாய் விரும்பவில்லை. வாலைக் கொடுத்தால் என்ன? உயிரா போகப் போகிறது,” என்றது ஆடு.

“நன்றியில்லாத ஓநாய், அதைப்பிடித்து அதன் வாலை அறுத்து வருகிறேன்.”என்று கர்ஜித்தது சிங்கம்.

ஓநாய் ஓட, சிங்கம் துரத்தத் துவங்கியது. இரண்டும் வெகு தூரம் ஓடின.



செயற்பாடு 11

- சிறுவர் நூல்களைப் பார்வையிட நூலகத்திற்கு அழைத்துச் செல்லுங்கள். அங்கு சிறுவர் நூல்களைப் பார்வையிட அனுமதியுங்கள். மாணவர்கள் தெரிவுசெய்யும் நூல் ஒன்றின் பெயர், அதனை எழுதியவரின் பெயர், நூலின் விலை, உள்ளடக்கத்தில் உள்ள தலைப்புகள் போன்ற விபரங்களை அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள். எல்லா மாணவர்களும் தாம் தெரிவு செய்த புத்தகம் தொடர்பான விபரங்களைத் திரட்டி எழுத வழிப்படுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு:*** (மாதிரி)




**நூல் விபரம்**

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | சிறுவர் செந்தமிழ் |
| ஆசிரியர் | : | க.சோமசுந்தரப் புலவர் |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | 2004 |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| பக்கங்கள் | : | 164 |
| எழுத்தளவு | : | 12 புள்ளி |
| நூலின் விலை | : | ரூ.120.00 |

நூலின் பெயர் : ........................................................

நூலாசிரியர் பெயர் : ........................................................

புத்தகத்தின் விலை : ........................................................

புத்தகத்தின் பக்கங்கள் : ........................................................

புத்தகத்தைப் பற்றிய சிறு குறிப்பு : ........................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

**கணிப்பீடு :**

- சிறுவர் பாடல்களின் கருத்தைப் புரிந்துகொள்ளல்
- சிறுவர் நகைச்சுவைக் கதைகளை ஆக்கபூர்வமாக வெளிப்படுத்தல்
- விஞ்ஞானிகளைப் பற்றிக் கூறுதல், தகவல்களைத் திரட்டுதல், எழுதுதல்
- இணையத்தளத்தைப் பார்வையிடல், விடயங்களை வாசித்தல்
- சிறுவர் சஞ்சிகைகளை விருப்புடன் வாசித்தல்
- சிறுவர் நூல்களில் இருந்து தகவல்களைப் பெறல், அறிக்கைப்படுத்தல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

**தேர்ச்சிகள் :**

$L_{10}$ – நியம மொழிப் பிரயோகத்திற்காகச் செவிமடுப்பார்.

$S_{10}$ – நியம மொழிப் பிரயோகத்திற்காகப் பேசுவார்.

$R_{10}$ – நியம மொழிப் பிரயோகத்திற்காகவும் மொழிப் பயிற்சிக்காகவும் வாசிப்பார்.

$W_{10}$ – நியம மொழிப் பிரயோகத்திற்காகவும் மொழிப் பயிற்சிக்காகவும் எழுதுவார்.

**உள்ளடக்கம்:**

- ஒளிப் படங்கள்
- படிப்பினை தரும் கதைகள்
- இணையத்தளங்கள்
- மொழிப் பயிற்சிகள்

**கற்றற்பேறுகள்:**

- ஒளிப் படங்களைப் பார்த்து விளங்கி நியம மொழியில் விபரிப்பார், எழுதுவார்.
- படிப்பினை தரும் கதைகளை வாசித்து நியம மொழியில் கூறுவார், எழுதுவார்.
- சிறுவர் இணையத் தளங்களைப் பார்வையிடுவதனூடாகப் பெறும் தகவல்களை நியம மொழியில் கூறுவார். எழுதி வாசிப்பார்.
- மொழிப் பயிற்சிக்கான அறிவுறுத்தல்களைக் கருத்தூன்றிச் செவிமடுப்பதுடன் வாசித்து விளங்கி வினாக்களுக்குச் சரியாக விடையளிக்க முயல்வார்.

**வளங்கள் :**

- ஒளிப் படங்கள், கதைப்பட அட்டைகள், கணினி (இணையம்), மொழிப்பயிற்சி அட்டைகள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு 1**

- மாணவர்களுக்குப் பொருத்தமான ஒளிப் படங்களைத் தெரிவு செய்து, பிரதியெடுத்து மாணவர்களுக்கு வழங்குங்கள். அப்படங்களைப் பார்த்து நியம மொழியில் வாக்கியங்களை எழுதி நிறுத்தக்குறிகளை இட வழிப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு:**



- ஒளிப்படத்தைப் பார்த்து நிகழ்காலத்திலேயே வாக்கியங்களை எழுத வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறுங்கள்.

1. ..........................................................................................................................
2. ..........................................................................................................................
3. ..........................................................................................................................

**செயற்பாடு 2**

- **"நேர்மை கொண்ட உள்ளம்"** என்ற படிப்பினை தரும் கதையைக் கற்பிப்பதற்கு மூன்று நாட்களை ஒதுக்கிக் கொள்ளுங்கள்.

**எடுத்துக்காட்டு :**

**மரியாதை இராமனின் தீர்ப்புகள் அனைத்தும் புகழ்பெற்ற கதைகளாக மக்களிடம் இன்றும் பேசப்படுகின்றது. அக்கதைகளிலிருந்து ஒரு கதை**

## நேர்மை கொண்ட உள்ளம்

**பகுதி - ஒன்று**

மரியாதை இராமன் வசித்து வந்த ஊரில் சோமன் என்ற ஒரு பணக்காரர் இருந்தார். அவர் மிகவும் பொல்லாதவர். பணத்தாசை பிடித்தவர். தன்னிடம் வேலை செய்பவர்களுக்கு சரியான கூலி கொடுக்கமாட்டார்.

ஒரு முறை சோமன் தன் தோட்டத்தில் விளைந்த தேங்காய்களை சந்தையில் விற்றார். கிடைத்த பணத்துடன் தன்னுடைய மாட்டு வண்டியில் காட்டு வழியாக வீட்டுக்கு வரும் போது தனது பணப்பையைத் தொலைத்துவிட்டார்.

வீட்டுக்கு வந்ததும் பணப்பையைத் தேடினார். அனைவரையும் கேட்டு பார்த்துக் கிடைக்காமையால் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தார். அப்போது அவரது மனைவி ''பணப்பையைக் கண்டுபிடித்துக் கொடுப்பவர்களுக்குத் தகுந்த சன்மானம் கொடுக்கிறேன் என்று சொல்லுங்கள். கண்டிப்பாக யாராவது கொண்டு வந்து கொடுப்பார்கள்'' என்றார். இது நல்ல யோசனை என்று நினைத்தார். உடனே ஊர் முழுவதும் தண்டோரா போட்டு சொல்லிவிட்டார். ஊர் மக்களும் பணப்பை கிடைத்தால் கொடுத்துச் சன்மானம் வாங்கலாம் என்று நினைத்தார்கள். அப்படித் தேடிப் பார்த்தும் யாருக்கும் பணப்பை கிடைக்கவில்லை.

இந்தச் சம்பவம் நடந்து ஒரு வாரத்திற்குப் பின்பு அந்த ஊருக்கு ஒரு வழிப்போக்கர் வந்தார். அவர் பெயர் பூபாலன். மிகவும் நல்ல குணமுடையவர். ஏழையாக இருந்தாலும் கௌரவமாக வாழ நினைப்பவர். தன்னால் முடிந்தவரை அடுத்தவர்களுக்கு உதவுபவர். விவசாயம் செய்ய நீர் கிடைக்காததால் அவரால் விவசாயம் செய்ய முடியவில்லை. வேறு தொழில் செய்யவோ அவரிடம் பணமும் அனுபவமும் இல்லை. பக்கத்து ஊருக்குச் சென்று ஏதாவது வேலை செய்து, சம்பாதித்துத் தொழில் தொடங்க நினைத்து, அந்த ஊருக்கு வந்தார்.

அப்படிக் காட்டுவழியால் வரும் போது அங்கே ஒரு புறா அடிப்பட்டுக் கீழே கிடந்தது. அதைக் கண்டு இரக்கப்பட்ட பூபாலன் புறாவை தூக்கினார். அருகில் இருந்த குளத்திற்குக் கொண்டு சென்று தண்ணீரை எடுத்து புறாவின் வாயில் ஊற்றினார். பின்னர் அந்த புறாவை அருகில் இருந்த மரக்கிளையில் வைத்துவிட்டு வந்தார். அவர் அப்படி வரும் போது காலில் ஏதோ தட்டுப்பட்டதைக் கண்டார். அது ஒரு பை. அதை எடுத்தார். திறந்து பார்த்தார். அதற்குள் பணமிருந்தது.

தொலைத்தவரைக் கண்டுபிடித்து கொடுத்துவிட வேண்டும் என்று அந்த ஊருக்கு விரைந்தார். அங்கிருந்த கடை ஒன்றில் விசாரித்தார். கடைக்காரர் சோமனைப் பற்றிக் கூறினார். ''அவர் தான் தொலைத்தவர்; நீங்கள் இந்தப் பையைக் கொடுத்தால், கண்டிப்பாக மகிழ்ச்சியடைவார்; உங்களுக்குச் சன்மானம் கொடுப்பார்'' என்றார்.

- கதையின் முதற்பகுதியை மாணவர்கள் குழுவாக வாசித்த பின்னர் என்ன நடந்திருக்கும் என மாணவர்களிடம் கேட்டறியுங்கள். அவர்கள் கூறுபவற்றைச் சுருக்கமாக அப்பியாசக் கொப்பியில் எழுதி வகுப்பின் முன் வாசிக்க வழிப்படுத்துங்கள்.

- இரண்டாம் நாள் **''நேர்மை கொண்ட உள்ளம்''** என்ற கதையின் முதற் பகுதியின் சுருக்கத்தைக் கூறுங்கள். எழுமாறாக சில மாணவர்களை அழைத்து கதையின் முதற் பகுதியை கூற வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் கதையின் இரண்டாம் பகுதியை மாணவர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள். கதையின் இரண்டாம் பகுதியை பிரதி எடுத்து எல்லா மாணவர்களுக்கும் வழங்குங்கள்.

## நேர்மை கொண்ட உள்ளம்
### பகுதி - இரண்டு

பூபாலனும் சோமன் வீட்டைத் தேடிப் பிடித்து, அவரிடம் பணப்பை கிடைத்த விபரத்தைக் கூறினார். சோமனுக்கு சந்தோசம் தாங்கமுடியவில்லை. உடனே அந்தப் பணப்பையை வாங்கிக் கொண்டார். அதே நேரம் அவரது தீய எண்ணமும் வெளிப்படத் தொடங்கியது. ''பணப்பை கிடைத்து விட்டது, பணமும் சரியாக இருக்கின்றது. இப்போது ஏன் இவனுக்கு சன்மானம் கொடுக்க வேண்டும். சன்மானம் கொடுக்காமல் தப்பிக்க என்ன செய்யலாம்'' என்று சோமன் யோசித்தார்.

சோமன் பூபாலனைப் பார்த்து ''நீ என்னை ஏமாற்றப் பார்க்கிறாய்; நான் என்னுடைய பையில் வைர மோதிரம் ஒன்றையும் வைத்திருந்தேன்; அதைக் காணவில்லை; மரியாதையாகக் கொடுத்து விடு; உன்னை சும்மா விடமாட்டேன்'' என்று கத்தினார்.

பூபாலனுக்கு ஒன்றுமே புரியவில்லை, ''ஒருவேளை இவர் கூறியது போன்று வைர மோதிரம் இருந்து தொலைந்து போயிருக்குமா! நான் தான் எடுக்கவில்லையே, இவரிடம் சன்மானம் வாங்குவதை விட பிரச்சினையில் இருந்து எவ்வாறு விடுபடலாம்'' என்று யோசித்தார்.

சோமனோ விடாமல் கத்தி ஆர்ப்பாட்டம் செய்தார். பூபாலன் பணப்பை கொண்டு வந்த செய்தியை ஊராருக்குக் கூறிய கடைக்காரர், ''கஞ்சனான சோமன் அப்படி என்னதான் பரிசு கொடுக்கப் போகின்றான் என்று பார்ப்போம்'' என்று அனைவரையும் அழைத்து வந்தார். வந்த இடத்தில் பூபாலன் குற்றவாளி போல் நிற்பதை கண்ட ஊரார் ''சோமனை சும்மா விடக்கூடாது. இந்த பிரச்சனையை மரியாதை இராமனிடம் தான் கொண்டு சென்று தீர்ப்பு கேட்க வேண்டும்'' என்று கூறினார்கள்.

- கதையின் இரண்டாம் பகுதியை மாணவர்கள் குழுவாக வாசித்த பின்னர் நீங்கள் இப் பிரச்சினைக்கு எவ்வாறான தீர்ப்பினை வழங்குவீர்கள் என மாணவர்களிடம் கேட்டறியுங்கள்.

- தீர்ப்பினை அப்பியாசக் கொப்பியில் எழுதி வகுப்பின் முன் வாசிக்க வழிப்படுத்துங்கள். தமது தீர்ப்பினைக் கூறிய மாணவர்கள் எல்லோரையும் பாராட்டுங்கள்.

- மூன்றாம் நாள் **"நேர்மை கொண்ட உள்ளம்"** என்ற கதையின் இரண்டாம் பகுதியின் சுருக்கத்தைக் கூறுங்கள். எழுமாறாக சில மாணவர்களை அழைத்து கதையின் இரண்டாம் பகுதியை கூற வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் கதையின் இறுதிப் பகுதியை மாணவர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள். கதையின் இறுதிப் பகுதியை பிரதி எடுத்து எல்லா மாணவர்களுக்கும் வழங்குங்கள்.

- மாணவர்களை இருவரிருவராக்கி, கதையின் இறுதிப் பகுதியை வாசிக்க வழிப்படுத்துங்கள். எழுமாறாக சில மாணவர்களை அழைத்துக் கதையின் இறுதிப் பகுதியைக் கூற வழிப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு:**

**நேர்மை கொண்ட உள்ளம்**
**பகுதி - மூன்று**

சிறிது நேரத்தில் சோமன், பூபாலன், ஊர் மக்கள் அனைவரும் மரியாதை இராமன் முன்னால் போய் நின்றார்கள். மரியாதை இராமனிடம் சோமன் தனது பணப்பையும் அதில் இருந்த வைர மோதிரமும் தொலைந்த கதையைக் கூறினார். பூபாலன் தான் பணப்பைக் கண்டுபிடித்த கதையைக் கூறினார்.

ஏற்கனவே சோமன் அறிவித்த தண்டோரா பற்றி மரியாதை இராமனுக்குத் தெரியும். அப்போது தண்டோரா போடும் போது வைரமோதிரம் பற்றி ஒன்றும் சொல்லாததும் அவருக்குத் தெரியும்.

சோமன் ஏமாற்றுகின்றார் என்பதை புரிந்து கொண்ட மரியாதை இராமன், சோமனுக்கு சரியான தண்டனை கொடுக்க நினைத்தார். "சோமன் தொலைத்த பையில் பணமும் வைர மோதிரமும் இருந்தது என்று அவரே சொல்லியிருக்கிறார். பூபாலன் கொண்டு வந்த பையில் பணம் மட்டுமே உள்ளது. ஆகவே இது சோமனின் பையே இல்லை, வேறு யாரோ தொலைத்த பை இது. அப்படித் தொலைத்தவர் யாரும் இதுவரை புகார் கொடுக்கவில்லை. அவ்வாறு யாரும் புகார் கொடுக்காதவரை எங்கள் ஊர் வழக்கப்படி கிடைத்த பணத்தில் பத்து சதவீதத்தைக் கோயில் செலவுக்குக் கொடுத்து விட்டு, மீதியை எடுத்தவரே வைத்துக் கொள்ளலாம். சோமனின் பணம் மற்றும் வைர மோதிரம் கொண்ட பையைக் கண்டுபிடித்தவுடன் சோமனே சன்மானம் கொடுப்பார்" என்று தீர்ப்புக் கூறினார்.

மரியாதை இராமன் தீர்ப்புக் கூறியதும் சோமனுக்கு இதயமே நின்றுவிடும் போலிருந்தது. பூபாலன் கிடைத்த பணத்தில் பத்து சதவீதத்தைக் கோயிலுக்குக் கொடுத்துவிட்டு, மீதியை தன் சொந்த ஊருக்குக் கொண்டு சென்று தொழில் செய்து நலமாக வாழ்ந்து வந்தார்.

- மரியாதை இராமன் வழங்கிய தீர்ப்பினை அப்பியாசக் கொப்பியில் நியம மொழியில் எழுத வழிப்படுத்துங்கள். பூபாலனின் குணவியல்புகளைப் பற்றி மாணவர்கள் சுயமாகக் கூறவும் எழுதவும் வழிப்படுத்துங்கள்.

- அதன் பின்னர், வினாக்களை வழங்கி, விடைகளை நியம மொழியில் எழுத வழிப்படுத்துங்கள். இதுவரை கற்றவற்றிலிருந்து பல்வேறு விதமான பயிற்சிகளை வழங்குங்கள்.

செயற்பாடு 3

- **" பொறுமைக்கும் நற்பண்பிற்கும் கிடைத்த பரிசு"** என்ற கதையை மாணவர்களுக்கு வாசித்துக்காட்டுங்கள். மாணவர்களையும் வாசிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் வினாக்களுக்கு விடை எழுதும் பயிற்சியை வழங்குங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***

## பொறுமைக்கும் நற்பண்பிற்கும் கிடைத்த பரிசு

சிற்றூர் என்ற கிராமத்தில் சில ஆண்டுகளாக மழையே பெய்யவில்லை. அந்த ஊரில் கடும் பஞ்சம் நிலவியது. மக்கள் பசியால் வாடினர். நல்ல உள்ளம் படைத்த செல்வந்தர் ஒருவர் தினமும் அவ்வூர் மக்களுக்கு மதிய உணவை வழங்க விரும்பினார்.

இளகிய உள்ளம் கொண்ட அவர், "இந்த ஊரில் உள்ளவர்கள் யாரும் பசியால் வாட வேண்டாம். தினமும் மதிய உணவு வழங்க ஏற்பாடு செய்கிறேன்"என்று ஊர்ப் பெரிய வர்களிடம் கூறினார்.

அவர், தன் உதவியாளரை அழைத்தார். அந்த ஊரில் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கையைக் கணக்கெடுத்துக் கொண்டு வருமாறு கூறினார்.

உதவியாளர் கணக்கெடுத்து வந்த எண்ணிக்கைக்கு ஏற்ப மதிய உணவை பொதி செய்து பொது இடமொன்றில் வைத்து வழங்க ஏற்பாடு செய்தார்.

உணவுப் பொதியைப் பெறுவதற்கு ஒவ்வொருவரும் போட்டி போட்டனர். ஆனால், ஒரே ஒரு சிறுவன் மட்டும் அமைதியாக இருந்தான். எல்லோரும் எடுத்துச் சென்றது போக, மிஞ்சி இருந்த ஒரு உணவுப் பொதியை எடுத்துக் கொண்டு அங்கிருந்து மகிழ்ச்சியுடன் சென்றான்.

இப்படியே ஐந்து நாட்கள் தொடர்ந்து நிகழ்ந்தது. எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தார் செல்வந்தர். ஆறாம் நாளும் அப்படியே நடந்தது. எஞ்சியிருந்த உணவுப் பொதியை எடுத்துக் கொண்டு அந்தச் சிறுவன் புறப்பட்டான். தன் வீட்டிற்கு வந்தவன், தன் தாயிடம் அதைத் கொடுத்தான். அந்த உணவுப் பொதியைத் திறக்குமாறு தாயார் கூறினார். அவன் தாயார் கூறியபடி உணவுப் பொதியைத் திறத்தான். அதற்குள் இருந்து மூன்று தங்கக்காசுகள் கீழே விழுந்தன.

அந்தத் தங்கக் காசுகளை எடுத்துக் கொண்டு தாயாருக்கு எதுவுமே கூறாமல் செல்வந்தரின் வீட்டிற்கு ஓடிச் சென்றான். "ஐயா! இந்தத் தங்கக் காசுகள் நீங்கள் தந்த உணவுப் பொதிக்குள் இருந்தது. இது உங்களுடையது. தயவு செய்து பெற்றுக் கொள்ளுங்கள்!" என்றான். "மகனே, உன்னைத் தினமும் அவதானித்துக்கொண்டு தான் இருந்தேன். ஊரில் உள்ளவர்களிடம் உன்னைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொண்டேன். உன் பொறுமைக்கும் நற்பண்பிற்கும் நான் அளித்த பரிசே இந்தத் தங்கக் காசுகள். மகிழ்ச்சியுடன் இவற்றை எடுத்துக் கொண்டு வீட்டிற்குச் செல்"என்றார் செல்வந்தர். துள்ளிக் குதித்தபடி ஓடி வந்த அவன், நடந்ததை தன் தாயிடம் கூறிப் பொற்காசுகளையும் கொடுத்தான். தாயார் அவனைக் கட்டி அணைத்துக் கொண்டார்.


- "பொறுமைக்கும் நற்பண்பிற்கும் கிடைத்த பரிசு" என்ற படிப்பினை தரும் கதையினூடாக மாணவர்களின் மனதில் நற்சிந்தனைகளை விதையுங்கள். இது போன்ற படிப்பினை தரும் கதைகளை மாணவர்களை வாசிக்க வழிப்படுத்துங்கள். **தெரிவு செய்து வழங்கும் கதைகள் மாணவர்களின் வயது மட்டத்திற்குப் பொருத்தமானதாக இருக்க வேண்டும்** என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

செயற்பாடு 4

- சிறுவர் இணையத்தளத்தைப் பார்வையிடுவதன் ஊடாக பல்வேறு தகவல்களைத் திரட்டி, நியம மொழியில் எழுதுவதற்கு வழிப்படுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு:***

# கோள்களை அறிவோம்



**புதன்** (Mercury)

இது சூரியனுக்கு பக்கத்திலேயே இருப்பதால் மிகவும் சூடாக இருக்கிறது. இதன் வெப்ப அளவு 800 டிகிரி பாரன் ஹீட். சூரியனில் இருந்து 57.91 மில்லியன் கி.மீ. தூரத்தில் (Distance) இருக்கிறது. (ஒரு மில்லியன் என்பது பத்து லட்சம்) இரவில் மைனஸ் 209 டிகிரி பாரன் ஹீட் அளவிற்கு கடுமையாகக் குளிர்ந்திருக்கும்.

**வெள்ளி** (Venus)

சூரியனைச் சுற்றி வர 225 நாட்கள் எடுத்துக் கொள்கிறது. தன்னைத்தானே சுற்றிவர 243 நாட்கள். சூரியனுக்கும், வெள்ளி கோளுக்குமான இடைவெளி 108.2 மில்லியன் கி.மீ. பார்ப்பதற்கு பிங்க் நிறத்தில் இருக்கும். வெள்ளிதான் சூரியக் குடும்பத்தில் மிகவும் வெப்பமான கோள். இதற்கு ஈவ்னிங் ஸ்டார் என்று ஒரு பெயர் உண்டு. சூரியன் மறையும் போது வானத்தில் மேற்கில் பார்க்கலாம்.

**பூமி** (Eath)

சூரியக் குடும்பத்தில் மூன்றாவது கோள், நீலக்கோள் என்றும் அழைக்கப்படுகிறது. உயிரினங்கள் வாழக்கூடிய ஒரே கோள். சுமார் 4.6 பில்லியன் வருடங்களுக்கு முன் தோன்றியது. தன்னைத்தானே சுற்றுவதற்கு 24 மணி நேரமும், சூரியனைச் சுற்றிவர 365.24 நாட்களும் எடுத்துக்கொள்கிறது. சூரியனில் இருந்து 149.6 மில்லியன் கி.மீ தூரத்தில் இருக்கிறது.

**செவ்வாய்** (Mars)

சிவப்பு நிறத்தில் உள்ள கோள். இந்தக் கோள் சூரியனில் இருந்து 227.9 மில்லியன் கி.மீ தூரத்தில் இருக்கிறது. இங்கு கார்பன் டை ஆக்சைடு (Carbon Di oxide) வாயு அதிகம் நிறைந்துள்ளது. மலைகள் நிறைந்துள்ளன. செவ்வாயில் உள்ள கனிம வளங்கள் குறித்து ஆய்வு செய்யவும். மனிதர்கள் வாழ தகுதி உள்ளதா என்பதை அறியவும். இந்தியா, மங்கள்யான் விண்கலத்தை அனுப்பியது. கடந்த 2014 ம் ஆண்டு செப்டம்பரில் இந்திய விண்வெளி ஆய்வு மையம் இஸ்ரோட் மங்கள்யானை விண்ணுக்கு அனுப்பியது.

**வியாழன்** (Jupiter)

மற்ற எல்லா கோள்களை விடவும் மிகப் பெரியது. மற்ற கோள்களை சேர்த்தால் வரும் எடையை விட, இரண்டு பங்கு பெரியது. பூமியை விட 1,300 மடங்கு பெரியது. சூரியனில் இருந்து 778.5 மில்லியன் கி.மீ தூரத்தில் இருக்கிறது. பூமியில் ஏற்படும் ஒரு பெரும் புயலை விடவும், வியாழனில் ஆறு மடங்கு அதிகமாக புயல் வீசும். 67 (துணைக்கோள் Natural satellites) நிலாக்கள் வியாழனுக்கு துணையாக இருக்கின்றன.

**சனி** (Satrun)

சனி, சூரியனில் இருந்து 1.429 பில்லியன் கி.மீ இடைவெளியில் உள்ளது. (ஒரு பில்லியன் நூறு கோடி) மிகவும் அழகான கோள் என்று அழைக்கப்படுகிறது. கணக்கிடவே முடியாத பனிக்கட்டிகளும், தூசு படலமும் நிறைந்துள்ளது. இந்தக் கோளுக்கு 62 குட்டி நிலாக்கள் உள்ளன.

**யூரேனஸ்** (Uranus)

இப்படி ஒரு கோள் இருப்பதாகவே முதலில் விஞ்ஞானிகள் கண்டுபிடிக்கவில்லை. 1781 ல் தான் யூரேனஸ் விஞ்ஞானிகளால் கண்டறியப்பட்டன. சூரியனுக்கும். யூரேஸிக்குமான இடைவெளி 4.498 பில்லியன் கி.மீ இந்தக் கோளைச் சுற்றி அடர்ந்த கடல் நீலம் கொண்ட மீத்தேன் வாயு நிரம்பி உள்ளதால் நீல நிறமாகக் காட்சி தருகிறது. 27 துணை நிலாக்கள் யூரேனஸிக்கு உண்டு.

**நெப்டியூன்** (Naptune)

சூரியனுக்கும், நெப்டியூனுக்கும் 4.498 பில்லியன் கி.மீ இடைவெளி உள்ளது. இதுவும் நீல நிறக்கோள்தான். 1846ல் இந்தக் கோள் கண்டு பிடிக்கப்பட்டது. சூரியனை ஒரு முறை சுற்றி வர 164 வருடங்கள் எடுத்துக்கொள்கிறது. எப்பொழுதும் 346 டிகிரி வெப்ப நிலையிலேயே உறைந்து இருக்கிறது.

**புளுட்டோ** (Pluto)

சூரியனுக்கு அப்பால் 3.67 பில்லியன் கி.மீ தூரத்தில் இருக்கிறது. குறுங்கோள் (Dwarf) என்று அழைக்கப்படுகிறது. மைனஸ் 364 டிகிரி பாரன் ஹீட்டில் இக்குறுங்கோல் இருக்கும். மற்ற எட்டுக்கோள்களை விட இங்குதான் குளிர்ச்சி அதிகம். 1930 ல் புளுட்டோ கண்டு பிடிக்கப்பட்டது. 2014 ஆம் ஆண்டு நடந்த சர்வதேச வானியல் ஆய்வுக் கழகம் புளூட்டோவை சூரிய மண்டபத்தில் ஒரு கோளாகச் சேர்க்கக்கூடாது என்று கூறி, குறுங்கோளாக அறிவித்தது.

புதிதாக நெப்டியூன் (Naptune) கோளுக்கு அப்பால், பூமியை விட பத்து மடங்கு அதிக எடை கொண்ட, ஒரு புதிய கோள் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்து இருக்கிறார்கள். அதற்கு பிளானட் 9 (Planet 9) என்று தற்காலிகமாக பெயர் வைத்திருக்கிறார்கள்.

## மொழிப்பயிற்சிகள்

- மாணவர்கள் கற்றவற்றை இலகுவாக கணிப்பீடு செய்யக்கூடிய வகையிலான மொழிப் பயிற்சிகளை வழங்குங்கள். அப்பயிற்சிகள் அவர்களின் வயது மட்டத்திற்கு ஏற்றதாக இருத்தல் வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

**பயிற்சி 1**

- **பின்வரும் ஒவ்வொரு வாக்கியமும் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

1. எனது பூந்தோட்டத்தில் அழகான பூக்கள் பூத்துள்ளன. (...............)
2. மான்கூட்டம் சிதறி ஓடியன. (...............)
3. ஒவ்வொரு புத்தகமும் நல்லது. (...............)
4. தாலாட்டுப் பாடல்கள் இனிமையானவை. (...............)

**பயிற்சி 2**

- **சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | தொழிலாழி | தொளிலாளி | தொழிலாளி | தொளிலாழி |
| 2. | முயர்ச்சி | முயச்சி | முயற்ச்சி | முயற்சி |
| 3. | ஆராச்சி | ஆராய்ச்சி | ஆராட்சி | ஆராய்சி |
| 4. | நட்ச்சத்திரம் | நட்சத்திரம் | நச்சத்திரம் | நட்சத்திறம் |

**பயிற்சி 3**

- **பின்வரும் ஒவ்வொரு சொற் கூட்டங்களுள் எந்தச் சொல் வேறுபட்டது எனக் கண்டு பிடித்து அச்சொல்லைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | மை, | பேனா, | மலர், | புத்தகம், | பென்சில் | (...............) |
| 2. | பாடகன், | அம்மா, | அப்பா | அக்கா | அண்ணன் | (...............) |
| 3. | மயில், | குருவி, | மரை, | குயில், | காகம் | (...............) |
| 4. | மரம், | மான், | வேர், | கிளை, | தண்டு | (...............) |

பயிற்சி 4

- **பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.**

1. உனக்குச் சிலந்தியைப் பற்றித் தெரியுமா
2. ஐயோ வழுக்கி விட்டதே
3. ஐயா உங்களுக்கு நீச்சல் தெரியுமா
4. ஐயோ எனக்கு நீச்சல் தெரியாதே

பயிற்சி 5

- **பின்வரும் பிராணிகளின் இளமைப் பெயர்களைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

1. ஆட்டுக்....................
2. கீரிப்........................
3. குதிரைக்..................
4. புலிக்.......................
5. அணிற்.......................
6. நாய்க்........................
7. மான்..........................
8. குரங்குக்.....................

பயிற்சி 6

- **பின்வரும் வாக்கியங்களில் புள்ளிக் கோடிட்ட இடங்களுக்குப் பொருத்தமான சொற்களை கட்டத்திற்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

| |
|---|
| **மெதுவாக, தெளிவாக, அமைதியாக, நகைச்சுவையாக, சரியாக** |

1. அவர் ........................ நடந்து வைத்தியசாலைக்குச் சென்றார்.
2. தாத்தா எதுவும் பேசாமல் .............................. இருந்தார்.
3. நாம் எப்போதும் சொற்களைச் ........................ உச்சரிக்க வேண்டும்.
4. அப்பா, எந்த முடிவை எடுத்தாலும் அது .................... இருக்கும்.

பயிற்சி 7

- **பின்வரும் பிராணிகளின் ஒலிகளை கட்டங்களுக்குள் எழுதுக.**

| பிராணிகள் | ஒலிகள் | பிராணிகள் | ஒலிகள் |
|---|---|---|---|
| மயில் | | காகம் | |
| ஆந்தை | | நரி | |
| யானை | | சிங்கம் | |

பயிற்சி 8

- **பின்வரும் பந்தியை வாசித்து வினவப்பட்டுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

மாதவன் காலையில் வகுப்பிற்கு வந்த போது அங்கு வேறு எவரும் வந்திருக்கவில்லை. புத்தகப் பையை மேசை மீது வைத்துவிட்டு அவன் துடைப்பத்தை எடுத்து வகுப்பைச் சுத்தம் செய்யத் தொடங்கினான். அதன் பின்னர் வந்த பீற்றர் அவனுக்கு உதவி செய்தான். அடுத்ததாக வந்த சாந்தி பூச்சாடியில் இருந்த பூக்களை அகற்றி விட்டு புதிய பூக்களைச் செருகினாள். அதன் பின்னர் வந்த கரீம் மேசைகளையும் கதிரைகளையும் ஒழுங்குபடுத்தி வைத்தான்.

1. மாதவன் காலையில் வகுப்பிற்கு வந்த போது வகுப்பில் இருந்தவர் யார்?

   1. சாந்தி 2. கரீம் 3. பீற்றர் 4. ஒருவருமில்லை

2. வகுப்பைச் சுத்தம் செய்தவர் யார்?

   1. பீற்றர் 2. சாந்தி 3. மாதவன் 4. கரீம்

3. வகுப்பைச் சுத்தம் செய்வதற்கு உதவியவர் யார்?

   1. சாந்தி 2. பீற்றர் 3. கரீம் 4. ஒருவருமில்லை

4. பூச்சாடியை ஒழுங்கு செய்தவர் யார்?

   1. சாந்தி 2. மாதவன் 3. பீற்றர் 4. கரீம்

**மேலே தரப்பட்ட பந்தியை மீண்டும் வாசித்துக் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. மேசைகளையும் கதிரைகளையும் ஒழுங்குபடுத்தியவர் யார்?

   ..................................................................................................

2. முதலில் வந்தவர் யார்?

   ..................................................................................................

3. அடுத்ததாக வந்தவர் யார்?

   ..................................................................................................

4. கடைசியாக வந்தவர் யார்?

   ..................................................................................................

**பயிற்சி 9**

- **கீழே தரப்படடுள்ள சொற்கள் இரண்டு சொற்களினால் ஆக்கப்பட்டவை. ஆனால் அவற்றின் முதல் எழுத்துக்கள் மாறியுள்ளன. சரியான சொல்லை ஆக்கிப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

1. பாதிய புதை ......................................................................
2. உலை மச்சி ......................................................................
3. மொய் தாழி ......................................................................
4. வெயல் வளி ......................................................................
5. குன் மாட்டி ......................................................................
6. வீர் நீழ்ச்சி ......................................................................
8. ஆடல் கமை ......................................................................
9. காடி கரம் ......................................................................
10. மனை பரம் ......................................................................

**பயிற்சி -10**

- **பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

சித்திரை வந்தால் வசந்தம் பிறக்கும்
வண்ண வண்ணப் பூக்கள் எங்கும்
கொத்துக் ................ மலர்ந்து பொலியும்
இக்காட்சிதனைக் காணக் களிப்புடன் வாரீர்

பூக்களில் வண்டுகள் தேன் குடிப்பதைப் பாரீர்
மகிழ்வுடன் கீதம் இசைப்பதைக் கேளீர்
சிறகடித்து எழுந்து அங்கும் இங்கும்
செல்வதைப் பாரீர் அதோ செல்வதைப் பாரீர்.

**மேலே தரப்பட்ட பாடலை வாசித்துக் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. வண்ண வண்ணப் பூக்கள் என்பதன் கருத்து யாது?

   ......................................................................................................................

2. வண்டுகள் எவற்றின் மீதிருந்து கீதம் இசைக்கின்றன?

   ......................................................................................................................

3. முதற் கவிதையில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான ஒரு சொல்லை எழுதுக.

   ......................................................................................................................

4. சந்தோசமாக என்னும் கருத்தைத் தரும் இரு சொற்கள் இவ்விரு கவிதைகளிலும் உள்ளன. அந்த இரு சொற்களும் யாவை?

   ......................................................................................................................

பயிற்சி 11

- **குறுக்கெழுத்துப் போட்டிக்கான விடைகளைக் கண்டு பிடித்து எழுதுக.**

## குறுக்கெழுத்துப் போட்டி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | 3 |
| | | 4 | | | |
| 5 | | | | | |
| | | | | 6 | |
| 7 | | | 8 | | |

**இடமிருந்து வலம்**

1. இவற்றுக்கு இறகுகள் உள்ளன.
4. வீட்டினுள்ளே வெளிச்சத்தையும் காற்றையும் தருவதற்காகச் சுவரிலே வைத்துக் கட்டப்படுவது.
5. வாரத்தில் பாடசாலை ஆரம்பிக்கும் முதல் நாள்.
6. சோற்றுடன் சேர்த்து உண்ணுவது.
7. கைது செய்யப்பட்டவர்.
8. பூக்களில் இது தேனைக் குடிக்கும்.

**மேலிருந்து கீழ்**

1. அன்றாட செய்திகளை வாசித்து அறிய உதவுவது.
2. உலகம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்.
3. உணவை மென்று உண்ண உதவுவது.
6. இதனால் நாம் பார்க்கிறோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி விடைகள்**

**இடமிருந்து வலம்**

1. பறவை 4. யன்னல் 5. திங்கள் 6. கறி 7. கைதி

8. வண்டு

**மேலிருந்து கீழ்**

1. பத்திரிகை 2. வையகம் 5. திங்கள் 3. பல் 6. கண்

பயிற்சி 12

- **கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.**

1. நேற்று மலை பெய்தது.

   ........................................................................................................................

2. மிளகாய்ச் செடி செளித்து வளர்ந்தது.

   ........................................................................................................................

3. நான் மனல் வீடு கட்டினேன்.


   ........................................................................................................................

4. அது நல்ல யோசணை என்று நினைத்தார்.

   ........................................................................................................................

பயிற்சி 13

- **காட்சிப்படத்தைப் பார்த்து நிகழ்காலத்தில் நான்கு வாக்கியங்கள் எழுதுக.**



1. ........................................................................................................................
2. ........................................................................................................................
3. ........................................................................................................................
4. ........................................................................................................................

பயிற்சி 14

- **பின்வரும் சொற்களில் எதிர்ப்பாற் சொற்கள் அல்லாத சொல்லின் கீழ்க் கோடிடுக.**

**1. அரசன், மந்திரி, அரசி, தம்பி, தங்கை**

**2. தேவன், தம்பி, தங்கை, நடிகன், நடிகை**

**3. உத்தமன், உத்தமி, தமையன், மகள், மகன்**

**4. சிறுவன், புதல்வன், புதல்வி, புத்திரன், புத்திரி**

**5. மேலோன், நல்லவன், நல்லவள், பாட்டன், பாட்டி**

பயிற்சி 15

- **ஒளிப்படத்தைப் பார்த்து நிகழ்காலத்தில் நான்கு வாக்கியங்கள் எழுதுக.**



1. ..........................................................................................................................

2. ..........................................................................................................................

3. ..........................................................................................................................

4. ..........................................................................................................................

**கணிப்பீடு:**

- ஒளிப்படங்களைப் பார்த்து நியம மொழியில் விபரித்தல், எழுதுதல்.
- கதைகளைக் கிரகித்து பொருத்தமுற வெளிப்படுத்தல்
- வினவப்படும் வினாக்களுக்கு நியம மொழியில் விடை எழுதுதல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

## தாய்மொழி (தமிழ்) கணிப்பீட்டுப் - படிவம்

**கணிப்பீட்டு அளவுத்திட்டம்**

| | |
|---|---|
| வெற்றிகரமாகச் செய்கிறார் | √ |
| இடர்ப்படுகிறார்/ மேலும் உதவி தேவை | • |

| | | | | மாணவர் பெயர் | |
|---|---|---|---|---|---|
| | | | | 01. செவிமடுத்துச் சுயமாகப் பேசுவதற்கு முன்வருவார். | அடிப்படை மொழித்திறன்கள் |
| | | | | 02. சரியான கொண்ணிலையிலமர்ந்து முறையாகப் பென்சிலைப் பிடித்தெழுதுவார். | |
| | | | | 03. காட்சிப்படங்கள், ஒளிப்படங்களைப் பார்த்துச் சிறிய வாக்கியங்கள் எழுதுவார். | |
| | | | | 04. கதைப்படங்களைப் பார்த்துக் கதையொன்றை இரசனையுடன் இறந்த காலத்தில் கூறுவார் / எழுதுவார். | |
| | | | | 05. ஒலி வேறுபாடுகளை இனங்கண்டு சரியாக உச்சரித்துக் கூறுவார்./எழுதுவார். | |
| | | | | 06. ஒருமை, பன்மைச் சொற்களைச் சரியாக இனங்கண்டு வாக்கியங்களில் பயன்படுத்துவார். | |
| | | | | 07. வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்துப் பிழையின்றி வாசிப்பார். | |
| | | | | 08. ஒத்த கருத்து, எதிர்க்கருத்துச் சொற்களை இனங்கண்டு எழுதுவார். | |
| | | | | 09. திணை, பால், எண், இடம், காலம் ஆகியவற்றை அறிந்து உரிய வகையிற் பயன்படுத்துவார். | |
| | | | | 10. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகியவற்றை வாக்கியங்களில் பொருத்தமுறப் பயன்படுத்துவார். | |
| | | | | 11. எழுவாய், பயனிலை அடைமொழிகளைச் சரியாக இனங்காண்பார். | |
| | | | | 12. பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றை பொருத்தமுற வாக்கியங்களிற் பயன்படுத்துவார். | |
| | | | | 13. நிறுத்தக் குறிகளை (முற்றுப்புள்ளி, காற்புள்ளி, வினாக்குறி, வியப்புக்குறி) வாக்கியங்களிற் பொருத்தமுறப் பயன்படுத்துவார். | |
| | | | | 14. பாடல்கள், கதைகள் மற்றும் உரையாடல்களை விருப்புடனும் இரசனையுடனும் மெய்ப்பாடுகளுடனும் உணர்வுபூர்வமாக வெளிப்படுத்துவார். | |
| | | | | 15. செவிமடுத்த, வாசித்த விகடத்துணுக்குகளை இயல்பாக வெளிப்படுத்துவார். | |
| | | | | 16. அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள், கட்டளைகள் ஆகியவற்றை விளங்கி, சுயமாகத் துலங்குவார். | |
| | | | | 17. சுயவிபரப் படிவங்களை வாசித்துப் பிழையின்றித் தெளிவாகப் பூர்த்தி செய்வார். | |
| | | | | 18. தகவல்கள் / குறிப்புக்களை திரட்டித் தெளிவாக எழுதி முன்வைப்பார். | |
| | | | | 19. கடிதம், மின்னஞ்சல், மற்றும் குறுஞ்செய்திகளைச் சுயமாக எழுதுவார். | |
| | | | | 20. மரபுச்சொற்கள், இணைமொழிகள் மற்றும் இரட்டைக்கிளவிகளை எழுதுவார். | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | 21. விடுகதைகளைக் கருத்தூன்றிச் செவிமடுத்து விடுவிப்பார். | |
| | | | | 22. பழமொழிகளையும் அவற்றின் கருத்துக்களையும் கூறுவார். / எழுதுவார். | |
| | | | | 23. குறியீடுகள், சுருக்கக்குறியீடுகளைப் பொருத்தமுறப் பயன்படுத்துவார். | |
| | | | | 24. சொற்களைக் கருத்தூன்றிச் செவிமடுத்து பிழையின்றித் தெளிவாக எழுதுவார். (சொல்வதெழுதல்) | |
| | | | | 25. பொது இடங்களிலும் பாடசாலையிலும் வீட்டிலும் பெரியவர்களுக்கு மதிப்பளித்துப் பணபுடன் உரையாடுவார். | |
| | | | | 26. வானொலி, தொலைக்காட்சிச் செய்தி வாசிப்பு, நேர்முக வர்ணனை ஆகியவற்றின் ஊடாகத் தனது திறமைகளை வெளிக்கொணர்வார். | |
| | | | | 27. முக்கியமான அலுவலகங்களின் பெயர்களைத் தெரிந்து கொள்வதோடு தகவல்களையும் பெற்றுக் கொள்ள முயல்வார். | |
| | | | | 28. வானிலை தொடர்பான தகவல்களைப் பெற்று அறிக்கைப்படுத்துவார். | |
| | | | | 29. ஒட்டிகள், விளம்பரங்கள், துண்டுப்பிரசுரங்கள், அழைப்பிதழ்கள், சுவரொட்டிகள் போன்றவற்றை எழுதி வாசிப்பார். | |
| | | | | 30. ஒன்றின் சுயசரிதையைச் சரியாகக் கூறுவார். / எழுதுவார். | அடிப்படை மொழித்திறன்கள் |
| | | | | 31. விதந்துரைக்கப்பட்ட மூதுரைப் பாடல்களை மனனஞ் செய்வதோடு அவற்றின் கருத்துக்களையும் கூறுவார். | |
| | | | | 32. கிராமிய விளையாட்டுக்களை விளையாடுவதன் மூலம் சொற்களஞ்சியத் தையும் உடலாரோக்கியத்தையும் விருத்தி செய்து கொள்வார். | |
| | | | | 33. பல்வேறு சமூகத்தினரின் பாரம்பரியப் பண்டிகைகளுடன் தொடர்புடைய இசைக்கருவிகளை அறிந்து கூறுவார். / எழுதுவார். | |
| | | | | 34. காட்சிப்படங்கள் / ஒளிப்படங்களைப் பார்த்து அப்படங்கள் தொடர்பாக ஆக்கபூர்வமாக வாக்கியங்ளை எழுதுவார். | |
| | | | | 35. வகுப்பில் கற்கும் விடயங்கள் தொடர்பான நாட்குறிப்பினை தினமும் எழுதுவார். | |
| | | | | 36. சுற்றுலா மூலம் பெற்ற அனுபவங்களை சித்திரமாக வரைவார். | |
| | | | | 37. பசுமை உலகின் முக்கியத்துவத்தை உணர்ந்து, மரங்களை வளர்த்து சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க முன்வருவார். | |
| | | | | 38. தெரிவு செய்யப்பட்ட பகுதிகளை ஒலி - ஒளி இறுவட்டுகளின் துணையுடன் வாசிப்பார். / பேசுவார். / எழுதுவார். | |
| | | | | 39. சிறுவர் சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையத்தளங்கள் ஆகியவற்றைப் பார்வையிட்டு, தகவல்களைக் குறித்துக் கொள்வார். | |
| | | | | 40 . கதைப் பாடல்கள், படிப்பினை தரும் கதைகள் போன்றவற்றைக் கருத்தூன்றி வாசித்து, கருத்துக்களைத் தமது மொழிநடையில் எழுதுவார் | |
| | | | | 41.. மொழிப் பயிற்சிகளுக்கான அறிவுறுத்தல்களை வாசித்துக் கிரகித்து வினாக்களுக்கு விடையளிப்பார். | |
| | | | | 42. வாக்கியங்களைப் பிழையின்றி உறுப்பமைய எழுதுவார். | |

# மாதிரிப் பாடக்குறிப்பு

## தாய்மொழி - தமிழ்

திகதி : .................... முதல் .................. வரை

வகுப்பு: தரம் 4

| தேர்ச்சிகள் | உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | வளங்கள் | உத்தேச நேரம் | கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் (செயற்பாடுகள்) | கணிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| $L_7$ $S_7$ $R_7$ $W_7$ | • காட்சிப் படங்கள் | • காட்சிப் படங்களைப் பார்த்து தமது மொழிநடையில் விபரிப்பார், எழுதுவார். | • காட்சிப் படங்கள், பட அட்டைகள் | 120 நிமிடங்கள் | **செயற்பாடு I**<br>• காட்சிப் படங்களைப் பார்த்து நிகழ்காலத்தில் வாக்கியங்களை கூறுதல், எழுதுதல், குழுக்களிடையே வாசித்தல் (பக்கம் 110) | • காட்சிப் படங்களைப் பார்த்து நிகழ்காலத்தில் எழுதுவதையும் கூறுவதையும் கணிப்பீட செய்தல் |
| | • சுய சரிதை | • சுயசரிதைகளை மொழியாட்சித் திறனை விருத்தி செய்வதற்காக முன்வைப்பார். | • சுயசரிதை அட்டைகள் | 60 நிமிடங்கள் | **செயற்பாடு 4**<br>• சுயசரிதைகளை தமது மொழி நடையில் கூறுதல் (பக்கம் 110) | • மாணவர்கள் சுயமாக சுயசரிதை கூறுவதைக் கணிப்பீடு செய்தல் |
| | • மூதுரை (5 பாடல்கள்) . | • விதந்துரைக்கப்பட்ட மூதுரைப் பாடல் அடிகளை (5 பாடல்கள்) மனனம் செய்து தெளிவாக முன்வைப்பார், அவற்றின் கருத்தினை அறிந்து கொள்வார். | • மூதுரைப் பாடலடிகள் எழுதப்பட்ட அட்டைக் கீலங்கள் | 60 நிமிடங்கள் | **செயற்பாடு 5**<br>• மூதுரைப் பாடல் அடிகளை மனனம் செய்து கூறுதல், எழுதுதல் (பக்கம் 112) | • மூதுரைப் பாடலடிகளைச் சரியாக உச்சரித்துக் கூறுவதனைக் கணிப்பீடு செய்தல் |
| | • கிராமிய விளையாட்டுக்கள் (சிறிய) | • கிராமிய விளையாட்டுக்களின் விதிமுறைகளை அறிந்து மற்றவர்களுடன் இணைந்து விளையாடுவார், விளையாட்டு விதிகளை எழுதுவார். | • கிராமிய விளையாட்டுக்களின் படங்கள், சொல் அட்டைகள் | 120 நிமிடங்கள் | **செயற்பாடு 6**<br>• கிராமிய விளையாட்டுக்களையும் விதிகளையும் அறிமுகம் செய்தல், விளையாடுதல் (பக்கம் 114) | • ஒற்றுமையாகச் சிறந்த தொடர்பாடலுடன் விளையாட்டுக்களில் ஈடுபடு வதனைக் கணிப்பீடு செய்தல் |
| | • பண்டிகைகள் (இசைக்கருவிகள்) | • பாரம்பரிய பண்டிகைகளில் பயன்படுத்தப்படும் இசைக் கருவிகளைப் பற்றித் தெரிந்து கொள்ள முன்வருவார், அவற்றின் பெயர்களை அறிந்து எழுதுவார். | • பண்டிகைகளின் போது இசைக்கப்படும் இசைக்கருவிகள் | 60 நிமிடங்கள் | **செயற்பாடு 8**<br>• பாரம்பரிய பண்டிகைகளில் பயன்படுத்தப்படும் இசைக் கருவிகளைப் பற்றித் தெரிந்து கொள்ள முன்வருவார், அவற்றின் பெயர்களை அறிந்து எழுதுவார். (பக்கம் 116) | • பண்டிகைகளில் பயன்படுத்தப்படும் இசைக் கருவிகளைப் பற்றிய அனுபவத்தினைப் பகிர்ந்து கொள்வதைக் கணிப்பீடு செய்தல் |

# 2.0 சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

## 01. அறிமுகம்

''சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்' எனும் இக்கற்றல் புலம், மனிதன் மீதும் மனித சமுதாயத்தின் மீதும் பல்வேறு விதங்களில் செல்வாக்குச் செலுத்திய அல்லது செலுத்துகின்ற பௌதிக, சமூக, உயிரியல் தொகுதிகள் தொடர்பாகவும் அவற்றை அடிப்படையாகக் கொண்டு நிகழ வேண்டிய கற்றல் செயலொழுங்கு தொடர்பாகவும் வழிப்படுத்துகின்றது.''

குழந்தைப் பருவம் தொட்டு இயல்பாகவே மனிதன், தனது சுற்றுப்புறத்தின்மீது ஆர்வங்கொண்டு, கிரமமாக அச்சுற்றாடலுடன் வெற்றிகரமாக இடைத்தாக்கம் புரிவதற்கு அவசியமான தேர்ச்சிகளை அடைய முயற்சிக்கின்றான். இச்செயன்முறையின் போது தனது புலனுறுப்புக்களைப் பயன்படுத்துவதோடு அவற்றின் உணர்திறன்களை வகைப்படுத்தல், தர்க்கித்தல் போன்ற அறிவுசார் திறன்களையும் விருத்தி செய்து கொள்கிறான். அவ்வாறே அவற்றின் ஊடாகத் தனது சொற்களஞ்சியத்தையும் தொடர்பாடல் திறனையும் விருத்தி செய்து கொள்கிறான். தான் வாழும் சுற்றாடல் தொடர்பான தகவல்களைக் கண்டறிதல், சேகரித்தல், மீள வெளிப்படுத்துதல் என்பன பிள்ளைகளின் வாழ்க்கைச் செயன்முறையின் ஓர் அங்கமாகும். இது இயல்பாக எந்தவோர் உயிரியிலும் நிகழ்வதொன்றாகும். பிள்ளைகளின் அப்போக்கை விருத்தி செய்வதே ''சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்'' கட்டியெழுப்பும் அடிப்படையாகும்.

அன்றாட வாழ்கையில் சந்திக்கும் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளக்கூடிய, நாட்டின் அபிவிருத்திச் செயன்முறையில் பங்களிக்கக்கூடிய, சமநிலையான ஆளுமையுடைய ஒருவரிடத்தே பல்வேறு தேர்ச்சிகள் விருத்தியடைதல் அவசியமாகும். சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் இங்கு பெரிதும் பங்களிப்புச் செய்கின்றன. கடந்த காலங்களில் அமுலாக்கப்பட்ட ஆரம்பக்கல்விக் கலைத்திட்டங்களில் அழகியற்கல்வி, ஆக்கத் தொழிற்பாடுகள், உடற்கல்வி, ஆரம்ப விஞ்ஞானம் போன்ற பாடங்கள் பங்களிப்புச் செய்தன. புதிய கலைத்திட்டத்தில் ''சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்'' எனும் விரிவான பாடத்தின் கீழ் பல்வேறு புலங்களுக்குரிய தேர்ச்சிகளைச் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு வெளிக்கொணர இடமளிக்கப்பட்டுள்ளது. அதாவது இது ஓர் ஒன்றிணைந்த பாடமாகும்.

மூன்றாம், நான்காம் தரங்களில் (ஆரம்பக் கல்வியின் முதன்மை நிலை இரண்டில்) 16 கருப்பொருள்களில் பாடத்திட்டம் விருத்தி செய்யப்பட்டுள்ளது. ஆக்கம், அழகியல், உடற்கல்வி, சுற்றாடல் ஆகிய பாடப்பரப்புகளுக்குப் பொருத்தமான தேர்ச்சிகளை வெளிக்கொணர்வதற்கும் சமயம், தாய்மொழி, கணிதம் ஆகிய பிரதான பாடங்களைச் செழுமைப்படுத்துவதற்கும் "சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகளைப்" பயன்படுத்தலாம். மாணவரின் உரையாடலுக்குப் பொருத்தமான எளிமையான ஆங்கிலச் சொற்களையும் இச்செயற்பாடுகளின் ஊடாக வெளிக்கொணரலாம்.

பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட சகல பகுதிகளும் அதிலுள்ளவாறே இலங்கையின் எல்லாப் பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டுமெனக் கருதப்படவில்லை. இப்பருவப் மாணவரின் சுற்றாடல் வரையறுக்கப்பட்டதாகும். அவ்வரையறையினுள் காணப்படுபவை, நிகழுபவை யாவும் எல்லாப் பாடசாலைகளுக்கும் பொதுவானவை அல்ல. எனவே மாணவர்களுக்காகச் செயற்பாடுகளைத் தெரிவு செய்யும் போது தனது சூழல் வளங்களுக்குப் பொருத்தமானவாறு அவற்றைத் தெரிவு செய்யும் சுதந்திரமும் பொறுப்பும் ஆசிரியருக்கு உண்டு.

## 02. ஆரம்பக் கல்விப் பருவத்திற்குரிய தேர்ச்சிகள்

தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரையில் இக்கற்றல் செயற்பாடுகளை வெற்றிகரமாக நிறைவு செய்வதன் ஊடாக மாணவரிடத்தே பின்வரும் அறிவு, திறன்கள், மனப்பாங்குகளை விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

- ✓ தனது சுற்றுப்புறத்தின் அழகினை இனங்கண்டு அதனூடாக இரசனை பெறுவார்.
- ✓ விளையாட்டு, ஓய்வு, களிப்பு என்பன வாழ்க்கைக்கு அவசியமான அம்சங்களெனக் கருதி அவற்றை நாளாந்த வாழ்வில் பொருத்தமாகச் சேர்த்துச் செயற்படுவார்.

- ✓ அழகியல் தொடர்பானவற்றை மதித்து அவற்றைத் தனது வெளிப்பாட்டு நடவடிக்கைகளின் போது பயன்படுத்துவார்.
- ✓ ஆரோக்கிய வாழ்விற்குத் தேவையான அடிப்படைப் பழக்கங்களை வெளிக்காட்டுவார். மனிதனின் ஆக்கங்களை மதிப்பார்.
- ✓ தனது சுற்றாடலில் வசிக்கும் உயிரினங்கள், அவற்றின் சில இடைத்தாக்கங்கள் என்பன தொடர்பான விளக்கத்தைப் பெற்றுச் செயற்படுவார்.
- ✓ மனித சமூகம், மனித நடத்தைகள், மனிதர் மீது அவற்றின் ஆதிக்கம் தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார்.
- ✓ புவி அதன் வளங்கள், வெளி என்பன மனிதன் மீது செலுத்தும் செல்வாக்கை ஆராய்வார்.
- ✓ சூழல் பாதுகாப்புச் செயன்முறையில் தனது பொறுப்பை விளங்கி அதற்கேற்பச் செயற்படுவார்.
- ✓ தனது சுற்றாடலில் சக்திப் பயன்பாடு, விசைப் பிரயோகம் என்பன சமூகத்தின் முன்னேற்றத்தில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தினைக் கூர்ந்து நோக்கி மதிப்பார்.
- ✓ எதிர்கால வேலையுலகிற்குத் தேவையான அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்காகத் தமது சூழலிலுள்ள பொருட்களையும் உபகரணங்களையும் தேவைக்கேற்பப் பயன்படுத்துவார்.

## 03. இரண்டாம் முதன்மை நிலைக்குரிய தேர்ச்சிகள்

- ✓ நல்ல ஒழுங்கமைப்புடன் செயலாற்றுவதால் தனது கருமங்களை வெற்றிகரமாகச் செய்வார்.
- ✓ நற்பண்புகளை மதிப்பதன் மூலம் அவற்றைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுப்பார்.
- ✓ சட்டதிட்டங்களை மதித்து சட்டத்தை மதிப்பவராக நடந்துகொள்வார்.
- ✓ உடல்சார், உளம்சார் நிலைத்திருத்தல் ஆகியவற்றுக்குப் பொருத்தமான செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- ✓ இலங்கை கலாசார, தேசிய மரபுரிமைகளின் பண்புகளை மதித்து அவற்றைப் பாதுகாப்ப தற்குப் பங்களிப்புச் செய்வார்.
- ✓ பல்வேறு மக்கள் இனங்கள் அவர்களது கலாசாரப் பண்புகளையும் ஆளடையாளத்தையும் மதித்து அவற்றைக் காப்பதற்குப் பங்களிப்புச் செய்வார்.
- ✓ தேசாபிமானம் மேலெழுமாறு அழகியல்சார் ரீதியாக முன்வைப்புகளைச் செய்வார்.
- ✓ தாவரங்களிடையே நிலவும் விசேடமான வேறுபாடுகளை அவதானித்து அறிக்கைப்படுத்துவார்.
- ✓ மரஞ்செடிகொடிகளினதும் தாவரங்களினதும் பெறுமதியை மதித்து அவற்றைக் காப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்.
- ✓ பிராணிகள் பற்றிய அடிப்படைத் தகவல்கள், விசேட திறன்கள், நடத்தைக் கோலங்கள் ஆகியவற்றைத் தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்.
- ✓ பிராணிகள், தாவரங்களுடனும் மனிதர்களுடனும் கொண்டுள்ள இடைத்தொடர்புகளை இனங்காண்பார்.
- ✓ சுற்றாடலின் நிலைத்திருத்தலுக்கு, பிராணிகளின் முக்கியத்துவத்தை மதித்து அப்பிராணிகளைப் பாதுகாப்பதற்குப் பங்களிப்புச் செய்வார்.
- ✓ குறித்த காரியம் ஒன்றுக்காக விசேட பண்டங்களையும் கருவிகளையும் இனங்கண்டு, அவற்றைச் சரியாகவும் கிரமமாகவும் பாதுகாப்பாகவும் கையாள்வார்.
- ✓ வளங்களிலிருந்து உச்சப் பயனைப் பெறும் வகையில் சிக்கனத்துடன் பயன்படுத்துவார்.
- ✓ நாம் பயன்படுத்தும் பண்டமொன்றை அல்லது சேவையொன்றைப் பெற்றுக்கொள்ளும்போதும் வழங்கும்போதும் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் பற்றி அவதானத்துடன் காரியமாற்றுவார்.
- ✓ சுகாதாரமான வாழ்க்கையை நடத்துவதற்கு வேளை உணவுகளை உரிய நேரத்தில் உட்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவம் பற்றி விளக்கத்துடன் காரியமாற்றுவார்.
- ✓ பண்பு சார்ந்ததும் மருத்துவப் பண்புள்ளதுமான உணவை நுகர்வதற்கு முற்படுத்துவார்.
- ✓ உணவு விரயமாகும் விதத்தையும் அவற்றை நற்காப்புச் செய்து வைப்பதையும் பற்றிய அறிவூட்டத்துடன் செயலாற்றுவார்.
- ✓ உணவு உண்பதற்கான பழக்கவழக்கங்களையும் நற்பழக்கங்களையும் கடைப்பிடிப்பார்.
- ✓ பல்வேறு பண்டங்களையும் உபகரணங்களையும் போன்றே தொழினுட்பக் கருவிகளையும் பல்வேறு சக்திகளையும் பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய தீங்குகள் பற்றிக் கவனத்துடன் செயலாற்றுவார்.

- ✓ பாதுகாப்பற்ற சந்தர்ப்பங்களிலும் சமூக விரோதச் செயல்களிலும் இருந்து தம்மைப் போன்றே மற்றவர்களையும் பாதுகாப்பதைப் பற்றி கவனத்துடன் செயலாற்றுவார்.
- ✓ தொற்றும், தொற்றா நோய்கள் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்வதற்குச் செய்யக்கூடிய தேகாரோக்கிய முறைகள் பற்றிய அறிவுடன் செயலாற்றுவார்.
- ✓ பாதுகாப்புடனும் எச்சரிக்கையுடனும் வேலை செய்ய வேண்டிய விதத்தை, ஊமம், வெளிப்பாடுசார் அசைவுகள், கவிதைகள், பாடல்கள் மூலம் முன்வைப்பார்.
- ✓ நீருடன் பல்வேறுபட்டவை செயற்படும் விதத்தைத் துருவியாய்ந்து அறிக்கைப்படுத்துவார்.
- ✓ நீரினால் ஏற்படக்கூடிய தீங்குகளையும் ஆபத்துகளையும் பற்றிக் கவனம் செலுத்தி, அவற்றைக் குறைப்பதற்குப் பங்களிப்புச் செய்வார்.
- ✓ பாதையில் பயணம் செய்வோரினால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய சட்டதிட்டங்களையும் ஒழுக்கத்தையும் பற்றிய விளக்கத்துடன் பலனளிக்குமாறும் பாதுகாப்பாகவும் பாதையைப் பயன்படுத்துவார்.
- ✓ பொது வாகனங்களால் நிறைவேற்றப்படும் சேவைகளை மதித்து அவற்றைக் காப்பதற்குப் பங்களிப்புச் செய்வார்.
- ✓ திட்டமிடப்பட்ட வீட்டுத்தோட்டம் ஒன்றிலிருந்து அன்றாடம் தனது வீட்டிற்குத் தேவையான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதற்குப் பங்களிப்புச் செய்வார்.
- ✓ வீட்டுத்தோட்டத்திற்கு ஆய்வுசார் ரீதியாக பங்களிப்பதன் மூலம் மகிழ்ச்சியடைவார்.
- ✓ வேலையை இலகுபடுத்திக் கொள்வதற்குத் தற்காலத்தில் போன்றே முற்காலத்திலும் பயன்படுத்தப்பட்ட முறைகளைக் கற்று அறிக்கைப்படுத்துவார்.
- ✓ வேலையை இலகுபடுத்திக் கொள்வதற்கு பண்புசார் ரீதியான நிறைவொன்றிற்காகத் திட்டமிட்டு ஒழுங்காகவும் முறைப்படியும் வேலை செய்வதற்குப் பழகிக்கொள்வார்.
- ✓ சேவை வழங்கும்போதும் பெறும்போதும் பண்புடனும் சட்டத்தை மதித்தும் காரியமாற்றுவார்.
- ✓ தனதைப் போன்றே சமூகத்தினதும் நல்வாழ்க்கைக்குப் பயன்படும் பண்புகளைப் பேணுவார்.
- ✓ மனிதர்களின் பல்வேறு நடத்தைகளை பல்வேறு வெளியீட்டு ஊடகங்கள் மூலம் ஆக்கபூர்வமாக முன்வைப்பார்.
- ✓ மழையிலிருந்தும் காற்றிலிருந்தும் பெறக்கூடிய பயன்களை அறிக்கைப்படுத்துவார்.
- ✓ காற்றின் செயற்படு தன்மையைக் கற்பதன் மூலம் காற்றின் வலுவைப் பெறக்கூடிய பல்வேறு முறைகளை எடுத்துரைப்பார்.
- ✓ சுற்றாடல் மாசடையும் விதம் பற்றி விசாரித்தறிந்து சுற்றாடலுக்கு ஏற்படும் தீங்குகளைத் தவிர்ப்பதற்குச் செயற்படுவார்.
- ✓ தனது நடத்தையின் மனதிற்குகந்த மாற்றத்திற்கு கவனத்துடன் செயற்படுவார்.
- ✓ தமது அண்மைச் சுற்றாடலின் பண்புசார் மாற்றத்திற்கு நிலவும் பிரச்சினைகளைக் கண்டறிந்து அதற்கான திட்டமொன்றைத் தயாரிப்பதற்குச் செயலாற்றுவார்.
- ✓ தொடர்பாடல் நடவடிக்கைகளின்போது பண்புடன் செயற்படுவார்.
- ✓ பெறப்படும் தகவல்களிடையே பொருத்தமான தகவல்களைப் பகுப்பாய்ந்து தெரிவுசெய்வார்.
- ✓ தொடர்பாடல் ஊடகங்களுடன் தொடர்புடைய பாதகமான நிலைமைகள் குறித்த விளக்கத் துடன் செயற்படுவார்.
- ✓ வரலாற்றுப் பெறுமதிமிக்க இடங்களை மதித்து அவற்றைப் பாதுகாப்பதற்குக் காரியமாற்று வார்.
- ✓ வரலாறுசார், கலாசாரஞ்சார் பெறுமதியுடைய மரங்கள், இடங்கள், வேறு பொருள்கள் ஆகியவற்றை இனங்கண்டு அறிக்கைப்படுத்துவார்.
- ✓ பண்டையகாலக் கலை ஆக்கங்களின் விசேடத்துவத்தைத் துருவியாய்வார்.
- ✓ தமது பிரதேசத்தில், நாட்டில் தனித்துத் தெரியும் சேவையொன்றை ஆற்றிய ஆட்களை மதித்து அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு செயற்பட முன்வருவார்.

## 04. பாடசாலைக்கொள்கையும் வேலைத்திட்டமும்

- ''சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்'' எனும் பாடம், கற்பித்தலை விட கற்றலுக்கே முதலிடம் வழங்குகின்ற ஒரு கற்றல் - கற்பித்தற் செயன்முறையாகும். மாணவர்களைக் குழுக்களாகவோ தனித்தனியாகவோ செயற்பாடுகளில் ஈடுபடுத்தலாம். தேவைப்படுமிடத்து முழு வகுப்பையுமே அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுத்தலாம்.
- ஆசிரியர் முன்கூட்டியே இதற்கான திட்டத்தைத் தயாரித்துக் கொள்ள வேண்டும். ஒரு குறித்த சந்தர்ப்பத்தில் வெவ்வேறு குழுக்களை வெவ்வேறுபட்ட வேலைகளில் ஈடுபடுத்தலாம். பரந்த பாடப்பரப்பை உள்ளடக்குவதற்கு இது வழிகோலும்.

- மாணவர்களுக்காகத் திட்டமிடும் வேலைகளில், அவதானிப்புகள், களப் பிரயாணங்கள், கையாண்டு பார்த்தல், குறுங்காலச் செயற்றிட்டம், சேகரித்தல், வகிபாகமேற்றல் போன்ற பல்வேறு கற்றல் அணுகுமுறைகளினூடாகவும், மனிதர்கள், நூல்கள், அச்சு ஊடகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள் போன்றவற்றினூடாகவும் தகவல் சேகரிப்பதற்குரிய நடவடிக்கைகள் அடங்கியிருத்தல் வேண்டும்.

- அழகியல் சார்ந்த, ஆக்கம் சார்ந்த, உடல் சார்ந்த தேர்ச்சிகளை அடைவதற்காகப் பரந்த வீச்சில் கற்றல் - கற்பித்தல் அனுபவங்களை வழங்க முயற்சி மேற்கொள்ளப்பட்டிருத்தல் புதிய கலைத்திட்டத்தில் காணப்படும் தெளிவான ஒரு மாற்றமாகும். அம்மாற்றத்திற்கு ஈடுகொடுப்பதற்காக வகுப்பறையும், ஒட்டுமொத்தப் பாடசாலைச் சூழலும் மாணவரை நோக்கும் கண்ணோட்டமும் மாற்றமடைதல் வேண்டும். பாடசாலைக் கொள்கை வேலைத்திட்டங்களின் கீழ் தகவல்களைச் சேகரித்தல், அவற்றை அறிக்கைப்படுத்தும்போது வெவ்வேறு முறைகளுக்கு அமைய அறிக்கைப்படுத்த வாய்ப்பு வழங்கப்படுவது முக்கியமானதாகும்.

- எனவே நாள் முழுவதும் மேசையருகே கதிரையில் அமர்ந்திருப்பதற்குப் பதிலாக வெவ்வேறு மெய்ந்நிலைகளில் மகிழ்ச்சியாகப் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவரைக் காணத்தக்க வகையிலேயே **"பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்"** ஒழுங்கு செய்யப்படுதல் வேண்டும்.

- இதற்காகத் திட்டமிடும் வகுப்பில் காணப்படத்தக்க பண்புகள் வருமாறு:
  - ✓ இம்மாணவருக்குப் பிரதானமாகப் பாடசாலை நேரத்துள் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கேற்ற சூழலைத் தயார்ப்படுத்தல்.
  - ✓ பாடசாலை நேரத்தில் இம்மாணவர்க்குச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குத் தேவையான சூழலை உருவாக்குதல்.
  - ✓ வகுப்புக்கு வெளியே திறந்தவெளியில் கற்பதற்கான வசதிகளை வழங்குதல்.
  - ✓ பாடசாலையில் விளையாட்டு, அழகியல் வேலைகள், ஆக்க வேலைகள், ஏனைய பாட இணைச் செயற்பாடுகளில் கவனம் செலுத்துதல்.

## 05. மாணவர் முன்னேற்றத்தைக் கணிப்பிடல்

- "சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்" பாடக் கணிப்பீட்டின்போது அக்கற்றல் செயன்முறையின் ஊடாக மாணவர்களுக்கு வழங்க எதிர்பார்க்கும் அறிவு, திறன்கள், மனப்பாங்குகள், ஒப்படைகள் ஆகியன குறித்துக் கவனம் செலுத்துதல் வேண்டும். அத்தோடு சமூகத் திறன்கள் குறித்தும் விசேட கவனம் செலுத்துதல் வேண்டும்.

- மாணவர் குழுக்களிடத்திலோ தனித்தனி மாணவரிடத்திலோ காணப்படும் குறைபாடுகளை அடுத்துவரும் கற்றல் பணிகளின்போது நிவர்த்தி செய்வதையும் துரிதமாகக் கற்கும் ஆற்றலைக் காட்டும் மாணவர்களுக்கு மேலும் ஊக்கமளிப்பதையும் நோக்காகக் கொண்டே கணிப்பீடு நடத்தப்படல் வேண்டும்.

- இதற்காகப் பெரும்பாலும் முறைசார்ந்த மதிப்பீட்டு முறைகளுக்கு அப்பாற்பட்ட முறைகளைப் பின்பற்ற நேரிடும். மாணவர்கள் வேலைகளில் ஈடுபட்டிருக்கும்போது அவர்களை அவதானித்தும் அவர்கள் கூறுபவற்றைச் செவிமடுத்தும் அவர்களோடு கலந்துரையாடியும் இதற்கான வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ளலாம். அவற்றை முறைமையாக அறிக்கைப்படுத்துவதற் காக ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ள கணிப்பீட்டு அறிக்கைப் படிவத்தினைப் பயன்படுத்தலாம்.

## 06. வீட்டு வேலை கொடுத்தல்

- வகுப்பறையில் கற்கும் பாட விடயங்களை மேலும் விருத்தி செய்துகொள்வதற்கு மாணவர்களால் செய்யக்கூடிய அளவிற்கு மாத்திரம் வீட்டு வேலைகளை வழங்குங்கள்.

- வீட்டு வேலைகளின்போது செய்ய வேண்டியவற்றையும் செய்ய வேண்டிய முறையினையும் மாணவர்களுக்கு விளங்கக்கூடிய விதத்தில் தெளிவுபடுத்துங்கள்.

- வகுப்பறைச் செயற்பாடுகளுக்காக வீட்டிலிருந்து கொண்டுவர வேண்டிய பொருள்கள் தொடர்பாக முன்கூட்டியே மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் அறிவூட்டுங்கள்.

- பெற்றோருக்கு அறிவூட்டும்போது பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
  - வரையறுத்து வழங்கும் வீட்டு வேலைகளை மாணவர்களே செய்தல் வேண்டும்.
  - வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தெரிவு செய்வதற்கு உதவிசெய்தல் வேண்டும்.
  - வீட்டில் செய்ய வேண்டியவை தொடர்பாக உதவி புரிதல் வேண்டும் என்பன பற்றி நினைவூட்டுங்கள்.

    ***உதாரணம்:***

    இரவு வானத்தை அவதானித்தல், பாடல்களையும் கதைகளையும் கேட்டறிதல், வீட்டுத் தோட்டத் தகவல்களைச் சேகரித்தல்

## பாடத்திட்டம்

| கருப்பொருள் | தேர்ச்சி | உள்ளடக்கம் |
|---|---|---|
| 1. எமது நல்வாழ்வு | • நன்கு ஒழுங்கமைத்துச் செயற்படுவதன் மூலம் தமது வேலைகளை வெற்றிகரமாகச் செய்து கொள்வார்.<br>• நற்குணங்களை மதித்து, அவற்றைப் பேணிவர ஆவன செய்வார்.<br>• கடமைகளை நிறைவேற்றி, பொது வேலைகளில் பங்களிப்புச் செய்வார்.<br>• சட்டங்களை மதித்து அச்சட்டங்களைப் பேணி நடப்பார்.<br>• எமது நல்வாழ்வைப் பேணி வருவதற்குத் துணையாகுபவையான ஆக்கங்கள் செய்வார்.<br>• உடல், உள நல்வாழ்க்கைக்காகப் பொருத்தமான செயற்பாடுகளில் ஈடுபடுவார்.<br>• நல்ல நடத்தைகளை எடுத்துக் காட்டும் வகையிலான ஆக்கங்கள் செய்வதில் களிப்புடன் ஈடுபடுவார். | • தமது அன்றாட வேலைகளை வெற்றிகரமாகச் செய்வதற்காக நேரத்தை உரியவாறு பயன்படுத்துதல்<br>• ஏனையோரின் திறன்களைப் பாராட்டுதலும் தேவையான உதவிகளைச் செய்தலும்<br>• ஒவ்வொருவரதும் திறமைகளுக்குச் சந்தர்ப்பமளிப்பதற்காகத் தியாகங்கள் செய்தல்<br>• சமூகத்தின் பொதுக் கருமங்களில் பொறுப்புகளை ஏற்றுச் செயற்படல்<br>• அன்றாட வேலைகளில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டதிட்டங்களை மதித்துக் கடைப்பிடித்தல்<br>• நல்வாழ்க்கையின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் வகையில் வகுப்பில் காட்சிப்படுத்தக்கூடியவற்றை ஆக்குதல்<br>• உடல், உள நல்வாழ்வுக்குத் துணையாகும் செயற்பாடுகள்<br>• எமது நல்வாழ்வு பற்றிக் கூறும் முன்மாதிரியான முன்வைப்புகள் |
| 2. நாம் இலங்கையர் | • இலங்கையின் பண்பாடு மற்றும் தேசிய மரபுரிமைகளின் இயல்புகளைத் துருவியாய்ந்து அவற்றைப் பாதுகாப்பதில் பங்களிப்புச் செய்வார்.<br>• வழக்கங்கள் தொடர்பான விளக்கத்துடன் அவற்றைப் பேணி வருவதில் பங்களிப்புச் செய்வார்.<br>• வெவ்வேறு மக்கட் பிரிவினரையும் அவர்களது பண்பாட்டு இயல்புகளையும் தனித்துவத்தையும் மதித்து அவற்றைப் பாதுகாப்பதில் பங்களிப்புச் செய்வார்.<br>• நாட்டின் சுதந்திரம் தொடர்பாக அர்ப்பணிப்புடன் தியாகங்களைச் செய்தோரை மதித்து நாட்டுப்பற்றுடன் செயற்படுவார். | • தேசியக் கொடி தொடர்பான அடிப்படையான தகவல்கள்<br>• பண்பாட்டு அம்சங்கள் சிலவற்றில் காணப்படும் இயல்புகளைத் துருவி நோக்குதல்<br>• இலங்கை மக்களின் தனித்துவத்தைப் பிரதிபலிக்கும் இயல்புகள்<br>• தமது சமய உற்சவங்களை மட்டுமன்றி ஏனைய சமயங்களின் உற்சவங்களையும் மதித்தல்<br>• இலங்கையில் வாழும் வெவ்வேறு மக்கட் பிரிவினரின் பண்பாட்டு அம்சங்களை மதித்தல்<br>• இலங்கையில் வாழும் வெவ்வேறு மக்கட் பிரிவினருக்கிடையே நட்புரீதியான மனப்பாங்குகள் கட்டியெழுப்பப்படும் வகையில் செயற்படத்தக்க வழிகள் |

| கருப்பொருள் | தேர்ச்சி | உள்ளடக்கம் |
|---|---|---|
| | • தாம் வாழும் பிரதேசத்தில் வெவ்வேறு கருமங்களுக்காகத் துணைபுரியும் நிறுவனங்கள் பற்றிய விளக்கத்தைப் பெறுவார்.<br>• இலங்கையர்களின் பல்வேறு பண்பாடுகள் தொடர்பான விளக்கத்துடன் சுதேசத்துவத்திற்கு முதன்மையளித்து, வெவ்வேறு ஆக்கங்கள் செய்வார்.<br>• இலங்கை மக்களிடையே புழக்கத்திலுள்ள விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.<br>• தேசியப் பெருமையை வெளிக்காட்டப்படும் வகையிலான அழகியல் படைப்பாக்கங்களை முன்வைப்பார். | • தாம் பிறந்த நாட்டிற்காகத் தம்மால் செய்யக்கூடியவை<br>• தாம் வாழும் பிரதேசத்தில் வெவ்வேறு நிறுவனங்களால் ஆற்றப்படும் சேவைகள்<br>• சமய உற்சவங்களின்போது பயன்படுத்தக்கூடிய அலங்கரிப்புக்கள்<br>• பிரதேச ரீதியில் பிரபல்யமான சிறு விளையாட்டுக்கள்<br>• தேசப்பற்றை உணர்த்தும் கவிதைகள், பாடல்களை கருத்து வெளிப்பாட்டு அசைவுகளுடன் முன்வைத்தல் |
| 3. மரஞ்செடி கொடிகள் | • அண்மைச் சூழலில் மரஞ்செடி கொடிகளினது இயல்புகளையும் அவை வளரும் விதத்தையும் இனங்கண்டு அறிக்கைப் படுத்துவார்.<br>• தாவரங்களுக்கிடையே காணப்படும் குறிப்பான வேறுபாடுகளைத் தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்.<br>• தாவரங்களுடன் மனிதனும் பிராணிகளும் காட்டும் இடைத் தொடர்புகளைக் கற்றாய்ந்து அறிக்கைப்படுத்துவார்.<br>• மரஞ்செடிகொடிகளின் பெறுமானத்தை மதித்து அவற்றைப் பாதுகாப்பதற்காகச் செயற்படுவார்.<br>• சூழலிலிருந்து பெறக்கூடியவற்றைப் பயன்படுத்தி வெவ்வேறு ஆக்கங்கள் செய்வார்.<br>• மரஞ்செடிகொடிகள் சார்ந்து நெகிழ்தன்மை வளர்ச்சிக்குத் துணையாகும் உடலியக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.<br>• மரஞ்செடிகொடிகளுக்கு இடையிலான இடைத்தொடர்புகளைக் காட்டும் ஆடல்-பாடல்கள், நாடகங்களை முன்வைப்பார். | • தாவரப் பூக்களின் இயல்புகளைக் குறிப்பாக அவதானித்தல்<br>• பூக்களின் பல்வகைமையின்படி தாவரங்களை வகைப்படுத்தல்<br>• தாவரங்களுக்கும் பிராணிகளுக்கும் இடையிலான தொடர்புகள்<br>• தாவரப் பகுதிகள் மூலம் எமக்கும் தாவரங்களுக்கும் கிடைக்கும் பயன்கள்<br>• தாவரப் பகுதிகளாலான ஆக்கங்கள்<br>• தாவரங்கள் சார்ந்ததாக உருவாக்கிய விளையாட்டுக்கள்<br>• மரஞ்செடிகொடிகள் பற்றிக் கூறும் பாடல்கள், கவிதைகளை முன்வைத்தல் |

| கருப்பொருள் | தேர்ச்சி | உள்ளடக்கம் |
|---|---|---|
| 4. எம்மைச் சூழவுள்ள பிராணிகள் | • பிராணிகள் தொடர்பான அடிப் படைத் தகவல்கள், பிராணி களின் விசேட திறன்கள் மற்றும் பிராணிகளின் நடத்தை களைத் தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்.<br>• பிராணிகள், தாவரங்களு டனும் மனிதருடனும் கொண் டுள்ள இடைத் தொடர்புகளை இனங்காண்பார்.<br>• சூழலின் இருப்புக்காகப் பிராணி களின் முக்கியத்துவத்தை மதித்து, அப்பிராணிகளைப் பாதுகாக்கப் பங்களிப்புச் செய் வார்.<br>• பிராணிகள் காரணமாக ஏற் படும் தீங்குகள் மற்றும் விபத் துக்கள் தொடர்பாகக் கவனம் செலுத்திச் செயற்படுவார்.<br>• வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி, பிராணிகளின் உருவங்கள் செய்வார்.<br>• பிராணிகளின் நடத்தைகள் சார்ந்த அசைவு மற்றும் போலச்செய்தல் செயற்பாடு களில் ஈடுபடுவார்.<br>• பிராணிகளின் நடத்தைகள் மற்றும் பிராணிகளுக்கும் மனிதருக்கும் இடையிலான தொடர்புகளைக் காட்டும் அசைவுகளை முன்வைப்பார். | • வெவ்வேறு இயல்புகள் மற்றும் நடத்தைகளுக்கமைய அயற்சூழலில் உள்ள பிராணிகளை வகைப்படுத்தல்<br>• பிராணிகளது நடத்தையின் பல்வகை மையும் விசேட திறன்களும்<br>• பிராணிகளின் வாழ்க்கை வட்டங்கள்<br>• பிராணிகள் மூலம் மனிதன் பெறும் பயன்கள் தொடர்பான தகவல்கள்<br>• மனிதனதும் பிராணிகளினதும் வாழ்க்கையில் வாழும் உரிமையும் வாழ்க்கையின் பெறுமானமும்<br>• பிராணி வகைகளைப் பாதுகாப்பதற் காகச் செய்யத்தக்க பங்களிப்பு<br>• தமது இருப்பு மாத்திரமன்றி ஏனைய பிராணி வகைகளது இருப்பு தொடர் பாகவும் உணர்வு காட்டல்<br>• பிராணிகள் காரணமாக ஏற்படும் தீங்குகள் மற்றும் விபத்துக்கள் தொடர்பாக அறிவூட்டம் பெற்று அவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறல்<br>• வெவ்வேறு முறைகளைக் கையாண்டு பிராணி மாதிரியுருக்கள் ஆக்குதல்<br>• பிராணிகளின் நடத்தையைப் போலச் செய்து உருவாக்கிய விளையாட்டுக் கள்<br>• பிராணிகளின் நடத்தைகளை எடுத்துக் காட்டும் போலச்செய்து காட்டல்கள் |
| 5. நாம் பயன்படுத் துபவை | • குறிப்பிட்ட வேலைக்கான விசேடமான பொருள்கள், உபகரணங்களை இனங்கண்டு அவற்றைச் சரியாகவும் சீரான முறையிலும் பாதுகாப்பாகக் கையாள்வார்.<br>• உபகரணங்களின் செயற்பாடு தொடர்பான விளக்கத்துடன் பயன்தருதன்மை கொண்ட தாகப் பயன்படுத்துவார். | • தமது கிட்டிய சூழலில் வெவ்வேறு தொழில்களில் ஈடுபட்டிருப்போர் பயன் படுத்தும் உபகரணங்கள் தொடர்பான தகவல்கள்<br>• அன்றாடம் பயன்படுத்தும் பொதுச் சொத்துக்கள், பண்டங்கள், உபகர ணங்களைச் சரியாகப் பயன்படுத்தலும் சரியாகப் பராமரித்தலும்<br>• வலுசக்தியைச் சிக்கனமாகப் பயன் படுத்துதல் |

| கருப்பொருள் | தேர்ச்சி | உள்ளடக்கம் |
|---|---|---|
| | • வளங்களிலிருந்து உச்ச பயனைப் பெறக்கூடிய வகையில் சிக்கனமாகப் பயன்படுத்துவார்.<br>• நாம் பயன்படுத்தும் பொருள்களை அல்லது சேவைகளைப் பெற்றுக்கொள்ளும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பான கரிசனையுடன் செயற்படுவார்.<br>• அன்றாடம் பயன்படுத்துபவற்றை மிகவும் கவர்ச்சிகரமாகத் தயார்செய்வதற்கெனப் பல்வேறு ஆக்கங்களை நிருமாணிப்பார்.<br>• பல்வேறு உபகரணங்களைப் பயன்படுத்தி வலு விருத்திக்கு உதவும் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.<br>• நாம் பயன்படுத்துபவற்றின் உதவியுடன் பல்வேறு கிராமிய நடனங்களில் ஈடுபடுவார். | • பண்டமொன்றை வாங்கும்போது தர நியமங்கள் குறித்துக் கவனஞ் செலுத்துதல்<br>• அன்றாடம் பயன்படுத்துபவற்றில் இடுவதற்குப் பொருத்தமான எளிய தையல் முறைகள்<br>• உபகரணங்கள் சார்ந்த எறிதல் மற்றும் பிடித்தல் செயற்பாடுகள்<br>• வெவ்வேறு பொருள்களைக் கொண்டு உருவாக்கிய புத்தளிப்புக் கருவிகளைப் பயன்படுத்திச் செய்யும் ஆக்கபூர்வமான கூட்டான வாத்திய இசைப்பு |
| 6. எமது உணவு | • சுகாதாரமான வாழ்க்கைக்கு வேளை உணவுகளை உரிய நேரத்தில் உண்ண வேண்டுமென்ற விளக்கத்துடன் நடந்து கொள்வார்.<br>• தரமானதும் மருத்துவத்தன்மை கொண்டதுமான பான வகைகளை நுகரப் பழகுவார்.<br>• உணவு விரயமாகும் வழிகள் மற்றும் அவற்றை நீண்ட காலம் பேணும் முறைகள் பற்றிய விளக்கத்துடன் செயற் படுவார்.<br>• உணவு உண்ணும் மரபுகள் மற்றும் நற்பழக்கவழக்கங்கள் ஆகியவற்றைக் கைக்கொள்வார்.<br>• பாதுகாப்பற்ற உணவுகளை உட்கொள்வதனால் ஏற்படக் கூடிய நோய் நிலைமைகள் பற்றிய விளக்கத்துடன் சுத்தமான உணவுகளை உட்கொள்வார். | • கலப்பு உணவு வேளையொன்றின் முக்கியத்துவம்<br>• ஆரோக்கியமான வளர்ச்சிக்குத் துணையாகும் ஔஷத இயல்புகளைக் கொண்ட உணவு மற்றும் பான வகைகள்<br>• உணவு அசுத்தமடையும் வெவ்வேறு முறைகள்<br>• உணவு நற்காப்பு முறைகள்<br>• பாதுகாப்பற்ற உணவை நுகர்வதால் ஏற்படக்கூடிய நோய்கள், கோளாறுகள்<br>• உணவு பரிமாறும் சரியான ஒழுங்குகள்<br>• சக்தி விருத்திக்குத் துணையாகும் விளையாட்டுக்கள்<br>• ஆக்கபூர்வமாக உணவு பரிமாறுவதற்காகக் கையாளத்தக்க முறைகள் |

| கருப்பொருள் | தேர்ச்சி | உள்ளடக்கம் |
| --- | --- | --- |
| | • சரியான நடைமுறைகளைப் பின்பற்றி உணவைப் பரிமாறுவார்.<br>• உணவு பரிமாறலுக்கெனப் பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி ஆக்கத்திறன்மிக்க முடிவுப் பொருள்களைத் தயாரிப்பார்.<br>• சக்தி விருத்திக்கு உதவும் விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.<br>• நாம் உண்ணும் உணவுகளின் பல்வகைமையின் அடிப்படையில் பாடல், ஆடல், இசைத்தல், அங்க அசைவுகள் ஆகியவற்றைச் சமர்ப்பிப்பார். | • பாதுகாப்பற்ற உணவு, பானாதிகளை நுகர்வதால் ஏற்படத்தக்க நிலைமைகளை எடுத்துக்காட்டும் ஆடல், பாடல்கள் |
| 7. பாதுகாப்பும் கரிசனையும் | • விபத்துக்கள் நிகழத்தக்க வழிகள் பற்றிய அறிவூட்டத்துடன் அவற்றிலிருந்து பாதுகாப்புப் பெற ஆவன செய்வார்.<br>• தொழில்நுட்பச் சாதனங்களையும் வெவ்வேறுபட்ட சக்திகளையும் பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் தொடர்பாகக் கவனஞ் செலுத்திச் செயற்படுவார்.<br>• தொற்று நோய்கள் மற்றும் தொற்றாத நோய்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகக் கையாளக்கூடிய சுகாதாரப் பாதுகாப்பு முறைகள் தொடர்பாக அறிவூட்டத்துடன் செயற்படுவார்.<br>• பாதுகாப்பு தொடர்பான உணர்தன்மையுடன் ஆக்கங்கள் செய்வதில் ஈடுபடுவார்.<br>• பாதுகாப்புத் தொடர்பாகக் கவனஞ் செலுத்தியவாறு துலங்கல் (எதிர்வினை) வேக வளர்ச்சிச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.<br>• பாதுகாப்பாகவும் கவனமாகவும் வேலைசெய்ய வேண்டிய விதத்தை ஊமம் மூலமும் கருத்து வெளிப்பாட்டு அங்க அசைவுகள் மூலமும் செய்து காட்டுவார். | • அயற்சூழலில் நிகழத்தக்க விபத்துக்களிலிருந்து பாதுகாப்புப் பெறுதல்<br>• அன்றாடம் செய்யும் வெவ்வேறு வேலைகளின்போது நிகழத்தக்க விபத்துகளும் இழப்புகளும்<br>• தொற்று நோய்கள் பரவுவதைத் தவிர்க்கக்கூடிய முறைகளும் அந்நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெறுதலும்<br>• தொற்றாத நோய்கள் ஏற்படுவதைத் தவிர்க்கக்கூடிய வழிகள்<br>• பாதுகாப்புத் தொடர்பான செய்திகளைக் கொண்ட சுவரொட்டிகள் ஆக்கல்<br>• பாதுகாப்புத் தொடர்பாகக் கவனஞ் செலுத்தியவாறு விளையாடும் விளையாட்டுக்கள்<br>• பாதுகாப்புத் தொடர்பான செய்திகள் அடங்கிய ஆடல் - பாடல்கள், கவிதைகள் |

| கருப்பொருள் | தேர்ச்சி | உள்ளடக்கம் |
|---|---|---|
| 8. நீர் | • நீருடன் பல்வேறு பொருள்கள் இடைத்தாக்கமடையும் விதத்தைக் கண்டறிந்து அறிக்கைப் படுத்துவார்.<br>• பல்வேறு வழிகளின் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் நீரை வினைத்திறனாக முகாமை செய்து பாதுகாப்பாக நுகர்வார்.<br>• நீரினால் ஏற்படக்கூடிய பாதிப்புகள், விபத்துகள் தொடர்பாகக் கண்டறிந்து அவற்றைக் குறைப்பதற்குப் பங்களிப்புச் செய்வார்.<br>• நீரின் தொழிற்பாடு தொடர்பான பல்வேறு ஆக்கங்களில் ஈடுபடுவார்.<br>• நீர் சார்ந்து உருவாக்கிய விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.<br>• நீர் சார்ந்த பல்வேறு சந்தர்ப்பங்களை மகிழ்வுடன் சமர்ப்பிப்பார். | • நீரின் தன்மை வேறுபடும் விதம்<br>• நீரின் தொழிற்பாட்டைத் தேடியறிதல்<br>• அசுத்தமான நீர் காரணமாக ஏற்படத்தக்க பாதிப்புகளை இழிவாக்கல்<br>• நீரின் மூலம் இயக்கக்கூடிய ஆக்கங்கள்<br>• நீரைப் பயன்படுத்தி வெவ்வேறு ஒலிகளைப் பிறப்பிக்கும் ஆக்கங்கள்<br>• நீரைக் கொண்டுசெல்லல் சார்ந்த ஆக்கபூர்வமான விளையாட்டுக்கள்<br>• நீரைப் பயன்படுத்தி வெவ்வேறு ஒலிகளைப் பிறப்பித்தல் தொடர்பான களிப்பூட்டும் அனுபவங்கள் |
| 9. போக்கு வரத்து | • வீதியில் பயணிப்போர் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள், ஒழுக்கங்கள் பற்றிய விளக்கத்துடன் வீதிகளைப் பயன் மிக்கதாகவும் பாதுகாப்பாகவும் பயன்படுத்துவார்.<br>• வாகனங்களால் ஏற்படுத்தப்படும் பாதகமான தாக்கங்களை ஆராய்ந்து அவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு நடவடிக்கை எடுப்பார்.<br>• பொது வாகனங்களினால் ஆற்றப்படும் சேவைகளை மதித்து அவற்றைப் பாதுகாப்பதற்குப் பங்களிப்புச் செய்வார்.<br>• சேவையை வினைத்திறனாக மேற்கொள்வதற்குப் பல்வேறு வகைப்பட்ட பொறிமுறைச் சக்தியுடன்கூடிய வாகனங்கள் பயன்படுத்தப்படும் விதத்தைத் துருவியாய்ந்து அறிக்கைப் படுத்துவார். | • பெருந்தெருக்களில் பயணம் செய்யும் போது பின்பற்ற வேண்டிய வீதி ஒழுங்குகள்<br>• வீதி ஒழுங்குகளைப் பின்பற்றாமையால் ஏற்படத்தக்க விபத்துக்கள்<br>• போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்படும் வாகனங்களும் அவற்றின் பயன்களும்<br>• பொதுவாகனங்களைப் பாதுகாப்பதற்காகச் செய்யக்கூடியவை<br>• போக்குவரத்தின்போது தமது பாதுகாப்புக்கான செய்திகளைக் கொண்ட சுவரொட்டிகள் ஆக்குதல்<br>• வாகனங்களைப் பயன்படுத்தும்போது செயற்பட வேண்டிய விதம் தொடர்பான செய்திகளடங்கிய கவிதைகள், பாடல்கள் |

| கருப்பொருள் | தேர்ச்சி | உள்ளடக்கம் |
|---|---|---|
| | • போக்குவரத்துடன் தொடர்பான பல்வேறு சந்தர்ப்பங்களை ஒட்டிய ஆக்கங்கள் செய்வார்.<br>• வெவ்வேறு பயணங்களின் பல்வகைமையை அடிப்படையாகக் கொண்ட அசைவுச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.<br>• போக்குவரத்துடன் தொடர்பான நடத்தைகளை வெளிக்காட்டும் களிப்பூட்டும் செயற்பாடுகளை முன்வைப்பார். | • போக்குவரத்து தொடர்பான நடத்தைகளை எடுத்துக்காட்டும் ஆக்கபூர்வமான விளையாட்டுக்கள் |
| 10. வீட்டுத் தோட்டம் | • திட்டமிட்ட வீட்டுத்தோட்டம் மூலம் அன்றாடம் தமது வீட்டிற்குத் தேவையான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதில் பங்களிப்புச் செய்வார்.<br>• செய்கைபண்ணிய பயிர்களைப் பாதுகாப்பதற்காகக்கையாளும் உத்திகள் பற்றித் தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்.<br>• விவசாயத்துடன் இணைந்த பண்பாட்டுப் பெறுமானங்களை மதிப்பார்.<br>• வீட்டுத்தோட்டத்திலிருந்து பெறக்கூடிய பொருள்களைக் கொண்டு ஆக்கங்கள் செய்வார்.<br>• வீட்டுத்தோட்டத்திலிருந்து பெறக்கூடிய பொருள்கள் சார்ந்த விளையாட்டுக்களிலும் செயற்பாடுகளிலும் ஈடுபடுவார்.<br>• வீட்டுத்தோட்டத்தின் அழகையும் பெறுமானத்தையும் எடுத்துக்காட்டும் ஆக்கங்கள் செய்வதில் களிப்புடன் ஈடுபடுவார். | • எமக்கு அன்றாடம் தேவைப்படும் உணவு - பானங்களை வீட்டுத் தோட்டத்திலேயே உற்பத்தி செய்வதற்காகச் செய்யத்தக்க பங்களிப்பு<br>• பயிர்களைச் செய்கைபண்ணும் வெவ்வேறு முறைகள்<br>• அழகு வெளிப்படுமாறு வீட்டுத் தோட்டச் செய்கையில் ஈடுபடுதல்<br>• பயிர்ச்செய்கையைப் பாதுகாப்பதற்காகப் பயன்படுத்தும் பாரம்பரிய மற்றும் நவீன நுட்ப முறைகள்<br>• இரசாயனப் பசளைகள் மற்றும் பூச்சி நாசினிகளைப் பயன்படுத்துவதால் சூழலுக்கும் உயிரினங்களுக்கும் ஏற்படும் பாதிப்புகள்<br>• ஆக்கபூர்வமான வீட்டுத்தோட்டமொன்றை அமைத்தல்<br>• வீட்டுத்தோட்டத்திலிருந்து பெறக் கூடியவற்றைக் கொண்டு செய்யும் ஆக்கங்கள்<br>• காய்கறிகள், பழ வகைகளின் பெயர்களைப் பயன்படுத்திச் செய்யும் சிறு விளையாட்டுக்கள்<br>• அழகான வீட்டுத்தோட்டமொன்றின் அழகை எடுத்துக்காட்டும் ஆடல் - பாடல்கள் |

| கருப்பொருள் | தேர்ச்சி | உள்ளடக்கம் |
|---|---|---|
| 11.வேலையை இலகுபடுத்திக் கொள்ளும் வழிகள் | • வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காகத் தற்காலத்தில் கையாளப்படும் உத்திகளையும் முற்காலத்தில் கையாளப் பட்ட உத்திகளையும் கற்றாய்ந்து அறிக்கைப் படுத்துவார்.<br>• வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காகவும் நேர்த்தியாகச் செய்துமுடிப்பதற்காகவும் திட்டமிட்டு, ஒழுங்காகவும் சீராகவும் வேலைசெய்யப் பழகுவார்.<br>• கூட்டாகச் சேர்ந்து செயற்படுவதன் மூலம் வேலைகளை இலகுபடுத்திக்கொள்ளச் செயற்படுவார்.<br>• சேவைகளைப் பெறும்போதும் வழங்கும்போதும் மரியாதையாகவும் சட்டங்களை மதித்தும் செயற்படுவார்.<br>• மின்சாரம், காந்தம் மற்றும் எளிய பொறிகளைப் பயன்படுத்தி வேலைகளை இலகுபடுத்திக்கொள்ளும் வழிகளைக் கூர்ந்துநோக்கி அறிக்கைப்படுத்துவார்.<br>• அன்றாட வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய சக்திகள் தொடர்பாகக் கையாண்டு பார்த்துக் களிப்புறுவார்.<br>• ஒத்துழைப்பு மற்றும் கூட்டுணர்வு மூலம் வெற்றியை அனுபவிக்கத்தக்க விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.<br>• வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காகச் செய்யக் கூடிய பல்வேறானவற்றைக் களிப்புடனும் ஆற்றுகையாகவும் முன்வைப்பார். | • வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காக முற்காலத்தில் கையாளப் பட்ட உத்திகள்<br>• இழுத்தல், தள்ளுதல் மூலம் பண்டங்களின் அமைவிடத்தை மாற்ற முடிகின்றமை<br>• ஒழுங்காகவும் முறைமையாகவும் செயற்படுவதால் அன்றாட வேலைகளை இலகுபடுத்திக்கொள்ள முடிகின்றமை<br>• யாதேனும் வேலையை உரிய நேரத்தில் செய்து முடிக்கும் பரிச்சயம்<br>• சேவைகளைப் பெறும் வேளைகளிலும் வழங்கும் வேளைகளிலும் மரியாதையையும் சட்டதிட்டங்களையும் பேணுதல்<br>• யாதேனும் வேலையைச் செய்வதற்கு மனிதனின் உடற்சக்தி மாத்திரம் போதியதாகாமை<br>• காந்தங்களைப் பயன்படுத்தி வேலைகளை இலகுபடுத்திக் கொள்ளும் வழிகள்<br>• மின்சாரத்தைப் பயன்படுத்தி வேலைகளை இலகுபடுத்திக் கொள்ளும் வழிகள்<br>• வெவ்வேறு ஆக்கங்கள் மூலம் வலுசக்தி மூலங்களைப் பயன்படுத்துவது தொடர்பான கையாண்டு பார்த்தல்கள்<br>• குழுநிலையில் ஒத்துழைத்து விளையாடும் விளையாட்டுக்கள்<br>• வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்கும் அதன் மூலம் களிப்புறுவதற்கும் ஏற்றவாறான பாடல்களை ஆற்றுகைப்பாங்கான அங்க - அசைவுகளுடன் முன்வைத்தல் |

| கருப்பொருள் | தேர்ச்சி | உள்ளடக்கம் |
|---|---|---|
| 12. மனித நடத்தைகள் | • தனதும் சமூகத்தினதும் நல மான இருப்புக்கேற்ற வகையி லான பயனுடைய பண்புக ளைப் பேணுவார்.<br>• நல்ல இடைத்தொடர்புகளைப் பேணுவதற்கு ஏற்ற வகையி லான ஆக்கங்கள் செய்வார்.<br>• பங்கேற்புக்காகச் சமமான சந்தர்ப்பங்களைப் பெற்று உபகரணங்களைக் கையா ளும் ஆக்கத்திறனான விளை யாட்டுக்களில் ஈடுபடு வார்.<br>• மனிதர்களின் பல்வேறு நடத்தைகளை உணர்வுபூர்வ மாகப் பல்வேறு வெளிப்பாட்டு ஊடகங்கள் மூலம் ஆக்கத் திறன்மிக்க வகையில் முன் வைப்பார். | • தமது திறன்களை மதிப்பதோடு ஏனையோரின் திறன்களையும் மதித்தல்<br>• எனையோரின் கருத்துக்கள் மற்றும் நடத்தைகள் சார்பாக சரியாகத் துலங்குதல்<br>• ஒவ்வொருவருக்கும் கல்விபெறும் உரிமை இருக்கின்றமை<br>• ஏனையோரது நலிவுபாடுகளை இகழாமை<br>• நல்ல தொடர்புகளைப் பேணிவரத் துணையாகும் வகையிலான வாழ்த்து அட்டைகள் ஆக்குதல்<br>• பந்துகள் மற்றும் வளையங்களைக் கொண்டு விளையாடும் ஆக்கபூர்வ மான விளையாட்டுக்கள்<br>• மனித நடத்தையின்போது பரிவுணர் வுடன் செயற்பட வேண்டிய சந்தர்ப்பங் களை எடுத்துக்காட்டும் பாடல்களும் நாடகங்களும் |
| 13. நிலமும் வானும் | • நில மேற்பரப்பின் பல்வகை மையைத் தேடியாய்வார்.<br>• நீர் சார்ந்த சூழல்களின் இயல்புகளைத் தேடியாய்வார்.<br>• மழை ஏற்படுவது தொடர்பாக சூழலில் ஏற்படும் மாற்றங் களை அவதானித்து அறிக் கைப்படுத்துவார்.<br>• காற்றின் தொழிற்பாட்டை ஆராய்ந்து காற்று வலுவைப் பெறக்கூடிய பல்வேறு முறைகளைத் துருவியாய்வார்.<br>• இயற்கையான பொருள்களின் தொழிற்பாட்டையும் அவற்றின் மூலமாகச் சூழலில் ஏற்படும் தாக்கங்களையும் தேடி யாய்ந்து அறிக்கைப்படுத்து வார்.<br>• தனது அன்றாட நடவடிக்கை களுக்கென ஒளியை பயன் படுத்தும் விதத்தை ஆராய் வார். | • நில மேற்பரப்பினது பல்வகைமையி னால் வெளிப்படும் அழகு<br>• மண்ணின் பல்வகைமையைத் துருவி யாய்ந்து மண்காப்புக்குப் பங்களிப்புச் செய்தல்<br>• சதுப்பு நிலங்கள், நீர்நிலைகளை அண்டிய நிலங்கள் சார்ந்த சூழலின் தனிச்சிறப்பான இயல்புகள்<br>• மழையினால் கிடைக்கும் பயன்கள்<br>• காற்றின் தொழிற்பாடு<br>• இயற்கைச் சூழலில் ஏற்படும் மாற்றங் கள் மற்றும் திடீர் நிலைமைகள் தொடர்பாகக் கவனஞ்செலுத்திச் செயற்படல்<br>• புவியின் சுழற்சியும் இரவு - பகல் தோன்றுதலும்<br>• ஒளியைத் தமது அன்றாட வேலை களுக்காகப் பயன்படுத்தும் வழிகள் |

| கருப்பொருள் | தேர்ச்சி | உள்ளடக்கம் |
| --- | --- | --- |
| | • இலங்கையின் அமைவை இனங்கண்டு கூறுவார்.<br>• வானம், நிலம் ஆகியவற்றின் தன்மை பற்றிக் கவனஞ் செலுத்தி ஆக்கங்களில் ஈடுபடுவார்.<br>• நிலைக்குத்து மற்றும் கிடை வெளிகளைப் பயன்படுத்திச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.<br>• நிலம், வான் ஆகியவற்றின் வியத்தகு தன்மை பற்றிய களிப்பூட்டும் மகிழ்ச்சிச் செயற்பாடுகளை, கவிதைகள், பாடல்கள், ஆற்றுகைகளாக முன்வைப்பார். | • இலங்கைத் தேசப்படமொன்றில் தமது பிரதேசம் அடங்கியுள்ள மாகாணம், மாவட்டம், நகரம் ஆகியவற்றை அவதானித்தல்<br>• வானம் சார்ந்த ஆக்கங்கள்<br>• உபகரணங்களைப் போடுதல் மற்றும் நிலைக்குத்தாக வைக்கப்பட்ட வளையங்களின் ஊடாக எறிதலும் பிடித்தலும் சார்ந்த விளையாட்டுக்கள்<br>• மேல், கீழ்த் தள வெளிகளைப் பயன்படுத்திச் செய்யப்படும் சந்த அசைவுச் செயற்பாடுகள் |
| 14. எம்மால் செய்யக்கூடிய மாற்றங்கள் | • அண்மிய சூழலைச் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் வைத்திருக்கக் கருமமாற்றுவார்.<br>• தமது அண்மிய சூழலில் பண்பு ரீதியான மாற்றத்தை வேண்டி நிற்கும் பிரச்சினைகளைத் தேடியறிந்து அதற்காகத் திட்டம் தயாரித்துச் செயற்படுவார்.<br>• நல்லதொரு மாற்றத்தைச் செய்வதற்காகத் துணையாகும் ஆக்கங்கள் செய்வதற்குத் தேவையான பரிச்சயத்தைப் பெறுவார்.<br>• விளையாட்டுத் திடலில் மாற்றங்களைச் செய்து களிப்பூட்டும் விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.<br>• தமது நடத்தைகளை நல்லவையாக மாற்றிக்கொள்ள முடிகின் றமையை எடுத்துக் காட்டத்தக்க களிப்பூட்டுஞ் செயற்பாடுகளில் ஈடுபடுவார். | • தமது சூழலைச் சுத்தமாகவும் ஒழுங்காகவும் வைத்திருப்பதற்காகச் செய்யக்கூடிய பங்களிப்பு<br>• நல்ல மாற்றங்களை நடைமுறைப் படுத்துவதற்குப் பொருத்தமான திட்டங்கள்<br>• வீட்டுச் சூழலில் தரம் சார்ந்த செய்யத்தக்கதான மாற்றங்கள்<br>• பயன்படுத்துவதற்குப் பொருத்தமான சித்திரங்கள் மற்றும் பின்னல்வேலை ஆக்கங்கள் செய்தல்<br>• வெவ்வேறு பொருள்களைப் பயன் படுத்தி, ஆக்கபூர்வமான மாற்றங்கள் செய்யத்தக்க விளையாட்டுக்கள்<br>• நல்ல நடத்தைகளை மேம்படுத்தும் வகையிலான வகிபாகமேற்று நடித்தல்கள் |

| கருப்பொருள் | தேர்ச்சி | உள்ளடக்கம் |
|---|---|---|
| 15. மனிதனும் தகவல்களும் | • தொடர்பாடற் கருமங்கள் நிகழும் விதத்தைக் கற்றாய் வார்.<br>• தொடர்பாடற் கருமங்களின் போது மரியாதையாகச் செயற் படுவார்.<br>• வெவ்வேறு ஊடகங்களையும் முறைகளையும் பயன்படுத்தி தகவல் பெறுவார், அத்தகவல் களை அறிக்கைப்படுத்துவார்.<br>• கிடைக்கும் தகவல்களுள் பொருத்தமான தகவல்களைப் பகுப்பாய்ந்து தெரிவு செய்து கொள்வார்.<br>• தொடர்பாடல் முறைகள் தொடர்பாக வெவ்வேறு ஆக் கங்கள் செய்து கையாண்டு பார்த்தல்களில் ஈடுபடுவார்.<br>• சமிக்ஞைகள், ஏவல்கள், செய்திகளைப் பயன்படுத்திச் செய்த ஆக்கங்களைக் கொண்டு செயற்பாடுகளில் ஈடுபடுவார்.<br>• சரியான அறிவித்தலொன்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி ஆடல் - பாடல்களிலும் பாத்திர நடிப்புகளிலும் ஈடுபடுவார். | • முற்காலத்தில் தகவல் பரிமாற்றம் செய்த வழிகள்<br>• வெவ்வேறு முறைகளைக் கையாண்டு தகவல்களை அறிக்கைப்படுத்தல்<br>• ஏனையோரின் கருத்துக்களைச் சகித்து தமது கருத்துக்களை நிதான மாக (Assertive) முன்வைத்தல்<br>• வெவ்வேறு தொடர்பாடல் ஊடகங்க ளையும் தொடர்பாடற் சாதனங்களை யும் பயன்படுத்தும் பரிச்சயம்<br>• வெவ்வேறு ஊடகங்கள் மூலம் கிடைக்கும் தகவல்களைப் பகுப் பாய்வு செய்து, பொருத்தமான தகவல்களைத் தெரிவுசெய்து கொள்ளல்<br>• தகவல் தொடர்பாடலுக்காகப் பயன் படுத்தும் முறைகள் தொடர்பான சுவரொட்டிகள் ஆக்குதல்<br>• ஏவல்களுக்கு அமைவாக உருவாக் கிய விளையாட்டுக்கள்<br>• சரியான தொடர்பாடலின்போது கடைப்பிடிக்க வேண்டிய பண்புகளைப் போலச்செய்து காட்டும் முன்வைப்பு கள் |
| 16. எமது பண்டைய தகவல்கள் | • வரலாற்று முக்கியத்துவமுள்ள இடங்களை மதித்து அவற் றைப் பாதுகாக்கச் செயற்படு வார்.<br>• தமது பிரதேசத்தில் அல்லது மாகாணத்தில் வரலாற்று, பண்பாட்டு முக்கியத்துவமுள்ள தாவரங்கள், இடங்கள் மற்றும் ஏனையவற்றை இனங்கண்டு அறிக்கைப்படுத்துவார்.<br>• தமது பிரதேசத்தில், நாட்டில் காத்திரமான சேவைகள் செய்த ஆட்களை மதித்து அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு செயற்படுவார். | • வரலாற்றுப் பெறுமானங்கொண்ட இடங்களை இனங்காணலும் அவற்றை மதித்தலும்<br>• பண்பாட்டு முக்கியத்துவமுள்ள தாவரங்கள் / இடங்கள் தொடர்பான தகவல்கள்<br>• நாட்டின் நற்பெயரைக் கட்டியெழுப்பு வதில் பங்களிப்புச் செய்தோர்.<br>• பண்டைய கலைப் படைப்புகளில் உள்ள கோலங்களைக் கற்றாய்ந்து தமது ஆக்கங்களுக்காக அவற்றைப் பயன்படுத்தல்<br>• தமது பிரதேசத்திற்கேயுரிய தனித்துவ மான எளிய கிராமிய விளையாட்டுக் கள் |

| கருப்பொருள் | தேர்ச்சி | உள்ளடக்கம் |
| --- | --- | --- |
| | • பண்டைய மரபுரிமைகளை எடுத்துக்காட்டும் ஆக்கங்கள் செய்வார்.<br>• பண்டுதொட்டு விளையாடப் படும் கிராமிய விளையாட்டுக் களை மதித்தவாறு அவற்றில் ஈடுபடுவார்.<br>• நம் முன்னோர் நாட்டிற்காக ஆற்றிய சேவைகளையும் நாட்டின் பண்டைய பெருமை களையும் எடுத்துக்காட்டும் வகையில் களிப்பூட்டத்தக்க செயற்பாடுகளில் ஈடுபடுவார். | • நாட்டுக்காகப் பணியாற்றிய மூதாதை யரின் முன்மாதிரியான பாத்திரங் களை நடித்துக் காட்டல் |

## கருப்பொருள் 1 : எமது நல்வாழ்வு

அர்த்தபுஷ்டியான வாழ்க்கைக்காக நற்குணநலன்களால் போசிக்கப்பெற்று வெற்றியை அனுபவிக்கும் நோக்குடன் செயற்படுவது அவசியமாகும். கடமைகளை நிறைவேற்றுவதற்காக விழிப்புடனும் மலர்ச்சியான உற்சாகத்துடனும் பொறுப்புகளை வெற்றிகரமாக எதிர்கொண்டு சுய அபிமானத்துடன் வாழ்தலானது வாழ்க்கையின் அர்த்தபுஷ்டியான தன்மையை மேலும் மேம்படுத்திக்கொள்ளத் துணைபுரியும். உளச் சுகம், உடல் சமநிலை ஆகியவற்றை நோக்காகக் கொண்டு, தேவையான பரிச்சயங்களைப் பெறுவதோடு நல்லவற்றையே செய்வதில் ஆர்வம் காட்டும் ஆரோக்கியமான ஒருவர் நாட்டிற்கு ஒரு செல்வமாக அமைவார்.

ஏனையோரின் கருத்துகளைச் செவிமடுத்து, அவற்றை மதித்து, வெற்றி - தோல்வியைச் சமமாக அனுபவித்து, ஒற்றுமையாகவும் சட்டத்தை மதித்தும் ஆன்மிக ரீதியில் களிப்பூட்டும் அனுபவங்களைப் பெறுகின்ற, இரசனையுணர்வு நிரம்பப்பெற்ற, ஆக்கபூர்வமாக வாழ்க்கையை ஒழுங்குசெய்துகொள்ளக்கூடிய ஒருவரையே நாம் உருவாக்குதல் வேண்டும்.

அதற்கமைய அதற்குத் தேவையான பயிற்சிகளையும் வழிகாட்டல்களையும் இக்கருப் பொருளின் ஊடாக வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது.

**தேர்ச்சிகள் :**

- நன்கு ஒழுங்கமைத்துச் செயற்படுவதன் மூலம் தமது வேலைகளை வெற்றிகரமாகச் செய்துகொள்வார்.
- நற்குணங்களை மதித்து, அவற்றைப் பேணிவர ஆவன செய்வார்.
- கடமைகளை நிறைவேற்றி, பொது வேலைகளில் பங்களிப்புச் செய்வார்.
- சட்டங்களை மதித்து அச்சட்டங்களைப் பேணி நடப்பார்.
- எமது நல்வாழ்வைப் பேணிவருவதற்குத் துணையாகுபவற்றை ஆக்குவார்.
- உடல், உள நல்வாழ்க்கைக்காகப் பொருத்தமான செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- நல்ல நடத்தைகளை எடுத்துக்காட்டும் வகையிலான ஆக்கங்கள் செய்வதில் களிப்புடன் ஈடுபடுவார்.

**கற்றற்பேறுகள் :**

- யாதேனும் வேலையைக் குறித்த நேரத்தில் நன்கு செய்து முடிப்பார்.
- தமது வாழ்க்கையின் வெற்றிக்குத் தேவையான நற் சுகாதாரப் பழக்கங்களை ஏற்படுத்திக் கொள்வார்.
- தன்னம்பிக்கையுடன் தமது வேலைகளைச் தனியாகச் செய்வார்.
- பொது இடங்களைப் பாதுகாப்பதிலும் அங்கு சரியான நடத்தைகளைக் காட்டுவதிலும் முன்னின்று முன்மாதிரியான வாழ்க்கைக் கோலத்தை வெளிப்படுத்திக் காட்டுவார்.
- எதிர்காலத்தை வெற்றி கொள்வதற்கு உதவக்கூடிய நற்செயல்களில் ஈடுபடுவார்.
- உடலின் நெகிழ்தன்மைக்கும் உடலின் வளர்ச்சிக்கும் பொருத்தமான செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- உளச் சுகத்தையும் உளச் சமநிலையையும் மேம்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- இரசனைக்காகவும் களிப்புறுவதற்காகவும் முன்மாதிரியான பாடல்கள் பாடுவார், இசைப்பார், நடனமாடுவார்.
- கூட்டாகச் செய்யும் செயற்பாடுகளில் ஈடுபட்டு, சமூகத்திற்காகச் சேவை செய்வதில் பங்களிப்புச்செய்வார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்:**

**செயற்பாடு : 1**

- போதுமான அளவு சூரிய ஒளி கிடைக்கத்தக்க ஓர் இடத்திற்கு மாணவரை அழைத்துச் செல்க.
- ஆசிரியர் ஏற்கனவே ஆயத்தப்படுத்தி, மறைத்து வைத்துள்ள (ஏறத்தாழ 60 - 90 சென்றி மீற்றர் அல்லது அதிலும் கூடிய உயரமான) நிலைக்கண்ணாடியைப் பொருத்தமான ஓர் இடத்தில், மாணவர் தம்மை அதில் பார்க்கக்கூடிய மட்டத்தில் நிறுத்தி வைக்குக.(அதற்கு மேலதிகமாக சீப்பு, நகவெட்டி போன்றவற்றைத் தயார்ப்படுத்துக.)
- ஒவ்வொருவருக்கும் தாம் கொண்டுள்ள நல்லவற்றை நிலைக்கண்ணாடியில் பார்க்கச் சந்தர்ப்பமளிக்கப்போவதாக மாணவரிடம் கூறுக.
- மாணவர் ஒவ்வொருவராகக் கண்ணாடியின் அருகே சென்று அக்காண்ணாடியில் தோன்றும் தமது உருவத்தை நன்கு பார்க்குமாறு கூறுக.
- தமது தோற்றத்தில் அழகாக, ஒழுங்காக, நன்றாக இருப்பவை யாவையெனக் கூறச் சந்தர்ப்பம் வழங்குக. (உதாரணம் : உடை, தலைமுடியைச் சீவியுள்ள விதம், ... போன்றவை)
- தமது தோற்றத்தில் அழகாக, ஒழுங்காக, நன்றாக இல்லாதவை காட்சியளிக்கின்றனவா என அவதானித்துக் கூறச் சந்தர்ப்பமளிக்குக. (உதாரணம் : உடை, கழுத்துப்பட்டி, தலைமுடி, பாதணிகள், கழுத்துப்பட்டி, ... போன்றவை)
- ஒழுங்கின்றிக் காணப்படும் யாதேனுமொன்று பற்றிக் கூறினரெனின், அதனை நேர்த்தியாக்கிக் கொள்ளுமாறு ஆர்வமூட்டுக. அதனால் கிடைக்கும் பயன்களை மாணவருடன் சேர்ந்து கலந்துரையாடுக.
- தம்மிடத்தே காணப்பட்ட யாதேனும் ஒரு குறைபாட்டையேனும் அச்சந்தர்ப்பத்திலேயே சீர்செய்த பின்னர் மீண்டும் கண்ணாடியில் தம்மைப் பார்க்கச் சந்தர்ப்பமளிக்குக.
- “கண்ணாடியில் கண்ட எனது உருவம்” எனும் தலைப்பில் தாம் விரும்பியவாறு ஒரு சித்திரம் வரைய வழிப்படுத்துக.
- பின்னர் மாணவர்கள் இருவரிருவராகச் சேர்ந்து தாம் வரைந்த சித்திரத்தை அந்நண்பனுக்குக் காட்டி அதனை விவரிக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- இக்கருப்பொருளின் இறுதியில் “கண்ணாடியில் பார்த்த எனது உருவம்” எனும் தலைப்பில் சித்திரக் கண்காட்சியொன்றை நடத்துக.
- பின்னர் பாடலைக் கூட்டாகச் சேர்ந்து பாடுக.

**செயற்பாடு : 2**

**படிமுறை - 1**

- மாணவருடன் சேர்ந்து எல்லாருக்கும் பொதுவான ஒரு நாளுக்குரிய நேரசூசியொன்றைக் கரும்பலகையில் கட்டியெழுப்புக.
  (அதிகாலை நித்திரைவிட்டு எழும்புவது தொடக்கம் இரவு நித்திரைக்குச் செல்லும் வரையான நேரத்தை உள்ளடக்குக.)
- யாதேனும் வேலையைக் குறித்த நேரத்தில் வெற்றிகரமாகச் செய்வதற்காக, சிறுபராயம் முதலே ஒரு நேரசூசியின்படி வேலை செய்யப் பழகுவதன் முக்கியத்துவத்தை விளக்குக.
- நேரத்திற்கு வேலை செய்வது பற்றிக் கூறும் பாடலொன்றை வகுப்பில் முன்வைக்குக.
- அப்பாடலை மாணவருடன் சேர்ந்து பாடுக.
  யாதேனும் வேலையை உரிய வேளையில் உரிய நேரத்தில் சரியாகச்செய்து முடிப்பதால் கிடைக்கும் நன்மைகள் பற்றியும் கலந்துரையாடுக.
- உரிய நேரத்தில் வேலைகளைச் செய்து முடிக்காமையால் மாணவர் எதிர்நோக்க நேரிட்ட பிரச்சினை நிலைமைகள் குறித்து, தமது அனுபவங்களைக் கூற மாணவர்க்குச் சந்தர்ப்பம் அளிக்குக.

**படிமுறை - 2**

- மாந்தோப்புக் கிராமத்தில் சிறந்த கமக்காரனைத் தெரிவு செய்யும் போட்டியில் அறுபது வயதைத் தாண்டிய முருகேசுத் தாத்தா வெற்றிபெற்றார். இளைஞர்கள் பலர் இருக்கையில் 60 வயது தாண்டிய தாத்தா வெற்றிபெற்றதற்கான காரணத்தை அறிவிப்பாளர் தாத்தாவிடம் விசாரித்தார்.

**அறிவிப்பாளர்** : முருகேசுத் தாத்தா, உங்களது இந்த வெற்றிக்கு என்ன காரணம் எனக் கூறுவீர்களா?

**முருகேசுத் தாத்தா**: நான் எனது வேலைகளைச் சரியான நேரத்தில் செய்தேன்.

**அறிவிப்பாளர்** : கொஞ்சம் விளக்கமாகக் கூறுங்கள்.

**முருகேசுத் தாத்தா**: மழைக்காலத்தில் வயலில் வேலை செய்தேன்.

கோடை காலத்தில் சேனையில் வேலை செய்தேன்.

சரியான நேரத்தில் விதை விதைத்தேன்.

சரியான நேரத்தில் அறுவடை செய்தேன்.

**அறிவிப்பாளர்** : நீங்கள் ஒரு சுறுசுறுப்பான கமக்காரர்.

**முருகேசுத் தாத்தா**: ''எந்த வேலையையும் நேரத்திற்குச் செய்து முடிக்க வேண்டும்'' என்று எனக்குச் சின்ன வயதிலேயே எனது அப்பா சொல்லித் தந்தார்.

- மேற்படி சம்பவத்தை ஒரு கதைபோன்று வகுப்பில் முன்வைத்து முருகேசுத் தாத்தா கமக்காரர் போட்டியில் வெற்றிபெற்றதற்கான காரணங்களை வெளிக்கொணர்வதற்கான சிந்தனைக் கிளர்வை நடத்துக.
- மாணவர் கூறும் விடைகளைக் கரும்பலகையில் பட்டியற்படுத்துக / குறிக்குக.
- மாணவர் முன்வைத்த விடைகளைத் தழுவி, உரிய நேரத்தில் வேலை செய்வதன் முக்கியத்துவம் வெளிக்கொணரப்படும் வகையில் கலந்துரையாடுக.

**படிமுறை - 3**

- மாணவரை இரண்டு குழுக்களாகப் பிரித்து, பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபட வழிப்படுத்துக.

  குழு **A** - யாதேனும் வேலையை உரிய நேரத்தில் செய்து முடிப்பதால் கிடைக்கும் நன்மைகள் பற்றிக் கலந்துரையாடுக.

  குழு **B** - யாதேனும் வேலையை உரிய நேரத்தில் செய்து முடிக்க முடியாமற்போவதால் ஏற்படும் பாதகமான நிலைமைகள் குறித்துக் கலந்துரையாடுக.

- அத்தகவல்களை முன்வைக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- மாணவரது அனுபவங்களை வெளியிடுவதற்கும் சந்தர்ப்பமளிக்குக.
- சிறுபராயம் முதலே யாதேனும் வேலையை உரிய நேரத்தில் செய்து முடிப்பதால் கிடைக்கும் நன்மைகள் தொடர்பாக மேலும் வலியுறுத்துக.

**செயற்பாடு : 3**

- மனிதர் பொது இடங்களில் தவறான வகையில் நடந்துகொள்ளும் சந்தர்ப்பங்கள் செய்யும் தவறுகள் மற்றும் பொது இடங்களைப் பாதுகாப்பது தொடர்பாக மாணவருடன் கலந்துரை யாடுங்கள்.
- அவ்வாறான தவறான நடத்தைகளை, எவ்வாறு திருத்திக்கொள்ளலாமெனவும் பொது இடங்களைப் பாதுகாக்கும் வழிகள் பற்றியும் மாணவரிடம் வினவுக.

- மாணவர்கள் முன்வைக்கும் விடைகளை மதித்துக் கலந்துரையாடுக.
- பின்னர் மாணவரை A, B என இரண்டு குழுக்களாகப் பிரிக்குக. மேலே கலந்துரையாடிய பொது இடங்கள் சிலவற்றின் பெயர்ப்பட்டியலொன்றைக் காட்சிப்படுத்துக.

| | |
|---|---|
| * நூலகம் | * பெருந்தெரு |
| * பேருந்து நிலையம் | * பொது மலசலகூடம் |
| * வைத்தியசாலை | * பொது வாகனங்கள் |
| * வங்கி | * பொதுச் சந்தை |

- மேலே காட்சிப்படுத்திய பொது இடங்கள் பட்டியலிலிருந்து யாதேனும் ஒரு பொது இடத்தை, **A** குழுவின் முதலாவது மாணவனுக்கு வழங்கி, அவ்விடத்தில் தாம் அவதானித்த மனிதர்களது தவறான நடத்தையொன்றினைக் கூறுமாறு வழிப்படுத்துக.
- குழு **B** யின் முதலாவது மாணவனை அழைத்து, அத்தவறான நடத்தையைத் திருத்தும் விதம் அல்லது சரியான நடத்தையைக் காட்டும் விதத்தை முன்வைக்குமாறு வழிப்படுத்துக.

***உதாரணம் :*** நூலகம்


* **A** தவறான நடத்தை - உரத்துப் பேசி ஏனையோருக்கு இடைஞ்சல் விளைவிக்கும் வகையில் நடத்தல்

* **B** சரியான நடத்தை - அமைதியாக, ஏனையோருக்கு இடைஞ்சலின்றி நடத்தல்


- பின்னர் குழு B யின் மற்றுமொரு மாணவனுக்கு, மற்றுமொரு பொது இடத்தின் பெயரை வழங்கி, அவ்விடத்தில் தாம் அவதானித்துள்ள ஓர் தவறான நடத்தையைக் கூற வழிப்படுத்துக.
- அத்தவறான நடத்தையைத் திருத்தும் வகையிலான சரியான நடத்தையைக் கூறுமாறு குழு A யின் மற்றுமொரு மாணவனை வழிப்படுத்துக.
- இவ்வாறாக மாணவருடன் கலந்துரையாடிப் பொது இடங்களில் சரியாக நடந்துகொள்ளும் விதம் பற்றியும் பொது இடங்களைப் பாதுகாக்கும் விதம் பற்றியும் விளக்கத்தை மாணவரிடத்தே உறுதிப்படுத்தும் வகையில் செயற்பாட்டை நடத்துக.


**செயற்பாடு : 4**


- ஆரோக்கியமான, செயற்றிறன்மிக்க வாழ்க்கைக்குத் தேவையான உடல், உளத் தகைமையை ஏற்படுத்துவதற்காக சூரிய நமஸ்காரச் செயற்பாட்டிற்கான சந்தர்ப்பத்தைத் திட்டமிடுக. (இதன் பொருட்டுப் பொருத்தமான ஆடையைப் பயன்படுத்துமாறு மாணவர்களுக்க ஆலோசனை வழங்குக.)
- “சூரிய நமஸ்காரச்” செயற்பாடுகளில் பரிச்சயம் பெற்று, தினசரி அப்பயிற்சிகளில் ஈடுபட மாணவரை வழிப்படுத்துக. (பாடசாலையில் மட்டுமன்றி வீட்டிலும்)
- பின்வருமாறு மாணவரை இடப்படுத்துக / நிறுத்துக.



- ஒன்றுவிட்டொருநாளில் தலைமைத்துவம் வகிக்கும் சந்தர்ப்பத்தை மற்றுமொரு மாணவருக்கு வழங்குக.
- சூரிய நமஸ்காரத்தின் படிமுறைகளுக்கிடையே உரிய நேர வீச்சை / இடைவெளியைப் பேணுக.
- ஒரு செயற்பாட்டிலிருந்து மற்றைய செயற்பாட்டிற்கு மாறுவதற்கான 1....2....3....4 என்றவாறு காலங்குறிக்குக.
- அதன்போது 4 எனக் கூறியவுடன் மாணவரை அடுத்த மெய்ந்நிலைக்கு மாறுமாறு வழிப்படுத்துக.
- அடுத்த மெய்ந்நிலைக்கு வரும்போது முன்னைய மெய்ந்நிலையில் இருந்து நெகிழ் தன்மையுடன் சூரிய நமஸ்கார எண்ணை அடைவதற்கு வழிப்படுத்துக.
- இதற்காக, தாள இசை அல்லது மேள இசையைப் பயன்படுத்துவதால் மாணவரது ஆர்வத்தை அதிகரித்துக் கொள்ளலாம்.
- சூரிய நமஸ்காரச் சந்தர்ப்பங்கள் :







- தினமும் உடல், உள, ஆன்மிக நலத்திற்காகச் சூரிய நமஸ்காரத்தைச் செய்வதற்குரிய சரியான முறையியலை மாணவர்களுக்கு வழங்குக.
- ''சூரிய நமஸ்காரம்'' எனும் இத்தலைப்பைச் செயற்படுத்தும் வேளையில் மாத்திரமன்றி, அதனை ஒரு வாழ்க்கைப் பழக்கமாக ஆக்கிக்கொள்வதற்கான அடித்தளத்தை அமைக்கும் பணியை இத்தரத்திலேயே ஆரம்பிக்க வழிப்படுத்துக.

**செயற்பாடு : 5**

- உடல், உளச் சுகத்திற்காகப் பின்வரும் செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்துக.
- உடல், உளச் சுகத்திற்காகச் செயற்பாடுகளின் முதலாம், இரண்டாம், படிமுறைகளை ஒவ்வொரு புதிய பாடவேளையினதும் ஆரம்பத்தில் செய்ய வழிப்படுத்துக.
- கருப்பொருளை நடைமுறைப்படுத்தும் நாளில், உடல் - உளச் சுகத்திற்கான செயற்பாடு களைத் தொடங்குக.
- ஆன்மிகப் பொருத்தப்பாட்டிற்காக நாளாந்தம் வாழ்க்கைப் பழக்கமாக்கிக்கொள்ள வேண்டிய ஒரு செயற்பாடாக இச்செயற்பாடுகளை மாணவர்க்கு வழங்குக.

**படிமுறை - 1 உடலைத் தளர்த்துதல்**

- சௌகரியமாக அமருக. கண்களை மூடிக்கொள்க. மெல்லமெல்ல கை, கால்களைத் தளர்த்துக. கால் விரல்கள், கணைக்கால்கள், முழங்கால்கள், வயிறு, இடுப்பு, நெஞ்சு, தோள்கள், கைகள், கைவிரல்களைத் தளர்த்துக. கழுத்து - தலைப் பிரதேசங்களைத் தளர்த்துக. உள்மூச்சு வாங்குக. வெளிமூச்சு விடுக............ சுவாசிக்குக.

**படிமுறை - 2 உள்ளத்தைத் தளர்த்துதல்**

- மாணவரை விழித்துப் பின்வருமாறு கூறுக.
  ''உங்களது உடல் இப்போது தளர்ந்துவிட்டது. உங்களது உடல் இதமாக இருக்கிறது. இனி உள்ளத்தையும் இதப்படுத்துவோம். இனி உள்ளத்தைத் தளர்த்துவோம். தூரத்தே கேட்கும் ஒலிகளைச் செவிமடுங்கள். சுற்றுப்புறத்தில் கேட்கும் ஒலிகளைச் செவிமடுங்கள். அருகே கேட்கும் ஒலிகளைச் செவிமடுங்கள். உங்கள் இதயத்துடிப்பைச் செவிமடுங்கள். எமது சுவாசத்தைச் செவிமடுப்போம். சினக்கும் கவலைப்படும் உள்ளத்தை விடுத்தும் நினைவுகளிலிருந்தும் நீங்குவோம். எண்ணங்களைத் தளர்த்துவோம்.

  உள்ளம் அமைதி பெறட்டும், உள்ளம் இதம் பெறட்டும், உள்ளத்தில் அமைதி நிலைக்கட்டும், உள்ளம் இவற்றை உணரட்டும், எண்ணங்கள் நல்லவையாகட்டும்!''

**படிமுறை - 3 திடசித்தம்**

- மாணவரை விழித்துப் பின்வருமாறு கூறுக. பின்வருமாறு எண்ணிப்பார்க்குமாறு பிரேரிக்க. 'எனது உள்ளத்தை என்னால் அமைதிப்படுத்த முடியும். எனது உள்ளத்தின் அமைதியை ஏனையோர் உணரத்தக்க வகையில் நான் நடந்துகொள்வேன். எனது வகுப்பிற்கு - பாடசாலைக்கு - வீட்டிற்கு நான் ஒளியாவேன். நான் ஆசிரியரின் அறிவுரைப்படி நடந்து, கல்வியில் வெற்றிபெற்றேயாகுவேன். நான் எனது குடும்பத்திற்கும் வீட்டிற்கும் நற்பண்புள்ள ஒரு நல்ல பிள்ளையாவேன். நான் நாட்டிற்கும் உலகிற்கும் பயனுள்ள ஒருவனாவேன்.'

**படிமுறை - 4 பிரார்த்தனை**

- எனது உள்ளம் அமைதியுறுவதால் கிடைக்கும் நிம்மதியை உணரட்டும்! எமது நண்பர்களின் உள்ளங்களும் அதனை உணரட்டும்!
- எனது குடும்பத்தார் அனைவரது உள்ளங்களும் அதனை உணரட்டும்! சிறிய வகுப்புகளைச் சேர்ந்த தம்பி - தங்கைகளின் உள்ளங்களும் அதனை உணரட்டும்! பாடசாலையில் உள்ள எல்லோரது உள்ளங்களும் அதனை உணரட்டும்!
- பிராணிகளும் மரஞ்செடிகொடிகளும் அதனை உணரட்டும்! அனைவரது உள்ளங்களும் அமைதி பெறட்டும்! நிம்மதி பெறட்டும்!

**படிமுறை - 5 உதிப்பு**

- எனது உள்ளம் அடக்கமாக உள்ளது. எனது உள்ளத்தால் உணரப்படும் நிம்மதியை வகுப்பு நண்பர்களுக்கும் இப்போது என்னால் பகிர முடியும். எனது அண்மை நண்பர்களுக்கும் பகிர முடியும். எனது வகுப்பிற்கும் பாடசாலைக்கும் நான் ஓர் ஒளிவிளக்காவேன். எனது குடும்பத்தாருக்கு நான் ஒரு மணி விளக்காவேன். நான் ஓர் ஒளிவிளக்காக உலகிற்கு ஒளியூட்டுவேன்.

**இனி, செயற்பாட்டைப் பின்வருமாறு நிறைவு செய்க.**

- இனி, இதமடைந்த உள்ளத்துடன் வேலை செய்வதற்காக சில தடவைகள் சுவாசியுங்கள். உள்மூச்சு வாங்கி, வெளிமூச்சை விடுங்கள்.
- உள்ளத்தை அமைதியாக வைத்து, இரண்டு நிமிட நேரத்தைக் கழிப்பதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு : 6**

**திவாகரனின் கதை**

திவாகரன் காலையில் துயிலெழுந்தான். சுற்றுமுற்றும் பார்த்தான். அம்மா எங்கே, காணவில்லையே. பாட்டியின் அறையைப் பார்த்தான். (திவாகரனின் அம்மா அவசரமான ஒரு வேலைக்காக அதிகாலையிலேயே வெளியே போனார்.) எனக்கு இடுப்பு வலிக்கிறது. எழுந்திருக்க முடியவில்லை. உங்களை ஆயத்தப்படுத்தவும் என்னால் முடியாது. நான் ரீச்சரிடம் சொல்லுகிறேன். இன்றைக்கு வீட்டில் இருங்கள்.

நீங்கள் எழுந்திருக்க வேண்டாம். பாட்டி! திவாகரன் பல்துலக்கி, முகம் கழுவி, சீருடையணிந்து, பாதணிகள் அணிந்து, தலை சீவி பாட்டியின் அறையின் அருகே வந்தான். தனியாக ஆயத்தமாகிவிட்டாயா? நல்ல பிள்ளை. ஆம் பாட்டி நான் ஆயத்தமாகிவிட்டேன்.

பிள்ளைக்கு இறைவன் துணை. கவனமாகப் போய்வாருங்கள்!

பாட்டிக்குச் சரியான கவலை. பாட்டி அம்மாவுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு நடந்தவற்றை விவரித்தார். அம்மா பெரிதும் மகிழ்ந்தார். அம்மா உடனே ஆசிரியையுடன் தொடர்புகொண்டு விவரங்களைக் கூறினார்.

காலையில் பாடசாலை ஆரம்பமாகியது. பாடசாலையைத் தொடங்குமுன்னர், ஆசிரியர் திவாகரனை அழைத்தார். திவாகரன் வகுப்பின் முன்னே நின்றுகொண்டிருந்தான். திவாகரனின் கெட்டித்தனத்தை நண்பரின் எதிரே ஆசிரியர் கூறினார். பாராட்டினார்.

இப்படியான பிள்ளைகள்தான் எதிலும் வெற்றியடைவார்கள். சரி எல்லோரும் திவாகரனுக்காக ஒரு தடவை கைதட்டுங்கள்.

- திவாகரனின் கதையைச் சுவையாகவும் ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையிலும் வகுப்பில் முன்வையுங்கள். (வெளியான ஓர் இடத்தைத் தெரிவுசெய்து கொள்க.)
- கதையைக் கூறும்போது…
    1. அம்மா, எங்கே காணவில்லையே…
    2. அம்மா அவசரமான ஒரு வேலைக்காக அதிகாலையிலேயே வெளியே போனார்.
    3. உங்களை ஆயத்தப்படுத்த என்னால் முடியாது.
    4. நான் ரீச்சரிடம் சொல்லுகின்றேன். இன்றைக்கு வீட்டில் இருங்கள்.

  போன்ற இடங்களில் கதை கூறுவதை நிறுத்தி, மாணவர் ஒவ்வொருவராகக் கதையைக் கட்டியெழுப்பச் சந்தர்ப்பமளிக்குக.

- மாணவர்கள் வெவ்வேறு கருத்துக்களைத் தெரிவித்த பின்பு, கதையைச் சரியாக முன்வைக்குக.
- மாணவர்கள் கூறுபவற்றைக் கலந்துரையாடி, தமது வேலைகளைத் தாமே செய்து கொள்வதால் கிடைக்கும் மகிழ்ச்சி, அதன் பயன்கள் ஆகியன பற்றி மாணவருடன் கலந்துரையாடுக.
- வகுப்பில் அவ்வாறாகச் செயற்படும் மாணவரைப் பாராட்டுக. ஏனையோரையும் அவ்வாறு செயற்படத் தூண்டும் வகையில் செயற்படுக.
- திவாகரனின் கதையில் தாம் விரும்பும் ஒரு சம்பவத்தை தெரிவுசெய்து சித்திரமாக வரையுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- அதற்கமைய மாணவர்கள் தமது வேலைகளைத் தாமே செய்து கொள்வதால் கிடைக்கும் மகிழ்ச்சியையும் பயன்களையும் மாணவருடன் கலந்துரையாடுக. (பல் துலக்குதல், முகம் கழுவுதல், உடை அணிதல், பாதணி அணிதல், தலை முடி சீவுதல், தமது உடைகளைத் துவைத்தல் போன்ற விடயங்களின்பால் கவனஞ் செலுத்துக.)

- தாம் வரைந்த சித்திரத்தின் கீழ், சிறிய இடத்தை மீதப்படுத்தி, ''எனது வேலையை நானே செய்துகொள்கிறேன்.'' எனும் கூற்றை எழுதுமாறு வழிப்படுத்துக.
- சித்திரங்களை வகுப்பில் காட்சிப்படுத்துக.

## செயற்பாடு : 7

- மாணவரைத் திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துக் கொள்க. (தேவையான முன்னாயத்தங்களைச் செய்த பின்னர்) பின்வரும் ''இசை நாடகத்தை'' நடிக்க வழிப்படுத்துக.

### இசை நாடகம்

மாணவர்: பொரித்த உணவுகள்
இனிப்புப் பலகாரங்கள்
வண்ண வண்ண ஐஸ் பக்கெற்
உண்ண எமக்கு ஆசை

பாட்டி: பொரித்த உணவுகள்
உண்ண வேண்டாம் பிள்ளைகளே//

மாணவர் : சரி... இனி நாம் உண்ண மாட்டேம்.

பாட்டன் : இனிப்புப் பலகாரங்கள்
உண்ண வேண்டாம் பிள்ளைகளே//

மாணவர் : சரி இனி நாம் உண்ண மாட்டோம்

ஆசிரியை : வண்ண வண்ண ஐஸ் பக்கெற்
உண்ண வேண்டாம் பிள்ளைகளே//

மாணவர் : சரி இனி நாம் உண்ண மாட்டோம்.

PHI பொதுச் சுகாதாரப் பரிசோதகர் : முருங்கைக் கீரை, அகத்தி, வல்லாரை, சாரணை
உண்ண நல்ல கீரைகள்

அனைவரும் : நல்ல சுவை நல்ல சுவை
சுகந்தரும் கீரைகள்

வைத்தியர் : வீட்டுத்தோட்ட காய்கறி
கத்தரிக்காய், பாகற்காய்,
வாழைக்காய், தாக்காளி
தவிட்டரிசிச் சோற்றுடனே
உண்ணுங்கள் பிள்ளைகளே

அனைவரும் : நல்ல சுவை நல்ல சுவை
சுகம் தரும் உணவுகள்!

ஆசிரியை : உடல் நன்கு வளருமே
சக்தியும் கிடைக்குமே
எமது வகுப்பு பிள்ளைகள்
நாடு போற்றும் பிள்ளைகள்
நாம் வெற்றி வெறுவோம்
நாம் வெற்றி பெறுவோம்.

- மேற்படி இசை நாடகத்துக்கு மேலதிகமாக, முன்மாதிரியான நற்பழக்கங்களை வெளிப் படுத்தும் வகையில் படங்கள், நாடகங்கள், கதைகளைத் தேடி வகுப்பில் முன்வைக்குமாறு மாணவர்க்கு ஆர்வமூட்டுக.
  உதாரணம்:

  **ஆசை வை!**

  பள்ளிக்கூடம் செல்வதற்கு ஆசை வை! - தம்பி
  பாடங்களைப் படிப்பதற்கு ஆசை வை!

  துள்ளி விளையாடுதற்கு ஆசை வை! - என்றும்
  தூய்மை நலம் காப்பதற்கு ஆசை வை!

  கள்ளமின்றிப் பழகுதற்கு ஆசை வை! - மிக்கக்
  கனிவுடனே பேசுதற்கு ஆசை வை!

  வெள்ளையுள்ளம் கொள்வதற்கு ஆசை வை! - வாழ்வில்
  வெற்றி பெற உழைப்பதற்கு ஆசை வை!

  அன்னை தந்தையரை மதிக்க ஆசை வை! - உனது
  ஆசான் சொன்னபடி நடக்க ஆசை வை!

  அன்பும் பண்பும் கொண்டொழுக ஆசை வை - மக்கள்
  அனைவரையும் விரும்புதற்கே ஆசை வை

  போன்ற பாடல்களை முன்வைக்கச் சந்தர்ப்பமளிக்குக.

- மாணவரது முன்வைப்புக்களைப் பாராட்டுக.

**செயற்பாடு : 8**

- மாணவரை மூவர் மூவராகக் குழுக்களாகப் பிரித்து வெவ்வேறு தலைப்புக்களில் ஆக்கங்கள் செய்ய வழிப்படுத்துக.


- நல்லவற்றைப் பழகிக்கொள்வோம். எனும் தலைப்பினை ஆக்கக்காட்சிப் பலகையை அமைத்தல் மற்றும் ஆக்கங்களைத் தொங்கவிடுவதற்காகப் பெற்றாரின் துணையைப் பெறுக.

- மாதத்துக்கு ஒரு தடவை, மாணவருடன் சேர்ந்து குறித்த ஒரு நேரத்தை ஒதுக்கி, நல்லவற்றைப் பழகிக்கொள்வோம். காட்சிப்பலகையைப் புதியவற்றைக்கொண்டு அலங்கரிக்குக.

**செயற்பாடு : 9**

- மாணவரைத் திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்க.

- தாங்கிகள் மீது பொருத்துவதற்கேற்றவாறு தயார்படுத்திய பாடசாலை, கோயில், வைத்தியசாலை, பஸ் நிலையம், நீர்க்குழாய் வாயில், நூலகம், மலசலகூடம் ஆகிய பெயர் அட்டைகளைக் கொண்டு செல்க.




- மேற்காட்டியவாறு திட்டத்தைத் தயாரித்துக்கொள்க.
- மாணவரை 5 பேர்கொண்ட குழுக்களாகப் பிரிக்குக.
- திட்டப்படத்தில் ''ஆரம்பிக்கும் இடம்'' எனக் குறிக்கப்பட்டுள்ள இடத்தில் மாணவரை நிறுத்துக. (வட்டத்தின் விட்டம் ஏறத்தாழ ஓர் 30 சென்றிமீற்றர்)
- அவ்வெல்லையைத் தாண்டாதவாறு மற்றைய மாணவர் இருக்கும் இடத்துக்குப் பந்தை உருட்டுதல் வேண்டும். பந்தைப் பெறும் மாணவனை அவ்விடத்தில் இருந்து இரண்டாம் மாணவனுக்கும் அவர் மூன்றாம் மாணவனுக்கும் அவர் நான்காம் மாணவனுக்கும் அவர் ஐந்தாம் மாணவனுக்கும் பந்தை அனுப்புதல் வேண்டும்.
- மீண்டும் ஐந்தாம் மாணவரில் ஆரம்பித்து முதலாம் மாணவர் வரை பந்தை உருட்டி அனுப்பி ஆரம்ப இடத்தக்கு அனுப்புதல் வேண்டும்.
- குழுவின் இரு புறங்களிலும் ஏறத்தாழ 30 சென்றிமீற்றர் தூரத்தில் உள்ள பொதுச் சொத்துக்களைக் காட்டும் குறியீடுகள் பாதுகாக்கப்படும் வகையில் செயற்படுதல், சட்டதிட்டங்களைச் சரியாகப் பின்பற்றுதல், துரிதமாகச்செய்து முடித்தல் ஆகியவற்றைக் கவனத்திற்கொண்டு வெற்றிபெறும் குழுவைத் தீர்மானம் செய்து கொள்ளலாம்.
- முதற்கட்டத்தில் வெற்றிபெற்ற குழுக்களுக்கு இடையே மீண்டும் விளையாட்டை நடத்தலாம்.
- போட்டித்தன்மையையும் சவாலையும் அதிகரிப்பதற்காக பொது இடங்களை வைத்திருக்கும் தூரத்தை 15 சென்றிமீற்றர் வரை குறைத்தும் விளையாட்டை நடத்தலாம். (இரண்டாம் சுற்றில் மாத்திரம்)
- விளையாட்டின் பின்னர் வகுப்பறைக்கு வந்து, கூட்டுணர்வு, பங்கேற்பு, உடல் - உள ஒருமைப்பாடு, சவால்களை வெற்றிகொள்ளல், பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல் தொடர்பாகக் காட்டும் ஆர்வம் போன்றவை வெளிக்கொணரப்படும் வகையில் கலந்துரையாடல் நடத்துக.

சமூக ஒருமைப்பாட்டுக்கென எழுதப்பட்டுள்ள கதைத்திரட்டில் அடங்கியுள்ள ''சிறந்த பரிசு, மணம் வீசும் மலர்கள்'' எனும் கதையை இக்கருப்பொருளுக்காகப் பயன்படுத்துக.

## கருப்பொருள் 2 : நாம் இலங்கையர்

வெவ்வேறு மக்கட் பிரிவினருடன் ஒத்துழைத்து வாழும் இலங்கைப் பிரசைகளாகிய எமது கடமைகளும் பொறுப்புகளும் பலவாகும். உயர்வு - தாழ்வு என்ற பேதங்கள் இன்றி வெவ்வேறு மக்கட் பிரிவினர்களது பண்பாடுகளை மதித்து அவற்றிற்குக் கௌரவமளித்துச் சகவாழ்வு வாழ்வது தொடர்பான நல்ல மனப்பாங்குகளைச் சிறுபராயம் முதலே மாணவரிடத்தே வளர்த்தல் வேண்டும். தேசியக்கொடி, தேசிய கீதம், தேசிய இலச்சினை போன்ற நாட்டின் தனித்துவத்தைச் சுட்டிக்காட்டி நிற்பவை தொடர்பாகக் கூடுதல் கவனஞ்செலுத்தி நாட்டின் பெருமையை மதிக்கும் மற்றும் நாட்டுப்பற்றுமிக்க முதிர்ச்சி பெற்ற பிரசைகளை உருவாக்கும் நோக்குடனேயே இக்கருப்பொருள் முன்வைக்கப்படுகிறது.

**தேர்ச்சிகள் :**

- இலங்கையின் பண்பாடு மற்றும் தேசிய மரபுரிமைகளின் இயல்புகளைத் துருவியாய்ந்து அவற்றைப் பாதுகாப்பதில் பங்களிப்புச் செய்வார்.
- வழக்கங்கள் தொடர்பான விளக்கத்துடன் அவற்றைப் பேணி வருவதில் பங்களிப்புச் செய்வார்.
- வெவ்வேறு மக்கட் பிரிவினரையும் அவர்களது பண்பாட்டு இயல்புகளையும் தனித்துவத்தையும் மதித்து அவற்றைப் பாதுகாப்பதில் பங்களிப்புச் செய்வார்.
- நாட்டின் சுதந்திரம் தொடர்பாக அர்ப்பணிப்புடன் தியாகங்களைச் செய்தோரை மதித்து நாட்டுப்பற்றுடன் செயற்படுவார்.
- தாம் வாழும் பிரதேசத்தில் வெவ்வேறு கருமங்களுக்காகத் துணைபுரியும் நிறுவனங்கள் பற்றிய விளக்கத்தைப் பெறுவார்.
- இலங்கையர்களின் பல்வேறு பண்பாடுகள் தொடர்பான விளக்கத்துடன் சுதேசத்துவத்திற்கு முதன்மையளித்து, வெவ்வேறு ஆக்கங்கள் செய்வார்.
- இலங்கை மக்களிடையே புழக்கத்திலுள்ள விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- தேசியப் பெருமை வெளிக்காட்டப்படும் வகையிலான அழகியல் படைப்பாக்கங்களை முன்வைப்பார்.

**கற்றற்பேறுகள் :**

- தேசியக்கொடி உருவாக்கப்பட்டுள்ள விதம் தொடர்பாகத் தகவல்களைத் தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்.
- அரச இலச்சினை மற்றும் தேசியக் குறியீடுகள் தொடர்பாக அறிவூட்டத்துடன் செயற்படுவார்.
- தமது பண்பாட்டை எடுத்துக்காட்டும் ஊர்வலங்கள், உற்சவங்கள் தொடர்பாக விசாரணை செய்வார்.
- தமது சமய உற்சவங்களையும் ஏனையோரது சமய உற்சவங்களையும் மதிக்கப் பழகிக்கொள்வார்.
- இலங்கையில் வாழும் வெவ்வேறு மக்கட் பிரிவினரை இனங்கண்டு அவர்களது பண்பாட்டு அம்சங்களை மதிப்பார்.
- இலங்கையில் வாழும் மக்கட் பிரிவினரிடையே நட்பு மனப்பாங்குகள் கட்டியெழுப்பப்படும் வகையில் செயற்படுவார்.
- பிறந்த நாட்டிற்காகத் தம்மாலானவற்றைச் செய்வார்.
- வெவ்வேறு நிறுவனங்களால் தமது பிரதேசத்தில் செய்யப்படும் சேவைகளைத் தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்.
- சமய உற்சவங்களில் பயன்படும் அலங்காரங்களை ஆக்கிக் காட்சிப்படுத்துவார்.
- தமது பிரதேசத்தில் பிரபல்யம் பெற்றுக் காணப்படும் சிறு விளையாட்டுக்களை இனங்கண்டு அவற்றில் ஈடுபடுவார்.
- ஒரு தேசம் என்ற வகையில் எமது பெருமையை எடுத்துக்கூறும் பாடல்கள், கவிதைகளை அங்க அசைவுகளுடன் முன்வைப்பார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு : 1**

- செயற்பாட்டை ஆரம்பிக்கும் தினத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்னதாகச் செய்யும் முன்னாயத்தமாகத் தேசியக்கொடி தொடர்பான தகவல்களைத் தேடி வருமாறு ஆர்வமூட்டு வதற்கேற்றவாறு பின்வரும் வினாக்களுக்கமையத் தகவல்களைத் திரட்டுமாறு மாணவரை வழிப்படுத்துக.

    * தேசியக்கொடி ஏன் எமக்கு முக்கியமானது?
    * தேசியக்கொடியிலுள்ள வெவ்வேறு குறியீடுகள் யாவை?
    * எவ்வாறான சந்தர்ப்பங்களில் தேசியக்கொடி ஏற்றப்படுகிறது?

- மாணவர்களது கருத்துக்களைப் பெற்று அவை தொடர்பாக அவர்களுடன் கலந்துரையாடுக.
- தேசியக் கொடியின் பெரிய அளவான ஒரு மாதிரியைப் பெற்று அதனை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- மாணவர் தேடிப்பெற்ற விடயங்களையும் கவனத்திற்கொண்டு தேசியக்கொடியில் அடங்கியுள்ள வெவ்வேறு குறியீடுகளைப் பற்றி வினவுக.

    * சிவப்பு நிறப் பின்னணியில் மஞ்சள் நிற வாளேந்திய சிங்க உருவம் - சிங்கள மக்களைக் குறிக்கிறது
    * செம்மஞ்சள் நிறப் பட்டி - தமிழ் மக்களைக் குறிக்கிறது
    * பச்சை நிறப் பட்டி - முஸ்லிம் மக்களைக் குறிக்கிறது
    * முழுக் கொடியையும் சுற்றிவர இடப்பட்டிருக்கும் மஞ்சள் நிறப் பட்டி - இனங்களுக்கு இடையிலான ஒற்றுமையையும் கொடியின் முழுமைப்பாட்டையும் குறிக்கின்றது.
    * கொடியின் உள்ளேயுள்ள நான்கு அரச இலைகள் - இரக்கம், காருண்யம், திருப்தி, பற்றின்மை ஆகிய நான்கு பண்புகளைக் குறிக்கின்றன.

- மாணவர்கள் முன்வைத்த விடயங்களையும் கவனத்திற்கொண்டு மேற்படி விடயங்களை வலியுறுத்துக.
- பின்னர் மாணவரைத் திறந்தவெளியான ஓர் இடத்திற்கு அழைத்துச்செல்க.
- தேசியக்கொடியைப் பொருத்தமான ஓர் இடத்தில் (ஏற்றக்கூடியவாறு) வைத்திருக்குக.
- வகுப்பு மாணவர் ஒருவர் அல்லது ஆசிரியை அத்தேசியக்கொடியை ஏற்றுக.
- பின்னர் தேசிய கீதத்தைப் பாடச் சந்தர்ப்பமளிக்குக.
  தேசிய கீதத்தைப் பாடும்போது நிற்கவேண்டிய மெய்ந்நிலை, பாடி முடித்ததும் தலைகுனிந்து மரியாதை செலுத்துதல் போன்ற தரம் 3 இல் வலியுறுத்தப்பட்ட விடயங்களைச் சரியாகச் செய்கின்றனரா என்பதைக் கவனிக்குக. அவ்வாறு செய்வதன் முக்கியத்துவம் குறித்து மாணவருக்கு விளக்குக.
- இவற்றைச் சரியாகச் செய்யத்தவறிய மாணவர்கள் தொடர்பாகக் கவனஞ்செலுத்துக.
- தேசிய கீதத்தைப் பாடநூலில் அச்சிடப்பட்டுள்ளவாறாக சரியான சொற்களுடன், சரியான உச்சரிப்புடன், அதன் பொருளை விளங்கி, நாட்டுப்பற்றுடனும் விளக்கத்துடனும் மீண்டும் பாடுமாறு வழிப்படுத்துக.
- இவ்வாறாக மரியாதையாக ஒழுக்கம்பேணி, தேசியக்கொடியை ஏற்றுதல், தேசிய கீதத்தைப் பாடுதல் தொடர்பாக மாணவருடன் வினாக்களை வினவி உறுதிப்படுத்திக்கொள்க.

**செயற்பாடு : 2**

**படிமுறை - 1**

- தேசிய இலச்சினையை எவ்வாறான இடங்களில் காணலாம் என மாணவரிடம் வினவி, மாணவர் பயன்படுத்தும் பாடநூல்களில் தேசிய இலச்சினை காணப்படுகின்றனவா எனப் பரிசீலித்துப் பார்க்கச் சந்தர்ப்பமளிக்குக.
- பின்னர் தேசிய இலச்சினை பொறிக்கப்பட்டுள்ள இடங்கள், கட்டடங்கள், ஆவணங்கள் சிலவற்றைப் பார்ப்பதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக. (பாடசாலை, அலுவலகம், ஒளிப்படங்கள், செய்தித்தாள்கள் போன்றவற்றின் துணையுடன்)

* அரச இலச்சினையின் பகுதிகள் நன்கு புலனாகுமாறு உருப்பெருக்கிய ஒரு படத்தை வகுப்பில் காட்சிப்படுத்துக.




* பின்னர், அரச இலச்சினை தொடர்பான சரியான தகவல்களை மாணவருடன் கலந்துரையாடுக.

***உதாரணம் :***
"தன்னிறைவான ஒரு நாட்டில், சூரியனும் சந்திரனும் இருக்கும் காலமெல்லாம் அறத்தைப் பாதுகாத்தவாறு மக்கள் யாவரும் ஓங்கட்டும்" எனும் ஒட்டுமொத்தக் கருத்து எடுத்துக்காட்டப்படுகின்றமை

அதற்கமைய
* நிறைகுடத்தினால் - சௌபாக்கியமும்
* நெற்கதிரினால் - தன்னிறைவும் செழிப்பும்
* மத்தியில் இருக்கும் வாளேந்திய சிங்கத்தினால் - நாடும் கட்டுப்பாடான மக்களும்
* தர்ம சக்கரத்தினால் - தார்மீகமும்
* சூரியன், சந்திரன் - நிலைத்திருப்பும்

காட்டப்படுகின்றமையை விளக்குக.

* அரச இலச்சினை, தேசியக்கொடி, தேசிய கீதம் ஆகியவற்றிற்கு மேலாகப் பல்வேறு நாடுகள் தமது நாட்டின் பெருமையையும் தனித்துவத்தையும் காட்டுவதற்காக வெவ்வேறு குறியீடுகளைப் பயன்படுத்துகின்றன என்பதையும் இலங்கையிலும் அவ்வாறான குறியீடுகள் பயன்பாட்டில் உள்ளன என்பதையும் விளக்குக.
* அவ்வாறான குறியீடுகள் தொடர்பான தகவல்களைத் திரட்டிவருவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.

***உதாரணம் :***
* இலங்கையின் தேசியப் பறவை - காட்டுக்கோழி
* இலங்கையின் தேசிய மலர் - நீலோற்பலம் (Water Lily)
* இலங்கையின் தேசிய விளையாட்டு - கரப்பந்து (வொலிபோல்)
* இலங்கையின் தேசிய மரம் - நாகமரம்









(இக்குறியீடுகள் அடங்கிய ஒரு படத்தொகுதியை மாணவர்கள் பார்க்கத்தக்கவாறாக வகுப்பில் காட்சிப்படுத்துக.)

**செயற்பாடு : 3**

- மாணவரைத் திறந்தவெளியான ஓர் இடத்திற்கு அழைத்துச்செல்க.
- தாம் பார்த்த ஊர்வலங்கள் தொடர்பான தகவல்களை மாணவரிடம் வினவுக.
  - ∗ ஊர்வலம் செல்வதைக் கண்ட இடம்
  - ∗ ஊர்வலம் நடத்தப்பட்டதற்கான காரணம்
  - ∗ ஊர்வலத்தின் சிறப்பம்சங்கள்
  - ∗ ஊர்வலத்தைப் பார்த்த விதம் .... போன்றவை
- மாணவர் தரும் பதில்களைப் பாராட்டி, ஊர்வலம் தொடர்பாகப் பின்வரும் விடயங்களின் கீழ்க் கலந்துரையாடுக.
  - ∗ நடத்துவதற்கான காரணம்
  - ∗ நடத்தப்படும் காலப்பகுதி
  - ∗ இடம்பெறும் பண்பாட்டு அம்சங்களின் முக்கியத்துவம் (ஆடல் - பாடல்கள், அலங்கரிப்புகள், வாத்தியக் கருவிகள்,, ஆடையணிகள், .... போன்றவை)
- இதற்காக, படங்கள், காணொளிக் காட்சிகள் போன்றவற்றையும் காட்சிப்படுத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்க.
- ஒவ்வோர் இனத்திற்கும் தமக்கேயுரிய பண்பாட்டு அம்சங்கள் உள்ளன என்பதையும் அவை உரிய சமய எண்ணக்கருக்களுடன் தொடர்புடையவை என்பதையும் மாணவருக்கு எடுத்துக்காட்டுக.
- வெவ்வேறு இனங்களுக்கிடையேயும் சமயங்களுக்கிடையேயும் அவ்வாறான தனித்துவத்தை எடுத்துக்காட்டும் இயல்புகள் காணப்படுகின்றமையை விளக்குக.

***உதாரணம் :***

- ∗ வேல் ஊர்வலம்
- ∗ கதிர்காம ஊர்வலம்
- ∗ மீலாத் விழா
- ∗ கத்தோலிக்க / கிறிஸ்தவ தேவாலய ஊர்வலங்கள்
- ∗ கரோல் பாடல் நிகழ்வுகள்
- ∗ தலதா ஊர்வலம்
- ∗ மிஹிந்து ஊர்வலம்

- இலங்கையில் காணப்படும் பல்வேறு பண்பாட்டு அம்சங்கள் தொடர்பாக அறிவூட்டம் பெறும்வகையில் மாணவர்க்கு ஆர்வமூட்டுக.
- நன்கு ஒழுங்குசெய்து, இயன்றளவுக்குக் குறைந்த செலவுடன் பாடசாலை வளவில் ஊர்வலமொன்றை நடத்த ஆவன செய்க.
- தத்தமது திறமைக்கேற்ப, மாணவர் ஒவ்வொருவரும் ஊர்வலத்தில் பங்கேற்கச் சந்தர்ப்பமளிக்குக.
- மாணவரது திறமைகளைப் பாராட்டுக.
- பின்னர், மாணவர் பார்த்துள்ள பண்பாட்டு அம்சங்களைச் சித்திரமாக வரையச் சந்தர்ப்பமளிக்குக. மாணவர் சித்திர ஆக்கங்களைக் காட்சிப்படுத்துக. பாராட்டுக.

செயற்பாடு : 4

**படிமுறை - 1**

- ஆளுக்கு ஒன்று வீதம் அல்லது ஒரு குழுவுக்கு ஒன்று வீதம் சிறிய நாட்காட்டிகளைப் பெற மாணவரை வழிப்படுத்துக. இல்லையேல் குழுவுக்கு ஒன்று வீதம் வழங்குக.
- நாட்காட்டியைப் பயன்படுத்தி, ஆண்டில் விசேட சமய உற்சவங்கள் நடைபெறும் திகதிகளைக் கண்டறிந்து அட்டவணையைப் பூர்த்தி செய்ய வழிப்படுத்துக.

| உற்சவம் | சமயம் | திகதி |
|---|---|---|
| ......................<br>......................<br>...................... | ...........................<br>...........................<br>........................... | .......................<br>.......................<br>....................... |

- அதற்கமைய, பொதுவாக ஒவ்வொரு சமயத்திற்கும் அதற்கேயுரிய சிறப்பான நம்பிக்கைகள், வழிபாடுகள், வழக்காறுகள், அலங்கரிப்புகள், உற்சவங்கள் உள்ளன.
- அனைவரும் இலங்கையர் என்ற வகையில் சகல சமயங்களையும் மதித்தல் வேண்டும்.
- எவரும் எந்தவொரு சமயத்தையும் விமர்சிக்கலாகாது.
- இயலுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஏனைய இனத்தவருடனும் ஏனைய சமயத்தவருடனும் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும்.
- ஒவ்வொரு சமயமும் தமது நாட்டின் ஒருமைப்பாட்டிற்குப் பாதகம் ஏற்படாதவாறு செயற்படத்தக்க விதம் போன்ற விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் கலந்துரையாடுக.
- வெவ்வேறு சமயங்கள் சார்ந்த அலங்கரிப்புகளைச் செய்வதற்குத் தேவையான விபரங்களையும் பொருள்களையும் கொண்டுவருமாறு மாணவர்க்கு நேரகாலத்துடன் அறிவிக்குக.

***உதாரணம் :***

∗ கோலம் போடுவதற்கு, வெசாக் கூடு செய்வதற்கு, நத்தார் மாட்டுத்தொழுவம் அமைப்பதற்கு,

- மாணவரை நான்கு குழுக்களாகப் பிரிக்குக.
- மாணவர் கொண்டுவந்த தகவல்களையும் அலங்கரிப்புச் செய்வதற்கான பொருள்களையும் குழுக்களுக்குப் பகிர்ந்தளித்து ஆக்கபூர்வமாக, தகவல்களிலுள்ள அலங்கார ஆக்கங்களைச் செய்து முன்வைப்பதற்குச் சந்தர்ப்பமளிக்குக.
- வெசாக் பண்டிகைக்காகக் கத்தோலிக்க / கிறிஸ்தவ பக்தர்கள் செயற்பட்ட விதம், நத்தார் பண்டிகையில் ஏனைய சமயத்தவர் பங்குபற்றிய சந்தர்ப்பங்கள் மற்றும் ஒவ்வொரு சமயத்தால் தத்தமது சமய நம்பிக்கைகளின் அடிப்படையில் செயற்படும் சந்தர்ப்பங்களை விளக்குக.

***உதாரணம் :***

∗ சிவனொளிபாதமலை யாத்திரை

* சகல பக்தர்களும் ஈடுபடும் கதிர்காம யாத்திரை
* சீலம் காப்போருக்கு அன்னதானம் வழங்குதல்
* புத்தாண்டுப் பலகார வகைகளை ஏனைய சமயத்தவர்களுக்கும் பகிர்ந்து பரிமாறுதல்

**செயற்பாடு : 5**

- மாணவரைத் திறந்தவெளியான ஓர் இடத்திற்கு அழைத்துச்செல்க.
- இலங்கையில் வாழும் வெவ்வேறு மக்கட் பிரிவினர் தொடர்பாகக் கலந்துரையாடுக.
- தத்தமது இனம் தவிர, தாம் அறிந்துவைத்துள்ள மற்றுமோர் இனம் தொடர்பாக மாணவரிடம் வினவுக.
- மாணவர்கள் கூறும் விடைகளின்படி அதற்கான காரணங்களை வினவி அறிக.
- பின்னர் மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரிக்குக.
- ஒவ்வொரு குழுவிற்கும் பிறிஸ்டல் அட்டையையும் பெல்ற் / மாக்கர் பேனையும் வழங்குக.
- ஒவ்வொரு குழுவும் தாம் அறிந்துள்ள தகவல்களின்படி, வெவ்வேறு இன மக்களின்

    * உணவுகள், பானங்கள்
    * ஆடையணிகள்
    * பண்பாடு மற்றும் சமய உற்சவங்கள்
    * பிற விடயங்கள் (தமது வெவ்வேறு இன நண்பர்களின் பெயர்கள், .... போன்ற)

  போன்றவற்றை அட்டவணைப்படுத்தி விவரிப்பதற்குச் சந்தர்ப்பமளிக்குக.

- குழுவில் உள்ள மாணவர்கள் அறிந்திராத, எனினும் ஏனைய மாணவர்கள் / ஆசிரியர் அறிந்துவைத்துள்ள வேறு தகவல்கள் உள்ளனவாயின் அவற்றையும் அட்டவணையில் குறிப்பிடுக.
- சகல இன மக்களும் ஒற்றுமையாக இலங்கையர்களாகச் செயற்பட வேண்டும் என்பதை விளக்கி, அக்கருத்தைத் தரும் பாடலொன்றைப் பாடி - ஆடச் சந்தர்ப்பமளிக்குக.
  உதாரணம்: நாங்களெல்லாம் இந்நாட்டின் மக்களன்றோ
  வாதமில்லை பேதமில்லை ஒற்றுமையாக வாழ்ந்திடுவோம்.

**செயற்பாடு : 6**

- எமது நாடு தொடர்பாக மாணவர்கள் அறிந்துவைத்துள்ள விடயங்களைக் கலந்துரையாடுக.
- மாணவர்களது கருத்துக்களைக் கவனத்திற்கொண்டு,

    * நாட்டின்மீது அன்பு செலுத்தக்கூடிய வழிகள்
    * நாட்டிற்குச் சேவை செய்யக்கூடிய வழிகள்
    * தாய்நாட்டை மதிக்கத்தக்க வழிகள்

  பற்றிய விடயங்களை வினவுக.

- நேர்மையான, பணிவான, நம்பகமான ஒரு மாணவனாக / பிரசையாகச் செயற்படுவதால் தாமும் தமது குடும்பமும் பாடசாலையும் நாடும் பெருமைப்படத்தக்க விதம் பற்றி மாணவரிடம் வினவுக, கலந்துரையாடுக, விளக்கமளிக்குக.
- அதற்கமைய நாம் எப்போதும் நமக்கும் ஏனையோருக்கும் இடைஞ்சலோ, தடங்கல்களோ, அழுத்தங்களோ ஏற்படாதவாறு செயற்படவேண்டுமெனத் திடசங்கற்பம் பூணுதல் வேண்டும் என அறிவுறுத்துக.
- 1815 இல் இலங்கை பிரித்தானியர்களால் முழுமையாகக் கைப்பற்றப்பட்ட பின்னர் நாட்டை அவர்களது பிடியிலிருந்து விடுவிப்பதற்காக அரும்பணிகள் ஆற்றிய, தியாகங்கள் செய்த, வீரதீரம் மிக்க தலைவர்கள் இன, மத பேதங்களின்றிச் செயற்பட்ட விதம், தியாகங்கள் செய்த விதம் ஆகியன தொடர்பான தகவல்களைத் தேடிப்பெற்று வருமாறும் அவை தொடர்பான விபரங்களை வகுப்பில் முன்வைக்குமாறும் அறிவுறுத்துக.
- பிரதேசத்தில் வாழுகின்ற நாட்டிற்கு நற்பெயரை ஈட்டித்தந்துள்ள ஆட்களை அழைத்து அவர்களுடன் கலந்துரையாடுக. நாடு பற்றிய உணர்வுடன் செயற்பட்ட விதம் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுமாறு அவர்களை வழிப்படுத்துக.

- மாணவருக்கு மேற்படி ஒவ்வோர் அம்சத்திலிருந்தும் தெரிவு செய்த பாத்திரங்களை வகிபாகமேற்று நடித்துக்காட்டச் சந்தர்ப்பமளிக்குக.
- அவர்கள் வெவ்வேறு துறைகளில் கல்வி கற்று, நாட்டிற்குச் சேவையாற்றுவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட விதம், ஒரு தேசம் என்ற வகையில் ஒற்றுமையாக முன்னேறிச் செல்வதற்காகச் செயற்பட்ட விதம் போன்றவற்றை வகிபாகமேற்று நடித்துக்காட்டச் சந்தர்ப்பமளிக்குக.
- மாணவரது முன்வைப்புகளைப் பாராட்டுக.

**செயற்பாடு : 7**

- தமது பிரதேசத்தில் உள்ள வெவ்வேறு நிறுவனங்களை அந்நிறுவனங்களால் ஆற்றப்படும் சேவைகள் பற்றிய தகவல்களை வளர்ந்தோரிடம் கேட்டு அறிந்துவருமாறு நேரகாலத்துடன் மாணவர்க்கு அறிவூட்டம் செய்க.
- மாணவர் கொண்டுவந்த தகவல்களையும் கவனத்திற்கொண்டு பின்வருமாறான அட்டவணையைத் தயாரிக்குக.

**உதாரணம் :**

| அரச நிறுவனங்கள் | தனியார் நிறுவனங்கள் |
|---|---|
| பிரதேச செயலகம்<br>............................<br>............................ | தனியார் வங்கி<br>சிறப்பு அங்காடி<br>......................... |

- அந்நிறுவனங்களால் ஆற்றப்படும் சேவைகள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுக.
- அரச நிறுவனமொன்றின் பிரதிநிதி மற்றும் அரசுசாரா நிறுவனமொன்றின் உயர் அதிகாரி ஒருவரை அழைத்து தமது நிறுவனத்தினால் ஆற்றப்படும் சேவைகள் மற்றும் பொதுசன சேவைகள் குறித்து மாணவர்க்கு அறிவூட்டம் செய்வதற்கான இரண்டு நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்து நடத்துக.
- அவர்களுடன் நட்புறவுடன் உரையாடுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு நிறுவனத்தினாலும் தமது பிரதேசங்களில் செய்யப்படும் சேவைகள் பற்றி நாம் அறிந்துகொள்வது அவசியம் என்பதையும் அதற்காக அப்பிரதேசத்தில் வாழும் மக்கள் என்ற வகையில் நாம் விளக்கத்துடன் செயற்பட வேண்டும் என்பதையும் அவர்கள் செய்யும் சேவைகளை எப்போதும் பாராட்ட / மதிக்க வேண்டும் என்பதையும் மாணவர்க்கு எடுத்துக்காட்டுக.

**செயற்பாடு : 8**

- அனைவரும் கைகோர்த்தவாறு வட்டமாக நிற்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- பின்னர் கைகளை விடுவித்து, ஒரு திசையில் வட்டமாக நடந்துசெல்லுமாறு அறிவுறுத்துக.
- வட்டத்தின் நடுவே ஒரு சிறிய வட்டம் வரைந்து அதனுள் நின்றுகொள்ளுமாறு ஒரு மாணவனுக்குக் கூறுக.
- வட்டத்தின் நடுவில் உள்ள மாணவனை "பருந்து" எனப் பெயரிடுக.
  பின்னர் பருந்து போன்று பறக்க வழிப்படுத்துக.
- பின்வருமாறு கூறுமாறு வட்டத்தில் நிற்கும் மாணவர்க்கு அறிவுறுத்துக.

  பருந்து மாமி பறந்து வந்து மான் குட்டி பிடித்தாள்
  பருந்து மாமி பறந்து வந்து எலிக்குஞ்சு பிடித்தாள்
  பருந்து மாமி பறந்து வந்து முயற்குட்டி பிடித்தாள்
  ஆனாலும் என்னைப் பிடிக்க முடியாது - முடியாது.

- எனக் கூறியவுடன் நடந்துசெல்லும் மாணவர்களைத் துரத்திச்சென்று ஒருவரைப் பிடித்தல் வேண்டும்.

- பின்னர் மீண்டும் விளையாட்டு ஆரம்பமாகும்.
- தேவையெனின், எல்லைக் கோடுகளிரண்டினை அடையாளமிட்டு, அக்கோடுகளுக்கிடையே ஓடிக்கொண்டே அடைய முன்னர் பிடிக்கத்தக்கவாறும் விளையாட்டை மாற்றி அமைத்துக் கொள்ளலாம்.
- அவ்வாறு கோட்டைத் தாண்ட முன்னர் பிடிக்க முடியாது போனதெனின் பருந்தாகச் செயற்பட்ட அதே மாணவன் மீண்டும் பருந்தாகச் செயற்பட வேண்டும். இல்லையேல் பிடிபடுபவர் பருந்தாக மாறி விளையாட்டைத் தொடருதல் வேண்டும்.
- இவ்வாறாக விளையாட்டைத் தொடர்ந்து நடத்தலாம்.

**செயற்பாடு : 9**

- ஒரே தேசம் என்ற வகையில் எமது பெருமையை எடுத்துக்கூறும் பாடல்கள், கவிதைகளைத் திரட்டுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- மாணவர் கொண்டுவந்த படங்கள், கவிதைகளுள் தெரிவு செய்த சிலவற்றின் கருத்தையும் அதன் பெறுமானத்தையும் பற்றிக் கலந்துரையாடுக.
- மாணவரைச் சில குழுக்களாகப் பிரிக்குக.
- வகுப்பிலுள்ள புத்தளிப்பு வாத்தியக் கருவிகள் அல்லது வேறு வாத்தியக் கருவிகளை இசைக்கும் திறமையுள்ள மாணவர்க்கு அவற்றை இசைக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- தெரிவு செய்த பாடலின் பொருள் விளங்கத்தக்கவாறாகவும் நாட்டுப்பற்றுடனும் கருத்து வெளிப்பாட்டு அங்க அசைவுகளுடனும் பாடலை / கவிதையை வகுப்பில் முன்வைக்கச் சந்தர்ப்பமளிக்குக்

***உதாரணம்*** *:*

**தேசப்பற்றுப் பாடல்கள்**

மகாவலி பாய்வதும் இந்நாடே
மாணிக்கம் விளைவதும் இந்நாடே
பாவலர் இசைப்பதும் இந்நாடே
பாவளம் நிறைந்ததும் இந்நாடே

செந்தமிழ் வாழ்வதும் இந்நாடே
சிங்களம் வாழ்வதும் இந்நாடே
ஆழ்கடல் சூழ்ந்ததும் இந்நாடே
அகிம்சை வாழ்வதும் இந்நாடே

மலைகள் உயர்ந்ததும் இந்நாடே
வயல்கள் நிறைந்ததும் இந்நாடே
தேயிலை வளர்வதும் இந்நாடே
தெங்குகள் நிமிர்வதும் இந்நாடே

- நல்லை அமிழ்தன்

- மாணவரது முன்வைப்புகளைப் பாராட்டுக.

## கருப்பொருள் 3 : மரஞ்செடிகொடிகள்

முற்காலத்தில் எமது முன்னோருக்கும் அவர்களது சூழலிலிருந்த மரஞ்செடிகொடிகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு காணப்பட்டது. சிறிது சிறிதாக இத்தொடர்பு குறைவடைந்தமை குறித்துக் கவலையடைந்து விடுவது மாத்திரம் போதுமானதன்று. அவ்வாறான நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள எமது இளஞ் சந்ததியினரை வழிப்படுத்துவது எமது பொறுப்பாகும்.

மரஞ்செடிகொடிகள் வளர்வதற்குத் தேவையான சூழல் காரணிகள் பற்றி இக்கருப்பொருளில் விஞ்ஞானபூர்வமாக நோக்கப்படுவதோடு, எமது சூழலில் காணப்படும் பெறுமதிமிக்க மரஞ்செடிகொடிகளை இனங்காண்பதற்கும் அவற்றைப் பாதுகாப்பதற்கும் மேலும் வளர்ப்பதற்கும் வழிப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. அதுமட்டுமன்றி ஔடதப் பெறுமானமுள்ள மரஞ்செடிகொடிகளைக் கொண்ட சுகவாழ்வுக்கேற்ற ஒரு சூழலை உருவாக்குவதில் பங்களிப்புச் செய்யவும் வழிப்படுத்தப்படுகின்றது. தமக்கும் ஏனையோருக்கும் சுகமாக வாழ்வதற்காகத் தாமே வளர்த்துப் பராமரிக்கும் சூழலை உருவாக்குவதற்கான பரிச்சயத்தை ஏற்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**தேர்ச்சிகள் :**

- அண்மைச் சூழலில் மரஞ்செடிகொடிகளினது இயல்புகளையும் அவை வளரும் விதத்தையும் இனங்கண்டு அறிக்கைப்படுத்துவார்.
- தாவரங்களுக்கிடையே காணப்படும் குறிப்பான வேறுபாடுகளைத் தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்.
- தாவரங்களுடன் மனிதரும் பிராணிகளும் காட்டும் தொடர்புகளைக் கற்றாய்ந்து அறிக்கைப்படுத்துவார்.
- மரஞ்செடிகொடிகளின் பெறுமானத்தை மதித்து அவற்றைப் பாதுகாப்பதற்காகச் செயற்படுவார்.
- சூழலிலிருந்து பெறக்கூடியவற்றைப் பயன்படுத்தி வெவ்வேறு ஆக்கங்கள் செய்வார்.
- மரஞ்செடிகொடிகள் சார்ந்த நெகிழ்தன்மை வளர்ச்சிக்குத் துணையாகும் உடலியக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- மரஞ்செடிகொடிகளுக்கு இடையிலான இடைத்தொடர்புகளைக் காட்டும் ஆடல் - பாடல்கள், நாடகங்களை முன்வைப்பார்.

**கற்றற்பேறுகள் :**

- பூக்களின் இயல்புகளை, குறிப்பாக / திட்டவட்டமாக அவதானித்து அறிக்கைப்படுத்துவார்.
- பூக்களில் நிகழும் மாற்றங்களை அவதானித்து எளிமையான பரிசோதனைகள் நடத்துவார்.
- பூக்கள் பூக்கும் காலத்திற்கமைய தாவரங்களைக் கூட்டங்களாக்குவார்.
- தாவரங்களுக்கும் விலங்குகளுக்குமிடையிலான சில தொடர்புகளை அறிக்கைப்படுத்துவார்.
- தாவரப் பகுதிகள் மூலம் எமக்குக் கிடைக்கும் பயன்களைக் கூறுவார்.
- தாவரப் பகுதிகளைக் கொண்டு ஆக்கங்கள் செய்வார்.
- தாவரங்கள் சார்ந்து அமைத்த விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- மரஞ்செடிகொடிகள் பற்றிக் கூறும் பாடல்கள், கவிதைகளைச் சந்த அசைவுகளுடன் பாடுவார். / முன்வைப்பார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு : 1**

- கருப்பொருளை ஆரம்பிப்பதற்கு சில நாட்களுக்கு முன்னர் தொடக்கம் பாடசாலைத் தோட்டத்திலும் வீட்டுத் தோட்டத்திலுமுள்ள பூப்பூக்கும் தாவரங்களை அவதானிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.

- அவ்வாறு அவதானித்த தாவரங்கள் குறித்துக் கலந்துரையாடுக.
- அத்தாவரங்களுள் சிலவற்றில் கால வேறுபாடுகளின்றிப் பூப்பூக்கின்றமையையும் சில தாவரங்களில் வருடத்தின் ஒரு குறித்த காலத்தில் மாத்திரம் பூப்பூக்கின்றமையையும் எடுத்துக்காட்டுக.
- அவ்வாறாக ஒரு குறித்த காலத்தில் மாத்திரம் பூப்பூக்கும் தாவரங்கள் பற்றிய தகவல்களைச் சேகரிக்குமாறு வழிப்படுத்துக. தமது பிரதேசத்தில் பொதுவாக வளர்க்கப்படும் பழ வகைத் தாவரங்களில் பூப்பூக்கும் காலப்பகுதிகள் தொடர்பாகவும் பிரதேசத்திற்கமைய வேம்பு, தேக்கு, இறப்பர் போன்ற தாவரங்கள் தொடர்பாகவும் முள்முருக்கு, வாகை, திருக்கொன்றை போன்ற தாவரங்கள் தொடர்பாகவும் கவனஞ்செலுத்துக.

| தாவரம் | பூப்பூக்கும் காலம் |
|---|---|
| ....................... | .............................. |
| ....................... | .............................. |
| ....................... | .............................. |

- பூப்பூக்கும் காலம் பற்றிக் கூறும் பாடல்கள் / கவிதைகளைச் சந்தத்திற்கு இசைவாக, அங்க - அசைவுகளுடன் பாடுமாறு வழிப்படுத்தி, மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளிக்குக.

  உதாரணம் : **பூப்பூக்கும் மாதம்**

  - தை மாதம் பிறந்தது
    புதிய ஆண்டு மலர்ந்தது
  - மாசி மாதம் பிறந்தது
    மா மரம் பூத்தது
  - பங்குனி மாதம் பிறந்தது
    பாலை வீரை பூத்தது
  - சித்திரை மாதம் பிறந்தது
    முருங்கை வேம்பு பூத்தது
  - வைகாசி மாதம் பிறந்தது
    வகைவகை ஓக்கிட் பூத்தது
  - ஆனி மாதம் பிறந்தது
    வாகை விளா பூத்தது
  - ஆடி மாதம் பிறந்தது
    நாவல் நன்றே பூத்தது
  - ஆவணி மாதம் பிறந்தது
    இலுப்பை கொன்றை பூத்தது
  - புரட்டாசி மாதம் பிறந்தது
    பிறைப்பூ பூத்தது
  - ஐப்பசி மாதம் பிறந்தது
    அன்னமுன்னா பூத்தது
  - கார்த்திகை மாதம் பிறந்தது
    கார்த்திகைப் பூ பூத்தது
  - மார்கழி மாதம் பிறந்தது
    தாமரைக் குளம் பூத்தது

- அப்பாடல்களில் கூறப்படும் தாவரங்களின் பூக்களை அவதானிக்கச் சந்தர்ப்பமளிக்குக. (வசதி உண்டாயின்)
- கால வேறுபாடின்றிப் பூப்பூக்கும் தாவரங்கள் தொடர்பாகத் தேடியறியுமாறு மாணவரை வழிப்படுத்துக.

    ***உதாரணம்*** : தென்னை, வாழை, செவ்வரத்தை

- மாணவரது கருத்துக்களை முன்வைக்கச் சந்தர்ப்பமளிக்குக.


செயற்பாடு : 2

- மாணவர் ஒவ்வொருவருக்கும் யாதேனும் ஒரு வகையைச் சேர்ந்த இரண்டு பூக்களை எடுத்துவருமாறு முந்திய தினம் அறிவிக்குக.
  உதாரணமாக செவ்வரத்தம் பூ, நாகமரப் பூ, நாகலிங்கப் பூ, திருக்கொன்றை போன்ற தமது பிரதேசத்தில் பெறக்கூடிய மற்றும் பகுதிகளைத் தெளிவாக இனங்காணக்கூடிய பூ வகைகளின் பெயர்களை மாணவர்களுக்கு வழங்குக.
- பூக்களைச் சேகரிக்கும்போது பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ்செலுத்துமாறு மாணவர்களிடம் கூறுக.

    * தாவரத்தின் பெயர்
    * பூ தோன்றியிருந்த இடம் (தண்டில் / கிளை உச்சியில் / கிளையின் நடுப்பகுதியில் / சூரிய ஒளி நன்கு கிடைக்கும் கிளைகளில் / நிழலான இடங்களிலுள்ள கிளைகளில்)

- மாணவர்கள் பூக்களைக் கொண்டுவந்த பின்னர், அவை பற்றிய தகவல்களை மாணவரிடம் வினவுக.
- செயற்பாடு முடிவடையும் வரையில் ஒரு வகையைச் சேர்ந்த ஒரு பூவைக் கவனமாகப் பாதுகாப்பாக வைத்திருக்குமாறு கூறுக.
- அவ்வகையைச் சேர்ந்த மற்றைய பூவைப் படிப்படியாகப் பகுதிகளாக வேறாக்கி, பூவின் பெயர் எழுதப்பட்ட ஒரு தாளின்மீது வெவ்வேறாக வைக்குமாறு அறிவுறுத்துக.

    உதாரணம் : இதழ்கள், கேசரங்கள், பூக்காம்பு போன்ற பகுதி





- குழுவில் ஏனைய மாணவர்கள் கொண்டுவந்துள்ள பூக்களின் பகுதிகளுடன் தமது பூவின் பகுதிகளை ஒப்பிட்டு அவதானிக்குமாறு வழிப்படுத்துக.

    * பூ இதழ்களின் வடிவம் சமனானதா?
    * பூ இதழ்களின் நிறம் சமனானதா / நிறங்கள் யாவை?

* ஒரு பூவில் எத்தனை இதழ்கள் உள்ளன?
* எந்தெந்தப் பூக்களில் இதழ்களின் தொகை சமமாக உள்ளன?
* எல்லாப் பூக்களிலும் கேசரங்கள் உள்ளனவா? அவை ஒத்த வடிவமுடையனவா? (கைவில்லையைப் பயன்படுத்தி அவதானிக்க வழிப்படுத்துக)

- அவதானித்த விடயங்களின்படி, மாணவர் கொண்டுவந்த பூக்களின் பகுதிகளை வெவ்வேறாக வரைந்து, பெயரிட வழிப்படுத்துக.
- பகுதிகளை வேறாக்கி அவதானித்த பூவையும் பாதுகாப்பாக வைத்துள்ள அதே வகையைச் சேர்ந்த மற்றைய பூவையும் ஒப்பிட்டுப் பார்க்குமாறு மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளிக்குக.
- அதற்கமையத் தேவையின்றிப் பூக்களைப் பறித்தல், பகுதிகளாகப் பிரித்தல் போன்றவை காரணமாகச் சூழலின் அழகு கெடும் என்பதையும் செடியில் பூத்திருக்கும் நிலையிலேயே பூக்கள் பெரிதும் அழகாகக் காட்சியளிக்கும் என்பதையும் எடுத்துக்காட்டுக.

**செயற்பாடு : 3**

- காசித்தும்பை போன்ற ஒரு தாவர வகையின் இரண்டு தாவரங்களை வேர்கள் அறாதவாறு கவனமாகப் பிடிங்கியெடுக்க. (வெண்ணிறப் பூக்கள் பூக்கும் தாவரங்கள் பெரிதும் பொருத்தமானவை)
- அவற்றுள் ஒரு தாவரத்தை நிறமூட்டிய நீர்ப் பாத்திரமொன்றினுள்ளும் மற்றைய தாவரத்தை தெளிவான நீருள்ள பாத்திரமொன்றினுள்ளும் இட்டு (வேர்ப்பகுதி மாத்திரம் அமிழுமாறு) நான்கு நாட்கள் வரை வைத்துக்கொள்க.
- என்ன நிகழுமென எதிர்வுகூறுமாறு மாணவரை வழிப்படுத்திச் சந்தர்ப்பமளிக்குக.
- மாணவர் தெளிவாகப் பார்க்கக்கூடியவாறு ஓர் இடத்தில் இரண்டு பாத்திரங்களையும் வைத்து நிகழுபவற்றை அவதானித்துக் கருத்துத் தெரிவிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- பூக்கள் எவ்வாறு நிறத்தைப் பெற்றன என்பது குறித்து மாணவருடன் கலந்துரையாடுக.

**செயற்பாடு : 4**

- காய் தோன்றும்போது பூவில் ஏற்படும் மாற்றங்களை அவதானிப்பதற்காக வெண்டி, பூசணி, பயற்றை, மிளகாய் போன்ற காய்க்கும் தாவரங்கள் சிலவற்றைத் தெரிவு செய்து கொள்க. முடியுமாயின் மாணவர்களைக் குழுக்களாக இச்செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- தெரிவு செய்த தாவரத்தில் மொட்டுச் சிறிதளவு விரிந்த பின்னர், தினமும் அப்பூவை அவதானிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- அவதானிப்பதற்காக நாளின் ஒரு குறித்த நேரத்தைத் தெரிவு செய்து கொள்க.
- அவதானிக்கும்போது பின்வரும் விடயங்களின்பால் மாணவரின் கவனத்தை ஈர்க்குக.

  * விரைவில் வாடிப்போனது பூவின் எந்தப்பகுதி?
  * கேசரங்களுக்கு என்ன நடந்துள்ளது?
  * காய் தோன்றியதாயின் அப்பகுதி பூ இதழ்களால் மறைக்கப்பட்டிருந்ததா அல்லது மறைக்கப்படாது இருந்ததா?
  * காயாக வளர்ச்சியடைந்த பகுதி, இதழ்களுக்கு மேலே இருந்ததா?, கீழே இருந்ததா?, இதழ்களின் நடுவே இருந்ததா?

- மேலே அவதானித்தவற்றுள் மாணவர் விரும்பும் யாதேனுமொரு சந்தர்ப்பத்தைச் சித்திரமாக வரையச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு : 5**

- வெவ்வேறு வகைப் பூக்களையும் இலைகளையும் உலர்த்தி ஒட்டி, வாழ்த்துமடல்கள் அல்லது வேறு ஆக்கங்கள் செய்யுமாறு மாணவரை வழிப்படுத்துக.

செயற்பாடு : 6

- தாவரங்களுக்கும் பிராணிகளுக்கும் இடையிலான தொடர்புகளைத் தேடியறியுமாறு மாணவரை வழிப்படுத்துக. அவ்வாறு தேடியறிய வழிப்படுத்துவதற்காகப் பின்வருவது போன்ற வினாக்களை மாணவரிடம் வினவுக.
    - ∗ பறவைகள் எங்கே கூடு கட்டும்?
      கூடு கட்டப் பயன்படுத்தும் பொருள்கள் எவை?
    - ∗ செவ்வெறும்பு எந்த மரத்தில் கூடு கட்டும்? தாவரத்தின் எந்தப் பகுதியில் கூடு கட்டும்?
    - ∗ பறவைகள், அணில், குரங்கு போன்ற பிராணிகள் தாவரத்தின் எப்பகுதிகளை உணவாக உட்கொள்கின்றன?
    - ∗ பூக்களில் தேன் பருக வரும் பிராணிகள் எவை?
    - ∗ அப்பிராணிகளால் தாவரங்களுக்குக் கிடைக்கும் பயன்கள் எவை?
    - ∗ மயிர்கொட்டி, நத்தை, மாடு போன்ற பிராணிகள் தாவரங்களின் எந்தப் பகுதிகளை உண்ணும்? அவற்றால் தாவரங்களுக்கு ஏற்படும் தீங்கு / பாதிப்பு யாது?

- இவ்வாறான கலந்துரையாடலைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான அனுபவங்களை மாணவர் பெற வழிசெய்க.

    ***உதாரணம் :***
    - ∗ பாடசாலைத் தோட்டத்தில் அல்லது அண்மையில் உள்ள அவதானிக்கத்தக்க இடங்களைப் பார்வையிடச் செய்தல்
    - ∗ படங்கள், காணொளிக் காட்சிகளைக் காட்சிப்படுத்தல்

- அதற்கமைய, தாவரங்களுக்கும் பிராணிகளுக்கும் இடையிலான தொடர்புகள் சிலவற்றை இனங்காண மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- அத்தொடர்புகளின்போது பெரும்பாலும் தாவரங்களால் பிராணிகளுக்கு நன்மைகள் கிடைக்கும் என்பதையும் மற்றும் சில சந்தர்ப்பங்களில் பிராணிகள் மூலம் தாவரங்களுக்கு நன்மை கிடைக்கும் அல்லது தீங்கு விளையும் என்பதையும் உதாரணங்காட்டிக் கலந்துரையாடுக.
- தாவரங்களால் பிராணிகளுக்குக் கிடைக்கும் நன்மைகள் :
    - ∗ உணவு கிடைத்தல்
    - ∗ வாழிடம், பாதுகாப்பு, நிழல் ஆகியன கிடைத்தல்

- பிராணிகளால் தாவரங்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் :
    - ∗ பூக்களில் மகரந்தச் சேர்க்கைக்கு உதவுதல்
    - ∗ வித்துகளைப் பரப்ப உதவுதல், அதன் மூலம் தாவரங்கள் பெருக்கமடைய உதவுதல்
    - ∗ பிராணிகளின் மல - சலம் தாவரங்களுக்குப் பசளையாதல்

- பிராணிகளால் தாவரங்களுக்கு ஏற்படும் தீங்குகள் :
    - ∗ பிராணிகள் தாவரப் பகுதிகளை உண்ணுதல்
    - ∗ தாவரங்களின் கிளைகளை முறித்தல், அதன் விளைவாகத் தாவரங்களின் வளர்ச்சி குறைவடைதல் / தாவரங்கள் இறத்தல்

செயற்பாடு : 7

- மேற்படி செயற்பாட்டில் கலந்துரையாடிய தாவரங்கள் - பிராணிகளுக்கு இடையிலான தொடர்புகளுக்கு மேலதிகமாக, தாவரமொன்றின் வெவ்வேறு பகுதிகள் மூலம் மனிதர் பல்வேறு பயன்களைப் பெறுகின்றமையை எடுத்துக் காட்டுவதற்காகப் பின்வரும் செயற்பாட்டில் மாணவரை ஈடுபடுத்துக.
- தாம் பாடசாலையில் உண்பதற்காகக் கொண்டுவந்த உணவில் அடங்கியுள்ளவற்றுள் தாவரங்களிலிருந்து பெற்றவற்றைக் கூறுமாறு மாணவரை வழிப்படுத்துக.

- அதற்கமையத் தாவரத்தின் இலை, பூ, காய், வேர் போன்ற வெவ்வேறு பகுதிகளை நாம் உணவாக உட்கொள்கின்றமையை எடுத்துக்காட்டுக.

  ***உதாரணம் :***
  - * அகத்தி இலை, முருங்கை இலை
  - * அகத்திப் பூ, செவ்வரத்தைப் பூ

- உணவு, பானங்களாக மட்டுமன்றி, ஔடதங்களாகவும் தாவரப் பகுதிகள் பயன்படுத்தப் படுகின்றமையை உதாரணங்கள் மூலம் எடுத்துக்காட்டுக.

  ***உதாரணம் :***
  - * பொன்னாவரைப் பூ, வில்வம் பூ போன்ற பூ வகைகள்
  - * கறிவேப்பிலை, சாத்தாவாரி போன்ற இலை வகைகள்
  - * வெட்டிவேர், ஆடாதோடை மரப்பட்டை

- மேற்கூறிய பயன்கள் தவிர, தாவரப் பகுதிகள் மூலம் நாம் பெறும் வேறு பயன்கள் பற்றியும் கலந்துரையாடுக.

செயற்பாடு : 8

- மாணவரைத் திறந்தவெளியான ஓர் இடத்திற்கு அழைத்துச்சென்று அவர்களுள் ஒருவரைப் பெயரிட்டு, அவரை முன்னே நிறுத்தி முன்னோக்கி நடக்கச் செய்க.
- அவரின் பின்னால் மற்றைய மாணவர்கள் ஒவ்வொருவராகச் செல்ல வழிப்படுத்துக.
  முன்னால் செல்லும் மாணவர் ஒரு தாவரத்தின் பெயரைக் கூறிப் பின்னோக்கிப் பார்த்தவுடன் பின்னால் செல்வோர் யாவரும் தரித்து நின்று மரம் காற்றில் அசைந்தாடுவது போன்று அசைந்தாட வழிப்படுத்துக.
- முன்னே செல்பவர், திரும்பிப்பார்க்கும்போது, தரித்து நின்று மரம் காற்றில் அசைந்தாடுவது போன்று ஆடத் தவறுபவர் முன்னே சென்று முன்னர்போன்றே விளையாட்டைத் தொடர வழிப்படுத்துக.
- அனைவரும் மரம் காற்றில் அசைந்தாடுவது போன்று ஆடுகின்றனர் எனின், முன்னே இருப்பவர் மீண்டும் முன்னோக்கி நடந்து செல்லத் தொடங்குவார். ஏனையோர் அசைந்தாடுவதை நிறுத்தி, அவரைத் தொடர்ந்து பின்னால் நடந்துசெல்வார்.
- முன்னே செல்பவர் ஒரு கொடி வகைத் தாவரத்தின் பெயரைக் கூறி, பின்னே திரும்பிப் பார்க்கும்போது மற்றைய மாணவர்கள் ஒரு வில் வளைவு போன்று முன்னோக்கிக் குனிந்து கைகளை ஊன்றியவாறு நிற்றல் வேண்டும்.
- அவ்வாறு குனிந்து நிலத்தைத் தொட்டவாறு நிற்கத் தவறும் மாணவர் வரிசையின் முன்னே வந்து விளையாட்டைத் தொடர்தல் வேண்டும். (முதலாவதாக அவதானிக்கப்படுபவர்)
- அனைவரும் ஒரேயடியாகக் குனிந்தனர் எனின், முன்னே இருக்கும் மாணவர் பயணத்தைத் தொடர்தல் வேண்டும்.
- அவரைப் பின்பற்றி ஏனையோரும் எழுந்து நடந்து செல்லல் வேண்டும். அவ்வாறு செல்லும்போது முன்னே செல்பவர் ஒரு செடியின் பெயரைக் கூறிப் பின்னே திரும்பிப் பார்க்கும்போது ஏனைய மாணவர்கள் நிலத்தில் அமர்ந்து, தலையைச் சற்றுப் பதித்து வைத்திருத்தல் வேண்டும்.
- அனைவரும் ஏக காலத்தில் அவ்வாறு செய்துள்ளரெனின், முன்னே செல்பவர் மீண்டும் பயணத்தை ஆரம்பித்து மரம், கொடி அல்லது செடியின் பெயரைக் கூறியவுடன் ஏனைய மாணவர்கள் யாவரும் பின்வருமாறு செயற்படுதல் வேண்டும்.

| | |
|---|---|
| மரத்தின் பெயர் எனின் - | அதே இடத்தில் தரித்து நின்று மரம் காற்றில் ஆடுவது போன்று அசைந்தாடுதல் |
| கொடியின் பெயர் எனின் - | அதே இடத்தில் தரித்து நின்று குனிந்து இரு கைகளாலும் நிலத்தைத் தொட்டபடி வில்வளைவு போன்று நிற்றல் |
| செடியின் பெயர் எனின் - | அதே இடத்தில் நிலத்தில் அமர்ந்து தலையைச் சற்றுப் பதித்து வைத்திருத்தல் |

## கருப்பொருள் 4 : எம்மைச் சூழவுள்ள பிராணிகள்

இக்கருப்பொருளின் கீழ், எமது அண்மிய சூழலில் வாழும் பிராணிகள் பற்றிப் பயிலுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக, வீட்டிலும் வீட்டுச் சுற்றுப்புறத்திலும் வாழும் பிராணிகள், அவற்றின் விசேட இயல்புகள், அவற்றின் மூலம் கிடைக்கும் பயன்கள், பிராணிகளைப் பாதுகாப்பதன் அவசியம் ஆகியன வலியுறுத்தப்பட்டுள்ளன. மேலும் அப்பிராணிகள் காரணமாக மனிதருக்கு ஏற்படக்கூடிய தீங்குகள், அத்தீங்குகளைத் தவிர்ப்பதற்காக நாம் செய்யத்தக்கவை பற்றியும் கவனம் செலுத்தப்பட்டுள்ளன. மாணவர்கள் நேரடி அனுபவங்களைப் பெறுவதற்காகவும் பாடசாலைத் தோட்டத்திலோ, சுற்றுப்புறச் சூழலிலோ பிராணிகளை அவதானிக்கச் சந்தர்ப்பமளிப்பது முக்கியமானது.

**தேர்ச்சிகள் :**

- பிராணிகள் தொடர்பான அடிப்படைத் தகவல்கள், பிராணிகளின் விசேட திறன்கள் மற்றும் பிராணிகளின் நடத்தைகளைத் தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்.
- பிராணிகள், தாவரங்களுடனும் மனிதர்களுடனும் கொண்டுள்ள இடைத்தொடர்புகளை இனங்காண்பார்.
- சூழலின் இருப்புக்காக பிராணிகளின் முக்கியத்துவத்தை மதித்து, அப்பிராணிகளைப் பாதுகாக்கப் பங்களிப்புச் செய்வார்.
- பிராணிகள் காரணமாக ஏற்படும் தீங்குகள் மற்றும் விபத்துக்கள் தொடர்பாகக் கவனம் செலுத்திச் செயற்படுவார்.
- வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி, பிராணிகளின் உருவங்கள் செய்வார்.
- பிராணிகளின் நடத்தைகள் சார்ந்த அசைவு மற்றும் போலச்செய்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- பிராணிகளின் நடத்தைகள் மற்றும் பிராணிகளுக்கும் மனிதருக்கும் இடையிலான தொடர்புகளைக் காட்டும் அசைவுகளை முன்வைப்பார்.

**கற்றற்பேறுகள் :**

- இயல்புகளுக்கும் நடத்தைகளுக்கும் ஏற்ப சுற்றுப்புறச் சூழலில் காணப்படும் பிராணிகளைக் கூட்டங்களாக்குவார்.
- சுற்றுப்புறச் சூழலில் காணப்படும் பிராணிகளின் விசேடமான நடத்தைகளைக் கற்றாய்வார்.
- வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கை வட்டத்தை அவதானித்து அறிக்கைப்படுத்துவார்.
- மனிதர் மற்றும் பிராணிகளின் வாழும் உரிமையையும் உயிரின் பெறுமானத்தையும் குறிப்பிடுவார்.
- பிராணிகளைப் பாதுகாப்பதற்காகத் தமது பங்களிப்பை வழங்குவார்.
- வெவ்வேறு முறைகளைக் கையாண்டு பிராணி மாதிரியுருக்கள் செய்வார்.
- பிராணிகளின் நடத்தையைப் போலச் செய்து ஆக்கபூர்வமாக விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- பிராணிகளின் நடத்தைகளைப் போலச் செய்து எடுத்துக்காட்டும் வகையில் ஆடல் - பாடல்களில் ஈடுபடுவார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு 1**

- வெவ்வேறு பிராணிகளின் இயல்புகள், அப்பிராணிகளின் நடத்தைகள் தொடர்பாகத் தேடியறிய மாணவர்க்குச் சந்தர்ப்பமளிப்பதற்கான களப் பிரயாணமொன்று ஏற்பாடு செய்க.
- இதற்காகப் பாடசாலைத் தோட்டத்தில் உள்ள பொருத்தமான ஓர் இடத்தை அல்லது சுற்றுப்புறச் சூழலில் பொருத்தமான ஓர் இடத்தைத் தெரிவுசெய்து கொள்க. (நேரடி அனுபவங்களைப் பெற வசதிசெய்ய முடியாதெனின் காணொளிக் காட்சியொன்றின் மூலம் அவதானிக்கச் சந்தர்ப்பமளிக்குக.)

- மாணவரைக் குழுக்களாகப் பிரித்துத் தெரிவு செய்த இடத்திலும் பார்வைக்கெட்டிய இடங்களிலும் காணப்பட்ட பிராணிகள் தொடர்பாகக் குறிப்பெழுதிக்கொள்ளுமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குக.
- சிறிய பிராணிகளை அவதானிப்பதற்காகக் கைவில்லை பயன்படுத்தச் சந்தர்ப்பமளிக்குக. மாணவரது பாதுகாப்புக் குறித்துக் கவனஞ்செலுத்துக.
- பின்னர் மாணவரை வகுப்பறைக்கு அழைத்துச் செல்க.
- கரும்பலகையிலோ வேறு பலகையிலோ பின்வருவது போன்ற அட்டவணையொன்றினை வரைந்துகொள்க.
- மாணவர்கள் நடத்திய அவதானிப்பின்போது, கண்ட பிராணிகள் தொடர்பான தகவல்களை முன்வைக்குமாறு வழிப்படுத்தி, அத்தகவல்களைச் சுருக்கமாக அட்டவணையில் பதிவு செய்க.

உதாரணம்:

| குழு | இடம் | அவதானித்த பிராணிகள் | அப்பிராணிகள் செய்து கொண்டிருந்த செயல் |
|---|---|---|---|
| ......1....... | ............... | ........................................... | ............................................... |
| .......2...... | ............... | ........................................... | ............................................... |
| .......3...... | ............... | ........................................... | ............................................... |

- மேற்படி அட்டவணையின்படி, ஒரு குழுவினர் அவதானித்த அதே வகைப் பிராணியை மற்றைய குழுவினரும் அவதானித்துள்ளனரா என்பது குறித்துக் கவனஞ்செலுத்துக.
- மேற்படி அட்டவணையையும் அவதானிப்புகளையும் அடிப்படையாய்க் கொண்டு, மாணவரிடம் பின்வருவன போன்ற வினாக்களை வினவி விடைபெறுக.

***உதாரணம் :***

∗ மிகக் கூடுதலாகக் காணப்பட்ட பிராணி வகை எது?

∗ உங்களது கருத்தின்படி அவை அதிக அளவில் அவதானிக்கப்பட்டமைக்குக் காரணம் அவை பெருந்தொகையாகக் காணப்பட்டமையா?

∗ இல்லையேல் நீங்கள் அவதானித்தது போன்ற சூழலில் அவை எப்போதும் சஞ்சரிக்கின்றமையா?

∗ நீங்கள் அவற்றை அவதானித்த வேளையில் அவை செய்துகொண்டிருந்த வேலைகள் / செயல்கள் யாவை?

∗ வெவ்வேறு பிராணி வகைகள் ஒரே வேலையை / செயலைச் செய்து கொண்டிருந்தனவா?

***உதாரணம் :***

* உணவு கொண்டுசெல்லல்

* ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்லல் .... போன்றவை

- இவ்வாறான வினாக்களை வினவி, தாம் அவதானித்த பிராணிகளின் நடத்தைகள் தொடர்பாக நன்கு சிந்தித்துப்பார்க்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- இவ்வாறாக மாலை வேளைகளில் வீட்டுச் சூழலில் சஞ்சரிக்கும் பிராணிகளை அவதானித்து அறிக்கைப்படுத்தி வருமாறு மாணவருக்குக் கூறுக.
- அதற்கமையப் பகல் வேளையில் அவதானித்த பிராணிகளிலும் மாலை வேளையில் அவதானித்த பிராணிகளிலும் விசேடமாகக் காணப்பட்டவை குறித்து மாணவருடன் கலந்துரையாடுக.
- பகல் வேளையில் அவதானிப்புக்கு உள்ளாகிய பிராணிகள் மாலை வேளையிலும் அவதானிக்கப்பட்டதாயின் அவற்றின் பகல் வேளை நடத்தைக்கும் மாலை வேளை நடத்தைக்கும் இடையே வேறுபாடுகள் காணப்பட்டதா என்பது குறித்து மாணவருடன் கலந்துரையாடுக.

**செயற்பாடு : 2**

- மேற்படி செயற்பாட்டில் செய்த அவதானிப்புகளை இதற்காகப் பயன்படுத்தலாம். அவதானித்த பிராணிகளையும் அப்பிராணிகளில் அவதானித்த புற இயல்புகளையும் பட்டியற்படுத்துக. (வெறுங் கண்ணினாலும் கைவில்லையினாலும் அவதானித்து)
- அவதானித்த புற இயல்புகளை வெவ்வேறு முறைகளில் வகைப்படுத்தலாம் என்பதை விளக்குக. பிராணிகள் மற்றும் அவற்றின் இயல்புகளடங்கிய பட்டியலைப் பார்த்து சுயாதீனமாக அப்பிராணிகளைக் கூட்டமாக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- அவதானித்த பிராணிகளின் இயல்புகளைப் பின்வருமாறும் வகைப்படுத்தலாம் என்பதை எடுத்துக்காட்டுக.

நாய், கிளி, மீன், மண்புழு

கால்கள் உண்டு
- நாய்
- கிளி

கால்கள் இல்லை
- மீன்
- மண்புழு

சிறகுகள் உண்டு - கிளி

சிறகுகள் இல்லை - நாய்

செட்டைகள் உண்டு - மீன்

செட்டைகள் இல்லை - மண்புழு






- மாணவர் குழு நிலையில் அவதானித்த பிராணிகளைப் பின்வருமாறு வகைப்படுத்த வழிப்படுத்துக.
- 1 - 2 படிமுறைகள் வரை வகைப்படுத்துவது போதுமானது எனக் கூறுக.
- மாணவர் தயாரித்தவற்றைக் காட்சிப்படுத்தச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு : 3**

- சுற்றுப்புறச் சூழலில் வாழும் சில பிராணிகளின் உருவங்கள் சிலவற்றைத் தனித்தனியாக மாணவர் அனைவரும் தெளிவாகப் பார்க்கத்தக்க அளவு பெரியதாகத் தயார்படுத்திக் கொள்க.
- வகுப்பு மாணவருள் ஒருவரை எதிரே அழைக்குக.
- ஏற்கனவே தயாரித்த உருவங்களுள் ஒன்றை அவர் பார்க்காதவாறு அல்லது முதுகுப் புறத்தில் உடையின்மீது பொருத்துக.
- அம்மாணவர் தனது முதுகில் பொருத்தப்பட்டுள்ள படத்திலுள்ள உருவம் பற்றி ஏனைய மாணவர்களிடம் வினாக்கள் வினவி, அவர்கள் அளிக்கும் விடைகளின்படி தமது முதுகில் பொருத்தப்பட்டுள்ள பிராணியின் உருவம் என்னவென்பதை அனுமானித்துக் கூற முயற்சி செய்தல் வேண்டும் என அறிவுறுத்துக.

***உதாரணம் :***

∗ இது எதை உண்ணும்?
∗ எவ்வாறான இடங்களில் வாழும்?
∗ அதன் நிறம் என்ன?
∗ பறக்க முடியுமா?
∗ எத்தனை கால்கள் உள்ளன?

* நீந்த முடியுமா?
* ஓட முடியுமா?
* அது ஒரு பூச்சியா?

- இவ்வாறாக வினாக்கள் கேட்டு, அப்பிராணிகளைச் சரியாக அவர் இனங்கண்ட பின்னர், மற்றுமொரு மாணவரின் முதுகில் பிறிதொரு பிராணியின் படத்தைப் பொருத்தி முன்னர் போன்றே வினாக்கள் வினவி, அப்பிராணி எது என அனுமானிக்கச் சந்தர்ப்பமளிக்குக.

செயற்பாடு : 4

- மனிதரைப் போன்றே பிராணிகளுக்கும் வாழும் உரிமை உண்டு என்பதை விளங்கிக்கொள்ள வகை செய்வதற்காகப் பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- இதற்காகக் கீழே உதாரணமாகத் தரப்பட்டுள்ளது போன்ற ஒரு கதையை மாணவர்க்குக் கூறுங்கள்.

***உதாரணம் :***

* ஒரு நாள் சாந்தியும் ராஜாவும் மாலாவும் ரமணனும் பாடசாலை விட்டு வந்து, தோட்டத்தில் விளையாடிக்கொண்டிருந்தனர். திடீரென மாலா கூச்சலிடத் தொடங்கினாள்.

**மாலா** : ஐயோ... என்னை ஏதோ கடித்துவிட்டது.
மாலாவின் கூச்சலைக் கேட்ட அவளது தந்தை அவ்விடத்திற்கு ஓடி வந்தார்.

**தந்தை** : மாலா...... மகள் மாலா ..... என்ன நடந்தது பார்ப்போம் ........
இது ஒரு முசுறு (மகளின் காலைப் பார்த்த தந்தை)
மரத்தில் நிறைய முசுறுக் கூடுகள் உள்ளன.
பொறுங்கள் நான் அந்தக் கிளைகளை வெட்டி விடுகின்றேன்.

**ரமணன்** : வெட்ட வேண்டாம் அப்பா ....... எங்களைப் போன்றே பிராணிகளும் சூழலில் சுதந்திரமாக வாழ வேண்டும் என ஆசிரியர் சொல்லித்தந்தார்.
நாங்கள் வேறோர் இடத்திற்குப் போய் விளையாடுவோம்.

- **இவ்வாறான கதைகள் மூலம் பிராணிகளுக்கும் மனிதரைப் போன்றே சூழலில் சுதந்திரமாக வாழ உரிமையுண்டு என்பதையும் அவற்றின் இருப்புக்குத் தீங்கு விளையக்கூடிய செயல்கள் எதனையும் நாம் செய்யலாகாது எனவும் எடுத்துக்காட்டுக.**
- பிராணிகளின் இருப்புக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய மனிதச் செயற்பாடுகள் எவையென மாணவருடன் உரையாடுக.

***உதாரணம் :***

* மரங்களை வெட்டுதல், தீமூட்டுதல், காடுகளை அழித்தல், வாழிடங்களை அழித்தல், மனிதனின் வெவ்வேறு தேவைகளுக்காகப் பிராணிகளைக் கொல்லுதல், கொதிநீரை நிலத்தில் கொட்டுதல், இரசாயனப் பசளையிடுதல்

- சுற்றுப்புறச் சூழலில் நிதமும் சஞ்சரிக்கும் பிராணிகள் சிலவற்றின் பெயர் எழுதப்பட்ட சில அட்டைகளைத் தயாரித்துக்கொள்க. அவற்றை மாணவர்க்கு இடையே பகிர்ந்தளிக்க.
- அட்டைகள் கிடைக்கப்பெற்ற மாணவருள் ஒருவரை வகுப்பின் எதிரே அழைக்குக. தமது கையில் உள்ள பட அட்டையில் காட்டப்பட்டுள்ள பிராணி தாமே எனக் கருதி, அப்பிராணியின் இருப்புக்குத் தீங்கு விளையுமாயின் ஏற்படத்தக்க நிலைமைகளை மற்றைய மாணவரின் எதிரே கூறச் சந்தர்ப்பமளிக்குக.

***உதாரணம் :*** 1. **மண்புழு**

* நான் மண்புழு
* நீங்கள் குப்பைகளை எரிப்பதாலும் நிலத்தில் வெந்நீர் கொட்டுவதாலும் நானும் எனது குஞ்சுகளும் இறந்து விடுவோம்.
* நாங்கள் இறந்துவிட்டால் உங்களது தோட்டத்திலுள்ள குப்பைகளைப் பசளையாக மாற்றித்தருவது யார்?

2. கிளி

* நீங்கள் மரங்களைத் தறித்தால், அம்மரங்களில் பொந்துகளில் வாழும் நாமும் எமது குஞ்சுகளும் அழிந்து விடுவோம். நாங்கள் இருப்பதால் சூழல் அழகு பெறுகின்றது.

- இவ்வாறாக முன்வைப்புகள் செய்வதற்கு மாணவர் அனைவருக்கும் சந்தர்ப்பமளிக்குக.
- அதற்கமைய பிராணிகள் வாழும் உரிமை பற்றியும் அதன் மூலம் மனிதருக்குக் கிடைக்கும் பயன்கள் பற்றியும் மாணவரது கவனத்தை ஈர்க்குக.

**செயற்பாடு : 5**

- பிராணிகள் யாவும் மனிதனால் பாதுகாக்கப்பட வேண்டிய ஒரு வளமாகும் என்பதை எடுத்துக்காட்டுவதற்குப் பொருத்தமான ஒரு கதையை / தாமே புனைந்த ஒரு கதையை மாணவர்களுக்குக் கூறுக.

***உதாரணம் :***

* ஒரு வீட்டுத்தோட்டத்தில் மாமரமொன்று இருந்தது. அம்மாமரப் பொந்தில் கிளிகள் வாழ்ந்தன. ஒருநாள் ஒருவர் அம்மாமரத்தை வெட்டி வீழ்த்தினார். அவ்வேளையில் தாய்க் கிளியும் தந்தைக் கிளியும் உணவு தேடச் சென்றிருந்தன. கிளிகள் இரண்டும் திரும்பி வந்து பார்த்தபோது கிளிக்குஞ்சுகள் இருந்த பொந்து சிதறிப்போயிருந்தது. அதைக் கண்ட தாய், தந்தைக் கிளிகள் பெருங் கவலையடைந்தன. தாய்க் கிளியும் தந்தைக் கிளியும் கீச்சிட்டவாறு தமது குஞ்சுகளைத் தேடின.

- இவ்வாறான ஒரு கதையைத் தழுவி அச்சம்பவத்தைக் கண்ட ஒரு பிள்ளையின் உள்ளத்தில் ஏற்பட்ட எண்ணங்களை எழுதுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- அக்கதையில் மாணவரின் மனதைத் தொட்ட ஒரு சந்தர்ப்பத்தைச் சித்திரமாக வரையுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- மாணவர்கள் வரைந்த சித்திரங்கள் பற்றி உரையாடியவாறு, அச்சந்தர்ப்பமானது ஏன் தமது மனதைத் தொட்டது என்பது பற்றி வினவுக.
- உரையாடலின் வழியே மனிதரைப் போன்றே பிராணிகளும் தமது குஞ்சுகள், குட்டிகள் மீதும் தமது இனத்தைச் சேர்ந்த ஏனைய உறுப்பினர்கள் மீதும் அன்பு காட்டுகின்றன என்பதையும் அவற்றின் இருப்புக்குத் தீங்கு விளையக்கூடியவாறாக நாம் செயற்படலாகாது என்பதையும் எடுத்துக்காட்டுக.
- பறவைகள் பற்றிய ஒரு பாடலைத் தேடி மாணவருடன் சேர்ந்து பாடுக.
- அப்பாடலின் பொருளை மாணவர்க்கு விளக்கி, போலச் செய்தலாக ஆடிப்பாடி முன்வைக்கச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு : 6**

- வண்ணத்துப்பூச்சி ஒன்றின் வாழ்க்கை வட்டம் தொடர்பான அனுபவங்களைப் பெறுவதற்காக மாணவரைப் பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- இதற்காக வாய் பெரிய, ஊடுகாட்டும் தன்மையுள்ள கண்ணாடிப் போத்தல்கள் சிலவற்றைப் பெறுக.
- அகத்தி போன்ற தாவர இலைகளின் கீழ்ப்புறத்தே பெரும்பாலான வண்ணத்துப்பூச்சியினது வாழ்க்கை வட்டத்தில் முதலாவது பருவநிலை முட்டைகளைக் காணலாம். அவ்வாறான முட்டைகள் உள்ள இலைகளுடன் சிறிய இலைகள் சிலவற்றை ஒட்டிக்கொள்க.
- வகுப்பு மாணவர் அனைவருக்கும் இலைகளில் ஒட்டியுள்ள சிறிய வண்ணத்துப்பூச்சி முட்டைகளை அவதானிக்கச் சந்தர்ப்பமளிக்குக. இதற்காக கைவில்லையைப் பயன்படுத்தலாம்.
- மாணவர்களைச் சில குழுக்களாகப் பிரிக்குக. ஒவ்வொரு குழுவிற்கும் கண்ணாடிப் போத்தலொன்றும் முட்டைகள் உள்ள கிளை ஒன்றும் வழங்குக.
- முட்டைகளுக்குப் பாதிப்பு ஏற்படாதவாறு கவனமாக அக்கிளையைப் போத்தலினுள் இடுமாறு மாணவரை வழிப்படுத்துக.

- பின்னர் போத்தல் வாயைக் காகிதத் துண்டினால் மூடி, நூலினால் / துணி நாடாவினால் இறுக்கிக் கட்டுமாறு வழிப்படுத்துக.
- போத்தலினுள் வளி செல்லக்கூடியதாக குண்டூசியினால் காகிதத்தில் சில துளைகள் இடுக.
- போத்தலில் உள்ள முட்டைகளில் ஏற்படும் மாற்றங்களைத் தினமும் அவதானிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- அவதானிப்புகளை அறிக்கைப்படுத்துவதற்காகக் கீழே தரப்பட்டுள்ளவாறான அட்டவணை ஒன்றினைத் தயாரித்துக்கொள்ளுமாறு மாணவரை வழிப்படுத்துக.

| திகதி / நாள் | அவதானித்தவை |
|---|---|
| ...................<br>................... | .........................<br>......................... |

- அவதானித்தவற்றை அட்டவணையில் எழுதுமாறு அல்லது வரையுமாறு வழிப்படுத்துக.
- இவ்வாறாக அவதானித்து வரும் நாள்களில் பின்வருமாறு வினாக்கள் வினவி, மேலும் சிறப்பாக அவதானிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.

    ***உதாரணம் :***
    * அவதானிக்க ஆரம்பித்து எத்தனை நாட்களின் பின்னர் முட்டையிலிருந்து புழு / புழுக்கள் வெளியே வந்தன?
    * புழுக்களின் நிறம் யாது?
    * புழு எதனை உணவாக உண்டது?
    * புழு இலைகளை உண்டதா? எவ்வளவு உண்டது? (இலையின் அரைவாசி / முழு இலை என்றவாறாக)
    * புழு நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்ததா?
    * புழு எத்தனை நாட்களின் பின்பு கூடு அமைத்துக்கொண்டது?
    * புழுக் கூட்டின் வடிவம் யாது? அதன் நிறம் என்ன?
    * எத்தனை நாட்களின் பின்பு வண்ணத்துப்பூச்சி வெளியே வந்தது?

- மேற்படி அட்டவணையையும் பயன்படுத்தி, வண்ணத்துப்பூச்சியினது பிறப்பின் வெவ்வேறு சந்தர்ப்பங்களை ஒழுங்குமுறைப்படி எழுதுமாறு மாணவரை வழிப்படுத்துக.


    ***உதாரணம் :***
    * முட்டையிலிருந்து புழு வெளிவந்தது.
    * புழு இலை உண்ணத் தொடங்கியது.
    * சவ்வு கழன்றது.
    * புழு, கூட்டை அமைத்தது.
    * கூடு வெடித்தது.
    * வண்ணத்துப்பூச்சி வெளியே வந்தது.

- வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கை வட்டம் வெவ்வேறு பருவங்களைக் கொண்டது என்பதை மாணவருடன் கலந்துரையாடி எடுத்துக்காட்டுக.
- வண்ணத்துப்பூச்சியைப் பாதுகாப்பான சூழலில் விடுவிக்குமாறு அறிவுறுத்துக.

**செயற்பாடு : 7**

- கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறாக அசைக்கக்கூடிய பிராணி உருவமொன்றை ஆக்குமாறு மாணவரை வழிப்படுத்திச் சந்தர்ப்பமளிக்குக.
- A4 அளவுள்ள பிறிஸ்டல் அட்டைத்துண்டு அல்லது காட்போட் துண்டை எடுத்து அதனைச் சரிமத்தியில் இரண்டாக மடிக்குக.
- மடித்த அட்டையின் மடிப்புக் கோட்டின் மீது பறவை / வண்ணத்துப்பூச்சியின் படம் வரைய வழிப்படுத்துக.

- வரைந்த படத்தை வெட்டியெடுக்குக. (மடிப்புக் கோடு வேறாகாதவாறு சிறகுகளைச் சுயாதீனமாக அசைக்கக்கூடியதாகப் பிராணி உருவத்தை முண்டத்தின் இரு புறத்திலும் ஒட்டிக்கொள்க.
- பானக்குழாய் ஒன்றினை இரண்டாக மடித்து அதன் இரண்டு அந்தங்களையும் பறவையின் / வண்ணத்துப்பூச்சியின் சிறகுகளுடன் பொருத்திக்கொள்க.
- பின்னர், ஒரு மாணவனை அழைத்துப் பிராணி உருவின் முண்டப்பகுதியை ஒரு கையால் பிடித்தவாறு மற்றைய கையினால் பானக்குழாயை மேலும் கீழுமாக இழுக்குமாறு கூறுக. பறவை / வண்ணத்துப்பூச்சி பறப்பது போன்று காட்சியளிப்பதை அவதானிக்கலாம்.



- அவ்வாறு தயாரித்த அசையக்கூடிய மாதிரியைப் பயன்படுத்தி, பிராணிகளுக்கு இடையிலான உரையாடல்களைச் செய்துகாட்டுமாறு மாணவரைக் குழுநிலையில் வழிப்படுத்துக.

**செயற்பாடு : 8**

- மாணவரை இரு சம குழுக்களாகப் பிரிக்குக.
- முதலாம் குழுவினருக்குத் தமது கைகளின் நீட்டிய தூரத்திற்கமைய வட்டமாக நிற்குமாறு கூறுக.
- இரண்டாவது குழுவில் இருப்போர் எலிகளாவர். எலிகள் வட்டத்திற்கு வெளியே இருப்பர்.
- வட்டமாக இருப்போர் எலிப்பொறி ஆவர்.
- மூன்று கட்டங்களில் சமிக்ஞை வழங்கப்படும். முதலாம் சமிக்ஞை வழங்கியவுடன் எலிகள் சுயாதீனமாகக் கால்களை மாற்றியவாறு, துள்ளிப்பாய்ந்தவாறு ஒரு சுற்றுச் செல்வர்.
- இரண்டாவது சமிக்ஞையின்போது எலிப்பொறியினர் கைகளைச் சேர்த்தவாறு உயர்த்துவர்.
- அப்போது வட்டத்துக்கு (எலிப்பொறிக்கு) வெளியே இருக்கும் எலிகள் உள்ளே புகுவதும் வெளியே வருவதுமாக ஓடித்திரிவர்.
- மூன்றாவது சமிக்ஞை வழங்கிய உடனேயே எலிப்பொறியினர் உயர்த்தி வைத்திருக்கும் கைகளை ஒரேயடியாகக் கீழே பதித்தல் வேண்டும்.
- அப்போது வட்டத்தினுள் இருப்போர் பொறியில் அகப்பட்ட எலிகள் ஆவர். வட்டத்தின் வெளியே இருப்போர் (பொறியில் அகப்படாதோர்) வெற்றி பெற்றவர்களாவர். பொறியில் அகப்பட்டோர் வட்டத்தில் உள்ளோருடன் சேர்த்து கைகோர்த்துக் கொள்வர்.
- எல்லா எலிகளும் பொறியில் அகப்படும் வரையில் விளையாட்டைத் தொடர்ந்து நடத்துக.
- இவ்வாறாகக் குழுக்கள் இடம்மாறி மீண்டும் விளையாட்டைத் தொடர்க.

**செயற்பாடு : 9**

- பிராணிகளில் பல்வேறு நடத்தைகளைக் கூறும் பாடல்கள் / கவிதைகளைச் சேகரிக்குக.

## மயிலே! குயிலே!

ஆடிக்களிக்கும் மயிலே வா
ஆடி மகிழும் வழி சொல்லித்தா!

பறந்து திரியும் காக்கையே வா
பகிர்ந்து உண்ணச் சொல்லித்தா!

பாடிக் களிக்கும் குயிலே வா
பாட்டுப் பாடச் சொல்லித்தா!

தாவும் மானே அருகே வா
தாவிக் குதிக்கச் சொல்லித்தா!

கூவும் சேவலே இங்கே வா
காலை எழுந்திடச் சொல்லித்தா!

தாவித் திரியும் அணிலே வா
காய் கனி பறிக்கச் சொல்லித்தா!

குதித்து ஓடும் முயலே வா
'கரட்' உண்ணச் சொல்லித்தா!

பாலைத்தரும் பசுவே வா
சாதுப் பண்பைச் சொல்லித்தா!

- சேகரித்த பாடல்களில் கூறப்படும் பிராணிகளின் நடத்தைகள் யாவை என்பது குறித்து மாணவரிடம் வினவி உரையாடுக.
- பின்னர், அவ்வாறான பாடல்களைப் பாடி அவற்றில் கூறப்படும் பொருளுக்கமைய போலச்செய்தல்களை முன்வைக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.

சமூக ஒருமைப்பாட்டுக்கென எழுதப்பட்டுள்ள கதைத்திரட்டில் அடங்கியுள்ள ''யாருக்குச் சொந்தம்?'' எனும் கதையை இக்கருப்பொருளுக்காகப் பயன்படுத்துக.

## கருப்பொருள் 5 : நாம் பயன்படுத்துபவை

அன்றாட வாழ்வில் பல்வேறு பொருள்கள் மற்றும் உபகரணங்களைப் பயன்படுத்த வேண்டிய தேவை எமக்கு ஏற்படுகிறது. இவற்றை நாம் தனிப்பட்ட வாழ்விலும் பொதுவான ரீதியிலும் பயன்படுத்துகின்றோம். அவ்வாறு பயன்படுத்தும்போது அவைகளின் சுத்தம், நேர்த்தி, சரியாகக் கையாளல் மற்றும் பேணுதல் தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு பயன்படுத்தல் தொடர்பான அடிப்படைப் பரிச்சயத்தை வழங்க நடவடிக்கை எடுத்தல் இக்கருப்பொருளின் நோக்கமாகும். இதற்கான அடிப்படைப் பரிச்சயத்தை வழங்குவதே இந்தக் கருப்பொருளின் எதிர்பார்ப்பாகும். இதற்கான செயன்முறைச் செயற்பாடுகளில் ஈடுபட்டு அது தொடர்பான அனுபவங்களைப் பெற்றுக்கொள்வது அவசியமாகும்.

**தேர்ச்சிகள் :**

- குறிப்பிட்ட வேலைக்கான விசேடமான பொருள்கள், உபகரணங்களை இனங்கண்டு அவற்றைச் சரியாகவும் சீரான முறையிலும் பாதுகாப்பாகக் கையாள்வார்.
- உபகரணங்களின் செயற்பாடு தொடர்பான விளக்கத்துடன் பயன்தருதன்மை கொண்டதாகப் பயன்படுத்துவார்.
- வளங்களிலிருந்து உச்சப் பயனைப் பெறக்கூடிய வகையில் சிக்கனமாகப் பயன்படுத்துவார்.
- நாம் பயன்படுத்தும் பொருள்களை அல்லது சேவைகளைப் பெற்றுக்கொள்ளும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பான கரிசனையுடன் நடவடிக்கை எடுப்பார்.
- அன்றாடம் பயன்படுத்துபவற்றை மிகவும் கவர்ச்சிகரமாகத் தயார்செய்வதற்கெனப் பல்வேறு ஆக்கங்களை நிருமாணிப்பார்.
- பல்வேறு உபகரணங்களைப் பயன்படுத்தி வலு விருத்திக்கு உதவும் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- நாம் பயன்படுத்துபவற்றின் உதவியுடன் பல்வேறு கிராமிய நடனங்களில் ஈடுபடுவார்.

**கற்றற்பேறுகள் :**

- தமது அயற் சூழலில் பல்வேறு தொழில்களுக்கெனப் பயன்படுத்தப்படும் பொருள்கள், உபகரணங்களை இனங்காண்பார்.
- அந்த உபகரணங்களைப் பயன்படுத்தும் விதம் பற்றிய தகவல்களைக் கண்டறிந்து அறிக்கைப்படுத்துவார்.
- அன்றாடம் பயன்படுத்தும் உபகரணங்களைச் சரியாகப் பராமரிப்பார்.
- தொடர்ச்சியாகப் பயன்படுத்தும்போது உபகரணங்களின் பராமரிப்புத் தொடர்பாகக் கரிசனை யுடன் நடந்துகொள்வார்.
- பொருள்களைக் கொள்வனவு செய்யும்போது அவற்றின் தரம் தொடர்பாகக் கரிசனையுடன் செயற்படுவார்.
- கம்பளித் தையல், சங்கிலித் தையல் ஆகியவற்றினைப் பயன்படுத்தி, அன்றாடப் பயன்பாட்டிற்குத் தேவையான உபகரணமொன்றைத் தயாரித்துக்கொள்வார்.
- பயன்படுத்தும் உபகரணங்களின் உதவியுடன் எறிதல், பிடித்தல் ஆகிய விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- நாம் பயன்படுத்தும் உபகரணங்களின் உதவியுடன் புத்தளிப்புப் பொருள்களைத் தயாரித்து ஆக்கத்திறன்மிக்கதாக மேற்கொள்வார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு : 1**

**படிமுறை - 1**

- பல்வேறு தொழில்களுக்கெனப் பயன்படுத்தப்படும் பொருள்கள், உபகரணங்களில் சிலவற்றைச் சேகரிக்குக.
- தமது அயற்சூழலில் மாணவர்கள் அவதானித்த பல்வேறு தொழில்களைப் பற்றி மாணவருடன் கலந்துரையாடுக.
- மாணவரது கருத்துக்களைக் கவனத்திற்கொண்டு பல்வேறு தொழில்களைக் குறித்துக்கொள்க.

***உதாரணம் :***

* மேசன் வேலை
* மரவேலை
* கடற்றொழில்
* இரத்தினக்கல் அகழ்வு/ சுரங்கம் அகழ்வு
* விவசாயம்
* கொல்லன் பட்டறை

- அந்தந்தத் தொழில்களில் பயன்படுத்தப்படும் உபகரணங்களை வகைப்படுத்தி அதற்கேற்றவாறு மாணவர்களைக் குழுக்களாக்குக.
- அந்த உபகரணங்களின் பெயர்கள் மற்றும் பயன்படுத்தப்படும் விதம் ஆகியவற்றைக் கலந்துரையாடுக.
- தமது வீடுகளில் அல்லது வேறு இடங்களிலிருந்து இந்த உபகரணங்களைப் பெற்றுக்கொள்ள முடியுமெனின் அவற்றைப் பாதுகாப்பாகப் பாடசாலைக்குக் கொண்டுவரச் செய்க.
- அவ்வாறின்றேல் அந்தத் தொழிற்சாலைகளில் வேலையில் ஈடுபடுவோரில் ஒன்று அல்லது இரண்டு பேரைப் பாடசாலைக்கு அழைத்து அந்த உபகரணங்களைச் சரியாகப் பயன்படுத்துவது தொடர்பான நிகழ்வொன்றினை நடத்துக.
- அந்தத் தொழிலாளர்கள் மூலமாக எமக்குக் கிடைக்கும் அறிவு, சேவை ஆகியவற்றை மெச்சுக. அவர்களை மரியாதையாக அழைப்பதற்கு மாணவர்க்கு அறிவுறுத்துக.

***உதாரணம் :*** மாமா, அண்ணா, திரு.

- வீட்டில் பல்வேறு நடவடிக்கைகளுக்கென எம்மால் வெவ்வேறு உபகரணங்கள், பொருள்கள் ஆகியன பயன்படுத்தப்படுகின்றன எனவும் அவற்றைப் பாதுகாப்புடன் கையாளப் பழகுவது அவசியமானதெனவும் காட்டுக.

**படிமுறை - 2**

- மேற்படி உபகரணங்கள் தொழில்களுக்கு ஏற்றவாறு வகைப்படுத்தப்பட்டுள்ள விதம் மற்றும் அவற்றைப் பயன்படுத்தும் விதம் பற்றிய தகவல்கள் எமது பல்வேறு தேவைகளுக்கெனப் பல்வேறு தொழில்களின் உதவி தேவைப்படும் விதம் பற்றிக் கற்பதற்கு மாணவர்களை வழிப்படுத்துக.
- அதற்கெனப் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு உபகரணத்தினதும் சிறப்பியல்புகளைக் கலந்துரையாடுக.
- உபகரணங்களைப் பாதுகாப்பாகக் கையாள்வதன் மூலம் வேலை சிறப்பாக நடைபெறுவது பற்றியும் பாதுகாப்பின்றி அவற்றைக் கையாண்டமையால் விபத்து ஏற்பட்ட சந்தர்ப்பமொன்றை யும் மாணவர்களுக்குக் காட்டுக. இதற்கெனப் பாதுகாப்பின்றி உபகரணங்களைப் பயன்படுத்து வதால் எற்பட்ட விபத்துத் தொடர்பான நிகழ்வு அடங்கிய அளிக்கை போன்றவற்றைப் பெற்றுக்கொள்க.
- பல்வேறு தொழில்களின் இன்றியமையாமை, அவர்களால் கிடைக்கும் சேவைகள் ஆகியவற்றை எப்போதும் மதிக்க வேண்டுமென மாணவர்களுக்குக் கூறுக.
- மேற்படி தகவலின் உதவியுடன் மாணவர்களின் மனதைக் கவர்ந்த தொழில் தொடர்பான ஆக்கத்திறன் சித்திரமொன்றை வரைந்து வகுப்பில் காட்சிப்படுத்துக.
- மாணவரது ஆக்கங்களை மெச்சுக.

செயற்பாடு : 2

படிமுறை - 1

- நாம் அன்றாடம் பயன்படுத்தும் உபகரணங்கள் பற்றி மாணவருடன் கலந்துரையாடுக.

  ***உதாரணம் :***

  * தான் தனிப்பட்ட ரீதியில் பயன்படுத்தும் உபகரணங்கள்
  * வீட்டிலும் பாடசாலையிலும் பொதுவாகப் பயன்படுத்தும் உபகரணங்கள்

- இவ்வாறு எம்மால் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு உபகரணங்கள் பயன்படுத்தப்படும் விதத்தை ஞாபகப்படுத்துங்கள்.
- தாம் தனிப்பட்ட வகையில் பயன்படுத்தும் உபகரணங்கள், பாடசாலையிலும் வீட்டிலும் பொதுவானவையாகப் பயன்படுத்தும் உபகரணங்கள் என இரண்டு பட்டியல்களாக அட்டவணைப்படுத்துக.
- அவ்வாறான உபகரணங்கள் சிலவற்றை வகுப்பில் சேகரித்துக்கொள்க.

  ***உதாரணம் :***

  * சீப்பு, துடைதுண்டு, தேநீர்த் தட்டு, பெட்டி, சட்டி, பானை

- மாணவர்களைச் சில குழுக்களாகப் பிரிக்குக.
- ஒவ்வொரு குழுவையும் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள உபகரணங்களை அவை தயாரிக்கப்பட்ட மூலப்பொருளின் அடிப்படையில் வகைப்படுத்தச் சந்தர்ப்பமளிக்குக.

  ***உதாரணம் :***

  * பிளாத்திக்கு, துணி, மரம், கண்ணாடி, பீங்கான், களி, பிரம்பு என்றவாறாக

- பின்னர் கொண்டுவந்த உபகரணங்கள் ஆக்கப்பட்ட மூலப்பொருள்கள், நிறம், வடிவம், பயன்பாட்டு முறை ஆகியவற்றை அவதானிக்க வழிப்படுத்துக.
- பயன்படுத்தும் ஒவ்வொரு பொருளையும் சரியாகச் சுத்தப்படுத்தி, ஒழுங்காக அடுக்கி வைத்தல் மற்றும் பராமரித்தல் ஆகியன தொடர்பாகக் கவனத்திற்கொள்க.
- இதற்கேற்ப மாணவர்கள் நடந்துகொள்கின்றனரா எனக் கவனிக்க.

படிமுறை - 2

- மாணவர்களினால் அன்றாடம் பயன்படுத்தும் உபகரணங்களைத் தொடர்ச்சியாகக் கையாளும்போது உடையும் விதம் பற்றிக் கலந்துரையாடுக.
- இந்த நிலைமையைத் தவிர்ப்பதற்காக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை மாணவர்க்கு விளக்குக.

  ***உதாரணம் :***

  * நாள்தோறும் சுத்தம் செய்தல் (உணவுப் பாத்திரங்கள், கோப்பைகள்)
  * உடைந்திருந்தால் திருத்துதல் (கதிரை, மேசை, இறாக்கை, பை)
  * கிழிந்திருந்தால் தைத்தல் (திரைச்சீலை, மேசை விரிப்பு, உடைகள்)
  * தேய்வுற்றிருந்தால் எண்ணெய் இடல் அல்லது உதிரிப்பாகங்களை இட்டுத் தயார் செய்தல் (மோட்டார், கப்பி, இயந்திரம், சப்பாத்து)

- உபகரணங்களைச் சரியாகக் கையாளுதல், உரிய காலத்தில் பராமரித்தல் ஆகியவற்றின் மூலம் விரயம் மற்றும் விபத்துகளைக் குறைக்க முடியும் விதத்தையும் நற்பழக்கமென்ற வகையில் சிறு வயது முதலே அது தொடர்பான விளக்கத்துடன் நடந்துகொள்ளும் விதம் பற்றி மாணவர்களுக்குக் காட்டுக.
- நடைமுறை வாழ்வில் இயலுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அது தொடர்பாகக் கரிசனை கொள்கின்றனரா என வினவுக. அறிந்துகொள்க.

  ***உதாரணம் :***

  * பாதணிகள், சப்பாத்து, புத்தகப் பை, புத்தகங்கள்

- தான் பயன்படுத்தும் பாதணிகளை வீட்டில் வைக்கும் விதம் பற்றி மாணவரிடம் வினவுக.

- வீட்டினுள் நுழைவதற்கு முன்பதாகப் பாதணிகளைக் கழற்றிய பின்னர் நுழைவது சுகாதார ரீதியான பழக்கம் என்பதை வலியுறுத்துக.
- தமது பாதணிகளைச் சரியாகக் கையாளுதல், பராமரித்தல் ஆகியவற்றுடன் சரியான கொண்ணிலையைப் பேணுதல் ஆகியன மூலமாகப் பாதணிகளைப் பேண முடிவதுடன் எதிர்காலத்தில் பல்வேறு கோளாறுகளுக்கு ஆளாகக்கூடிய சந்தர்ப்பங்களையும் குறைத்துக் கொள்ளலாமெனக் கலந்துரையாடுக.
- நாம் பாதங்களை வைக்கும் விதத்திற்கமையச் சப்பாத்து / பாதணி / செருப்பு தேய்வுறும் விதம் மாறுபடும்; அவதானிக்க மாணவர்களை வழிப்படுத்துக.

  ***உதாரணம் :***

  ∗ குதிக்காலிலிருந்து விரல்கள் வரையில் நிறையைச் சமமாக மாற்றியவாறு விரல்களை முன்னோக்கி வைத்துச் சரியாக நடக்கும் விதத்தைக் காட்டுக.

- அவ்வாறே தனது பாதத்திற்கு அளவில்லாத சப்பாத்துக்கள் மூலமாக சமநிலையாக நடப்பது கடினமாக அமைவது பற்றியும் அதன் பிரதிகூலங்களையும் கலந்துரையாடுக.
- சில பொருள்கள் மற்றும் உபகரணங்களைச் சரியாகக் கையாள்வதன் மூலமும் சரியாகப் பராமரிப்பதன் மூலமும் நீண்ட காலத்திற்கு பயன்படுத்த முடிவதுடன் அதற்கமைய அவற்றின் பெறுமதி, முக்கியத்துவம் ஆகியன அதிகரிக்குமென்பதையும் கவனத்திற்கொள்க.

செயற்பாடு : 3

- பொருளொன்றைக் கொள்வனவு செய்யும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் மற்றும் பொருள்களின் ஒட்டிகள் (லேபல்), பொதி, கொள்கலன்கள் ஆகியவற்றைச் சேகரித்துக் கொண்டுவருமாறு முன்னரே அறிவுறுத்துக.
- சந்தையில் கொள்வனவு செய்யும் பொதியுடன்கூடிய பொருள்கள் பற்றி மாணவருடன் கலந்துரையாடி, அவற்றின் பெயர்களைக் குறிப்பிடுக.
- வகுப்பிலுள்ள மாணவர்களை நான்கு குழுக்களாக்குக.
- ஒரு குழுவினைத் தம்மிடமுள்ள பொதியிடப்பட்ட பொருள்களைக் கொள்வனவு செய்யும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்களை ஒவ்வொன்றாக வினவுவதற்குச் சந்தர்ப்பமளிக்குக.

  ***உதாரணம் :***

  ∗ காலாவதியாகும் திகதி உள்ளதா?

  ∗ தரச் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளதா? (SLS / ISO)

  ∗ உற்பத்தித் திகதி உள்ளதா?

- இரண்டாவது குழுவினரைத் தம்மிடமுள்ள பொருட்கள், ஒட்டிகள் (லேபல்கள்), கொள்கலன்கள் ஆகியவற்றை அவதானித்து வினவப்படும் விடயத்தைச் சரியாகக் காட்டுவதற்கு வழிப்படுத்துக.

  ***உதாரணம் :***

  ∗ காலாவதியாகும் திகதியைக் காட்ட வேண்டும்.

  ∗ உற்பத்தித் திகதியைக் காட்ட வேண்டும்.

  ∗ யோக்கட் / தயிர் / பால் போன்றவை காலாவதியாகும்போது ஏற்படும் மாற்றங்களை வினவுக. (ஆசிரியர் ஏற்கனவே தயார்செய்து கொள்ள வேண்டும்.)

- பின்னர் மாணவர் வகுப்பில் லேபல் அல்லது கொள்கலனின் படத்தை (உற்பத்தித் திகதி, காலாவதியாகும் திகதி, தர இலச்சினை ஆகியன அடங்கலாக வரைவதற்கு அல்லது ஒட்டுவதற்குச் சந்தர்ப்பமளிக்குக.
- கொள்வனவு செய்யும் பொருள்களின் தரம் தொடர்பான முக்கியத்துவத்தை மேலும் கலந்துரையாடுக.
- குழுக்களை மாற்றி மீண்டும் அந்தச் செயற்பாட்டை விளையாட்டைப் போல மேற்கொள்க.
- மேலே கூறப்பட்ட விடயங்களை மீண்டும் கலந்துரையாடுக. அந்த விடயங்கள் தொடர்பாக கவனத்திற்கொண்டு எமக்கு அனுகூலமானதும் தேவைப்படுகின்றதுமான பொருள்களை மட்டும் கொள்வனவு செய்ய வேண்டும் எனவும் தேவையற்ற பொருள்களைக் கொள்வனவு செய்வதால் பணவீண்விரயம் ஏற்படுவதோடு, வீட்டின் நேர்த்தியும் பாதிக்கப்படும் என்பதை மாணவர்க்குக் காட்டுக.
- இவற்றின் முக்கியத்துவத்தை மாணவர்களுடன் கலந்துரையாடுக.


செயற்பாடு : 4


- கம்பளித் தையல், சங்கிலித் தையல் ஆகியவற்றைப் பயன்படுத்தி அன்றாடம் பயன்பாட்டிற்குத் தேவையான உபகரணங்களைத் தயார்செய்க.
- சுய பயன்பாட்டிற்காகக் கைக்குட்டையொன்றை ஆக்குவதற்குத் தேவையான பொருள்கள், உபகரணங்கள் ஆகியவற்றை முன்னரே வகுப்பிற்குக் கொண்டுவரச் செய்க.

  * 30 x 13 cm அங்குல அளவுடைய இளநிறப் பருத்திப் புடைவைத் துண்டு
  * 5 சென்றிமீற்றர் (கையில் பிடிக்கக்கூடிய அளவான) தையல் ஊசி
  * கடும் நிறம் கொண்ட நூல்கள் சில

- **கூரிய தையலூசியைப் பயன்படுத்தும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகையால் கவனமாகத் தையலூசியைப் பயன்படுத்துமாறு மாணவருக்கு அறிவுறுத்துக. (குறிப்பாகக் கண்களில் படாதவாறு)**
- நூல் 30 சென்றி மீற்றரை விட நீளாதவாறு இரண்டு பட்டு நூலை இட்டுக்கொள்க.
- உருவில் காட்டப்பட்டவாறு புடவைத் துண்டின் ஒரு சென்ரிமீற்றர் அளவில் சுற்றிவர மடித்துக் கொள்க.


  * தையல் ஊசியை மேலும் கீழுமாகச் செலுத்தி நூலோடுக.
  * பின்னர் கம்பளித் தையலை சுற்றிவரத் தைத்துக் கொள்க.





  * தரப்பட்டவாறு சிறிய பூவொன்றைக் கைக்குட்டையின் அந்தத்தில் வரைந்துகொள்க.

- அதனைச் சுற்றிவர நெருக்கமாகச் சங்கிலித் தையலைத் தைத்து பூ, பூக்காம்பு, இலை ஆகியவற்றைத் தைப்பதற்கு மாணவரை வழிப்படுத்துக.




- பின்னர் ஆக்கத்தினைக் காட்சிப்படுத்தி மதிப்பீடு செய்க.

செயற்பாடு : 5

- வகுப்பு மாணவரைத் திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் சென்று கைகளை அகல நீட்டியவாறு வட்டமாக நிற்குமாறு கூறுக.
- பின்னர் 1, 2: 1,2 என்றவாறு எண்ணச் செய்து இல: 1 குழு, இல: 2 குழு என ஒரே வட்டத்திலேயே இரண்டு குழுக்களாக இருக்கச் செய்து குழுவுக்கு ஒரு தலைவராக இரண்டு தலைவர்களை நியமித்துக் கொள்ளுமாறு அறிவுறுத்துக.
- தலைவர்கள் இருவரையும் வட்டத்தில் ஒரே இடத்தில் அருகருகே நிறுத்தி பெரிய பந்துகளிரண்டை அவர்களுக்கு வழங்குக.

- ஆசிரியர் சமிக்ஞை வழங்கியவுடன் தலைவர்கள், தம்மிடமுள்ள பந்தை வட்டத்தில் நிற்கும் தமது குழு உறுப்பினர்களுக்கு வட்டத்தின் வழியே கைமாற்றி அனுப்புமாறு அறிவுறுத்துக. வட்டத்தின் வழியே அனுப்பப்படும் பந்து மீண்டும் தலைவரை வந்தடையும். அத் தலைவரின் குழு வெற்றிபெற்ற குழுவாகும்.
- தொடர்ந்தும் மாணவரை விளையாட்டில் ஈடுபடுத்துக.
- தமது குழுவுக்கு உரிய பந்து வட்டத்தின் வழியே ஒரு முழு சுற்றுச் சுற்றி வந்ததும் அக்குழுவுக்கு ஒரு புள்ளி கிடைக்கும்.




- போட்டி முடிவடைய முன்னர் 3 அல்லது 4 புள்ளிகள் பெற்ற குழு வெற்றிபெற்ற குழுவாகும் என போட்டி ஆரம்பிக்க முன்னர் அறிவிக்குக.
- அதற்கமைய, யாதேனும் ஒரு குழு 3 அல்லது 4 புள்ளிகள் பெறும் வரை விளையாட்டை நடத்துக.
- முதலில் 3 அல்லது 4 புள்ளிகள் பெற்ற குழு வெற்றிபெற்ற குழு ஆகும்.

**செயற்பாடு : 6**

- நாம் பயன்படுத்திய பின்னர் வீணாகும் பொருட்கள் சிலவற்றை (ஒருவருக்கு ஒன்று என்ற வீதத்தில்) சேகரித்துக்கொள்க.
  ***உதாரணம் :***
  - அகப்பை, சிரட்டை, தகரப்பேணி, குமிழ்முனைப் பேனா, கண்ணாடி/பிளாத்திக்குப் போத்தல், போத்தல் மூடி, .....
- எல்லாப் பொருள்களையும் நன்கு கழுவிச் சுத்தம் செய்துகொள்க.
- சேகரிக்கப்பட்ட பொருள்களிலுள்ள கூரிய பாகங்களை மழுங்கச் செய்துகொள்க.
  ***உதாரணம் :*** தகரப்பேணி, போத்தல் மூடி
- பின்னர் இரண்டு தகரப்பேணிகளை ஒன்றாகக் கட்டிப் புத்தளிப்பு மேளம் (தம்பட்டம்), சிரட்டை/ தாச்சி முடிகளைப் பயன்படுத்தித் தாளம், மூடிகளினைப் பயன்படுத்திச் சலங்கை, பெரிய தகரப் பேணியைப் பயன்படுத்தி மேளம் போன்ற உபகரணங்களை அமைத்துக்கொள்க. மேளத்தை வாசிப்பதற்குத் தடியொன்றைத் தயாரித்துக்கொள்க.
- உபகரணத்தை நேர்த்தியாகத் தயாரித்துக் கொள்வதில் கவனஞ் செலுத்துமாறு அறிவுறுத்துக.
- தயாரிக்கப்பட்ட புத்தளிப்புக் கருவிகளின் ஒலியை நன்கு செவிமடுக்க. அதிக ஒலி எழுப்பும் உபகரணங்களை மெதுவாகவும் குறைவான ஒலி எழுப்பும் உபகரணங்களை அதிகமாகவும் இசைக்குமாறு அறிவுறுத்துக.
- மழை, தொழிற்சாலை, புகையிரதம், ... போன்ற ஒலிகளைப் போலச் செய்து வாத்தியக் கருவியை இசைக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- இசைக்கும்போது ஒழுக்கக் கட்டுப்பாடு முக்கியமானதெனக் காட்டி மாணவரிடமுள்ள கருவிகளை தேவையானபோது மட்டும் வாசிப்பதன் மூலம் ஏற்படும் ஒலியின் தெளிவு, இனிமை ஏற்படும் விதத்தைக் கலந்துரையாடுக.
- மாணவரிடத்தே உபகரணங்களைப் பரிமாறி, பல்வேறு குழுநிலை இசைப்புடன்கூடியதான நடித்தலைச் சமர்ப்பிக்க.
- மாணவரது சமர்ப்பித்தலை மெச்சுக.

சமூக ஒருமைப்பாட்டுக்கென எழுதப்பட்டுள்ள கதைத்திரட்டில் அடங்கியுள்ள ‘‘குடைக்கு நடந்தது என்ன?’’ எனும் கதையை இக்கருப்பொருளுக்காகப் பயன்படுத்துக.

## கருப்பொருள் 6 : எமது உணவு

உணவும் பானங்களும் எமது வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவையாகும். நாம் உண்ணும் உணவின் அளவு, தரம், உரிய நேரத்தில் உணவு உட்கொள்ளல் ஆகியன ஆரோக்கியமான வாழ்க்கைக்குக் காரணமாக அமையும். இந்தக் கருப்பொருளில் அது பற்றி வலியுறுத்தப்படுவதுடன் சிறந்த உணவுப் பழக்கங்கள் தொடர்பாக அறிவூட்டம் செய்யவும் எதிர்பார்க்கப்படுகின்றது. செயன்முறைச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதன் மூலமாக அது தொடர்பான அனுபவங்களை வழங்குவதற்குச் சந்தர்ப்பமளிக்கப்பட்டுள்ளன.

**தேர்ச்சிகள் :**

- சுகாதாரமான வாழ்க்கைக்கு, உரிய நேரத்தில் வேளை உணவுகளை உண்ண வேண்டு மென்ற விளக்கத்துடன் நடந்துகொள்வார்.
- தரமானதும் மருத்துவத்தன்மை கொண்டதுமான பான வகைகளை நுகரப் பழகுவார்.
- உணவு விரயமாகும் வழிகள் மற்றும் அவற்றை நீண்ட காலம் பேணும் முறைகள் பற்றிய விளக்கத்துடன் செயற்படுவார்.
- உணவு உண்ணும் மரபுகள் மற்றும் நற்பழக்கவழக்கங்கள் ஆகியவற்றைக் கைக்கொள்வார்.
- பாதுகாப்பற்ற உணவுகளை உட்கொள்வதனால் ஏற்படக்கூடிய நோய் நிலைமைகள் பற்றிய விளக்கத்துடன் சுத்தமான உணவுகளை உட்கொள்வார்.
- சரியான நடைமுறைகளைப் பின்பற்றி உணவைப் பரிமாறுவார்.
- உணவு பரிமாறலுக்கெனப் பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி ஆக்கத்திறன்மிக்க முடிவுப் பொருள்களைத் தயாரிப்பார்.
- வலு விருத்திக்கு உதவும் விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- நாம் உண்ணும் உணவுகளின் பல்வகைமையின் அடிப்படையில் பாடல், ஆடல், இசைத்தல், அங்க அசைவுகள் ஆகியவற்றைச் சமர்ப்பிப்பார்.

**கற்றற்பேறுகள் :**

- ஆரோக்கிய வளர்ச்சிக்குக் கலப்புணவின் இன்றியமையாமையை விளங்கிக் கொள்வார்.
- ஆரோக்கியமான வாழ்வுக்கு உதவும் மருத்துவத்தன்மை கொண்ட உணவு, பான வகைகளை இனங்கண்டு அவற்றை நுகர்வார்.
- உணவு வகைகள் அசுத்தமடையும் பல்வேறு முறைகளை இனங்கண்டு கூறுவார்.
- உணவை நீண்ட காலம் பேணக்கூடிய பல்வேறு முறைகளை இனங்காண்பார்.
- பாதுகாப்பற்ற உணவை உட்கொள்வதால் ஏற்படக்கூடிய நோய்கள் பற்றிய விளக்கத்துடன் அவற்றிலிருந்து தவிர்ந்துகொள்ளத்தக்க விதத்தில் நடந்து கொள்வார்.
- உணவைப் பரிமாறும்போது கடைப்பிடிக்க வேண்டிய சரியான நடைமுறைகளைக் கைக்கொள்வார்.
- வலு விருத்திக்கு உதவும் விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- கவர்ச்சியாக உணவைத் தயார்செய்யும்போதும் பரிமாறும்போதும் பயன்படுத்தக்கூடிய பல்வேறு ஆக்கங்களைத் தயாரிப்பார்.
- உணவு, பானங்களை நுகரும்போது பேணவேண்டிய நற்பழக்கங்கள் பற்றிக் கூறும் கவிதைகள், பாடல்களைப் பாடுவார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு : 1**

- ஆரோக்கியமான வளர்ச்சிக்குக் கலப்பு வேளை உணவின் முக்கியத்துவம் பற்றி அறிவூட்டுவதற்காகப் பின்வரும் செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்துக.
- இதற்கெனப் போசணை மிக்க வேளை உணவை உட்கொள்ளாத காரணத்தினால் நோய்வாய்ப்பட்ட பிள்ளையொருவரை வைத்தியரிடம் கொண்டுசென்றபோது நோய் அறிகுறிகள் மற்றும் அதற்கான காரணங்களைக் கலந்துரையாடல் பற்றியதாகத் தயாரிக்கப் பட்ட கற்பனைக் கதையொன்றை மாணவர்களுக்குச் சமர்ப்பிக்க.

***உதாரணம் :***

∗ அமலன் பாடசாலைக்கு இடையிடையே வருவார். வந்தபோதிலும் அவர் வேலை செய்தல், விளையாடுதல் போன்றவற்றின்போது சோம்பலாக இருப்பார். வகுப்பாசிரியர் சில நாட்களாக அமலனை அவதானித்தார். பின்னர் ஆசிரியர் அமலனின் அம்மாவை பாடசாலைக்கு அழைத்து அமலனின் மாற்றத்திற்கான காரணத்தைக் கலந்துரையாடினார். அமலனை வைத்தியர் ஒருவரிடம் காட்டுமாறு ஆசிரியர் அம்மாவுக்கு ஆலோசனை கூறினார்.

| | | |
|---|---|---|
| வைத்தியர் | : | பிள்ளைக்கு என்ன வருத்தம்? |
| அம்மா | : | மகனை வைத்தியரிடம் காட்டுமாறு ஆசிரியர் கூறியுள்ளார். |
| வைத்தியர் | : | மகனே உங்களுக்கு என்ன பிரச்சினை என்று கூறுங்கள். |
| மகன் | : | எனக்கு ஒரே தூக்கமாக இருக்கிறது. சோம்பலாக இருக்கிறது. கைகளும் கால்களும் வலிக்கின்றன. |
| அம்மா | : | மகன் எப்போதும் நித்திரை கொள்வார். எப்போதும் வயிறு வலிக்குது எனக் கூறுவார். வாந்தி எடுப்பார். |
| வைத்தியர் | : | மகனுக்கு எவற்றை உணவாகக் கொடுப்பீர்கள்? |
| அம்மா | : | காலையில் மரக்கறி ரொட்டி, பாண் போன்ற உணவுகளையே கேட்பார். சோறு சாப்பிட விரும்பவில்லை. |
| வைத்தியர் | : | அப்படியானால் இலைக்கறி வகைகள்? |
| அம்மா | : | இலைக்கறி வகைகள் மட்டுமல்ல, காய்கறிகள் எதனையும் சாப்பிடுவ தில்லை. பருப்பு வகைகளை வாயில் தொட்டுக்கூடப் பார்க்க மாட்டார். |
| வைத்தியர் | : | அப்போது, மகனே! உங்களுக்கு என்ன சாப்பிட விருப்பம்? |
| மகன் | : | எனக்குச் சோறு சாப்பிட விருப்பமில்லை. பாண், ரொட்டி, இடியப்பம் என்றால் ........ சாப்பிடுவேன். |
| வைத்தியர் | : | ஆம், இதனால்தான் இந்த வருத்தம் ஏற்பட்டுள்ளது. மலம் கழிப்பதில் ஏதும் பிரச்சினை உள்ளதா? |
| அம்மா | : | 2 அல்லது 3 நாட்களுக்கு ஒரு தடவையே மலம் கழிக்கின்றார். மலம் கழிக்கும்போது சிரமப்படுவார். நான் பப்பாசிப்பழம் கொடுத்தாலும் உண்ண மாட்டார். |

- மேற்படி உரையாடலின் உதவியுடன் போசாக்கான உணவை உட்கொள்ளாமை காரணமாக ஏற்படும் அசௌகரியங்கள் எவை என்பது பற்றி மாணவருடன் கலந்துரையாடுக.
- இவ்வாறான நிலைமைகளைத் தவிர்ப்பதற்கென நாள்தோறும் உணவாகக் கொள்ளவேண்டிய போசாக்கான உணவுகள் பற்றி மாணவருக்கு அறிவூட்டுக.
- எமது வேளை உணவுகளில் போசாக்கான உணவுகளைச் சேர்ப்பதன் மூலம் உடல் வளர்ச்சியும் பலமும் கிடைக்கும் எனவும் உடலை நோய்களிலிருந்து பாதுகாப்பதற்கு அந்த உணவு வகைகள் உதவுகின்றன எனவும் காட்டுக.

- போசாக்கான வேளை உணவின் முக்கியத்துவம் பற்றி வைத்தியர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர், சுகாதார சேவை அதிகாரி, மனைப்பொருளியல் ஆசிரியர் ஆகியோரில் ஒருவரைக் கொண்டு செயற்பாட்டில் கற்ற விடயங்களை உறுதி செய்யும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்க.

**செயற்பாடு : 2**

- பெற்றோருடன் கலந்துரையாடிப் போசாக்கான வேளை உணவில் அடங்கியிருக்க வேண்டிய உணவு வகைகளுடன்கூடிய வேளை உணவைப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகளைத் திட்டமிட்டுக் கொள்க.

  ***உதாரணம் :***
  - ∗ சோறு
  - ∗ கீரை வகைகள்
  - ∗ இரண்டு நிறங்கள் கொண்ட காய்கறிகள் - 2 (போஞ்சி, பூசணி)
  - ∗ இறைச்சி, மீன், முட்டை, கருவாடு, காளான் போன்ற உணவுகளில் ஒன்று
  - ∗ அவரை வகை (பருப்பு, பயறு, ......... போன்றவை)
  - ∗ ஈற்றுணவாகப் பொருத்தமான பழ வகை

- இவ்வாறு மாணவர்களுக்கு வழங்கவுள்ள உணவு வகைகள் அடங்கிய அட்டவணையை ஒவ்வொரு குழுவிலும் உள்ள மாணவர்களின் பெயர்கள் எழுதப்பட்ட நிரலுடன் கூடியதாகத் தயாரித்துக் கொள்க.

குழு 1


| மாணவரின் பெயர் | சோறு | மரக்கறி 1 போஞ்சி | மரக்கறி 2 பூசணி | கீரை வகை | இறைச்சி மீன் கருவாடு முட்டை | அவரைய..... வகை | ஈற்றுணவு |
|---|---|---|---|---|---|---|---|
| பாலன் | | | | | | | |
| அமீன் | | | | | | | |
| விமலன் | | | | | | | |
| பாமா | | | | | | | |

- மேற்குறிப்பிட்டவாறான அட்டவணையை ஒவ்வொரு மாணவர் குழுவிடமும் வழங்குக.
- தமது குழுவிலுள்ள மாணவர்களின் பெயர்களுக்கு எதிரே உள்ள கட்டங்களைப் பூர்த்தி செய்ய மாணவரை வழிப்படுத்துக.
- பின்னர் இன்றைய நாள் மாணவர்களுக்கான வேளை உணவு தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் அந்த வேளை உணவில் அடங்கியுள்ள உணவுகள் உணவு அட்டவணையில் தப்பட்டுள்ளன எனவும் மாணவர்க்கு விளக்குக.
- குழுவிலுள்ள மாணவர்கள் எல்லோருக்கும் இந்த அட்டவணையை மாறி மாறி வழங்கி தான் உணவாக உட்கொள்ளும் உணவு வகைக்கு எதிரே ✓ அடையாளம் இடுமாறு அறிவுறுத்துக.
- இந்த ஒவ்வொரு உணவு வகையையும் வேளை உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவம் பற்றிக் கலந்துரையாடுக.

  ***உதாரணம் :***
  - ∗ உடலுக்குச் சக்தி கிடைத்தல்
  - ∗ நோய்நொடிகளிலிருந்து பாதுகாப்புக் கிடைத்தல்
  - ∗ உடல் வளர்ச்சி

  போன்ற விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் கலந்துரையாடுக.

- அந்த ஒவ்வொரு வகை உணவையும் உட்கொள்ள வேண்டிய சார்பளவிலான அளவு பற்றி கவனத்திற்கொள்ள வேண்டுமென வரிப்படத்தின் உதவியுடன் காட்டுக.




- பின்னர் மீண்டும் ஒவ்வொரு மாணவரது கைகளுக்கும் அந்தக் குறிப்பினை வழங்கி, அவர்கள் இன்றைய தினம் உட்கொள்ளவுள்ள உணவுடன் ஏதேனும் உணவொன்றை உட்கொள்ளாது விடுவதெனில் அவ்வாறான உணவை உட்கொள்ளாது இருப்பதனால் ஏற்படும் நிலைமைகள் பற்றிச் சிந்தித்து அட்டவணையில் உரிய நிரலில் மாற்றத்தைச் செய்ய வேண்டுமெனில் அதனைச் செய்வதற்குச் சந்தர்ப்பம் வழங்குக.
- பின்னர், ஆசிரியர் மற்றை யமாணவர் குழுக்களுக்கு வழங்கிய குறிப்புப் பத்திரங்கள் எல்லாவற்றையும் சேகரித்து அவற்றில் எவரேனும் மாணவர் உணவாக உட்கொள்ளாத உணவு வகைகள் உள்ளனவாயின், அது தொடர்பான விவரங்களை வினவி, யாதேனும் விசேடமான காரணங்கள் இல்லையெனின், அவ்வுணவு வகைகளை உணவாக உட்கொள்ள ஆர்வமூட்டும் வகையில் மாணவருடன் உரையாடுக.
- பின்னர் மாணவர்களுக்கு உணவைப் பரிமாறிக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் வழங்குக. மாணவர்கள் உணவைப் பரிமாறும்போது அனைத்து வகையான உணவுகளையும் பரிமாறிக் கொள்கின்றனரா எனவும் அந்த உணவுகளை உட்கொள்கின்றனரா எனவும் கவனிக்க.
- இவ்வாறு கட்டாயப்படுத்தலின்றி வீட்டில் தயாரிக்கப்படும் உணவுகளில் இருந்து தனது வேளை உணவில் போசாக்கான உணவுகளைச் சேர்த்துக்கொள்ள முன்வர வேண்டுமெனக் காட்டுக.
- பெற்றோருக்கான அறிவுறுத்தல் கூட்டத்தில் உணவு தொடர்பாகப் பிள்ளைகளின் போசணை மட்டத்தை அதிகரிக்கக்கூடிய விதமாகப் பெற்றோர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பிள்ளைகளுக்குப் பல்வகைமை கொண்ட உணவுகளைப் பழக்கப்படுத்த வேண்டுமெனவும் பெற்றோரை அறிவுறுத்துக.

**செயற்பாடு : 3**

**படிமுறை - 1**

- ஆரோக்கியமான வாழ்க்கைக்குப் போசணைமிக்க உணவுகளையும் போசணைமிக்க மருத்துவ குணம் கொண்ட பான வகைகளையும் உட்கொள்வதன் முக்கியத்துவம் பற்றி மாணவருடன் கலந்துரையாடுக.

***உதாரணம் :***

    * வில்வம் பூ, பொன்னாவரசு, தேங்காய்ப்பூக்கீரை, நன்னாரி, சாத்தாவாரி
    * பொன்னாங்கண்ணி, வல்லாரை
    * முடக்கொத்தான், வெரலிக்காய், கெக்கரி, நெல்லிக்காய்

- இவற்றில் பொன்னாங்காணி, வல்லாரை, சாத்தாவாரி போன்றவற்றை கஞ்சியாகவும் வில்வம் பூ, பொன்னாவரசு, நன்னாரி போன்றவற்றை அவித்துப் பானமாகவும் அம்பரல்லா, வெரலிக்காய், நெல்லி, கெக்கரி போன்றவற்றைப் பானங்களாகவும் தயாரித்துக் கொள்ளலாம் எனக் காட்டுக.
- இப்பானங்களின் பண்புகள் மற்றும் செயற்கையாகத் தயாரிக்கப்பட்டுள்ள பான வகைகளின் பண்புகள் குறித்து ஒப்பீட்டு ரீதியில் விடயங்களை முன்வைத்து உரையாடுக.
- இதன்போது நீண்டகாலம் பேணுவதற்கு இரசாயனப் பொருள்கள் சேர்க்கப்பட்டுள்ளனவா, இல்லையாவெனவும் நிறமூட்டிகள் சேர்க்கப்பட்டுள்ளனவா, இல்லையாவெனவும் சுவையூட்டி கள் சேர்க்கப்பட்டுள்ளனவா, இல்லையாவெனவும் அதிகளவு சீனி சேர்க்கப்பட்டுள்ளதா, இல்லை எனவும் கவனஞ்செலுத்துக.
- இதற்கமைய மூலிகைப் பானங்களைப் பருகுவது உடலுக்கு நல்லது எனக் காட்டுக.
- தயாரிக்கப்பட்ட பானத்தைப் பருகுவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு : 4**

- உணவுகள், பானங்கள் ஆகியவற்றைப் பரிமாறும்போது கைக்கொள்ளப்பட வேண்டிய சரியான நடைமுறைகள் பற்றி அறிவூட்டுவதற்குப் பின்வரும் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துக.
- இதற்கெனப் பல்வேறு அளவுகளும் வடிவங்களும் கொண்ட கண்ணாடி, சிறிய தேநீர்த் தட்டம், தேநீர்த் தட்டு, கைக்குட்டைகள் சில, தேநீர் மேசைக்குப் பொருத்தமான உணவுகள் சில போதியளவு குளிர்பானமாகப் பயன்படுத்தக்கூடிய பான வகை மற்றும் சூடான பானமாகப் பயன்படுத்தக்கூடிய பான வகைகளையும் பெற்றுக்கொள்க.
- இவ்வாறான உணவுகள் மற்றும் பான வகைகளைப் பயன்படுத்தி எவரேனும் ஒருவருக்குச் சரியாகப் பரிமாறும் விதத்தைச் செய்துகாட்டி விளக்குக.
- இதன்போது பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவரது கவனத்தை ஈர்க்குக.
    - உணவு வகை அல்லது பான வகைக்குப் பொருத்தமான வகைவகையான பாத்திரங் களைத் தெரிவுசெய்க.

      ***உதாரணம் :***
      * பான வகைகளுக்குப் பொருத்தமான கண்ணாடித் தம்ளர்
      * சூடான பான வகைகளுக்குக் கைபிடி கொண்ட (தேநீர்க்) கோப்பை... போன்றவை

    - ஏதேனும் பாத்திரமொன்றில் உணவு அல்லது பானத்தை இடுவதற்கு முன்பதாக அதனை நன்கு கழுவி, ஈரலிப்பு நீங்கக் கூடியவாறு நன்கு துடைக்க வேண்டும்.
    - உணவு, பானங்களைப் பாத்திரங்களினுள் இடும் அளவு
    - கைப்பிடி கொண்ட கோப்பைகளில் பரிமாறுவதெனின் அந்தக் கோப்பையின் கைபிடி பெறுபவரின் வலது பக்கத்தில் அமையுமாறு பரிமாறுதல்
    - பரிமாறும் விதம் அல்லது பான வகைகளின் தன்மைக்கு அமைய கைத்துடைதுண்டை வைத்தல் மற்றும் கைத்துடை துண்டைக் கவர்ச்சிகரமாக மடித்து வைத்தல்
    - பரிமாறலை மேற்கொள்ளும் தட்டின் சுத்தம் மற்றும் அதன் மீது உணவு, பானங்கள் சிந்தியிருக்காமை
- உணவுகளைப் பரிமாறும் பாத்திரங்களை வைப்பதற்குப் போதுமான அளவுள்ள தட்டு
- இவ்வாறான விடயங்களைப் பற்றிக் கவனத்திற்கொண்டு செய்துகாட்டலை மேற்கொள்க.
- பின்னர் மாணவர்களுக்கு உணவுகளைப் பரிமாறுவதற்கு ஏற்றவாறு தயார்செய்வதற்குச் சந்தர்ப்பம் வழங்குக.
- இதற்கு மிகப் பொருத்தமான முறை மற்றும் அதற்கான காரணம் ஆகியவற்றைக் கலந்துரையாடுக.
- உணவுகள், பானங்களைச் சரியாகப் பரிமாறுவதன் மூலம் அவற்றைப் பெற்றுக்கொள் வோரிடம் எம்மைப் பற்றிய நல்லெண்ணத்தை உருவாக்கும் என்பதையும் மேலும் இந்த உணவுகள், பானங்களை உண்பதற்கு விருப்பம் ஏற்படும் என்பதையும் எடுத்துக்காட்டுக.

**செயற்பாடு : 5**

- உணவை நீண்ட காலம் பேணுவதற்கெனப் பல்வேறு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன என மாணவர்களுக்குக் காட்டுவதற்கு மாணவருடன் கலந்துரையாடலை மேற்கொள்க.
- உணவுகளை நீண்ட காலம் பேணும் முறைகள் பற்றி மாணவருக்குத் தெரிந்த விடயங்களை வினவுக.

- பின்வரும் விடயங்களையும் சமர்ப்பித்து, உணவை நீண்ட காலம் பேணுவதற்குப் பயன்படுத்தப்படும் முறைகள் தொடர்பாக மாணவருக்கு மேலும் விளக்குக.

  * உலர்த்துதல்
  * மணலினுள் புதைத்தல்
  * புகையூட்டல்
  * தகரத்தில் அடைத்தல், பைக்கற்றுகளில் அடைத்தல்
  * குளிரூட்டியில் வைத்தல்
  * தேனில் இட்டு வைத்தல்
  * உப்பு இடல்

- மேற்படி முறைகளில் தொழினுட்ப விருத்தி ஏற்படாத முற்காலத்தில் உணவை நீண்ட காலம் பயன்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட முறைகள் பற்றி வெவ்வேறாகக் கலந்துரையாடுக.
- இவ்வாறே முற்காலத்திலும் தற்காலத்திலும் மனிதர்கள் உணவை நீண்ட காலம் பேணுவதற்கெனப் பல்வேறு உபாய முறைகளைப் பயன்படுத்தி உணவு விரயமாதலைத் தடுக்கலாம் எனக் காட்டுக.

  ***உதாரணம் :***
  * விளைச்சல் அதிகம் உள்ள காலங்களில் அல்லது அந்த உணவு அதிகளவில் உற்பத்தியாகும் பருவகாலங்களில் அவற்றை வருங்கால நுகர்வுக்குப் பயன்படுத்தல்
  * உணவை உட்கொண்ட பின்னர் எஞ்சியுள்ளபோது...

- உணவை நீண்ட காலம் பேணுவதற்குப் பல்வேறு பொதியுறைகள் பயன்படுத்தப்படுகின்றதெனவும் அவ்வாறான பொதிகளில் இடப்பட்ட ஏதேனும் உணவு வகைகளைக் கொள்வனவு செய்வதாயின் அதில் குறிப்பிடப்பட்டுள்ள காலாவதியாகும் திகதி, உற்பத்தித் திகதி ஆகியன தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டும்.
- உணவை நீண்ட காலம் பேணுவதற்குப் பல்வேறு முறைகள் பயன்படுத்தப்பட்டபோதும் ஆரோக்கியமான வாழ்விற்கு எப்போதும் புதிய உணவுகளைப் பயன்படுத்தல் பொருத்தமானதென விளக்குக.

**செயற்பாடு : 6**

- நீண்ட காலம் பேணுவதற்கென விசேட முறைகளைக் கைக்கொள்ளாது விடின், உணவுக்கு நடைபெறுவதை அவதானிப்பதற்குப் பின்வருமாறான எளிய செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துக.
- சோறு, இடியப்பம், பாண் போன்ற உணவுகளின் மாதிரிகளைப் பெற்றுக்கொள்க.
- தயார்செய்யப்பட்ட உணவுகள் உண்ட பின்னர் எஞ்சினால் நீண்ட காலம் பேணுவதற்குச் செய்யக்கூடியவை யாவை என மாணவரிடம் வினவுக.
- பெறப்பட்ட உணவுகளில் ஒரு பகுதியை வேறாக்கி சூரிய ஒளி படும் இடத்தில் வைக்கவும்.
- சில நாட்கள் உலர்த்தப்பட்ட மாதிரி மற்றும் உலர்த்தாது பேணப்பட்ட மாதிரிகளை பாதுகாப்பாகப் பேணுக.
- உலர்த்தப்பட்ட மற்றும் உலர்த்தப்படாத உணவு மாதிரிகள் ஆகியவற்றில் ஏற்படத்தக்க மாற்றங்களை எதிர்வுகூற மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்குக.
- சில நாட்களின் பின்னர் வெறும் கண்களாலும் கைவில்லையின் உதவியுடனும் உணவு மாதிரிகளை ஒப்பிட்டுத் தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கும் வரிப்படங்களை வரைவதற்கும் மாணவர்களை வழிப்படுத்துக.

* உணவின் தன்மை (நிறம், மணம், இழையமைப்பு...)
* உணவின் மீது உருவாகியுள்ளவை (பூஞ்சணம்)

- உணவு அவ்வாறு மாற்றமடைந்திருப்பது ஏன் என மாணவரது கருத்துக்களைச் சமர்ப்பிக்க மாணவர்களை வழிப்படுத்துக.
- பண்டைக் காலம் தொட்டு இவ்வாறு உணவுகளை உலர்த்திப் பல்வேறு விதங்களில் தயார் செய்வதன் மூலம் விரயமாகாதவாறு மீண்டும் பயன்படுத்தலாம் என விளக்குக.
- செலவின்றித் தனது வீடு / வளவு ஆகியவற்றிலுள்ள உணவுகளைப் பின்னர் பயன்படுத்தக் கூடியவாறு பேணுவதற்கு மாணவரைத் தூண்டுக.

**செயற்பாடு : 7**

- நாம் உண்ணும் உணவுகள் பல்வேறு காரணங்களால் அசுத்தமடைகின்றன எனவும் பயன்பாட்டிற்குப் பொருத்தமற்றதாக மாறுகின்றன எனவும் அதற்கு எமது கவனமின்மையும் இயற்கைக் காரணங்களும் ஏதுவாக அமைகின்றன எனவும் பின்வரும் விடயங்களின் துணையுடன் மாணவருடன் கலந்துரையாடுக.
  * விலங்குகளின் காரணமாக;
    பூனைகள், கரப்பான் பூச்சிகள், பல்லி, எலி போன்ற வீட்டிலுள்ள விலங்குகளால் ஏற்படும் பாதிப்புகள்
  * சரியாகப் பொதிசெய்யப்படாமையால்;
    நீள் மூஞ்சு வண்டுகள், புழுக்கள் போன்ற விலங்குகளால் ஏற்படும் பாதிப்புகள்
  * சூழற் காரணிகளால்;
    தூசு படிதல், மழை படுதல், அதிக சூரிய ஒளி படுதல்
  * மனிதச் செயற்பாடுகள் காரணமாக;
    கவனமின்றி உணவுகளை மூடாது வைத்தல், கவனமின்றி உணவுகளைப் பொதி செய்தல், கவனமின்றி உணவுகளைச் சமைத்தல், பாதுகாப்பான இரசாயனங் களை இடல் (பழுக்க வைத்தல், நீண்ட காலம் பேணுதல் போன்றவற்றுக்காக)
- மேற்படி விடயங்கள் தொடர்பாக உதாரணங்களுடன் விளக்குக. இவ்வாறு உணவு பழுதடைவதைத் தவிர்ப்பதற்காக எம்மால் செய்யக்கூடியவற்றைப் பற்றி மாணவருடன் கலந்துரையாடுக.
- தமது வீடுகளில் உள்ள சமைத்த / சமைக்காத உணவுகளின் சுத்தம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றைப் பேணுவதற்குச் செய்யக்கூடிய விடயங்கள் பற்றி ஆலோசனைகளைச் சமர்ப்பிக்க மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குக.
- இதன்போது கீழ்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவரின் கவனத்தை வழிப்படுத்துக.
  * உணவு தயார் செய்யுமிடத்தை / சமையலறையைச் சுத்தமாகப் பேணுதல்
  * உணவு தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பொருள்கள், உபகரணங்களின் சுத்தம்
  * உணவைத் தயாரிப்போரின் தனிப்பட்ட சுத்தம்
  * உணவு தயார்செய்யும் சந்தர்ப்பங்களில் அதற்குப் பொருத்தமான மேலங்கி (Aprom) தலைக்கவசம், கையுறை போன்ற உடைகளையும் மறைப்புகளையும் பயன்படுத்தல்
- உணவுகளைச் சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் பேணாமை காரணமாக எமக்கு ஏற்படும் பிரதிகூலமான நிலைமைகள் பற்றிய விடயங்களைச் சமர்ப்பிக்க மாணவர்க்குச் சந்தர்ப்பம் வழங்குக.
- இதன்போது பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்க.
  * நோய்நொடிகள் ஏற்படல் (வயிற்றுக் கோளாறு, வயிற்றோட்டம், ஒவ்வாமை, வாந்தி, புழு நோய், கழிச்சல், வாந்திபேதி போன்ற நோய்களும் நோய்க்குறிகளும்)
  * தேவையற்ற பணச் செலவு ஏற்படல்

    ***உதாரணம் :***


    சுகவீன நிலைமையைப் போக்க மருந்து பெறுதல், உணவு விரயமாதல் காரணமாக மீண்டும் உணவை வாங்க வேண்டிய தேவை ஏற்படல்,...

* நாளாந்த நடவடிக்கைகளுக்குத் தடை ஏற்படல்
  ***உதாரணம் :***
  பாடசாலைகளுக்குச் செல்ல முடியாமை, கடமைகளுக்குச் செல்ல முடியாமை, நேரம் வீணாகுதல்


- இவ்வாறான காரணங்களால் நாம் அன்றாடம் உட்கொள்ளும் உணவு, பானங்கள் ஆகியவற்றின் பாதுகாப்பினைப் பேண வேண்டுமென வலியுறுத்துக.
- இதன்போது அன்றாடம் பருகும் நீரின் சுத்தத்தைப் பேணுதல் மற்றும் சுத்தமான நீரைப் பருகுவதன் முக்கியத்துவம் பற்றி விசேடமாகக் கவனம் செலுத்தி மாணவருக்கு அறிவூட்டுக.

**செயற்பாடு : 8**

- உணவைத் தயார்செய்யும்போது சுய சுத்தம் மற்றும் உணவின் சுத்தம் ஆகியவற்றைப் பேணுவதற்கு ஏப்ரன் தைப்பதற்குப் பின்வரும் அறிவுறுத்தல்களை மாணவர்க்கு வழங்குக.
  - இதற்கென சதுர வடிவ புடைவைத்துண்டைப் பெற்றுக்கொள்க. கரையைத் தைத்துக் கொள்க.
  - இடுப்பின் சுற்றளவை அளந்து அந்த அளவினை விட 30 cm இலும் கூடுதலான நீளத்தில் புடவைத் துண்டினை கீலமாக வெட்டிக்கொள்க.
  - அதனை முன்னர் வெட்டிக்கொண்ட புடைவைத் துண்டில் வைத்து தைத்துக்கொள்க. (உரு 1)
  - உடலின் மேற்பகுதிக்குப் பொருத்தமான அளவு புடைவைத்துண்டைப் பெற்றுக் கரையைத் தைத்துக்கொள்க.
    அதன் மேற்பகுதியில் கட்டுவதற்குப் போதுமான நீளம் கொண்ட நீண்ட நாடாக்கள் இரண்டைப் பொருத்திக்கொள்க. (உரு 2)
  - பின்னர் இரண்டு புடைவைத் துண்டுகளையும் ஒன்றாக வைத்துப் பொருத்திக் கொள்ளுங்கள். (உரு 3)







- இந்தச் செயற்பாட்டில் கரையை மடித்தல், நூலோடல், கரையைத் தைத்தல் போன்ற ஆற்றல்களை மாணவரிடத்தே ஏற்படுத்தக்கூடியவாறு செயற்பாடுகளை ஒழுங்குசெய்க.
- அலங்காரத் தையல் முறையான சங்கிலித் தையல் முறையைப் பயன்படுத்தி மேலங்கியை (Apron) அலங்கரித்துக்கொள்க.
- இந்தத் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்படும் பல்வேறு உணவு, பானங்கள் தயார்படுத்தல்களின் போது தயார்செய்து கொண்ட ஏப்ரனை அணிந்து செயற்பாட்டில் ஈடுபட மாணவர்க்குச் சந்தர்ப்பம் வழங்குக.

**செயற்பாடு : 9**

- உணவை உட்கொள்ளப் பயன்படுத்தப்படும் பாத்திரங்கள் / தட்டங்களைக் கடதாசிக் கூழைப் பயன்படுத்திச் செய்வதற்கு மாணவரை வழிப்படுத்துக.

***உதாரணம் :***

∗ பிளாத்திக்குக் கோப்பையை எடுக்க.
∗ அதனைத் தலைகீழாகப் புரட்டி வைக்க.
∗ கடதாசித் துண்டுகளைக் கிழித்து நீர் கொண்ட பாத்திரத்தில் இடுக.
∗ சிறிதளவு மாப்பசையைத் தயார்செய்து கொள்க.
∗ ஆரம்பத்தில் நீரில் நனையவிட்ட கடதாசித் துண்டுகளை கோப்பைகளின் மீது இடுக. (பசை பூசப்படாத ஈரலிப்பான கடதாசிகள் எனின் நன்று)
∗ கோப்பையின் மீது இடப்பட்ட கடதாசித் துண்டுகளின் மீது பசையைப் பூசுக.
∗ மீண்டும் ஈரலிப்பான கடதாசித் துண்டுகளை அதன் மீது இடுக.
∗ இவ்வாறு தடிப்பான படையொன்று உருவாகும் வரை மீண்டும் மீண்டும் ஈரக் கடதாசிகளை ஒட்டிக்கொள்க.
∗ ஒட்டும்போது சுருக்கங்கள் ஏற்படாதவாறு கையால் நன்கு தடவிக்கொள்க.
∗ இறுதியில் ஒட்டும் கடதாசியைப் பெரிய துண்டுகளாக ஒட்டிக்கொள்க. அது பல நிறம் கொண்டதாயின் மிக நன்று.
∗ இவ்வாறு தயாரிக்கப்பட்ட தட்டத்தை உலர்த்தி (ஒரு நாளின் பின்னர்) கழற்றிக் கொள்க.
∗ அவரவர் விரும்பியவாறு நிறங்கள், கோலங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி அலங்கரித்துக் கொள்க.

**செயற்பாடு : 10**

- வகுப்பிலுள்ள மாணவர்களை இரண்டு குழுக்களாக்குக.
- அடுத்து நாம் உணவாக உட்கொள்ளும் உணவு வகைகளைப் பெயரிடுமாறு கூறுக.
- ஒரு பக்கத்தில் உள்ள மாணவர்கள் உணவு வகைகளைப் பெயரிடும்போது மற்றைய பக்கத்தில் உள்ளோர் அந்த உணவின் பெயரை அல்லது இலக்கத்தை வழங்கச் செய்யலாம்.
- பின்னர் இரண்டு குழுக்களையும் பிரிக்கக் கூடியவாறு கோடொன்றை வரைந்து கொள்க.
- ஒரு உணவின் பெயரைக் கூறும்போது இரண்டு குழுக்களிலும் ஒரே பெயரைக் கொண்ட இருவர் மத்திய கோட்டிற்கு அண்மையில் வந்து இருவரும் மிக இறுக்கமாக இரண்டு கைகளையும் பிடித்தவாறு தத்தமது குழுவின் பக்கம் இழுக்கவும். பலம் குறைவான மாணவர் எதிர்ப் பக்கத்திற்கு இழுக்கப்பட்டுச் சென்றால் அந்தக் குழுவினர் அந்த மாணவரைத் தமது குழுவில் சேர்த்துக் கொள்வார்.
- அதற்கமையத் தமது நேரத்தினுள் அதிக எண்ணிக்கையான மாணவர்களைச் சேர்த்துக் கொண்ட குழுவினர் வெற்றி பெறுவர்.

**செயற்பாடு : 11**

- உணவுகள், பானங்களை உட்கொள்ளும்போது பேணப்பட வேண்டிய நற்பழக்கங்கள் பற்றிக் கூறும் பாடல்கள், கவிதைகளைச் சேகரித்துக் கொள்ளுங்கள். இல்லையேல் அவ்வாறான பாடல்கள், கவிதைகளை ஆக்கிக் கொள்ளுங்கள்.

- அவற்றிலுள்ள கருத்துக்களை விளக்கி மாணவருடன் சேர்ந்து அந்தப் பாடல்களைப் பாடுக.
- அந்தப் பாடல்களில் கூறப்படுவதற்கு இணங்க, உணவு, பானங்களை உட்கொள்ளும்போது தனது நடத்தைகளைச் சரியாகப் பேண வேண்டுமென மாணவருக்குக் கூறுக.
- பாடல்கள் / கவிதைகளுக்கான
  உதாரணம்:

உணவில் பேராசை கொள்ளாதே
உண்ண இன்னும் என்று கேளாதே
கிளறிச் சிந்திச் சிதறாதே
நின்ற நிலையில் உண்ணாதே!

உணவில் வைத்த கை எடுக்காதே
உரத்துச் சப்புக் கொட்டாதே
அழுதபடியே உண்ணாதே
அமர்ந்து சுவைத்து (மகிழ்ந்து) உண்பாயே!

## கருப்பொருள் 7 : பாதுகாப்பும் கரிசனையும்

பொறுப்புவாய்ந்த பிரசைகளைக் கொண்ட சமூகத்தில் வாழும் பிரசைகள் பாதுகாப்பு பற்றிய எண்ணக்கருவை (Safety concept) மனதிற்கொண்டு செயற்படுவார். அவ்வாறான பிரசைகள் அன்றாடச் செயற்பாடுகளிலும் சமூகக் கருமங்களிலும் தம்மைப் பற்றி மட்டுமன்றி ஏனையோர் பற்றியும் கவனத்திற்கொண்டு செயற்படுவர். பாதுகாப்பு பற்றிய எண்ணக்கருவை மனதில் நிறுத்தி, பொறுப்புடன் செயற்படும் எதிர்காலச் சந்ததியினருக்கான அடித்தளத்தை உருவாக்கும் நோக்குடனேயே இக்கருப்பொருள் திட்டமிடப்பட்டுள்ளது. பாதுகாப்பற்ற இடங்கள், சந்தர்ப்பங்கள் மற்றும் நோய்களை இனங்கண்டு அதிலிருந்து பாதுகாப்புப் பெறுதல், பாதகமான நிலைமைகளைத் தவிர்த்துக்கொள்ளல் ஆகியன குறித்து இங்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

வெவ்வேறு வேலைகளில் ஈடுபடும்போது தமது பாதுகாப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், விபத்துகளும் அவற்றிலிருந்து தவிர்ந்திருத்தல் ஆகியன தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டு அனுபவங்கள் பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தேர்ச்சிகள் :**

- விபத்துக்கள் நிகழத்தக்க வழிகள் பற்றிய அறிவூட்டத்துடன் அவற்றிலிருந்து பாதுகாப்புப் பெற ஆவன செய்வார்.
- தொழில்நுட்பச் சாதனங்களையும் வெவ்வேறுபட்ட சக்திகளையும் பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் தொடர்பாகக் கவனஞ்செலுத்திச் செயற்படுவார்.
- தொற்று நோய்கள் மற்றும் தொற்றாத நோய்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகக் கையாளக்கூடிய சுகாதாரப் பாதுகாப்பு முறைகள் தொடர்பாக அறிவூட்டத்துடன் செயற்படுவார்.
- பாதுகாப்புத் தொடர்பான உணர்தன்மையுடன் ஆக்கங்கள் செய்வதில் ஈடுபடுவார்.
- பாதுகாப்புத் தொடர்பாகக் கவனஞ்செலுத்தியவாறு துலங்கல் (எதிர்வினை) வேக வளர்ச்சிச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- பாதுகாப்பாகவும் கவனமாகவும் வேலை செய்ய வேண்டிய விதத்தை ஊமம் மூலமும் கருத்து வெளிப்பாட்டு அங்க அசைவுகள் மூலமும் செய்துகாட்டுவார்.

**கற்றற்பேறுகள் :**

- இயற்கைக் காரணங்களாலும் மனிதச் செயற்பாடுகள் காரணமாகவும் நிகழத்தக்க விபத்துக்களை இனங்கண்டு, அவற்றிலிருந்து பாதுகாப்புப் பெற ஆவன செய்வார்.
- இனந்தெரியாத ஆட்களுடன் செயற்படும்போது பாதுகாப்பாகவும் கவனமாகவும் செயற்படுவார்.
- தொற்றுநோய்கள் மற்றும் தொற்றாத நோய்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகச் செய்யவேண்டியவை தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார்.
- பாதுகாப்புத் தொடர்பான செய்திகளடங்கிய சுவரொட்டிகளைத் தயாரிப்பார்.
- பாதுகாப்பு மற்றும் கரிசனை தொடர்பாகக் கவனஞ்செலுத்தி, ஆக்க விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- பாதுகாப்புத் தொடர்பான பாடல்கள், கவிதைகள், நடித்துக்காட்டல்கள் / நடனங்களை முன்வைப்பார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**
**செயற்பாடு : 1**

- இயற்கையான காரணங்களால் நிகழக்கூடிய விபத்துக்கள் தொடர்பாக அறிவூட்டம் பெறுவதற்காக மாணவரைப் பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.

- பல்வேறு விபத்துக்கள் தொடர்பாகச் செய்தித்தாள்கள் மற்றும் சஞ்சிகைகளில் வெளியாகிய தகவல்கள், ஒளிப்படங்கள், எனைய படங்களைச் சேகரித்து வகுப்பிற்குக் கொண்டுவருமாறு சில தினங்களுக்கு முன்னரே மாணவருக்கு அறிவுறுத்துக.
- இயற்கையான காரணங்களாலும் மனிதன் செய்யும் பல்வேறு செயல்கள் காரணமாகவும் நிகழத்தக்க விபத்துக்கள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுக.
- பின்னர், மாணவர் கொண்டுவந்துள்ள தகவல்களுள் சிலவற்றில் அடங்கியுள்ள விபத்துக்கள் தொடர்பாகவும் அவை நிகழ்ந்தமைக்கான காரணங்கள் (இயற்கையான விபத்து/மனிதனின் செயற்பாடுகள் காரணமாக ஏற்பட்ட விபத்து) பற்றியும் உரையாடுக.
- பின்னர், மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவிற்கும் பின்வருவன போன்ற ஓர் அட்டவணை அடங்கிய ஒவ்வொரு பிறிஸ்டல் அட்டை வீதம் வழங்குக.

| இயற்கையான விபத்துக்கள் | மனிதனின் செயற்பாடுகள் காரணமாக நிகழ்ந்த விபத்துக்கள் |
|---|---|
| ........................................................... | ....................................................................... |
| ........................................................... | ....................................................................... |
| ........................................................... | ....................................................................... |
| ........................................................... | ....................................................................... |

- மாணவர் கொண்டு வந்த தகவல்களையும் ஒளிப்படங்களையும் அட்டவணையில் உரிய நிரல்களில் ஒட்டுமாறு / இணைக்குமாறு / கொளுவுமாறு வழிப்படுத்துக.
- அவை சரியான நிரலில் கொழுவப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.
- பின்னர், குழுக்கள் தயாரித்த அட்டவணைகளை வகுப்பு மாணவர் அனைவரும் பார்க்கத்தக்க வாறாக வகுப்பில் காட்சிப்படுத்த வழிப்படுத்துக.
- அந்தந்த அட்டவணையில் முன்வைக்கப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பாக உரையாடுக.
- இயற்கையாக நிகழும் சில விபத்துக்களுக்கு மனிதனின் பல்வேறு செயற்பாடுகள் காரணமாக அமைகின்றமையை எடுத்துக்காட்டுக.

  ***உதாரணம் :***

  * மரந்தறித்தல், மலைப்பகுதிகளில் மண்ணை வெட்டி அப்புறப்படுத்துதல் போன்றவை காரணமாக மண்சரிவு ஏற்படல்
  * தாழ்நிலங்களை நிரப்புதல், மணல் அகழ்தல் போன்றவை காரணமாக வெள்ளம் ஏற்படல் ... போன்றவை

- இயற்கையான காரணங்களாலும் மனிதச் செயற்பாடுகள் காரணமாகவும் பல்வேறு விபத்துக்கள் நிகழுகின்றமையை மேற்படி விடயங்களின் துணையுடன் மாணவர்க்கு எடுத்துக்காட்டுக.

செயற்பாடு **: 2**

- பாதுகாப்பற்ற இடங்கள், பாதுகாப்பற்ற சந்தர்ப்பங்கள் தொடர்பாக, மாணவருக்கு அறிவூட்டம் செய்வதற்காக கீழே உதாரணங்கள் தரப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் மற்றும் நிகழ்வுகளைப் பயன்படுத்தி மாணவருடன் கலந்துரையாடுக.

  பாதுகாப்பற்ற சந்தர்ப்பங்கள் :

  * வெள்ளம் ஏற்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் வெள்ள நீரில் நீராடச் செல்லல் / படகோட்டச் செல்லல்
  * மின்னல் மின்னும் வேளைகளில் திறந்த வெளியில் சஞ்சரித்தல்

* வாகன நெரிசல் உள்ள வேளைகளில் பாதையைக் கடத்தல்
* புகையிரதம் வருவது தெரிந்தும் தண்டவாளத்தைக் கடத்தல்
* புகையிரதத் தண்டவாளத்தின் வழியே நடந்துசெல்லல்
* பாதையில் இடது புறத்தின் வழியே நடந்துசெல்லல்
* பட்டாசு கொளுத்துதல்
* கண்ணாடிப் பாத்திரத்தைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
* கூரிய உபகரணங்களைக் (கத்தரிக்கோல், கத்தி போன்ற) கையில் ஏந்தியவாறு ஓடுதல்

**பாதுகாப்பற்ற இடங்கள் :**

* மாற்றுக் கடவை வழியோ, பாதுகாப்புப் படலையோ (Gate) இன்றி, பெருந்தெருக் களுக்குக் குறுக்காகப் புகையிரதப் பாதை அமைந்துள்ள இடங்கள்
* நீர்ச் சுழி, கூரிய முட்கள், கண்ணாடித் துண்டுகள் போன்றவை உள்ள நீர் நிரம்பியுள்ள இடங்கள்
* படிவரிசை / வழுக்கும் தன்மையுள்ள இடங்கள்
* மண்சரிவு ஏற்படத்தக்க இடங்கள்
* யானைகள் பாதையைக் கடக்கும் இடங்கள்
* பாம்புப் புற்று / பாம்புகள் சஞ்சரிக்கும் இடங்கள்

- மாணவர் அறிந்துவைத்துள்ள இவ்வாறான அனுபவங்கள் பற்றி அவர்களிடம் வினவுக.
- இவ்வாறாக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நிகழக்கூடிய விபத்துக்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காகவும் அவ்வாறான விபத்துக்கள் காரணமாக ஏற்படக்கூடிய பாதிப்புகளை இயன்றளவுக்குக் குறைப்பதற்காகவும் அல்லது முற்றாகத் தவிர்ப்பதற்காகவும் செய்யத் தக்கவை பற்றி மாணவருடன் கலந்துரையாடுக.
- மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பங்களையும் நிகழ்வுகளையும் உதாரணங்களாகக் கொண்டு, அவ்வாறான சந்தர்ப்பங்களில் செயற்பட வேண்டிய விதம் தொடர்பான தகவல்களை அட்டவணைப்படுத்துவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.

***உதாரணம் :***

| விபத்து | ஏற்படக்கூடிய பாதிப்பு | அதிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக / அதனைத் தவிர்ப்பதற்காக செய்யத்தக்கவை |
|---|---|---|
| 1. காலில் பாம்பு தீண்டல் | * உடலில் நஞ்சேறல்<br>* வைத்தியசாலையில் தங்கியிருக்க நேரிடுதல்<br>* அதிக நோவு<br>* உயிரிழப்பு | * திறந்தவெளியிலும் பாதுகாப்பற்ற இடங் களிலும் சஞ்சரிக்கும்போது கவனமாக இருத்தலும் பொருத்தமான பாதணிகள் அணிந்திருத்தலும்<br>* இரவில் பயணம் செய்வதாயின் ஒளியேற்று வதற்காக மின்சூள் போன்ற ஒரு சாதனத் தைப் பயன்படுத்தல் |
| 2. சூடேறிய சமையல் பாத்திரம் கார ணமாக சுடுகாயம் ஏற்படல் | * கையில் தீக்காயம் ஏற்படல்<br>* அதிக நோவு | * சூடேறிய பாத்திரங்களைப் பிடிப்பதற்காகப் பொருத்தமான துணித்துண்டு / குறடு / இடுக்கி பயன்படுத்துதல் |

- விபத்துக்களுக்கு ஆளாவதைவிட அவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக / தவிர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் உயிர்ச் சேதங்களையும் அதன் இழப்புகளையும் குறைத்துக்கொள்ளலாம் என்பதை மாணவர்க்கு விளக்குக.

செயற்பாடு : 3

- அறிமுகமில்லாதோருடன் செயற்படும்போது தாம் பாதுகாப்பாகவும் கவனமாகவும் செயற்பட வேண்டிய விதம் தொடர்பாக அறிவூட்டம் செய்வதற்காகப் பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுத்துக.
- இதற்காகக் கீழே உதாரணங்களாக எடுத்துக்காட்டப்பட்டவாறான சில நிகழ்வுகளைக் குறித்துக்கொள்க.

**உதாரணம் 1:**

∗ சரண் பாடசாலை விட்ட பின்னர், தன்னை அழைத்துச் செல்வதற்காகத் தாயார் வரும் வரை காத்திருக்கிறான். அண்டை வீட்டார் ஒருவர் அவனருகே சென்று தான் வீட்டில் கொண்டுபோய் விடுவதாகக் கூறி, அவனை அழைக்கின்றார்.

**உதாரணம் 2:**

∗ பவானி வீட்டில் தனியாக இருக்கின்ற ஓர் சந்தர்ப்பத்தில் வியாபாரத்திற்காக வந்த ஒருவர் ரொபி/சொக்கலேட் வாங்கித் தருவதாக அருகில் உள்ள கடைக்குத் தம்முடன் வருமாறு பவானியை அழைக்கின்றார்.

**உதாரணம் 3:**

∗ மாலன் பாடசாலை விட்டு, வீட்டிற்கு நடந்து செல்லும் வேளையில் வாகனமொன்றில் வந்த அறிமுகமில்லாத நபர் ஒருவர் வாகனத்தை நிறுத்தி, வாகனத்தில் ஏறுமாறும் வீட்டருகே கொண்டுபோய் விடுவதாகவும் கூறுகின்றார்.

- மேற்படி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பிள்ளைகள் செயற்பட வேண்டிய விதம் தொடர்பாக அவர்களது கருத்துக்களை வினவுக.
- இவ்வாறான மேலும் சில சந்தர்ப்பங்களை எடுத்துக்காட்டி, தமது வீட்டிற்கு வருகை தருகின்ற மற்றும் தாம் சந்திக்க நேரிடுகின்ற அறிமுகமில்லாத ஆட்களுடன் எவ்வாறாக நடந்துகொள்ள வேண்டும் என்பது குறித்து மாணவர்க்கு அறிவூட்டம் செய்க.

செயற்பாடு : 4

- சுற்றுப்புறச் சூழலில் இருக்கும் விசேடமான உபகரணங்கள்/கருவிகள்/சீருடை பயன்படுத்தும் தொழில்களிலும் விளையாட்டுக்களிலும் ஈடுபடுவோருடன் எளிமையான கலந்துரையாடலை நடத்துக.
- பின்னர் மாணவர்களைத் தனித்தனியாகவோ, குழுவாகவோ வழிப்படுத்தி, வெவ்வேறு தொழில்களில் ஈடுபடுவோர் பயன்படுத்தும் உபகரணங்கள், கருவிகள், ஆடையணிகள் பற்றிய தகவல்களைத் திரட்ட வழிப்படுத்துக. (பெற்றாருடன் செல்லும் பயணங்களின்போது இவ்வாறான தகவல்களைத் திரட்டுவதற்கேற்ற சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்ளுமாறு வருட ஆரம்பத்திலேயே பெற்றார்க்கு அறிவூட்டம் செய்க.)
- அந்தத் தகவல்களுடன் கூடவே அவற்றின் படங்கள், ஒளிப்படங்கள் போன்றவற்றையும் வகுப்பறையில் சேகரிக்க ஆவன செய்க.
- மாணவருடன் கலந்துரையாடி, அத்தகவல்களைக் கொண்டு, பின்வரும் அட்டவணையைக் கட்டியெழுப்ப வழிப்படுத்துக.

| தொழில் / விளையாட்டு | தொழிலின்போது / விளையாட்டின்போது அணிபவை | பயன்படுத்தும் உபகரணங்கள்/கருவிகள் |
|---|---|---|
| கிரிக்கெற் வீரர் | * வெள்ளை நிற சேட், நீண்ட காற்சட்டை, தலைக்கவசம், கையுறை, காற்காப்பு | துடுப்பு |
| கருங்கல் உடைப்பவர் | * தலைக்கவசம் | வெட்டுளி, கல்லுடைக்கும் சுத்தியல், |
| ......................... | ............................... | ........................................ |

- மேற்படி உடைகள், பயன்படுத்தும் உபகரணங்கள், கருவிகளால் கிடைக்கும் பயன்கள் மற்றும் பாதுகாப்புத் தொடர்பாக மாணவரது கவனத்தை ஈர்க்குக.

செயற்பாடு : 5

- வெவ்வேறு தொழில்களுக்காகப் பயன்படுத்தப்படும் தொழினுட்பச் சாதனங்கள் காரணமாக ஏற்படத்தக்க இழப்புகள், விபத்துக்கள் தொடர்பில் அறிவூட்டம் பெறுவதற்காகப் பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- வெவ்வேறு வேலைகளுக்காகத் தொழினுட்பச் சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றமையை, ஒளிப்படங்கள், விளக்கப்படங்கள், வீடியோ காட்சிகளின் துணையுடன் விளக்குக.

***உதாரணம் :***

∗ நெல் அறுவடை இயந்திரம், நெல் சூடுமிதிக்கும் இயந்திரம், நெல் குற்றும் இயந்திரம், மரம் அரியும் இயந்திரம், புல் வெட்டும் இயந்திரம் மற்றும் அன்றாட வேலைகளை இலகுபடுத்துவதற்காகப் பயன்படுத்தும் மின் அழுத்தி, கலக்கி (Blender), சோறு சமைப்பான் (Rice Cooker) போன்ற உபகரணங்கள்

- இவ்வாறான உபகரணங்கள், கருவிகளைக் கொண்டு செய்யத்தக்க வேலைகள் குறித்து மாணவரது அனுபவங்களையும் துணையாகக்கொண்டு கலந்துரையாடுக.
- இவற்றைப் பயன்படுத்தி வேலைகளை இலகுவாகச் செய்ய முடியுமெனினும் அவை காரணமாக விபத்துக்களும் இழப்புகளும் ஏற்பட இடமுண்டு என்பதையும் விளக்குக.


***உதாரணம் :***

∗ இயந்திரத்தினுள் கைவிரல்கள், கை, கால் போன்றவை சிக்கிக்கொள்ளல், மின் தாக்கு ஏற்படல் போன்றவை


- பின்னர், மாணவரைக் குழுக்களாகப் பிரித்து, மேற்குறிப்பிட்டவாறான ஓர் உபகரணத்தைப் பயன்படுத்தும் விதத்தையும் பயன்படுத்தும் வேளையில் நிகழக்கூடிய விபத்துக்களையும் வகிபாகமேற்று நடித்துக்காட்டச் சந்தர்ப்பம் அளிக்குக.

செயற்பாடு : 6

- பாதுகாப்பை ஏற்படுத்திக்கொள்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய ஒரு பொருளாகக் குண்டூசி / தையல் ஊசி தாங்கியை மாணவர்க்கு அறிமுகம் செய்க.
- அவ்வாறான ஒரு பொருளை ஆக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- அதற்காக, கீழே படத்தில் காட்டியுள்ளவாறு வட்ட வடிவத்தில் வெட்டிய துணித்துண்டுகள் 2 வீதம் மாணவர் ஒவ்வொருவருக்கும் வழங்குக. அத்தோடு அவற்றிலும் சற்றுச் சிறிய அளவுள்ள ஒரு துணி வட்டம் வீதம் வழங்குக.
- பெரிய வட்டங்களுள் ஒன்றின் வெளிப்பக்கத்தின் மீது உரு - 1 இல் காட்டியுள்ளவாறு சிறிய வட்டத்தை வைத்துக் கம்பளித்தையல் மூலம் தைத்துக்கொள்ளுமாறு வழிப்படுத்துக.
- பின்னர் பெரிய துணி வட்டங்கள் இரண்டினதும் உட்பக்கங்கள் வெளிப்புறமாக இருக்குமாறு வைத்து, ஏறத்தாழ ஐந்து சென்ரிமீற்றர் (இரண்டு அங்குல) அளவான வட்டப்பகுதி தவிர, ஏனைய பகுதிகளைப் படத்தில் காட்டியுள்ளவாறு நூலோடுமாறு வழிப்படுத்துக.



உரு 1



உரு 2

- தைத்த பகுதிகளின் சரியான பக்கம் வெளியே வருமாறு புரட்டிக்கொள்க.
- பின்னர், வாய்ப்பகுதியின் வழியே பஞ்சு அல்லது மென்மையான துணித் துண்டுகளைப் புகுத்தி, இறுக்கமாக நிரப்பிக்கொள்க.
- பின்னர், அதைத் தொங்கவிடுவதற்கு ஏற்றவாறாக வாய்ப்பகுதியில் போதுமான நீளமுள்ள ரிபன் / துணி நாடாத்துண்டினை வைத்து வாயுடன் சேர்த்து தைக்குக.



உரு 3



உரு 4

- பின்னர், உரு 4 இல் காட்டியுள்ளவாறு, வட்ட அமைப்பின் கீழ்ப்புறமாக சரிமத்தியின் ஊடாக, நூல் கோர்த்த தையல் ஊசியொன்றினைச் செலுத்திமேற்பக்கமாக வெளியே எடுத்து, இழுத்து வளைவுக்கோலம் உருவாகுமாறு நூலைச் சில தடவைகள் மத்தியின் ஊடாகச் செலுத்தி இறுக்கிக்கொள்க.
- இவ்வாறாக உரு 4 இற் காட்டியுள்ளவாறு நூலை நன்கு இறுக்கி, ஆக்கத்தைப் பூர்த்தி செய்க. (ஆக்கத்தைப் பூசணிக்காய் வடிவத்தில் அல்லது வேறு பொருத்தமான வடிவத்தில் ஆக்கிக்கொள்க.)
- இறுதியில் நூலை நன்று இறுக்கமாகக் கட்டுக.
- மாணவர்களது ஆக்கங்களைக் காட்சிப்படுத்திப் பாராட்டுக.

**செயற்பாடு : 7**

- தொற்றும் நோய்கள் மற்றம் தொற்றாத நோய்கள் ஏற்படுவதிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காகச் செய்யத்தக்கவை பற்றி மாணவருக்கு அறிவூட்டம் செய்வதற்காக உரையாடுக.
- மாணவர் தெரிந்து வைத்துள்ள தொற்றும் நோய்கள் பற்றி வினவி, அந்நோய்களுக்கு ஆளாவதற்கு ஏதுவான காரணங்கள் குறித்துக் கலந்துரையாடுக. மாணவரது அனுபவங் களையும் துணையாகக் கொள்க.

| நோய் | நோய் பரவும் வழி |
|---|---|
| டெங்கு | நோய்க்காவி நுளம்பு தீண்டுவதால் |
| யானைக்கால் நோய் | நோய்க்காவி நுளம்பு தீண்டுவதால் |
| மலேரியா | நோய்க்காவி நுளம்பு தீண்டுவதால் |
| வாந்திபேதி / கொலரா | அசுத்தமான உணவு, நீர் உட்கொள்ளல் |
| கழிச்சல் நோய் | அசுத்தமான உணவு, நீர் உட்கொள்ளல் |
| சீதபேதி | அசுத்தமான உணவு, நீர் உட்கொள்ளல் |
| சின்னமுத்து | நோய்க் காவிகளான ஆட்கள் மூலம் |
| கொப்பளிப்பான் | நோய்க் காவிகளான ஆட்கள் மூலம் |

- இவ்வாறாக தற்காலத்தில் பரவலாகக் காணப்படும் தொற்றா நோய்கள் தொடர்பாகவும் மாணவரது கவனத்தை ஈர்த்து, அந்நோய்கள் ஏற்படுவதற்கு ஏதுவாகத்தக்க பிரதான காரணங்கள் குறித்து மாணவருடன் உரையாடுக.

***உதாரணம் :***

| நோய் | நோய் ஏற்பட ஏதுவாகத்தக்க காரணங்கள் |
|---|---|
| * நீரிழிவு | * இனிப்பான உணவுகள், மாப்பொருள் உணவுகள் அதிகம் உண்ணுதல் |
| * இரப்பையழற்சி | * உடன் உணவுகள், எண்ணெய் மற்றும் மிளகாய் அதிகம் அடங்கிய உணவுகள் உட்கொள்ளல்<br>* குறித்த வேளையில் உணவு உண்ணாதிருத்தல் |
| * உயர் குருதியமுக்கம் இதயநோய்/பருத்த உடல் | * எண்ணெய், கொழுப்பு அடங்கிய்ள்ள உணவுகள் அதிகளவில் உண்ணல் |

- தொற்றாத வகை நோய்கள் ஏற்படுவதற்குப் பிரதானமாக மனிதனின் தவறான வாழ்க்கைக் கோலங்களே காரணமாக அமைகின்றமையை எடுத்துக்காட்டுக.
- தற்காலத்தில் பாடசாலை மாணவர்கள் பரவலாக இவ்வாறான நோய்களுக்கு ஆளாகின்றமையையும் ஆரோக்கியமாக வாழ்வதற்கு இவ்வாறான நோய்களிலிருந்து விலகியிருப்பதற்குத் தேவையான வழக்கங்களைப் பேணிவருவது முக்கியமானது என்பதையும் மாணவர்களுக்கு எடுத்துக்காட்டுக.

**செயற்பாடு : 8**

- மாணவர்களை திறந்த வெளிக்கு அழைத்துச் சென்று வட்டமாக நிறுத்தி நடக்குமாறு வழிப்படுத்துக.
- வட்டத்திலிருந்து 10 மீற்றருக்கு வெளியில் நகரங்கள் 4 இனை வேறுவேறாக நிறுவிக்கொள்க.
- மாணவர்கள் நடந்து செல்லும் வேளையில் ஆசிரியர் நகரொன்றின் பெயரைக் குறிப்பிடுக.
- பின்னர் அந்நகரின் பெயருக்குரிய இடத்தை நோக்கி மாணவர்கள் ஓடிச்செல்ல வேண்டும்.
- அந்த இடத்திற்குத் தாமதமாகி வருகை தரும் மாணவர்கள் மூவருக்கு வேறு ஏற்கனவே திட்டமிட்ட இலகுவான செயற்பாடுகளில் பங்குபற்றச் செய்க.
  உதாரணம்: பாய்தல், கை தட்டுதல், நின்ற இடத்தில் நிற்றல் முதலியன
- இவ்வாறு வேறொரு நகரத்தின் பெயரைக் கூறி விளையாட்டினைத் தொடர்ச்சியாக நடாத்துக.
- அறிவுறுத்தல்களுக்கமையச் செயற்பட்டு வெற்றி பெற்ற மாணவர்களை பாராட்டுக.

**செயற்பாடு : 9**

- பாதுகாப்புத் தொடர்பான செய்திகள் / தகவல்களைக் கொண்ட பாடல்கள், கவிதைகள் மற்றும் ஆசிரியர் புனைந்த பாடல்களைத் திரட்டிக்கொள்க.
- அவற்றில் கூறப்படும் பாதுகாப்புத் தொடர்பான செய்திகள் வெளிப்படுமாறு ஆடிப்பாடுமாறு மாணவரை வழிப்படுத்துக.
  உதாரணம் : பாதுகாப்புப் பற்றிக் கூறும் "பரமார்த்த குரு - சீடர்" கதைப் பாடல்களை ஆடிப்பாடச் சந்தர்ப்பமளிக்குக.

பரமார்த்த குரு, சீடர்கள் எங்கு எனத் தேடுகிறார். சீடர்கள் கவலையுடன் வெவ்வேறு இடங்களில் அமர்ந்திருக்கின்றனர். பரமார்த்த குழு, சீடர்களிடம் ''ஏன் கவலையுடன் இருக்கின்றீர்கள்?" என வினவுகிறார். அல்லது சீடர்கள் ஒவ்வாருவராக எதிரேவந்து நாடகப் பாணியில் தமக்குக் கவலை ஏற்பட்டதற்கான காரணத்தைக் கூறுகின்றனர். (இதனைப் பின்வருவது போன்று இசை - நாடகம் போல் முன்வைக்குக.)

மட்டி : கிணற்றடிக்குப் போன பாட்டி தடுக்கி வழுக்கி விழுந்தார்.
குரு : கிணற்றடியில் பாசிப்படிவைக் கழுவித்தள்ளச் சரியாகும்.
மடையன்: அடுப்பில் இருந்த பானையை கவனமின்றிப் பிடித்தேனே.
குரு : துணித்துண்டால் பிடித்திருந்தால் சூடுபட்டு இருக்காதே.
மூடன் : தெருவில் ஓடிச் சென்ற நாய் வெகுண்டு துரத்தி வந்ததே.
குரு : கட்டாக்காலி நாய்க்கு நீர் கல்லெறிந்தாய் அல்லவா?
மிலேசகன்: உயர்ந்த மரத்தில் ஏறினேன். கால் வழுக்கி விழுந்திட்டேன்.
குரு : உயர மரத்தில் காய் பறிக்க நீண்ட தடி (கொக்கி) உதவுமே.
பேதை : ஊஞ்சல் உயரச் சென்றதே தங்கை தவறி விழுந்தாளே.
குரு : ஊஞ்சல் ஆடும் போதிலே பற்றிப் பிடிக்க வேண்டுமே.
குரு : சீடர்களே வாருங்கள்.
கூறுவதைக் கேளுங்கள்.
கரிசனையுடன் செயற்பட்டாலே!
பாதுகாப்புப் பெற்றிடுவீர்!

சமூக ஒருமைப்பாட்டுக்கென எழுதப்பட்டுள்ள கதைத்திரட்டில் அடங்கியுள்ள ''அன்பான குளவிகள்'' எனும் கதையை இக்கருப்பொருளுக்காகப் பயன்படுத்துக.

## கருப்பொருள் 8 : நீர்

நீரின் தூய்மையைப் பேணவும் நீரினைப் பல்வேறு நோக்கங்களுக்கெனப் பயன்படுத்தவும் நீரை வளமாகக் கருதி நடவடிக்கை எடுப்பதும் இன்றைய காலத்தில் முக்கியமானதாகும். எதிர்காலத்தில் இது இன்றையதைவிட மிக முக்கியமானதாக அமைந்திருக்கும். நம் எதிர்காலச் சந்ததியினர் நீர் தொடர்பாக ஆராய்வு ரீதியாக நடந்து நீரின் தூய்மையை பேணுவதற்கு உரிய அடிப்படையைச் சிறுபராயம் முதலே ஆரம்பிக்க வேண்டும்.

இந்தத் தொனிப்பொருளில் நீரைப் பயன்படுத்திப் பல்வேறு கையாண்டுபார்த்தல்களை மேற்கொள்வதிலும் நீரின் தூய்மையைப் பாதுகாப்பதிலும் கவனம் செலுத்தப்படும். அவ்வாறே அசுத்தமான நீரின் காரணமாக சுகாதார ரீதியான வாழ்க்கைக்கு ஏற்படும் பாதுகாப்புகள் பற்றிய விளக்கத்துடன் நடந்துகொள்வது மாணவரின் பணியாகும்.

**தேர்ச்சிகள் :**

- நீருடன் பல்வேறுபட்டவை இடைத்தாக்கமடையும் விதத்தைக் கண்டறிந்து அறிக்கைப் படுத்துவார்.
- பல்வேறு வழிகளின் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் நீரை வினைத்திறனாக முகாமை செய்து பாதுகாப்பாக நுகர்வார்.
- நீரினால் ஏற்படக்கூடிய பாதிப்புகள், விபத்துகள் தொடர்பாகக் கண்டறிந்து அவற்றைக் குறைப்பதற்குப் பங்களிப்புச் செய்வார்.
- நீரின் தொழிற்பாடு தொடர்பான பல்வேறு ஆக்கங்களில் ஈடுபடுவார்.
- நீர் சார்ந்த விளையாட்டுக்களை உருவாக்கி அவ் விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- நீர் சார்ந்த பல்வேறு சந்தர்ப்பங்களை மகிழ்வுடன் சமர்ப்பிப்பார்.

**கற்றற்பேறுகள் :**

- நீரின் தன்மை வேறுபடும் விதத்தைக் கையாண்டு பார்ப்பார்.
- நீரின் தொழிற்பாட்டைத் தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்.
- அசுத்தமான நீரின் காரணமாக ஏற்படும் பாதிப்புகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்.
- நீர் சார்ந்ததாகத் தொழிற்படத்தக்க ஆக்கங்களில் ஈடுபடுவார்.
- நீரின் கொண்டுசெல்கையுடன் கூடியதாக ஆக்கப்பட்ட விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- நீரைப் பயன்படுத்திப் பல்வேறு ஒலிகளை எழுப்பக்கூடிய விதம் பற்றிய மகிழ்வான அனுபவங்களைப் பெறுவார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறை :**
**செயற்பாடு : 1**

- நாம் எமக்குத் தேவையான நீரை எவ்வாறு பெற்றுக்கொள்கின்றோம் என வினவுக. (ஆறுகள், ஓடைகள், குளங்கள், தடாகம், கிணறு, குழாய்க்கிணறு, குழாய் நீர், ....)
- சூழலில் காணப்படும் இவ்வாறான நீர் மாதிரிகளை குழுவாக கண்ணாடித் தம்ளர்களில் சேகரித்துக்கொள்ள வழிப்படுத்துக. அந்த நீர் மாதிரிகளை அவதானிக்க மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குக. அந்த நீர் மாதிரிகளின் ஒற்றுமை - வேற்றுமைகளைக் கலந்துரையாடு வதற்கு மாணவர்களை வழிப்படுத்துக.


A - குழாய் நீர் / கிணற்று நீர்


B - சேற்று நீர்


C - இலையுக்கலுடன் கூடிய நீர்

- A, B, C ஆகிய கண்ணாடிக் குவளைகளில் உள்ள நீர் மாதிரிகளின் நிறம், மணம் ஆகியன தொடர்பாக மாணவர்களின் கவனத்தை வழிப்படுத்துக.
- B, C ஆகிய குவளைகளில் உள்ள நீருடன் A குவளையில் உள்ள நீரை ஒப்பிட்டு கருத்துக் கூறுவதற்கு வழிப்படுத்துக.
- அந்தக் கலந்துரையாடலின் ஊடாக தூய்மையான நீருக்கு மணமோ, நிறமோ இல்லையெனக் குறிப்பிடுக.
- வெவ்வேறு வடிவங்களும் ஒரே கொள்ளளவும் கொண்ட ஊடுகாட்டத்தக்க பாத்திரங்கள் சிலவற்றைப் பெற்றுக்கொள்க.
- அந்தப் பாத்திரங்களில் கொள்ளக்கூடிய நீரின் அளவு பற்றி யாது கூறமுடியுமென வினவுக.
- அந்தப் பாத்திரங்களில் நீரை நிரப்பி நீருக்குத் திடமான வடிவம் இல்லை அது கொண்டுள்ள பாத்திரத்தின் வடிவத்தைப் பெறும் என்பதை உணர்ந்துகொள்ள மாணவருக்குச் சந்தர்ப்பம் வழங்குக.

**செயற்பாடு : 2**

- தகரப்பேணி மூடி, மெழுகுவர்த்தி, தீப்பெட்டி, மர அல்லது பிளாத்திக்குக் கைப்பிடியுடன் கூடிய உலோகக் கரண்டி, நீர் கொண்ட முகவை போன்றவற்றை மாணவர் குழுக்களுக்கு ஏற்ற எண்ணிக்கையில் வழங்குக.
- பின்னர், பின்வருமாறு செய்துகாட்டலை மேற்கொள்க.
- மெழுகுவர்த்தியொன்றை ஏற்றி, தகரப்பேணியின் மூடியின்மீது நிறுத்துக. உலோகக் கரண்டியில் சிறிதளவு நீரை எடுத்து மெழுகுவர்த்திச் சுவாலை மீது பிடித்துக்கொள்க.



- அவ்வாறு சூடாக்கியவாறு உலோகக் கரண்டி மீதுள்ள நீரை மெழுகுதிரிச் சுவாலையில் சூடாக்கும்போது யாது நடைபெறுமென வினவுக. மாணவரது கருத்தக்களை வெளியிடச் சந்தர்ப்பம் வழங்குக.

  ***உதாரணம் :***
  - ∗ நீர் சூடாகும்
  - ∗ நீர் படிப்படியாகக் குறையும்
  - ∗ நீர் ஆவியாகும்

- நீரைச் சூடாக்கும்போது நடப்பவற்றை அவதானிக்க வழிப்படுத்துக.
- சூடாக்கும்போது நீருக்கு நடப்பவற்றை அவதானிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஆசிரியரின் மேற்பார்வையின் கீழ் இந்தச் செயற்பாட்டைக் கையாண்டு பார்ப்பதற்கு மாணவர் குழுக்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குக.
- இதன் மூலம் நீரைக் கொதிக்கும்வரை சூடாக்கும்போது ஆவியாதலை இனங்காணச் சந்தர்ப்பமளிக்குக.

செயற்பாடு : **3**

படிமுறை - 1

- பின்வரும் செயற்பாடுகளில் மாணவர் குழுக்களை வழிப்படுத்துக.
- நன்கு சூடாக்கப்பட்ட உலோகக் கரண்டிமீது நீர்த்துளியொன்றை இடும்போது யாது நிகழும் எனக் கருத்துத் தெரிவிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
    - ∗ ஒலி எழும்
    - ∗ நீர் ஆவியாகும் எனும் விடைகளைப் பெற வழிப்படுத்துக.
- உலோகக் கரண்டியைச் சிறிது நேரம் மெழுகுதிரிச் சுவாலையில் பிடித்த பின்னர், மை நிரப்பி (ink filler / dropper) மூலமாக நீர்த் துளியொன்றை அந்தக் கரண்டிமீது விழச் செய்க.
- நிகழ்வதை அவதானிக்கச் செய்க.
- சூடாக்கப்பட்ட உலோகக் கரண்டிமீது இடப்பட்ட நீர்த்துளிக்கு நடப்பவை பற்றி எதிர்வுகூறிய விடயங்கள் மெய்யாக உள்ளதா எனக் கூறுவதற்குச் சந்தர்ப்பமளிக்குக.
- இரண்டாவது செயற்பாட்டிலும் இதிலும் நடப்பவற்றை ஒப்பிட்டு, சிந்தித்துக் கருத்துத் தெரிவிக்க மாணவர்களை வழிப்படுத்துக. (இச்செயற்பாட்டை நடாத்தும்போது மாணவரது பாதுகாப்புத் தொடர்பாகக் கவனஞ் செலுத்துக.)

படிமுறை - 2

- நீராவியைக் குளிர்த்தும்போது / நீராவி குளிரும்போது யாது நடைபெறும் என மாணவரது முன் அனுபவங்களின் அடிப்படையில் வினவுக.
- பின்னர் பின்வரும் செயற்பாடுகளை மேற்கொண்டு நீரினால் குளிர்த்தும் விதத்தைச் செய்துகாட்டுக.
- மர அல்லது பிளாத்திக்குப் பிடி கொண்ட உலோகக் கரண்டியில் சிறிதளவு நீரை எடுத்து, அதனை மெழுகுதிரிச் சுவாலைமீது பிடிக்கவும். அதன்போது வெளியேறும் நீராவிக்கு மேலே தகரப்பேணி மூடியை / உலோகத் தகட்டினை / கண்ணாடித் தட்டை பிடித்து அதன் மீது நீராவியைப் படச் செய்க. நடப்பவற்றை அவதானிக்கச் செய்க.
- நீரைக் கொதிக்கும்வரை சூடாக்கும்போது அது நீராவியாக மாறும் விதம் மற்றும் நீராவியை குளிரச்செய்யும் போது அது மீண்டும் நீராக மாறும் விதம் ஆகியவற்றை அவதானிக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- பின்னர், நீராவி மூலமாகப் பெறத்தக்க பயன்கள் பற்றி மாணவரிடம் வினவுக.

    ***உதாரணம் :***
    - ∗ பிட்டு / இடியப்பம் அவிப்பதற்கு நீராவி பயன்படுத்தப்படல்
    - ∗ உள்நாட்டு மூலிகைகளை நீராவியில் அவித்தல்

செயற்பாடு : **4**

- வெற்று முகவை, பனிக் கட்டிகள் இடப்பட்ட முகவை, சாதாரண நீர் கொண்ட முகவை, சூடான நீர் கொண்ட முகவை ஆகியவற்றைத் தயார்செய்து வைத்துக்கொள்க. (முகவைக்குப் பதிலாக நடுத்தர அளவான கண்ணாடிக் குவளைகளைப் பயன்படுத்தலாம்)
- ஐஸ் கட்டிகளைக் கொண்ட முகவையிலிருந்து பனிக் கட்டிகளை எடுத்து, மாணவர்களது கைகளில் கொடுத்து அவர்களால் உணரப்படும் உணர்வை வினவுக.
    - ∗ குளிர்ச்சி / குளிர்
    - ∗ ஈரலிப்பாக உணருதல்
- பின்னர் பனிக் கட்டியொன்றை
    - ∗ வெற்று முகவையில்
    - ∗ குளிரான நீர் கொண்ட முகவையில்
    - ∗ சூடான நீர் கொண்ட முகவையில்

    இடும்போது நிகழ்பவை எவையென மாணவரிடம் வினவுக.

- அவர்களது எதிர்வுகூறல்களைப் பலகையில் எழுதுக.
    * பனிக்கட்டி தாழும்
    * பனிக்கட்டி மிதக்கும்
    * பனிக்கட்டியின் அளவு சிறியதாகும்
    * பனிக்கட்டி உருகும்
    (முதலில் எந்தப்பாத்திரம், அடுத்து எந்தப்பாத்திரம், அதற்கடுத்து எந்தப்பாத்திரம் என்றவாறு)
- சம அளவான பனிக்கட்டிகள் சிலவற்றைப் (பதினைந்து) பெற்றுக்கொள்க.
- அவற்றுள் ஐந்தை வெற்றுப் பாத்திரத்தி (முகவை) லும் மேலும் ஐந்தைச் சாதாரண நீர் கொண்ட பாத்திரத்தி (முகவை)லும் மேலும் ஐந்தைச் சூடான நீர் கொண்ட பாத்திரத்தி (முகவை)லும் இடுக.

- நடப்பவற்றை அவதானித்துக் கூற வழிப்படுத்துக.
- பின்னர் எந்த பாத்திரத்தில் இடப்பட்ட பனிக்கட்டி முதலில் உருகும் என வினவுக.
- ஏன் அவ்வாறு நிகழ்கிறது எனக் கருத்துத் தெரிவிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- பனிக்கட்டிகளை உருகாது நீண்ட காலம் பேணுவதற்குச் செய்யக்கூடியது யாதென மாணவரிடம் வினவுக. அனுபவங்களின் உதவியுடன் பின்வரும் விடயங்களை ஞாபகப்படுத்துக.
    ***உதாரணம் :***
    * மேலே மரத்தூளைப் பரவி மூடி வைத்தல்
    * ரெஜிபோம் பெட்டியில் இட்டு மூடி வைத்தல்

- நடைமுறையில் பனிக்கட்டிகள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களைப் பற்றிக் கலந்துரையாடுக.
    ***உதாரணம் :***
    * மீனைப் பழுதடையாது பேணுதல் (நற்காப்புச் செய்தல்)

**செயற்பாடு : 5**

- வறட்சியான பிரதேசங்களின் படம்/ஒளிப்படம்/வீடியோக்காட்சி ஆகியவற்றை மாணவர்களை அவதானிக்கச் செய்க.
- அதன் துணையுடன் நீரின் முக்கியத்துவம் பற்றி மாணவருடன் கலந்துரையாடுக.
- நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் எனும் உணர்வை மாணவர்களின் மனதில் நிலைநிறுத்துக.
- இதற்கென வீட்டில், பாடசாலையில், பொது இடத்தில் நீர் விரயமாகும் சந்தர்ப்பங்கள் பற்றி மாணவரிடம் வினவுக.
- அது தொடர்பான கரிசனையுடன் நீர் வளம் விரயமாவதைத் தவிர்ப்பதற்கு மாணவரால் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கை பற்றிக் கலந்துரையாடுக.

**செயற்பாடு : 6**

- நீர் மாசடையும் வழிகள் பற்றி மாணவரிடம் வினவுக.
- நீர் மாசடையும் வழிகள் கொண்ட படங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவந்த கட்டுரைகள், வீடியோக்காட்சி ஆகியவற்றைத் தயார் செய்து கொள்க.
- மாணவர்களைச் சில குழுக்களாகப் பிரித்து நீர் மாசடையும் வழிகளை கலந்துரையாடி நீர் மாசடையும் முறைகளைப் பட்டியற்படுத்துக.
    - மனிதச் செயற்பாடுகளின் விளைவாக வெளியேற்றப்படும் கழிவுகள் நீருடன் சேர்தல்.
    - கழிவுகள் குவிக்கப்பட்டிருக்கும் இடங்களிலிருந்து வெளிப்படும் பாதகமான பதார்த்தங்கள் நீருடன் சேர்தல்

* எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் நீருடன் சேர்தல்
* விவசாய நடவடிக்கைகளின்போது பயன்படுத்தப்படும் பீடை நாசினிகள், இரசாயனப் பசளைகள் நீருடன் கலத்தல்

- மேற்கூறப்பட்ட வழிகளில் நீர் மாசடைவதுடன் அதனைத் தவிர்த்து சூழலைப் பாதுகாப்பது எமது கடமையென மாணவர்களுக்கு விளக்குக.
- அதற்கமைய நாம் வாழும் சூழலை சுத்தமாகப் பேணுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துக.
- அதற்கமைய,

* வயிற்றோட்டம்
* செங்கண்மாரி
* ஈரலழற்சி (மஞ்சட் காய்ச்சல்)
* வாந்திபேதி
* கழிச்சல்

- மேற்படி நோய்கள் பற்றி மாணவருக்கு விளக்குக.
- மாசடைந்த நீரை நுகர்வதால் மனிதனுக்கு மட்டுமன்றி விலங்குகளுக்கும் பாதிப்பு ஏற்படுவதுடன் சூழலின் அழகும் குறையும் என வலியுறுத்துக.

**செயற்பாடு : 7**

- மாசடைந்த / அசுத்தமான நீரைப் பருகுவதால் ஏற்படக்கூடிய பாதகமான நிலைமைகள் மற்றும் அவற்றைத் தவிர்த்தல் ஆகியவை பற்றி அறிவுறுத்துவதற்கு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய அலுவலர் ஒருவரைப் பாடசாலைக்கு அழைக்கவும்.
- அது தொடர்பான துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டி ஆகியவற்றை அந்தக் காரியாலயத்தில் இருந்து பெற்றுக் காட்சிப்படுத்துக. அது பற்றிக் கலந்துரையாடுக.
- அவ்வாறான தகவல்கள் எடுத்துக்காட்டப்படும் வகையில் சுவரொட்டியைத் தயாரிப்பதற்கு மாணவர் குழுக்களுக்கு வழங்குக.

**செயற்பாடு : 8**

- சம அளவான, ஊடுகாட்டும் தன்மையுள்ள மூன்று பாத்திரங்களைப் பெறுக.
- உணவு வகைச் சாயத்தைப் பயன்படுத்தி நீலம், சிவப்பு, மஞ்சள் நிறம் சேர்த்து நிறமூட்டிய நீரின் சம அளவுகளைத் தனித்தனியே அம்மூன்று பாத்திரங்களிலும் இடுக.
- படத்தில் காட்டியுள்ளவாறு பாத்திரங்களையும் அருகருகே வரிசையாக வைத்து அப் பாத்திரங்களின் உள்ள மூன்று நிறமூட்டிய நீருடன் தொடுகையடையுமாறு ரிசூத்தாள்களை இடுக.




- நிறமூட்டிய நீர் செல்லும் விதம், நிறங்கள் ஒன்றுடனொன்று கலக்கும் விதம்,புதிய நிறங்கள் தோன்றும் விதம் ஆகியவற்றை அவதானிக்க வழிப்படுத்துக

- பாத்திரங்களின் எண்ணிக்கையை அதிகரித்து, வெவ்வேறு நிறங்களால் நிறமூட்டிய நீரைப் பயன்படுத்தி, இச்செயற்பாட்டைச் செய்யுமாறு மாணவரை வழிப்படுத்துக.

**செயற்பாடு : 9**

- பாய்ந்தோடும் நீர் விழுவதால் சுழலும் நீர்ச் சுழலியைத் தயாரிக்க மாணவரை வழிப் படுத்துக.



- சுற்றிவர மரக் கீலங்கள், யோக்கட் கரண்டிகளை இணைத்து இச்சக்கரத்தைச் செய்துகொள்ள முடியும். (ரெஜிபோம் போன்ற ஒரு பொருளினால் செய்த சில்லு/சக்கரம்)
- இந்தச் சக்கரத்தை நீரோட்டத்திற்குக் குறுக்கே பிடிக்கும்போது அது சுழலும் விதத்தை அவதானிக்க.
- சக்கரம் சுழல்வதில் நீரோட்ட வேகம் செல்வாக்குச் செலுத்தும் விதத்தை அவதானிக்க வழிப்படுத்துக.
- பயிர்களை விலங்குகளிடமிருந்து காப்பாற்றப் பயன்படுத்தப்படும் ஒழுங்கமைப்பாக நீர்வெருளியை அறிமுகஞ்செய்க.
- வகுப்பறை மட்டத்தில் இவ்வாறான அவதானிப்புகளை மேற்கொண்டு மாணவரது அனுபவங்களைப் பெறுக.

**செயற்பாடு : 10**

- பீங்கான் களியினால் செய்யப்பட்ட ஒரே அளவான பாத்திரங்கள் - 6 இனை சேகரித்துக் கொள்க.
- அந்தப் பாத்திரங்களில் மில்லி லீற்றர் 100 தொடக்கம் மில்லி லீற்றர் 600 வரையான ஒழுங்கில் அமையுமாறு பாத்திரங்களில் நீரை நிரப்புக.
- இசைப்பதற்கு ஏற்றவாறான மரக் கைபிடி கொண்ட முன்முனை வட்டவடிவமாக அமைக்கப்பட்ட தடி/குச்சி போன்ற உபகரணத்தைத் தயாரித்துக் கொள்க.
- வகுப்பிலுள்ள மாணவர்கள் எல்லோரையும் ஒவ்வொருவராக இந்தப் பாத்திரங்களில் தட்டி ஒலி எழுப்புவதற்குச் சந்தர்ப்பம் வழங்குக.
- எழுப்பப்படும் ஒலியின் தன்மை பாத்திரத்திலுள்ள நீரின் அளவுக்கு அமைய வேறுபடுவதை உணரச் செய்க.
- பின்னர் பின்வரும் சொற்கட்டுகளைப் பாத்திரங்களில் வாசிப்பதற்கு மாணவரை வழிப்படுத்துக.

  * தக தக தக
  * தகிட தகிட (ஒரு பாத்திரத்திற்கு ஒரு எழுத்து வீதம்)

- மாணவர்களை மகிழ்வாகப் பாத்திரங்களில் தட்டி இசைத்து அனுபவம் பெறச் செய்க.

**செயற்பாடு : 11**

- வகுப்பிலுள்ள மாணவர்கள் அனைவரையும் திறந்தவெளிக்கு அழைத்துச் செல்க.
- ஒவ்வொரு மாணவனுக்கும் 6 x 6 x 6 சென்றி மீற்றர் அளவிலான ஸ்பொன்ஜ் துண்டு வீதம் வழங்குக.
- ஒவ்வொரு மாணவருக்கும் முன்பாக 5 m தூரத்தில் புனலுடன் கூடியதான / புனல் அற்ற 500 ml வெற்றுப் போத்தலை வைக்குக.
- போதியளவு நீர் நிரப்பப்பட்ட 03 பாத்திரங்களை ஆரம்பிப்புக் கோட்டிற்கு அண்மையில் வைக்க.
- ஆசிரியரது சமிக்ஞைக்கு அமைய மாணவரது கையிலுள்ள ஸ்பொன்ஜ் நீரிலிட்டு நன்கு நனைத்து (நீரை உறிஞ்சிக்கொள்ளச் செய்து) ஓடிச்சென்று தனக்குரிய போத்தலை நிரப்பிக்கொள்ள வேண்டும். (போத்தல் நிரம்பும்வரை இந்த விளையாட்டில் ஈடுபடச் செய்க.)
- முதலில் போத்தலை நிரப்பிய மாணவர் வெற்றி பெறுவார். மாணவரது எண்ணிக்கை அதற்கமையக் குழுக்களாகப் பிரித்து விளையாட்டில் ஈடுபடச் செய்க.
- இந்நிலையில் வெற்றிபெறும் குழுவைத் தெரிவுசெய்து கொள்ளலாம்.

## கருப்பொருள் 9 : போக்குவரத்து

பெருந்தெருக்களில் கரிசனையுடன் (Road safety) செயற்படுவதோடு பொது வாகனங்களைப் பாதுகாத்துக் கவனமாக அவற்றைப் பயன்படுத்தும் மக்களைக் கொண்ட பயன்தரு தன்மைகொண்ட சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்குப் பங்களிப்புச் செய்தல் அவசியமாகும்.

எதிர்காலத்தில் அவ்வாறான முதிர்ச்சி கொண்ட பயணிகள், சாரதிகள் போக்குவரத்து முயற்சியாண்மையாளர்கள், பணியாட்கள் என்ற வகையில் நடந்துகொள்வதற்கான அடிப்படை அனுபவங்களைப் பெறத்தக்க செயற்பாடுகள் இந்தக் கருப்பொருளில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**தேர்ச்சிகள் :**

- வீதியில் பயணிப்போரினால் விதிமுறைகள், ஒழுக்கம் ஆகியன பற்றிய விளக்கத்துடன் வீதிகளைப் பயன்தரத்தக்க விதத்திலும் பாதுகாப்பாகவும் பயன்படுத்துவார்.
- வாகனங்களால் ஏற்படுத்தப்படும் பாதகமான செல்வாக்குகளை ஆராய்ந்து அவற்றிலிருந்து பாதுகாப்பினைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுப்பார்.
- பொது வாகனங்களினால் மேற்கொள்ளப்படும் சேவைகளை மதிக்கவும் அவற்றைப் பாதுகாப்பதற்கும் பங்களிப்புச் செய்வார்.
- சேவையை வினைத்திறனாக மேற்கொள்வதற்குப் பல்வேறு வகைப்பட்ட பொறிமுறைச் சக்தியுடன் கூடிய வாகனங்கள் பயன்படுத்தப்படும் விதத்தை ஆராய்ந்து அறிக்கைப் படுத்துவார்.
- போக்குவரத்துடன் தொடர்பான பல்வேறு சந்தர்ப்பங்களை ஒட்டிய ஆக்கங்கள் மேற்கொள்வார்.
- பல்வேறு வகைப்பட்ட பயணங்களை அடிப்படையாகக் கொண்ட அசைவுச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.

**கற்றற்பேறுகள் :**

- பெருந்தெருக்களில் பயணிக்கும்போது வீதிச் சமிக்ஞைகளுக்குக் கட்டுப்பட்டு, கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளுக்கு ஏற்ப நடந்துகொள்வார்.
- பெருந்தெருவில் பயணிக்கும்போது வீதி விதிமுறைகளைப் பின்பற்றாமை காரணமாக ஏற்படக்கூடிய விபத்துக்களை இனங்கண்டு, அவற்றிலிருந்து தவிர்த்துக்கொள்ளத் தேவையான படிமுறைகளைக் கூறுவார்.
- போக்குவரத்திற்கெனப் பயன்படுத்தும் வாகனங்கள் மற்றும் அவற்றின் பயன்கள் ஆகியவற்றைக் கூறுவார்.
- பொது வாகனங்களைப் பாதுகாப்பதற்குச் செய்யக்கூடியவற்றை விவரிப்பார்.
- போக்குவரத்தின்போதான நடத்தைகள் வெளிக்காட்டப்படக்கூடிய ஆக்கத்திறன்மிக்க விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- போக்குவரத்துச் சார்ந்த அசைவுச் செயற்பாடுகளில் வகிபாகமேற்று நடித்துக் காட்டுவார்.
- சுய பாதுகாப்பு தொடர்பான செய்திகள் அடங்கிய சுவரொட்டிகளை நிருமாணிப்பார்.
- வாகனங்களின் பயன்கள் மற்றும் அவற்றைப் பயன்படுத்தும்போது நடந்துகொள்ள வேண்டிய விதம் பற்றிய செய்திகள் அடங்கிய கவிதைகள், பாடல்களைப் பாடுவார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்:**

**செயற்பாடு : 1**

**படிமுறை - 1**

- நடந்து செல்வோரினால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய விதிமுறைகள் பற்றியும் வாகனச் சாரதிகள் என்ற வகையில் வீதி விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டிய விதம் பற்றியும் மாணவர்களுக்கு அறிவுறுத்திப் பின்வரும் செயற்பாடுகளில் அவர்களை ஈடுபடுத்துக.
- இதற்கென பிரதான வீதியில் பாதசாரிகள் கடப்பதற்கென உள்ள மஞ்சள் / வெள்ளை கோடிடப்பட்ட இடத்திற்கு மாணவரை அழைத்துச் செல்க. இல்லையேல் அவ்வாறான ஒரு மாதிரியைப் பாடசாலையில் தயார்செய்க.
- அந்த இடத்திலிருந்து நடந்து செல்பவரினால் (பாதசாரி) பாதையில் பயணிக்கும்போது கைக்கொள்ளப்பட வேண்டிய விதிமுறைகள் பற்றி மாணவருக்கு அறிவுறுத்துக. மேலும் வீதியைக் கடப்பதற்குப் பாதசாரிகள் கடவையைப் பயன்படுத்தும் விதத்தையும் விளக்குக.

***உதாரணம் :***

* வீதியின் வலது / இடது ஆகிய இரண்டு பக்கங்களையும் நன்கு அவதானித்துப் பாதுகாப்பாக வீதியைக் கடப்பதற்கான சந்தர்ப்பம் வரும் வரை பொறுமையாக, வீதியின் ஓரத்தில் நிற்றல்
* வாகனங்கள் அடிக்கடி பயணிக்கும் வீதியில் வாகனங்களில் செல்லும் சாரதிகள் நீங்கள் கடப்பதற்கு ஆயத்தமாக உள்ளீர்கள் என்பதைக் கவனிக்கின்றனர் என்பதை உறுதிப்படுத்திய பின்னர் மட்டும் வீதியைக் கடக்க வேண்டும்.
* தனக்குக் கடக்கப் பொருத்தமான சந்தர்ப்பம் கிடைத்த பின்னர் இயலுமான விரைவில் வீதியைக் கடக்க வேண்டும்.
* வீதியைக் கடக்கும் சந்தர்ப்பங்களில் வேறு செயல்களில் ஈடுபடாது போதிய கவனத்துடன் அதனை மேற்கொள்ள வேண்டும்.

  உதாரணம்:
  - மற்றுமொருவருடன் உரையாடிக்கொண்டு செல்லல்.
  - தொலைபேசியைப் பயன்படுத்தியவாறு செல்லல்.
  - குழுமமாகப் பாதுகாப்பற்ற வகையில் செல்லல்.

இவ்வாறான விடயங்களைக் கைக்கொள்வதன் மூலம் வீதியைக் கடக்கும்போது சுய பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

**படிமுறை - 2**

- தயார் செய்துகொண்ட ஒளிச் சமிக்ஞைப் பலகையின் மாதிரியுரு (பொருத்தப்பட்ட இடத்திற்கு) அல்லது அவ்வாறான ஒளிச் சமிக்ஞை உள்ள இடமொன்றிற்கு மாணவரை அழைத்துச் செல்க.
- பாதசாரிகள் என்ற வகையில் வீதியைக் கடக்கும்போது வீதிச் சமிக்ஞைகளுக்குக் கட்டுப்பட வேண்டிய விதம் பற்றி மாணவருக்கு அறிவுறுத்துக.
- சமிக்ஞைக்கு ஏற்ப வீதியைக் கடப்பது தொடர்பான அனுபவத்தைப் பெறுவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குக.
- மாதிரியுருவைப் பயன்படுத்தி இந்தச் செயற்பாட்டை மேற்கொள்ளும்போது சில மாணவர்களை வீதியைக் கடக்கும் பாதசாரிகள் போன்றும் வேறு சில மாணவர்களை வீதியில் செல்லும் வாகனங்கள் போன்றும் பெயரிட்டுப் பாதசாரிகளை வீதியைக் கடக்க அறிவுறுத்தி ஏனைய மாணவர்களை வீதியில் செல்லும் வாகனங்களைப் போலப் பயணிக்கவும் வழிகாட்டுக.
- இங்கு, சமிக்ஞை விளக்குகள் செயற்படும் இடங்களில் வீதியைக் கடக்கும்போது அனைவராலும் உணரப்படும் வசதி, பாதுகாப்பு ஆகியன பற்றியும் அல்லாத சந்தர்ப்பங்களில் ஏற்படும் அசௌகரியங்கள் மற்றும் பாதுகாப்பற்றமைப் பற்றியும் மாணவர்க்கு விளக்குக.
- இதற்கமைய இயலுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தாமே தமது சுயபாதுகாப்பைப் பேணிக்கொள்ள வேண்டுமெனவும் இதன் காரணமாக மிக அவதானமாக வீதிகளைப் பயன்படுத்துவது முக்கியமானது எனவும் காட்டுக.

செயற்பாடு : 2

- பெருந்தெருவில் செல்லும்போது நடந்துகொள்ள வேண்டிய விதம் பற்றிய அறிவுறுத்தல் களுக்கு மாணவர்களைப் பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- இதற்கென ஒவ்வொரு மாணவருக்கும் சிறிய அட்டைகள் இரண்டு வீதம் வழங்குக. அவற்றுள் ஒன்றில் வீதியில் பயணிக்கும்போது செய்யத்தக்க ஒரு விடயத்தையும் மற்றைய அட்டையில் செய்யத்தகாத ஒரு விடயத்தையும் எழுதிக்கொள்ளுமாறு மாணவருக்கு அறிவுறுத்துக.
- கரும்பலகையை / பிறிஸ்டல் அட்டையை இரண்டு பகுதிகளாகப் பிரித்து அதில் ஒரு பகுதியில் வீதியில் பயணிக்கும்போது செய்யத்தக்கவையும் மற்றைய அட்டையில் செய்யத் தகாதவையும் குறித்துக்கொள்க.
- பின்னர் மாணவரால் எழுதப்பட்ட அட்டைகளை உரிய நிரலில் ஒட்டுவதற்கு வழிப்படுத்துக.
- அந்த அட்டைகளில் மாணவரால் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களையம் அதற்கு மேலதிகமாக பின்வரும் விடயங்களையும் பயன்படுத்தி வீதியில் பயணிக்கும்போது எம்மால் பேணப்பட வேண்டிய நற்பழக்கங்கள் பற்றிக் கலந்துரையாடலைக் கட்டியெழுப்புக.

  * வீதியின் வலது பக்க ஓரத்தினால் செல்லுதல்
  * பாதசாரிகள், வீதியை கடப்பதற்கெனக் குறிக்கப்பட்டுள்ள இடங்களில் மட்டும் விரைவாக வீதியைக் கடத்தல்
  * குழுமமாகச் செல்லுதலைத் தவிர்த்தல்
  * வீதியில் செல்லும்போது பல்வேறு பொருள்களை வீதியில் எறிவதைத் தவிர்த்தல்
  * வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடித்தல்
  * தனிமையான இடங்கள், விலங்குகள் வீதியைக் கடக்கும் இடங்கள் பற்றிய விளக்கத்தடன் பாதுகாப்புடன் பயணித்தல்
  * வீதியின் இரண்டு பக்கங்களிலுமுள்ள சொத்துக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாமை
  * கட்டட வேலை நடைபெறும் கட்டடத்திற்கு அண்மையில் பயணிக்கும்போது பாதுகாப்புடன் செயற்படல்
  * வேறு செயல்களில் ஈடுபடாது வீதியில் பயணித்தல்
    ***உதாரணம்*** : தொலைபேசியில் கதைத்தவாறு, பத்திரிகை வாசித்தவாறு, உணவு உண்டவாறு, கேலி செய்தவாறு, விளையாடியவாறு

- மேற்படி குறிப்பில் வீதியில் பயணிக்கும்போது எம்மால் செய்யக்கூடாத விடயங்கள் எனும் நிரலின் கீழ் உள்ள விடயங்கள் ஒவ்வொன்று பற்றியும் கவனம் செலுத்தி, அவ்வாறான நடத்தைகள் காரணமாக ஏற்படும் விபத்துகள், சேதங்கள் பற்றி மாணவரது கவனத்தை வழிப்படுத்துக.

செயற்பாடு : 3

- வீதியில் பயணிக்கும்போது ஏற்படக்கூடிய விபத்துக்களைத் தவிர்ப்பதற்குச் செய்யக்கூடிய வற்றைப் பற்றி மாணவர்களது கவனத்தை வழிப்படுத்துவதற்காகப் பின்வரும் செயற்பாட்டில் மாணவரை ஈடுபடுத்துக.
- இதற்காக, விபத்துத் தொடர்பாக வெளிவந்த செய்தி அடங்கிய பத்திரிகை அறிக்கையைத் தயார்செய்துகொள்ளுமாறு மாணவருக்கு முன்னைய நாளன்று அறிவுறுத்துக.
- மாணவர் வகுப்பிற்குக் கொண்டுவந்த தகவலைப் பற்றிக் கலந்துரையாடுக. அந்தத் தகவல்களைப் பின்வருமாறான அட்டவணையில் பதிவு செய்யச் சந்தர்ப்பமளிக்குக.

| விபத்து | தவிர்ப்பதற்குச் செய்யத்தக்கவை |
|---|---|
| 8 வயது மாணவர் வீதியைக் கடக்கும்போது பேருந்துடன் மோதிக் காயப்பட்டார். | மஞ்சள் / வெள்ளை கோடுகளினூடாக வீதியைக் கடத்தல்<br>மஞ்சள் /வெள்ளைக் கோடுகளைப்(பாதசாரிக் கடவை) பயன்படுத்தல்<br>சாரதிகள் அவதானத்துடன் வாகனத்தைச் செலுத்தல் |

**செயற்பாடு : 4**

- போக்குவரத்திற்கெனப் பயன்படுத்தப்படும் வாகனங்களின் பட்டியலைக் கரும்பலகையில் குறித்துக்கொள்க. அவற்றில் போக்குவரத்திற்கென பயன்படுத்தப்படும் பொது வாகனங்கள் எவையென மாணவரிடம் வினவுக.
- பின்வரும் நிகழ்வுகளுக்கு முகங்கொடுக்க வேண்டி உமக்கு ஏற்பட்டால் நீர் யாது செய்வீர்? எனும் வினாவை மாணவரிடம் வினவுக.

  ***உதாரணம் :***
  - ∗ பாடசாலைக்கு வரும் பேருந்து இடையில் செயலிழத்தல்
  - ∗ ஆற்றுக்கு அப்பால் செல்லப் பயன்படுத்தப்படும் தோணி உடைந்திருத்தல்
  - ∗ அப்பா வெளிநாட்டிலிருந்து வருகைதரவுள்ள விமானம் வருகைதரத் தாமதம் அடைதல்
  - ∗ சுற்றுலா செல்ல ஏற்பாடு செய்த பேருந்து செயலிழத்தல்
  - ∗ பாட்டியின் வீட்டிற்குப் புகையிரதத்தில் செல்லக் காத்திருக்கும் புகையிரதம் வராமை

- மாணவர்கள் குறிப்பிடும் விடைக்கமையப் பொதுப் போக்குவரத்து சேவை இல்லாவிட்டால் எமக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படும் வசதியீனங்களை வலியுறுத்துக.
- அதற்கமையப் பொதுப் போக்குவரத்துச் சேவையின் முக்கியத்துவத்தை மேலும் உறுதிப் படுத்தியவாறு அவற்றைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துக.
- இதற்கமைய வேறு மாணவர்களது அனுபவங்கள் அல்லது சம்பவங்கள் பற்றி உரையாடி போக்குவரத்திற்கெனப் பயன்படுத்தப்படும் பொதுப் போக்குவரத்துச் சேவையைப் பயன்படுத்துவதன் மூலம் கிடைக்கும் சேவைகளை மதிக்குக.
- மேலும் பொதுப் போக்குவரத்துச் சேவையைப் பயன்படுத்துவதால் கிடைக்கும் அனுகூலங்கள் பற்றி மாணவர்க்கு அறிவூட்டம் செய்க.

  ***உதாரணம் :***
  - ∗ பொருள்களைக் கொண்டுசெல்லல்
  - ∗ குறைந்த செலவில் பயணிக்க முடிதல்
  - ∗ அதிகளவானோரால் பயணிக்க முடிதல்
  - ∗ பாதுகாப்பு

  போன்ற விடயங்களை இதன்போது வெளிக்கொணரச் செய்க.

**செயற்பாடு : 5**

- பொது வாகனங்களில் பயணிக்கும்போது பேண வேண்டிய நற்பழக்கவழக்கங்கள் பற்றி அறிவுறுத்துவதற்காக மாணவர்களைப் பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுத்துக. இதற்கென வகுப்பறையைப் பேருந்து போன்று தயார்செய்து கொள்க. பேருந்திலுள்ள ஆசனங்கள் போன்று வகுப்பறையிலுள்ள கதிரைகளை இரண்டு வரிசைகளில் அமையுமாறு அடுக்கிக் கொள்க.
- சுக்கான் போன்ற மூங்கில் அல்லது கடத்துகால் (conduit) குழாயினால் வட்டவடிவமாகத் தயார்செய்து கொள்க.
- சிறிய பிறிஸ்டல் அட்டைத் துண்டுகளைப் பயன்படுத்திப் பயணச் சீட்டுகளைத் தயார்செய்து கொள்க.
- சில கதிரைகளில் பொருத்திக்கொள்வதற்காகப் பின்வரும் அட்டைகளைத் தயார்செய்து கொள்க.

  ***உதாரணம் :***

| |
|---|
| மதகுருமாருக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. |

| |
|---|
| கர்ப்பிணித் தாய்மார்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. |

| |
|---|
| அங்கவீனர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. |

- இந்த அட்டைகளைப் பொருத்தமான இடங்களில் பொருத்தமான கதிரைகளில் பொருத்திக் கொள்க.
- மாணவரில் சிலரை மதகுரு, சாரதி, நடத்துநர், உடல் ஊனமுற்றவர், வயோதிபர், குழந்தையைத் தூக்கி வைத்திருக்கும் தாய் போன்றவாறு நடிக்க வழிப்படுத்துக.
- சுக்கான் போன்று தயார்செய்த அமைப்பைச் சாரதிபோல் நடிக்கும் மாணவரிடம் கொடுத்து, நடத்துநராக நடிக்கும் மாணவரிடம் பயணச்சீட்டுகளை வழங்குக.
- ஏனைய மாணவர்களை பேருந்தில் பயணிப்போர் போன்று நடிக்கச் செய்க.
- இவ்வாறு பேருந்தில் பயணிக்கச் சந்தர்ப்பம் வழங்கி, இடையிடையே முற்குறிப்பிட்ட பயணியர் ஒவ்வொருவரையும் பேருந்தில் ஏறுமாறு அறிவுறுத்துக.
- இவ்வாறான நபர்கள் பேருந்தில் ஏறுவதை அவதானித்தால் நடந்துகொள்ள வேண்டிய விதம் பற்றி மாணவரிடம் வினவுக.
- பொதுப் போக்குவரத்து வாகனத்தில் பயணிக்கும் நபர் என்ற வகையில் பேணப்பட வேண்டிய நற்பழக்கவழக்கங்கள் பற்றி மாணவரிடம் வினவுக.
- இங்கு பின்வருமாறான நடத்தைகள் பற்றிக் கவனம் செலுத்திப் பாத்திரமேற்று நடித்தல்களைப் பொருத்தமாக ஒழுங்கமைத்துக் கொள்க.

    ∗ வயோதிபர் / கர்ப்பிணிப் பெண்கள் / குழந்தையைக் கையிலேந்தியிருக்கும் தாய்மார் போன்றோருக்கு ஆசனத்தை வழங்குதல்
    ∗ வரிசையாகப் பேருந்தில் ஏறுதல்
    ∗ கட்டாயமாகப் பயணச்சீட்டுப் பெறுதல்
    ∗ வெளியே பிற பொருள்களை எறியாதிருத்தல்
    ∗ உதவி தேவைப்படுவோருக்கு உதவுதல்
    ∗ பேருந்தில் பயணிக்கும் பிறருக்குத் தொல்லை கொடுக்காதிருத்தல்
    ∗ மிதிபலகையில் பயணம் செய்யாதிருத்தல்

**செயற்பாடு : 6**

- பயண முடிவில் மனிதனால் மேற்கொள்ளப்படும் பிழையான நடவடிக்கைகளினால் பிறருக்கு ஏற்படக்கூடிய வசதியீனங்கள் பற்றி இங்கு கவனம் செலுத்துக.
- அவ்வாறே பொதுப் போக்குவரத்து வாகனங்களைப் பாதுகாப்பதற்கு எம்மால் செய்யக்கூடியவற்றைப் பற்றிக் கீழே தரப்பட்ட உதாரணங்களைப் பயன்படுத்திக் கலந்துரையாடுக.

    ∗ வாகனங்களைச் சேதப்படுத்துவதைத் தவிர்த்தல்

    ***உதாரணம் :***

    * ஆசன உறையைக் கிழித்தல், கிறுக்குதல், வாகனங்களில் பல்வேறு வாசகங்களை எழுதுதல், வாகனங்களுக்குக் கல்லெறிதல் போன்றவை

- பின்வருமாறான வாசகங்களை மாணவருக்கு எடுத்துக்காட்டுக.

***உதாரணம் :***

> ‘‘நான் ஒவ்வொரு நாளும் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அழைத்துச் செல்வேன். ஆனால் சிலர் எனக்குப் பாதிப்பை ஏற்படுத்துவர். ஆசன உறையைக் கிழிப்பர். பேனாவால் கிறுக்குவர். தாள்களைக் கிழித்துப் போடுவர். என்னை அசுத்தமாக்குவர். இந்த நிலை குறித்து நான் கவலையடைகிறேன்.’’

- இந்தக் கூற்றினைக் கூறும் பேருந்தாக உங்களைப் பாவனை செய்து ‘‘பேருந்து பேசுகிறது’’ எனும் தலைப்பின்கீழ் கருத்துத் தெரிவிக்க மாணவருக்குச் சந்தர்ப்பமளிக்குக.
- இந்த நிகழ்வின் துணையுடன் பொதுச் சொத்துக்களுக்குப் பாதிப்புகள் ஏற்படுத்தாது பார்த்துக் கொள்வது அனைவரதும் பொறுப்பாகும் என்பதை வலியுறுத்தக்கூடிய விதமாகக் கலந்துரையாடுக.

- பின்வரும் கவிதையைத் தாளத்துடன் பாடி, அது கூறும் கருத்துக்களை விளங்கி நடந்து கொள்ளுமாறு அறிவுறுத்துக.

பின்னால் ஏறுங்கள்
முன்னே செல்லுங்கள்
உடலில் மோதாது
உடையை மிதிக்காது
முன்னால் இறங்குங்கள்

தற்செயலாக உடலில் மோதினால்
சட்டெனக் கோபம் கொள்ளாதீர்,
சௌகரியமாய் பயணஞ்
செய்ய ஒத்துழைப்போம்.

**செயற்பாடு : 7**

- மாணவரை ஐவர் கொண்ட குழுக்களாக்குக.
- ஒரு குழுவுக்கு ஒன்று வீதம் வீதிகளில் பயணிக்கும்போது தமது சுய பாதுகாப்புத் தொடர்பான செய்திகள் அடங்கிய சுவரொட்டியைத் தயாரிப்பதற்கு மாணவரை வழிப்படுத்துக.
- இந்தச் சுவரொட்டிகளைக் காட்சிப்படுத்தி அவற்றிலுள்ள கருத்துக்கள் பற்றிக் கலந்துரையாடுக.
- மாணவரது ஆக்கங்களை மதிப்பிடுக.
- வீதியில் பயணிக்கும்போது தனது பாதுகாப்பை தானே உறுதி செய்வது தன்னுடைய பொறுப்பாகும் என்பதை வலியுறுத்துக.

**செயற்பாடு : 8**

- மாணவர்களைத் திறந்தவெளிக்கு அழைத்துச்சென்று செயற்பாட்டை மேற்கொள்க.
  - குதிரை வண்டியில் செல்வது போன்று, ஒருவர் முன்னே செல்லும்போது மற்றையவர் முதலாமவரின் தோளைப் பிடித்தவாறு பாய்ந்து பாய்ந்து செல்வார்.
  - இவ்வாறாக இருவர் இருவராகச் சோடி சேர்ந்து எல்லாக் குழுக்களையும் இதனை மேற்கொள்ளச் செய்க.
  - ஆசிரியரின் கட்டளைக்கமைய முதலில் நிற்கின்றவர் குதிரை போன்று பாய்ந்து பாய்ந்து செல்வார்.
  - முன்னே உள்ள கோடு வரை சென்று பின்னர் இருவரும் இடம் மாறி மீண்டும் வரச் செய்க.
  - பின்னால் நிற்பவர் தோளைப் பிடித்தவாறு பாய்ந்து பாய்ந்து வருவார்.
  - இருவரும் மாறி மாறி விளையாட்டில் ஈடுபடச் செய்க.

சமூக ஒருமைப்பாட்டுக்கென எழுதப்பட்டுள்ள கதைத்திரட்டில் அடங்கியுள்ள ''வாத்துப் படகு'' எனும் கதையை இக்கருப்பொருளுக்காகப் பயன்படுத்துக.

## கருப்பொருள் 10 : வீட்டுத்தோட்டம்

சுத்தமான புத்தம்புதிய தரமான காய்கறிகள், பழவகைகள், மலர் வகைகளை நாம் பெறக்கூடிய மிக நம்பகரமான இடம் எமது வீட்டுத்தோட்டமாகும். அழகை அதிகரிப்பதற்கும் உடலுக்குத் தேவையான தரமான உணவையும் போசணைகளையும் பெறுவதற்கும் பொருளாதார நன்மை பெறுவதற்கும் வீட்டுத்தோட்டத்தைப் பயன்படுத்துவதற்கான ஆர்வத்தை ஊட்டுவதும் பரிச்சயத்தை ஏற்படுத்துவதும் அவசியமாகும்.

அதிக இடவசதியுள்ள இடங்களை நன்கு பயன்படுத்தியும் இடவசதி குறைவான இடங்களில் பொருத்தமான உத்திகளைக் கையாண்டு திட்டமிட்டும் பயன்படுத்துவதற்கான திறனை விருத்திசெய்வது அவசியமாகும். உடலுக்குத் தீங்கு விளைவிக்காத பயிர்ப் பாதுகாப்பு முறைகள் மற்றும் பயிர் வளர்ப்பு முறைகளை இனங்காண்பதும் பயனுள்ளவற்றை உற்பத்தி செய்து நுகர்வதன் மூலம் தன்மதிப்பு உணர்வுடன் களிப்புறுவதற்கும் ஆர்வமுள்ளோரை உருவாக்குவது அவசியமாகும்.

அதற்கமைய இந்தக் கருப்பொருளின்கீழ்த் தேவையான பயிற்சியையும் வழிகாட்டலையும் வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது.

**தேர்ச்சிகள் :**

- திட்டமிட்ட வீட்டுத்தோட்டம் மூலம் தமது வீட்டிற்குத் தேவையான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதில் பங்களிப்புச் செய்வார்.
- செய்கை பண்ணிய பயிர்களைப் பாதுகாப்பதற்காகக் கையாளும் உத்திகள் பற்றித் தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்.
- விவசாயத்துடன் இணைந்த பண்பாட்டுப் பெறுமானங்களை மதிப்பார்.
- வீட்டுத்தோட்டத்திலிருந்து பெறக்கூடிய பொருள்களைக் கொண்டு ஆக்கங்கள் செய்வார்.
- வீட்டுத்தோட்டத்திலிருந்து பெறக்கூடிய பொருள்கள் சார்ந்த விளையாட்டுக்களிலும் செயற்பாடுகளிலும் ஈடுபடுவார்.
- வீட்டுத்தோட்டத்தின் அழகையும் பெறுமானத்தையும் எடுத்துக்காட்டும் ஆக்கங்கள் செய்வதில் களிப்புடன் ஈடுபடுவார்.

**கற்றற்பேறுகள் :**

- பயிர்களை முளைக்க வைக்கும் வெவ்வேறு முறைகள் தொடர்பான அனுபவங்களைப் பெறுவார்.
- வீட்டுத்தோட்டத்தை அழகுபடுத்தும் செயற்பாடுகளில் கூட்டாகப் பங்குபற்றுவார்.
- செய்கைபண்ணிய பயிர்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை இனங்கண்டு கூறுவார்.
- பயிர்களைப் பாதுகாக்கும் பாரம்பரியமான உத்திகளைக் கையாண்டுபார்ப்பார்.
- நவீன உத்திகள், பயிர்ச்செய்கைப் பாதுகாப்புமீது பங்களிக்கும் விதத்தைத் தேடியாய்வார்.
- இரசாயனப் பசளைகளையும் பூச்சிகொல்லிகளையும் பயன்படுத்துவதால் இயற்கைச் சூழலில் ஏற்படும் பாதிப்புகளை இனங்கண்டு கூறுவார்.
- வெவ்வேறு பொருள்களைக் கொண்டு வீட்டுத்தோட்டத்தில் அழகை எடுத்துக்காட்டும் ஆக்கங்கள் செய்வார்.
- வீட்டுத்தோட்டத்திலிருந்து பெற்ற ஓர் உணவுப் பொருளைக் கொண்டு உணவு தயாரித்துக் கூட்டாக நுகர்வார்.
- காய்கறிகள், பழவகைகளின் பெயர்களைப் பயன்படுத்திச் சிறு விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- வீட்டுத்தோட்டத்தின் அழகு தொடர்பான ஆடல் - பாடல்களை முன்வைப்பார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு : 1**
**படிமுறை - 1**


- முன்னைய வகுப்புகளில் செய்த செயற்பாடுகளின்போது தாவர வளர்ச்சியில் வெவ்வேறு காரணிகளின் தாக்கம் தொடர்பாக பரிசோதனை நடத்திய விதத்தை நினைவூட்டுக.
  ***உதாரணம் :***
  நீர், சூரிய ஒளி, மண் (ஊடகம்)
- மாணவர்களது கருத்துப்படி, வித்து முளைப்பதற்குத் தேவையான காரணிகளைக் கூறச் சந்தர்ப்பமளிக்குக.
- வித்து முளைப்பதற்குத் தேவையான ஒரு காரணியின் அவசியத்தைப் பரிசோதிப்பதற்காக பின்வரும் செயற்பாட்டைத் திட்டமிடுக.
- தேடிப்பெற்ற நான்கு சாடிகளைப் பின்வருமாறு தயார்படுத்துக.
- அச்சாடிகளில் நீரில் அமிழும் வித்து வகையொன்றின் (பயற்றை, கௌப்பீ, போஞ்சி) சம அளவு வீதம் இடுக. கீழே காட்டியுள்ளவாறு அவ்வித்துக்கள் மட்டுமட்டாக அமிழுமாறு நீர் இடுக.

  A - பொது அறைவெப்பநிலையில் உள்ள நீர் இடல்

  B - பொது அறைவெப்பநிலையிலுள்ள நீர் இட்டு அதன் மீது தேங்காய் எண்ணெய்ப் படை இடல்

  C - கொதித்தாறிய நீர் இடல்

  D - கொதித்தாறிய நீரில் இட்டு அதன் மீது தேங்காய் எண்ணெய்ப் படை இடல்



- நீரைக் கொதிக்கவைக்கும்போது வாயுக்குமிழிகள் வெளியேறிய விதத்தை அவதானிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- சாடிகளில் இடப்பட்டுள்ள வித்துக்களுக்கு என்ன நிகழும் என எதிர்வுகூற மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளிக்குக. மாணவர்கள் கூறும் எதிர்வுகூறல்களுக்கான காரணங்களை வினவுக. மாணவர்களது எதிர்வுகூறல்களைக் கரும்பலகையில் அல்லது வேறு பலகையில் எழுதிவைத்து, அவை உண்மையானவையா , இல்லையா எனப் பின்னர் பரிசோதிக்க.
- சாடிகளில் உள்ள வித்துக்களைத் தினமும் அவதானிக்க வழிப்படுத்துக.
- அவ்வித்துக்களில் நிகழும் மாற்றங்களை வாய்மொழியாகவும் விளக்கப்படங்கள் மூலமும் அறிக்கைப்படுத்த வழிப்படுத்துவதற்காகப் பின்வருவது போன்று வினாக்கள் வினவிச் செயற்பாடு தொடர்பாகக் கலந்துரையாடுக.

  ∗ எண்ணெய்ப் படை இட்டதனால் நிகழ்ந்தது யாது?
  ∗ நீரைக் கொதிக்க வைத்ததனால் நிகழ்ந்தது யாது?
  ∗ அதன் மூலம் வித்து முளைப்பதற்கு எக் காரணியின் செல்வாக்கு சோதிக்கப்பட்டது என மாணவருடன் கலந்துரையாடுக.

**செயற்பாடு : 2**


- எமது வீட்டுத்தோட்ட அமைப்புத் தொடர்பாக மாணவர்க்கும் பெற்றாருக்கும் அறிவூட்டம் செய்து, அது தொடர்பாக ஆர்வத்தை ஏற்படுத்துவதில் கவனம் செலுத்துக.


* பாடசாலையில் மாதிரி வீட்டுத்தோட்டமொன்று அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்க.

  ***உதாரணம் :***

  * மாணவரை ஏழு (7) குழுக்களாகப் பிரித்து, ஒரு குழுவுக்கு ஒருவர் வீதம், ஆரம்ப நிலம் பண்படுத்தலுக்காகப் பெற்றோர் ஏழு பேரைப் பங்குகொள்ளச் செய்க.

  * மண்ணைத் தூர்வையாக்குதல், வரம்பு அமைத்தல், வீட்டுத்தோட்டத்தின் அடிப்படையான திட்டத்தைத் தயாரித்தல் போன்றவற்றில் மாணவரை ஈடுபடுத்துக. மாணவர் அனைவரையும் பாதுகாப்புக் குறித்த கரிசனையுடன் மேற்படி செயல்களில் ஈடுபடுத்துக.




* மேற்படி திட்டப்படத்தின்படி, நிலத்தைப் பண்படுத்துமாறு வழிப்படுத்துக. இல்லையேல்  அல்லது  வடிவத்தில் நிலத்தைப் பண்படுத்த வழிப்படுத்துக. நிலத்திலுள்ள இடவசதி குறித்துக் கவனம் செலுத்திப் பயிர்நிலத்தைத் தயார்படுத்திக்கொள்க. (இரண்டு அல்லது மூன்று பயிர்கள்)
* மேற்குறிப்பிட்டவாறு தயார்படுத்துவதற்கேற்ற நிலப்பகுதி பாடசாலையில் இல்லையெனில் மாத்திரம் கழித்தொதுக்கப்பட்ட தகரப்பேணிகள், பாத்திரங்களைப் பயன்படுத்தி மேற்காட்டியவாறான திட்டத்தை அமைத்துக்கொள்ளுமாறு வழிப்படுத்துக.
* ஏழு குழுக்களும் கூட்டாகத் தத்தமது பயிருக்குப் பொருத்தமானவாறு நிலத்தைப் பயன் படுத்திய பின்னர் பொருத்தமான பயிர் நாற்றுக்கள் மற்றும் வித்துக்களைத் தேடிப்பெற்று வருமாறு அறிவுறுத்துக.
* வித்துக்கள் மற்றும் நாற்றுக்கள் நடுவதற்குப் பொருத்தமானவாறு நிலத்தைத் தயார்படுத்திய பின்னர் வித்துக்களை / நாற்றுக்களை / கன்றுகளை நடச் சந்தர்ப்பமளிக்குக. (இதற்காகச் சரியாக வழிகாட்டுக)
* பொருத்தமானவாறு பயிர்களுக்கு நீர் ஊற்றுமாறு அறிவுறுத்தல் வழங்கி வழிகாட்டுக.
* தினமும் காலையில் பாடசாலை தொடங்க முன்னர் மாணவரை வீட்டுத்தோட்டத்தின்பால் வழிப்படுத்தி, களை பிடுங்குவதற்கும் நீர் ஊற்றுவதற்கும் கால அவகாசம் வழங்குக.

செயற்பாடு : 3

* வீட்டுத்தோட்டத்தில் ஒவ்வொரு குழுவுக்குமுரிய பகுதியில் வித்துக்களை நட்டு, செழிப்பாக வளர்க்க ஆர்வமூட்டுக.
* கூட்டெரு, மாட்டெரு, உக்கிய இலைகள் போன்ற சேதனப் பசளைகளைப் பயன்படுத்துவதற்கு (பாதுகாப்புக் குறித்துக் கவனம் செலுத்தி) சந்தர்ப்பமளித்து வழிகாட்டுக.

- பாடசாலைத் தோட்டத்திலேயே கூட்டெருப் பாத்திரமொன்றினை (பீப்பாய்) அல்லது கூட்டெருக் குழியொன்றினை அமைத்து அதிலிருந்து பெறும் கூட்டெருவை வீட்டுத்தோட்டப் பயிர்களுக்கு இடுவதற்குச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு : 4**

- இரசாயனப் பசளை பயன்படுத்தல், கூட்டெரு பயன்படுத்தல் ஆகியன குறித்து மாணவருடன் கலந்துரையாடுக.
- இரசாயனப் பசளையைப் பயன்படுத்தல், கூட்டெரு பயன்படுத்தல் ஆகியன தொடர்பான கட்டுரைகளைத் தேடி வகுப்பிற்குக் கொண்டுவருமாறு மாணவருக்கு அறிவுறுத்துக. (ஒரு குறித்த நாளில்)
- கரும்பலகையைப் பின்வரும் இரண்டு பகுதிகளாகப் பிரிக்குக.
- இரசாயனப் பசளையைப் பயன்படுத்துவதன் நன்மைகள், சேதனப் பசளைகளைப் பயன்படுத்துவதன் நன்மைகள் பற்றிக் கலந்துரையாடி, கரும்பலகையில் உள்ள அட்டவணையைப் பூரணப்படுத்துக.

***உதாரணம் :***

| சேதனப் பசளை பயன்படுத்துவதன் நன்மைகள் | இரசாயனப் பசளை பயன்படுத்துவதன் பாதிப்புக்கள் |
|---|---|
| நச்சுத்தன்மையற்ற உணவுப் பொருள் கிடைத்தல். | உணவுப் பொருளுடன் நச்சுத்தன்மை சேர்தல். |

- இரசாயனப் பசளைகள் பயன்படுத்துவதால் குறுகிய கால ரீதியில் பயிர் விளைச்சல் அதிகரித்தபோதிலும் அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுக.
- சேதனைப் பசளையைப் பயன்படுத்துவதற்கு மாணவர்களை ஊக்குவிக்குக.

**செயற்பாடு : 5**

- பின்வரும் பொருள்களைத் தேடிப்பெற்று வகுப்புக்குக் கொண்டுவருமாறு மாணவருக்கு அறிவுறுத்துக. (குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப போதுமான அளவுக்கு)
  - ∗ ஏறத்தாழ 15 சென்ரிமீற்றர் (6 அங்குலம்) உயரமான உடற்பகுதி அகன்ற, வாய் சிறிய போத்தல்
  - ∗ ஏறத்தாழ 7 சென்ரிமீற்றர் (3 அங்குலம்) நீளமான இரும்பு ஆணிகள் இரண்டு
  - ∗ ஏறத்தாழ 10 சென்ரிமீற்றர் (4 அங்குலம்) நீளமான நைலோன் நூல் துண்டு
  - ∗ ஏறத்தாழ 15 சென்ரிமீற்றர் (6 அங்குலம்) நீளமான பலகைக்கீலம்
  - ∗ **எமது வீட்டுத்தோட்டம்** என அழகாக எழுதப்பட்ட 60 சென்ரிமீற்றர் x 60 சென்ரிமீற்றர் (2 அடி x 2 அடி) அளவுள்ள பெயர்ப்பலகை (Name Board)
  - ∗ நீண்ட கயிறும் ஏறத்தாழ 3 மீற்றர் (10 அடி) நீளமான வளையும் தன்மையுள்ள மெல்லிய தடியும்
- மாணவரைத் திறந்தவெளியான ஓர் இடத்திற்கு அழைத்துச்செல்க.
- இப்போது நாம் காற்றுக்கிலுக்கி செய்யப்போகின்றோம் எனக் கூறுக.
- அதற்கமைய கொண்டுவந்த பொருள்களைப் பயன்படுத்தி, காற்றுக் கிலுக்கியொன்றைச் செய்யுமாறு மாணவர் குழுக்களை வழிப்படுத்துக.

- காற்றுக்கிலுக்கியொன்று செய்து வீட்டுத்தோட்டத்தில் பொருத்தமான ஓர் இடத்தில் பொருத்துமாறு வழிப்படுத்துக.
- பிராணிகளுக்குத் தீங்கு ஏற்படாதவாறு அப்பிராணிகளிலிருந்து பயிர்களைப் பாதுகாப்பதற்குக் காற்றுக்கிலுக்கியைப் பயன்படுத்தத்தக்க விதத்தை மாணவருடன் கலந்துரையாடுக.

**செயற்பாடு : 6**

- வீட்டுத்தோட்டத்தில் மாணவர் பயிரிட்ட பயிர்களிலிருந்து பறித்தெடுத்த காய்கறிகளை உள்ளடக்கும் வகையில் வேளை உணவொன்றைத் தயாரிப்பதற்கான ஒரு நாளை ஒதுக்கிக் கொள்க.
- குறித்த தினத்தில் பெற்றாரின் உதவியையும் பெறுக.
- ''நாம் வளர்த்த காய்கறிகளைச் சுவைப்போம்'' எனும் செயற்பாட்டின் கீழ், காலையிலேயே மாணவரை அழைத்துச்சென்று வெண்டி, கத்தரி மற்றும் கீரை வகைகளைப் பறித்தெடுக்க வழிப்படுத்துக.
- மாணவரை மூன்று குழுக்களாகப் பிரித்துப் பெற்றோர் அறுவரின் (6) உதவியைப் பெற்று காய்கறிகள், கீரை வகைகளைப் பறித்தெடுக்க.
- காய்கறிகள் மற்றும் கீரை வகைகளை நன்கு கழுவி வெட்டுவது / நறுக்குவது தொடர்பான அனுபவங்களை மாணவர்கள் பெறும் வகையில் பெற்றோரின் உதவியுடன் செயற்பட வழிப்படுத்துக.
- குறித்த காய்கறிகளைச் சீராகச் சமைக்கும் விதத்தை அவதானிக்க வழிப்படுத்துக.
- தவிட்டரிசிச் சோறும் சமைத்து, பகலுணவுக்காக ''நாம் வளர்த்த காய்கறிகளைச் சுவைப்போம்'' என்பதை நடைமுறையில் அனுபவிக்கவும் அதனைக் கூறவும் சந்தர்ப்ப மளிக்குக.
- பயிர்களை வளர்க்கும்போதும் காய்கறிகள், கீரை வகைகளைப் பறிக்கும்போதும் தாம் வளர்த்த காய்கறிகளைச் சுவைக்கும்போதும் மாணவர்க்கு ஏற்பட்ட உணர்வுகள் குறித்துக் கலந்துரையாடுக.
- வீட்டிலும் இவ்வாறாகப் பயிர்களை வளர்த்து உணவாகக் கொள்ள வழிகாட்டுக.
- விலைக்கு வாங்கும் நாட்பட்ட காய்கறிகள், கீரை வகைகளைவிட, வீட்டுத்தோட்டத்திலிருந்து பறித்த புத்தம்புதிய காய்கறிகள் நலமும் சுவையும் மிக்கவை என்பது பற்றி மாணவருடன் கலந்துரையாடுக.

**செயற்பாடு : 7**

- வகுப்பு மாணவர் அனைவரையும் ஒரு வரிசையில் நிறுத்துக. (ஒருவர் பின் ஒருவராக)
- அம்மாணவர்களுள் குழுத் தலைவர்கள் மூவரை அல்லது நால்வரை முன்னே அழைத்து தமது குழுவுக்கு முதுகுகாட்டி நிற்குமாறு அறிவுறுத்துக.
- நான்கு காய்கறி வகைகளின் பெயர்கள் எழுதப்பட்ட அட்டைகளைப் பெட்டியொன்றினுள் இடுக. (ஒரு வகையில் 12 அட்டைகள் வீதம்)
- பெட்டியில் உள்ள காய்கறி வகைகளின்படி, குழுத் தலைவர்களை வரிசையாக நிற்க வழிப்படுத்துக.
- பின்னர், பெயர்கள் அடங்கிய பெட்டியிலிருந்து ஏறத்தாழ 10 மீற்றர் தூரத்தே தலைவரை நிறுத்தி, ஆசிரியர் சமிக்ஞை வழங்கியவுடன், வரிசையில் நிற்கும் மாணவன் ஓடி வந்து பெட்டியினுள் கையை விட்டு ஓர் அட்டையை வெளியே எடுத்து அதனை வாசித்த பின், தலைவரின் பின்னே சென்று நிற்குமாறு அறிவுறுத்துக. (முதலாம் மாணவன் அட்டையை உயர்த்திக் காட்டிய பின்னரே இரண்டாம் மாணவன் வரிசையிலிருந்து ஓட்டத்தைத் தொடங்குவார்)

- விரைவாகத் தமது அணியைப் பூர்த்திசெய்த குழு வெற்றிபெற்ற குழுவாக அறிவிக்குக.

| | |
|---|---|
| * | வகுப்பில் 30 மாணவர்கள் உள்ளனர் எனின், மூன்று தலைவர்கள் தவிர்ந்த மீதி 27 பேரும் குழுவுக்கு ஒன்பது பேராகச் சேர்ந்து குழுவைப் பூர்த்திசெய்துகொள்ள வேண்டும். விளையாட்டை ஆரம்பிக்க முன்னர் வகுப்பு மாணவரின் எண்ணிக்கையைப் பொறுத்து, குழுக்களின் எண்ணிக்கையையும் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையையும் தீர்மானித்துக்கொள்ளல் வேண்டும். |

- பெட்டியைத் தொடக்கக் கோட்டுக்கு அருகிலாயினும் வைத்துக்கொள்ளலாம். பெட்டியின்றேல் அட்டைகளை மறுபுறமாகப் புரட்டி வைத்து விளையாட்டை நடத்தலாம்.

**செயற்பாடு : 8**

- புத்தளிப்புக் கருவிகளைப் பயன்படுத்தியவாறு பின்வரும் பாடலைப் பாடுக.

**வீட்டுத்தோட்டப் பாடல்**

முற்றிய வித்து நாற்றாய் முளைக்கும்
துளிர்கள் இலைகள் மெதுவாய் வளரும்
வளமுள்ள மண்ணில் அதனை நடுவோம்
செழித்து வளர ஆவன செய்வோம்.

செவ்வந்திப் பூ பல நிறமுண்டு
பூச்சியை ஓட்டும் பயிர்களைக் காக்கும்
காய்கறிப் பயிர்களில் பூக்கள் பூக்கும்
வீட்டுத்தோட்டத்தில் காய்கனி கிடைக்கும்.

## கருப்பொருள் 11 : வேலையை இலகுபடுத்திக் கொள்ளும் வழிகள்

ஒழுங்காகவும் முறைமையாகவும் வேலை செய்வதன் மூலம் எமது அன்றாட வேலைகளை இலகுபடுத்திக் கொள்ளலாம். மேலும் கூட்டாகச் சேர்ந்து வேலை செய்வது பெரிதும் பயனுடையதாகும். வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காக ஆதிகால மனிதன் வெவ்வேறு எளிமையான முறைகளைப் பயன்படுத்தினான். தற்போது அவ்வேலைகளைச் செய்வதற்காக நவீன முறைகள் பயன்பாட்டில் உள்ளன. அவை தொடர்பான தகவல்களையும் அனுபவங்களையும் தேடியாய்ந்து அறிக்கைப்படுத்த இக்கருப்பொருளின் மூலம் மாணவர்க்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

**தேர்ச்சிகள் :**

- வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காகத் தற்காலத்தில் கையாளப்படும் உத்திகளையும் முற்காலத்தில் கையாளப்பட்ட உத்திகளையும் கற்றாய்ந்து அறிக்கைப்படுத்துவார்.
- வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காகவும் நேர்த்தியாகச் செய்துமுடிப்பதற்காகவும் திட்டமிட்டு, ஒழுங்காகவும் சீராகவும் வேலைசெய்யப் பழகுவார்.
- கூட்டாகச் சேர்ந்து செயற்படுவதன் மூலம் வேலைகளை இலகுபடுத்திக்கொள்ளச் செயற்படுவார்.
- சேவைகளைப் பெறும் மற்றும் வழங்கும்போது மரியாதையாகவும் சட்டங்களை மதித்தும் செயற்படுவார்.
- மின்சாரம், காந்தம் மற்றும் எளிய பொறிகளைப் பயன்படுத்தி வேலைகளை இலகுபடுத்திக்கொள்ளும் வழிகளைக் கூர்ந்து நோக்கி அறிக்கைப்படுத்துவார்.
- அன்றாட வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய சக்திகள் தொடர்பாகக் கையாண்டுபார்ப்பார், செய்து களிப்புறுவார்.
- ஒத்துழைப்பு மற்றும் கூட்டுணர்வு மூலம் வெற்றியை அனுபவிக்கத்தக்க விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காகச் செய்யக்கூடிய பல்வேறானவற்றைக் களிப்புடனும் ஆற்றுகையாகவும் முன்வைப்பார்.

**கற்றற்பேறுகள் :**

- வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காக முற்காலத்தில் கையாளப்பட்ட சில உத்திகளைக் குறிப்பிடுவார்.
- இழுத்தலையும் தள்ளுதலையும் இலகுபடுத்திக் கொள்ளக்கூடிய முறைகளை நடைமுறையில் கையாண்டுபார்ப்பார்.
- திட்டமிட்டு, ஒழுங்காக, சீராகச் செயற்பட்டு, வேலைகளை இலகுபடுத்திக்கொள்வார்.
- எவரேனும் ஒருவரிடம் அல்லது யாதேனும் நிலையத்திலிருந்து சேவைகளைப் பெறும் வேளைகளிலும் எவரேனும் ஒருவருக்கு அல்லது யாதேனும் நிலையத்திற்குச் சேவைகளை வழங்கும்போது மரியாதையாகவும் சட்டத்தை மதித்து நடக்கும் நடத்தையைக் காட்டுவார்.
- யாதேனும் வேலையைச் செய்யும்போது எளிய பொறிகளைப் பயன்படுத்தி வேலைகளை இலகுபடுத்திக் கொள்வார்.
- காந்தம் ஒன்றின் இயல்புகளைச் செய்முறைச் செயற்பாடுகளாகப் பொருத்தமானவாறு பயன்படுத்துவார்.
- எளிமையான மின்சுற்றுக்களின் செயற்பாட்டைக் கையாண்டுபார்ப்பார்.
- சக்தி முதல்களைப் பயன்படுத்தி, ஆக்கங்கள் செய்வார்.
- ஒத்துழைத்துச் செயற்படுவதால் வெற்றியை அனுபவிக்கக்கூடிய விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- வேலைகளை இலகுபடுத்திக்கொள்ளும் வழிகள் பற்றிய பாடல்களை அசைவு, ஆற்றுகை வடிவில் முன்வைத்துக் களிப்புறுவார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**
**செயற்பாடு : 1**

- முற்காலத்திலிருந்தே வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காக பல்வேறு உத்திகளைக் கையாண்ட விதம் மற்றும் அவ்வுத்திகளைப் படிப்படியாக விருத்தி செய்துகொண்ட விதம் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுக.

***உதாரணம் :***

பாரமான ஒரு பொருளைத் தூக்கிச்செல்லுதல்

↓

அதனை நிலத்தில் வைத்துக் கயிற்றினால் கட்டி இழுத்துச் செல்லல்

↓

அதனைப் பலகையொன்றின்மீது வைத்துப் பலகையைக் கயிற்றினால் இழுத்துச் செல்லல்


↓

அப்பலகையின் கீழ் உருளை வடிவ மரக்குற்றிகள் சிலவற்றை வைத்து அதன் மீது இழுத்துச்செல்லல்

↓

அப்பலகையுடன் சில்லுகளைப் பொருத்தி இழுத்துச்செல்லல்

- மாணவர்கள் ஏற்கனவே பார்த்துள்ள வெவ்வேறு வாகனங்களின் சில்லு வகைகள் பற்றி அவர்களது கருத்துக்களை வினவுக.
- சைக்கிள் ஒன்றின் பின் சில்லுடன் இணைக்கப்பட்டுள்ள பற்சில்லுச் சோடியை அவதானிக்கச் சந்தர்ப்பமளிக்குக.




- ஒரு சைக்கிளில் உள்ள பெரிய பற்சில்லு, சிறிய பற்சில்லு, அவற்றினை இணைக்கும் சங்கிலி ஆகியன தொடர்பாக மாணவரது கவனத்தை ஈர்க்குக.
- மிதியினால் பெரிய பற்சில்லைச் சுழற்றி அது ஒரு முறை முழுச் சுற்றுச் சுழலும்போது சிறிய பற்சில்லு ஒரு சுற்றுச் சுற்றுகிறதா அல்லது அதிலும் கூடுதலாகச் சுற்றுகிறதா என அவதானிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- அதன் பின் சிறிய பற்சில்லுடன் இணைக்கப்பட்டுள்ள சில்லு, சில தடவைகள் சுழல்வதால் சைக்கிளை இலகுவாக ஓட்டிச் செல்வதற்குப் பற்சில்லுகளும் அவற்றுடன் இணைந்த சங்கிலியும் துணையாகின்றமையை எடுத்துக்காட்டுக.

**செயற்பாடு : 2**

- ''வேலைகளை இலகுபடுத்தும் வழிகள்'' எனும் கருப்பொருளின்கீழ், மூன்றாந்தரத்தில் (தரம் 3) பாரமான ஒரு பொருளை ஒப்பமான தரையிலும் கரடுமுரடான தரையிலும் இழுத்துச்சென்ற, தள்ளிச்சென்ற விதத்தை நினைவூட்டுக.
- எளிமையான ஒரு கப்பியை அமைத்துச் சாய்தளமொன்றின் வழியே பொருளொன்றினை மேல்நோக்கி இழுப்பதை இலகுபடுத்திய சந்தர்ப்பம் பற்றியும் கலந்துரையாடுக.
- சற்றுப் பாரமான ஒரு பொருளைப் பெறுக.
- முதலில் அதனைச் சுற்றி ஒரு கயிற்றைக் கட்டி அதன் மூலம் அப்பொருளை உயர்த்த முடியுமா என முயற்சித்துப் பார்க்க மாணவருக்குச் சந்தர்ப்பமளிக்குக. (மாணவரது பாதுகாப்புக் குறித்துக் கவனம் செலுத்துக)

- பெற்ற அனுபவத்தின்படி, அப்பொருளின் பாரம் தொடர்பாக மாணவரது கருத்துக்களை வினவுக.
- பின்னர், பாரமான பொருள் கட்டப்பட்ட கயிற்றை உலோக அல்லது மரக் கப்பியொன்றின் வழியே செலுத்துக.
- கயிற்றின் சுயாதீனமான அந்தத்தைப் பிடித்து கீழ்நோக்கி இழுப்பதன் மூலம் அப்பொருளை உயர்த்துவதற்கு மாணவருக்குச் சந்தர்ப்பமளிக்குக.



- மேற்படி இரண்டு சந்தர்ப்பங்களுள் எந்தச் சந்தர்ப்பத்தில் பாரத்தை இலகுவாக உயர்த்த முடிந்தது என மாணவரிடம் வினவுக.
- பாரமான பொருள் ஒன்றினை நேரடியாக மேல்நோக்கி உயர்த்துவதைவிட, கப்பியொன்றின் துணையுடன் கீழ்நோக்கி இழுத்து உயர்த்துவது பெரிதும் இலகுவானது என்பதை மேற்படி அனுபவத்தையும் அன்றாட வாழ்வில் எதிர்ப்படும் இவ்வாறான வேறு உதாரணங்களையும் முன்வைத்து எடுத்துக்காட்டுக.

**செயற்பாடு : 3**

- மாணவர் குழுக்களுக்காக, குறடு, பாக்குவெட்டி, கத்தரிக்கோல் ஆகிய உபகரணங்கள் அடங்கிய தொகுதியைத் தேடிப்பெறுக.







- அவ்வுபகரணங்களை வெவ்வேறு வேலைகளுக்காகப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் குறித்துக் கலந்துரையாடுக.
- அவ்வுபகரணங்களைப் பயன்படுத்த மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளிக்குக. தேவையான ஏனைய பொருள்களையும் வழங்குக.

- மேற்படி உபகரணங்களைப் பயன்படுத்தும்போது
  * கையினால் உதைப்பை (விசையை) பிரயோகிக்கும் இடம்
  * சுழலும் இடம் (புள்ளி)
  * உபகரணத்தினால் பொருளின்மீது விசை பிரயோகிக்கப்படும் இடம் (உதாரணம் : குறட்டினால் கம்பி வெட்டப்படுமிடம்) ஆகிய விடயங்கள் குறித்து மாணவரது கவனத்தை ஈர்க்குக.

**செயற்பாடு : 4**

- மாணவர் குழுக்களுக்காகப் போதுமான அளவுக்கு LED மற்றும் மின்சூள் மின்குமிழ்கள் பெறுக.
- அவற்றை அவதானித்து அவற்றின் சிறப்பியல்புகளை இனங்காணச் சந்தர்ப்பமளிக்குக. தேவையெனின் கைவில்லைகளை வழங்குக.





- மாணவர் அவதானித்தவை தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- வீட்டில், பாடசாலையில் அல்லது வேறு இடங்களில் ஒளியேற்றலுக்காகப் பயன்படுத்தும் ஏனைய மின்குமிழ் வகைகள் பற்றி மாணவரிடம் வினவுக.
- மின்குமிழ் தாங்கி ஒன்றுடன் (Holder) மின்குமிழைப் பொருத்த உங்களால் முடியுமா என மாணவரிடம் வினவுக.
- இரண்டு வகையான (screw type, pin type) மின்குமிழ்களையும் மின்குமிழ் தாங்கிகளையும் தேடிப்பெற்று அம்மின்குமிழ்களை உரிய மின்குமிழ் தாங்கிகளில் பொருத்துவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பம் வழங்குக. மாணவரது பாதுகாப்பு குறித்துக் கவனஞ் செலுத்துக.
- வீட்டில் அல்லது பிறிதோர் இடத்தில் நிரந்தரமாகப் பொருத்தப்பட்டுள்ள ஒரு மின்குமிழ் தாங்கியுடன் மின்குமிழ் ஒன்றினைப் பொருத்தும்போது பிரதான ஆளியை (main switch) தொடர்பறுப்பது (off) அவசியமாகும் என்பதையும் வளர்ந்தவர் ஒருவரின் மேற்பார்வை அவசியம் என்பதையும் வலியுறுத்துக.

**செயற்பாடு : 5**

- வெவ்வேறு அளவுள்ள உலர் கலங்களைத் (dry cell) தேடிப் பெற்று, மாணவர் குழுக்களுக்கு வழங்கி, அவற்றை அவதானிக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- உலர்கலங்களின் இரு முனைகளுக்கமிடையே அவதானிக்கத்தக்க வேறுபாடுகளைக் கூறுமாறு மாணவரை வழிப்படுத்துக. உலர்கலத்தின் முனைகளை நேர் (+) முனை, மறை (-) முனை என்றவாறு அறிமுகஞ்செய்க.




- உலர்கலங்களுடன் மின்குமிழ்கள் (மின்சூள் மின்குமிழ் - Torch bulb, LED), கம்பித் துண்டுகள் போன்றவற்றையும் மாணவர்களுக்கு வழங்குக.
- மாணவர்கள் குழுக்களாகச் சேர்ந்து உலர்கலங்களையும் மின்குமிழ்களையும் மற்றும் LED களையும் கம்பித் துண்டுகளால் இணைத்து அம்மின்குமிழ்களை ஒளிரச்செய்ய முடியுமாவெனக் கையாண்டுபார்க்க வழிப்படுத்துக.
- முதன்முதலாக மின்குமிழை / LED யை ஒளிரச்செய்த குழுவுக்கு அதனை வகுப்பில் ஏனைய மாணவர்களுக்கும் காட்டுமாறு வழிப்படுத்துக.
- மீண்டும் மீண்டும் வேறு முறைகளில் அவற்றைத் தொடுத்து மின்குமிழை / LED யை ஒளிரச்செய்ய முடியுமா எனக் கையாண்டுபார்க்க வழிப்படுத்துக.



- மின்குமிழை ஒளிரச்செய்த மாணவர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் உலர்கலம், மின்குமிழ், கம்பித் துண்டுகள் இணைக்கப்பட்ட முறையை வரைந்து காட்ட வழிப்படுத்துக.

**செயற்பாடு : 6**


- மாணவர் குழுக்களுக்கு வெவ்வேறு வகையான சில காந்தங்கள் வீதம் வழங்குக.
- மாணவர் தரம் 1, 2, 3 இல் காந்தங்களைப் பயன்படுத்திச் செய்த எளிமையான செயற்பாடுகளை நினைவூட்டுக.
- காந்தங்களின் இயல்புகளை இனங்காண்பதற்காக மாணவரைப் பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுத்துக.
    - காந்தமொன்றினை உலோகப் பொருள்கள் மற்றும் உலோகமல்லாத பொருள்களின்மீது வைத்து காந்தத்தினால் இழுக்கப்படும் பொருள்களையும் இழுக்கப்படாத பொருள்களை யும் இனங்காணச் சந்தர்ப்பமளிக்குக.
    - இரண்டு காந்தங்களை மேசைமீது வைத்து, ஒரு காந்தத்தின் ஒரு முனையை மற்றைய காந்தத்தின் ஒரு முனைக்கு அருகே கொண்டுசெல்லும்போது அது இழுக்கப்படுவதை (கவர்ச்சி) அல்லது அப்பால் தள்ளப்படுவதை (தள்ளுகை) அனுபவம் மூலம் இனங்காண மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.




- காகிதத் தாளொன்றின்மீது குண்டூசிகளை / காகிதக் கவ்விகளைப் பரப்பியவாறு அவற்றின்மீது சட்டக்காந்தமொன்றை வைத்து அக்காந்தத்தின் பகுதியில் அதிகமான குண்டூசிகள் / காகிதக் கவ்விகள் ஈர்க்கப்பட்டுள்ளன என அவதானிக்கச் சந்தர்ப்பமளிக்குக.



- பெரிய இரும்பு ஆணியொன்றின்மீது காவலிட்ட செப்புக் கம்பியொன்றினைப் பல தடவைகள் சுற்றுக. படத்தில் காட்டியுள்ளவாறு அதனை உலர்கலமொன்றுடன் தொடுக்குக. இருப்பு ஆணியின் முனைகளுக்கு அருகே குண்டுசிகளைக் கொண்டுசெல்க. நிகழ்பவற்றை அவதானிப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளிக்குக.




- மேலே சட்டக்காந்தம் ஒன்றினைப் பயன்படுத்திச் செய்த முதலாவது சந்தர்ப்பத்தையும் இருப்பு ஆணியைப் பயன்படுத்திச் செய்த இரண்டாவது சந்தர்ப்பத்தையும் ஒப்பிட்டுக் கருத்துக் கூற மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு : 7**

- எந்தவொரு வேலையைச் செய்யும்போதும் திட்டமிட்டு, முறையாக, ஒழுங்காகச் செய்வதால் நேரத்தையும் உழைப்பையும் மீதப்படுத்திக்கொள்ளலாம் என்பதை நாளாந்த வாழ்க்கை உதாரணங்களின் துணையுடன் விளக்குக.

***உதாரணம் :***

* பாடசாலைச் சீருடை, புத்தகங்கள், பாதணிகள் போன்றவற்றை ஒழுங்காக உரிய இடங்களில் வைத்தல்

- அவ்வாறான வாழ்க்கைக் கோலத்தைச் சிறு வயது முதலே பழக்கப்படுத்திக் கொள்வதால் வீட்டில் தம்முடன் வாழும் ஏனையோரதும் ஒட்டுமொத்தச் சமூகத்தினதும் பாராட்டைப் பெறலாம் என்பதை விளக்குக.
- மேலும் எவரேனும் ஒருவரிடம் யாதேனும் ஒரு நிலையத்தின் யாதேனும் சேவையைப் பெறும் வேளைகளிலும் சேவையை வழங்கும் வேளைகளிலும் மரியாதையாகவும் சட்டத்திற்குக் கட்டுப்பட்டும் நடந்துகொள்ள வேண்டும் என்பதை வகிபாகமேற்று நடித்துக்காட்டச் செய்க. இதற்காக மாணவர் இருவருக்குச் சந்தர்ப்பம் வழங்குக.
- மேற்படி நற்பழக்கங்களைத் தமது வாழ்க்கைக் கோலத்துடன் இணைத்துக்கொள்வதன் மூலம் வேலைகளை இலகுவாகச் செய்யும் திறனைப் பெறலாம் என்பதை எடுத்துக்கூறுக.
- பண்டைக்காலம் முதல் மனிதன் வெவ்வேறு வேலைகளில் ஈடுபடுவதால் ஏற்படும் களைப்பைப் போக்கிக்கொள்வதற்காகப் பாடல்கள் / கவிதைகள் பாடினர் என்பதையும் அப்பாடல்கள் அவர்கள் செய்த வேலையுடன் தொடர்புடையவை என்பதையும் உதாரணம் காட்டி விளக்குக.

**உதாரணம் :**

அரிவு வெட்டல்
சுரங்கம் அகழ்தல்
சேனை காத்தல்
படகோட்டல்
வண்டியோட்டல்

- இவ்வாறான வேலைகளுடன் இணைந்தவையும் மாணவர் தெரிந்துவைத்துள்ளவையுமான கவிதைகள் பாடல்களைக் கூறுமாறு அவற்றைத் தாளத்திற்கேற்பப் பாடி ஆடுமாறும் மாணவரை வழிப்படுத்துக.

**உதாரணம் : 1**

**உழவன்**

ஏரைக் கொண்டு நிலம் உழுவான்
எல்லோ ருக்கும் உணவ ளிப்பான்
பாரை உயர்த்த உழைத்திடுவான்
பட்டினி யின்றிக் காத்திடுவான்

காலைக் கருக்கலில் எழுந்திடுவான்
கலப்பை தோளில் சுமந்திடுவான்
ஓலைக் குடிசையில் வாழ்ந்தாலும்
ஓயாமல் உழைப்பை ஈந்திடுவான்

கால்நடை காத்து மகிழ்ந்திடுவான்
கவலை மறந்தே வாழ்ந்திடுவான்
தோல் கறுப்பாக இருந்தாலும்
தூய உள்ளம் பெற்றிருப்பான்

உழவர் உழைப்பை மதித்திடுவோம்
உண்மை அன்பால் வாழ்த்திடுவோம்
மழையைப் போலே பலன்கருதா
மாண்பைப் போற்றி வணங்கிடுவோம்.

**உதாரணம் : 2**

**ஏலேலோ ஐலசா......**

ஏலேலோ ஐலசா... ஏலேலோ ஐலசா...
ஏலேலோ ஐலசா... ஏலேலோ ஐலசா...

கட்டு மரத்தோணியிலே ஏலேலோ ஐலசா
துடுப்பு போட்டு தோணி ஓட்டி ஏலேலோ ஐலசா
வங்கக் கடலில் வல வீசி ஏலேலோ ஐலசா
மீன்புடிக்க போகையிலே ஏலேலோ ஐலசா
கைவலிச்சும் பாடலியே ஏலேலோ ஐலசா

ஏலேலோ ஐலசா... ஏலேலோ ஐலசா...
ஏலேலோ ஐலசா... ஏலேலோ ஐலசா...

சமூக ஒருமைப்பாட்டுக்கென எழுதப்பட்டுள்ள கதைத்திரட்டில் அடங்கியுள்ள ‘‘நரிப் புத்தி’’ எனும் கதையை இக்கருப்பொருளுக்காகப் பயன்படுத்துக.

## கருப்பொருள் 12 : மனித நடத்தைகள்

நற்சமூகமொன்றுக்கு மனித கௌரவம், பரஸ்பர கரிசனை, பரிவு ஆகியன முக்கியமாகும். அனைவரையும் கண்ணியப்படுத்தல், பிறரது கருத்துக்களுக்குச் செவிமடுக்கும் நபர்களை அதிகளவிற் கொண்ட சமூகம் முதிர்ச்சியடைந்த சமாதானமான சமூகமாகும். இந்தக் கருப்பொருளில் தன்னைப் பற்றியும் பிறரைப் பற்றியும் கரிசனையுடன் நடந்துகொள்ள வழிப்படுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் முதிர்ச்சியடைந்த சமாதானமிக்க நபராக மாற்றுவதற்குத் தேவையான தேர்ச்சிகளை வழங்குவதே அடிப்படையாகும்.

**தேர்ச்சிகள் :**

- தன்னுடைய சமூகத்தினது நலனுக்கேற்ற வகையிலான பயனுடைய பண்புகளைப் பேணுவார்.
- சிறப்பான நற்றொடர்புகளைப் பேணுவதற்கு ஏற்ற வகையிலான ஆக்கங்களைத் தயாரிப்பார்.
- சமமான பங்கேற்பைப் பெற்று உபகரணங்களைக் கையாளும் ஆக்கத்திறனான விளையாட்டு களில் ஈடுபடுவார்.
- மனிதர்களின் பல்வேறு நடத்தைகளை உணர்வுபூர்வமாகப் பல்வேறு வெளிப்பாட்டு ஊடகங்கள் மூலமாக ஆக்கத்திறன் மிக்க வகையில் சமர்ப்பிப்பார்.

**கற்றற்பேறுகள் :**

- தன்னுடையதும் பிறரதும் ஆற்றல்களை மெச்சுவதன் முக்கியத்துவத்தை விளங்கி நடந்து கொள்வார்.
- பிறரது கருத்துக்களுக்கு மதிப்பளிப்பார்.
- பொருத்தமான துலங்கலை வெளிக்காட்டியவாறு பிறருடன் நட்புடன் செயற்படுவார்.
- அனைவருக்கும் கல்வி பெறும் உரிமை உள்ளதென அறிந்து நடவடிக்கை எடுப்பார்.
- பிறரது குறைபாடுகள் தொடர்பாக மிதவாத மனதுடன் செயற்படுவார்.
- நற்பண்புகளைப் பேணுவதற்கு உதவும் வாழ்த்தட்டைகளை நிருமாணிப்பார்.
- வளையங்கள் மற்றும் பந்துகளுடன் ஆக்கத்திறன் விளையாட்டில் ஈடுபடுவார்.
- மனித நடத்தைகளின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படும் பாடல்களைப் பாடுவதுடன் குழு நாடகங்களையும் நடித்துக் காட்டுவார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**
**செயற்பாடு : 1**
**படிமுறை - 1**

- தரம் 3 க்குப் பிரவேசிக்கும் மாணவர்களுக்கான இனங்காணல் நிகழ்ச்சித்திட்டத்தை மீண்டும் ஞாபகப்படுத்துக. (இதன்போது மாணவரிடம் காணப்பட்ட விசேட ஆற்றல்கள் / திறன்கள் பற்றிக் கருத்திற்கொள்க. ஒவ்வொரு மாணவரிடத்தேயும் மறைந்துள்ள திறமைகள் உள்ளதெனவும் அதற்கமைய எந்த மாணவரும் சிறப்பானவர்கள் அன்று எனக் கொள்ளாது பார்த்துக்கொள்க.)
- ஒவ்வொரு மாணவரையும் தனக்கு மிகப் பிடித்த ஆக்கமொன்றை மேற்கொள்ள (சித்திரம் / கொலாஜ் / அலங்கார உரு / பிடித்தலின் மூலம் உருவங்கள் செய்தல், செதுக்குதல் மூலம் உருவங்கள் செய்தல், கட்டியெழுப்புதல் மூலம் உருவங்கள் செய்தல் போன்ற) தேவையானவற்றை எடுத்துவரச் செய்க.
- மாணவர்கள் தமது ஆக்கங்களை மேற்கொள்ளப் போதியளவு காலத்தை வழங்குக.
- அதன் பின்னர் ஒரே வகையைச் சேர்ந்த ஆக்கங்களைத் தெரிவுசெய்து அவற்றைக் காட்சிப்படுத்துக.
- இவற்றில் தனது ஆக்கம் தவிர்ந்த வேறு குழுக்களின் தனக்குப் பிடித்த ஆக்கமொன்றைத் தெரிவுசெய்து மெச்சுவதற்கு மாணவருக்குச் சந்தர்ப்பம் வழங்குக.

- அதற்குரிய உரிமையாளரை விசாரிக்காது நேர்மையாக மகிழ்ச்சியடையவும் மனச்சாட்சியுடன் கருத்துத் தெரிவிக்கவும் சந்தர்ப்பமளிக்குக.
- மாணவரது கருத்துக்களைச் சமர்ப்பிக்கும்போது

  * சித்திரங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள நிறங்கள்
  * தளவுருக்கள்
  * அமைவு
  * ஆக்கப்பட்ட விதம்
  * முடிப்பு
  * தூய்மை
  * பொருத்தப்பாடு

  போன்ற விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துக.

- பிறரது ஏதேனும் சிறப்பான விடயங்களை மதிப்பதற்கான பழக்கத்தை இங்கு வலியுறுத்துக. (ஆற்றல்கள், பண்புகள்)
- அழகானவை, சரியான முடிப்பைக் கொண்டவை, அழகியற்தன்மை கொண்டவை ஆகியன எப்போதும் இனிமையான, மனங்கவர் தன்மை கொண்டவையெனக் காட்டுக.
- பின்னர் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவதெனின் நண்பர்களின் மனதில் பாதிப்பை ஏற்படுத்தாதவாறு விமர்சன ரீதியில் அல்லாது மேற்கொள்ள வேண்டுமென அறிவுறுத்துக.
- மாணவர்களது ஆக்கங்கள் மற்றும் அவர்களது கருத்துக்களை மெச்சுக.
- எல்லோரிடமும் பல்வேறு வகைப்பட்ட ஆற்றல்கள் உள்ளன எனவும் பிறரது ஆற்றல்களை மதிக்கும்போது அவர்கள் மகிழ்ச்சியடையும் விதம், அவ்வாறு செய்வதன் மூலம் தனது உள்ளத்திற்கும் மகிழ்வு ஏற்படுவதை விளங்கிக்கொள்ளச் சந்தர்ப்பம் வழங்குக. (அவ்வாறான சந்தர்ப்பங்களை ஞாபகப்படுத்துக.)
- பின்னர் மாணவர் அனைவரும் இணைந்து

  உடல் வலிமை இருந்தென்ன - அழகு முகம் இருந்தென்ன
  வியர்வை சிந்த உழைக்காத - நீ நாட்டுக்குச் சுமையாவாய்!
  மனிதம் மலர் போல் மணம் பரப்பும் - அறிவோ எங்கும் ஒளி பரப்பும்.

  போன்ற பாடல்களைச் செவிமடுத்துப் பாடச் செய்து, அதிலுள்ள கருத்துக்களை மாணவருடன் கலந்துரையாடுக.

- எம்மிடத்தே உள்ள மனிதத்துவம், பண்புகள் மற்றும் திறமைகள், கெட்டித்தனங்கள் ஆகியவற்றை மதித்தில், உடலை வருத்தி வேலை செய்யும்போது கிடைக்கும் மகிழ்ச்சி போன்றவை இந்தப் பாடல்களில் உள்ளடங்கியுள்ள விதத்தை மாணவருடன் கலந்துரையாடுக.

படிமுறை - 2

- மாணவர் அனைவரும் தாம் விரும்பியவாறு விரும்பிய தலைப்பில் சித்திரம் வரைவதற்கு, கவிதையை ஆக்குவதற்கு, கேலிச்சித்திரம் வரைவதற்கு, பூவொன்று, வாழ்த்துமடல் போன்ற ஏதேனுமொரு ஆக்கத்தைச் செய்யப் போதியளவு அவகாசம் வழங்குக.
- அவை அனைத்தையும் காட்சிப்படுத்துவதற்கு வழிப்படுத்துக.
- பார்த்து முடிந்த பின்னர் மாணவர்களை ஒரு இடத்தில் கூட்டி பல்வேறு ஆக்கங்கள் தொடர்பான கருத்துக்களை வினவுக.
- அவர்களது அக்கருத்துக்களை மதித்து சினேகபூர்வமாகக் கலந்துரையாடச் சந்தர்ப்பமளிக்குக.
- இறுதியில் பின்வருமாறான கருத்துக்களை வலியுறுத்திக் கலந்துரையாடுக.

  * ஒவ்வொருவரிடமும் ஏதேனுமொரு விசேட ஆற்றல் உள்ளது
  * நாம் இனங்கண்ட ஆற்றலைப் பற்றிப் பாராட்டிப் பேசுதல் வேண்டும்
  * எல்லோருக்கும் தனது ஆற்றல்களைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் உள்ளது.
  * தனது ஆற்றல்களை மற்றையோருக்குக் காட்சிப்படுத்துவதால் அந்த ஆற்றல்களை மேலும் விருத்தி செய்து கொள்ள முடியும்.

* வகுப்பறையே தனது ஆற்றல்களை வெளிக்காட்ட மிக உகந்த இடமாகும்.
போன்ற விடயங்களை மாணவருடன் கலந்துரையாடுக.

- ஒருவரை மெச்சுவதன் மூலம் அவர் மேலும் தனது ஆற்றல்களை வளர்த்துக்கொள்ள முனைவார் என வலியுறுத்துக.

**செயற்பாடு : 2**

- வகுப்பில் உள்ள மாணவர்களுக்குப் போதியளவு A4 நிறக் கடதாசிகளை வழங்குக.
- மாணவர்களை வட்ட வடிவில் அமரச்செய்க.
- A4 அளவிலான தாளை இரண்டாக மடித்து அதன் முதற்பக்கத்தின் மேற்பகுதியில் தனது பெயரை எழுதச்செய்க.
- ஆசிரியர் சமிக்ஞையை வழங்கியதும் தனது பெயரைக்கொண்ட தாளை தனது வலது கைப் பக்கத்தில் நிற்கும் மாணவரிடம் கொடுக்குமாறு அறிவுறுத்துக.
- பின்னர் அந்தத் தாளில் உள்ள பெயரைக் கொண்ட மாணவரின் ஒரு சிறப்பான இயல்பை மட்டும் எழுதி தனது வலது கைப் பக்கத்தில் உள்ள மாணவரிடம் வழங்க வேண்டுமெனக் கூறுக.
- அதில் சிறப்பான இயல்பை மட்டுமே எழுத வேண்டும் எனக் கூறுக.
- தாளைப் பரிமாறி எல்லோரும் எழுதி முடித்த பின்னர் தமது கைகளுக்குத் தத்தம் தாள்கள் கிடைத்த பின்னர் எழுதுவதை நிறுத்தி அதனை வாசித்துப் பார்க்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- தன்னைப் பற்றிப் பிறர் எழுதிய விடயங்களை வாசிக்கும்போது அவர்கள் உள்ளத்தில் ஏற்படும் உணர்வு யாது என்பது பற்றி மாணவரிடம் வினவுக.
- தனது தாளில் தன்னைப் பற்றி எழுதிய விடயங்களில் தமக்கு மிகவும் விருப்பமான விடயத்தைச் சமர்ப்பிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குக.
- பிறர் தன்னை மதிப்பதன் மூலமாகத் தனக்குக் கிடைத்த மகிழ்ச்சியைப் போன்றே பிறரை மதிப்பதனால் மகிழ்ச்சி கிடைக்கும் என வலியுறுத்தி ஒருவரது செயல்களை மதிப்பதன் முக்கியத்துவத்தை விளக்குக.

**செயற்பாடு : 3**

**படிமுறை - 1**

- பாடசாலைக் கல்வி பெறுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்காத மாணவர் ஒருவர் பற்றிய தகவல்கள் அல்லது கதை மூலமாக மாணவருக்கு விளக்குக.
- அவ்வாறான சந்தர்ப்பம் பற்றி மாணவரது அனுபவங்களைச் சமர்ப்பிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கி அது பற்றிக் கலந்துரையாடுக.

  * எல்லாப் பிள்ளைகளுக்கும் பாடசாலைக் கல்வி கட்டாயமானதாகும்.
  * அன்பு, கருணை ஆகியன உரியவாறு கிடைக்க வேண்டும்.
  * உணவு, பானங்கள், உடைகள் ஆகியன உரியவாறு வழங்கப்பட வேண்டும்.

  மற்றும் அரவணைப்பும் முக்கியமான காரணி என மாணவரிடம் கூறுக.

- பாடசாலையில் / வீட்டில் / வீதியில் பல்வேறு உடல் ரீதியான சித்திரவதைகளுக்கு உள்ளாகும் மாணவர் பற்றியும் அவ்வாறான சந்தர்ப்பங்கள் பற்றியும் நீங்கள் அறிந்த விடயங்கள் இருப்பின் வகுப்பாசிரியரிடம் அல்லது அதிபரிடம் முறையிடுவது எமது பொறுப்பு எனக் காட்டுக.
- எமது நாட்டில் இலவசக் கல்வி அனைத்துப் பிள்ளைகளுக்கும் கிடைக்க வேண்டுமெனவும் அதற்கென சீருடைகள், உணவு போன்ற பல்வேறு விடயங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தன என்பதையும் ஞாபகப்படுத்துக.

- **‘‘இலவசக் கல்வியிலிருந்து நாம் உச்ச பயனைப் பெறுவோம்’’** என்பதை கருப்பொருளாகக் கொண்டு வகுப்பில் நாடகப் போட்டியொன்றை ஒழுங்குசெய்க.

- கற்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்காது மாணவர்களைப் பிழையான நடவடிக்கைகளுக்கு ஊக்குவிக்கும் நபர்களைக் கடுமையான சட்டங்கள் மற்றும் தண்டனைகளுக்கு உட்படுத்தப் பட்ட சந்தர்ப்பங்கள் மற்றும் அவர்களுக்கு எதிராக சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் விதம் ஆகியவற்றை விளக்குக.
- அதற்கமைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உச்ச அர்ப்பணிப்புடன் செயற்படல் பெற்றோர் மற்றும் அரசு ஆகியவற்றின் மூலமாக இலவசமாகத் தரப்படும் பணிகளை உச்சமாகப் பயன்படுத்தி நாட்டிற்குப் பயனுள்ள அறிவாற்றல் கொண்ட உதாரணமான பிள்ளையென்ற வகையிலும் பாடசாலைக்கும் முக்கியமான பிரசை என்ற வகையிலும் நாட்டிற்கும் நேர்மையாகச் சேவையாற்ற வேண்டுமெனக் காட்டுக.

படிமுறை - 2

- பிள்ளைகளை வீட்டு வேலைக்கு அமர்த்தல், அனாதரவான வீதிச் சிறுவர்கள், பிச்சையெடுக்கும் சிறார்கள் ஆகியோரின் படங்கள் சிலவற்றைப் பெற்றுக்கொள்க.
- அவற்றைக் காட்சிப்படுத்தி அந்தப் பிள்ளைகளுக்குச் சரியான உணவு, உடை, கல்வி ஆகியன கிடைப்பதில்லை என விளக்குக.
- சிறுவர் இல்லங்களில் பல்வேறு தொல்லைகளுக்கு உட்பட்ட பிள்ளைகள் இருப்பதுடன் முறையான வசதி வாய்ப்புகளின்றி அவர்கள் கல்வி கற்பதை அவதானிப்பதற்குக் களச்சுற்றுலாவொன்றை ஒழுங்குசெய்து மாணவர்களை அழைத்துச்செல்க. தங்களால் இயன்றளவு அவர்களுக்கு உதவிகள் செய்ய மாணவரை வழிப்படுத்துக.
- உங்களைப் போன்ற சிறுபராயத்திலுள்ள இந்தச் சிறார்களுக்கு உரியவாறு உணவு, அன்பு, பாசம் ஆகியன கிடைப்பதில்லை எனவும் உங்களைப் போன்றே பாடசாலைக்குச் சென்று கல்வி கற்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை எனவும் அவர்களுக்கு விளக்குக.
- இதன் காரணமாக இவ்வாறான பிள்ளைகள் சிறுவர் நன்னடத்தை மற்றும் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் பராமரிக்கப்படும் சிறுவர் இல்லங்களில் பாதுகாப்பு வழங்கப்பட்டுத் தேவையான கல்வி வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் **உலகிலுள்ள எந்தப் பிள்ளைக்கும் கல்வி பெறுவதற்கான உரிமை உள்ளதென வலியுறுத்துக.**
- பிள்ளைகளை வீட்டு வேலைக்கு அமர்த்தும், சிறுவர்களைத் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தும் மற்றும் சிறுவர்களைப் பாடசாலைகளுக்கு அனுப்பாதவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்டங்கள், தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளன என விளக்குக.

**செயற்பாடு : 4**

- மாணவர்களைச் சற்றுக் கண்களை மூடச்செய்து எமக்குக் கிடைக்கப்பெற்றுள்ள வாழ்க்கை பற்றி சிந்திக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- இதன்போது பின்வரும் விடயங்களை மாணவர்கள் மனதில் பதியுமாறு விளக்குக.

  * ஐம்புலன்களில் குறைகள் எதுவும் இல்லாது நாம் பிறந்துள்ளோம் என்பது (அவ்வாறான குறைபாடு கொண்ட பிள்ளைகள் இருப்பின் அது பற்றி கவனிக்குக.)
  * இந்த வாழ்க்கையில் எமக்கு இயலுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பிறருக்கு உதவ வேண்டும்.
  * விசேடமாக ஏதேனும் குறைபாட்டைக் கொண்ட நபர்களைக் காணும்போது தயக்கமின்றி உதவ வேண்டும்
  * அவ்வாறு உதவும்போது இவ்வாறான நிலைமை தனக்கு ஏற்பட்டுள்ளது போன்று நினைத்து நடந்துகொள்ளல்

- **''இன்றிலிருந்து நான் பிறரது குறைபாடுகள் / ஊனங்கள் தொடர்பாக மிதவாதப் போக்குடன் நடந்துகொள்வேன்''** என உறுதியெடுத்துக்கொள்ளச் செய்யுங்கள். பொருத்தமான பாத்திரமேற்று நடித்தலினை மேற்கொள்ளச் செய்க. (இவ்வாறான மாணவர்கள் வகுப்பில் இருக்கின்றனரா என கரிசனை கொள்க)

***உதாரணம் :***

- ∗ காலில் ஊனம் ஏற்பட்டுள்ள மாணவரொருவர் படிகளில் ஏறுவதற்கு உதவுதல்
- ∗ கதைக்கும்போது திக்கிப் பேசும் பிள்ளைக்கு உதவுதல்
- ∗ கண் தெரியாத பிள்ளைக்கு வீதியைக் கடப்பதற்கு உதவுதல்

- பல்வேறு குறைபாடுகள் கொண்டுள்ளோர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி மாணவர்களது அனுபவத்தை வினவுக.
- மேற்படி நடிப்புகளில் சொல்லப்பட்ட விடயங்கள் தமக்கு நடைபெற்றால் உணரும் விடயங்கள் பற்றி மாணவருடன் கலந்துரையாடுக.
- **அவ்வாறே தனக்கு விருப்பமற்ற எதனையும் பிறருக்குச் செய்யக்கூடாது என எப்போதும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.**
- பல்வேறு குறைபாடுகளைக் கொண்டுள்ளோருக்கு உதவத்தக்க முறைகள் பற்றியும் அவ்வாறான சந்தர்ப்பங்களில் தன்னைப் போலவே மற்றையோருக்கும் வசதியீனங்கள் ஏற்படும் விதத்தைப் பற்றியும் விளக்குக.
- அவ்வாறான உடல் ஊனம் கொண்ட மாணவர்கள் தமது வாழ்க்கையில் வெற்றிபெற்ற சந்தர்ப்பங்கள் பற்றி மாணவர்கள் அறிந்துள்ள விடயங்களை மகிழ்வாகப் பரிமாறிக்கொள்ளச் செய்க.
- மாணவரது கருத்துக்கள் மற்றும் முன்வைப்புகளைப் பாராட்டுக.

**செயற்பாடு : 5**

- இதற்கெனப் பாத்திரமேற்று நடித்தலைத் தயார்செய்து கொள்க.

காகத்தின் கூட்டினுள் பெண் குயில் முட்டையிட்டுள்ளதை அறிந்த காகம் பெண் குயிலிடம் அது பற்றி வினவுகிறது.

| | | |
|---|---|---|
| காகம் | : | ஏன் நீ என் கூட்டில் முட்டை இட்டாய்? |
| பெண்குயில் | : | மன்னிக்கவும், எனக்குக் கூடு கட்டத் தெரியாது. |
| காகம் | : | அது சரிவராது. நான் எவ்வாறு இவ்வளவு குஞ்சுகளுக்கும் இரை தேடுவது? |

  - இந்த உரையாடலை மேலும் வளர்த்துச்செல்ல மாணவரை வழிப்படுத்துக.
  - இதுபோல் காகம் குயில் குஞ்சுகளுக்குத் தனது கூட்டினுள் இருக்க இடம் கொடுப்பதாக வும் பெண் குயில் தனது குஞ்சுகள் அனைத்திற்கும் உணவு தேடி ஊட்டுவதென ஒத்துக் கொள்வதாகவும் இதன் காரணமாக முரண் ஏற்படாது தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் விளக்குக.
  - குயிலுக்கு கூட்டில் இடமளிக்கக் காகம் விரும்பியதன் மூலம் பரஸ்பர புரிந்துணர்வைத் தொடர்ச்சியாகப் பேண முடிகிறது எனவும் பிறருக்கு உதவுவதன் முக்கியத்துவத்தையும் விளக்குக.
- இவ்வாறான கருத்துக்கள் வெளிப்படக் கூடியதாகப் பாத்திரமேற்று நடித்தலில் ஈடுபடச் செய்க.
- இறுதியில் அது பற்றிக் கலந்துரையாடலை நடத்துக.
- எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிறர் கருத்துக்கள், நடத்தைகள் ஆகியவற்றின்போது முரண் ஏற்படாதவாறு துலங்கலைக் காட்ட வேண்டுமெனப் மாணவர்களுக்கு வலியுறுத்துக. இதன் காரணமாக எப்போதும் நிதானமாகக் கருத்துத் தெரிவிக்க வேண்டுமென அறிவுறுத்துக.

இதன்முகமாக

- முரண்களைத் தவிர்த்தல்
- நட்பைத் தொடர்ச்சியாகப் பேண முடிதல்
- பொறுப்புக்களை ஏற்பதற்குப் பழகிக்கொள்ளல்
- பிறரது கௌரவம் பாதுகாக்கப்படுதல்
- சமூகத்தில் நல்ல ஒருவராகத் திகழ்தல்.

ஆகிய நிலைமைகள் ஏற்படும் என அறிவுறுத்துக.

- தற்போதைய சமூகத்தில் நிகழும் கடுமையான குற்றச்செயல்கள், கொலைகள், கலவரம் ஆகியவற்றுக்குப் பிறரது கருத்துக்கள் மற்றும் நடத்தைகள் தொடர்பான பிரதிபலிப்புகள் நிதானமானவையாகக் காணப்பட்டமையே காரணமாகும் என வலியுறுத்துக.

**செயற்பாடு : 6**

- எமது வாழ்க்கையில் நாம் வாழ்த்துக்களைத் தெரிவிக்கும் சந்தர்ப்பங்களை ஞாபகப்படுத்துக. அவ்வாறான சந்தர்ப்பத்தில் எம்மால் செய்யக்கூடிய விடயங்களைக் கலந்துரையாடுக. அவற்றில் இலகுவாகவும் குறைந்த செலவிலும் தயாரிக்கக் கூடியவற்றை இனங்காண்க.

  ***உதாரணம் :***
  - ∗ பிறந்தநாள் வாழ்த்து அட்டை
  - ∗ வெசாக் வாழ்த்து அட்டை
  - ∗ நத்தார் வாழ்த்து அட்டை
  - ∗ விசேட நிகழ்வுக்கான வாழ்த்து அட்டை
  - ∗ பதவியுயர்வு அல்லது விசேட சிறப்புகள் பெற்றவர்களுக்கான வாழ்த்து அட்டை
  - ∗ அனுதாப அட்டை
  - ∗ நன்றி நவிலல் அட்டை
  - ∗ நலம்பெறப் பிரார்த்திக்கும் அட்டை

- பின்வருமாறான வாழ்த்து அட்டைகளை அனுப்புவதன் மூலம் நிகழும் அனுகூலமான விடயங்கள் பற்றிய பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடுக.
  - ∗ நட்பு புதுப்பிக்கப்படல், சொந்த பந்த உறவு புதுப்பிக்கப்படல்
  - ∗ நம்பிக்கை கட்டியெழுப்பப்படல்
  - ∗ உளச் சுகம் கிடைத்தல்
  - ∗ பிறரது மதிப்புக்கு உட்படல்
  - ∗ பரஸ்பர நல்லுறவு விருத்தியடைதல்
  - ∗ பொறுப்புக்களை நிறைவேற்ற முடிதல்
  - ∗ குறைந்த செலவில் அதிக மகிழ்ச்சி கிடைத்தல்
  - ∗ புதிதாக யாதேனுமொன்றை ஆக்கி மகிழ்வுறுதல்

- மாணவர் தொகைக்கு ஏற்ப அவர்களை 4 / 5 குழுக்களாகப் பிரித்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு குழுவையும் தாம் அதிகம் விரும்பும் வாழ்த்து அட்டைகள் இரண்டு வீதம் தயாரிக்க வழிகாட்டுக.

- அதற்குத் தேவையான பொருட்களைக் கொண்டுவர மாணவர்களை முன்னரே வழிப்படுத்துக.
  - ∗ 15 cm x 10 cm அளவான காட்போட் துண்டு
  - ∗ வெண்ணிற A4 தாள்கள் - 2
  - ∗ 10 cm x 8 cm அளவான A4 தாள்கள் இரண்டு
  - ∗ பைண்டர் கம் குப்பி - 1
  - ∗ கத்தரிக்கோல், கழிக்கப்பட்ட கடதாசித் தாள்கள், பூ இதழ்கள் ஆகியன
  - ∗ மாணவரது ஆர்வத்திற்கு ஏற்ப அலங்கார ஆக்கங்களைத் தயாரிக்கத் தேவையானவை.


- வகுப்பிலுள்ள மாணவர்களின் திறமை மற்றும் விருப்புக்கேற்ப கொண்டுவரப்பட்ட மேற்படி பொருள்களைக் குழுக்களுக்குப் பகிர்ந்தளிக்க.
- ஒரிகாமி முறையிலோ அல்லது வீணாகும் பொருள்களைப் பயன்படுத்தியோ சித்திரம் மூலமாகவோ குழுவிலுள்ள ஆற்றல்களுக்கு அமைய உரிய முழுநிறைவுடன்கூடிய வாழ்த்து அட்டை ஒன்றைத் தயாரிப்பதற்கு மாணவர்களுக்கு அறிவுறுத்துக.
- அதனை உள்ளே இடக்கூடிய கடித உறையைத் தயாரிக்கச் செய்க.
- மாணவர்கள் குழுக்களாக மேற்கொண்ட ஆக்கங்களை வகுப்பறையில் காட்சிப்படுத்துக.
- மிக நேர்த்தியாக வாழ்த்து அட்டை தயாரித்த குழுவினரைப் பாராட்டுக.
- குறைபாடு ஏற்பட்ட இடங்களைச் சுட்டிக்காட்டிச் சரியான விதிமுறைகளைப் பின்பற்றுவதன்

மூலம் அலங்காரத்தை மேம்படுத்தலாம் என விவரிக்க.

- வாழ்த்து அட்டைகளைத் தயாரித்து அனுப்புவதன் மூலம் பெறுபவர் மகிழ்வுறும் விதமாக அது தயாரிக்கப்பட வேண்டுமெனக் காட்டுக.
- எல்லாக் குழுக்களுக்கும் தமது ஆக்கங்களை அலங்கரிக்கத் தேவையான உதவிகளை வழங்குவதற்கு ஆசிரியர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- வகுப்பில் உள்ள மணவர்களது பிறந்த நாளின்போது வகுப்பு மாணவர்கள் செய்த பிறந்தநாள் வாழ்த்து அட்டைகளை அனுப்ப/வழங்க ஆவன செய்க.
- இதனை வகுப்பில் நடைபெறும் விசேட செயற்பாடாக வருடம் முழுவதும் செயற்படுத்துக.

**செயற்பாடு : 7**

- மாணவர்களைச் சமமான இரண்டு - நான்கு குழுக்களாகப் பிரிக்குக. (மாணவரது எண்ணிக்கைக்கு அமைய)
- ஒவ்வொரு குழுவிற்கும் வளையம் மற்றும் பந்து ஆகியவற்றை வழங்குக.
- மாணவர்களைச் சம தூரத்தில் ஒரே வரிசையில் நிற்கச்செய்க.



- முதலாவது வீரர் பந்தைப் பெற்று நிலத்தில் உருட்டிச் சென்று வளையத்திற்கு அண்மையில் பந்தைப் பிடித்து வளையத்தினூடாகப் பந்துடன் நுழைந்து மீண்டும் ஓடி வந்து நண்பரிடம் பந்தைக் கொடுத்தல் வேண்டும்.
- அவர்களுக்கு முன்னே 5 m தூரத்தில் வட்டமொன்றை வரைந்து அதன் மத்தியில் பந்தை வைக்குக.
- அதிலிருந்து 4 m தூரத்தில் ஒவ்வொரு வளையத்தை வைக்கவும். (ஊடாக நுழைந்து செல்லக்கூடியவாறு)
- பின்வருமாறு ''பந்தைக் கொண்டுசெல்வோம், வளையத்தினூடாக நுழைந்து செல்வோம்'' விளையாட்டில் ஈடுபடுக.
- கட்டளை வழங்கப்பட்ட பின்னர் முன்னே உள்ள மாணவர் ஓடிச்சென்று வட்டத்தின் மத்தியில் உள்ள பந்தை எடுத்துக்கொண்டு முன்னோக்கிச் சென்று வளையத்தின் ஊடாக நுழைந்து செல்ல வேண்டும்.
- பின்னர் மீண்டும் ஓடிச்சென்று பின்னர் பந்தை மீண்டும் வளையத்தின் மத்தியில் வைத்த பின்னர் (இயலுமாயின் பந்தை இடுவதற்குப் பேசின் ஒன்றை வைக்கவும்) ஓடிவந்து முன்னே உள்ள மாணவரின் கையின்மீது தட்டிவிட்டுப் பின்னே சென்று உட்கார்ந்து கொள்ள வேண்டும்.
- இவ்வாறு குழுக்களிலுள்ள மாணவர் எல்லோரும் செயற்பாட்டைச் செய்து முடிக்கும் ஒழுங்குமுறை அடிப்படையில் வெற்றி கிடைக்கும்.
- இறுதியில் அனைவரையும் பாராட்டுக.

**செயற்பாடு : 8**

- ''பசியுடன் நான் மகனின் வீட்டிற்குச் சென்ற வேளை'' எனத் தொடங்கும் பாடலைச் செவிமடுக்க வழிப்படுத்துக.

  பசியுடன் நான் சென்றேன் - அன்பு மகன் வீட்டிற்கு
  அவனோ தந்தான் அளந்து இரண்டு சுண்டு நெல்லு
  எடுக்கவா வேண்டாமா என்றது என் மனசு
  அளந்து தானோடா - பாலூட்டினேன் நான் உனக்கு

- அந்தச் சந்தர்ப்பம் பற்றி மாணவருடன் கலந்துரையாடுக. பெற்றோரைக் கவனிக்காத பிள்ளைகள் உள்ள இன்றைய சமூகத்தில் பெற்றோரைப் பற்றிப் பச்சாதாபங்காட்டும் சந்தர்ப்பத்திற்கான உதாரணமொன்றைக் குறிப்பிடுக.
- இப்பாடலில் கூறப்படும் சந்தர்ப்பங்களை போலச்செய்து காட்டுமாறு மாணவரை வழிப்படுத்துக. மாணவரது முன்வைப்புக்களைப் பாராட்டுக.

சமூக ஒருமைப்பாட்டுக்கென எழுதப்பட்டுள்ள கதைத்திரட்டில் அடங்கியுள்ள ''பதட்டமுற்ற யானைக் குட்டி'', ''சோளப் பிட்டு'' எனும் கதையை இக்கருப்பொருளுக்காகப் பயன்படுத்துக.

## கருப்பொருள் 13 : நிலமும் வானும்

நாம் வாழும் புவியின் மேற்பரப்பு பல்வேறு தரைத்தோற்றங்களைக் கொண்டது. காற்று, மழை போன்ற இயற்கைக் காரணிகளின் காரணமாக நில மேற்பரப்பு பல்வேறு மாற்றங்களுக்கு உட்படும். அது மட்டுமன்றி மனிதத் தேவைகளுக்கென நிலத்தின் மேற்பரப்பில் பல்வேறு மாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் காரணமாகப் பிரதிகூலமான விளைவுகளையும் சந்திக்க நேர்ந்துள்ளது. இவை பற்றி அறிவுறுத்துவதோடு அவதானிப்பின் அடிப்படையில் மழை, காற்று ஆகியவற்றின் தன்மை பற்றிய களிப்பூட்டும் அனுபவங்களை வழங்கி அழகியற் செயற்பாடுகளுக்குச் சந்தர்ப்பம் வழங்குவதற்கும் இக்கருப்பொருளில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

**தேர்ச்சிகள் :**

- நில மேற்பரப்பின் பல்வகைமையைத் தேடியாய்வார்.
- நீர் சார்ந்த சூழல்களின் இயல்புகளை தேடியாய்வார்.
- மழை ஏற்படுவது தொடர்பாகச் சூழலில் ஏற்படும் மாற்றங்களை அவதானித்து அறிக்கைப் படுத்துவார்.
- காற்றின் தொழிற்பாட்டைக் கற்றாராய்ந்து காற்று வலுவைப் பெறக்கூடிய பல்வேறு முறைகளை நுணுகியாய்வார்.
- இயற்கையான பொருள்களின் தொழிற்பாடு, அவற்றின் மூலமாக சூழலில் ஏற்படும் தாக்கங்களைத் தேடியாராய்ந்து அறிக்கைப்படுத்துவார்.
- தனது அன்றாட நடவடிக்கைகளுக்கென ஒளியைப் பயன்படுத்தும் விதத்தை நுணுகியாய்வார்.
- இலங்கையின் அமைவை இனங்கண்டு கூறுவார்.
- வானம், நிலம் ஆகியவற்றின் தன்மை பற்றிய கரிசனையுடன் ஆக்கங்களில் ஈடுபடுவார்.
- நிலைக்குத்து, கிடை வெளிகளைப் பயன்படுத்திச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- நிலம், வானம் ஆகியவற்றின் வியத்தகு தன்மை பற்றிய களிப்பூட்டும் செயற்பாடுகளில், கவிதைகள், பாடல்ளைப் பாடுவார். அளிக்கைகளாக முன்வைப்பார்.

**கற்றற்பேறுகள் :**

- பாடசாலை நிலத்தின் பல்வகைமையை அவதானித்து அறிக்கைப்படுத்துவார்.
- பல்வேறு இடங்களிலுள்ள மண்ணின் தன்மையைப் பரீட்சித்துப் பல்வகைமைக்கான காரணங்களைச் சமர்ப்பிப்பார்.
- மழையினால் கிடைக்கும் பயன்களைக் கூறுவார்.
- இயற்கைச் சூழலில் ஏற்படும் மாற்றங்கள், திடீர் நிலைமைகள் பற்றிக் கவனத்துடன் செயற்படுவார்.
- பல்வேறு செயற்பாடுகளின் உதவியுடன் புவிச் சுழற்சி மற்றும் இரவு பகல் தோன்றுதல் ஆகியவற்றைச் செய்துகாட்டுவார்.
- ஒளியைத் தமது நாளாந்த வேலைகளுக்காகப் பயன்படுத்தும் விதத்தைச் செய்துபார்ப்பார்.
- காற்றின் தொழிற்பாட்டைக் கையாண்டு பார்ப்பார்.
- இலங்கைத் தேசப்படத்தில் தமது பிரதேசம் அமைந்துள்ள நகரத்தை அவதானிப்பார்.
- இலங்கையின் மாகாணங்கள், மாவட்டங்கள், பிரதான நகரங்கள் ஆகியவற்றைத் தேசப்படத்தில் அவதானித்துக் கூறுவார்.
- உபகரணங்களைப் போடுதல், வளையம் எறிதல் தொடர்பான அனுபவங்களைப் பெறுவார்.
- மேல், கீழ் தளங்களைப் பயன்படுத்தி சந்தத்துக்கு இசைவான அசைவுச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு : 1**

- சாய்வான நிலம், சமதரையான நிலம் ஆகியவற்றின் உதவியுடன் தரம் 3 இல் மேற்கொண்ட செயற்பாட்டை ஞாபகமூட்டுக.
- அதன்போது கலந்துரையாடப்பட்ட பல்வேறு விதமான நிலங்களுக்கு மேலதிகமாக பாடசாலைச் சூழலில் அல்லது அயற் சூழலில் இலகுவாக அவதானிக்கக்கூடிய பல்வகைமை யுடன் கூடிய இடங்கள் சிலவற்றை இனங்காண்க.

  ***உதாரணம் :***
  - மணற்பாங்கான தரை
  - பரல் கொண்ட தரை
  - புற்கள் கொண்ட தரை
  - சீமந்துத்தரை
  - தரையோடு பதித்த தரை

- இந்த இடங்களில் நடந்துசெல்லும்போது எதிர்கொண்ட அனுபவங்களைச் சமர்ப்பிப்பதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பம் வழங்குக.
- அந்த இடங்களின் துணையுடன் பின்வரும் செயற்பாடுகளை மேற்கொண்டு அனுபவங்களைப் பெறுவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பம் வழங்குக.

  - பந்தை உருட்டிப் பார்த்தல்.
  - கயிற்றில் கட்டப்பட்ட மரக்குற்றியை இழுத்துச் செல்லல்
  - மரக்குற்றியை விசையைப் பயன்படுத்தித் தள்ளியபோது அது அசைந்த தூரம்

- அந்தச் செயற்பாடுகளின் உதவியுடன் பெற்ற அனுபவங்கள் பற்றிக் கலந்துரையாடுக. அந்த அனுபவங்களின் அடிப்படையில் பின்வருமாறான வினாக்களை வினவுக.

  ***உதாரணம் :***
  - அவ்வொவ்வோர் இடத்திலும் பந்து எவ்வாறு உருண்டு சென்றது?
  - எந்த இடத்தில் மிக இலகுவாக மரக்குற்றியை இழுத்துச்செல்ல முடிந்தது?
  - எந்த இடத்தில் அதிக தூரத்திற்கு மரக்குற்றியினால் தள்ளிச் செல்ல முடிந்தது?

- இதற்கமைய அன்றாடம் நடந்து செல்வதற்கும் வேறு செயற்பாடுகளில் ஈடுபடவும் பொருத்த மான இடங்களைத் தெரிவு செய்யும்போது, நிலத்தின் தன்மை குறித்துக் கவனத்திற் கொள்ள வேண்டுமெனக் காட்டுக.
- இவற்றில் இயற்கையான நிலங்கள், மனிதனால் தயார் செய்யப்பட்ட நிலங்களும் உள்ளன என்பதையும் அவை பெரும்பாலும் சூழலுக்கு அழகூட்டுபவையாக அமைக்கப்பட்டுள்ளன எனவும் விளக்குக.

**செயற்பாடு : 2**

- பாடசாலைத் தோட்டத்தில் அல்லது அயற் சூழவுள்ள மண்ணின் தன்மையைப் பரீட்சிப்பதற்குப் பொருத்தமான இடங்கள் சிலவற்றைத் தெரிவுசெய்து கொள்க.
- அந்த இடங்களில் $1m^2$ அளவுடைய இடமொன்றைக் கயிற்றினால் குறித்துக்கொள்க. அந்த இடங்களில் குழுக்களாக மாணவரை வழிப்படுத்துக.
- கயிற்றினால் எல்லைப்படுத்தப்பட்ட நிலத்தின்மீது காணப்படுபவற்றை அவதானித்த, மாணவர் களுக்குச் சந்தர்ப்பம் வழங்குக.


  - மண்ணின் நிறம்
  - மணல் / களி / பரல் அதிகம் அடங்கியுள்ள மண்ணா?
  - மண்ணில் காணப்படும் உயிருள்ளவையும் உயிரற்றவையும்

- அந்த மண்ணிலிருந்து மாதிரிகளைப் பெறுவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பம் வழங்குக.
- பெற்ற மண் மாதிரிகளை வெறுங்கண்ணாலும் பின்னர் கைவில்லையினாலும் அவதானிக்க வழிப்படுத்துக.

- பின்னர், ஊடுகாட்டத்தக்க போத்தலொன்றில் மண் மாதிரியின் ஒரு பகுதியை இட்டு கழுத்து வரை நீர் நிரப்பி நன்கு குலுக்குக.
- போத்தலை மேசைமீது வைத்து, நடப்பவற்றைச் சிறிது நேரம்வரை அவதானிக்குமாறு கூறுக.
  - ∗ போத்தலின் அடியில் படிந்துள்ள பொருள்கள்
  - ∗ அதற்கு மேலே படிந்துள்ள பொருள்கள்
  - ∗ நீரில் மிதக்கும் பொருள்கள்
  - ∗ நீரின் நிறம் வேறுபட்டிருக்கும் விதம்
- மாணவர் குழுக்களிடமுள்ள, பல்வேறு இடங்களிலிருந்து பெறப்பட்ட மண் மாதிரியை மேலே கூறப்பட்டவாறு பரிசோதித்து ஒப்பீட்டு ரீதியில் முன்வைக்குமாறு வழிப்படுத்துக.

**செயற்பாடு : 3**

- போதியளவு சூரிய ஒளி கிடைக்கும் நாள் மற்றும் முகில்களுடன்கூடிய இருண்ட ஒரு நாள் ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகளைக் கலந்துரையாடி, இதன்போது சூரிய ஒளி கிடைக்கும் நாளில் செய்யக்கூடிய எனினும் மழையுடன்கூடிய நாட்களில் மேற்கொள்ளக் கடினமான நாளாந்தச் செயற்பாடுகள் பற்றிக் கவனம் செலுத்துக. அதன் மூலமாகச் சூரிய ஒளியின் மூலம் கிடைக்கும் ஒளி, வெப்பம் ஆகியன பல்வேறு வழிகளில் எமக்குப் பயன்படும் விதத்தைக் காட்டுக.
- அதற்கமையச் சூரிய ஒளியிலிருந்து நாம் பெறும் ஒரு பயனாக ஈரலிப்பான பொருள்களை உலர்த்துவது பற்றிக் கலந்துரையாடுக.
- அதனடிப்படையில் மேற்கொள்ளக்கூடிய சிறிய பரிசோதனைகள் சிலவற்றை மேற்கொள்ள மாணவரை வழிப்படுத்துக.
  - நிழலான இடம் மற்றும் போதுமான சூரிய ஒளி உள்ள இடம் ஆகிய இரண்டு இடங்களைத் தெரிவு செய்க. இரண்டு இடங்களிலும் சமனான அளவு (5 - 10 ml) நீரைத் தெளிக்க. மிக விரைவில் எந்த இடத்திலுள்ள நீர் உலரும் எனக்கூற மாணவர்க்குச் சந்தர்ப்பம் வழங்குக. உலர எடுக்கும் காலத்தை அளவிட்டு மாணவரது எதிர்வுகூறல் சரியானதா எனக் கூறுவதற்கு வழிப்படுத்துக.
  - கடும் சூரிய ஒளி விழும் இடத்தில் ஈரத் துணியை விரித்து அதிலிருந்து நீர் ஆவியாகி வெளியேறுவதை அவதானிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
  - சற்றுத் தட்டையான ஒரு பாத்திரத்தில் 100 மில்லி லீற்றர் நீரை இட்டு அதில் 10 கிராம் உப்பைக் கரைக்குக. (முழுவதும் கரையும்வரை) பின்னர் அப்பாத்திரத்தை சூரிய ஒளி நன்கு படும் இடத்தில் வைக்குக. யாது நிகழும் என மாணவரிடம் வினவுக. நாளின் இறுதியில் அவதானிக்கச் சந்தர்ப்பம் வழங்குக.




- உப்பளங்களில் கடல் நீரிலிருந்து உப்பைப் பிரித்தெடுத்தல் நிகழும் விதத்தைக் களப் பிரயாணம்/ வீடியோ காட்சி/ படங்கள் மூலம் காட்டுக.
- அந்திமாலையில் இருள் பரவும் போதும் அல்லது மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ள போது வீட்டில் ஏற்படும் அசௌகரியங்களை பற்றி மாணவரது அனுபவங்களை வினவுக.

- எமது சுற்றுப்புறத்திலுள்ள பொருள்களைப் பார்ப்பதற்கு கண் மட்டுமன்றி ஒளியும் தேவை. இருளில் எதுவும் தெரிவதில்லை என்பது தொடர்பாக மாணவரது அனுபவங்களை வினைவிக் கலந்துரையாடுக.
- இயற்கை ஒளியைப் போன்று செயற்கை ஒளியும் கட்டடங்களுக்கு ஒளியூட்டுவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றமையை உதாரணங்களின் உதவியுடன் காட்டுக.
- இந்த வகையில் ஒளியானது எமது வேறு நாளாந்தத் தேவைகளுக்காகப் பயன்படுகின்ற மையைக் கலந்துரையாடுக.

**செயற்பாடு : 4**

- ஊசித்துளைக் கமராவொன்று செய்வதற்காகப் பின்வரும் பொருள்களைப் பெறுக.
    * பற்பசைப் பெட்டிகள் இரண்டு (ஒன்று பெரியதாகவும் மற்றைய அதிலும் சற்றுச் சிறியதாகவும் இருத்தல் வேண்டும்.)
    * ரிசூத்தாள், கறுப்பு நிறத்தாள்.
    * குண்டூசி, கத்தரிக்கோல், பசை

- அளவில் பெரிய பெட்டியின் ஓர் அந்தத்தில் மூடிப்பகுதியை நீக்கி, கறுப்புத்தாள் ஒட்டிக் கொள்க. அதன் சரி மத்தியில் குண்டூசியால் துளையொன்று இட்டுக்கொள்க. மற்றைய அந்தத்தில் ஒரு பகுதியை வெட்டி நீளத்தைக் குறைத்துக் கொள்க.
- அளவில் சிறிய பெட்டியின் இரண்டு அந்தங்களிலுமுள்ள மூடிகளை அகற்றி ஒரு திறந்த அந்தத்தில் ரிசூத்தாள் ஒட்டிக்கொள்க.
- ரிசூத்தாள் ஒட்டிய அந்தம் முதலில் உள்ளே செல்லும் வகையில் பெரிய பெட்டியினுள் சிறிய பெட்டியை நுழைக்க. ஒளிபடும் சூழலில் உள்ள ஏதேனும் பொருளொன்றை நோக்கி ஊசித்துளைக் கமராவைப் பிடித்து, திறந்த அந்தத்தில் கண்ணை வைத்துப் பார்க்குக.
- ரிசூத் தாளின் மீது பொருளின் தலைகீழான விம்பம் தென்படும் வரை பெட்டிகளை உள்ளும் புறமுகமாக அசைத்து ஊசித் துளைக் கமராவைச் செப்பஞ்செய்க.




- மாணவர்கள் சுயமாக ஊசித்துளைக் கமரா தயாரித்துப் பயன்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குக.

**செயற்பாடு : 5**

- தரம் 3 இல் தயாரித்த காற்றால் இயங்கக்கூடிய காற்றுத்தட்டையை ஞாபகப்படுத்துக.
- காற்று வீசும் திசையில் காற்றுத்தட்டையைப் பிடிக்கும்போது அது சுழலும் விதம் பற்றிக் கலந்துரையாடுக.
- காற்று வீசும் திசை அடிக்கடி மாற்றமடைவதனால் காற்று வீசும் திசையைச் சரியாக அறியத் திசைகாட்டி தேவையெனக் காட்டுக.
- காற்றுத் திசைகாட்டியொன்று செய்வதற்காகப் பானக்குழாய், குண்டூசி, பேனைக் குழாய், தக்கையில் பொருத்திய தாங்கி, அம்புக்குறி வடிவத்தில் வெட்டிய காட்போட் துண்டுகள் , திசைகள் குறிக்கப்பட்ட அட்டை ஆகியவற்றைப் பெறுக.

- பானக்குழாயின் இரண்டு அந்தங்களிலும் வெட்டுக்கள் இட்டு, அம்புக்குறி வடிவ காட்போட் துண்டுகளிரண்டையும் புகுத்திப் பொருத்திக் கொள்க.
- பானைக்குழாயின் நடுப்பகுதியில் குண்டூசியைக் குற்றி, பேனைக் குழாயில் புகுத்தி அதனைத் தக்கைத் தாங்கியில் நிறுத்திக் கொள்க.



- காற்று வீசும் சூழலில் திசைகள் குறிக்கப்பட்ட அட்டையின் மீது காற்றுத் திசைகாட்டியை வைக்குக.
- காற்றுத் திசைகாட்டியினால் காற்று வீசும் திசையை அதாவது காற்று எந்தத் திசையிலிருந்து வீசுகிறது என்பதை இனங்காணும் விதத்தைச் செய்து காட்டுக.
- காற்றுத் திசைகாட்டியின் அம்புக்குறி காட்டும் திசையைக் கொண்டு காற்று வீசும் திசையைக் குறிப்பிடுமாறு மாணவர்க்கு வழிகாட்டுக.


செயற்பாடு : 6

- மழை எமக்கு முக்கியமானதாக அமையும் விதம் பற்றிக் கண்டறிய மாணவரை வழிப்படுத்துக.
- நீரைப் பெறுவதற்குப் பிரதானமாக மழை முக்கியமானது என்பதை எடுத்துக் காட்டுக.
- மழைநீரைச் சேகரித்து மீண்டும் பயன்படுத்த முடியும் என்பதை உதாரணங்கள் மூலம் விளக்குக. இதன்போது ''**வானத்தில் இருந்து விழும் ஒவ்வொரு மழைத்துளியையும் வீணாக்காது பயன்பெற வேண்டும்**'' எனும் பராக்கிரமபாகு மன்னனின் கூற்றினை ஞாபகப்படுத்திக் கலந்துரையாடுக.

***உதாரணம்*** :

* குளங்கள், அணைக்கட்டுக்கள் அமைத்துப் பயிர்ச்செய்கைக்கான நீரைப் பெறுதல்
* நீர்த்தேக்கங்களை அமைத்து, நீரைத் தேக்கி மின்னை உற்பத்தி செய்தல்
* வீடுகளில் தொட்டிகள் அமைத்து மழை நீரைச் சேகரித்துப் பல்வேறு தேவைகளுக் காகப் பயன்படுத்தல்

- மழை நிலத்தில் விழும்போது மண்ணில் ஏற்படும் மாற்றங்களை அவதானிப்பதற்குப் பின்வருவது போன்ற ஒரு செயற்பாட்டை நடத்துக.



* கலப்பு மண் கொண்ட நிலத்தைத் தெரிக. (மணல், களி, பரல் அடங்கிய மண்)
* தெரிவு செய்யப்பட்ட ஏறத்தாழ 30 cm x 30 cm அளவு நிலப்பரப்புக்கு மேலே அடியில் துளைகள் இடப்பட்ட பாத்திரத்தில் (கழிக்கப்பட்ட பிளாத்திக்குப் போத்தல்) நீரை நிரப்பிப் பிடித்திருக்குக.
* 2 - 3 நிமிடங்களுக்குத் தொடர்ச்சியாக நீரை விழச் செய்க.
* நடப்பவற்றை அவதானித்துக் கருத்துத் தெரிவிக்க மாணவர் களுக்குச் சந்தர்ப்பம் வழங்குக.

**செயற்பாடு : 7**

- மழை பெய்யும்போது சூழலில் உருவாகும் அழகு தொடர்பான கவிதைகள் / பாடல்கள் பாடுவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பம் வழங்குக.
- அந்தப் பாடல்களுக்கு அமைய மேல் கீழ் தளங்களைப் பயன்படுத்தி, சந்தத்துக்கு இசைவாக அசைவுகளைக் காட்டுமாறு மாணவரை வழிப்படுத்துக.

***உதாரணம் :***

**மழைப்பாடல்**

கொட்டுது பார் மழை!
கொண்டு வா ஒரு குடை!

வெட்டுது பார் மின்னல்!
பார்க்காதே அது இன்னல்!

முழங்குது பார் இடி!
வெளியே போவது எப்படி?

பொழியுது பார் முகில்!
விளைந்திடும் பார் வயல்!


கூவுது பார் குயில்!
ஆடுது பார் மயில்!

மழை பெய்தாலே மகிழ்வுதான்!
மறைந்திடும் நம் வறட்சிதான்!

நன்றி - பாண்டியன்

**செயற்பாடு : 8**

- புவிக்கோள மாதிரியுருவொன்று தயாரித்துக் கொள்க. அதில் நாடுகள் அமைந்துள்ள இடங்களைப் பருமட்டாகக் குறித்துக்கொள்க.
- திரை அல்லது காட்போட் அட்டையினால் மறைப்பிட்டு இருட்டான ஓர் இடத்தைத் தயார்செய்க. அதில் புவிக்கோள மாதிரியுருவை வைத்து, ஒரு புறத்தேயிருந்து மின்சூள் ஒளியை அதன்மீது பாய்ச்சுக.




- மின்சூளானது சூரியனைக் குறிக்கிறது எனக் காட்டுக.
- புவிக்கோளத்தில் மின்சூளின் ஒளி படும் பகுதி பற்றி மாணவரது கவனத்தை ஈர்க்குக.

அந்தப் பிரதேசத்திலுள்ள நாடுகளுக்குப் பகற்காலம் எனக் காட்டுக.

- அந்தச் சந்தர்ப்பத்தில் இரவு காலம் காணப்படும் பகுதிகளை பூகோள மாதிரியுருவில் அவதானித்துக் கூறுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- அச்சந்தர்ப்பத்தில் இலங்கையில் இரவு நேரமா அல்லது பகல் நேரமா என வினவுக.
- இவ்வாறாக மின்சூளை ஒரு மாணவரைப் பிடிக்கச் செய்து புவிக்கோளத்தினைச் சுழலச்செய்து பல்வேறு நாடுகளில் இரவு காலம், பகற் காலம் ஏற்படும் விதத்தைக் காட்டுக.

**செயற்பாடு : 9**

- இலங்கை மாகாணங்களைக் காட்டும் பெரிய அளவிலான தேசப் படமொன்றைக் காண்பித்து அதில் காட்டப்படும் விடயங்கள் பற்றி மாணவருடன் உரையாடுக.
- அதன் மூலம் இலங்கை நாடு பிரிக்கப்பட்டுள்ள மாகாணங்களை இனங்காண்பதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக. அதற்கமைய தமது பாடசாலை எந்த மாகாணத்தைச் சேர்ந்தது என எடுத்துக்காட்டுக.
- அம்மாகாணமானது, மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளமையையும் தமது வீடு, தமது பாடசாலை அமைந்துள்ள பிரதான நகரத்தையும் மாவட்டத்தையும் தேடியறிய வழிகாட்டுக. தேசப்படத்தின் மூலம் காட்டுக.
- ஒரு குழுவுக்கு ஒன்று வீதம், பெரிய அளவிலான இலங்கைத் தேசப்படமொன்றைப் பிரதியெடுக்கும் தாளில் பிரதிசெய்து கொள்ளுமாறும் மாணவரை வழிப்படுத்துக.
- மாகாணங்களின் வடிவத்துக்கேற்ப, காகிதத்துண்டுகள் வெட்டியெடுத்து, ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு தொகுதி வீதம் வழங்குக. (ஒவ்வொரு குழுவுக்கும் ஒன்பது மாகாணங்களையும் குறிக்கும் ஒன்பது காகிதத்துண்டுகள் கிடைக்கும் வகையில்)
- அக்காகிதத்துண்டுகளை பிரதி செய்த இலங்கைத் தேசப்படத்தின் மீது வைத்து, அம்மாகணங்களின் அமைவையும் பெயரையும் சரியாக இனங்காணச் சந்தர்ப்பமளிக்குக.



- அதற்கமைய, தமது வீடும், பாடசாலையும் அமைந்துள்ள பிரதான நகரத்தையும் மாவட்டத்தையும் இனங்காண வழிப்படுத்துக.

- **செயற்பாடு : 10**


- இயற்கைச் சூழலில் நடைபெறும் மாற்றங்களின் காரணமாக ஏற்பட்ட அனர்த்த நிலைமைகள் பற்றிச் செய்தித்தாள்களில் வெளிவந்த அல்லது வேறு ஒளிப்படங்களை மாணவர்க்குக் காட்சிப்படுத்துக.
- அவ்வாறான சந்தர்ப்பங்கள் தொடர்பாகப் பின்வரும் விடயங்களின் கீழ்க் கலந்துரையாடலை நடத்துக.

  * இயற்கை இடரின் / அனர்த்தத்தின் பெயர்
  * இதனால் ஏற்பட்டுள்ள இழப்புக்கள்
  * இவ்வாறான இடர் ஏற்பட முன்னர் இயற்கைச் சூழலில் வெளிக்காட்டப்பட்ட முன்னெச்சரிக் கைகளும் ஏற்பட்ட மாற்றங்களும்
  * இவ்வாறான இடர் ஏற்படும்போது செயற்பட வேண்டிய விதம்
  * இடரின் பின்னர் பழைய நிலைக்கு வருவதற்கு மேற்கொள்ளத்தக்கவை.
  * இது, மீண்டும் நிகழ்வதைத் தவிர்ப்பதற்காகச் செய்ய வேண்டியவை.

- குழு நிலையில் மாணவர்களுக்கு ஏதேனும் இயற்கை இடர் பற்றி மேற்படி விடயங்களின் கீழ்க் கலந்துரையாடி முன்வைப்புச் செய்ய வழிப்படுத்துக.

**செயற்பாடு : 11**

- வகுப்பிலுள்ள மாணவர்களை இரண்டு குழுக்களாக்குக.
- ஒரு குழுவை வளையத்தின் ஒரு புறத்திலும் மற்றைய குழுவை வளையத்தின் எதிர்ப்புறத்திலும் நிறுத்துக.



- ஆசிரியரது சமிக்ஞைக்கு அமைய ரெனிஸ் பந்தை / இறப்பர் பந்தை / வித்துப் பையை வளையத்தின் ஊடாக மறுபக்கத்திலுள்ள நண்பருக்குக் எறிக.
- அவர் பந்தை / வித்துப் பையைப் பிடித்து மீள மறுபக்கத்தில் உள்ள நண்பருக்கு எறிதல் வேண்டும்.
- இனி அந்த இருவரும் விலகிச் சென்ற பின், மேலும் இருவருக்குச் சந்தர்ப்பமளித்தல் வேண்டும்.
- தூர அளவை மாற்றியவாறு சில தடவைகள் விளையாட்டில் ஈடுபடுத்தலாம்.

## கருப்பொருள் 14 : எம்மால் செய்யக்கூடிய மாற்றங்கள்

உலகமும் உலக மக்களின் சமூகங்களும் நல்ல வாழ்க்கைப் பண்புகளைக் கொண்ட ஓர் இடமாக மாறியுள்ளமைக்கான காரணம் தொடர்ச்சியாக நிகழத்தக்க நல்ல மாற்றங்கள் மற்றும் அம்மாற்றங்களைச் செய்வதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட மாற்று முகவர்கள் ஆவர். இந்த உலகம் மென்மேலும் நல்ல மாற்றங்களுக்கு உள்ளாதல் வேண்டும். மேலும் உலகில் இதுவரையில் நிகழ்ந்துள்ள நல்லவை அல்லாத மாற்றங்களும் நல்ல மாற்றங்களாக மாறுதல் வேண்டும். ஆக்கபூர்வமான மாற்று முகவர்களாலேயே அந்த அறைகூவலை எதிர்கொள்ள முடியும்.

அவ்வாறாயின் எதிர்காலச் சந்ததியினர் மேலும் பரந்த கண்ணோட்டத்துடனான, திடசங்கற்பம் கொண்ட, ஆக்கபூர்வமான மாற்று முகவர்களாதல் வேண்டும். அது தம்மிலேயே ஆரம்பித்தல் வேண்டும். தாம், தமது வகுப்பு, அயற்சூழல் ஆகியவற்றிலேயே இந்த நல்ல மாற்றங்கள் ஆரம்பித்தல் வேண்டும். அதற்காக தாம் தனியாகவும் தமது நண்பர்கள், தோழியருடன் சேர்ந்து கூட்டாகவும் செயற்படுதல் வேண்டும். கூட்டாகச் செய்த நல்ல மாற்றங்கள் காரணமாகக் களிப்புறுதல் வேண்டும்.

**தேர்ச்சிகள் :**

- அண்மிய சூழலைச் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் வைத்திருக்க ஆவன செய்வார்.
- தமது அண்மிய சூழலில் பண்பு ரீதியான மாற்றத்திற்காகக் காணப்படும் பிரச்சினைகளைத் தேடியறிந்து அதற்காகத் திட்டம் தயாரித்துச் செயற்படுவார்.
- நல்லதொரு மாற்றத்தைச் செய்வதற்காகத் துணையாகும் ஆக்கங்கள் செய்வதற்காகத் தையல் வேலையில் பரிச்சயம் பெறுவார்.
- விளையாட்டுத் திடலில் மாற்றங்களைச் செய்து களிப்புடன் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- தமது நடத்தைகளை நல்லவையாக மாற்றிக்கொள்ள முடிகின்றமையை எடுத்துக்காட்டத்தக்க களிப்பூட்டல் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.

**கற்றற்பேறுகள் :**

- தமது சூழலைச் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் வைத்திருப்பதற்காகச் செய்யத்தக்கவை பற்றிக் கலந்துரையாடிப் பிரேரணைகளை முன்வைப்பார்.
- தமது சூழலைச் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் வைத்திருப்பதற்காகத் தம்மாலான பங்களிப்பை வழங்கிச் செயற்படுவார்.
- நல்லதொரு மாற்றத்தைச் செயலுருப்படுத்துவதற்காகப் பொருத்தமான திட்டங்களை முன்வைப்பார்.
- அண்மிய சூழலில் செய்யத்தக்க பண்பு ரீதியான மாற்றங்களை இனங்கண்டு செயற்படுவார்.
- வகுப்பறையில் காட்சிப்படுத்துவதற்காகக் காட்டுருச் சித்திரங்கள் கொண்ட பின்னல் வேலைப் பாடொன்றைச் செய்வார்.
- வெவ்வேறு பொருள்களைப் பயன்படுத்தி ஆக்கபூர்வமான மாற்றங்கள் செய்யக்கூடிய விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- நல்ல நடத்தைகளை எடுத்துக்காட்டும் வகிபாகமேற்று நடித்தல்களை முன்வைத்துக் களிப்புறுவார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு : 1**

- வகுப்பு மாணவரை நான்கு குழுக்களாகப் பிரிக்குக.
- வகுப்புச் சுற்றுப்புறத்தில் அண்மிய சில இடங்களைத் தெரிவு செய்து அவதானித்துத் தகவல் சேகரித்து வருமாறு மாணவரை வழிப்படுத்துக. (ஒரு குழுவுக்கு ஓர் இடம் வீதம் வழங்குக.)

  ***உதாரணம் :***
  - ∗ வகுப்பறை உள், வெளிச் சூழல்
  - ∗ வழிபாட்டிடம்
  - ∗ பூம்பாத்தி
  - ∗ நூலகம்
  - ∗ போசனசாலை
  - ∗ விளையாட்டுத்திடல்

- மாணவர் அவதானித்த இடங்களின் தன்மைக்கு அதாவது,

  ∗ சுத்தமாகவும் நேர்த்தியாகவும் இருப்பதால் மனநிலையில் ஏற்பட்ட உணர்வு
  ∗ அசுத்தமாகவும் நேர்த்தியின்றியும் இருப்பதால் மனதில் ஏற்பட்ட உணர்வு
  என்றவாறு முன்வைப்பதற்குக் குழுவின் அனைவருக்கும் சந்தர்ப்பமளிக்குக.

- சுத்தமாகவும் நேர்த்தியாகவும் இருக்கும் இடங்கள்மீது அனைவரது கவனமும் ஈர்க்கப்பட்ட விதத்தைக் கலந்துரையாடுக.
- ஒழுங்கின்றி, அசுத்தமாக இருக்கும் இடங்களை நேர்த்தியாக்குவதற்காக நாம் செய்யக் கூடியவை தொடர்பான கருத்துக்களை / பிரேரணைகளை வினவியறிக.


  - ∗ கூட்டிப் பெருக்குதல், கழுவுதல், அப்புறப்படுத்தல் (சிலந்தி வலை, உடைந்த பொருள்கள்)
  - ∗ ஒழுங்குபடுத்தலும் பழுதுபார்த்தலும்
  - ∗ குப்பைகூளங்களை வேறாக்கிக் குப்பைத்தொட்டியில் இடல்
  - ∗ ஒவ்வொருவரும் ஒழுங்காக, நேர்த்தியாக வேலை செய்ய வழிப்படுத்தல்
  - ∗ அழகுபடுத்துவதற்குத் தேவையான பூஞ்செடிகள் / அழகிய தாவரங்கள் / காய்கறிக் கன்றுகள் போன்றவற்றை நட்டு வளர்த்தல்
  - ∗ அவ்வப்போது நீர் ஊற்றுதலும் களைப் பூண்டுகளைப் பிடுங்குதலும்

- தமது சுய சுத்தம் மற்றும் ஒழுங்கு தொடர்பாகச் சரியாகக் கவனம் செலுத்தும்போது தமது சூழலின் சுத்தம் மற்றும் ஒழுங்கு தொடர்பாகவும் கவனம் செலுத்திச் செயற்பட முடியும் என்பதை எடுத்துக்காட்டுக.
- தமது சுற்றுப்புறச் சூழலைச் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் வைத்திருப்பதால் ஈக்கள், நுளம்புகளால் ஏற்படும் தீங்குகளையும் சூழல் மாசடைவதையும் இழிவாக்கிக்கொள்ள முடிவதோடு உடலுக்கும் உள்ளத்திற்கும் இதமான ஒரு சூழலில் வாழ எமக்கு வாய்ப்புக் கிடைக்கும் விதம் தொடர்பாக மாணவருக்கு விளக்குக.

**செயற்பாடு : 2**
**படிமுறை - 1**

- ஏற்கனவே அவதானித்த நேர்த்தியற்றுக் காணப்படுகின்ற இடங்களை, நேர்த்தியாக்குவதற்காக நாம் என்ன செய்யலாம் என மாணவரிடம் வினவுக. மாணவர் வழங்கும் பதில்களைப் பாராட்டுக.
- நாம் மாற்றியமைக்கக்கூடிய இடங்கள் உள்ளனவாயின் அவை யாவை என மாணவரிடம் வினவுக.
- மாற்ற முடியாத இடங்கள் தொடர்பாக மாணவர் கருத்துத் தெரிவித்த பின்னர், பின்வரும் செயற்பாடுகளை மாணவர்களுக்கு முன்வைக்குக. (கருத்துத் திரட்டல் / சிந்தனைக் கிளர்வுச் செயற்பாடு)

- முதலில் சமமான தூரங்களில் அமையுமாறு கீழே படத்தில் காட்டியுள்ளவாறாக 9 புள்ளிகளை இட்டுக்கொள்ளுமாறு அறிவுறுத்துக.
- பென்சிலை அல்லது பேனாவைப் பயன்படுத்தி ஏதேனும் ஒரு புள்ளியில் ஆரம்பித்து, கையைத் தூக்காது ஒரு கோட்டின்மீது இரண்டு தடவைகள் பென்சிலைக் கொண்டுசெல்லாது ஒன்பது புள்ளிகளையும் நான்கு நேர்கோடுகளால் தொடுத்துக் காட்டுமாறு அறிவுறுத்துக.
- மாணவர் அப்புள்ளிகளை இணைத்துள்ள விதத்தை அவதானிக்குக.




- உரிய அறிவுறுத்தல்களின்படி புள்ளிகளைத் தொடுத்த மாணவரைப் பாராட்டுக. சரியாகத் தொடுக்க இடர்ப்படும் மாணவர்களுக்கு வழிகாட்டி விளக்கமளிக்குக.
- மாற்றங்களைச் செய்வதற்காக வரையறைப்பட்ட ஒரு வரம்புக்கு மாத்திரம் வரையறைப்பட்டு இருக்காது அவ்வரையறைக்கு அப்பாலும் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும் என்பதை வலியுறுத்துக.

**படிமுறை - 2**

- நல்லதொரு மாற்றத்தை ஏற்படுத்துவதற்குக் காரணமாகும் பிரதானமான விடயம் அதற்குப் பொருத்தமான ஒரு திட்டத்தைத் தயாரித்தல் ஆகும் என வலியுறுத்துக.
- அதற்காக, சிரமதான வேலைத்திட்டமொன்றைத் திட்டமிடுமாறு மாணவரை வழிப்படுத்துக.

**செயற்பாடு : 3**

- மாணவரை நான்கு குழுக்களாகப் பிரிக்குக. அவற்றுள் இரண்டு குழுக்களுக்கு வகுப்பறை யினுள்ளேயும் மற்றைய இரண்டு குழுக்களுக்கு வகுப்பறைக்கு வெளியேயும் மாற்றங்களை ஏற்படுத்துதற்குத் தேவையான திட்டங்கள் தயாரிக்குமாறு அறிவுறுத்துக.

  * சுத்தம்
  * தேவையற்றதை அப்புறப்படுத்தல்
  * பாவனைப் பொருள்களையும் உபகரணங்களையும் உரிய இடங்களில் வைத்தல்
  * அழகை மேம்படுத்தல்
  * ஒழுங்குமுறைமையை / நேர்த்தியை மேம்படுத்தல்

  ஆகிய விடயங்களில் கவனம் செலுத்தி, மாற்றமொன்றை ஏற்படுத்துவதற்கான திட்டம் தயாரிக்கச் சந்தர்ப்பமளிக்குக. (தேவைப்படும் வேளைகளில் ஆசிரியர் தலையிட்டு உதவி புரிக.)
- வெளிப்புறத் திட்டங்களையும் உட்புறத் திட்டங்களையும் வெவ்வேறாகக் கரும்பலகையில் காட்சிப்படுத்துக.
- உட்புறத் திட்டங்கள் இரண்டுள் மிகவும் பொருத்தமான திட்டத்தைத் தெரிவுசெய்து, மற்றைய திட்டத்தில் அடங்கியுள்ள பொருத்தமான விடயங்களையும் அதில் தேவையான இடங்களில் சேர்க்குக.
- அவ்வாறாகவே, வெளிப்புறத் திட்டங்கள் இரண்டினுள் ஒன்றைத் தெரிவு செய்து மற்றைய திட்டத்தில் அடங்கியுள்ள பொருத்தமான விடயங்களை அதில் தேவையான இடங்களில் சேர்க்குக.

- அதற்கமைய, நான்கு குழுக்களும் தனித்தனியாக வகுப்பறையின் உட்புறத்தையும் வெளிப்புறத்தையும் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் ஒழுங்குபடுத்தச் சந்தர்ப்பமளிக்குக.
- திட்டத்தின்படி மாணவர் குழுக்களிரண்டினதும் ஒழுங்குமுறைமையைப் பாராட்டுக.
- இவ்வாறாகப் புதிதாக யாதேனுமொன்றை ஒழுங்குபடுத்துவதால் மகிழ்ச்சி ஏற்படுகின்ற மையையும் அவ்வாறாக நாம் கூட்டாகச் செயற்படுவது அவசியம் என்பதையும் எடுத்துக்காட்டுக.
- யாதேனுமொன்றைச் செய்வது இலகுவானதாயினும் அதைத் தொடர்ந்து பேணிவருவதற்கு அனைவரதும் பங்களிப்பும் அர்ப்பணிப்பும் உச்ச அளவில் கிடைப்பது அவசியமாகும் என்பதை எடுத்துக்காட்டுக.
- வகுப்பறையின் உட்புறத்தையும் வெளிப்புறத்தையும் ஒழுங்குபடுத்துவதில் உச்சளவு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அனைவரையும் பாராட்டுக.
  மாணவர்களுக்கிடையே கூட்டுணர்வு, மலர்ச்சி, மகிழ்ச்சி, அர்ப்பணிப்பு ஆகியன காரணமாக வகுப்பறையின் உள் மற்றும் வெளிப்புறச் சூழலை இவ்வாறு நேர்த்தியாக்குவதற்காக மாற்றங்களைச் செய்வதற்காக அனைவரும் வழங்கிய பங்களிப்பைப் பாராட்டுக.


**செயற்பாடு : 4**

- வகுப்பை அழகுபடுத்துவதற்காகப் பொருத்தமான சித்திரங்களை உள்ளடக்கிய ஆக்கமொன்று செய்வதற்குத் தேவையான பின்வரும் பொருள்களைக் கொண்டுவருமாறு மாணவரை வழிப்படுத்துக.

  **சித்திரம் வரைவதற்காக :**
  - A4 அளவு வெள்ளைத்தாள்
  - A4 அளவு காட்போட் துண்டு
  - வர்ணம் தீட்டுவதற்குத் தேவையான பஸ்ரல் வர்ணக் குச்சிகள் அல்லது நீர் வர்ணம்

  **அலங்காரப் பின்னல் வேலைகளுக்காக :**
  - வெண்ணிறப் பசை, கத்தரிக்கோல், கறுப்ப நிற தடித்த நூல் (cord) 1/2 மீற்றர்
  - கறுப்பு, கடும் ஊதா, செம்மஞ்சள் 1/2 சென்றிமீற்றர் அகலமான ரிபன் 2 மீற்றர் வீதம் (சித்திரத்தின் நிறத்திற்கேற்ப கரை தெள்ளத் தெளிவாகக் காட்சியளிக்கும் வகையில் தேவையான நிறங்களைத் தெரிவுசெய்து கொள்க.)

- காட்டுருவுக்காக (design) பொருத்தமான ஒரு சித்திரத்தைத் தெரிவுசெய்து கொள்க.
- அதனைப் பொருத்தமானவாறு நிறம் தீட்டுக.
- சித்திரம் அடங்கியுள்ள தாளில் சித்திரத்தைச் சுற்றிவர ஏறத்தாழ இரண்டு அல்லது 2 1/2 சென்றிமீற்றர் அளவு இடம் விட்டு, பின்னணியை அழகாக நிறம் தீட்டுக.



- இரண்டு மீற்றர் நீளமாக மூன்று நிற ரிபன் நாடாக்களைச் சேர்த்து ஓர் அந்தத்தில் முடிச்சிடுக.

- பின்னர் தலைமுடி பின்னுவது போன்று பின்னி, இரண்டு மீற்றர் நீளமான (1/2 அங்குல அகல) பின்னல் வேலைப்பாட்டைத் தயார்படுத்திக் கொள்க.
- A4 அளவுத் தாளில் காட்டுருச் சித்திரத்தைச் சுற்றிவர உள்ள 2 1/2 சென்ரிமீற்றர் பகுதி இடைவெளியில் மேலே தயாரித்த பின்னல் வேலைப்பாட்டை ஒட்டுக.
- ஆக்கத்தை A4 அளவு காட்போட் துண்டில் ஒட்டி, பொருத்தமான இடங்களில் இரண்டு சிறிய துளைகள் இட்டு நூல் கோர்த்து சுவரில் தொங்கவிடுக.

**செயற்பாடு : 5**

- நாம் செய்யத்தக்க நேர் வகையான மாற்றங்கள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுக.
- பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ்செலுத்துக.

  ***உதாரணம் :***

  * காலையில், நித்திரை விட்டெழுந்தவுடன் கட்டிலை ஒழுங்குபடுத்திப் படுக்கையை/ பாயை வைப்பதன் முக்கியத்துவம்
  * அசுத்தமாகக் காணப்படும் வகுப்பறையைச் சுத்திகரித்து நேர்த்தியாக்குவதன் முக்கியத்துவம்
  * உணவு உட்கொண்ட பின்னர் பாத்திரங்கள், தட்டங்களைக் கழுவிச் சுத்திகரித்து உரிய இடத்தில் வைத்தல்
  * களை - பூண்டுகள் வளர்ந்துள்ள ஒரு பாத்தியை நேர்த்தியாக்குதல்
  * குப்பை - கூளங்களை உரியவாறு அப்புறப்படுத்தாமையால் ஈக்கள், நுளம்புகள் பெருகியுள்ள ஓர் இடத்தை நேர்த்தியான இடமாக மாற்றியமைத்தல் போன்றவை

- மாணவர் முன்வைத்த பிரேரணைகளைக் கரும்பலகையில் எழுதுக.
- அவற்றுள் மிகப் பொருத்தமான நல்ல நடத்தைகளை வகுப்பு மாணவரின் எண்ணிக்கைப்படி (ஒரு குழுவுக்கு 5 - 6 வரை) தெரிவுசெய்து கொள்க.
- அவற்றுக்கு இலக்கமிட்டுச் சீட்டுக்கள் தயாரித்து குழுவுக்கு வழங்கி, மேற்படி ஒரு தலைப்பின் கீழ் நல்ல நடத்தைகளை எடுத்துக்காட்டும் வகையிலான வகிபாகமேற்று நடித்தல்களை முன்வைக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- இச்செயற்பாட்டிற்கு ஆயத்தம் செய்துகொள்வதற்கு போதிய கால அவகாசம் வழங்குக.
- ஒவ்வொரு வகிபாகமேற்று நடித்தலின் பின்னரும் தமது வீடுகளில் இவ்வாறான மாற்றங்களைச் செய்வதன் முக்கியத்துவத்தையும் அதன் மூலம் ஏற்படும் மகிழ்ச்சி மற்றும் எமக்குக் கிடைக்கும் நன்மைகளையும் மாணவருடன் கலந்துரையாடுக.
- மாணவரது முன்வைப்புகளைப் பாராட்டுக.

**செயற்பாடு : 6**

- வகுப்பு மாணவரைச் சமமான சில குழுக்களாகப் பிரித்து, மாணவர் ஒவ்வொருவருக்கும் சிறிய ஒவ்வொரு காகிதக்கொடி வீதம் வழங்குக.
- பின்னர், ஏறத்தாழ 10 மீற்றர் எல்லையில் நின்று முன்னால் உள்ள ஓர் இடத்தில் தமது குழுவினர் தீர்மானித்த வடிவத்தை அமைத்துக்கொள்க. (வடிவத்தை அமைக்கும்போது கொடிகளுக்கு இடையே 60 சென்றி மீற்றர் (2 அடி) இடைவெளியிருப்பது அவசியமாகும்.)
- ஆசிரியர் சமிக்ஞை வழங்கிய பின்னர் தமது வரிசையில் உள்ள விளையாட்டு வீரர்கள் அனைவரும் குறித்த இடத்திற்கு ஓடிச்சென்று தாம் பிரேரித்துள்ள வடிவத்தை ஆக்கிய பின்னர் திரும்பி ஓடிவருதல் வேண்டும்.
- வடிவத்தைச் செய்து முடித்து மீண்டும் உரிய இடத்திற்குத் திரும்பி வந்த முதலாவது குழு வெற்றி பெற்ற குழுவாகும்.

சமூக ஒருமைப்பாட்டுக்கென எழுதப்பட்டுள்ள கதைத்திரட்டில் அடங்கியுள்ள ‘‘மாபெரும் சைக்கிள் ஓட்டப் போட்டி”எனும் கதையை இக்கருப்பொருளுக்காகப் பயன்படுத்துக.

## கருப்பொருள் 15 : மனிதனும் தகவல்களும்

சமூகத்தில் வாழும் ஒருவர் என்ற வகையில் வெளியுலகத் தகவல்கள் தொடர்பாக அறிவூட்டம் செய்வது முக்கியமானது. சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் சமயத் தகவல்கள் தொடர்பாக இற்றைய அறிவைப் பெற்றிருப்பது முக்கியமானது. தற்கால உலகில் தகவல்கள் பெறக்கூடிய பலப்பல ஊடகங்கள் உள்ளன. தொடர்பாடல் ஊடகங்களுள் அச்சு ஊடகமும் இலத்திரனியல் ஊடகமும் பிரதானமானவையாகும். இவ்வாறான ஊடகங்களைப் பயன்படுத்தித் தகவல்களைப் பரிமாறிக்கொள்ளும் சந்தர்ப்பங்களையும் யாதேனுமொன்றை வாய்மொழிமூலம் நன்கு தொடர்பாடுவதற்கான சந்தர்ப்பங்களையும் நடைமுறையில் அனுபவிப்பதற்கு இக்கருப்பொருளின் மூலம் மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

**தேர்ச்சிகள் :**

- தொடர்பாடற் கருமங்கள் நிகழும் விதத்தைக் கற்றாய்வார்.
- தொடர்பாடற் கருமங்களின்போது மரியாதையாகச் செயற்படுவார்.
- வெவ்வேறு ஊடகங்களையும் முறைகளையும் பயன்படுத்தித் தகவல் பெறுவார் அத்தகவல் களை அறிக்கைப்படுத்துவார்.
- கிடைக்கும் தகவல்களுள் பொருத்தமான தகவல்களைப் பகுப்பாய்வு செய்து தெரிவுசெய்து கொள்வார்.
- தொடர்பாடல் முறைகள் தொடர்பாக வெவ்வேறு ஆக்கங்கள் செய்து கையாண்டுபார்த்தல் களில் ஈடுபடுவார்.
- சமிக்ஞைகள், ஏவல்கள், செய்திகளைப் பயன்படுத்திச் செய்த ஆக்கங்களைக் கொண்டு செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- சரியான அறிவித்தலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி ஆடல் - பாடல்களிலும் பாத்திர நடிப்புகளிலும் ஈடுபடுவார்.

**கற்றற்பேறுகள் :**

- முற்காலத்தில் தகவல் பரிமாறிய வழிகளைத் தேடியறிவார்.
- வெவ்வேறு முறைகளைக் கையாண்டு தகவல்களை அறிக்கைப்படுத்துவார்.
- ஏனையோரின் கருத்துக்களைச் சகித்து, தமது கருத்துக்களை நிதானமாக வெளிப்படுத்துவார்.
- வெவ்வேறு தொடர்பாடல் ஊடகங்களையும் தொடர்பாடல் உபகரணங்களையும் இனங்கண்டு பயன்படுத்துவார்.
- அவ்வுபகரணங்களைச் சரியாகப் பயன்படுத்தும் விதம் பற்றிய அனுபவங்களைப் பெறுவார்.
- வெவ்வேறு ஊடகங்கள் மூலம் கிடைக்கும் தகவல்களைப் பகுப்பாய்வு செய்து பொருத்தமான தகவல்களைத் தெரிவு செய்து கொள்வார்.
- தகவல் தொடர்பாடலுக்காகப் பயன்படுத்தும் முறைகள் தொடர்பான சுவரொட்டிகளை ஆக்குவார்.
- தரப்பட்ட ஏவல்களுக்கமையச் செயற்பட்டு நடத்தல், ஓடுதல், நிற்றல் ஆகியன இடம்பெறும் விளையாட்டுக்களிலும் செயற்பாடுகளிலும் ஈடுபடுவார்.
- சரியான தொடர்பாடலின்போது கடைப்பிடிக்க வேண்டிய பண்புகள் தொடர்பாகப் போலச் செய்துகாட்டல்களை முன்வைத்துக் களிப்புறுவார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு : 1**

- மாணவர்களுக்கு ஆரம்பத் தொடர்பாடல் பற்றி சிறிய விளக்கத்தினை வழங்குக. தொடர்பாடல் என்பது ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குத் தகவலைக் கடத்துவதாகும். இது மொழியூடாகவே நடைபெறுகின்றது. பேச்சு, எழுத்து அல்லது குறியீடுகள் மூலம் செய்திகள், கருத்துக்கள், சிந்தனைகளின் பரிமாற்றம் அல்லது அறிவித்தல் தொடர்புகொள்வதைக் குறிக்கின்றது என்பதை விளக்குக.
- அதன் பின்னர், மனிதன் ஒரு தொடர்புபடும் விலங்கு. மனிதன் எப்போதும் குழுக்களாகவே வாழ விரும்புகிறான். தனியாக வாழ விரும்புவதில்லை. குழுவாக வாழும்போது அங்கத்தவர்களிடையேயும் குழுக்களிடையேயும் தொடர்பாடல் செய்ய ஒருமுறை தேவைப் பட்டது. அதன் காரணமாகவே தொடர்பாடல் முறைகள் உதயமாகின என மாணவர்களுக்கு விளக்குக.
- மாணவர்களை சிறிய குழுக்களாக்குக.
- பண்டைய தொடர்பாடல் முறைகளைக் கூற, முன்வைக்க வழிப்படுத்துக.
- அதன் பின்னர் ஆதிகால மனிதன் பின்வரும் முறைகள் மூலம் தொடர்பாடலை மேற்கொண்டான்.

  ∗ அங்க அசைவுகள் / பேச்சு / வாய்மூலம்
  ∗ கூக்குரலிடல்
  ∗ முரசறைதல்
  ∗ கொடியசைத்தல்
  ∗ தீக்குவியல் மூட்டல்
  ∗ பிராணிகள் மூலம் (குதிரை ஏவலாள், புறா, அன்னம் போன்ற பறவைகள்)
  ∗ ஈட்டியில் செய்தியை இணைத்து அனுப்புதல்.

- அதனை டிமைப் பேப்பரில் எழுதிக் காட்சிப்படுத்துக.
- அதன் பின்னர் அங்க அசைவுகள் மூலம் எவ்வாறு தொடர்பாடல் மேற்கொள்ளலாம் என மாணவர்களைக் குழுவாகச் செய்துகாட்ட ஊக்கப்படுத்துக.
- பின்னர் முரசறைந்து எவ்வாறு தகவல்களைப் பரிமாறினர் என செய்துகாட்ட வழிப்படுத்துக.
- அதன் பின்னர் தீயை/நெருப்பைப் பயன்படுத்தி எவ்வாறான தொடர்பாடலை மேற்கொண்டனர் என்பதைப் போலச்செய்தல் மூலம் காட்ட வழிப்படுத்துக.
- இச்செயற்பாடுகள் நிறைவுபெற்றதும் பின்னைய காலங்களில் மெல்ல மெல்ல மொழிகள் விரிவாகத் தொடங்கின. ஆரம்பத்தில் பேச்சு வடிவம் மட்டுமே பயன்பாட்டில் இருந்தது எனினும் காலத்தின் தேவை கருதி எழுத்து வடிவம் உருவாக்கப்பட்டது என விளக்குக.

**செயற்பாடு : 2**
**படிமுறை - 1**

- நாம் முகபாவத்தின் மூலம் எவ்வாறு உணர்வுகளை வெளிப்படுத்துகின்றோம் என மாணவர்களிடம் கேட்டறிக. மாணவர்கள் பதில் கூறிய பின்னர் கரும்பலகை / வெண்பலகையில் உணர்வுகளைப் பட்டியற்படுத்துக.

  ***உதாரணம் :***
  ∗ மகிழ்ச்சி
  ∗ சோகம்
  ∗ கோபம்
  ∗ சாந்தம்
  ∗ வீரம்
  ∗ வெறுப்பு
  ∗ அச்சம்

- மாணவரை இருவரிருவராகக் குழுக்களாக்குங்கள்.

- பட்டியற்படுத்திய உணர்வுகளைக் குழுவாக வகிபாகமேற்றுப் போலச்செய்து காட்ட ஊக்கப்படுத்துக. இருவரும் ஏக காலத்தில் ஒரே உணர்வை முகபாவனை மற்றும் அங்க அசைவுகள் மூலம் மாத்திரம் வெளிக்காட்டுமாறு அறிவுறுத்துக.
- மேற்படி பட்டியற்படுத்திய உணர்வுகளை வகிபாகமேற்று நடித்தல்களைச் செய்துகாட்டுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- பாவத்தின் மூலம் மற்றும் அங்க அசைவுகள் மட்டுமே வெளிப்படுத்த வேண்டும் என மாணவர்களிடம் வலியுறுத்துக. எல்லா மாணவர்களையும் இச்செயற்பாட்டில் ஈடுபடுத்துக.

**செயற்பாடு : 2**

- பல்வேறு முகமூடிகளை உருவாக்கி மாணவர்கள் அவற்றை அணிந்து உணர்வுகளை வெளிப்படுத்த ஊக்கப்படுத்துக.
- பெற்றோரின் உதவியுடன் முகமூடிகளைத் தயாரிக்க ஆவன செய்க.

**செயற்பாடு : 3**

- தொடர்பாடல் கூறுகளை மாணவருக்கு விளக்குக.
- தொடர்பாடல் கூறுகள் மூன்று உள்ளன.

  1. அனுப்புபவர்
  2. ஊடகம்
  3. பெறுநர்

- மேற்குறிப்பிட்ட மூன்றும் தொடர்பாடலுக்குத் தேவையான முக்கிய கூறுகள் ஆகும்.

| **அனுப்புபவர்** | **ஊடகம்** | **பெறுநர்** |
|---|---|---|
| கடிதம் எழுதுபவர் | கடிதம் | கடிதத்தைப் பெறுபவர் |

- கடிதத்தை இடுவதற்கு ஒரு பெட்டி தயாரித்துக்கொள்க.
- மாணவர்கள் தாம் விரும்பும் நண்பர் ஒருவருக்குக் கடிதம் ஒன்றை எழுதி, கடித உறையிலிட்டு, முத்திரை ஒட்டி, நண்பரின் முகவரியை எழுதித் தபாற் பெட்டியில் இட வழிப்படுத்துக.
- நண்பர் தபாற்காரர் மூலம் அக்கடிதத்தைப் பெற்றுக்கொண்டு வகுப்பிற்குக் கொண்டு வந்து வாசித்துக் காட்ட வழிப்படுத்துக.
- எல்லா மாணவர்களும் இச்செயற்பாட்டில் ஈடுபட வழிப்படுத்துக. (கடிதம் அனுப்புபவர் / தபால் விநியோகிப்பவர்)
- பின்வரும் செயற்பாட்டை நாடக வடிவில் போலச் செய்துகாட்ட மாணவரை வழிப்படுத்துக.

கடிதம் எழுதுதல் → தபாற் கந்தோருக்குச் செல்லல் → முத்திரை வாங்குதல் → கடித உறைக்குள் கடிதத்தை இடல் → முத்திரை ஒட்டுதல் → தபாற்பெட்டிக்குள் இடல் → தபாற்காரர் கடிதங்களை தபாற் கந்தோருக்கு எடுத்துச் செல்லல் → தபால் விநியோகத்தர் கடிதங்களைப் பெற்று தெரிவு செய்து உரிய வீடுகளுக்குக் கடிதங்களைத் தெரிவுசெய்து உரிய முகவரிகளுக்கு / வீடுகளுக்கு விநியோகித்தல்

- மாணவர்கள் குழுவாக நடித்துக் காட்டுவதன் மூலம் தொடர்பாடல் எவ்வாறு நடைபெறுகின்றது என்பதை அனுபவ ரீதியாகப் புரிந்துகொள்ள அவர்களை வழிப்படுத்துக.

**செயற்பாடு : 4**

**படிமுறை - 1**

- தன்னடக்கத்துடன் ஏனையோரின் கருத்துக்களைச் சகித்துத் தமது கருத்துக்களை முன்வைப்பதன் முக்கியத்துவத்தை மாணவருக்கு விளக்குக.
- குழுவாகச் செயற்படும்போது தமது கருத்துக்களை வெளியிடுவதற்காகக் கிடைக்கும் சந்தர்ப்பங்கள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுக.
- கூட்டமொன்று நடைபெறும் சந்தர்ப்பத்தில் தமது கருத்தை வெளிப்படுத்தல், ஆசிரியர் வினாக் கேட்கும் வேளையில் விடையளித்தல் போன்ற சந்தர்ப்பங்களில் தமது தருணம் வரும் வரையில் பொறுமையுடன் இருத்தல் வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுக.

**படிமுறை - 2**

- மாணவர் இருவரை வகுப்பின் முன்னே அழைத்துக்கொள்க.
- நீண்ட காலத்தின் பின்னர் சந்தித்த நண்பர்கள் எனக் கருதி, நண்பனிடம் கூற வேண்டிய விடயங்களை இருவரும் ஏக காலத்தில் கூறுமாறு வழிப்படுத்துக. நண்பர்களின் உரையாடலைச் செவிமடுக்குமாறு ஏனைய மாணவர்களுக்கு அறிவுறுத்துக.

    ***உதாரணம் :***

    * தாம் செய்த ஒரு சுற்றுப் பயணம் தொடர்பான விவரங்கள், பிறந்த நாள் நிகழ்வின்போது இடம்பெற்ற ஒரு நிகழ்வு, வேறு பொருத்தமான ஒரு நிகழ்வு தொடர்பாக உரையாட வழிப்படுத்துக.

- உரையாடிய இருவரும் திடீரென உரையாடியமையால் அவர்கள் இருவருக்கும் எதுவும் சரியாகப் புரியவில்லை என்பதை விளக்குக.
- அவ்வாறான நிலைமை ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக என்ன செய்ய வேண்டும் என (தமது கருத்துக்களை எவ்வாறு வெளிப்படுத்த வேண்டும் என) மாணவரிடம் வினவுக.
- மாணவர் முன்வைக்கும் விடைகளைப் பாராட்டுக. பின்னர் மீண்டும் வேறு இரு மாணவர்களை வகுப்பின் முன்னே அழைத்து ஒருவர் பேசும் போது மற்றையவர் செவிமடுக்குமாறும் பின்னர் மற்றையவர் தாம் கூற வேண்டிய தகவலைக் கூறுமாறும் வழிப்படுத்துக.
- இச்செயற்பாடு தொடர்பாக மாணவரது கருத்துக்களை வினவி, நன்கு தொடர்பாடுவதற்காகப் பொறுமையுடன் கருத்துத் தெரிவிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துக.
- வகுப்பு மாணவர் அனைவருக்கும் சந்தர்ப்பம் வழங்குவதற்காக மாணவரை இருவரிருவராக குழுக்களாக்கி, மேற்படி இரண்டு செயற்பாடுகளிலும் ஈடுபடுமாறு வழிப்படுத்தி அனுபவங் களைப் பெறச் சந்தர்ப்பம் அளிக்குக.
- இச்செயற்பாட்டைக் குழுவாக விரும்பிய நாடகமாக (போலச்செய்தல்) நடித்துக் காட்ட உற்சாகப்படுத்துக.

**செயற்பாடு : 5**

- மாணவர்களுக்கு நவீன கால தொடர்பாடல் முறைகளை அறிமுகம் செய்து கலந்துரையாடுக.
- மாணவர்களை கணினி அறைக்கு அழைத்துச் சென்று மின்னஞ்சல் மூலம் எவ்வாறு தகவல்கள், படங்கள் பரிமாறலாம் என விளக்குங்கள்.
- கணினி மூலம் தகவல்கள், படங்கள் பரிமாறும் அனுபவத்தை மாணவர்களுக்குப் பாடசாலையில் உள்ள கணினிக் கூடத்தின் ஊடாகப் பெற்றுக்கொடுக்குக.
- கணினிக் கூடம் இல்லையெனின் பாடசாலையில் உள்ள கணினியொன்றினைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு அனுபவங்களை வழங்க ஆவன செய்க.
- மின்னஞ்சல் மூலம் கடிதங்கள் தயாரித்தல், மின்னஞ்சல் மூலம் கடிதங்கள் அனுப்புதல், படங்கள் / ஒளிப்படங்கள் அனுப்புதல், இறுவட்டு, வீடியோக் காட்சிகள் மூலம் தகவல்களைத் தொடர்பாடுதல், குரல்வழி அஞ்சல் (Voice mail) அனுப்புதல் போன்றவை தொடர்பாக மாணவருக்குச் செய்முறை அனுபவங்களைப் பெறச் சந்தர்ப்பமளிக்குக.
- மின்னஞ்சல் முறை மூலம் தகவல்களைப் பரிமாறல்
- சிறிய வீடியோக்கள் மூலம் தகவல்களைப் பரிமாறல்

**செயற்பாடு : 6**

- மாணவர்கள் தகவல்களை எவ்வாறு அறிந்துகொள்ளலாம் எனக் கேட்டறியுங்கள்.
    * பத்திரிகை
    * வானொலி
    * தொலைக்காட்சி
    * கைப்பேசி / செல்லிடப்பேசி
    * கணினி / இணையம்
    * நூலகம் (நூல்கள் / சஞ்சிகைகள்) எனப் பதிலளிப்பார்கள்.
- தகவல்கள் பெற்றுக்கொள்ளும் வழிகளைத் தமது அப்பியாசக் கொப்பியில் படமாக வரைந்து நிறந்தீட்ட மாணவர்களை ஊக்கப்படுத்துக.
- போலச் செய்தலின் ஊடாகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் முறையை மாணவர்கள் குழுவாக முன்வைக்க வழிப்படுத்துக.
    * வானொலி - செய்தி வாசித்தல்
    * வானொலி - பத்திரிகைச் செய்தி வாசித்தல்
    * தொலைக்காட்சி - செய்தியறிக்கை
    * தொலைக்காட்சி - பத்திரிகைச் செய்தி

தொலைக்காட்சி - செய்திகள்
- விளையாட்டு
- மருத்துவம்
- சமையல்
- பொழுதுபோக்கு

} நிகழ்ச்சிகள்

கைப்பேசி
- நண்பர்கள்
- உறவினர்
- அலுவலகத்தார்
- பெற்றோர்

கணினி / மடிக்கணினி/ TAB
- செய்திகள்
- தகவல்கள் (மின்னஞ்சல்)
- படங்கள் (ஒளிப்படங்கள்)
- காணொளிக் காட்சிகள்

**செயற்பாடு : 7**

- மாணவர்களுக்குப் பின்வரும் அட்டையைத் தயாரித்து வழங்கித் தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் முறைகளைக் குறித்துக்காட்ட வழிப்படுத்துங்கள்.

| கண் | காது | கண் - காது |
|---|---|---|
| பத்திரிகை<br><br>................ | வானொலி<br><br>............................ | தொலைக்காட்சி<br><br>.............................. |

- அதன் பின்னர், தாம் விரும்பும் தொடர்பாடல் கருவிகளை அட்டைகளின் உதவியுடன் செய்துகாட்ட வழிப்படுத்துக.
- அக்கருவிகளைச் செய்த பின்னர் அக்கருவிகள் தொடர்பான பாடல்களை மாணவருக்கு அறிமுகஞ்செய்க.
- அவற்றைப் பாடி - ஆட வழிப்படுத்துக.

**செயற்பாடு : 8**

- வகுப்பு மாணவரைச் சமமான இரண்டு குழுக்களாகப் பிரிக்குக.
- ஒரு குழுவினரை ஒரு பெரிய வட்டத்தினுள்ளேயும் மற்றைய குழுவினரை அவ்வட்டத்தினுள் வரைந்த சற்றுச்சிறிய வட்டத்தினுள்ளேயும் நிறுத்துக. வெளிவட்டத்திலுள்ள மாணவருக்கு உள்வட்டத்திலுள்ள ஒவ்வோர் நண்பரை ஒதுக்குக. இரண்டு வட்டங்களிலுமுள்ள மாணவர்கள் ஒருவருக்கொருவர் எதிர்த்திசையில் நடந்து செல்ல வேண்டும். விளையாட்டு வீரர்களுக்கு நடந்து செல்வதற்கான வட்டங்களை ஆசிரியர் வரைந்து கொடுத்தல் வேண்டும். வட்டங்கள் இரண்டிற்கும் இடையிலான வெளி ஏறத்தாழ மூன்று மீற்றராக இருக்குமாறும் வெளி வட்டத்தின் விட்டம் 10 மீற்றராக இருக்குமாறும் (உள்வட்டம் 7 மீற்றர்) வட்டங்களை வரைவது பொருத்தமானது.
- ஆசிரியரது முதலாவது சமிக்ஞையின்படி இரண்டு குழுவினரும் எதிர்த்திசைகளில் நடந்துசெல்ல வேண்டும். (ஒரு குழு வலஞ்சுழியாகவும் மற்றைய குழு இடஞ்சுழியாகவும்)
- ஆசிரியர் இரண்டாவது சமிக்ஞை வழங்கியவுடன் உள்ளே சிறிய வட்டத்தினுள் இருப்போர் மாத்திரம் தமது நண்பனை நோக்கி ஓடிச்சென்று நண்பனைப் பிடித்து உடனே நிலத்தில் அமர்த்தல் வேண்டும்.
- முதலில் நண்பனைத் தேடிப்பிடித்து அமரும் இருவரும் வெற்றி பெற்றவராவர்.

## கருப்பொருள் 16 : எமது பண்டைய தகவல்கள்

எமது கடந்தகாலம் தொடர்பான விளக்கத்தைப் பெற்றிருத்தலானது, எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கு இன்றியமையாததாகும். எனவே மாணவர்க்கு சிறுபராயம் முதலே எமது கடந்தகாலம் தொடர்பான தகவல்களை முறைமையான வகையில் கற்றாய்வதற்கும், மதிக்க வேண்டியவற்றை மதிப்பிடுவதற்கும் வழிகாட்டுதல் வேண்டும்.

இக்கருப்பொருளின் கீழ், தாம் கல்வி கற்கும் பாடசாலையையும் சுற்றுப்புறச் சூழலையும் தழுவி, எமது பண்டைய தகவல்களை பயிலுவதற்கும் மதிக்க வேண்டியவற்றுக்கு மதிப்பளிப்பதற்கும் மாணவரை வழிப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் மாணவரது ஆற்றல் மட்டத்திற்கேற்ப, அவதானித்தல், தேடியறிதல் போன்ற முறைகள் மூலம் தகவல்களை இனங்காண்பதற்கும், பொருத்தமானவாறு அறிக்கைப்படுத்துவதற்கும் கூடவே ஒரு கிராமிய விளையாட்டாகிய பல்லாங்குழி விளையாட்டுத் தொடர்பாக விளக்கத்தை ஏற்படுத்துவதற்கும் இந்தக் கருப்பொருளின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

**தேர்ச்சிகள் :**

- வரலாற்று முக்கியத்துவமுள்ள இடங்களை மதித்து அவற்றைப் பாதுகாக்கச் செயற்படுவார்.
- வரலாற்று, பண்பாட்டு முக்கியத்துவமுள்ள தாவரங்கள், இடங்கள் மற்றும் ஏனையவற்றை இனங்கண்டு அறிக்கைப்படுத்துவார்.
- தமது பிரதேசத்தில், நாட்டில் காத்திரமான சேவைகள் செய்த ஆட்களை மதித்து அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு செயற்படுவார்.
- பண்டைய மரபுரிமைகளை எடுத்துக்காட்டும் ஆக்கங்கள் செய்வார்.
- பண்டுதொட்டு விளையாடப்படும் கிராமிய விளையாட்டுக்களை மதித்தவாறு அவற்றில் ஈடுபடுவார்.
- நம் முன்னோர் நாட்டிற்காக ஆற்றிய சேவைகளையும் பண்டைய பெருமைகளையும் எடுத்துக்காட்டும் வகையில் களிப்பூட்டத்தக்க செயற்பாடுகளில் ஈடுபடுவார்.

**கற்றற்பேறுகள் :**

- வரலாற்று முக்கியத்துவமுள்ள இடங்களை இனங்காண்பார்.
- வரலாற்று முக்கியத்துவமுள்ள இடங்களின் முக்கியத்துவத்தை விளங்கி அதனை மதிப்பார்.
- தமது பிரதேசத்தில் அல்லது கிட்டிய ஒரு பிரதேசத்தில் வரலாற்று முக்கியத்துவமுள்ள இடங்களின் மற்றும் தாவரங்களின் முக்கியத்துவத்தைத் தேடியறிவார்.
- நாட்டின் நற்பெயரைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்த நபர்கள் சிலரின் வாழ்க்கைச் சரிதைகளைக் கற்றாய்ந்து அறிக்கைப்படுத்துவார்.
- பண்டைய கலை வடிவமைப்புக் கோலங்களைப் பயன்படுத்தி ஆக்கங்கள் செய்வார்.
- பண்டுதொட்டு விளையாடப்பட்டுவரும் கிராமிய விளையாட்டுக்களில் ஈடுபட்டுக் களிப்புறுவார்.
- நாட்டிற்குச் சேவையாற்றிய நம் முன்னோரின் முன்மாதிரியான வாழ்க்கைச் சரிதங்களை முன்வைப்பார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு : 1**

- இலங்கையில் பிரபல்யம் வாய்ந்த வரலாற்று இடங்கள் சிலவற்றின் படங்கள்/ஒளிப்படங்கள் மற்றும் தகவல்களைத் திரட்டி வருமாறு மாணவரை வழிப்படுத்துக. (நேரகாலத்துடன் அறிவிக்குக)

  ***உதாரணம் :***

  - ∗ யாழ்ப்பாணக் கோட்டை / காலிக் கோட்டை / சிகிரியா
  - ∗ பிரதேச குளங்கள் : பராக்கிரம சமுத்திரம் / மின்னேரியாக் குளம், பசவக் குளம், இரணைமடுக் குளம், ............ போன்றவை

- அவற்றின் பெறுமானத்தையும் வரலாற்று முக்கியத்துவத்தையும் கலந்துரையாடுக.

  ***உதாரணம் :***

  - ∗ வரலாற்றுக் கதைகள்
  - ∗ கட்டப்பட்ட காலம் / ஆட்சிக்காலம்
  - ∗ அரசர்களின் அனுசரணை
  - ∗ கிடைத்த நன்மைகளும் முக்கியத்துவமும்
  - ∗ தகவல்களை உறுதிப்படுத்துவதற்கான சான்றாதாரங்கள், ....... போன்றவை

- மேற்படி தகவல்களின் துணையுடன் தமது பிரதேசத்தில் காணப்படும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க இடங்களைக் கற்றாயுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- முன்னாயத்தத்துடன் மேற்படி இடங்களைப் பார்வையிடச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொள்க. (பிரதேசத்தில் மூத்தோர் துணையையும் பெறுக.)
- அவ்விடங்கள் குறித்து மாணவருடன் கலந்துரையாடுக.
- பின்னர், மாணவரைச் சில குழுக்களாகப் பிரித்து பின்வருமாறு தகவல்களை வெவ்வேறு முறைகளில் அறிக்கைப்படுத்த வழிப்படுத்துக.

  - ∗ ஆவணங்கள் தயாரித்தல்
  - ∗ படங்கள், ஒளிப்படங்கள், வீடியோப் பதிவுகளைத் துணையாகக் கொண்டு அவ்விடங்களின் மாதிரியுருக்களை ஆக்குதல்
  - ∗ தேடிப்பெற்ற தகவல்களுள் மனதைக் கவர்ந்த சந்தர்ப்பங்களை வகிபாகமேற்று முன்வைக்கச் சந்தர்ப்பமளித்தல்
  - ∗ பாடல்கள், கவிதைகள் போன்றவை திரட்டப்பட்டுள்ளவாயின் அவற்றைக் கருத்து வெளிப்பாட்டுடன் ஆடல் - பாடலாக முன்வைக்கச் சந்தர்ப்பமளிக்குக.
  - ∗ விஜயம் செய்து பார்த்த சில இடங்கள் பற்றிய தகவல்களைச் சித்திரமாக வரைதல்

- பார்வையிட்ட சில இடங்களின் தகவல்களை அல்லது மனதைக் கவர்ந்த சில சந்தர்ப்பங்களைச் சித்திரமாக வரைக.

  ***உதாரணம்:***

  - ∗ காலிக்கோட்டையின், யாழ்ப்பாணக் கோட்டையின் வரலாற்று முக்கியத்துவத்தை இனங்காணல்

**ஆசிரியரது முன்னாயத்தம்**

யாதேனும் இடத்தைப் பார்க்கச் செல்வதாயின், பயணம் செய்யும் விதம், மாணவர் பாதுகாப்பு, உணவு - பானாதிகள் போன்றவற்றை ஆயத்தம் செய்துகொள்ளும் விதம், படங்கள், ஒளிப்படங்கள் போன்ற மூலாதாரங்களைத் தேடிப் பெறல், மாணவர்க்கு அறிவூட்டம் செய்ய எதிர்பார்க்கும் விடயங்களைத் தீர்மானித்தல்

**பார்வையிடலும் தகவல்களைத் தேடிப்பெறவும்**

வரலாற்றுத் தகவல்கள், கோட்டையாக மாறிய விதம், காணப்படும் இடிபாடுகள், ஆய்வுகள் மூலம் தேடியறிந்த முக்கிய தகவல்கள்

**தகவல்களை அறிக்கைப்படுத்தல்**

காலிக் கோட்டை / யாழ்ப்பாணக் கோட்டை தொடர்பான தகவல்களை அறிக்கைப் படுத்தல் (சித்திரம் வரைதல், கட்டுரை எழுதுதல், கவிதை புனைதல், ஒளிப்படங்கள் திரட்டுதல், தகவல்களை ஆவணப்படுத்தி மாதிரியுரு அமைத்தல், நிகழ்வுகளை முன்வைத்தல்)

***உதாரணம் :*** பாடல்கள், நகரச் சிறப்புகளைக் கூறும் பாடல்கள்

**கொழும்பு நகரம்**

கொழும்பு நகரம் கோல நகரம்
கொள்ளை அழகு கொண்ட நகரம்

கட்டங்கள் நிறைந்த நகரம்
கூடி மக்கள் வாழும் நகரம்

அங்காடிகள் செறிந்த நகரம்
அகன்ற வீதிகள் பரந்த நகரம்

பரபரப்பாக இயங்கும் நகரம்
போக்குவரத்து மிகுந்த நகரம்

சுற்றுப் பயணி நாடும் நகரம்
சுற்றிப் பார்க்க நல்ல நகரம்

தாமரைக் கோபுரம் எழுந்த நகரம்
தடாக அரங்கு மலர்ந்த நகரம்

துறைமுகம் ஒன்று உள்ள நகரம்
துறைமுக பதியாகும் நகரம்

காலிக் கோட்டை / யாழ்ப்பாணக் கோட்டை பற்றிய பாடல்களை முன்வைத்தல்

- இவ்வாறாக மேலே குறிப்பிட்ட எவையேனும் வரலாற்று முக்கியத்துவமுள்ள ஓர் இடத்தைப் பார்வையிடச் செல்ல, அவ்விடத்திலிருந்து பெற்ற தகவல்களை முன்வைக்க வேண்டிய விதத்தை வரிசைப்படுத்துக.
- மாணவரது முன்வைப்புகளைப் பாராட்டுக.

**செயற்பாடு : 2**

- தமது பிரதேசத்தில் உள்ள பெரிதும் பழைமை வாய்ந்த வரலாற்று முக்கியத்துவமுள்ள மற்றும் சூழல்சார்ந்த முக்கியத்துவமுள்ள இடங்களையும் தாவரங்களையும் பற்றிய தகவல்களைச் சேகரித்து வருமாறு மாணவரை வழிப்படுத்துக.
- மாணவர் திரட்டிய தகவல்கள் தொடர்பான கருத்துப்பரிமாறச் சந்தர்ப்பமளிக்குக. (அமைக்கப்பட்ட காலம், இடம், காரணங்கள் போன்றவை)
- பின்னர் ஒரு குறித்த இடம் அல்லது பொருள் தொடர்பான தகவல்களைத் திரட்டி வந்த மாணவர்களை ஒரு குழுவாக்கி, ஓர் அறிக்கையைத் தயாரித்து முன்வைக்கச் சந்தர்ப்பம் அளிக்குக.
- சித்திரங்கள், பாடல்கள், கவிதைகள், வகிபாகமேற்று நடித்தல்கள் போன்றவற்றை உள்ளடக்குமாறு மாணவரை வழிப்படுத்துக. (இதற்காக மூத்தவர் ஒருவரை அல்லது பிரதேசம் தொடர்பாக தகவல்களைச் சேகரித்துவைத்துள்ள ஒருவரின் உதவியைப் பெறுமாறு அறிவுறுத்துக.

***உதாரணம் :***

- ∗ இலங்கையில் நாட்டப்பட்ட முதலாவது தேயிலைச் செடி / மரம்
- ∗ மன்னார் பெருக்க மரம் (Baobab Tree)
- ∗ ஓப்பநாயக்க - பெருங்கொடி
- ∗ கபலித்தாவை - புளியமரம்
- ∗ கப்ரன் டோசன் - கோபுரம்
- ∗ ரிட்டிகல - கந்தை (மலை)
- ∗ அம்பலம்
- ∗ நாக மரப் பூங்கா / இளஞ்சிவப்பு படிகக்கல் மலை ...

- மாணவரது முன்வைப்புகளைப் பாராட்டுக.
- இவ்வாறான வரலாற்று முக்கியத்துவமுள்ள இடங்கள் மற்றும் தாவரங்களைப் **பாதுகாப்பதன் முக்கியத்துவத்தையும்** பொறுப்பையும் சிறுபராயம் முதலே தமக்கு உண்டு என மாணவர்க்கு விளக்குக.

  - ∗ **ஞாபகச் சின்னமாக** அவற்றின்மீது கிறுக்குதல்
  - ∗ கழிவுப்பொருள்களைக் கொட்டுதல்
  - ∗ தொட்டுப்பார்த்தல் மற்றும் சுற்றுப்புறத்தில் உள்ள தாவரங்களை, இலைகளை ஒடித்தல் போன்றவற்றைத் **தவிர்த்தல்**

  அவ்வாறான இடங்களை/தாவரங்களைப் பாதுகாப்பது தொடர்பாக நாம் செய்யத் தக்கவை பற்றி மாணவரது உள்ளத்தைத் தொடும் வகையில் விளக்குக.

- எமது நாட்டில் உள்ள இவ்வாறான வரலாற்று மற்றும் சூழல் சார்ந்த முக்கியத்துவமுள்ள பெறுமதிமிக்க இடங்கள் மற்றும் தாவரங்களைப் பாதுகாப்பது தொடர்பாகக் கவனம் செலுத்துவது தொடர்பாக மாணவரது உள்ளத்தில் மனப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்த ஆவன செய்க.

செயற்பாடு : **3**

- நாட்டின் நற்பெயரைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்த சிலரது சரிதத்தைக் கற்றாய்க.
- நாட்டின் நற்பெயரைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்த வெவ்வேறு துறைகளைச் சேர்ந்த சிலர் பற்றிக் கலந்துரையாடுக.

***உதாரணம் :***

- ∗ கலாநிதி ஆனந்த குமாரசுவாமி
- ∗ கலாநிதி ரீ.பீ. ஜாயா
- ∗ அனகாரிக தர்மபால
- ∗ கலாநிதி சி.டபிள்யு. டபிள்யு. கன்னங்கர
- ∗ ஆதர் சீ. கிளாக்
- ∗ பண்டிதர் டபிள்யு. டீ. அமரதேவ
- ∗ வண. எஸ். மஹிந்த தேரர்
- ∗ கேர்னல் ஒல்கொட்

- வகுப்பு மாணவரைக் குழுக்களாகப் பிரித்து மேற்படி ஒவ்வொருவர் பற்றிய தகவல்களையும் சேகரித்து வருமாறு நேரகாலத்துடன் அறிவுறுத்தல் வழங்குக.
  - ∗ உருவப் படம்
  - ∗ செய்த வேலை
  - ∗ பிறந்த இடம்
  - ∗ கல்வி தொடர்பான தகவல்கள்

## கலாநிதி ஆனந்த குமாரசுவாமி



கலாநிதி ஆனந்த குமாரசுவாமி அவர்கள் 1877 ஆகஸ்ட் 22 ஆந் திகதி கொழும்பு கொள்ளுப்பிட்டியில் பிறந்தார். அவர் தரமிக்க நூல்களையும் ஆக்கங்களையும் எழுதியுள்ளார். அவை 500 இற்கும் மேற்பட்டவை. தமிழ், ஆங்கிலம், பிரஞ்சு, ஜேர்மன், லத்தீன், கிரேக்கம், சமஸ்கிருதம், பாளி ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றிருந்தார். சட்ட அறிஞராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் திறமை காட்டினார். பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கும் இந்து சமய நூல்களை தமிழில் இருந்து ஆங்கிலத்திற்கும் மொழிபெயர்த்தார்.

இவர் லண்டன் வைக்லி·ப் கல்லூரியில் கல்வி பயின்றார். இலங்கையின் மலைகளும் காரீயமும் எனும் பருவ இதழ் அவரது முதலாவது எழுத்தாக்கமாகும். 1905 இல் இலங்கை சமூக சீர்திருத்த சங்கத்தைத் தொடங்கிய குமாரசுவாமி, சிலோன் நஷனல் ரிவீவ் (Ceylon National Review) எனும் சஞ்சிகையின் ஆரம்பகால பிரதம ஆசிரியரும் ஆவார்.

இலங்கைத் திருநாடு, உலகுக்கு அளித்த பிரதானமான ஒரு தத்துவஞானி கலாநிதி ஆனந்த குமாரசுவாமி ஆவார்.

கீழைத்தேயப் படைப்புகளைக் காக்கும் பொறுப்பை ஏற்றிருந்த இவரது ஆக்கங்களின் கையெழுத்துப் பிரதிகள் இன்றும்கூட அமெரிக்காவில் பொஸ்டன் லலிதக் கலைகள் அரும்பொருட்காட்சிசாலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. மத்திய கால சிங்களக் கலை, இந்திய - இந்தோனேசிய கலை வரலாறு, தேசிய எதிர்பார்ப்புகள் போன்றவை இவரால் எழுதப்பட்ட சில அரிய நூல்களாகும்.

இவர் 1947 செப்ரெம்பர் 09 ஆந் திகதி அமெரிக்காவில் பொஸ்டன் நகரில் இவ்வுலகைவிட்டு மறைந்தார்.

## கலாநிதி ரீ.பீ. ஜாயா



1890 சனவரி 01 ஆந் திகதி கண்டி, கலகெதரைப் பிரதேசத்தில் பிறந்த துவான் புர்ஹானுத்தீன் ஜாயா அவர்களின் இளமைக் காலம் கிராமப் பிள்ளைகளுடன் எளிமையாகக் கழிந்தது. இவர் கொட்டாஞ்சேனை சென் போல்ஸ் கல்லூரியிலும் பின்னர் சென் தோமஸ் கல்லூரியிலும் கல்வி பயின்றார்.

1910 ஆம் ஆண்டில் கண்டி தர்மராஜ கல்லூரியில் ஆசிரியராகப் பதவியேற்ற இவர் லத்தீன், கிரேக்கம், பொருளியல், வரலாறு போன்ற பாடங்களினூடாக மாணவரது மனதில் வீரம், ஆளுமை, நாட்டுப்பற்று போன்றவற்றை ஏற்படுத்தும் வகையில் கற்பித்தலில் ஈடுபட்டார். 1917 இல் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் ஆசிரியராக இருந்த காலத்தில் நாட்டைப் பொறுப்பேற்க உதவும் வகையில் பூரணமான கல்வியை மாணவர்களுக்கு வழங்கினார். 1921 இல் கொழும்பு ஸாஹிராக் கல்லூரி அதிபராகப் பதவியேற்றார். அக்காலத்தில் ஹைரியா பெண்கள் பாடசாலை, டென்ஹாம் ஆங்கிலப் பாடசாலை ஆகியவற்றைத் தாபித்தவரும் இவரே. அளுத்கமை, கம்பளை, புத்தளம், மாத்தளை ஆகிய நகரங்களில் ஸாஹிராக் கல்லூரிகளையும் அளுத்கமை, அட்டாளைச்சேனை ஆகிய நகரங்களில் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளையும் ஆரம்பித்தார்.

தேசியக் கொடிக் கமிட்டி, தேசிய கீதக் கமிட்டி ஆகியவற்றில் அங்கத்தவராக இருந்து செயற்பட்டார். 1960 மே 3 ஆந் திகதி புனித ஹஜ் கடமை நிறைவேற்றச் சென்றபோது மக்கா நகரில் இறையடி சேர்ந்தார்.



### கலாநிதி சி. டபிள்யு. டபிள்யு கன்னங்கரா

இலவசக் கல்வியின் தந்தை எனப் போற்றப்படும் கலாநிதி கிறிஸ்டோபர் வில்லியம் விஜேகோன் கன்னங்கரா புகழ்பூத்த கல்வியியலாளரும் தேசிய வீரருமாவார். இவர் 1894 ஒக்டோபர் 18 ஆந் திகதி பிறந்தார்.

கலாநிதி கன்னங்கரா அவர்கள் பாரத தேசத்தில் பிறந்திருப்பாரானால் அவர் ஒரு தெய்வம் போன்று போற்றப்பட்டிருப்பார் என 1945 இல் இலங்கையில் இருந்த இந்தியப் பிரதிநிதி திரு. எம்.எஸ். அனே கூறியுள்ளார். அம்பலாங்கொடை வெஸ்லியன் கல்லூரி, காலி ரிச்மண்ட் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்ற அவர் பிரித்தானிய ஏகாதிபத்திய நாடுகளில் மிகச் சிறந்த மாணவருக்குரிய பரிசையும் பெற்றார்.

ரிச்மண்ட் கல்லூரி ஆசிரியராகத் தனது வாழ்க்கையைத் தொடங்கிய இவர் மொரட்டுவை வேல்ஸ் குமார வித்தியாலயம், கொழும்பு வெஸ்லிக் கல்லூரி ஆகியவற்றிலும் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். 1931 தொடக்கம் 1946 வரையில் இலங்கையில் கல்வி அமைச்சராக அளப்பரிய சேவை ஆற்றியுள்ளார்.

முதலாந் தரம் தொடக்கம் பல்கலைக்கழகம் வரையில் இலவசக் கல்வி வழங்குதல், தாய்மொழியைக் கல்வி ஊடக மொழியாக்குதல், பாடசாலைகளை அரசு பொறுப்பேற்றல், மத்திய மகா வித்தியாலயங்கள் ஆரம்பித்தல், ஒவ்வொரு பிள்ளைக்கும் தமது பெற்றோரின் சமயத்தைக் கற்பித்தல், குறைந்த வருமானமுடைய குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்குப் புலமைப்பரிசில் வழங்குதல், பொதுவான பாடத்திட்டம் தயாரித்தல், பாட வெளிவேலைகளை ஒழுங்குசெய்தல், பாடசாலைகளுக்கு விளையாட்டு மைதானங்களை அமைத்துக்கொடுத்தல், இசை, நடனம், மெய்வல்லுநர் விளையாட்டுக்கள் ஆகியவற்றைக் கற்க வாய்ப்பளித்தல், இரண்டாம் தரம் முதல் ஆங்கிலப் பாடம் கற்பதை கட்டாயமாக்கல் போன்றவை அவர் ஆற்றிய சேவைகளுள் முக்கியமானவை ஆகும்.

இந்த மறுசீரமைப்புகள் காரணமாக, இலங்கைக் கல்வியில் புதிய திருப்பம் ஏற்பட்டது. அக்காலப்பகுதியில் ஆசியாவில் மிக அபிவிருத்தியடைந்த நாடு எனும் நிலையை இலங்கை அடைந்தது. வெளிநாட்டவரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த ஒரு காலகட்டமாக இருந்த போதிலும் இலங்கையின் கல்விக்கோலத்தை மாற்றியமைப்பதற்காகத் தோள் கொடுத்த கலாநிதி சி. டபிள்யு. டபிள்யு கன்னங்கரா அவர்கள் சிறந்த கல்விமானும் தேசிய வீரருமாவார். இதனாலேயே இவர் இலவசக் கல்வியின் தந்தை எனப் போற்றப்படுகிறார்.

### ஆதர் சி. கிளாக்



இவர் இங்கிலாந்தின் தெற்குப் பகுதியில் ஸமர்செற் பிராந்தியத்தில் மயின்ஹெச் நகரில் 1917 டிசெம்பர் 16 ஆந் திகதி பிறந்தார். இவர் ஒரு விஞ்ஞானியும் சிறந்த எழுத்தாளருமாவார். இவர் 1945 இல் வயர்லெஸ் வெர்ல்ட் (Wireless world) எனும் சஞ்சிகையில் வெளியிட்ட ஒரு கட்டுரை காரணமாகப் பிரபல்யமடைந்தார். தரையிலிருந்து வானில் செய்மதிகளை அனுப்ப முடியும் எனவும் அச்செய்மதிகளைப் பயன்படுத்தி செய்திப் பரிமாற்ற முறையொன்றினை உருவாக்க முடியும் எனவும் அவர் அக்கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார்.

இவர் 1956 இல் இலங்கையில் குடியேறினார். மொரட்டுவை பல்கலைக்கழக வேந்தராகவும் இங்கிலாந்து அரச வானியலாளர் கழக அங்கத்தவராகவும் பணியாற்றினார். இவருக்கு 38 பட்டங்களும் விருதுகளும் கிடைத்துள்ளன. நையிற் பதவியும் இவருக்குக் கிடைத்துள்ளது. தனது 90 ஆம் வயதில் 2008 மார்ச் 19 ஆந் திகதி இலங்கையில் உயிர் நீத்தார்.

**வண. எஸ். மஹிந்த தேரர்**



திபெத் நாட்டில் சீக்கிம் பிராந்தியத்தில் பிறந்த எஸ்.கே. தசினம்கல் 1914 இல் தனது 12 ஆம் வயதில் கொழும்பு வித்யோதய பிரிவெனாவில் சேர்ந்து பாளி, சிங்களம், சமஸ்கிருதம் ஆகியவற்றைக் கற்றார். ஆங்கில மகாபோதி வித்தியாலயத்திலும் பொஸ்கஸ்துவை ஆராமயாவிலும் கீழைத்தேய மொழிகளைக் கற்றார். ரத்கமை, வண.சிரிசூலசுமன அவர்களின் மாணவர்கள் தெடர்ந்துவை சைலபிப்பாராமையில் சீக்கிம் மஹிந்த எனும் பெயரில் துறவறம் பூண்டார்.

இவர் 1934 - 1936 வரையிலான காலத்துள் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் சிங்களம், பாளி, பௌத்த சமயம் ஆகிய பாடங்கள் கற்பித்தார். பன்சாலை, கிராமம் ஆகியவற்றுக்காக அரும்பணியாற்றிய இவர் நவ லங்கா சமய பாடசாலை, ஆங்கிலப் பாடசாலை ஆகியவற்றை ஆரம்பித்தார். மேலும் அப்பிரதேச சத்தரபேறுவ கிராமங்களிலிருந்து மருந்து மூலிகைகளைச் சேகரித்து இலவச மருந்துச்சாலை ஒன்றினைத் தாபித்தார். மக்கள் மாட்டிறைச்சி உண்பதைத் தவிர்ப்பதற்காக அரும்பாடுபட்டார். இவர் பாணந்துறை, தொட்டகமுவை உபசம்பதா பிக்குகள் சபையின் பதிவாளராகவும் செயற்பட்டார்.


வணக்கத்துக்குரிய எஸ். மஹிந்த அவர்கள் கவிதை நூல்களும், உரைநடை நூல்களுமாக மொத்தம் 40 இற்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார். இவரது லங்கா மாதா, நிதஹசே மந்த்ரய (சுதந்திர மந்திரம்), நிதஹசே தஹன (சுதந்திர தியானம்), ஜாதிக தறு நலவில்ல (தேசிய தாலாட்டு) போன்ற புத்தகங்கள் இலங்கை மக்களிடத்தே நாட்டுப்பற்றை வளர்க்க உதவின. கொழும்பு யுகத்தின் பிரபல்யமிக்க ஒரு கவிஞராக இருந்த இவரது முதலாவது கவிதை நூல் ஒவா முத்துதம (அறிவுரை முத்துச்சரம்) என்பதாகும். இறுதியாக வெளியிட்ட நூல் ஸ்ரீபாத என்பதாகும். நாட்டுப்பற்றுடன் நாட்டுக்குப் பணியாற்றிய இவர் 1951 மார்ச் மாதம் 14 ஆந் திகதி இயற்கையெய்தினார்.

- அத்தகவல்களைக் கொண்டு பாத்திரங்கள் (ஆட்கள்) தொடர்பான வகிபாகமேற்று நடித்தல்களை முன்வைக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- குறித்த பாத்திரங்களின் தன்மைகளை இயல்பாக வெளிப்படுத்திக் காட்டும் வகையில் நடித்துக்காட்டுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- மாணவரது முன்வைப்புகளைப் பாராட்டுக.

**செயற்பாடு : 4**

- பண்டைய கலைப்படைப்பாகிய கொடி அலங்காரம் / பலாப்பெத்தி அலங்காரம் தொடர்பான விளக்கத்தை மாணவர்களுக்கு வழங்குவதற்கான ஒழுங்குகளைச் செய்க.





- இவ்வாறாக கொடி அலங்காரங்கள் / பலாப்பெத்தி அலங்காரங்கள் சிலவற்றை வரையுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- மாணவர் வரைந்த சித்திரங்களை அழகாக நிறந்தீட்டுமாறு வழிப்படுத்துக.
- அழகாக வர்ணம் தீட்டிய கொடி அலங்காரத்தைக் கத்தரிக்கோலினால் கவனமாக வெட்டியகற்றுமாறு வழிப்படுத்துக.
- பின்னர் அவ்வலங்காரத்தைக் கறுப்புத்தாளில் ஒட்டிக் காட்சிப்படுத்த வழிப்படுத்துக.

**செயற்பாடு : 5**

- முற்காலந்தொட்டு விளையாடி வரப்படும் ஒரு விளையாட்டாகிய பல்லாங்குழி விளையாட்டானது தற்போது விளையாடப்படுவதை அரிதாகவே காண முடிகிறது. பல்லாங்குழி விளையாட்டை எவ்வாறு விளையாடுவது எனும் விளக்கம் கீழே தரப்படுகிறது.
- பல்லாங்குழி விளையாட்டுக்காக குழிகள் உள்ள ஒரு பலகை பயன்படுத்தப்படும். இது பல்லாங்குழிப் பலகை எனப்படும்.
- இவ்விளையாட்டின் சட்டதிட்டங்கள் பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபடும்.
- பல்லாங்குழி விளையாடுவதற்கு இருவர் தேவை. இருவரும் பல்லாங்குழிப் பலகையின் இரு புறங்களிலும் அமர்ந்துகொள்ள வேண்டும்.
- பலகையின் இரண்டு பக்கங்களிலும் ஏழு (7) குழிகள் வீதம் காணப்படும்.
- ஒரு குழியில் நான்கு (4) குன்றிமணி வித்துகள் அல்லது மஞ்சாடி வித்துகள் வீதம் உண்டு.
- விளையாடுவோர் தமது பக்கக் குழியொன்றிலுள்ள குன்றிமணி வித்துக்களை ஒரு குழிக்கு ஒன்று வீதம் அடுத்த குழிகளுக்குப் பகிர்தல் வேண்டும். இவ்வாறு பகிரும்போது வெறுமையான குழியொன்றினைச் சந்தித்தவுடன் அதற்கு எதிரேயுள்ள குழியில் இருக்கும் குண்றிமணி வித்துகளை எடுத்துக்கொள்ள வேண்டும். அவற்றைப் பலகையில் தமக்கென ஒதுக்கப்பட்டுள்ள பெரிய குழியினுள் இட்டு வைத்துக்கொள்ள வேண்டும்.
- பின்னர் மற்றையவர் தமது பக்கக் குழியொன்றில் உள்ள வித்துக்களில் ஆரம்பித்து குழிக்கு ஒரு வித்து வீதம் பகிர்ந்து விளையாட்டைத் தொடர்தல் வேண்டும்.
- இறுதியில் கூடுதலான தொகை வித்துகளை வென்றெடுத்துச் சேகரித்தவர் வெற்றி பெற்றவராவார்.

**செயற்பாடு : 6**

- நம் முன்னோரின் சேவைகள் அனைவருக்கும் முன்மாதிரியானவை என்பதை எடுத்துக்காட்டுக.

  ***உதாரணம் :***

  * மூத்தோரை மதித்தல்
  * தயக்கமின்றி உதவிசெய்ய முன்வருதல்
  * அறிவுரைகளையும் எச்சரிக்கைகளையும் உரியவாறு பின்பற்றுதல்
  * நற்பண்புகளைப் பேணியவாறு செயற்படல்
  * வாயாடித்தனமாகக் கதையாமை / வாய்காட்டாமை
  * கூட்டாகச் சேர்ந்து செயற்படல்

# சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் - கணிப்பீடு
## தகவல் பதிவுப் படிவம்

| | | | | மாணவர் பெயர்<br>**கணிப்பீட்டு அளவிடை**<br>வெற்றிகரமாகச் செயற்படுகிறார். ✓<br>இடர்ப்படுகிறார் / மேலும் உதவி தேவை. ● | **கருப்பொருள்** |
|---|---|---|---|---|---|
| | | | | உடல், உள சமநிலையுடன் சுயமதிப்பு உணர்வுகள் வளர்ச்சி யடையும் வகையில் செயற்பாடுகளில் ஈடுபடுவார் | எமது நல்வாழ்வு |
| | | | | நல்ல நடத்தைகளை வெளிக்காட்டியவாறு எதிர்கால வெற்றிக்குத் துணையாகும் செயற்பாடுகளில் ஈடுபடுவார். | |
| | | | | தேசிய தனித்துவத்தை எடுத்துக்காட்டும் குறியீடுகள், இலச்சினைகள், உற்சவங்கள் தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார். | நாம் இலங்கையர் |
| | | | | வெவ்வேறு மக்கட் பிரிவினரிடையே நட்புரீதியான மனப்பாங்கு களை ஏற்படுத்தியவாறு பண்பாட்டுத் தனித்துவத்தை உறுதிப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுவார். | |
| | | | | தாவரப் பூக்களில் காணப்படும் வெவ்வேறு இயல்புகளை இனங்கண்டு அவற்றின் மூலம் கிடைக்கும் பயன்களைக் குறிப்பிடுவார். | மரஞ்செடி கொடிகள் |
| | | | | தாவரங்களுக்கும் விலங்குகளுக்கும் இடையிலான தொடர்புகளை அவதானித்து அறிக்கைப்படுத்துவார். | |
| | | | | தாவரங்கள் சார்ந்த ஆக்கங்கள் செய்வார். | |
| | | | | சூழலில் வாழும் பிராணிகளின் உயிர்வாழும் உரிமையையும் உயிரின் பெறுமானத்தையும் அந்தந்தப் பிராணியின் பல்வகைமை மூலம் இனங்கண்டு கூறுவார். | எம்மைச் சூழவுள்ள பிராணிகள் |
| | | | | வெவ்வேறு மூலப்பொருள்களைப் பயன்படுத்தி பிராணிகளின் நடத்தைகளைக் காட்டும் களிப்பூட்டும் செயற்பாடுகளில் ஈடுபடுவார். | |
| | | | | வெவ்வேறு தொழில்களின்போது பயன்படும் உபகரணங்கள் மற்றும் அவ்வுபகரணங்களைப் பராமரிப்பதன் அவசியம் தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார். | நாம் பயன்படுத்துபவை |
| | | | | தரமான பண்டங்களை / பொருள்களைத் தெரிவு செய்து கொள்வதன் முக்கியத்துவம் பற்றிய விளக்கத்துடன் செயற்படுவார். | |
| | | | | பயன்படுத்தும் உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள் மற்றும் புத்தளிப்புக் கருவிகள் மூலம் கூட்டாக வாத்தியமிசைப்பார். | |
| | | | | ஆரோக்கியமான வளர்ச்சிக்குத் தேவையான போசாக்கு மற்றும் ஔஷதப் பண்புகள் கொண்ட உணவை நுகர்வதற்காகத் தெரிவு செய்து கொள்வார். | எமது உணவு |
| | | | | உணவு வகைகள் தயாரிக்கும்போதும் நற்காப்புச் செய்யும்போதும் பரிமாறும்போதும் பின்பற்ற வேண்டிய சரியான ஒழுங்குகளைப் பின்பற்றுவார். | |
| | | | | அன்றாட வேலைகளில் ஈடுபடும்போது பாதுகாப்பும் கரிசினையும் தொடர்பாகக் கவனம் செலுத்துவார். | பாதுகாப்பும் கரிசனையும் |
| | | | | அறிமுகமற்ற ஆட்களுடன் / நபர்களுடன் செயற்படும்போது பாதுகாப்புக் குறித்துக் கவனம் செலுத்துவார். | |
| | | | | தொற்றுநோய்களும் தொற்றா நோய்களும் ஏற்படுவதைத் தவிர்க்கும் திறன் தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார். | நீர் |
| | | | | நீரின் தன்மை வேறுபடும் விதத்தைக் கையாண்டுபார்த்து அது தொடர்பான அனுபவங்களை வெளிப்படுத்துவார். | |
| | | | | நீர் காரணமாக ஏற்படக்கூடிய பாதிப்புகளை இழிவாக்குவதற்கான விளக்கத்துடன் செயற்படுவார். | |
| | | | | நீரினால் இயக்கக்கூடிய பல்வேறு ஆக்கபூர்வமான களிப்பூட்டக்கூடிய செயற்பாடுகளில் ஈடுபடுவார். | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | வீதி ஒழுங்குகளைச் சரியாகப் பின்பற்றுவதற்கும் பொது வாகனங்களைப் பாதுகாப்பதற்கும் ஆவன செய்வார். | போக்குவரத்து |
| | | | | வாகனங்கள் மூலம் பெறக்கூடிய பயன்கள் பற்றிய விளக்கத்துடன் செயற்படுவார். | |
| | | | | மாதிரி வீட்டுத்தோட்டத்தை அமைப்பதற்காக செயல் ரீதியில் பங்களிப்புச் செய்வார். | வீட்டுத்தோட்டம் |
| | | | | சேதனப் பசளை பயன்படுத்தி உற்பத்திசெய்த பயிர் விளைபொருளைப் பயன்படுத்தி உணவொன்று தயாரிப்பதில் பங்களிப்புச் செய்து கூட்டாக உண்டு களிப்பார். | |
| | | | | திட்டமிட்டும் ஒழுங்காகவும் வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்கேற்ற நுட்ப முறைகளைப் பயன்படுத்தும் பரிச்சயத்தை வெளிக்காட்டுவார். | வேலையை இலகுபடுத்திக் கொள்ளும் வழிகள் |
| | | | | காந்தங்கள் மற்றும் எளிமையான மின்சுற்றுகளின் தொழிற்பாட்டைக் கையாண்டு பார்த்து அனுபவங்களை வெளியிடுவார். | |
| | | | | சக்தி முதல்களைப் பயன்படுத்தி வெவ்வேறு ஆக்கங்கள் முன்வைப்பார். ஏனையோருடன் நல்ல தொடர்புகளைப் பேணிவருவதற்குத் தேவையான திறன்களை வெளிக்காட்டுவார். | |
| | | | | மனித நடத்தைகளின் முக்கியத்துவம் வெளிக்காட்டப்படும் வகையிலான கூட்டான ஆக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவார். | மனித நடத்தைகள் |
| | | | | பாடசாலை வளவைஅவதானித்து அதன் பல்வகைமையைப் பரிசீலிப்பதற்கான செயற்பாடுகளை நடத்துவார். | |
| | | | | இலங்கையின் மாகாணங்கள், மாவட்டங்கள் மற்றும் பிரதேச நகரங் களையும் தமது பிரதேசத்தையும் தேசப்படமொன்றில் அவதானித்துக் கூறுவார். | நிலமும் வானும் |
| | | | | பாடசாலையில் நல்ல மாற்றங்களைச் செய்வதற்காக திட்டங்களை முன்வைத்து அதில் பங்களிப்புச் செய்வார். | |
| | | | | வீட்டுச் சூழலிலும் பாடசாலைச் சூழலிலும் பொருத்தமான மாற்றங்களைச் செய்வதற்காக வெவ்வேறு பொருள்களைப் பயன்படுத்தி, ஆக்கங்கள் செய்வதில் ஈடுபடுவார். | எம்மால் செய்யக்கூடிய மாற்றங்கள் |
| | | | | ஊடக உபகரணங்களைப் பயன்படுத்தி சரியான தொடர்பாடலின் போது பேணிவர வேண்டிய பண்புகள் பாதுகாக்கப்படுமாறு செயற்படுவார், பரிச்சயத்தைப் பெறுவார். | |
| | | | | வெவ்வேறு ஊடகங்கள் மூலம் பெறும் தகவல்களைப் பகுப்பாய்வு செய்து பொருத்தமான தகவல்களைத் தெரிவுசெய்வார். | மனிதனும் தகவல்களும் |
| | | | | வரலாற்று முக்கியத்துவமுள்ள இடங்கள் மற்றும் கலைப் படைப்புகளின் பெறுமானத்தை இனங்கண்டு செயற்படுவார். | |
| | | | | நாட்டின் நற்பெயரை மேம்படுத்துவதற்காகப் பங்களிப்புச் செய்தோர் பற்றிக் கற்றாய்ந்து அவர்களின் பெறுமானத்தை மதிப்பார். | எமது பண்டைய தகவல்கள் |
| | | | | முற்காலம்தொட்டு விளையாடப்பட்டுவரும் உள்ளக விளையாட்டு களில் ஈடுபட்டுக் களிப்புறுவார். | |
| | | | | ஆங்கில மொழியில் கூறப்பட்ட அறிவுறுத்தல்களைச் செவிமடுத்தச் சரியாகத் துலங்கல் காட்டுவார். | வாய்மொழி மூல ஆங்கிலம் |
| | | | | ஆங்கிலச் சிறுவர் பாடல்களைச் செவிமடுத்து தாளத்துக்கிசைவாகத் துலங்கல் காட்டுவார். | |
| | | | | எளிமையான ஆங்கிலப் பாடமொன்றை (தரப்பட்டுள்ள) மனனமாகப் பாடுவார். | |
| | | | | தன்னைப் பற்றி சில எளியை வாக்கியங்கள் ஆங்கிலத்தில் கூறுவார். | |
| | | | | பிராணியொன்று பற்றிச் சில எளிய வாக்கியங்கள் ஆங்கிலத்தில் கூறுவார். (பூனை, நாய்) | |

## 3.0 செயற்பாடுகள் அடிப்படையிலான வாய்மொழி ஆங்கிலம்

முதன்மை நிலை ஒன்றின் செயற்பாட்டு அடிப்படையிலான வாய்மொழி ஆங்கிலத்தைப் பயன்படுத்தல் தொடர்பாக அனுபவத்தைப் பெற்றுள்ள மாணவர்களை மேலும் வளப்படுத்துவதுடன் தொடர்பாடலுக்காக ஆங்கில மொழியைப் பயன்படுத்தும் அனுபவத்தையும் வழங்குதல் இரண்டாம், மூன்றாம் முதன்மை நிலைகளில் எதிர்பார்க்கப்படுகின்றது.

தரம் மூன்றில் இருந்து ஆங்கில மொழி மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கப்படும் மூன்று சந்தர்ப்பங்கள்

(i) வகுப்புக்குச் சமூகமளிக்கும் ஆங்கில ஆசிரியர் ஆங்கில பாடத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள பாடவேளையில் பாடத்திட்டத்திற்கு ஏற்ற ஆங்கில மொழி கற்பித்தல்

(ii) முதன்மை நிலை ஒன்றைப் போன்றே சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் விடயத்திற்கு ஏற்ற பாடவேளையையும் கணிதப் பாடவேளையையும் ஓய்வு நேரங்களையும் பயன்படுத்தி வகுப்பாசிரியர் மாணவர்கள் ஆங்கிலம் பேசுவதற்கும் ஆங்கிலத்தைக் கேட்பதற்கும் சந்தர்ப்பத்தை வழங்குதல்

(iii) வாரத்திற்கு ஒருமுறை அல்லது பொருத்தமானவாறு ஆங்கில உரையாடல் நிகழ்ச்சி ஒன்றை வகுப்பாசிரியருக்கும் மாணவர்களுக்குமிடையே மகிழ்ச்சி தரும் செயற்பாடுகள் மூலம் மேற்கொள்ளல்

இங்கு மாணவர்களுக்கு அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்துவதற்கு அவசியமான உரையாடலை பயிற்றுவித்தல் - தன்னைப் பற்றி, வீட்டிலுள்ள செல்லப் பிராணிகளைப் பற்றி சில வாக்கியங்களை பழக்குவித்தல் ஆகியன எதிர்பார்க்கப்படுகிறது.

மிகவும் நன்றாக ஆங்கிலச் சொற்களைக் கிரகிக்க இலகுவான 16 பாடல்கள் 16 கருப்பொருள் களுக்கு ஏற்றவாறு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கு எல்லாப் பாடசாலைகளுக்கும் அப்பாடங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சொற்கள், உரையாடல்கள் ஆகியன பதிவுசெய்யப்பட்ட இறுவட்டு (DVD) ஒன்றை வழங்குவதற்குத் தேசிய கல்வி நிறுவகத்தின் ஆரம்பக் கல்வித் துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

வகுப்பறைக்குப் பொறுப்பான நீங்கள் அதனை நன்கு செவிமடுத்து மாணவர்களுக்கு ஆங்கில மொழியைச் செவிமடுப்பதற்கும் பேசுவதற்கும் பயிற்றுவித்தல் எதிர்பார்க்கப்படுகிறது.

உதாரணமாக, கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஆங்கிலச் சொற்களஞ்சியமொன்று இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. அதில் அன்றாட வாழ்க்கையில் மாணவர் எந்நேரமும் சந்திக்கும் பொருள்களின் ஆங்கிலச் சொற்களையும் பல்வேறு சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான எளிய வாக்கியங்கள் போன்றவற்றையும் உள்ளடக்கியுள்ளன.

மாணவர்களுக்கு அண்மையான சுற்றாடலுக்கு ஏற்ப இச்சொற்களஞ்சியத்திற்கு சொற்களைப் புதிதாகச் சேர்ப்பதனால் அல்லது குறைப்பதனால் பொருத்தமானவாறு மாற்றிக்கொள்வதற்கு ஆசிரியருக்குச் சுதந்திரம் உண்டு. இங்கு முன்வைக்கப்பட்டுள்ள சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் விடயத்திற்குப் பொருத்தமாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள சொற்கள் அத்தனையையும் பயன்படுத்துதல் கட்டாயமானதல்ல. அவ்வாறே சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் விடயத்தில் கருப்பொருளுக்குப் பொருத்தமாக முன்வைக்கப்பட்டுள்ள செயற்பாடுகளைப் போன்றே பாடல்களையும் ஆசிரியரின் விருப்பிற்கேற்ப மாற்றிக் கொள்வதற்கும் சுதந்திரம் உண்டு எனக் கூற வேண்டும்.

மாணவரின் ஆங்கில அறிவை அளப்பதற்கு கருப்பொருள் ஒன்றின் இறுதியில் அவர்களிடம் இருந்து வாய்மொழியாக வினாக்கள் வினவுதல், படம் ஒன்றைக் காட்டி அது என்ன என வினவுதல், சொல் ஒன்றைக் கூறி அதற்கு உரிய படத்தைக் காட்டுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குதல் போன்ற எளிய செயற்பாடுகளை இதற்குப் பயன்படுத்த முடியும். (What is this? / What is this colour? / Show me .......)மாணவரின் ஆங்கில அறிவை அளப்பதற்கு உதாரணம்: Draw a cat / Colour is this Black என்றவாறும் இந்த கணிப்பீட்டைப் பொருத்தமானவாறு வகுப்பாசிரியர் செய்ய முடியும். இக்கணிப்பீட்டுச் செயலொழுங்கு வகுப்பாசிரியரினால் பிள்ளைக்குச் சுமையற்ற விதத்தில் வழங்கப்பட வேண்டும். செயற்பாடுகளின்போது அறிமுகம் செய்யப்பட்ட சொற்களையும் வாக்கியங்களையும் மட்டும் பயன்படுத்தி இக் கணிப்பீடு செய்யப்படல் வேண்டும்.

| Grade 4 Activity Based Oral English – syllabus-2018 | | |
|---|---|---|
| **Suggested vocabulary & useful expressions** | **Songs / Games /Activities** | **Conversational Language - between class teacher and students, students and students** |
| **1. Our Good Behaviour**<br>**1.** win<br>**2.** loss<br>**3.** happy<br>**4.** sad<br>**5.** smile<br>**6.** sing<br>**7.** life<br>**8.** clean<br>**9.** dirty<br>**10.** bend<br>**11.** stretch your arms<br>**12.** put your arms down<br>**13.** stand straight<br>**14.** run to the wall<br>**15.** come back<br>**16.** run to the blackboard<br>**17.** turn around<br>**18.** sit down | **Song**<br>Win or loss – happy or sad //<br>Smile and sing – it's our life //<br><br>**Game**<br>1. Stand up.<br>2. Bend forward.<br>3. Touch your toes.<br>4. Stand straight.<br>5. Stretch your arms.<br>6. Put down your arms. / put your arms down.<br>7. Run to the wall.<br>8. Come back.<br>9. Run on the spot.<br>10. Stop.<br>11. Turna round.<br>12. Let's go to the classroom./sit down. | **Useful Expressions**<br>1. I am Ruwan.<br>What's your name?<br>2. How old are you?<br>I am eight / nine<br>3. What's your school?<br>My school is DharmapalaVidyalaya.<br>4. In which grade are you?<br>I'm in grade three / four |
| **2. We are Sri Lankans**<br>1. Sri Lankans<br>2. Sinhalese<br>3. Tamils<br>4. Muslims<br>5. Burghers<br>6. food<br>7. dress<br>8. language<br>9. hand in hand | **Song**<br>We are Sri Lankans//<br>We are sons and daughters of you.<br><br>We are Sinhalese, we are Tamils,<br>we are Muslims or Burghers.<br>We are Sri Lankans//<br>We are sons and daughters of you. | **Useful Expressions**<br>5. Where do you live?<br>I live in Maharagama.<br>6. How many sisters do you have?<br>I have one sister. / two sisters/ no sisters<br>7. How many brothers do you have?<br>I have one brother. / two brothers/ no brothers. |

| | | |
|---|---|---|
| 10. national anthem<br>11. national flag<br>12. national bird<br>13. national flower<br>14. national tree<br>15. national game<br>16. national dress<br>17. national hero<br>18. temple<br>19. church<br>20. mosque<br>21. kovil<br>22. crib<br>23. Christmas tree<br>24. kolam<br>25. wesak lantern<br>26. jungle fowl<br>27. blue waterlily<br>28. 'Na' tree<br>29. Volleyball | Though our food, though our dress,<br>though our language is different<br>Let's live happily //<br>Let's live happily in hand in hand. | |
| **3. Plants Trees & Creepers**<br><br>1. Large plants<br>2. small plants<br>3. climbers<br>4. creepers<br>5. bushes<br>6. flowers<br>7. leaf/leaves<br>8. roots<br>9. trunk<br>10. branch/branches<br>11. bud/buds<br>12. stem<br>13. petals<br>14. marigold<br>15. shoe flower<br>16. rose | **Song**<br><br>Large plants, small plants<br>Climbers, creepers, bushes ///<br>Trees// green everywhere<br>(John Brown's .. tune)<br><br>**Game : Find my name.**<br>I am white.<br>I have five petals.<br>(Teacher shows the picture of a jasmine) Who am I?<br>*Answer : Jasmine/ You are a jasmine.* | **Useful Expressions**<br><br>8. What is this?<br>It's a bush. |

| | | |
|---|---|---|
| 17. nectar<br>18. bloom<br>19. colour of the petal<br>20. number of petals<br>21. squirrel<br>22. snail<br>23. monkey | I am yellow.<br>I have many petals.<br>(Teacher shows the picture of a sunflower) Who am I?<br>*Answer : Sunflower/ You are a sunflower.* | |
| **4. Animals around us**<br>1. beak<br>2. horns<br>3. fins<br>4. tail<br>5. whiskers<br>6. trunk<br>7. wings<br>8. eyes<br>9. nose<br>10. mouth<br>11. tongue<br>12. antenna<br>13. dog<br>14. cat<br>15. elephant<br>16. cow<br>17. goat<br>18. fish<br>19. iguana<br>20. snake<br>21. parrot<br>22. peacock<br>23. sparrow<br>24. woodpecker<br>25. crane | **Song**<br><br>They are animal friends of mine//<br>Who says meow meow<br>Cat says meow meow<br>Who says bow wow<br>Dog says bow wow<br>Meow//// bow wow bow<br><br>Who says quack quack<br>Duck says quack quack<br>Who says moo moo<br>Cow says moo moo<br>quack //// moo ///<br><br>Who says cheep cheep<br>Bird says cheep cheep<br>Who says oink oink<br>Pig says oink oink<br>Cheep //// Oink ///<br>They are animal friends of mine//<br>(Eskimo …tune) | **Useful Expressions**<br><br>9. Can you sing?<br>Yes, I can. / No, I can't.<br>I can dance.<br><br>10. Do you have a pet?<br>Yes, I have a cat.<br>No, I don't have. |

| | | |
|---|---|---|
| 26. rabbit<br>27. crow<br>28. caterpillar<br>29. spider<br>30. ant<br>31. hen<br>32. cock<br>33. owl<br>34. butterfly<br>35. mosquito<br>36. worm<br>37. centipede<br>38. millipede<br>39. fly<br>40. rat<br>41. rattle snake<br>42. cockroach<br>43. buffaloe<br>44. I fly<br>45. I swim<br>46. I walk<br>47. I glide | **Game :Who am I?**<br>I eat fruits.<br>I can fly.<br>I am green.<br>I have a red beak.<br>Who am I?<br>*Answer : Parrot/ You are a parrot.*<br>I have no legs.<br>I have fins.<br>I can swim.<br>Who am I?<br>*Answer : Fish/ You are a fish*<br>I have eight legs.<br>I can't fly.<br>I can't swim.<br>I spin cobwebs.<br>Who am I?<br>*Answer : Spider/ You are a spider.*<br>I am very big.<br>I have a trunk.<br>I help carrying logs.<br>Who am I?<br>*Answer :elephant/ You are an elephant.* | **Useful Expressions**<br>11. Do you have a pencil? /<br>a piece of paper/ an eraser.<br><br>Sorry, I don't have. /<br>Yes, here you are.<br><br>12. Is this your pencil?<br>Yes, it's mine. /<br>Yes, it's my pencil.<br>No, it's Saman's pencil.<br><br>13. Where's my pencil?<br>It's on the table./<br>It's under the table./<br>It's in the bag. |
| 5. **What We Use**<br>1. needle<br>2. thread<br>3. knife<br>4. spoon<br>5. fork<br>6. cup<br>7. saucer<br>8. plate<br>9. pan<br>10. broom<br>11. ekel broom<br>12. saw<br>13. ruler<br>14. mammoty | **Song**<br>Books in the library – desks and chairs in the classroom<br>All in our school//<br>Let's protect them lovingly<br>(Bingo …tune)<br><br>**Game : What am I?**<br>I help you to cut vegetables.<br>(teacher can mime & show the picture of a knife)<br>*Answer :Knife*<br>I help you to sit.<br>*Answer : chair/ You are a chair.* | |

| | | |
|---|---|---|
| 15. plough<br>16. hanky (handkerchief)<br>17. blackboard<br>18. table<br>19. chair<br>20. duster<br>21. desk<br>22. dustbin<br>23. bed<br>24. comb<br>25. toothbrush | I help you to comb your hair.<br>*Answer : Comb/ You are a comb.*<br><br>I help you to brush your teeth.<br>*Answer : Toothbrush / You are a toothbrush.*<br><br>I help you to sweep.<br>*Answer :Broom / You are a broom.* | |
| **6. Our Food**<br>1. healthy food<br>2. fatty food<br>3. spicy food<br>4. homemade food<br>5. junk food<br>6. banana<br>7. pineapple<br>8. mango<br>9. rose apple<br>10. pawpaw<br>11. fruit juice<br>12. wood apple<br>13. olive<br>14. water melon<br>15. custard apple<br>16. potato<br>17. cabbage<br>18. tomato<br>19. jak<br>20. carrot<br>21. beet<br>22. drumsticks<br>23. brinjal<br>24. cucumber<br>25. rice and curry | **Song**<br>To be a healthy - boy or girl<br>A boy or a girl//<br>To be a healthy - boy or girl<br>You need to eat good food//<br><br>Homemade food like rice and curry,<br>rice and curry//<br>Homemade food like rice and curry<br>Will make you a healthy boy.<br>Will make you a healthy girl.<br><br>But you should not eat – fatty food<br>or spicy food or fatty food<br>But you should not eat – fatty food<br>or spicy food – too much<br>spicy food – too much | **Useful Expressions**<br><br>14. What do you like?<br>I like buns.<br><br>15. Do you like ice cream?<br>Yes, I do. / No, I don't.<br><br>16. How much is it?<br>It's ten rupees |

| | | |
|---|---|---|
| 26. bread<br>27. hoppers<br>28. buns<br>29. tea<br>30. milk<br>31. ice cream<br>32. string hoppers<br>33. egg<br>34. fish<br>35. meat<br>36. coconut | **Game : What am I?**<br>It is a fruit.<br>It is sour.<br>It is juicy.<br>We can eat or drink it.<br>What is it?<br>It begins with letter 'o'<br>(Teacher shows the picture of an orange)<br>*Answer : Orange.*<br><br>We eat with curries.<br>It grows in the paddyfield.<br>What is it?<br>It begins with letter 'r'<br>(Teacher shows the picture of rice)<br>*Answer : Rice.*<br><br>It is made of flour.<br>We can cut into slices.<br>We can eat with curries, butter or jam.What is it?<br>It begins with letter 'b'.<br>(Teacher shows the picture of a loaf of bread.)<br>*Answer :bread* | |
| **7. Safety & Protection**<br>1. fire<br>2. strangers<br>3. slip<br>4. fall<br>5. accident<br>6. safe/safety<br>7. dangerous<br>8. stranger | **Song**<br>Don't play with fire//<br>Don't speak with strangers//<br>Don't eat from strangers//<br>Think of you - wherever go<br>Think of you – whatever do<br>**Song**<br>Be careful, be careful<br>When you light crackers.<br>Be careful, be careful<br>When you cross the road.<br>Be careful, be careful<br>When you climb steps.<br>Be careful, be careful<br>When you play with animals. | **Useful Expressions**<br><br>17. Be careful.<br>You may fall.<br>You may slip. |

| | | |
|---|---|---|
| **8. Water**<br>1. bathe<br>2. cook<br>3. wash<br>4. drink<br>5. water (the plants)<br>6. well<br>7. river<br>8. pond<br>9. tank | **Song**<br>Water// we need you<br>Water// we like you<br>Water// without you<br>We can't bathe – we can't cook-<br>we can't wash or we can't live<br>We protect you//<br>Wasting no- no wasting.<br>Water// we need you<br>Water// we like you<br>Water// without you<br>We can't live//<br>(Jameica…tune) | **Useful Expressions**<br>18.Don't waste water. |
| **9. Transport**<br>1. left<br>2. right<br>3. cross<br>4. road<br>5. bus<br>6. car<br>7. lorry<br>8. van<br>9. train<br>10. aeroplane<br>11. helicopter<br>12. ship | **Song**<br>Look to the right- look to the left<br>look to the right again.<br>Cross the road, if the road is clear.<br><br>Look to the right- look to the left<br>look to the right again.<br>Cross the road, if the road is clear.<br><br>No playing – no running – no playing<br>No playing no running on the road.<br>No playing – no running – no playing,<br>As vehicles are moving on the road. | **Useful Expressions**<br><br>19. Where are you going?<br>I am going to the canteen.<br><br>20. Where is Saman?<br>In the canteen. /Saman is in the canteen. / he is in the canteen.<br><br>21. Where are they?<br>They are in the canteen. |
| **10. Home Garden**<br>1. sunflowers<br>2. roses<br>3. jasmine<br>4. bees<br>5. butterflies<br>6. humming birds<br>7. fruit trees<br>8. flowers<br>9. home garden<br>10. shoe flowers<br>11. sweet potatoes | **Song**<br>sunflowers and roses jasmine and bees.<br>Butterflies and humming birds on my fruit trees.<br>Cool breeze, shady trees, flowers with sweet smell<br>All kinds of green leaves in my garden.<br>(all kinds …tune) | **Useful Expressions**<br>22. How many flowers are there?<br><br>Two flowers / There are two flowers |

| | | |
|---|---|---|
| 12. yams<br>13. manioc<br>14. curry leaves | **Song**<br>Roseapple, pineapple<br>Mangoes and pawpaw.<br>Longbeans and wingedbeans,<br>Curry leaves and spinach.<br>Jasmine and roses,<br>Shoeflowers and lotus.These are the things in my beautiful garden<br>(Favourite things …) | |
| **11. Ways of Making Work Easy**<br>1. hole puncture<br>2. stapler machine<br>3. pencil sharpener<br>4. hammer | **Song**<br><br>Let's save time// la la ….<br>Let's do work// la la…<br>Let's play and work// la la ..<br>Don't waste time// la la ..<br>(hey ho …tune)<br><br>**Game**<br>**What am I?**<br>I help you to make a hole.<br>What am I?<br>Begins with letter 'p'.<br>*Puncture /you are a puncture.*<br><br>I help you to sharpen the pencil.<br>What am I?<br>*Pencil sharpener/ you are a pencil sharpener.*<br><br>I help you to hit a nail.<br>What am I?<br>*Hammer./you are a hammer.* | **Useful Expressions**<br><br>23. Don't waste time. |

| | | |
|---|---|---|
| **12. Human Behaviour**<br>1. innocent<br>2. helpful<br>3. clever<br>4. kind | **Song**<br>If you're happy and you know it<br>clap your hands//<br>If you're happy and you know it –<br>and you really want to show it<br>If you're happy and you know it<br>clap your hands.<br>If you're angry and you know it, no<br>no fight//<br>If you're angry and you know it –<br>and you really want to show it<br>If you're angry and you know it no<br>no fight.<br>If you're sad and you know it,<br>share with friends//<br>If you're sad and you know it –<br>and you really want to lessen it<br>If you're sad and you know it share<br>with friends//<br><br>**Song**<br>You're my best friend,<br>You are so kind.<br>You make me happy<br>You are innocent and very helpful<br>(You're my sunshine…) | **Useful Expressions**<br>24. Who is this?<br>This is my father.<br><br>25. What are you doing?<br>I am reading a book. |
| **13. Earth & Sky**<br>1. sky<br>2. sun<br>3. moon<br>4. stars<br>5. rainbow<br>6. wind<br>7. clouds<br>8. rain<br>9. river<br>10. hill<br>11. mountain<br>12. rain drops | **Song**<br>Don't throw rubbish<br>everywhere.<br>Put them into a garbage pit.<br>Keep the classroom beautiful<br>Keep the school your beautiful.<br>Keep Sri Lanka beautiful.<br>Keep my country beautiful//<br><br>**Game**<br>You can see me in the sky at<br>night.<br>I am yellow and round. | **Useful Expressions**<br>26. I have two eyes.<br>I have two ears.<br>I have one nose.<br>I have one mouth.<br>I have two hands.<br>I have two legs.<br>I have ten fingers.<br>I have ten toes.<br>Who am I? |

| | | |
|---|---|---|
| 13. lightening<br>14. floods<br>15. thunder<br>16. sea<br>17. beach<br>18. mist<br>19. waterfall<br>20. trees<br>21. flowers | Who am I?<br>*Moon / you are the moon.*<br><br>You can see me in the sky at day time.<br>I am orange, round and hot.<br>Who am I ?<br>*Sun/ you are the sun.* | |
| **14. Changes We Can Do**<br>1. clean<br>2. sweep<br>3. weed | **Song**<br>Keep your hair neat and clean<br>Neat and clean//<br>Keep your hair neat and clean<br>My dear friend<br>Wear your clothes tidy and clean.<br>tidy and clean//<br>Wear your clothes tidy and clean.<br>My dear friend<br>Cut your nails and keep them clean.<br>Keep them clean//<br>Cut your nails and keep them clean.<br>My dear friend.<br>Then you will become healthy boys, healthy girls, healthy boys<br>Then you will become healthy girls.<br>My dear friend.<br>( London…tune)<br>**Game**<br>I help you to sweep the floor.<br>Who am I?<br>*Broom / you are a broom.*<br>I help you to sweep the garden.<br>Who am I?<br>*Ekelbroom / you are an ekel broom.* | **Useful Expressions**<br>27. It has two eyes.<br>It has two ears.<br>It has one nose.<br>It has one mouth.<br>It has a bushy tail.<br>It has whiskers.<br>It has sharp teeth.<br>It has sharp nails.<br>It likes milk. |

| | | |
|---|---|---|
| **15. Man & Information**<br>1. letter<br>2. newspapers<br>3. telephone<br>4. post | **Song**<br>Information where we find<br>Where we find//<br>Information where we find<br>My dear friend.<br><br>Newspapers –read ///<br>Newspapers –read /// my dear friend<br>Radio - listen to it ///<br>Radio - listen to it - my dear friend<br>Television – watch ///<br>Television – watch ///<br>But don't watch too much.<br>(London..tune) | **Useful Expressions**<br><br>28. What can you see? /<br>What can you see in this picture?<br>I can see a house. / a house, a cat.<br><br>29. What is in my hand?<br>a bag / an umbrella. |
| **16. Our Past**<br>1. history<br>2. stone carvings<br>3. timber carvings<br>4. ancient kings<br>5. palace<br>6. throne<br>7. crown | **Song**<br>Ancient kings our fore fathers//<br>Built this world beautiful//<br>Built this world happy and safe//<br>Let's call them our heroes//<br>Let's become great like them.//<br><br>**Game : Guess**<br>I live in a palace.<br>I wear a crown.<br>I sit on the throne.<br>Who am I?<br>*Answer : King / You are a king.* | **Useful Expressions**<br>30. I am Sahan.<br>I am eight /nine<br>I live in Nawala.<br>I go to DharmapalaVidyalaya.<br>I am in grade three/ four<br>I have one brother and one sister.<br>I like red.<br><br>31. I have a pet.<br>It is a cat.<br>My cat is black.<br>My cat likes milk.<br><br>32. My cat has four legs.<br>It has a tail.<br>It has two eyes.<br>It has two ears.<br>It has a small nose.<br>It has a small mouth.<br>It has whiskers. |

## Assessment (done by the class teacher)

**Listen & Draw :**

- Draw a cat
- Draw one cat
- Draw two cats.  etc.

**Listen and colour**

- Colour the cat in brown.

**Look and say (show the picture an ask)**

- What is this?
- What is this animal ?
- What is this fruit?
- What is this vegetable?
- What colour is it ?
- How many cats are there ?
- How many dogs are there?  etc.....
- What can you see in this picture?

**Listen and answer**

- Name three fruits.
- Name three vegetables.
- Name three animals.
- What's your name? ............ etc

# 4.0 இரண்டாம் தேசிய மொழி - சிங்களம்

## 1. அறிமுகம்

இலங்கையர் என்ற வகையில் தம்முடன் வாழும் சகோதர மக்களின் மொழியைக் கற்பதன் மூலம் ஒருவரையொருவர் விளங்கிச் செயற்படும் திறனை மாணவரிடத்தே வளர்ப்பதே இதன் மூலம் எதிர்பாரக்கப்படுகின்றது.

இக்குறிக்கோளை மையப்படுத்தி, இரண்டாம் தேசிய மொழியைக் கற்பிப்பதன் மூலம் மாணவரிடம் மொழிப் பண்டியத்தியத்தை ஏற்படுத்த எதிர்பார்க்கப்படவில்லை. மாறாக தொடர்பாடல் திறன்களை ஓரளவுக்கு வளர்த்துக் கொள்வதும் ஒருவரோடொருவர் புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வதும் எதிர்பார்க்கப்படுகின்றது.

செயலூக்கமுள்ள தேசிய ஒன்றிணைப்பை ஏற்படுத்திக் கொள்வதற்கும் தேசிய ஒற்றுமையை ஏற்படுவத்துவதற்கான முதன்மையான அடித்தளத்தை இடுவதற்கும் இரண்டாம் தேசிய மொழியைக் கற்பது தூண்டுகோலாக அமையும் என்பது எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கமைய இரண்டாம் முதன்மை நிலையில் இரண்டாம் தேசிய மொழியின் கீழ் பின்வரும் தேர்ச்சிகளை அடைவதற்காக இந்த ஆசிரியர் வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது. **செவிமடுத்தல், பேசுதல் ஆகிய மொழித்திறன்கள் தொடர்பான செயற்பாடுகள் மாத்திரமே இங்கு தரப்பட்டுள்ளன.** இத்தேர்ச்சிகள், மாணவரது வயது, முதிர்ச்சி என்பவற்றோடு அவர்கள் பெற்றுள்ள அனுபவங்களையும் கவனத்திற் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன.

## 2. ஆரம்பக் கல்விப் பருவத்துக்குரிய தேர்ச்சிகள் (இரண்டாம் தேசிய மொழி)

- நாளாந்தத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக பொருத்தமான சொற்களையும் சொற்றொடர்கள் - வாக்கியங்களைப் பயன்படுத்திப் பேசுவார்.
- சிங்களத்தில் கூறுபவற்றை செவிமடுத்து பொருளுள்ள வகையில் துலங்குவார்/ எதிர்வினை காட்டுவார்.
- மொழியைக் கையாளும்போது நற்பழக்கங்களை வெளிப்படுத்துவார்.
- ஏனையோரது முன்னிலையில் தமது கருத்தையும் வெளிப்படுத்த முன்வருவார்.
- வாசிப்புத்திறனை வெளிப்படுத்தி, அதனைப் பொருளுள்ள வகையில் பயன்படுத்துவார்.
- பாடல்கள், கவிதைகளை செவிமடுத்தும் பாடியும் இரசிப்பார்.
- இரண்டாம் தேசிய மொழியைக் கையாள்வதன் மூலம் களிப்புறுவார்.
- இரண்டாம் தேசிய மொழியைக் கையாளும் திறன்களை மதிப்பார்.

## 3. முதன்மை நிலை இரண்டிற்குரிய தேர்ச்சிகள்

- குறிப்பாக ஓர் இடத்தை ஏனையோருக்குச் சரியாகக் கூறுவார்.
- தமது தேவைகளுக்குரிய பொது இடங்களைக் குறிப்பிடுவார் அல்லது பெயரிடுவார்.
- அன்றாடக் கருமங்களின்போது குறித்த எளிமையான கட்டளைகளுக்கு எதிர்வினை (துலங்கல்) காட்டுவார்.
- அன்றாடம் தமது தேவைகளுக்காக நட்புடன் வேண்டுகோள் விடுப்பார்.
- விருத்தினர்களை வரவேற்று நட்புடன் உரையாடுவார்.
- தமது கிட்டிய சூழலில் காணப்படும் மரஞ்செடிகொடிகள், பூக்களின் பெயர்களை இனங்கண்டு கூறுவார்.
- தமது கிட்டிய சூழலில் காணப்படும் பழங்கள், காய்கறிகளைச் சரியாக இனங்கண்டு கூறுவார்.
- தமது உடலின் உறுப்புக்களைச் சரியாகக் கூறுவார்.

- அன்றாடம் பயன்படுத்தும் பாவனைப் பொருட்கள் மற்றும் உபகரணங்களை இனங்கண்டு கூறுவார்.
- எண்குறிகளை இனங்கண்டு சரியாகவும் தெளிவாகவும் உச்சரித்து வாசிப்பார்.
- பொது இடங்களில் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகத் தகவல்களை விசாரித்தறிவார்.
- எளிமையான பாடல்கள், கவிதைகளை அங்க அசைவுகளுடன் பாடுவார்.
- அடிப்படைத் தகவல்கள் தொடர்பாக உரையாடல் ஒன்றில் ஈடுபடுவார்.

**4. தரம் நான்கிற்குரிய தேர்ச்சிகள்**

- பாடசாலையில் இருக்கும் வெவ்வேறு ஆட்களை/ நபர்களை இனங்கண்டு கூறுவார்.
- குடும்பத்தில் நெருங்கிய உறவினரின் உறவுமுறைகளை இனங்கண்டு கூறுவார்.
- பொது இடங்களின் பெயர்களை இனங்கண்டு கூறுவார்.
- அன்றாடத் தேவைகளுக்காக நட்புடன் வேண்டுகோள் விடுப்பார்.
- பதினொன்று (11) தொடக்கம் பதினைந்து (15) வரையிலான எண்களைச் சிங்கள மொழியில் கூறுவார்.
- அன்றாட உரையாடல்களின்போது யாதேனும் ஒரு பொருள் அல்லது எவரேனும் ஒருவர் இருக்கும் இடத்தைத் திட்டவட்டமாகக் குறிப்பிடுவதற்குப் பொருத்தமான பிரயோகங்களைப் பயன்படுத்துவார்.
- தமது அன்பர்களுடன் நட்புடன் உரையாடுவார்.
- தகவல் அறிவதற்காக வினாக் கேட்பார்.
- மணியில் நேரத்தைக் கூறுவார்.

**5. கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

முதன்மை நிலை ஒன்று தொடக்கம் இரண்டாம் தேசிய மொழியைப் பயிலுவதற்கு மாணவர்க்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. திட்டமிட்ட விளையாட்டுக்கள், களிப்பூட்டும் வேலைகள் மற்றும் செயற்பாடுகளை முதன்மையாகக் கொண்டு முன்வைக்கப்பட்டுள்ள இத்தப் பாடத்தினால் எதிர்பார்க்கப்படும் கற்றல் - தேர்சசிகளை அடையத்தக்கவாறான கற்றல் - கற்பித்தற் செயன்முறை திட்டமிடப்பட்டுள்ளது.

இரண்டாம் தேசிய மொழியொன்றினைக் கற்பதால் அடைய எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை அடையத்தக்கவாறாக, கற்றல் - கற்பித்தல் செய்ன்முறையை ஒழுங்கு செய்து கொள்வது ஆசிரியரின் பொறுப்பாகும். மேலும் இங்கு தரப்பட்டுள்ள செயற்பாடுகளுக்குப் பதிலாக பொருத்தமான புதிய செயற்பாடுகளைத் திட்டமிடல் பயன்படுத்தும் சுதந்திரம் ஆசிரியருக்கு உண்டு.

**6. பாடசாலைக் கொள்கையும் வேலைத் திட்டங்களும்**

இரண்டாம் தேசிய மொழியைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களைப் பாடசாலைக் கொள்கையின் வழியே உருவாக்குவது தொடர்பாக அதிபர் கவனஞ் செலுத்த வேண்டும். அத்தோடு தரம் நான்கு வகுப்பில் இரண்டாம் தேசிய மொழிப் பயன்பாட்டுக்கேற்ற கொள்கைகளை உருவாக்குவது குறித்து வகுப்பாசிரியர் கவனஞ் செலுத்துதல் வேண்டும். வாழ்த்துத் தெரிவித்தல், நன்றி கூறுதல் போன்றவற்றை சில சந்தர்ப்பங்களில் இரண்டாம் தேசிய மொழியிலும் கூறுதல் போன்ற மொழிகளை உருவாக்குதல் வேண்டும். மேலும் இரண்டாம் தேசிய மொழிக்கான ஒரு தினத்தைப் பெயரிட்டு (பிரகடனப்படுத்தி) வகுப்பு மட்டத்தில் விசேட நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்யலாம்.

**7. மாணவரது முன்னேற்றத்தைக் கணிப்பிடுதல்**

சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான சிங்களச் சொற்களைப் பயன்படுத்துதல் தொடர்பான தகவல்களைத் திரட்டுங்கள். மாணவரது வலுக்களை இனங்காண்பதற்கும் இடர்பாடுகளின் போது உதவி புரிவதற்கும் அத்தகவல்களை பயன்படுத்துங்கள். ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ள பொதுக்கணிப்பீட்டுப் பத்திரத்தின் இரண்டாம் தேசிய மொழிக் கணிப்பீட்டுக்காக உரிய நியமங்கள் உள்ளடக்கப்படடுள்ளன.

# இரண்டாம் தேசிய மொழி - சிங்களம்
# பாடத்திட்டம் - தரம் 04

**தேர்ச்சி - 1**

- பாடசாலையில் இருக்கும் வெவ்வேறு ஆட்களை/ நபர்களை இனங்கண்டு கூறுவார்.

| | | |
|---|---|---|
| • ගුරුවරයා/ගුරුවරිය | குருவரயா/ குருவரிய | ஆசிரியர் |
| • විදුහල්පතිතුමා | விதுஹல்பதி | அதிபர் |
| • ශිෂ්‍යයා | ஷிஷ்யயா | மாணவன் |
| • ශිෂ්‍යාව | ஷிஷ்யாவ | மாணவி |
| • යහළුවා | யஹலுவா | நண்பன் |
| • යෙහෙළිය | யெஹலிய | நண்பி |

**தேர்ச்சி - 2**

- குடும்பத்தில் நெருங்கிய உறவினரின் உறவுமுறைகளை இனங்கண்டு கூறுவார்.

| | | |
|---|---|---|
| • ආච්චි | ஆச்சி | பாட்டி |
| • සීයා | சீயா | தாத்தா/பாட்டன் |
| • මාමා | மாமா | மாமா |
| • නැන්දා | நந்தா | மாமி |
| • සහෝදරයා | சகோதரயா | சகோதரன் |
| • සහෝදරිය | சகோதரிய | சகோதரி |

**தேர்ச்சி - 3**

- பொது இடங்களின் பெயர்களை இனங்கண்டு கூறுவார்.

| | | |
|---|---|---|
| • පාසල | பாசல | பாடசாலை |
| • පොළ | பொல | சந்தை |
| • බස් නැවතුම් පොළ | பஸ் நவதும் பொல | பஸ் நிலையம் |
| • දුම්රිය ස්ථානය | தும்ரிய ஸ்தானய | புகையிரத நிலையம் |
| • රෝහල | ரோகல | வைத்தியசாலை |
| • බැංකුව | பங்குவ | வங்கி |
| • තැපැල් කාර්යාලය | தபல் கார்யாலய | தபால் காரியாலம் |

**தேர்ச்சி - 4**

- அன்றாடத் தேவைகளுக்காக நட்புடன் வேண்டுகோள் விடுப்பார்.

| | | |
|---|---|---|
| • බොන්න | Bபொன்ன | குடியுங்கள் |
| • කන්න | கன்ன | சாப்பிடுங்கள் |
| • අරින්න | அரின்ன | திறவுங்கள் |
| • සෝදන්න | சோதன்ன | கழுவுங்கள் |

**தேர்ச்சி - 5**

- பதினொன்று (11) தொடக்கம் பதினைந்து (15) வரையிலான எண்களைச் சிங்கள மொழியில் கூறுவார்.

| | | |
|---|---|---|
| • එකොළහ - 11 | எகொளஹ | பதினொன்று |
| • දොළහ - 12 | தொளஹ | பன்னிரண்டு |
| • දහතුන - 13 | தகதுன | பதின்மூன்று |
| • දාහතර - 14 | தாகதர | பதின்நான்கு |
| • පහළොව - 15 | பகளொவ | பதினைந்து |

**தேர்ச்சி - 6**

- அன்றாட உரையாடல்களின்போது யாதேனும் ஒரு பொருள் அல்லது எவரேனும் ஒருவர் இருக்கும் இடத்தைத் திட்டவட்டமாகக் குறிப்பிடுவதற்குப் பொருத்தமான பிரயோகங்களைப் பயன்படுத்துவார்.

| | | |
|---|---|---|
| • එහේ/අතන/අතනට/අතනින්/එහෙන් | எஹே/அத்தன/அத்தனட/அத்தனின் | அங்கே |
| • මෙහේ/මෙතන/මෙතනට | மெஹே/மெத்தன/மெதனட்ட | இங்கே |
| • ඉදිරියෙන්/ඉදිරියට | இதிரியென்/இதிரியட்ட | முன்னால் |
| • පිටුපස/පිටුපසින්/පිටුපසට | பிட்டுபச/பிட்டுபசின்/பிட்டுபசட | பின்னால் |

**தேர்ச்சி - 7**

- தமது அன்பர்களுடன் நட்புடன் உரையாடுவார்.

| | | |
|---|---|---|
| • මම රාණී ඔබ කවුද ? | மம ராணி ஒப கவுத? | நான் இராணி நீங்கள் யார்? |
| • මගේ නම සමන් | மகே நம சமன் | எனது பெயர் சமன் |
| • මට ආප්ප ඕන | மட ஆப்ப ஓன | எனக்கு அப்பம் வேண்டும் |
| • ඔයාට වතුර ඕනෙද ? | ஒயா(ட்)ட வ(த்)துர ஓனத? | உங்களுக்கு தண்ணீர் வேண்டுமா? |
| • නෑ | நே | இல்லை |
| • ඔව් | ஒவ் | ஆம் |
| • මට වතුර එපා | ம(ட்)ட வதுர எ(ப்)பா | எனக்கு தண்ணீர் வேண்டாம். |
| • ඔබ කවුද? | ஒப கவுத? | நீங்கள் யார்? |
| • මම සමන් | மம சமன் | நான் சமன் |

| | | |
|---|---|---|
| • මම | மம | நான் |
| • ඔබ | ஒப | நீங்கள் |
| • මට | மட்ட | எனக்கு |
| • ඔබට | ஒபட்ட | உங்களுக்கு |
| • මගේ | மகே | எனது |
| • ඔබේ | ஒபே | உங்கள் |

**தேர்ச்சி - 8**

- தகவல் அறிவதற்காக வினாக் கேட்பார்.

- ඔබේ නම කුමක් ද ?
  ஒபகே நம குமக்த? — உங்கள் பெயர் என்ன?
- ඔබේ අම්මාගේ නම කුමක් ද ?
  ஒபே அம்மாகே நம குமக்த? — உங்கள் அம்மா பெயர் என்ன?
- ඔබේ තාත්තාගේ නම කුමක් ද ?
  ஒபே தாத்தாகே நம குமக்த? — உங்கள் அப்பா பெயர் என்ன?
- ඔබේ වයස කීයද ?
  ஒபே வயச கீயத? — உங்கள் வயது எத்தனை?
- ඔබේ පාසල කුමක් ද ?
  ஒபே பாசல குமக்த? — உங்கள் பாடசாலை எது?
- ඔබේ පුටුව කුමක් ද ?
  ஒபே புட்டுவ குமக்த? — உங்கள் கதிரை எது?
- ඔබේ මේසය කුමක් ද ?
  ஒபே மேசய குமக்த? — உங்கள் மேசை எது?
- ඔබේ පන්තිය කුමක් ද ?
  ஒபே பந்திய குமக்த? — உங்கள் வகுப்பு எது?
- ඔබේ ගම කොහේ ද?/කුමක් ද ?
  ஒபே கம கொஹேத/குமக்த? — உங்கள் ஊர் எது?
- පුස්තකාලය කොහේ ද ?
  புஸ்தகாலய கொஹேத? — நூலகம் எங்கே?
- පුස්තකාලය එහේ
  புஸ்தகாலய எஹே — நூலகம் அங்கே
- බස් නැවතුම්පොළ කොහේද ?
  பஸ் நவதும்பொல கொஹேத? — பஸ் நிலையம் எங்கே?
- බස් නැවතුම්පොළ මෙහේ
  பஸ் நவதும்பொல மெஹே — பஸ் நிலையம் இங்கே
- පොළ කොහේ ද ?
  பொல கொஹேத? — சந்தை எங்கே?
- පොළ මෙහේ
  பொல மெஹே — சந்தை இங்கே
- රෝහල කොහේ ද?
  ரோஹல கொஹேத? — வைத்தியசாலை எங்கே?
- රෝහල එහේ
  ரோஹல எஹே — வைத்தியசாலை அங்கே
- සමන් කොහේ ද ?
  சமன் கொஹேத? — சமன் எங்கே?

- සමන් මෙහේ

  சமன் மெஹே சமன் இங்கே

- ගුරුවරයා කොහේ ද ?

  குருவரயா கொஹேத? ஆசிரியர் எங்கே?

- ගුරුවරයා එහේ
- குருவரயா எமெஹே ஆசிரியர் அங்கே

**தேர்ச்சி - 9**

- மணியில் நேரத்தைக் கூறுவார்.

| | | |
|---|---|---|
| • වෙලාව එකයි | வேலாவ எக்கய் | ஒரு மணி |
| • වෙලාව දෙකයි | வேலாவ தெக்கய் | இரண்டு மணி |
| • වෙලාව තුනයි | வேலாவ துனய் | மூன்று மணி |
| • වෙලාව හතරයි | வேலாவ ஹத்தரய் | நான்கு மணி |
| • වෙලාව පහයි | வேலாவ பஹய் | ஐந்து மணி |
| • වෙලාව හයයි | வேலாவ ஹயய் | ஆறு மணி |
| • වෙලාව හතයි | வேலாவ ஹத்தய் | ஏழு மணி |
| • වෙලාව අටයි | வேலாவ அட்டய் | எட்டு மணி |
| • වෙලාව නවයයි | வேலாவ நமயய் | ஒன்பது மணி |
| • වෙලාව දහයයි | வேலாவ தஹயய் | பத்து மணி |
| • වෙලාව එකොළහයි | வேலாவ எக்கொளஹய் | பதினொரு மணி |
| • වෙලාව දොළහයි | வேலாவ தொளஹய் | பன்னிரண்டு மணி |

## தேர்ச்சி - 1

**பாடசாலையில் இருக்கும் வெவ்வேறு ஆட்களை/ நபர்களை இனங்கண்டு கூறுவார்.**

| | | |
|---|---|---|
| ගුරුවරයා/ගුරුවරිය | குருவரயா/ குருவரிய | ஆசிரியர் |
| විදුහල්පතිතුමා | விதுஹல்பதி | அதிபர் |
| ශිෂ්‍යයා | ஷிஷ்யயா | மாணவன் |
| ශිෂ්‍යාව | ஷிஷ்யாவ | மாணவி |
| යහළුවා | யஹலுவா | நண்பன் |
| යෙහෙළිය | யெஹலிய | நண்பி |

ஆகியோரைக் காட்டும் ஆறு பட அட்டைகள் தயாரித்துக்கொள்க.

**செயற்பாடு : 1**

- அப்பட அட்டைகளை ஒவ்வொன்றாகக் காட்டி அவர்களைச் சிங்களத்தில் அழைக்கும் விதத்தை மேலே காட்டியுள்ளவாறு உரத்து உச்சரித்துக் கூறுவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- மேற்படி பாத்திரங்கள் யாவும் உள்ளடங்கும் வகையில் மாணவர் அனைவர்க்கும் ஒவ்வொன்று கிடைக்குமாறு போதுமான அளவுக்கு அப்பாத்திரங்களின் படங்களைக் கொண்ட தொப்பிகள் அல்லது பதக்க மாலைகள் தயாரித்துக்கொள்க.
  உதாரணம்: வகுப்பில் 30 மாணவர்கள் உள்ளரெனின் ஒவ்வொரு படத்திலும் 5 பிரதிகள் வீதம் தயாரித்துக்கொள்க.
- ஆசிரியை அவற்றுள் ஒரு பாத்திரத்தின் பெயரைக் கூறியவுடன், அப்பாத்திரத்தை அணிந்துள்ள மாணவர்கள் எழுந்து நின்று, தாம் அணிந்துள்ள பாத்திரத்தின் பெயரை உரத்துக் கூறிய பின்னர் அமருதல் வேண்டும்.




- இவ்வாறாக எல்லாப் பாத்திரங்களும் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் ஆசிரியர் பெயர்களைக் கூறுதல் வேண்டும்.
- பின்னர் அணிந்துள்ளவற்றை மாணவர்களுக்கிடையே பரிமாறிச் செயற்பாட்டை மீண்டும் நடத்துக.

- ஆசிரியருக்குப் பதிலாக, பெயர் கூறி அழைப்பதற்காக மாணவரை ஈடுபடுத்தி, செயற்பாட்டைத் தொடர்ந்தும் நடத்தலாம்.

**செயற்பாடு : 2**

- வகுப்பு மாணவரை இடவசதியுள்ள திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்க.
- மாணவரை ஆறு பேர் கொண்ட குழுக்களாகப் பிரிக்குக.
- மேற்படி செயற்பாடு : 1 இல் தயாரித்த பட அணிகலன்களை ஆளுக்கு ஒன்றாக வழங்குக.
- ஒவ்வொரு குழுவிலும் ஆறு பாத்திரங்களும் அடங்கியிருக்கும் வகையில் அவற்றை வழங்குதல் வேண்டும்.
- ஒவ்வொரு குழுவிலும் மாணவர்களை அரைவட்ட வடிவத்தில் நிற்குமாறு வழிப்படுத்தி, ஒரு மாணவரை முன்னால் வருமாறு அறிவுறுத்துக.



- முன்னால் வந்த மாணவர் முதலில் தம்மை அறிமுகஞ் செய்த பின்னர், குழுவில் மற்றுமொருவரை முன்னால் வருமாறு அழைத்தல் வேண்டும்.

  உதாரணம்:

| | | |
|---|---|---|
| මම විදුහල්පති | மம விதுஹல்பத்தி | நான் அதிபர் |
| ගුරුතුමා/ගුරුතුමිය එන්න | குருதுமா/ குருதுமிய என்ன | ஆசிரியர்/ஆசிரியை வாருங்கள். |

- பின்னர் அரை வட்டத்தின் முன்னே இருக்கும் மாணவர் அரை வட்டத்துடன் சேர்ந்து கொள்ளல் வேண்டும். இரண்டாவதாக முன்னே வந்த மாணவர் முன்னர் போன்றே தம்மை அறிமுகஞ் செய்த பின்னர் மற்றுமொருவரை முன்னே வருமாறு அழைத்தல் வேண்டும்.

  உதாரணம்:

| | | |
|---|---|---|
| මම ගුරුවරයා/ගුරුවරිය | மம குருவரயா/குருவரிய | நான் ஆசிரியர்/ஆசிரியை |
| ශිෂ්‍යයා එන්න | ஷிஷ்யயா என்ன | மாணவன் வாருங்கள். |

- இவ்வாறாக குழுவில் / வகுப்பில் அனைவருக்கும் முன்னே வந்து கூறவும் அழைக்கவும் சந்தர்ப்பம் கிடைக்குமாறு செயற்பாட்டைத் தொடர்ந்து நடத்துக.
- பின்னர், வகுப்பில் மாணவர் அனைவரையும் அரைவட்டவடிவில் நிறுத்தி, முன்னைய செயற்பாட்டில் செய்தது போன்று, ஒரு குறித்த பாத்திரப் படத்தை அணிந்துள்ள மாணவர் அனைவரையும் முன்னே அழைத்துச் செயற்பாட்டை முன்னர் போன்றே நடத்திச் செல்க.

**செயற்பாடு : 3**

- பின்வரும் பாடலைப் பாடுவதற்காக மேலே செயற்பாடு - 1 இல் தயாரித்த அணிகலன்களைப் பயன்படுத்துக.

- அணிகலன்களை மாணவருக்குப் பகிர்ந்தளிக்குக.

- பாடலில் காட்டியுள்ளவாறு தமது பாத்திரம் தொடர்பாகப் பாடியவாறு முன்வைப்புச் செய்ய மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.

  **பாடல் 1:**

  **அதிபர்:**

  විදුහල්පති ... මම... මම... මම... මම.. විදුහල්පති
  විදුහල්පති ... මම... මම... මම... මම.. විදුහල්පති
  මම විදුහල්පති

  விதுஹல்பதி... மம... மம... மம... மம.. விதுஹல்பதி
  விதுஹல்பதி... மம... மம... மம... மம.. விதுஹல்பதி
  மம விதுஹல்பதி

  **ஆசிரியர்:**

  ගුරුවරයා ... මම... මම... මම... මම.. ගුරුවරයා
  ගුරුවරයා ... මම... මම... මම... මම.. ගුරුවරයා
  මම ගුරුවරයා

  குருவரயா... மம... மம... மம... மம.. குருவரயா
  குருவரயா... மம... மம... மம... மம.. குருவரயா
  மம குருவரயா

- இவ்வாறாக மற்றைய பாத்திரங்களையும் பாடலில் உட்படுத்திப் பாடலைப் பாடுமாறு மாணவரை வழிப்படுத்துக.

- மாணவரை வட்டமாக நிறுத்தி, மாணவர் ஒவ்வொருவருக்கும் செயற்பாடு: 1 இல் தயாரித்த அணிகலன் ஒவ்வொன்று வழங்குக.

- பின்வரும் பாடலை மாணவருடன் சேர்ந்து பாடுக.

  **பாடல் 2:**

  මම විදුහල්පති ... // ඔබ කවුද?
  මම ගුරුවරයා ... // ඔබ කවුද?
  මම ශිෂ්‍යයා ... // ඔබ කවුද?
  මම ශිෂ්‍යාව... // ඔබ කවුද?
  මම යහළුවා ... // ඔබ කවුද?
  මම යෙහෙළිය... // ඔබ කවුද?

மம விதுஹல்பதி... // ஒப கவுத?
மம குருவரயா... // ஒப கவுத?
மம குருவரிய... // ஒப கவுத?
மம ஷிஷ்ய்யா... // ஒப கவுத?
மம ஷிஷ்யாவ ... // ஒப கவுத?
மம யஹலுவா... // ஒப கவுத?
மம யெஹெலிய... // ஒப கவுத?

- பின்னர் வட்டத்தில் ஒரு மாணவன் தம்மைப் பற்றி மேற்கூறியவாறு அறிமுகஞ் செய்து, தமக்கு வலது புறத்தில் இருக்கும் மாணவனிடம் 'நீங்கள் யார்?' என பாடலின்படி சிங்களத்தில் வினவுதல் வேண்டும்.

- அம்மாணவர், பாடலின்படி, தாம் யார் என அறிமுகஞ் செய்து, தமது வலது புறத்தே உள்ள மாணவனிடம் முன்னைய மாணவன் செயற்பட்டது போன்றே ''நீங்கள் யார்'' என சிங்களத்தில் பாடலின்படி வினவுதல் வேண்டும்.

- இவ்வாறாக வட்டம் முடிவடையும் வரையில் செயற்பாட்டை நடத்துக.

- பின்னர் மாணவர்கள் இருக்கும் இடங்களை மாற்றி தொடர்ந்தும் செயற்பாட்டை நடத்திச்செல்லச் சந்தர்ப்பமளிக்குக.

## தேர்ச்சி - 2

**குடும்பத்தில் நெருங்கிய உறவினரின் உறவுமுறைகளை இனங்கண்டு கூறுவார்.**

| | | |
|---|---|---|
| ආච්චි | ஆச்சி | பாட்டி |
| සීයා | சீயா | தாத்தா/பாட்டன் |
| මාමා | மாமா | மாமா |
| නැන්දා | நந்தா | மாமி |
| සහෝදරයා | சகோதரயா | சகோதரன் |
| සහෝදරිය | சகோதரிய | சகோதரி |

**செயற்பாடு : 1**

- குடும்ப உறவினரின் உறவு முறைகளைச் சிங்கள மொழியில் கூறும் விதம் பற்றி மாணவர்க்கு அறிவூட்டம் செய்க.
- அச்சொற்களை மாணவர்கள் சில தடவைகள் உச்சரிக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- மேற்படி ஆறு உறவு முறைகளையும் குறிக்கும் வகையில் மாணவர் அணியத்தக்கவாறாக ஆறு வேடமுகங்கள் தயாரித்துக்கொள்க.
- பின்னர் எழுமாறாகத் தெரிவு செய்து ஆறு மாணவர்களுக்கு மேற்படி வேடமுகங்களை வழங்கி, வகுப்பின் முன்னே வந்து கீழே தரப்பட்டுள்ளவாறு தம்மை அறிமுகஞ் செய்யுமாறு கூறுக.

  உதாரணம்:

| | | |
|---|---|---|
| මම ආච්චි | மம ஆச்சி | நான் பாட்டி |
| මම සීයා | மம சீயா | நான் தாத்தா |

- பின்னர் வேடமுகங்களை மாணவர்களுக்கிடையே பரிமாற்றம் செய்து மாணவர்கள் அனைவருக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும் வகையில் செயற்பாட்டைத் தொடர்ந்து நடத்துக.

**செயற்பாடு : 2**

- பாட்டி, தாத்தா, மாமா. மாமி, சகோதரன், சகோதரி ஆகியோரின் படங்களைக் கொண்ட ''விரல் பொம்மைகள்'' போதுமான அளவுக்குச் செய்து கொள்க.
- மாணவர் ஒவ்வொருவருக்கும் ஒரு விரல் பொம்மைத் தொகுதி (6 பொம்மைகள்) வீதம் வழங்கி, அவற்றைத் தமது விரல்களில் அணிந்துகொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்குக.
- மாணவரை இருவரிருவராகப் பிரிக்குக.
- பின்வரும் பாடலைப் பாடியவாறு மாணவர்க்குச் செயற்பாட்டில் ஈடுபடச் சந்தர்ப்பமளிக்குக.

| | | |
|---|---|---|
| A | අම්මා කොහේද? | அம்மா கொஹேத?... // |
| B | මම මෙහේ | மம மெஹே.. // |
| C | කොහොමද සැප සනීප? | கொஹொமத ஸப்பஸனீப்ப?... // |
| D | හොඳින් ඉන්නවා | ஹொந்தின் இன்னவா... // |

- A எனும் மாணவர் ஒரு விரலை ஆட்டியவாறு A අම්මා කොහේද? - (அம்மா கொஹேத?) என வினவுதல் வேண்டும்.

  B எனும் மாணவன், தாயின் படத்தைக் கொண்ட விரலை அசைத்து, මම මෙහේ - (மம மெஹே) எனக் கூறுதல் வேண்டும்.

- இவ்வாறாகப் பாடலின் மீதிப் பகுதியையும் இருவரும் இங்கு தரப்பட்டுள்ளவாறு பாடுதல் வேண்டும். (முதலில் ஆசிரியர் A ஆகவும் ஏனைய மாணவர்கள் B ஆகவும் செயற்பாட்டை நடத்துக.)

- இவ்வாறாக ஏனைய உறவு முறைகள் தொடர்பாகவும் வினவியவாறு பாடலைப் பாடுக.

- பின்னர், B ஆக இருந்து பாடலைப் பாடியோருக்கு A பாடிய பாடல் பகுதிகளைப் பாடவும், A ஆக இருந்து பாடலைப் பாடியோருக்கு B பாடிய பாடல் பகுதியைப் பாடவும் சந்தர்ப்பமளிக்குக.

- இச்செயற்பாட்டை மாணவர் குழுக்களாகச் சேர்ந்தும் நடத்தலாம்.

**செயற்பாடு : 3**

- தொலைக்காட்சிப்பெட்டி முகப்புப் போன்ற ஒரு மாதிரியுருவைச் செய்து கொள்க.

- அம்மா, அப்பா, அண்ணன், அக்கா, தம்பி, தங்கை, பாட்டி, தாத்தா, மாமா, மாமி ஆகியோரின் பாடங்களைக் காட்டுக. அட்டைகளைத் தயாரித்து வழங்குக. (10 அட்டைகள்)

- அவ்வட்டையைத் தமது உடையில் தொங்கவிட்டுக் கொள்ளுமாறு அறிவுறுத்துக.

- செயற்பாடு 1 இல் பாடிய பாடலின் ஆரம்பப் பகுதியை மேற்குறிப்பிட்ட உறவு முறைகளை உட்படுத்தி ஆசிரியர் பாடுதல் வேண்டும்.
  உதாரணம்:

  අම්මා කොහේද? - அம்மா கொஹேத

- அப்போது 'அம்மா' அட்டையை அணிந்துள்ள ஒரு மாணவன் முன்னே ஓடி வந்து, தொலைக்காட்சிப் பெட்டியின் பின்னே நின்று,

  මම මෙහේ - மம மெஹே

  எனக் கூறி, வகுப்பில் ஏனைய மாணவர்கள் பார்க்கக்கூடியதாக நின்றவாறு உரத்துக்கூற வேண்டும்.

- அப்போது வகுப்பில் உள்ள மற்றைய மாணவர்கள், அப்பாடலின் இரண்டாவது பகுதியில் කොහොමද සැප සනීප? - 'கொஹோமத சப்ப சனீப்ப' எனப் பாடுதல் வேண்டும்.

- வகுப்பில் முன்னே வந்த மாணவன்,
  හොඳින් ඉන්නවා - 'ஹொந்தின் இன்னவா' என விடையளித்தல் வேண்டும்.

- பின்னர் பட அட்டை கிடைக்காத மாணவர்க்கு மேற்படி அட்டைகளைப் பகிர்ந்தளித்து வகுப்பு மாணவர் அனைவரையும் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.

## தேர்ச்சி - 3

**பொது இடங்களின் பெயர்களை இனங்கண்டு கூறுவார்.**

| | | |
|---|---|---|
| පාසල | பாசல | பாடசாலை |
| පොළ | பொல | சந்தை |
| බස් නැවතුම් පොළ | பஸ் நவதும் பொல | பஸ் நிலையம் |
| දුම්රිය ස්ථානය | தும்ரிய ஸ்தானய | புகையிரத நிலையம் |
| රෝහල | ரோகல | வைத்தியசாலை |
| බැංකුව | பங்குவ | வங்கி |
| තැපැල් කාර්යාලය | தபல் கார்யாலய | தபால் காரியாலம் |

**செயற்பாடு : 1**

- மேற்படி சொற்களை மாணவர்களிடத்தே நன்கு பதியும் வகையில் உரத்து உச்சரித்து அவற்றின் பொருளை விளக்குக.

- பின்னர் அந்த இடங்களின் பட அட்டைகளை அல்லது கோல் பொம்மைகளை தடவைக்கு ஒன்று வீதம் காட்டி, அந்த இடங்களின் பெயர்களைக் கூறுமாறு மாணவரை வழிப்படுத்திச் சந்தர்ப்பமளிக்குக.


- மாணவர் அச்சொற்களை நன்கு விளங்கிக்கொண்ட பின்னர் ஒவ்வொரு படமாகக் காட்டிக் குழுவாக விடையளிக்கச் சந்தர்ப்பமளித்து, பின்னர் மாணவர் ஒவ்வொருவருக்கும் அட்டைகளைக் காட்டி விடையளிக்கச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு : 2**

- மேற்படி செயற்பாடு: 1 இல் பயன்படுத்திய படங்களைக் கீழே படத்தில் காட்டப்பட் டுள்ளவாறாக பிரிஸ்டல் அட்டையில் ஒட்டுக.

- அப்படங்களை ஒரு திரையினால் மறைக்கப்படும் வகையில் தயாரித்துக்கொள்ளல் வேண்டும்.

- அத்திரை மீது 1 தொடக்கம் 7 வரை எண்கள் இடுக.




- 1 - 7 வரையிலான எண்கள் எழுதப்பட்ட ஏழு சிறிய அட்டைகளைத் தயாரித்து, சிறிய பெட்டியொன்றில் இட்டுக் கொள்க.

- எழுமாறாகத் தெரிவு செய்த ஒரு மாணவர் வீதம் வகுப்பின் முன்னே அழைத்து, சிறிய பெட்டியிலிருந்து எண் அட்டையொன்று வெளியே எடுக்குமாறு கூறுக.

- அம்மாணவன் எடுத்த எண்ணுக்கு ஒப்பாக பிரிஸ்டல் அட்டையில் உள்ள எண் எழுதப்பட்ட திரையைத் திறந்து அதில் காணப்படும் படத்துக்குரிய சிங்களப் பெயரை உரத்துக் கூறுமாறு மாணவருக்கு அறிவுறுத்தல் வழங்குக.

- இவ்வாறாக மாணவர் அனைவருக்கும் செயற்பாட்டில் ஈடுபடச் சந்தர்ப்பமளிக்குக.

- இதனை ஒரு குழுச் செயற்பாடாகவும் திட்டமிட்டுக்கொள்ளலாம்.

## தேர்ச்சி - 4

**அன்றாடத் தேவைகளுக்காக நட்புடன் வேண்டுகோள் விடுப்பார்.**

| | | |
|---|---|---|
| බොන්න | பொன்ன | குடியுங்கள் |
| කන්න | கன்ன | சாப்பிடுங்கள் |
| අරින්න | அரின்ன | திறவுங்கள் |
| සෝදන්න | சோதன்ன | கழுவுங்கள் |

**செயற்பாடு : 1**

- மேற்படி சொற்களின் உச்சரிப்பை மாணவர்க்கு நன்கு பரிச்சயப்படுத்தி, அச்சொற்களின் பொருளை விளக்குக.

- பின்னர் பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபட மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.

- ஆசிரியர் வழங்கும் மேற்படி கட்டளைகளுக்குப் பொருத்தமானவாறு மாணவர்கள் அச்செயலைப் போலச் செய்து காட்டுதல் வேண்டும்.

- இதன்போது மாணவர்கள் 1, 2, 3 ஆந் தரங்களில் கற்ற சொற்களை மீள நினைவூட்டும் வகையில் கட்டளைகளை வழங்குக.

  உதாரணம்:

| | | |
|---|---|---|
| වතුර බොන්න | வத்துர பொன்ன | தண்ணீர் குடியுங்கள் |
| තේ බොන්න | தே பொன்ன | தேநீர் குடியுங்கள் |
| කිරි බොන්න | கிரி பொன்ன | பால் குடியுங்கள் |
| බත් කන්න | பத் கன்ன | சோறு சாப்பிடுங்கள் |
| රොටි කන්න | றொட்டி கன்ன | உறொட்டி சாப்பிடுங்கள் |
| පිට්ටු කන්න | பிட்டு கன்ன | பிட்டு சாப்பிடுங்கள் |
| අත සෝදන්න | அத்த சோதன்ன | கை கழுவுங்கள் |
| මුහුණ සෝදන්න | முஹுʼண சோதன்ன | முகம் கழுவுங்கள் |
| කට සෝදන්න | கட்ட சோதன்ன | வாய் கழுவுங்கள் |
| කකුල සෝදන්න | கக்குல சோதன்ன | கால் கழுவுங்கள் |

- இச்செயற்பாட்டை எல்லோரும் எனும் பொருளைத் தரும் 'හැමෝම' (ஹமோம) எனும் சொல்லுடன் சேர்த்தும் நடத்தலாம்.

  உதாரணம்:

  හැමෝම අත සෝදන්න ஹமோம அத்த சோதன்ன எல்லோரும் கை கழுவுங்கள்.

**செயற்பாடு : 2**

- பின்வரும் பாடலை மாணவருடன் சேர்ந்து கூட்டாகப் பாடுங்கள். பாட்டின் பொருளையும் விளக்குக.

  பகுதி 1

| | | |
|---|---|---|
| බොන්න බොන්න | பொன்ன பொன்ன | குடியுங்கள் குடியுங்கள் |
| බොන්න වතුර බොන්න | பொன்ன வத்துர பொன்ன | குடியுங்கள் தண்ணீர் குடியுங்கள் |


**பகுதி 2**

| | | |
|---|---|---|
| කන්න කන්න | கன்ன கன்ன | சாப்பிடுங்கள் சாப்பிடுங்கள் |
| කන්න බත් කන්න | கன்ன பத் கன்ன | சாப்பிடுங்கள் சோறு சாப்பிடுங்கள் |

**பகுதி 3**

| | | |
|---|---|---|
| සෝදන්න සෝදන්න | சோதன்ன சோதன்ன | கழுவுங்கள் கழுவுங்கள் |
| සෝදන්න අත් සෝදන්න | சோதன்ன அத் சோதன்ன | கழுவுங்கள் கை கழுவுங்கள் |

- பாடலில் உள்ள சொற்கள் மாணவருக்கு நன்கு பரிச்சயமான பின்னர், மாணவரைத் திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் சென்று இரண்டு குழுக்களாகப் பிரித்து கீழே படத்தில் காட்டியுள்ளவாறு நிற்குமாறு அறிவுறுத்தல் வழங்குக.



- குழு 1 எனக் குறிப்பிடப்பட்ட மாணவர்கள் பாடலைப் பாடுதல் வேண்டும். குழு 2 எனக் குறிப்பிடப்பட்ட மாணவர்கள் அதற்கேற்றவாறு குறித்த செயலைப் போலச் செய்துகாட்டுதல் வேண்டும்.

- இவ்வாறாகப் பின்னர் குழு 2 மாணவர்கள் பாடலைப் பாடுதல் வேண்டும். குழு 1 மாணவர்கள் குறித்த செயல்களைப் போலச் செய்து காட்டுதல் வேண்டும்.

## தேர்ச்சி - 5

**பதினொன்று (11) தொடக்கம் பதினைந்து (15) வரையிலான எண்களைச் சிங்கள மொழியில் கூறுவார்.**

| | | |
|---|---|---|
| එකොළහ - 11 | எகொளஹ | பதினொன்று |
| දොළහ - 12 | தொளஹ | பன்னிரண்டு |
| දහතුන - 13 | தகதுன | பதின்மூன்று |
| දාහතර - 14 | தாகதர | பதின்நான்கு |
| පහළොව - 15 | பகளொவ | பதினைந்து |

**செயற்பாடு : 1**

- 1 தொடக்கம் 10 வரையிலான எண்களை மாணவர்க்கு மீள நினைவூட்டுக.
- மேற்குறிப்பிட்ட எண்களின் சிங்களப் பெயர்கள் மாணவருக்கு நன்கு பரிச்சயமாகும் வரையில் உரத்து உச்சரிக்க வழிப்படுத்துக.
- எண்களை ஒழுங்குமுறையாகவும் ஒழுங்கின்றியும் முன்வைத்து அவ்வெண்களின் சிங்களப் பெயரை வினவுக.
- 1 தொடக்கம் 15 வரையிலான எண்களைச் சிங்களத்தில் எண்ணுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- கீழே படத்தில் காட்டியுள்ளவாறு 16 மாணவர்க்கு வரிசையாக நிற்குமாறு அறிவுறுத்துக.
- ஒருவர் தவிர மற்றைய மாணவர்க்கு 1 தொடக்கம் 15 வரை பெயரிடுக.
- எண் பெயர் கிடைக்காத மாணவர், வரிசையில் முதலாவதாக இருக்கும் மாணவரில் ஆரம்பித்து, இறுதியாக உள்ள மாணவர் வரையில் உள்ளங்கையில் தட்டியவாறு 1 தொடக்கம் 15 வரையிலான எண்களை ஒவ்வொன்றாக உரத்துக்கூற வழிப்படுத்துக.
- பின்னர் அவர் இறுதியில் உள்ள மாணவருக்கு அருகே நிற்றல் வேண்டும்.
- இவ்வாறாகவே வரிசையில் இரண்டாவது நிற்கும் மாணவனும் முன்னர் போன்றே 1 தொடக்கம் 15 வரையிலான எண்களை ஒவ்வொன்றாகக் கூறியவாறு மாணவரின் கைகளைத் தட்டியவாறு சென்று வரிசையில் இறுதியாக நிற்றல் வேண்டும்.
- இவ்வாறாக வரிசையில் உள்ள மாணவர்கள் அனைவரும் செயற்பாட்டில் ஈடுபட்டு, 1 - 15 வரையிலான எண்களைச் சிங்கள மொழியில் கூறச் செய்து பரிச்சயப்படுத்துக.
- செயற்பாட்டில் பங்குபற்றச் சந்தர்ப்பம் கிட்டாத மாணவர் உள்ளனர் எனின், அவர்களையும் பொருத்தமானவாறு செயற்பாட்டில் ஈடுபடுத்த ஆவன செய்க.

**செயற்பாடு : 2**

- படத்தில் காட்டியுள்ளவாறு மாணவரை ஒருவர் பின் ஒருவராக இரண்டு வரிசைகளாக நிறுத்துக.
- இரண்டு வரிசைகளுக்கும் எதிரே எல்லைக் கோடொன்று வரைக.

- எல்லைக் கோட்டுக்கு முன்னே 1 - 15 வரையிலான எண்கள் இடப்பட்ட பந்துத் தொகுதிகள் இரண்டு அடங்கியுள்ள ஒரு பெட்டியை வைக்குக.


- மாணவர் வரிசைகள் இரண்டுக்கும் பின்புலத்தில் வெறும் பெட்டி ஒவ்வொன்று வைக்குக.

- செயற்பாட்டை/விளையாட்டை ஆரம்பிப்பதற்காக ஆசிரியை 1-15 இற்கு இடைப்பட்ட ஓர் எண்ணைச் சிங்களத்தில் கூறுதல் வேண்டும்.

- அதனைச் செவிமடுத்து இரண்டு வரிசைகளிலும் முதலாவது இருக்கும் மாணவர் இருவரும் ஓடிச்சென்று எதிரே உள்ள பெட்டியில் இருந்து ஆசிரியர் கூறிய எண் குறிப்பிடப்பட்டுள்ள பந்தைத் தெரிவு செய்து எடுத்துத் தாம் முன்னர் வரிசையில் நின்ற இடத்துக்கு ஓடிச் செல்லல் வேண்டும்.

- பின்னர் தமக்குப் பின்னால் நிற்கும் மாணவனிடம், அப்படத்தில் காட்டப்பட்டுள்ள எண்ணைச் சிங்களத்தில் கூறி, பின்னால் நிற்கும் மாணவனிடம் பந்தைக் கொடுத்தல் வேண்டும்.

- பின்னர் பந்தைப் பெற்ற மாணவரும் அவ்வெண்ணைச் சிங்களத்தில் கூறி, தமது பின்னால் நிற்கும் மாணவனிடம் பந்தைக் கொடுத்தல் வேண்டும். இவ்வாறாக வரிசையில் கடைசி மாணவன் வரையிலும் பந்தை அனுப்புதல் வேண்டும்.



- வரிசையில் கடைசியாக நிற்கும் மாணவன் அப்பந்தைப் பின்னால் உள்ள வெறும் பெட்டியில் இடவேண்டும்.


- இவ்வாறாக இரண்டு வரிசைகளிலும் இரண்டாவதாக இருக்கும் மாணவர் இருவரும், முன்னர் போன்ற ஆசிரியை ஒரு எண்ணைக் கூறியதும் ஓடிச்சென்று செயற்பாட்டில் ஈடுபட வேண்டும்.
- இவ்வாறாக இரண்டு வரிசைகளில் உள்ள மாணவர்களுக்குச் செயற்பாட்டில் ஈடுபடச் சந்தர்ப்பம் வழங்குக.

- எண் பெயரைச் சரியாகக் கூறியவாறு, விரைவாகப் பந்துகளைப் பின்னால் உள்ள வெறும் பெட்டிக்கு அனுப்பிய குழு வெற்றி பெற்ற குழு ஆகும்.

**செயற்பாடு : 3**

- கீழே படத்தில் காட்டியுள்ளவாறு 1 - 15 வரையிலான எண்கள் எழுதப்பட்ட ஒரு எண் சக்கரத்தைக் கழற்றக்கூடியவாறாகத் தயார் செய்து கொள்க.

அதிஷ்டச் சக்கரம்




- வகுப்பு மாணவரை A, B என இரண்டு குழுக்களாகப் பிரிக்குக.
- A, B என பெயரிட்ட புள்ளிப் பலகையொன்றைத் தயாரித்துக் கொள்க.
- A குழுவிலிருந்து ஒரு மாணவரையும் B குழுவில் இருந்து ஒரு மாணவரையும் எழுமாறாக எண் சக்கரத்தின் அருகே வருமாறு அழைக்குக.
- A குழுவைச் சேர்ந்த மாணவன் எண் சக்கரத்தில் உள்ள எண்களுள் எழுமாறாக ஓர் எண்ணைச் சிங்களத்தில் கூறுதல் வேண்டும்.
- B குழு மாணவன் எண் சக்கரத்தைச் சுழற்றுதல் வேண்டும்.
- அதற்கமைய எண் சக்கரத்தில் உள்ள அம்புக்குறி நிற்கும் இடத்தில் உள்ள எண்ணை A குழுவைக் சேர்ந்த மாணவன் சிங்களத்தல் கூறுதல் வேண்டும்.
- அம்மாணவன் குறித்த எண் பெயரைச் சரியாகக் கூறினால் குழுவுக்கு ஒரு புள்ளி வழங்கப்படும்.
- A குழு மாணவன் கூறிய அதே எண், எண்சக்கரத்தில் அம்புக்குறியினால் காட்டப்பட்டதாயின் அக்குழுவுக்கு மேலதிகமான ஒரு புள்ளி வழங்கப்படும்.
- இவ்வறாக B குழு மாணவர் எழுமாறாக ஓர் எண்ணைக் கூறவும் A குழு மாணவன் எண் சக்கரத்தைச் சுழற்றவும் சந்தர்ப்பமளிக்குக.
- குழுக்கள் பெறும் புள்ளிகளைப் பலகையில் குறிப்பிடுக.
- இவ்வாறாக எல்லா மாணவர்க்கும் சந்தர்ப்பம் கிடைக்கும் வரை செயற்பாட்டைத் தொடர்ந்து நடத்துக.

## தேர்ச்சி - 6


**பாடசாலையில் இருக்கும் வெவ்வேறு ஆட்களை அன்றாட உரையாடல்களின்போது யாதேனும் ஒரு பொருள் அல்லது எவரேனும் ஒருவர் இருக்கும் இடத்தைத் திட்டவட்டமாகக் குறிப்பிடுவதற்குப் பொருத்தமான பிரயோகங்களைப் பயன்படுத்துவார்.**

| | | |
|---|---|---|
| එහේ/අතන/අතනට/අතනින්/එහෙන් | எஹே/அத்தன/அத்தனட/அத்தனின்/எகென் | அங்கே |
| මෙහේ/මෙතන/මෙතනට | மெஹே/மெத்தன/மெத்தனட்ட | இங்கே |
| ඉදිරියෙන්/ඉදිරියට | இதிரியென்/இதிரியட்ட | முன்னால் |
| පිටුපස/පිටුපසින්/පිටුපසට | பிட்டுபச/பிட்டுபசின்/பிட்டுபசட்ட | பின்னால் |

**செயற்பாடு : 1**

- மேலே தரப்பட்ட එහේ/අතන/අතනට/අතනින්/එහෙන් - මෙහේ/මෙතන/මෙතනට ஆகிய சொற்களின் பொருளை மாணவர்க்கு விளக்குக.

- கீழே படத்தில் காட்டியுள்ளவாறு திறந்த வெளியான ஓர் இடத்தில் மாணவரை நிறுத்துக.



- ஆசிரியர் ஒரு மாணவனை விழித்து, அவரிடம் மற்றுமொரு மாணவன் எங்கே எனச் சிங்களத்தில் வினவுக.
  உதாரணம்:
  සුදන්, පවානි කොහේද?   சுதன், பவானி கொஹேத?   சுதன் பவானி எங்கே?


- இதற்குச் சுதன் பதில் கூறும்போது, பவானி, தூரத்தே உள்ளாள் எனின், கையை நீட்டி, பவானி இருக்கும் திசையைக் காட்டி,
  පවානි එහේ   பவானி எஹே   பவானி அங்கே
  என விடைகூற வேண்டும்.

- பவானி தனக்கு அருகே உள்ளான் எனின்,
  පවානි මෙහේ   பவானி மெஹே   பவானி இங்கே
  எனக் கூற வேண்டும்.

- இவ்வாறாக ஒவ்வொரு மாணவரிடமும் மற்றைய மாணவர்கள் இருக்கும் இடத்தை வினவி, அங்கே, இங்கே ஆகிய இரண்டு சொற்களையும் கூறுவதில் நன்கு பரிச்சயம் பெறும் வரையில் செயற்பாட்டைத் தொடந்தும் நடத்துக.

**செயற்பாடு : 2**

- மாணவரைக் கீழே படத்தில் காட்டியுள்ளவாறு இரண்டு வட்டங்களில் இருவரிருவராக நிறுத்துக.



- ඉදිරියෙන් - இதிரியென், පසුපසින් - பசுபசின் ஆகிய இரண்டு சொற்களின் பொருளை மாணவர்க்கு விளக்குக.

- ஆசிரியை வட்டத்தின் மத்தியில் நின்று, ஒரு மாணவர் சோடியில் உள்ள ஒரு மாணவனை விழித்து, மற்றவர் எங்கே இருக்கின்றார் எனச் சிங்களத்தில் வினவுக.
  உதாரணம்:
  සුදන්, පවානි කොහේද? சுதன், பவானி கொஹேத? சுதன், பவானி எங்கே?

- இதற்காகச் சுதன் பின்வருமாறு தருணத்திற்கேற்ப விடையளித்தல் வேண்டும்.
  පවානි ඉදිරියෙන් பவானி இதிரியென் பவானி முன்னால்
  පවානි පසුපසින් பவானி பசுபசின் பவானி பின்னால்
  எனப் பதில் கூற வேண்டும்.

- இவ்வாறாக,
  පවානි, සුදන් කොහේද? பவானி, சுதன் கொஹேத? பவானி, சுதன் எங்கே?
  என ஆசிரியை வினவும்போது தருணத்திற்கேற்ப
  සුදන් ඉදිරියෙන් சுதன் இதிரியென் சுதன் முன்னால்
  සුදන් පසුපසින් சுதன் பசுபசின் சுதன் பின்னால்
  என அவர் பதில் கூற வேண்டும்.

- இவ்வாறாக மாணவர் ஒவ்வொருவருக்கும் விடையளிக்கச் சந்தர்ப்பம் கிடைக்கும் வகையில் செயற்பாட்டைத் தொடர்ந்தும் நடத்துக
.
- ஆசிரியராகச் செயற்படுவதற்கு மாணவருக்குச் சந்தர்ப்பமளிக்குக.

- மாணவர் இருக்கும் இடத்தை மாற்றியபடி செயற்பாட்டில் ஈடுபடவும் சந்தர்ப்பம் அளிக்குக.

**செயற்பாடு : 3**

- மாணவரைத் திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்க.

- பின்வருமாறு கட்டளை வழங்கி,

  එහේ, මෙහේ    எஹே, மெஹே    அங்கே இங்கே

  எனும் இரண்டு சொற்களையும் மேலும் பதிக்கும் வகையில் முன்னர் போன்றே செயற்பாட்டை நடத்துக.


  உதாரணம்:

  | | | |
  |---|---|---|
  | මෙහේට එන්න | மெஹேட்ட என்ன | இங்கே வாருங்கள். |
  | එහේට යන්න | எஹேட்ட யன்ன | அங்கே போங்கள். |
  | මෙතන ඉන්න | மெத்தன இன்ன | இங்கே நில்லுங்கள். |
  | එතනට දුවන්න | எத்தனட்ட துவன்ன | அங்கே ஓடுங்கள் |
  | එතන බලන්න | எத்தன பலன்ன | அங்கே பாருங்கள். |

- பின்னர், மாணவரைக் குழுக்களாகப் பிரித்துக் கட்டளை வழங்குவதற்காகக் குழுவுக்கு ஒருவரை நியமித்து, முன்னர் போன்றே செயற்பாட்டை நடத்துக.

**செயற்பாடு : 4**

- கீழே படத்தில் காட்டியுள்ளவாறு மாணவர்களை இரண்டு வரிசைகளில் முகத்தை முகம் பார்த்தவாறு நிற்கச் செய்க.




- ஒவ்வொரு சோடி மாணவருக்கும் ஒரு பந்து வீதம், A குழு மாணவர்களிடம் ஒவ்வொரு பந்து வீதம் வழங்கி,
- ஆசிரியர்,

  ඉදිරියට    இதிரியட்ட    முன்னால்

  எனக் கூறியவுடன், A குழு மாணவர்கள் தமது எதிரே உள்ள மாணவருக்குப் பந்தை அனுப்புதல் வேண்டும்.

- பின்னர் ஆசிரியர்,

  පිටුපසට    பிட்டுபசட்ட    பின்னால்

  எனக் கூறியவுடன் B மாணவர்கள், பின்புறம் திரும்பி, நண்பனுக்கு முதுகுகாட்டி நின்றவாறு, தலைக்கு மேலாகப் பந்தை நண்பனுக்கு அனுப்புதல் வேண்டும்.

- இவ்வாறாக,

  ඉදිරියෙන්    இதிரியென்    முன்னால்

  පිටුපසින්    பிட்டுபசின்    பின்னால்

  ஆகிய கட்டளைகளை மாற்றி மாற்றிச் சொற்களின் பொருள் நன்கு விளங்குமாறு மாணவர்களிடையே செயற்பாட்டை நடத்துக.

# தேர்ச்சி - 7

**தமது அன்பர்களுடன் நட்புடன் உரையாடுவார்.**

| | | |
|---|---|---|
| මම රාණි ඔබ කවුද ? | மம ராணி ஒப கவுத? | நான் ராணி நீங்கள் யார்? |
| මගේ නම සුදන් | மகே நம சுதன் | எனது பெயர் சுதன் |
| මට ආප්ප ඕන | மட ஆப்ப ஓன | எனக்கு அப்பம் வேண்டும். |
| ඔයාට වතුර ඕනෙද ? | ஒயா(ட்)ட வ(த்)துர ஓனத? | உங்களுக்குத் தண்ணீர் வேண்டுமா? |
| නෑ | நே | இல்லை |
| ඔව් | ஒவ் | ஆம் |
| මට වතුර එපා | ம(ட்)ட வதுர எ(ப்)பா | எனக்குத் தண்ணீர் வேண்டாம். |

**செயற்பாடு : 1**

- ஏறத்தாழ ஓர் அடி (30 சென்றி மீற்றர்) வட்டமுள்ள வளையமொன்றினை பிரம்பு/சிறு மூங்கில் கொண்டு ஆக்கிக் கொள்க. அல்லது டெனிகொயிட்டு (Tenniquoit) வளைய மொன்றைத் தேடிப்பெறுக.

- மாணவரைத் திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்க.

- மணவரை வட்டமாக நிறுத்தி வட்டத்தில் ஓரிடத்தில் ஆசிரியரும் நிற்குக.

- வளையத்தை ஒரு மாணவனை நோக்கி நீட்டியவாறு,

  මම සුදන්, ඔයා කවුද ? மம சுதன், ஒயா கவுத? நான் சுதன், நீங்கள் யார்?


  என வினவுதல் வேண்டும்.

- வளையத்தைப் பெற்ற மாணவன், தமது பெயரைக் கூறி சிங்களத்தில் தம்மை அறிமுகஞ் செய்த பின்னர் தம்மிடமுள்ள வளையத்தை மற்றுமொரு மாணவனை நோக்கி நீட்டி, அவர் யார் என வினவுதல் வேண்டும்.

  உதாரணம்:

  මම රාදා, ඔයා කවුද ? மம ராதா, ஒயா கவுத? நான் ராதா, நீங்கள் யார்?

- இவ்வாறாக எல்லா மாணவருக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும் வகையில் செயற்பாட்டை நடத்துக.




**செயற்பாடு : 2**

- இதற்காக ஏறத்தாழ 12 அங்குல (30 சென்ரி மீற்றர்) நீளமான ஒரு பீவீசி (PVC) குழாய்த்துண்டின் இரு அந்தங்களிலும் அலங்காரச் சுருக்க வேலை இட்டுத் தயார்ப்படுத்திக் கொள்க.



- குடும்ப உறுப்பினர்கள் அனைவரதும் உருவப் படங்கள் அடங்குமாறு மாணவர் தொகைக்குப் போதுமாக அளவுக்கு மாலைகள் தயாரித்துக்கொள்க.




- மாணவரை வட்டமாக நிறுத்தி, ஆளுக்கு ஒன்றாக மாலைகளைப் பகிர்ந்தளிக்குக.

- செயற்பாடு 1 ஐ நடத்தியது போன்றே இச்செயற்பாட்டையும் செய்க.

- இங்கு மாணவர் அணிந்துள்ள குடும்ப உறுப்பினராகத் தம்மைக் கருதி விடையளித்தல் வேண்டும்.

**செயற்பாடு : 3**

- வகுப்பு மாணவரை இரண்டு குழுக்களாகப் பிரிக்குக.

- அக்குழுக்களிரண்டையும் வெவ்வேறுபட்ட இரண்டு பொருட்கள் எனப் பெயரிடுக.
  உதாரணம்:
  1. பழங்கள் - காய்கறிகள்
  2. மீன்கள் - பறவைகள்
  3. பழங்கள் - பூக்கள்

- இவ்வாறாக இட்ட பெயர்களின்படி, ஒவ்வொரு வகையில் 10 பட அட்டைகள் வீதம் இருபது பட அட்டைகள் தயாரித்துக் கொள்க.

- தயாரித்த பட அட்டைகளை ஒரு பெட்டியில் இடுக.

- படத்தில் காட்டியுள்ளவாறு மாணவர் குழுக்கள் இரண்டையும் இரண்டு வரிசைகளில் நிறுத்தி வரிசைகளுக்கு இடையே மத்தியில் பட அட்டைப் பெட்டியுடன் ஆசிரியர் நிற்குக.

- தடவைக்கு ஓர் அட்டை வீதம் எடுத்து அதனை, குழுக்களிரண்டின் எவரேனும் ஒரு மாணவனுக்குக் காட்டி,

  ඔයාට ඕනද? ஒயாட்ட ஓனத? உங்களுக்கு வேண்டுமா?

  என வினவுதல் வேண்டும்.

- ஆசிரியை காட்டிய பட அட்டை தமது குழுவுக்கு உரிய ஒன்றெனின்,

  ඕන ஒவ் ஆம்

  எனப் பதில் கூற வேண்டும்.

- ஆசிரியை காட்டிய பட அட்டை தமது குழுவுக்கு உரிய ஒன்று அல்ல எனின்,

  එපා எப்பா வேண்டாம்

  எனப் பதில் கூற வேண்டும்.

  உதாரணம்:

  குழுக்களிரண்டும் பழங்கள் - பூக்கள் எனப் பெயரிடப்பட்டுள்ளதாயின், 'பூக்கள்' குழுவைச் சேர்ந்த ஒரு மாணவனுக்கு ஆசிரியை பழ வகையொன்றின் படத்தைக் காட்டி?

  ඔයාට ඕනද? ஒயாட ஓனத? உங்களுக்கு வேண்டுமா?

  என வினவினார் என்னி, அவர்

  එපා எப்பா வேண்டாம்

  எனப் பதில் கூற வேண்டும்.

- ஆசிரியை பூ வகை ஒன்றின் படத்தைக் காட்டினார் எனின்,

  ඕන ஒன வேண்டும்

  எனப் பதில் கூற வேண்டும்.

- இவ்வாறாக இரண்டு குழுக்களினதும் எல்லா மாணவர்களிடமும் எழுமாறாக மீண்டும் மீண்டும் படங்களைக் காட்டி,

  ඕන ஒன வேண்டும்

  එපා எப்பா வேண்டாம்

  என்றவாறாகப் பதில் பெற வேண்டும்.

- இச்செயற்பாட்டை ஒரு விளையாட்டுப் போலவும் நடத்தலாம்.

- விளையாட்டின்போது,

  ඕන ஒன வேண்டும்

  එපා எப்பா வேண்டாம்

  எனச் சரியாகப் பதில் கூறும் குழுவுக்கு ஒரு புள்ளி வீதம் வழங்கி, விளையாட்டைத் தொடர்ந்தும் நடத்திச்செல்லலாம்.

- ඕන ஒன வேண்டும் என்பதற்குப் பதிலாக

  ඕන ஒவ் ஆம் எனப் பதிலளிக்கலாம் எனவும்,

  එපා எப்பா வேண்டாம் என்பதற்குப் பதிலாக

  නෑ நே இல்லை

  எனப் பதிலாளிக்கலாம் எனவும் எடுத்துக்காட்டுக.

| | | |
|---|---|---|
| ඕන | ஓன | வேண்டும் |
| ඔව් | ஒவ் | ஆம் |
| එපා | எப்பா | வேண்டாம் |
| නෑ | நே | இல்லை |

- மேற்படி செயற்பாட்டை,

| | | |
|---|---|---|
| ඔව් | ஒவ் | ஆம் |
| නෑ | நே | இல்லை |

ஆகிய சொற்களையும் பயன்படுத்தி அவற்றின் பொருள் உறுதிபெறும் வகையில் செயற்பாட்டை நடத்துக.

உதாரணம்:

A - ඔයාට වතුර ඕන ද ? ஒயாட்ட வத்துர ஓனத? உங்களுக்கு தண்ணீர் வேண்டுமா?

| | | | |
|---|---|---|---|
| B - | ඕන | ஓன | வேண்டும் |
| | ඔව් | ஒவ் | ஆம் |

A - ඔයාට ආප්ප ඕනද ? ஒயாட ஆப்ப ஓனத? உங்களுக்கு அப்பம் வேண்டுமா?

| | | | |
|---|---|---|---|
| B - | නෑ | நே | இல்லை |
| | එපා | எப்பா | வேண்டாம் |

## தேர்ச்சி - 8

**தகவல் அறிவதற்காக வினாக் கேட்பார்.**

**செயற்பாடு : 1**

- அம்மா, அப்பா, அண்ணா, அக்கா, தம்பி, தங்கை, ஆசிரியர், அதிபர் ஆகிய உருவப்படங்கள் அடங்கிய சுழற்றக்கூடிய அதிர்ஷ்டச் சக்கரமொன்று தயாரித்துக்கொள்க.

- அவ்வுருவப்படங்களில் காட்டப்பட்டுள்ளோர் யாவர் என மாணவர்களுக்கு அறிமுகஞ் செய்க.

- பின்னர் தடவைக்கு ஒரு மாணவர் வீதம் வகுப்பின் முன்னே அழைத்து அதிர்ஷ்டச் சக்கரத்தைச் சுழற்றச் சந்தர்ப்பமளிக்குக.

- அதிர்ஷ்டச் சக்கரத்தில் அம்புக்குறிக்கு நேராகக் காணப்படும் படத்தைச் சுட்டிக்காட்டி,
  මොහු/ඇය කවුද ? மொஹு / அய கவுத? இவர் யார்?
  என ஆசிரியர் வினவுதல் வேண்டும்.

- මේ අයියා மே அய்யா இவர் அண்ணா என்றாவாறாக அம்புக்குறி காட்டும் உருவப்படத்தின் படி மாணவன் பதில் கூற வேண்டும்.

- பின்னர் ஆசிரியர்,
  ඔබේ අයියා කවුද? ஒபே அய்யா கவுத? உங்கள் அண்ணா யார்?
  என வினவுதல் வேண்டும்.

- அதற்கான பதிலாக அம்மாணவன்,
  මගේ අයියා ...... மகே அய்யா ...... எனது அண்ணா....
  எனப்பதில் கூற வேண்டும்.

- சகோதரன் இல்லையெனில்,
  මට අයියා (කෙනෙක්) නෑ மட அய்யா (கெனெக்) நே எனக்கு அண்ணன் இல்லை
  எனப் பதில் கூற வேண்டும்.

- இவ்வாறாக எழுமாறாக மாணவரை அழைத்து அதிர்ஷ்டச் சக்கரத்தை சுழற்றச் சந்தர்ப்பமளித்து, முன்னைய மாணவனிடம் வினவியது போன்றே வினாக்கள் வினவிப் பதில் கூறச் சந்தர்ப்பமளிக்குக.

- எவரேனுமொருவர் பற்றி வினவும்போது,
  කවුද? கவுத? யார்?
  எனும் சொல் பயன்படுத்துகின்றமையை விளங்கிக்கொள்ளச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு : 2**

- 1 - 15 வரையிலான எண்கள் எழுதப்பட்ட அட்டைகளை ஆளுக்கு ஒன்றாகப் பகிர்ந்தளிப்பதற்குப் போதுமான அளவுக்குத் தயாரித்துக்கொள்க.

- மாணவரைத் திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்க.

- மாணவருக்குச் சுயாதீனமாக அங்குமிங்கும் செல்லச் சந்தர்ப்பமளித்து ஆசிரியர் சைகை வழங்கியவுடன் இருவரிருவராகச் சேர வேண்டும் எனக் கூறுக.

- ஒவ்வொரு சோடியிலும் உள்ள ஒரு மாணவர் மற்றவரை நோக்கி,

  ඔබේ අංකය කීයද? ஒபே அங்கய கீயத? உங்கள் எண் எத்தனை?

  என வினவுதல் வேண்டும்.

  சோடியின் மற்ற மாணவர், தமது கையில் உள்ள அட்டையின் எண்ணைச் சிங்களத்தில் கூற வேண்டும்.

  உதாரணம்:

  දහයයි தஹயய் பத்து

- இவ்வாறாக விடையளித்த மாணவன் , எற்கனவே வினாத்தொடுத்த மாணவனிடம்,

  ඔබේ අංකය කීයද? ஒபே அங்கய கீயத? உங்கள் எண் எத்தனை?

  என வினவுதல் வேண்டும்.

- அம்மாணவர் அதற்குப் பதிலளித்தல் வேண்டும்.

- மீண்டும் ஆசிரியரின் கட்டளையின்படி (ஏவலின்படி) சுயாதீனமாக நடந்து திரியச் சந்தர்ப்பமளித்து, முன்னர் போன்றே வழங்கும் ஒரு சமிக்ஞையின்படி செயற்பாட்டில் ஈடுபடச் செய்தல் வேண்டும்.

- இச்செயற்பாட்டில் யாதேனும் எண் பற்றி வினவும்போது,

  කීයද? கீயத? எத்தனை?

  எனும் சொல் பயன்படுத்தப்படுகின்றமையை விளங்கிக்கொள்ள ஆவன செய்க.

**செயற்பாடு : 3**

- யாதேனும் பொருள் பற்றி வினவும்போது எது எனும் சொல்லுக்கு சிங்கள மொழியில்,

  කෝක ද? கோக்கத? எது?

  කුමක් ද? குமக்த? எது?

  எனும் சொற்கள் பயன்படுத்தப்படுகின்றமையை மாணவருக்கு விளக்குக.

- மாணவரைப் பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.

- ஒவ்வொரு குழுவிலும் மாணவர் ஒவ்வொருவரும் தமது பென்சிலை தமது குழுவின் மேசை மீது வைக்குமாறு கூறுக.

- ஆசிரியர் குழுவின் அருகே சென்று, ஒவ்வொரு மாணவரையும் விழித்து,

  உதாரணம்:

  සුදන් ඔයාගේ පැන්සල කෝක ද?

  சுதன் ஒயாகே பென்சல கோக்கத?

  சுதன் உங்கள் பென்சில் எது?

  என வினவுதல் வேண்டும்.

- அதன்படி குறித்த மாணவன் தனது பென்சிலைச் சுட்டிக்காட்டி,

  මේක மேக இது

  எனப் பதில் கூற வேண்டும்.

- இவ்வாறாக வேறு பொருள்களையும் பயன்படுத்தி,

  කෝක ද? கோக்கத? எது?

  எனும் சொல்லை நன்கு விளங்கிக்கொள்ள ஆவன செய்க.

  உதாரணம்:

  ඔයාගේ අඩිරූල කුමක් ද/මොකක් ද ?

  ஒயாகே அடிரூல கோக்கத? / மொகக்த?

  உங்கள் அடிமட்டம் எது?

**செயற்பாடு : 4**

- வகுப்பு மாணவரை A, B என இரண்டு குழுக்களாகப் பிரிக்குக.

- ஆசிரியர் ஒரு அதிதி போலச் செயற்படுக.

- அதிதி (ஆசிரியர்) வகுப்புக்கு வந்தவுடன் இரண்டு குழுக்களிலுமிருந்து தடவைக்கு ஒருவராக அதிதி தொடர்பாக அவரிடம் தகவல்கள் பெறுவதற்காக வினாக்கள் வினவுதல் வேண்டும்.

குழு: A - மாணவன்:

ඔබේ නම කුමක් ද ? ஒபே நம குமக்த? உங்கள் பெயர் என்ன?

குழு: B - மாணவன்:

මගේ නම...... மகே நம....... எனது பெயர்......

குழு: A - மாணவன்:

ඔබේ ගම කොහේ ද ? ஒபே கம கொஹேத? உங்கள் ஊர் எது?

குழு: B - மாணவன்:

මගේ ගම...... மகே கம....... எனது ஊர்......

குழு: A - மாணவன்:

ඔබේ වයස කීය ද ? ஒபே வயச கீயத? உங்கள் வயது எத்தனை?

குழு: B - மாணவன்:

මගේ වයස...... மகே வயச....... எனது வயது......

குழு: A - மாணவன்:

ඔබේ පාසල කුමක් ද ? ஒபே பாசல குமக்த? உங்கள் பாடசாலை எது?

குழு: B - மாணவன்:

මගේ පාසල..... மகே பாசல....... எனது பாடசாலை......

- இவ்வாறாக ஒரு தடவையில் ஒரு குழுவைச் சேர்ந்த ஒரு மாணவர் வீதம் சரியாக ஒரு வினாவை முன்வைத்தாரெனின் குழுவுக்கு ஒரு புள்ளி உரித்தாகும்.

- இவ்வாறாக அதிதி பற்றிய தகவல்களை மாணவர்கள் இயன்ற அளவுக்கு வினாக்கள் வினவிப் பெறுதல் வேண்டும்.

- அதற்கமைய மாணவர் கற்றுள்ள விடயங்களைத் தழுவி, வினாக்கள் வினவுவதைப் பரிச்சயப்படுத்துக.

| | | |
|---|---|---|
| කුමක් ද ? | குமக்த? | என்ன? |
| කෝක ද?/මොකක් ද? | கோக்கத?/ மொகக்த? | எது? |
| කීය ද? | கீயத? | எத்தனை? |
| කොහේ ද? | கொஹேத? | எங்கே? |
| කවුද ? | கவுத? | யார்? |

- மேற்படி சொற்களை மேலும் வலியுறுத்துவதற்காகப் பின்வரும் பாடலை மாணவருடன் சேர்ந்து பாடுக.

| | | |
|---|---|---|
| අම්මගේ නම මොකක් ද?// | அம்மாகே நம மொகக்த? | அம்மா பெயர் என்ன?// |
| කියන්න// | கியன்ன// | சொல்லுங்கள்// |
| අම්මගේ නම කුමුදා// | அம்மாகே நம குமுதா// | அம்மா பெயர் குமுதா// |
| නම කුමුදා// | நம குமுதா// | பெயர் குமுதா// |
| | | |
| ඔබේ වයස කීය ද?// | ஒபே வயச கீயத?// | உங்கள் வயது எத்தனை// |
| කියන්න// | கியன்ன// | சொல்லுங்கள்// |
| මගේ වයස දහයයි // | மகே வயச தஹயய்// | எனது வயது பத்து// |
| වයස දහයයි // | வயச தஹயய்// | வயது பத்து// |
| | | |
| ඔබේ මිතුරා කවු ද? // | ஒபே மித்துரா கவுத?// | உங்கள் நண்பன் யார்?// |
| කියන්න// | கியன்ன// | சொல்லுங்கள்// |
| මගේ මිතුරා නාදන්// | மகே மித்துரா நாதன்// | எனது நண்பன் நாதன்// |
| මිතුරා නාදන්// | மித்துரா நாதன்// | நண்பன் நாதன்// |
| | | |
| ඔබේ පුටුව කුමක් ද ?/ | ஒபே புட்டுவ குமக்த?// | உங்கள் கதிரை எது?/ |
| කියන්න// | கியன்ன// | சொல்லுங்கள்// |
| මගේ පුටුව මේක// | மகே புட்டுவ மேக்க// | எனது கதிரை இது// |
| පුටුව මේක// | புட்டுவ மேக்க// | கதிரை இது// |
| | | |
| ඔබේ මල්ලී කොහේ ද?// | ஒபே மல்லி கொஹேத?// | உங்கள் தம்பி எங்கே?// |
| කියන්න// | கியன்ன// | சொல்லுங்கள்// |
| මගේ මල්ලී මෙහේ// | மகே மல்லி மெஹே// | எனது தம்பி இங்கே// |
| මල්ලී මෙහේ// | மல்லி மெஹே// | தம்பி இங்கே// |

## தேர்ச்சி - 9

**மணியில் நேரத்தைக் கூறுவார்.**

| | | |
|---|---|---|
| වෙලාව එකයි | வேலாவ எக்கய் | ஒரு மணி |
| වෙලාව දෙකයි | வேலாவ தெக்கய் | இரண்டு மணி |
| වෙලාව තුනයි | வேலாவ துனய் | மூன்று மணி |
| වෙලාව හතරයි | வேலாவ ஹத்தரய் | நான்கு மணி |
| වෙලාව පහයි | வேலாவ பஹய் | ஐந்து மணி |
| වෙලාව හයයි | வேலாவ ஹயய் | ஆறு மணி |
| වෙලාව හතයි | வேலாவ ஹத்தய் | ஏழு மணி |
| වෙලාව අටයි | வேலாவ அட்டய் | எட்டு மணி |
| වෙලාව නවයයි | வேலாவ நமயய் | ஒன்பது மணி |
| වෙලාව දහයයි | வேலாவ தஹயய் | பத்து மணி |
| වෙලාව එකොළහයි | வேலாவ எக்கொளஹய் | பதினொரு மணி |
| වෙලාව දොළහයි | வேலாவ தொளஹய் | பன்னிரண்டு மணி |

**செயற்பாடு : 1**

- 1-15 வரையிலான எண்களைச் சிங்களத்தில் கூறும் விதத்தை மாணவர்க்கு நினைவூட்டுக.

- அதற்கமைய நேரத்தை மணியில் கூறும்போது,
  වෙලාව வேலாவ நேரம் என்பதை குறித்த எண்ணுடன் சேர்த்துக் கூறும் விதத்தை எடுத்துக்காட்டுக.

- ஒருவரிடம் நேரத்தை வினவும்போது,
  වෙලාව කීයද? வேலாவ கீயத? நேரம் என்ன?
  என வினவலாம் என்பதை விளக்குக.

- பின்னர் கடிகார முகப்பைப் பயன்படுத்தி மணிக்கு மணி நேரத்தைச் சிங்கள மொழியில் கூற வழிப்படுத்துக.

- மாணவர் குழுவுக்கு ஏற்கனவே ஆயத்தப்படுத்திய கடிகார முகப்பு ஒவ்வொன்று வீதம் வழங்குக.
  ஒரு மணவன் சிங்களத்தில்
  වෙලාව කීයද? வேலாவ கீயத? நேரம் என்ன?
  என வினவுவதற்கும்,


  மற்றைய மாணவர்கள், கடிகார முகப்பில் காட்டப்படும் நேரத்தைச் சிங்களத்தில் கூறுவதற்கும் வழிப்படுத்துக.
  உதாரணம்:

  | | | |
  |---|---|---|
  | වෙලාව පහයි | வேலாவ பஹய் | ஐந்து மணி |
  | වෙලාව හතයි | வேலாவ ஹத்தய் | ஏழு மணி |

- குழுவில் ஒவ்வொருவரும் நேரத்தை வினவுபவராகவும் நேரத்தைக் கூறுபவராகவும் செயற்படச் சந்தர்ப்பமளிக்குக.

**செயற்பாடு : 2**

- படத்தில் காட்டியுள்ளவாறு கடிகார முகப்புப் போன்று வட்டமாக நிற்குமாறு மாணவரை வழிப்படுத்துக. (12 மாணவர்கள்)




- வட்டத்தின் மத்தியில் தடி/தூண் ஒன்று நாட்டிக் கொள்ளுங்கள்.

- வட்டத்தின் மத்தியில் இருந்து பன்னிரண்டு மணியைக் காட்டும் இடத்தை ஒரு நிறப்பட்டியினால் அல்லது சுண்ணாம்பு போன்ற ஒரு பொருளினால் மாணவர்க்கு நன்கு புலனாகுமாறு அடையாளமிடுக.

- வட்டத்தின் மத்தியில் உள்ள தூணில் ஏறத்தாழ ஒரு மீற்றர் (மூன்று அடி) நீளமான துணி நாடா ஒன்றினைத் தளர்வாகக் கட்டுக. வட்டத்தில் நிற்கும் மாணவர்களின் கழுத்தில் 1 - 12 வரை எண்கள் எழுதப்பட்ட எண் அட்டை மாலைகைள் அணிவிக்குக.

- மற்றுமொரு மாணவனை வட்டத்தின் மத்தியில் அழைத்து, கைகளை இருபுறமாகவும் நீட்டி ஒரு கையினால் துணி நாடாவைப் பிடித்திருக்குமாறு கூறுக.



- ஆசிரியர் ஒரு நேரத்தைக் கூறியதும்,
  உதாரணம்:

  වෙලාව දෙකයි வேலாவ தெக்கய் இரண்டு மணி

  அம்மாணவன் துணி நாடாவைப் பிடித்தவாறு ஓடிச் சென்று ஆசிரியர் கூறிய நேரத்தைக் காட்டும் மாணவன் இருக்கும் அந்நேரத்தைக் காட்டுதல் வேண்டும்.

- பின்னர் மற்றுமொரு மாணவனை வட்டத்தின் மத்திக்கு அழைத்து முன்னைய மாணவர் செயற்பட்டது போன்று செயற்படச்செய்து ஆசிரியரின் ஏவலின்படி நேரத்தைக் காட்டுதல் வேண்டும்.
- இவ்வாறாக வட்டத்துக்கு வெளியே இருந்த மாணவர்களுக்கும் பின்னர் வட்டத்தில் நின்ற மாணவர்க்கும் ஆசிரியர் குறிப்பிடும் நேரத்தைக் காட்டச் சந்தர்ப்பம் கிடைக்கும் வகையில் செயற்பாட்டைத் தொடர்ந்தும் நடத்துக.

**செயற்பாடு : 3**

- பாடலின்படி நேரத்தை வினவுவதற்கும் வினாவுக்கும் பதிலளிப்பதற்கும் சந்தர்ப்பமளிப்பதற்காக, மாணவர்க்கு பின்வரும் பாடலை முன்வைக்குக.

වෙලාව කීයද?// කියන්න//
வேலாவ கீயத? கியன்ன//
நேரம் என்ன? சொல்லுங்கள்

වෙලාව එකයි// வேலாவ எக்கய்// ஒரு மணி//
වෙලාව එකයි// வேலாவ எக்கய்// ஒரு மணி//

වෙලාව කීයද?// කියන්න//
வேலாவ கீயத? கியன்ன//
நேரம் என்ன? சொல்லுங்கள்

වෙලාව එකොළහයි// வேலாவ எக்கொளஹய்// பதினொன்று மணி//
වෙලාව එකොළහයි// வேலாவ எக்கொளஹய்// பதினொன்று மணி//

වෙලාව කීයද?// කියන්න//
வேலாவ கீயத? கியன்ன//
நேரம் என்ன? சொல்லுங்கள்

වෙලාව දොළහයි// வேலாவ தொளஹய்// பன்னிரண்டு மணி//
වෙලාව දොළහයි// வேலாவ தொளஹய்// பன்னிரண்டு மணி//

- இவ்வாறாக,

  වෙලාව එකයි வேலாவ எக்கய் ஒரு மணி தொடக்கம்
  වෙලාව දොළහයි வேலாவ தொளஹய் பன்னிரண்டு மணி வரையில்

  சொற்களை உள்ளடக்கிப் பாடலைப் பாட வழிப்படுத்துக.

- மாணவர் ஒவ்வொருவருக்கும் 1 - 12 வரையிலான மணிகள் எழுதப்பட்ட அட்டைகளுள் ஒவ்வொன்று வழங்குக.
  உதாரணம: 1.00, 2.00, ...

- ஆசிரியர், ஒரு மாணவனை நோக்கிக் கையை நீட்டி,
  
  වෙලාව කීයද?// කියන්න//
  
  வேலாவ கீயத? கியன்ன//
  
  நேரம் என்ன? சொல்லுங்கள்
  
  என நேரத்தை வினவுதல் வேண்டும்.
- அம்மாணவன் தம்மிடமுள்ள அட்டையில் காட்டப்படும் நேரத்தை பாடலின் இரண்டாவது அடியாக சிங்களத்தில் கூற வேண்டும்.
  
  உதாரணம்:
  
  பவானியின் கையில் உள்ள அட்டையில் காட்டப்படும் நேரம் 3.00 மணி எனின், அவர்,
  
  වෙලාව තුනයි வேலாவ துனய் மூன்று மணி
  
  எனப் பதிலளித்தல் வேண்டும்.

- இவ்வாறாக மாணவர் அனைவருக்கும் நேரத்தைச் சிங்களத்தில் கூறச் சந்தர்ப்பம் கிடைக்குமாறு பாடலைத் தொடர்ந்து பாடுக.


### செயற்பாடு : 4

- மாணவரைத் திறந்த வெளியான, இடவசதி உள்ள ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்க.

- குழுவில் 13 பேர் அடங்குமாறு மாணவரைக் குழுக்களாகப் பிரிக்குக.

- ஆசிரியர் யாதேனும் நேரத்தை சிங்களத்தில் கூறியதும், மாணவர் குழு, கூட்டாக கடிகார முகப்புப் போன்று அமைந்து அந்நேரத்தைக் காட்டுதல் வேண்டும்.

- இதற்காக 12 மாணவர்கள் கடிகார முகப்பில் உள்ள பன்னிரண்டு மணிகளையும் குறிப்போராகவும் மற்றைய மாணவன் தமது கைகளால் மணியையும் நிமிடத்தையும் காட்டுபவராகவும் செயற்பட வேண்டும்.



# 5.0 மாணவரது முன்னேற்றத்தைக் கணிப்பிடல்

## 1.0 அறிமுகம்

ஆரம்பத் தரங்களில் கற்கும் மாணவர்களுக்காக, விளைதிறன்மிக்க கற்றல் அனுபவங்களை ஒழுங்குசெய்யும் ஆசிரியர், தமது மாணவர்கள் கற்றலில் காட்டும் இடர்ப்பாடுகள், திறமைகள் பற்றிய தெளிவான விளக்கத்தைப் பெற்றிருத்தல் அவசியமாகும். அதற்கமைய வகுப்பறையில் இருக்கும் ஒவ்வொரு மாணவருக்கும் பொருத்தமானவாறு கற்றல் முறைகளை ஒழுங்குபடுத்தலாம். இந்தப் பரந்த நோக்குடன் வகுப்பறையில் மாணவரது முன்னேற்றம் குறித்து இடையறாது தகவல் சேகரிக்கும் செயன்முறையே கணிப்பீடு எனலாம். மாணவரைக் கண்டறிதல், அறிவுறுத்தல் வழங்குதல், சான்றிதழ் வழங்குதல், ஆராய்ச்சி ஆகியவற்றுடன் தொடர்புடைய நோக்கங்கள் இவற்றுள் முக்கியமானவையாகும். எனினும் ஆரம்பத் தரங்களில் குறிப்பாக கண்டறிதல், அறிவுறுத்தல் வழங்குதல் ஆகிய பணிகளை அடிப்படையாகக் கொண்டே கணிப்பீடு நடத்தப்படுகிறது. ஆரம்பத் தரங்களில் கற்கும் மாணவர்கள் பல இடர்ப்பாடுகளைக் காட்டுவதுண்டு. ஆசிரியர் கற்பிக்கும் வேளையிலேயே அவற்றை இனங்கண்டு தீர்வு வழங்குதல் அவசியமாகும். தமது வகுப்பிலுள்ள ஒவ்வொரு பிள்ளையும் குறிப்பாக எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு அவ்வொவ்வொரு மாணவருக்கும் பொருத்தமானவாறு கற்றல் நடவடிக்கைகளை ஒழுங்குசெய்வதற்கு இது துணையாகும். அதன் மூலம் ஆசிரியரால் ஒவ்வொரு மாணவரையும் கலைத்திட்டத்தினால் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளின்பால் இட்டுச்செல்ல முடியும். மாணவரை முதலாமவர், இரண்டாமவர் எனத் தரவரிசைப்படுத்துதல், திறமைமிக்க மாணவர்கள், திறமை குறைந்த மாணவர்கள் என வகைப்படுத்துதல் போன்றவை ஆரம்பத் தரங்களில் கணிப்பீடு நடத்தப்படுவதன் நோக்கங்களல்ல.

## 2.0 மாணவர்களைக் கணிப்பீடு செய்வதற்காகப் பயன்படுத்தத்தக்க நுட்ப முறைகள்

மாணவரைக் கணிப்பீடு செய்வதற்காகப் பயன்படுத்தத்தக்க நுட்ட முறைகளைப் பிரதானமாக இரண்டு விடயங்களுக்கமைய எடுத்துக்காட்டலாம்.

### 2.1 மாணவரது முன்னேற்றத்தை முறைமையாகக் கணிப்பிடுதல்

கற்பித்தல் செயன்முறையைத் தற்காலிகமாக நிறுத்தி, முன்னாயத்தத்துடனும் திட்டமிட்ட வகையில் முழுக் கவனத்தையும் அதன்பால் செலுத்திச் செய்யப்படும் கணிப்பீடு முறைமையான கணிப்பீடு ஆகும். இதற்காக முறைமையான சோதனைகளும், செயற்பாடுகளும் தயாரிக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக ஆரம்பத் தரங்களில் கற்பிக்கும் ஆசிரியரின் பயன்பாட்டிற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள “முறைமையான சோதனைகளைத் தயாரிப்பதற்குரிய வழிகாட்டல் கோவை” யைப் பயன்படுத்தலாம்.

### 2.2 மாணவரது முன்னேற்றத்தை முறைசாராத வகையில் கணிப்பிடுதல்

இங்கு மாணவர்கள் கற்றலில் ஈடுபட்டிருக்கையிலேயே அதற்குப் பங்கம் விளையாத வகையில் தகவல் சேகரிக்கப்படும். இதற்காகப் பிரதானமாக வினாக்கள் வினவுதல், தனித்தனி மாணவருடனோ, மாணவர் குழுக்களுடனோ கலந்துரையாடுதல், மாணவர்கள் வேலையில் ஈடுபட்டிருக்கும்போது அவர்களது வேலைகளை அவதானித்துத் தகவல் சேகரித்தல், மாணவரது வீட்டு வேலைகளை மதிப்பீடு செய்தல் போன்ற நுட்பமுறைகள் பயன்படுத்தப்படும். இங்கு ஆசிரியரின் வாண்மை மிக முக்கியமானது. ஆசிரியர் எப்போதும் மிகச்சரியான தீர்மானங்களையே எடுக்க வேண்டுமாதலால் அது குறித்துக் கவனத்துடன் செயற்படுதல் முக்கியமானதாகும். முறைசாரா நுட்ப முறைகளினூடாக மாணவர் தொடர்பான விரிவான, பண்பு ரீதியான தகவல்கள் கிடைக்கின்றமையால் அவற்றைக் கற்றல் - கற்பித்தல் செயன்முறைக்காக விளைதிறன்மிக்க வகையில் பயன்படுத்த வாய்ப்புக் கிடைக்கும். மாணவர் தொடர்பாக ஆசிரியர் முறைமையின் வகையில் எடுக்கும் தீர்மானங்களின் நம்பகத்தன்மை மிக உயர்வானது என்று பல ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது.

## கணிப்பீட்டுப் வடிவங்கள்

கணிப்பீட்டை, கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நடத்தலாம். அதற்கமைய கணிப்பீட்டுச் செயன்முறையை இறுதிநிலைக் (Summative) கணிப்பீடு, தொடர் (Formative) கணிப்பீடு என வகைப்படுத்தலாம்.

**இறுதிக் கணிப்பீடு**

குறித்த ஒரு கற்றல் கட்டத்தின் முடிவில், மாணவர்கள் தமது கற்றலை எந்தளவு வெற்றிகரமாக அடைந்துள்ளனர் என்பதைப் பரீட்சித்தலையே இறுதிக் கணிப்பீடு என்பர். இதன்படி இறுதியில் அந்த வருடத்தில் / தவணையில் / அலகில் கற்பித்த விடயங்களை உள்ளடக்கித் தயாரித்த வினாப்பத்திரம் ஒன்றின் மூலம் மாணவரின் அடைவைக் கணிப்பிட முடியும். எனினும் இவ்வாறான தொரு கணிப்பீட்டு முறை ஆரம்பத் தரங்களுக்குப் பொருத்தமானதெனக் கருதமுடியாது.

**தொடர் கணிப்பீடு**

யாதேனும் கற்றல் கட்டத்தின் இடையில் தொடர்ச்சியாக மாணவரின் கற்றல் திறன்களையும் இடர்ப்பாடுகளையும் கண்டறிவதே இதனால் கருதப்படுகின்றது. இது தொடர் கணிப்பீடு எனவும் அழைக்கப்படுகின்றது. ஆரம்பத் தரங்களில் மாணவர்கள் கற்றலின்போது எதிர்நோக்கும் இடர்ப்பாடுகளுக்குப் பொருத்தமான தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தல் கட்டாயமானதாகும். அல்லது அவர்களுக்குத் தொடர்ந்து கற்றல் கடினமானதாக அமையும். இவ்வாறு கற்றலில் அடையும் தோல்வியினால் அவர்கள் மேலும் பின்னடைவார்கள். ஆகவே மாணவரைப் பற்றித் தொடர்ச்சியாகத் தேடியறிதல் ஆரம்பத் தரக் கணிப்பீட்டின் முக்கியமான ஒரு நோக்கமாகக் கருதப்படுகின்றது.

ஆரம்பத் தரங்களில் நியதிசார் கணிப்பீடே நடத்தப்படுகின்றது. இங்கு ஆசிரியரால் மேற்கொள்ளப்படும் முதன்மைப்படுத்தியுள்ள முறைசாரா நுட்பங்களில் கூடுதலான கவனம் செலுத்தப்படும்.

**நியதிசார் கணிப்பீடு**

கலைத்திட்டத்தின் உள்ளடக்கம், தேர்ச்சிகள் என்பவற்றுக்கேற்ப தயாரிக்கப்பட்ட நியதிகளை மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பதைப் பரீட்சித்தல் நியதி அடிப்படையிலான கணிப்பீடாகும். இதற்குப் பயன்படுத்தக்கூடிய நியதிகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட கணிப்பீட்டுப் படிவங்கள் ஆரம்பத் தரங்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவ்வாசிரியர் வழிகாட்டியில் மொழி, சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் ஆகிய பாடப்பரப்புகளுக்கான கணிப்பீட்டுப் படிவங்கள் அப்பாடங்களின் இறுதியிலும் பொதுக் கணிப்பீட்டுப் படிவம் ஆசிரியர் வழிகாட்டியின் இறுதியிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும் கணிதப் பாடத்திற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள கணிப்பீட்டுப் படிவம் கணித ஆசிரியர் வழிகாட்டியின் இறுதியிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மொழி, கணிதம், சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் ஆகிய பாடங்களுக்குத் தயாரிக்கப்பட்ட நியதிகள் சில இங்கு தரப்பட்டுள்ளன.

**கணிதம்**

*எடுத்துக்காட்டு:* நாளொன்றில் நடைபெறும் சம்பவங்களைத் தொடர்புபடுத்தி நேரத்தைக் கூறுவார்.

**முதன்மொழி**

*எடுத்துக்காட்டு:* கருத்துப் படமொன்றைப் பார்த்து அதற்குரிய சிறிய உரையாடலை எழுதுவார்.

**சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்**

*எடுத்துக்காட்டு:* ஏனையோரிடம் மகிழ்ச்சியுடன் சுமுகமாக உரையாடுவார்.

**பொதுக் கணிப்பீடு**

*எடுத்துக்காட்டு:* பிறருக்கு உதவுவதற்கு ஆர்வம் காட்டுவார்.

## செயல் அடைவுக்கோவை

மாணவர்களைக் கணிப்பிட உபயோகிக்கக்கூடிய மிகவும் பயனுறுதியுள்ள ஒரு முறையாக இது கருதப்படுகின்றது. மாணவரின் கற்றல் தொடர்பான இடர்களையும் அவர்களது திறன்களையும் தொடர்ச்சியாகக் கணிப்பிடும் ஒரு முறை என்ற வகையில் அதிக முக்கியத்துவமுடையது. பொதுவாக ஆரம்பத் தர ஆசிரியர்கள் யாவரும் மாணவர் ஒவ்வொருவரதும் வேலைகளைத் தனித்தனிக் கோவைகளில் சேகரிக்கும் வழக்கமுடையவர்களாவர். எனினும் செயல் அடைவுக் கோவை முறையை இதனிலும் முன்னேற்றகரமான ஒரு முறையாகக் கருதப்படுகிறது. இதன்படி செயல் அடைவுக் கோவை என்பது மாணவரது திறமைகளையும் அவர் கற்றலின்போது எதிர்கொள்ளும் இடர்களையும் காட்டும் வகையில் கருத்தாழத்துடன் தயாரிக்கப்பட்டுள்ள மாணவர் வேலைத் தொகுப்பாகும் எனக் கருதலாம். இது மாணவர்கள் பற்றிய தெளிவான கருத்தை வெளிக்காட்டும் ஒரு கோவையாக அமைதல் வேண்டும். இதனைத் தயாரிக்கும் முறை ஆசிரியர்களுக்கேற்பவே மாறுபடும். இது பற்றிய ஒரு நியம முறை இல்லையாகையால் ஆக்கத்திறனுடைய ஒரு ஆசிரியரால் தனது ஆக்கத்திறனுக்கேற்ப மிக உயர்மட்டச் செயலடைவுக் கோவை ஒன்றை வடிவமைத்துக்கொள்ள முடியும். செயல் அடைவுக் கோவை ஒன்றில் உள்ளடக்கத்தக்கவை யாவை? இதில் மாணவரது வேலைகளின் மாதிரிகளை உள்ளடக்கும் எழுத்து வேலைகள், செய்த கணக்குகள், வரைந்த சித்திரங்கள், ஆக்கங்கள் போன்றவை இதில் உள்ளடக்கப்படலாம். மேலும் ஆசிரியரின் சிறு குறிப்புகளையும் இதில் உள்ளடக்கலாம்.

## சுருக்கக் குறிப்பு எழுதுதலும் செவ்வைபார்ப்புப் பட்டியல்களை உபயோகித்தலும்

ஒரு ஆசிரியர் தனது மாணவர்களின் முன்னேற்றத்தையும் கற்றல் இடர்ப்பாடுகளையும் இனங்காண முயற்சிக்கும்போது அவர்கள் ஒவ்வொருவரையும் பற்றிய தகவல்களையும் சிறு சிறு குறிப்புகளாகச் சேகரித்துவைத்தல் பயனளிக்கும். வகுப்பில் கற்பிக்கும்போது மாணவர் பற்றிய ஏராளமான தகவல்கள் ஆசிரியருக்குக் கிடைக்கின்றன. மென்மேலும் இத்தகவல்கள் கருத்தாழமுள்ளவாறு பயன்படுத்தப்படுவது கிடையாது. ஆகவே மாணவர்கள் பற்றிய தகவல்களைப் புத்தகமொன்றில் சுருக்கக் குறிப்பாக எழுதிவைத்து அவற்றைத் தேவைக்கேற்றவாறு பயன்படுத்துவது தொடர்பாகக் கவனம் செலுத்தப்படல் வேண்டும். செவ்வைபார்ப்புப் பட்டியல்களைப் பயன்படுத்துதல் பயன்மிக்க மற்றுமொரு முறையாகும். ஆசிரியர் வழிகாட்டியின் இறுதியில் தரப்பட்டுள்ள நியதிகளை மாணவர் அடைந்துள்ளனரா எனத் தீர்மானிப்பதற்கு செவ்வைபார்ப்புப் பட்டியல்களைப் பயன்படுத்தலாம்.

## கணிப்பீட்டுப் படிவங்களும் அவற்றைப் பயன்படுத்துதலும்

சேகரித்த தகவல்களைக் குறித்துவைத்து அறிக்கைப்படுத்துவதற்காகப் பயன்படுத்தக்கூடிய நான்கு படிவங்களின் மாதிரிகள் ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ளன. அவை தாய்மொழி, கணிதம், சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள், பொதுக் கணிப்பீடு எனப் பெயரிடப்பட்டுள்ளன.

அவற்றில் ஒவ்வொரு மாணவரின் பெயருக்கு எதிரேயும் ஒவ்வொரு கற்றல் பேறுக்காகவும் ஒரு கட்டம் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் அந்தந்த கற்றல் பேற்றை அண்மித்துள்ளனரா இல்லையா எனச் சோதித்தறிந்த பின்னர் அதனை இங்கு குறித்துக்கொள்ள வேண்டும். பொதுக் கணிப்பீட்டுப் படிவத்தில் தரப்பட்டுள்ள கணிப்பீட்டிற்கு உட்படுத்த வேண்டிய பெரும்பாலான

“கற்றற்பேறுகள்” வருடம் முழுவதும் கண்டறிய வேண்டிய விதத்தில் பரந்தமைந்துள்ளன. இங்கு ஒரு தவணைக்கு ஒரு மாணவனுக்கு ஒரு கட்டம் வீதம் பயன்படுத்தக்கூடியவாறு ஒரு கற்றல் பேறுக்கு மூன்று கட்டங்கள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாணவர் தொடர்பாகவும் ஒவ்வொரு கற்றல் பேற்றின் கீழும் நீங்கள் சேகரித்த தகவல்களின் உதவியுடன் பின்வருமாறு குறியீடுகளைப் பயன்படுத்தி அறிக்கைப்படுத்தலாம்.

| முடிவு | குறியீடு |
|---|---|
| வெற்றிகரமாகச் செய்கிறார். | ✓ |
| இடர்ப்படுகிறார் / மேலும் உதவி தேவைப்படுகின்றது. | • |

யாதேனும் ஒரு கற்றல்பேறு தொடர்பாக மாணவர் வெற்றியைக் காட்டுகின்றனரா என்பதை ஆசிரியர் முடிவு செய்வதற்காகக் குறித்த கற்றற்பேறுக்குப் பொருத்தமானதாகத் தாமே தயாரித்த நியதிகளைப் பயன்படுத்தலாம்.

## கண்டறிதலும் பரிகாரமும்

முறைசாரா - தொடர் கணிப்பீட்டு முறையின் பிரதான நோக்கம் கண்டறிதலாகும்.

ஒரு மாணவனின் கணிப்பீட்டுப் படிவத்தில் “•” குறியீடு இடப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பம் தொடர்பாகவும் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும். மாணவன் எதிர்நோக்கும் இடர்ப்பாடுகளை இனங்கண்டு, அவற்றுக்குப் பரிகாரம் கண்டு, பின்னர் மீண்டும் கணிப்பீட்டிற்கு உட்படுத்தல் வேண்டும். குறித்த “•” எனும் குறியீடு “✓” எனும் குறியீடாக மாறும் வரை இச்செயற்பாட்டைத் தொடர்ச்சியாக நடத்துதல் ஆசிரியரின் பொறுப்பாகும்.

இனங்கண்ட கற்றல் இடர்ப்பாடுகளைத் தவிர்ப்பதற்கு அந்தந்தச் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான வாறு சிறப்பான பரிகாரக் கற்றல் - கற்பித்தல் முறைகளை ஒழுங்கமைத்தல் முக்கியமானதாகும். இவை ஒவ்வொரு மாணவனும் காட்டும் கற்றல் இடர்ப்பாடுகளுக்கேற்பவே தீர்மானிக்கப்படலாம்.

அவ்வாறே குறிப்பிட்ட சில கற்றல் - நோக்கங்கள் தொடர்பாக வகுப்பு மாணவருள் பெரும்பாலானோர் “•” குறியீட்டைப் பெற்றுள்ளனராயின், அதற்கு ஏதுவான காரணங்கள் பல இருக்க முடியும். அவற்றை இனங்கண்டு பொருத்தமான ஒரு நடைமுறையைப் பின்பற்றி அம்மாணவர்கள் உரிய கற்றல் பேறுகளை அடையச் செய்வது ஆசிரியரின் பொறுப்பாகும்.

## ஏனைய விடயங்கள்

- ஒரு மாணவனின் கற்றல் முன்னேற்றத்தை மற்றொரு மாணவனின் கற்றல் முன்னேற்றத்துடன் ஒப்பிடுவதன் மூலம் கல்வி ரீதியாக முக்கியத்துவம் பெறும் தீர்மானங்களை எடுத்தல் கடினமானதாகும். ஆகவே மாணவர் - மாணவர் அடைவுகளை ஒப்பிடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

- ஒரு மாணவனின் தற்போதைய அடைவு மட்டத்தை அவனது முன்னைய அடைவு மட்டத்துடன் ஒப்பிட்டு, மாணவனது முன்னேற்றம் பற்றிய தகவல்களைப் பெறலாம். எனவே இது பற்றி அக்கறை செலுத்துங்கள். மேலும் கலைத்திட்டத்தின் நோக்கங்களை எந்தளவுக்கு அடைந்துள்ளனர் என அறிதலும் அவசியமாகும்.

- வகுப்பாசிரியர் தனது வகுப்பிலுள்ள மாணவர்களுக்குப் பொருத்தமான விதத்தில் கணிப்பீட்டு உபகரணங்களைத் தயாரித்துக் கொள்ளத்தக்கவராக இருத்தல் வேண்டும்.

## பொதுக் கணிப்பீடு
## கணிப்பீட்டுப் பதிவுப் படிவம் - தரம் 4

| கணிப்பீட்டு அளவிடை | |
|---|---|
| வெற்றிகரமாகச் செயற்படுகிறார். | ✓ |
| இடர்ப்படுகிறார் / மேலும் உதவி தேவை. | • |

| | | | | மாணவர் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | 1. குறித்த வேலையொன்றில் ஆரம்பம் முதல் இறுதி வரையில் ஈடுபடுவார். |
| | | | | 2. உதவி தேவைப்படும் சந்தர்ப்பங்களை இனங்கண்டு உதவி புரிவார். |
| | | | | 3. பொதுப் பொருள்களைப் பயன்படுத்துவார்; பாதுகாப்பார். |
| | | | | 4. சுய சுத்தம் தொடர்பாகக் கவனம் செலுத்திச் செயற்படுவார். |
| | | | | 5. வேலையொன்றின் முடிவில் உபகரணங்களையும் இடத்தையும் சுத்திகரித்து, உபகரணங்களை உரிய இடங்களில் வைப்பார். |
| | | | | 6. தாளத்திற்கேற்பப் பாட்டுப் பாடுவதில் ஈடுபடுவார். |
| | | | | 7. வகிபாகமேற்று நடிப்பார். |
| | | | | 8. குறித்த வேலையொன்றில் ஆக்கபூர்வமாக ஈடுபடுவார். |
| | | | | 9. பாடசாலையில் வேலைகளின்போது ஏனையோருடன் ஒத்துழைத்துச் செயற்படுவார். |
| | | | | 10. யாதேனுமொன்றினைச் செய்வதற்காக விருப்புடன் முன்வருவார். |
| | | | | 11. ஆசிரியர்களுக்குக் கண்ணியமளிப்பார்; மரியாதையாகப் பேசுவார். |
| | | | | 12. பயன்படுத்தும் உபகரணங்களைச் சரியாகக் கையாள்வார்; பாதுகாப்பார். |
| | | | | 13. தலைமைத்துவத்தை மதித்துச் செயற்படுவார். |
| | | | | 14. தமது பொருள்களைப் போன்றே ஏனையோரின் பொருள்களையும் மதிப்பார். |
| | | | | 15. சுயமாகக் கற்பதில் ஆர்வம் காட்டுவார். |
| | | | | 16. தமது கருத்துக்களையும் உணர்வுகளையும் சித்திரம் மூலம் வெளிப்படுத்துவார். |
| | | | | 17. ஏனையோரின்பால், உணர்தன்மையுடன் செயற்படுவார். |
| | | | | 18. அசைவியக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவார். |
| | | | | 19. புத்தளிப்புக் கருவிகளைப் பயன்படுத்திக் கூட்டாக வாத்தியமிசைப்பார். |
| | | | | 20. சூழலில் உள்ள வளங்களைப் பயன்படுத்தி பல்வேறு ஆக்கங்கள் செய்வார். |
| | | | | 21. தரப்பட்ட பருமட்டான திட்டத்தின்படி மாதிரியுருக்கள் ஆக்குவார். |
| | | | | 22. தையல், பின்னல் மூலம் ஆக்கங்கள் செய்வார். |
| | | | | 23. நடத்தல், ஓடுதல், பாய்தல் சார்ந்த விளையாட்டுக்களில் ஈடுபடுவார். |
| | | | | 24. பந்தைப் பிடித்தல், எறிதல் சார்ந்த விளையாட்டுக்களில் ஈடுபடுவார். |
| | | | | 25. தமது தேவைகளுக்காகச் சிங்கள மொழியில் எளிமையான வேண்டுகோள்களை விடுப்பார். |
| | | | | 26. சிங்களமொழியில் முன்வைக்கப்படும் எளிமையான ஏவல்களுக்கு சிங்களமொழியில் துலங்கல் காட்டுவார். |
| | | | | 27. தருணத்திற்கேற்ப, சிங்களமொழியில் வாழ்த்துத் தெரிவிப்பார். |
| | | | | 28. தத்தமக்கிடையே நட்பு வளரும் வகையில் எளிமையான ஆங்கிலச் சொற்களையும் பிரயோகங்களையும் பயன்படுத்துவார். |

## 6.0 முதன்மை நிலை இரண்டிகுரிய அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள்

### 1. அறிமுகம்

ஆரம்பக் கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள முதல் ஐந்து ஆண்டுகள் நபரொருவரின் வாழ்க்கையில் முக்கியமான காலகட்டமாகும். தற்கால ஏற்றுக்கொள்ளலுக்கு ஏற்ப அவற்றுள் முதல் மூன்று ஆண்டுகளும் முன் பிள்ளைப்பருவத்திற்கும் எஞ்சிய இரு ஆண்டுகளும் பிள்ளைப்பருவத்தின் தொடக்க நிலைக்கும் உரித்தாகும். முறைசார் கல்விக்கு அவசியமான அடிப்படைத் தேர்ச்சிகளைப் போன்றே வெற்றிகரமான தனிநபரொருவராக வாழ்வதற்குத் தேவையான தேர்ச்சிகளும் விருத்தி அடைவது இக்காலக்கட்டத்தினுள்ளே ஆகும். அதனால் இக்கட்டத்தில் மாணவருள் அத்தியாவசியமாக விருத்தி செய்யப்பட வேண்டிய தேர்ச்சிகளை இனங்கண்டு மாணவர்கள் அத்தேர்ச்சிகளில் பாண்டித்தியம் பெறுதலை உறுதிப்படுத்துதல் இவ்வேலைத்திட்டத்தின் தலையாய கொள்கையாகும்.

தனது வகுப்பில் கற்கும் மாணவர் அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளில் பாண்டித்தியம் அடைந்துள்ளனரா எனச் சோதித்துப் பார்த்தலும், அவ்வாறில்லாவிடில் அவற்றை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தலும் ஆசிரியரின் பொறுப்பொன்றாகும். அவ்வாறே கடமையும் ஆகும்.

இங்கு தேர்ச்சி என்பதனால் வரைவிலக்கணப்படுத்துவது அறிவு, திறன், மனப்பாங்கு, விழுமியங்கள் ஆகியனவற்றின் சிக்கலான சேர்மானமொன்றிற்கு குறித்த தேர்ச்சியொன்றிற்கு இவ்வம்சங்கள் அனைத்தும் அல்லது சில பல்வேறு மட்டங்களில் உள்ளடங்கப்பட்டிருக்க முடியும். அதற்கேற்ப சில தேர்ச்சிகள் திறனை நோக்கி கூடுதலாக சார்ந்திருக்கக்கூடியனவாக இருக்கக்கூடியதோடு வேறு தேர்ச்சியொன்று அறிவையும் மனப்பாங்கையும் நோக்கிக் கூடுதலாக சார்ந்திருக்க முடியும். சில தேர்ச்சிகள் விழுமியத்தை நோக்கியும் கூடுதலாக சார்ந்திருக்க முடியும்.

ஒவ்வொரு முதன்மை நிலையும் முடிவடையும் போது சகல மாணவர்களும் அந்த நிலைக்கு அத்தியாவசியமான கற்றல் தேர்ச்சிகள் அனைத்தினதும் பாண்டித்தியத்தை உறுதிப்படுத்துதல் அந்நிலைக்குப் பொறுப்பான ஆசிரியரின் பொறுப்பாகும்.

அதில்,
- அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சி என்பதனால் கருதப்படுவது யாது?
- முதலாவது முதன்மை நிலைக்கு இனங்காணப்பட்டுள்ள அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் யாவை?
- பாண்டித்தியம் என்பதன் கருத்து யாது?
- அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சியொன்றின் பாண்டித்தியத்தை உறுதிப்படுத்திக் கொள்வது எவ்வாறு?
- பாண்டித்திய மட்டத்தை அடையாத மாணவர்களுக்கு வழிகாட்டுவதற்கான செயல்வழிகள் யாவை?

எனும் விடயங்களைப் பற்றி விரிவான விளக்கத்தைப் பெற்றிருத்தல் முக்கியமாகும்.

### 2. அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் என்பன யாவை?

ஆரம்பத் தரங்களுக்காகத் தயாரிக்கப்பட்டுள்ள கலைத்திட்டம் பல்வேறு திறன் மட்டங்களில் உள்ள மாணவர்களுக்குப் பொருத்தமாகுமாறு எளிய மட்டத்தில் இருந்து சிக்கலான மட்டம் வரையிலான தேர்ச்சிகளைக் கொண்டுள்ளது. இவற்றிடையே உரிய நிலையினுள் சகல மாணவர்களினாலும் கட்டாயமாக அடையப்பெற வேண்டிய அடிப்படை தேர்ச்சிகளின் தொகுதி

அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சி என்றழைக்கப்பட முடியும்.

அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளினுள்,

- உரிய நிலையினுள் மாணவரின் அபிவிருத்தித் தேவைகளைப் பூர்த்தி செய்தல்,
- கற்றலை மேலும் கட்டியெழுப்புவதற்கும் நடத்திச் செல்வதற்கும் உதவும்
- நல்ல பிரஜையாக வெற்றிகரமாக வாழ்வதற்கு கட்டாயமாகத் தேவையான அத்திவாரம் ஆகிய தேர்ச்சிகள் கட்டியெழுப்பப்படும்.

**3. முதன்மை நிலை இரண்டிற்கு விதந்துரைக்கப்பட்டுள்ள கற்றல் தேர்ச்சிகள் யாவை? முதன்மை நிலை**

முதன்மை நிலை இரண்டில் மாணவரொருவர் 50 அத்தியாவசிய தேர்ச்சிகளை நிறைவு செய்ய வேண்டும். இவற்றை இனங்காணும் போது முதலாம், இரண்டாவதும் மூன்றாவதும், நான்காவதும் ஐந்தாவதும் தரங்களின் பாடத்திட்டங்களும் மற்றைய கலைத்திட்ட சாதனங்களும் ஆழமாகக் கற்றாயப்பட்டதோடு ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், விரிவுரையாளர்கள், கலைத்திட்டங்களை விருத்திசெய்வோர், கல்வியாளர்கள் ஆகியோரின் கருத்துக்களும் கவனத்திற் கொள்ளப்பட்டன. அவ்வாறே வேறு நாடுகளில் வெளியிடப்பட்டுள்ள இவ்வாறான அத்தியாவசிய அடைவு மட்டங்களும் கற்றாயப்பட்டன. அது மட்டுமன்றி இக்கட்டத்தில் உள்ள மாணவர்களின் விருத்தித் தேவைகள் மீதும் ஆழமாக அவதானிக்கப்பட்டன. இவற்றுக்கு மேலதிகமாக இத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட பிள்ளை விருத்தி தரங்கள் பற்றிய ஆய்வுசார் கற்கைகளிலிருந்து கண்டறியப்பட்டவையும் கவனத்திற் கொள்ளப்பட்டன.

இனங்காணப்பட்டுள்ள அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் தொகுதி பாடரீதியாகத் தனித்தனியாக மட்டுமன்றி பொதுத் தேர்ச்சித் தொகுதியொன்றாகவும் தயாரிக்கப்பட்டுள்ளது. அத்தேர்ச்சிகள் தொகுதியினுள் ஆரம்பக் கல்விக்கு அடிப்படையான தொடர்பாடல், சுற்றாடல், ஒழுக்கநெறியும் சமயமும், விளையாட்டும் ஓய்வும், கற்றலுக்கும் ஆளுமைக்கும் பொருத்தமாகவும் வேலையுலகின் ஆயத்தத்திற்கும் பொருத்தமான தேர்ச்சிகளும் எனும் அடிப்படை தேர்ச்சிகளுக்குரிய தேர்ச்சிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

விசேடமாகக் கருதும் போது அத்தியாவசியக் கற்றற்றொகுதி மாணவரின் ஒட்டுமொத்த விருத்திக்குக் கீழே குறிப்படப்பட்டுள்ள அம்சங்களுடன் நேரடியான தொடர்புகளைக் காட்டும்.

மாணவரின் பூரண விருத்திக்கு அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளும் பங்களிப்புச் செய்யும் பல்வேறு அம்சங்களும்.

| | |
|---|---|
| * நல்வாழ்க்கைப் பழக்கங்கள் | * உயிருள்ள, உயிரற்ற சுற்றாடல்கள் |
| * சுய பாதுகாப்பு | * ஆராய்வூக்கம், ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை தொடர்ந்திருத்தல் |
| * நுண்ணியக்கத் திறன் | * ஒப்பிடுதலும் அளத்தலும் |
| * சமவயதினருடன் தொடர்பு | * அழகை மதித்தல் |
| * சுய நம்பிக்கையும் சுயாதீனமும் | * மனதிற்குகந்த சமூக நடத்தைகள் |
| * எண் எண்ணக்கரு | * வளர்ந்தோருடனான தொடர்பு |
| * பிரச்சினைகள் தீர்த்தல் | * பேரியக்கத் திறன்கள் |
| * ஆக்கபூர்வதன்மையும் கற்பனையும் | * போஷாக்கு |
| * விசாரிக்கும் மனம் | * மொழியும் ஆரம்ப எழுத்தறிவும் |

4. பாண்டித்தியம் என்பதன் கருத்து யாது?

ஒவ்வொரு மாணவரையும் சகல அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளிலும் பாண்டியத்தியம்

பெறச் செய்தல் இங்கு எதிர்பார்க்கப்படுகிறது. ஏதேனும் தேர்ச்சியுடன் தொடர்புபட்ட அறிவு, திறன், மனப்பாங்கு, விழுமியம் தொடர்பாக உரிய வயதிற்குப் பொருத்தமானவாறு உயர் மட்டத்தின் திறனொன்றை வெளிக்காட்டும் மாணவரொருவர் அத்தேர்ச்சியில் நிபுணர் எனக் கருதப்பட வேண்டும். ஏதேனும் தேர்ச்சியொன்று தொடர்பாக பாண்டித்திய மட்டத்தை அடைந்த மாணவரொருவர் கீழே காட்டப்பட்டுள்ளவாறான பண்புகள் அனைத்தையும் அல்லது அநேகமானவற்றை வெளிப்படுத்திக் காட்டுவார்.

* தேர்ச்சிக்கு உரிய நிரந்தரமான நடத்தைசார் மாற்றத்தைக் காட்டுவார்.
* தேர்ச்சிக்கு உரிய அடுத்த உயர் மட்டத்திற்குச் செல்வதற்கு ஆயத்தம் என்பதை வெளிப்படுத்துவார்.
* தேர்ச்சியில் ஈடுபடுதல் பற்றி தன்னுள் சுய நம்பிக்கை உண்டென வெளிப்படுத்துவார்.
* தேர்ச்சியுடன் தொடர்புபட்ட விடயங்களை இன்னொருவருக்கு விளங்கப்படுத்தும் திறனை வெளிப்படுத்துவார்.
* தேர்ச்சி பற்றி விசேட ஆர்வத்தை அல்லது விருப்பத்தை வெளிப்படுத்துவார்.
* தேர்ச்சியுடன் தொடர்புபட்ட பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் போது அதனை சுய முயற்சியுடன் தீர்க்குங் திறனை வெளிப்படுத்துவார்.
* தேர்ச்சிக்குரிய காரியங்களை சரியாக நிறைவேற்றுவார்.
* தேர்ச்சிக்குரிய மனப்பாங்குகள் தொடர்பான நடத்தையை எப்போது வெளிப்படுத்துவார்.

தேர்ச்சியொன்றில் பாண்டித்தியம் அடையப்பெற்றுள்ளதா எனத் தீர்மானிப்பதற்கு பல்வேறு விதங்களில் தகவல்களைச் சேகரித்தல் அவசியமாகும். அது ஆசிரியரின் தொழில்சார் தீர்மானமெடுத்தல் மீதும், பண்புசார் தன்மையிலும், எப்போதும் தகவல்களை சேகரித்தல் மீதும் முதன்மை நிலை முழுவதும் நிகழ வேண்டும்.

**5. தேர்ச்சியொன்றின் பாண்டித்தியத்தை கணிப்பீடு செய்தல் எவ்வாறு?**

மாணவரொருவரை ஏதேனும் தேர்ச்சியொன்றின் பாண்டித்தியத்தை நோக்கி கொண்டு செல்லும் பொறுப்பு வகுப்பாசிரியருக்கு உரியதாகும். இதில் ஆசிரியரினால் எடுக்கப்படும் தீர்மானங்களின் நம்பகத்தன்மை வெளிப்படுமாறு பொறுப்புடன் மாணவர் கற்கும் போது வெளிப்படுத்தும் பிரச்சினைகளை இனங்கண்டு தேவையான செயல்வழிகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் அவர்களைப் படிப்படியாக எதிர்பார்த்த மட்டங்களுக்கு இட்டுச் செல்ல வேண்டும்.

அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளின் பாண்டித்தியத்தை அடைந்துள்ளனரா என்பதை தொடர் கணிப்பீடு, இறுதிக் கணிப்பீடு, தொடர் கணிப்பீடும் இறுதிக் கணிப்பீடும் ஆகிய முறையியல்களினால் கணிப்பீடு செய்ய முடியும். அது பின்வரும் உருவிற் காட்டப்பட்டுள்ளது.

பாண்டித்தியத்தை உறுதிப்படுத்துதல்
- இறுதிக் கணிப்பீட்டு தகவல்கள் மூலம்
- தொடர் கணிப்பீட்டு தகவல்கள் மூலம்
- தொடர், இறுதி கணிப்பீட்டு தகவல்கள் மூலம்

**5.1 பாண்டித்தியத்தை தொடர் கணிப்பீட்டால் கணிப்பீடு செய்தல்**

தொடர் கணிப்பீடு செய்தல் என்பது கற்றல் - கற்பித்தல் படிமுறை ஒன்றினுள் அன்றாட கற்பித்தல் மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் தகவல்களை சேகரித்து மாணவரின் ஆற்றல் மட்டங்களை இனங்காணும் செயல்வழியாகும். இதற்கு மாணவரை அவதானித்தல், மாணவருக்கு செவிமடுத்தல், வாய்மொழி வினாக்களை வினாவுதல், ஒப்படைகளுக்குப் புள்ளி வழங்குதல் போன்ற முறைகளைப் பயன்படுத்த முடியும்.

### 5.2 பாண்டித்தியத்தை இறுதிக் கணிப்பீட்டால் கணிப்பீடு செய்தல்

சில அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளை இறுதிக் கணிப்பீட்டின் ஊடாக மிகவும் நன்றாகக் கணிப்பீடு செய்ய முடியும். இறுதிக் கணிப்பீடு என்பது கற்றல் - கற்பித்தல் படிமுறையொன்றின் இறுதியில் தகவல்களை சேகரித்து மாணவரின் ஆற்றல் மட்டங்களை இனங்காணும் செயல்வழியொன்றாகும். அதாவது, பாட அலகொன்றை கருப்பொருளொன்றின், மாதமொன்றின், தவணையொன்றின் இறுதியில் கணிப்பீடு செய்யும் கருவிகளைப் பயன்படுத்தி நிகழ்த்தும் கணிப்பீட்டு முறையியல் ஒன்றாகும்.

அதில் கற்றல் - கற்பித்தல் செயல்வழியை தற்காலிகமாக நிறுத்தி கணிப்பீடு செய்யும் செயல்வழிக்கு முன்னர் வரும். அதற்கேற்ப அலகொன்று மாதமொன்றின், தவணையொன்றின் இறுதியில் வழங்கப்படும் முறைசார் கணிப்பீடாக செயற்பாடுகளைப் பயன்படுத்தி மாணவர் எதிர்பார்த்த மட்டங்களை அடைந்துள்ளனரா எனத் தீர்மானிக்கப்படும்.

### 5.3 பாண்டித்தியத்தை தொடர், இறுதி ஆகிய இரண்டினாலும் கணிப்பீடு செய்தல்

சில அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளுக்கு பாண்டித்தியத்தைத் தீர்மானிப்பதற்கு மேற்குறிப்பிடப்பட்ட தொடர், இறுதி கணிப்பீடுகள் இரண்டையும் பயன்படுத்த முடியும். வகுப்பின் அன்றாட கற்றல் - கற்பித்தல் செயல்வழியில் சேகரிக்கப்படும் தகவல்கள், மாணவர்களுக்கு வழங்கப்படும் முறைசார் கணிப்பீட்டுச் செயற்பாடுகளின் மூலம் பெறப்படும் தகவல்கள் எனும் இரு வகைகளினதும் தகவல்கள் இதற்குப் பயன்படும்.

### 5.4 பாண்டித்தியத்தை குறிப்பதற்கான குறிகாட்டிகள்

மாணவர்கள் ஏதேனும் தேர்ச்சியை அடைதலை 3 மட்டங்களில் குறிக்க முடியும். அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சியில் மாணவர் அடைந்துள்ள பாண்டித்தியத்தை "பாண்டித்தியத்தை அடையவில்லை, பாண்டித்தியத்தை அண்மித்துள்ளார், பாண்டித்தியத்தை அடைந்துள்ளார்" என மூன்று மட்டங்களில் இனங்காண வேண்டியுள்ளது. அது பற்றிய விவரங்கள் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

*உதாரணம்:* கிடையாக வைக்கப்பட்டுள்ள மரக் கட்டையொன்றின் மீது நடப்பார்.

| | | |
|---|---|---|
| சமநிலையான மரக் கட்டையொன்றின் மீது அடிகளை மாற்றி மாற்றி வைப்பதன் மூலம் சமநிலையாக ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை நடக்கிறார். | சமநிலையான மரக் கட்டையொன்றின் மீது ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை செல்ல முடியுமெனினும் செல்லுதலில் இடர்களைக் காட்டுகிறார். | சமநிலையான மரக் கட்டையில் ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை நடக்க முடியாது. |
| பாண்டித்தியத்தை அடைந்துள்ளார் √ (சிவப்பு நிறம்) | பாண்டித்தியத்தை அண்மித்துள்ளார் • (பச்சை நிறம்) | பாண்டித்தியத்தை அடையவில்லை. • (நீல நிறம்) |

### 5.5 பாண்டித்தியத்தை அடையாத மாணவரின் இடர்களை கண்டறிவதற்குப் பயன்படுத்தக்கூடிய முறை

மாணவரொருவரைப் பற்றிய முடிபுகளுக்கு வரும் போது அவர்களை நுண்ணியமாக அவதானித்தலும் அதன் மீது செய்யப்படும் தொழில்சார் தீர்மானமும் மிகவும் முக்கியமாகும். பாண்டித்தியத்தை அடையாத மாணவர்கள் காட்டும் இடர்ப்பாடுகளை கண்டறிவதற்கு பல்வேறு முறைகளைப் பயன்படுத்த முடியும். மாணவர்களைப் பற்றி பெறப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு விசேடமான மிகவும் பொருத்தமான முறையை∴ முறைகளைத் தெரிவு செய்தல் முக்கியமாகும்.

அதற்காகப் பயன்படுத்தக்கூடிய கண்டறிதல் முறைகள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

* குறித்த காலமொன்றினுள் நுணுக்கமாக மாணவரின் நடத்தைக் கோலத்தை அவதானித்தல்.
* மாணவருடன் தனியாக சுமுகமாக உரையாடி பெறப்படும் துலங்கலைப் பற்றி கவனஞ் செலுத்துதல்.
* விளங்கப்படுத்துதல்களில் மாணவரை வழிப்படுத்தி அவதானத்துடன் செவிமடுத்தல்.
* உரிய வேலையில் ஈடுபட்டிருக்கும் போது விசேடமாக அவதானித்தல்.
* மாணவர் பற்றி எழுதப்பட்டுள்ள சிறு குறிப்புகள்/அறிக்கைகள் ஆகியவற்றை பகுப்பாய்வு செய்தல்.
* மாணவரின் வரவு அறிக்கையை பகுப்பாய்வு செய்து வராமைக்கான காரணங்களை தேடியறிதல்.
* உரிய மற்றைய ஆசிரியர்களுடன் கலந்துரையாடி தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ளல்.
* மூத்த சகோதர/சகோதரிகள் பாடசாலையில் இருப்பின் அவர்களுடன் கலந்துரையாடி தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ளல்.
* பெற்றோருடன் அல்லது பாதுகாவலர்களுடன் கலந்துரையாடி தேவையான தகவல்களை சேகரித்தல்.
* மாணவரின் வீட்டுக்குச் சென்று தகவல்களைச் சேகரித்தல்.
* மாணவரின் செயல்நூல், பயிற்சிப் புத்தகம், ஒப்படைகள் போன்றவற்றை விசேடமாக கற்றாய்தல்.
* மாணவரின் ஆக்கங்கள், சித்திரங்கள், மாதிரியாக்கங்கள் ஆகியவற்றை சோதித்துப் பார்த்தல்.
* முறைப்படி அமைக்கப்பட்ட கண்டறிதல் சோதனையை நடத்துதல்.
* தேவையான சந்தர்ப்பங்களில் மாணவரை வைத்தியரொருவரிடம் அல்லது பிணியாய்வு நிலையமொன்றிற்குச் செல்ல வழிப்படுத்தி ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளல்.
* ஆசிரியர் பயன்படுத்திய கற்றல் - கற்பித்தல் முறைகளின் பொருத்தப்பாட்டினைப் பற்றி சிந்தித்துப் பார்த்தல்.
* ஆசிரியர் மாணவரிடம் காட்டிய மனப்பாங்கு, மாணவர் தொடர்பாக நடவடிக்கை செய்த விதம் என்பன பற்றி சிந்தித்துப் பார்த்தல்.
* கற்றல் இடர்ப்பாட்டை இனங்காண்பதற்காக மிகவும் பொருத்தமான முறை இருப்பின் அதற்கேற்ப மாணவரை இனங்காணல்.

### 6. முன்மாதிரியான கணிப்பீட்டுக் கருவிகள் யாவை?

ஒவ்வோர் அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிக்கும் பாண்டித்தியம் அடையப்பெற்றுள்ளதா என உறுதிப்படுத்துதல் 5.1இன் கீழ் காட்டப்பட்டுள்ளவாறான முறையியல்களுக்கு ஏற்ப ஆசிரியர்களினால் கணிப்பீடு செய்யப்படல் வேண்டும். அதற்கேற்ப தயாரிக்கப்பட்ட முன்மாதிரி கணிப்பீட்டுக் கருவிகள் பக்கம் இலக்கம் 1இலிருந்து உள்ளடக்கப்பட்டுள்ளன. அவற்றை அவ்விதத்திலேயே அல்லது சந்தர்ப்பத்திற்கேற்ப மாணவருக்குப் பொருத்தமான விதத்தில் அமைத்து பயன்படுத்த முடியும்.

முன்மாதிரி கணிப்பீடு செய்யும் கருவிகள் பின்வரும் அம்சங்களைக் கொண்டிருக்கும்.

* தேர்ச்சி
* எதிர்பார்க்கப்படும் எல்லை
* கணிப்பீட்டை செயற்படுத்துவதற்குப் பொருத்தமான காலம்
* முன்னாயத்தம்
* செயலொழுங்கு
* பாண்டித்தியத்தைத் தீர்மானிப்பதற்கான பிரமாணங்கள்
* எதிர்பார்த்த பாண்டித்திய மட்டத்தை அடையாத மாணவருக்கான வழிகாட்டல்.

## 7.0 பாண்டித்தியம் பற்றிய முடிபுகளைக் குறித்துக் கொள்வது எவ்வாறு?

அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சியை இட்டு மாணவரைக் கணிப்பீடு செய்தலை மேற்கொள்ளும் போது அவர்களின் முன்னேற்றம் பற்றி அடிக்கடி சோதித்து அறிக்கைப்படுத்திக் கொள்ளுதல் அவசியமாகும். அதற்காகப் பயன்படுத்தக்கூடிய படிவமொன்று உள்ளது. ஒவ்வோர் அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சி பற்றி ஒவ்வொரு மாணவரும் பாண்டித்திய மட்டத்தை அடைந்துள்ளனர் அல்லது பாண்டித்திய மட்டத்தை அடையவில்லை என்றாவாறு நீங்கள் எடுக்கும் முடிபுகளை அதில் குறிப்பிடுங்கள். இவ்வாறு மாணவர்கள் பற்றி தீர்மானம் எடுக்கும் போது ஆசிரியர்களின் தொழில்சார் தீர்மானித்தல் திறன் கட்டாயமாக முக்கியமாகும். அதனை நம்பகத்தன்மையுடன் தீர்மானிப்பதற்கு கவனஞ் செலுத்த வேண்டும்.